# மனையடி சாத்திரம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,**
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 531

# மனையடி சாத்திரம்

(தொகுப்பு நூல்)

சிறப்புக்கௌரவ பதிப்பாசிரியர் :

முனைவர் திருமதி **சத்தியபாமா காமேஸ்வரன்,**
எம்.ஏ, எம்.ஃபில்., எம்.எட்., பி.எச்.டி.,
சுவடியியல் பட்டயம்,
சோதிடவியல் பட்டயம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**மற்றும்**

**ஆய்வு மையம்**

தஞ்சாவூர்.

2010] [விலை : ரூ. 200-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மனையடி சாத்திரம் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் திருமதி கா. சத்தியபாமா காமேஸ்வரன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 531 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2010 |
| தாள் | : | TNPL 17.8 kgs. |
| நூல் அளவு | : | 21 x 14 c.m. |
| பக்கங்கள் | : | 568 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | மனையடி சாத்திரம் |
| விலை | : | ரூ. 200-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தமிழ் கூறும் நல்லுலகத்தில் தஞ்சாவூர் பற்பல கலைகளுக்கு இருப்பிடமாய் விளங்குகின்றது. பற்பல சாத்திரங்களுக்கும் அரிய கலைச் செல்வங் களுக்கும் தஞ்சையில் பஞ்சமே கிடையாது. அவ்வகையில் தஞ்சாவூர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தில் ஏராளமான தமிழ்ச்சுவடிகள் தமிழ்ப் பிரிவில் பாதுகாக்கப் பெறுகின்றன. ஆண்டு தோறும் அரிய நூல்களை வெளியிடும் பாங்கில் இந்நூலகம் இலக்கணக்கொத்து, தொல்காப்பியம், சூடாமணி நிகண்டு, பஞ்சகாவிய நிகண்டு போன்ற வற்றை சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

அவ்வரிசையில் சிற்பம், ஆகமம் இவற்றிற்கெல்லாம் அடித்தளம் வகுக்கும் **மனையடிசாத்திரம்** சுவடியிலிருந்து பெயர்த்து மக்களுக்கு பயன்படும் நூலாக தற்போது வெளியிடப்படுகின்றது.

வீடுகட்டுபவன் இலக்கணம், வீடுகட்ட சிறந்த நிலம், சகுனங்கள், மரங்கள், வீட்டின் வாசல், கதவு, நிலை, வீட்டின் அளவு, அமைப்பு, வீடுகட்ட நல்ல நேரம், மனையில் கிணறு, குளம் தோண்டுதல், கட்டிய வீட்டில் குடி புகுவதற்குரிய நல்ல நேரம் போன்ற பல்வேறு செய்திகளுக்கு விரிவான விளக்கம் மனையடிச் சாத்திரம் என்னும் இந்நூலில் காணக்கிடைக்கின்றது.

**மனையடிச் சாத்திரம்** என்னும் பெயரில் வெளியிடப் படுகின்ற இந்நூலின் பதிப்புப் பணியை இந்நூலகத்தின் சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் முனைவர் சத்தியபாமா காமேச்வரன் அவர்கள் சிறப்பாகச் செய்துள்ளார். இந்நூற்பதிப்புப் பணியைச் சிறப்புற செய்தளித்த பதிப்பாசிரியருக்கு எனது பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் இந்நூலக நிருவாக அலுவலர் (பொறுப்பு) திரு. பெ. சந்திரசேகரன் அவர்களுக்கும், இந்நூலக பாதுகாப்பாளர் மற்றும் நூலகர் நிலை I, முனைவர் ப. பெருமாள் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணியாற்றியவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உரிய முறைப்படி வீடுகளைக் கட்டி மக்கள் மகிழ்ச்சியோடு வாழ விரும்புகின்ற அனைவருக்கும் பயன்களைப் பெருமளவில் வாரிவழங்கும்.

தஞ்சாவூர்
*23 -8-2010*

**ம. சு. சண்முகம்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

தஞ்சையை ஆட்சி செய்த மன்னர்களால் சேர்த்து வைக்கப்பட்ட அரிய சுவடிகளைக் கொண்டது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்நூலகத்தில் தமிழ், வடமொழி, மராத்தி, தெலுங்கு முதலான பலமொழிகளைச் சார்ந்த சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகளில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், சிற்பம், இசை, நாட்டியம், வரலாறு முதலான பலதுறைகளைச்சார்ந்த செய்திகள் அமைந்துள்ளன.

சுவடிகளைப் பதிப்பித்த பெரியோர் பலரும் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலானவற்றைப் பதிப்பதில் தங்களுடைய ஆர்வத்தைச் செலுத்தினர். அந்நிலையை மாற்றி, இத்தகைய நூல்களோடு, சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம், கட்டடக்கலை போன்ற ஓலைச்சுவடிகளில் இருக்கும் கலைகள் தொடர்பான நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுவரும் சீரிய செயலைத் தஞ்சை சரசுவதிமகால் நூலகம் மேற்கொண்டு பல அரிய தமிழ் நூல்களைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தும், பிறமொழியில் அமைந்த கலைகள் தொடர்பான நூல்களைச் சுவடிகளில் இருந்து பதிப்பித்து மொழிபெயர்ப்பு செய்தும் வெளியிட்டு வருகிறது.

தஞ்சை சரசுவதி மகால் நுலகச் சுவடிப் பதிப்புகளாகச் சிற்பம், கட்டடக்கலை தொடர்பான சுவடிப் பதிப்பு நூல்களாகப் பிராமிய சித்ர கர்ம சாஸ்திரம், சாரஸ்வாதீய சித்ரகர்ம சாஸ்திரம், மயமதம், காஸ்யப சில்ப சாத்திரம், சில்ப ரத்தினம், சகளாதிகாரம், ஸ்ரீதத்துவ நிதி, விஸ்வகர்ம வாஸ்து சாஸ்திரம், வாஸ்து வித்யை முதலான பல நூல்கள் வடமொழியில் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஒரு சில

நூல்களில் வீடு கட்டுதல் குறித்த செய்திகள் காணக் கிடைக்கின்றன. 'வாஸ்து வித்யை' மனையைக் கட்டுவது குறித்த செய்திகளைக் கூறும் நூலாக அமைந்துள்ளது. தமிழில், மனையைக் கட்டுவது தொடர்பான செய்திகளைக் கூறும் பதினாறு சுவடிகள் இந்நூலகத்தில் காணப் படுகின்றன. அவை இதுநாள் வரை எந்தக் காரணத்தினாலோ பதிப்பிக்கப்படாமலேயே இருந்துள்ளன.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படும் மனையைக் கட்டுவது தொடர்பான சுவடிகள், மனையடி சாத்திரம் (3சுவடிகள்), மனை சாத்திரம் (2 சுவடிகள்), மயனூல் (3சுவடிகள்), சில்ப சாத்திரம் (3 சுவடிகள்), மனையலங்காரம் (ஒரு சுவடி), சில்ப சார சுருக்க சிந்தாமணி (ஒரு சுவடி), சிற்ப சாத்திரம் (2 சுவடிகள்) ஆகியவையாகும். நட்சத்திர நிகண்டு (சுவடி எண் 888) என்ற சுவடியில் மனையடியைக் குறித்த செய்திகள் சில காணப்படுகின்றன. இச்சுவடிகளில் மனை சாத்திரம், மனையடி சாத்திரம், மயனூல் என்று கேட்ட அளவில் அது ஒரே நூல் என்றும், அந்நூல் பதிப்பிக்கப்பட்டுவிட்டது என்று கருதும் போக்கு பலரிடையே காணப்படுகிறது. 'கணக்கதிகாரம்' என்பது எப்படி கணித நூல்களுக்கு உள்ள பொதுப்பெயரோ அதைப் போலவே மனையடி 'சாத்திரம்' என்பது பொதுப் பெயராக அமைந்துள்ளது. வீடு கட்டுவதற்கான செய்திகளைத் திரட்டிக் கூறும் நூலுக்கு மனையடி சாத்திரம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது என்பதை பல்வேறு சுவடிகளையும் காணும்பொழுது அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றையன்றிச் சில்ப சாத்திரம், சிற்ப சாத்திரம், சிற்பசார சுருக்க சிந்தாமணி ஆகிய பெயர்களையுடைய சுவடிகளில் மனையைக் கட்டுவது தொடர்பான செய்திகளைக் கொண்டிருப்பினும், நூல்களின் பெயர்களைக் கேட்ட அளவில் 'சிற்பங்களைக் குறித்த நூல்' என்ற கருத்தினைத் தோற்றுவிப்பனவாக அமைந்துள்ளதால், அவற்றை சிற்ப நூல்கள் என எண்ண வாய்ப்பிருந்துள்ளது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளில் பதினாறு நூல்கள் மனையைக் கட்டுவது தொடர்பானவையாக இருந்தாலும், ஒரு நூல் கூட முழுமையான நூலாகக் கிடைக்கவில்லை. இவற்றுள் அமைந்துள்ள பாடல்கள் பல வெவ்வேறு யாப்பமைப்பினை உடையவையாக உள்ளன; ஒரு பொருள் பற்றி பலப் பாடல்கள் கிடைக்கின்றன. வெவ்வேறு பெயர்களில் நூல்கள் அமைந்துள்ளன; இவற்றைக் காணும்பொழுது பல்வேறு மனை இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும். காலப்போக்கில் அவை சிதைந்திருக்க வேண்டும். பின்னாளில் அவரவர்களுக்குக் கிடைத்த வரையிலான பாடல்களைச் சேர்த்து வைத்திருக்கக் கூடும் என்று ஊகிக்க முடிகிறது.

எத்தனையோ இலக்கிய நூல்களும் கலைகள் தொடர்பான நூல்களும் காலவெள்ளத்திற்கு இரையாகி விட்டது என்பது இலக்கிய வரலாற்று நூல்கள் கூறும் உண்மையாகும். அவ்வகையில் மனையின் இலக்கணத்தைக் கூறக்கூடிய மனையடி சாத்திர நூல்கள் அழிந்திருக்க்கூடும் என்பது ஏற்புடையதேயாகும். இன்று மக்களுடைய கவனம் மரபு வழியைச் சார்ந்த கலைகளிடத்தில் திரும்பியுள்ளது. இன்று சித்தமருத்துவம், சோதிடம், சிற்பம், இசை கட்டக்கலை முதலானவை புத்துயிர் பெற்றுள்ளன என்றால் மிகையாகாது. அவ்வகையின் மனையின் இலக்கணத்தைக் கூறும் நூல்கள் மீதும் கவனம் திரும்பியுள்ளது எனலாம்.

### தமிழில் மனை இலக்கண நூல்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனை இலக்கண நூல் பதிப்புகள் மனையடி சாத்திரம் என்ற பெயரில் வெளிவந்தன. அதன் பின்னர் இத்தகைய நூல்கள் உரை நடையில் வெளிவரத் தொடங்கின. மனை இலக்கண நூற்பதிப்புகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கின. இன்று மயனூல் என்னும் மனையடி சாஸ்திரம், சிற்ப ரத்னாகரம், சிற்ப நூலென்னும் பெரிய சிற்ப சாஸ்திரக்

களஞ்சியம் ஆகிய நூல்களே இன்று கிடைக்கின்றன. வெவ்வேறு அச்சகங்களில் வெளியிடப்பட்ட பொழுதும் 'மயனூல் என்னும் மனையடி சாஸ்திரம்' என்று குறிப்பிடப் படும் பதிப்புகள் ஒத்தவையாகவே உள்ளன என்பது இங்குச் சுட்டத்தக்கது. அந்நிலையை மாற்றி, 1981 இல் மனைநூல் சுவடிப்பதிப்பு வெளிவந்தது. இது மனைகளைக் கட்டக் கூடிய முறைகளைக் கூறும் மனையடி சாத்திரச் சுவடிகளின் தொகுப்பு நூலாகும். அதனையடுத்து 1995 இல் மயனூல் என்னும் மனையடி சாத்திரம் என்ற சுவடிப் பதிப்பு வெளிவந்தது. எட்டு மனையடி சாத்திரச் சுவடிகள் இப்பதிப்பிற்குப் பயன்பட்டிருந்தன. இவையனைத்தும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடிகளாகும். இந்த இரண்டு மனையடி சாத்திர நூல்களும் பதிப்பு நெறிமுறைகளுடன் கூடிய சிறந்த பதிப்புக்களாகும்.

இந்தச் சுவடிப் பதிப்புக்களின் அடிச்சுவட்டில், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் தமிழில் அமைந்துள்ள மனையடி சாத்திரச் சுவடிகளில் காணலாகும் செய்திகளைத் தொகுத்தும் பகுத்தும் மனையடி சாத்திரத் தொகுப்பு நூலகப் பதிப்பிக்க வேண்டும் என்ற நோக்கில் இப்பதிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டது.

**மேற்கொள்ளப்பட்ட பதிப்பு நெறிமுறைகள்**

மனையடி சாத்திரச் சுவடிகள் பல இன்று மறைந்து விட்டன. அழிந்தவை போக எஞ்சியுள்ளவை பலவும் முழுமை பெறாத நூல்களாக அமைந்துள்ளன. தொடக்க காலப் பதிப்புகளில், பாடல்கள் சீர்கள் பிரித்தல் இன்றி, எதுகை, மோனை, அடிகள் அமைய பதிப்பிக்கப்பட்டுள்ளன. பிழைகள் மலிந்த பதிப்புகளாகவும் முன்னுரை, பதிப்புரை போன்ற பகுதிகள் இல்லாமலும் சில நூல்கள் உள்ளன. சில நூல்கள் மூலமும் உரையுமாக அமைந்துள்ளன. சில நூல்களில் மூலம் மட்டுமே அமைந்துள்ளது. சில நூல்களில்

பல பாடல்கள் மூலம் மட்டும் அமையப்பெற்றனவாகவும், பல பாடல்கள் மூலமும் உரையும் அமைந்தனவாகவும் பல இடங்களில் உரைநடையாகச் செய்திகளைக் கூறுவன வாகவும் அமைந்துள்ளன. மனையடிச்சாத்திரச்சுவடிகள், பல ஆண்டுகளுக்குப் பின்னர் பதிப்பிக்கப் படுகின்ற காரணத்தால், இன்று சுவடிப் பதிப்புகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இப்பதிப்பு பல்வேறு பதிப்பு நெறிமுறைகளைக் கொண்டு விளங்குகிறது.

1. இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள், வெண்பா, அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம்,லிவிருத்தம் போன்ற பல்வேறு யாப்புகளாலானவை. இப்பாடல்கள் சுவடிகளில் அசை, சீர், அடி என்று அமைப்பில் வேறுபாடு காட்டாது சங்கிலித் தொடர்போல இடது கோடியிலிருந்து வலது கோடிவரை எழுதப்பட்டிருந்தன. அவை யாப்பு முறைப்படி சீர்பிரித்து செய்யுள் அமைப்பில் எழுதப்பட்டுள்ளன.

2. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி வைத்து, ெ ே இவற்றையும் ா,ர இவற்றையும் இடத்திற்கு ஏற்றாற் போன்றும் அமைத்தும் எழுதப்பட்டன. தமிழ் எண்கள் அச்சகங்களில் கிடைப்பது அரிதாகிவிட்ட காரணத்தால், ஆங்காங்கே வந்த தமிழ் எண்கள், இன்று வழக்கிலுள்ள இந்தோ அராபிய எண்களாக மாற்றி எழுதப்பட்டன.

3. இந்நூல், பல்வேறு சுவடிகளின் தொகுப்பு நூலாக அமைந்துள்ளது. எனவே, அனைத்துச் சுவடிகளிலும் இருந்த ஒரு பொருள் பற்றியசெய்திகள் ஒவ்வொன்றும் பகுக்கப்பட்டு, கடவுள் வணக்கம், சிற்பன், நிலம், சகுனங்கள், மரங்கள் என்பன போன்று தலைப்புகள் தரப்பட்டு அமைக்கப்பட்டன.

4. இந்நூலில் அமைந்துள்ள பாடல்களுக்குத் தக்க இடங்களில் தலைப்புகள் தரப்பட்டன.

5. இந்நூல், பல்வேறு சுவடிகளின் தொகுப்பு நூல் என்பதால் பாடல் எண்கள் பகுப்புகளின் வரிசைமுறையில் தொடர் எண்களாகத் தரப்பட்டன.

6. இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள் பதினாறு ஓலைச் சுவடிகளில் இருந்தும், இச்சுவடிகளில் இல்லாத பாடல்கள் சில மயனூல் என்னும் மனையடி சாஸ்திரம், சிற்ப நூலென்னும் பெரிய சிற்ப சாஸ்திரக் களஞ்சியம் ஆகிய நூல்களில் இருந்தும் தொகுக்கப்பட்டவை. ஆதலின், மூலம் மட்டும் இருப்பின் அந்தந்தப் பாடல்களுக்கு அருகிலும், மூலமும் உரையுமாக இருப்பின், அந்த உரைக்கு இறுதியிலும் சுவடியாக இருந்தால், சுவடியின் நூலக எண்ணும், சுவடிலமைந்த பாடல் எண்ணும் தரப்பட்டன. சில சுவடிகளில் பாடல்களுக்கு எண்கள் தரப்படவில்லை. அவ்வாறு அமைந்திருப்பின், அச்சுவடிகளில் நூலக எண்கள் மட்டும், பாடல்களுக்கு அருகில் பிறையடைப்பில் தரப்பட்டுள்ளன.

7. இந்நூலில் பதிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட பல சுவடிகளில் சிலவற்றில் பாடல்கள் மட்டுமே காணப்பட்டன. நூலினைப் படிப்போருக்குப் பொருள் புரிவதற்கு ஏற்ற வகையிலும் நூலின் சீர்மைக்குப் பொருந்தும் வகையிலும் தக்க இடங்களில் உரையாசிரியரால் பாடல்களுக்கு உரை எழுதப்பட்டது. பாடல்களுக்கு அருகிலேயே சுவடி எண்கள் அமைந்திருப்பின், அப்பாடல்களுக்கு உரை பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளது என்பதை எளிதாக உணரலாம்.

8. பதிப்பு முன்னுரை, பதிப்புரை ஆகிய பகுதிகளில் பதிப்பிக்கக் காரணம், நூலின் பெயர்க்காரணம்தேர்ந்தெடுத்த மூலச்சுவடிகளின் விபரம், நூல் தொடர்பான செய்திகள், நூலுள் உள்ள செய்திகள் போன்றவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

9. இந்நூலுக்குப் பயன்படுத்தப்பட்ட சுவடிகளில் உள்ள பாடல்களில் சில பொருள் ஒத்தனவாக யாப்பமைப்பு மாறுபட்டனவாகக் காணப்பட்டன. அவை ‘வேறு’ என்று தலைப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. சில பாடல்கள் மிகுந்த பாடவேறுபாடுகளுடன் அமைந்திருந்தன. அவை

அப்பாடலுடைய உரைக்குக் கீழே அமைந்துள்ள 'குறிப்பு' என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளன.

10. விளக்கம் தேவைப்படும் பாடல்களுக்கு அல்லது உரைகளுக்கு, அப்பாடல்களின் கீழமைந்த 'குறிப்பு' என்ற பகுதியில் பதிப்பாசிரியரால் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

11. இந்நூல் பதிப்பிற்குப் பயன்படுத்திய நூல்கள், பயன்படுத்தப்பட்ட சுவடிகள் முதலானவை அகர வரிசையின்படி பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

12. நூலின் இறுதியில் பதிப்பு மேற்கொள்ளப்பட்ட பொழுது கிடைத்த பொருள் விளங்காத பாடல்கள், பொருள் தொடர்பில்லாத பாடல்கள், பொதுவானப் பாடல்கள் முதலானவை உதிரிப் பாடல்கள் என்ற தலைப்பில் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

இத்தகைய பதிப்பு நெறி முறைகள், படிப்போருக்கு எளிமையாக விளங்க ஏற்றதாக அமையும்.

**தஞ்சை சரசுவதி மகால் நூலக மனையடி சாத்திர சுவடிகள்**

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சில்ப சாத்திரம் (சுவடி எண்கள் 739, 742, 878 b), சில்ப சாத்திரம் சுருக்க சிந்தாமணி (சுவடி எண் 886 b), சிற்ப சாத்திரம் (சுவடி எண்கள் 1005 a, 1411 b), மயனூல் (சுவடி எண்கள் 797, 886 a, 886 c), மனை சாத்திரம் (சுவடி எண்கள் 1568 d, 156 a), மனையடி சாத்திரம் (சுவடி எண்கள் 1005 b, 1411 b, 2027 a), மனையலங்காரம் (சுவடி எண் 796), நட்சத்திர நிகண்டு (888) ஆகிய பதினாறு சுவடிகள் இந்த பதிப்பிற்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டன. இவை வெவ்வேறு பெயர்களில் காணப்பட்டாலும் இவற்றில் வீடு கட்டுதல் தொடர்பான பாடல்களும் அவற்றிற்குரிய உரைகள் அமைந்தச் சுவடிகள், ஆங்காங்கே உரைநடையாகத் செய்திகளைக் கூறும் சுவடிகள், முழுவதும் உரைநடையாக அமைந்த சுவடிகள் என பல்வேறு வகையினவாகச் சுவடிகள் அமைந்துள்ளன.

ஒரு நூலில் கூறப்பட்ட செய்திகளில் ஒரு சில அடுத்த சுவடிகளில் காணப்பட்டன. சில புதிய செய்திகள் அவற்றில் அமைந்திருந்தன. இங்ஙனமாக ஒன்றோடொன்று சில ஒற்றுமைக் கூறுகளையும் பல்வேறு வேற்றுமைக் கூறுகளையும் கொண்டனவாக அமைந்தன. எனவே, மனையடி சாத்திரம் (தொகுப்பு நூல்) என்று இப்பதிப்பு நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

மனை கட்டுவதற்கான செய்திகளைத் தொகுத்தும் பகுத்தும் கூறும் இந்நூல், கட்டடக் கலையைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும் கட்டக்கலை ஆய்வாலர்களுக்கும் பழங்கலைகளைப் பற்றி ஆராய்ச்சியை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகும்.

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் பணியை எனக்கு வழங்கி, **மனையடி சாத்திரம்** எனும் இந்நூலைப் பதிப்பிக்க அனுமதித்து ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., அவர்களுக்கும் இந்நூல் வெளிவர துணை புரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு ம. சு. சண்முகம், இ. ஆ. ப., அவர்களுக்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலக முன்னாள் நிர்வாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொ.) திரு. சாமி. சிவஞானம், அவர்களுக்கும், தற்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் இந்நூலக நிருவாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் திரு. பெ. சந்திரசேகரன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலக கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***கா. சத்தியபாமா,***

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

# பதிப்புரை

தொன்மை காலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்து இயல்பாய் வாழ்ந்தான். தன்னையும் தன்னைச் சுற்றியும் உள்ள இயற்கையின் அவசியத்தையும் உணர்ந்திருந்தான். தனக்குத் தேவையான உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றை இயற்கையிலிருந்தே பெற்றான். குகைகளில் வாழ்ந்தான். விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள பரண்களில் பதுங்கினான். காலம் மாற மாற அவனுடைய சிந்தனையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன.

காட்டில் ஆங்காங்கே அலைந்து திரிந்து வாழத் தொடங்கிய மனிதன் குழுவாக வாழ முற்பட்டான். தன் தேவைக்கு ஏற்ப வீடுகளைக் கட்டத் தொடங்கினான். அறிவு விரிய விரிய அவன் கட்டிய வீடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தன்னுடைய சந்ததியினருக்குத் தன் அனுபவத்தை உணர்த்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதன் விளைவாக, அவற்றைக் கற்பாறைகளிலும் குகைகளிலும் ஓவியமாக வரைந்து வைத்தான். நாளடைவில் மொழியும் அதற்குப் பின்னர் அம்மொழிக்கு வரிவடிவமும் தோன்றின. அதன் விளைவாக நூல்கள் தோன்றின.

**கட்டடம்**

குகைகளிலும் பரண்களிலும் வாழ்ந்த மனிதன், தன் அறிவின் திறத்தால் வீடுகளைக் கட்ட முற்பட்டான். அவ்வாறு வீடுகளைக் கட்டி, அவ்வீடுகளில் வாழத் தொடங்கிய மனிதன், தான் கட்டிய வீட்டில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தினான். பலவகையான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தினான். அவரவர் விருப்பம்

போல வீடுகட்டி வாழ முற்பட்டபொழுது, சிலருடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்தனர். சிலர் துன்பத்தை அடைந்தனர். இதன் விளைவாகச் சிந்தித்து, வீடு கட்ட நிலத்தைத் தேர்வு செய்வது முதல், அவ்வீட்டில் குடியேறும் வரையிலான நிகழ்வுகளின் அடிப்படையில் தங்கள் அனுபவங்களையும் காரண காரியங்களையும் சிந்தித்த அவர்கள் வீடு கட்டுவதற்குரிய இலக்கணமாக வகுத்து வைத்தார்கள். அந்த இலக்கணங்களை நூல்களில் பதிவு செய்து வைத்தார்கள்.

கட்டுதல் என்பதன் அடிப்படையில் கட்டடம், சிற்பம் ஆகியவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. அவற்றின் அடிப்படையில் தொடக்க காலத்தில் இவை இரண்டினைப் பற்றியும் பொதுவாகக் கூறிச் செல்லும் நூல்கள் தோன்றின. இவற்றில் கோயில், கோட்டை, அரண்மனை, வீடுகள் போன்ற கட்டடக்கலையைச் சார்ந்த செய்திகள் எடுத்துரைக்கப்பட்டன. நாளடைவில் மனிதனின் பயன்பாட்டின் அடிப்படையில் வீடு கட்டும் முறைகளை எடுத்துரைக்கும் செய்திகள் தொகுக்கப்பட்டு, மனையடி சாத்திரங்கள் தோன்றின.

மனையடி சாத்திர நூல்கள், கோட்டை, அரண்மனை, கோயில் முதலானவற்றைக் கட்டுவதில் இருந்தும் சிற்ப சாத்திரங்களில் இருந்தும் மாறுபட்டுள்ளன என்றாலும் மனையடி சாத்திரங்களைச் சிற்ப சாத்திரம், சில்ப சாத்திரம் என்று கூறும் போக்கு அச்சு நூல்களில் காணப்படுகின்றன. சிற்பக் கலையுடன் கட்டடக்கலையும் சேர்ந்து வளர்ந்ததால் இப்பெயர் பெற்றது போலும். மேலும் தொடக்க காலத்தில் கட்டடக் கலையில் வல்லவர்களே சிற்பிகளாகவும் இருந்திருக்கக் கூடும். மனையடி சாத்திர நூல்களில் மனையயைக் கட்டுபவன் 'சிற்பன்' என்று பல இடங்களில் சுட்டப்படுவதைக் காணலாம்.

**கட்டடம்**

மயன் எழுதிய மனைநூலாகிய மனையடி சாத்திரம் இன்று பெருமளவில் பேசப்படுகிறது. சங்க இலக்கியங்களில் மயன்மரபு குறித்த செய்திகள் காணப்படவில்லை. காப்பிய காலத்தில் மயன்மரபு பேசப்படுகின்றது. மயன்மரபு பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன.

"மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து இடைநிலத் திருந்துழி"
(சிலம். மனையறம்படுத்த காதை : 12-13)

என கண்ணகியும் கோவலனு ம் ஏழு அடுக்கு மாளிகையில் இடைப்பட்ட நான்காம் அடுக்கில், மயனால் செய்யப் பட்டது போன்ற, மணிகள் இழைத்த கால்களையுடைய கட்டிலின் மீது இருந்தனர் என இளங்கோவடிகளால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும்,

"பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோர் உதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின இவைதாம் "
(சிலம். இந்திர விழவூரெடுத்த காதை : 12-13)

என்று தெய்வத் தச்சனால் உருவாக்கித் தரப்பட்ட சித்திர மண்டபம் குறித்துப் பேசப்படுகிறது. இவை சிலப்பதிகாரத்தில் மயன்மரபு என்பது புகழ்பெற்று விளங்கியது என்பதற்கான சான்றாதாரங்களாக விளங்கு கின்றன. இவையன்றி, சீவகசிந்தாமணியில் ஏமாங்கத நாட்டின் மன்னனான சச்சந்தன், தச்சனிடம் கூறிச் செய்யச்சொன்ன மயிற்பொறி, மயன் செய்ததோ என ஐயுறும் வண்ணம் இருக்கவேண்டும் என்று கூறியதை,

"அந்தரத் தார்மய னேயென வையுறும்
தந்திரத் தாற்றம நூல்கரை கண்டவன்
வெந்திற லொன்பெருந் தச்சனைக் கூவியோர்
எந்திர வூர்தி யியற்றுமி னென்றான் "
(சீவக. நாமகளிலம்பகம்: 205)

என்ற திருத்தக்க தேவர் பாடலால் உணரலாம். பதுமையார், மயனால் செய்யப்பட்ட அழகான பிரதிமையைப் போன்று இருந்ததை,

"பயனி ழைத்தமென் பள்ளியுட் பைந்தொடி
மயனி ழைத்தவம் பாவையின் வைகினாள் "

(சீவக. பதுமையாரிலம்பகம் : 145)

என்ற சீவகசிந்தாமணி பாடலடிகளால் அறியமுடிகிறது.

மயனையன்றி விசுவகர்மா என்ற பெயரும் சிற்ப, கட்டடக்கலை நூல்களில் கூறப்பட்டுள்ளது. மயனைப் போன்று இயந்திரப்பொறி செய்யும் தச்சனைக் குறித்துக் கூறும்பொழுது (சீவக. நாமகள் இலம்பகம் : 234) "தம்முடைய குலத்துக்குரிய மயமதம் முதலான சிற்ப நூலினைக் கரை கண்டவன் என்றும், இத்தச்சன் விச்சுவகருமனை ஒப்பானென்று கத்திய சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது என்று உ. வே. சா. தன்னுடைய குறிப்புரையில் கூறியுள்ளார்.

வில்லிபாரதத்தில் இந்த விசுவகர்மாவைப் பற்றிய செய்தி காணப்படுகிறது.

"நுண்ணிதின் உணர்நோர் உணர்தரும் சிற்ப
நூலறி புலவரை நோக்கி
திண்ணிதின் அமரர் சேகரன் மொழிந்தான்....."

வில்லி- ஆதி பருவம்-இந்தி. பி. ச. பா- 10)

என்ற பாடலில் தேவர் தலைவனாகிய இந்திரன், சிற்ப சாத்திரத்தில் தேர்ந்த விசுவகர்மாவைப் பார்த்துக் கூறிய செய்தி இடம்பெற்றுள்ளது.

ஆதலின், தமிழ இலககியஙகளில மயன்மரபு விரிவாகப் பேசப்படுவதோடு, விசுவகர்மாவின் கர்மாவின் மரபும் பேசப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

## கட்டட, சிற்பக்கலை நூல்களின் பதிப்புகள்

கட்டடக்கலையும் சிற்பக்கலையும் ஒன்றொடொன்று தொடர்புடையனவாக விளங்குபவை. ஆதலின் தொடக்க காலத்தில் கட்டடக் கலையைப் பற்றியும் சிற்பக் கலையைப் பற்றியும் இணைத்துக் கூறும்மயமதம், சில்பரத்தினம், மானசாரம், சாரச்வதீய சித்ர கர்ம சாத்திரம், காசியப சில்ப சாத்திரம், வைக்கானச ஆகமம் போன்ற சுவடிகள் பதிப்பிக்கப்பட்டன. இவற்றில் மனைநூல் தனித்ததொரு நூலாகக் கூறப்படவில்லை. இவையனைத்தும் வடமொழி நூல்களாக அமைந்தவை. வடமொழியில் எழுதப்பட்டவை களாக 'வாஸ்துவித்யை', 'மனுசயாலயச் சந்திரிகை' என்ற இரண்டு மனை நூல்கள் உள்ளன.

'விஸ்வகர்ம வாஸ்து சாஸ்தரம்' என்ற நூல் கே. வாசுதேவ சாஸ்திரி, எம். பி. தத்ரே என்பவர்களால் 1958இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல், தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூல் முழுமையான மனைநூல் என்று கூற இயலாது. ஆனால் மனையிடத்தேர்வு, அமைப்பு முறை, கட்டும் நெறிமுறை, திசையறிதல், கட்டுமானப்பொருட்கள், தெரு அமைப்பு, கிராம அமைப்பு முறைகள் வீடுகள் போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

'சாரச்வதீய சித்ரகர்ம சாத்திரம்', கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களால், 1960 இல் பதிப்பிக்கப்பட்டது. இது தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலின் ஒரு பகுதியாக மனையடி சாத்திரம் அமைந்துள்ளது. மனை சாத்திரம் தொடர்பான செய்திகளைக் கூறும் மற்றொரு நூல் சில்பரத்தினமாகும். இதனை எழுதியவர் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த குமாரர். இந்நூல் க. கணபதி சாஸ்திரிகளாலும் கே. சாம்பசிவ சாஸ்திரிகளாலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இச்சுவடியில் 46

இயல்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று முதல் இருபத்து ஏழு இயல்கள் வரையிலான சுலோகங்கள் (2000) மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மீதியுள்ளவை பதிப்பிக்கப் படவில்லை. இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடாக 1961இல் வெளிவந்துள்ளது. இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடாக 1961இல் வெளிவந்துள்ளது.

மற்றொரு குறிப்பிடத்தக்க நூல் மயமதம் என்பதாகும். 34 இயல்களைக் கொண்ட இந்நூலின் இறுதிப்பகுதியான நான்கு இயல்கள் தற்பொழுது கிடைக்கவில்லை. இந்நூலின் பதிப்பாசிரியர் கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாவார். இந்நூலின் முதல் தொகுதி 1966இல் வெளிவந்தது. இந்நூலின் இரண்டாம் தொகுதி 1968இல் வெளிவந்தது. இந்நூல், தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் வெளிடப்பட்டுள்ளது. இந்நூலில் வீடு கட்டுவதற்குரிய இடங்கள், நன்மைக்குரிய மனையிடங்கள், கட்டுமான முறை, திசை, காலமறிதல், வருணாசிரம அடிப்படையில் பல்வேறு மனை அமைப்புகள் குறித்தும் கூறப்பட்டுள்ளன.

இவையன்றி, மனையடி சாத்திரமாக அமைந்துள்ள ‘வாஸ்துவித்யை’ என்ற வடமொழி நூல், தமிழ் மொழிபெயர்ப்புடன் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். இந்நூலில் வாஸ்து, சொல் பொருள், மனை சோதனை முறைகள், பல்வேறு மனை வகைகள், சங்கு, அளவை, சங்கு ஸ்தாபனம், திசை, வாஸ்து புருஷன், நிலைத்த வீடுகள், ஆயாதி விதிகள், விலக்கத்தக்க மனைகள் வீட்டின் அமைப்பு, வாஸ்து சாந்தி முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## தமிழில் மனைநூல் பதிப்புகள்

தமிழில் பல்வேறு மனையடி சாத்திர சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. கிடைக்கும் வரையிலான மனையடி சாத்திரச் சுவடிப் பதிப்புகளில் பழமையானது, சென்னையில் 1917 ஆம் ஆண்டு பு. முனிசாமி நாயுடு அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்ட மனையடி சாஸ்திரம் என்ற நூலாகும். இந்நூலின் பதிப்பாசிரியர் யார் என்பது தெரியவில்லை. இதனையடுத்து, "விசுவகர்மாவாகிய மயனென்பவன் திருவாய் மலர்ந்தருளிய சிற்ப நூலெனும் மனையடி சாத்திரம்" என்னும் தொடக்கத்துடன் அமைந்துள்ள மனையடி சாத்திர நூல் கிடைக்கிறது. சென்னை வித்யாரத்நாகர அச்சுக்கூடத்தில் வெளிவந்துள்ள இந்நூல் 1932 இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் யார் என்பது தெரியவில்லை.

"சிற்பசாஸ்திரமென்னும் மனையடி சாத்திரம்" என்ற தலைப்புடன் மற்றொரு மனையடி சாத்திர நூல் 1962இல் வெளிவந்துள்ளது. இந்நூல் அமரம்பேடு இராஜரத்தின முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பட்டுச் சென்னை மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுள்ளது. பழைய பதிப்புகளிலிருந்தும் மாறுபாடு இல்லாத இந்நூலின் கடவுள் வணக்கப்பாடலில்,

"வேதநான் மறைக ளாக
விளங்குமும் மூர்த்தி யாகி
பூதலந் தனைப்ப டைத்த
புண்ணியன் தாளைப் போற்றி
தீதிலா மயனாற் சொன்ன
சிற்பசாஸ் திரமா நூலை
நீதியாய்த் தமிழி னாலே
நிலைபட வுரைக்க லுற்றேன்"

(பா. 1)

என்பதால் மயனார் என்பவர் இந்நூலை இயற்றியுள்ளார் என்பதை அறியலாம். "நீதியாய்த் தமிழி னாலே, நிலைபட உரைக்கலுற்றேன்" என்பதற்கு உரை கூறுமிடத்து, ஆதிவிசுவகர்மாவென்னும் மயனார் சொல்லிய மனைநூலைத் தமிழினால் சொல்லலுற்றேன் எனக் கூறுவதால், இம்மனைநூல் மயனார் கூறியது என்பது தெளிவாகிறது. இந்நூலில் உள்ள அறிவிப்பு என்னும் பதிப்பாசிரியர் குறிப்புரையில், மயனென்பவர் அருளிய சிற்பநூல் என்று வழங்குகின்ற மனையடி சாஸ்திரம் என்னும் இந்நூல், பலவாறாய்ச் சிதைந்திருந்தமையால், சகலருக்கும் உபயோகமாகும் பொருட்டு, இராஜமயேந்திரம் ஜில்லா, சாகரபத்தி அனுஜங்க ராஜஇராமகிருஷ்ண சித்தாந்தியார், சுகர்நாடி ஜோதிஷர் ஐயாசாமி பிள்ளை அவர்கள் இருவரால் சனக்குமாரவாஸ்து, கடகவாஸ்து, விமேசுரமாலை, உள்ளமுடையான், காலாமிர்த நூல்களைக் கொண்டு மேற்படி சாஸ்திரத்தைக் கோர்வையாக்கிப் பின்னர் அச்சிட்ட பிரதிக்கிணங்கியது" என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கேற்ப நூலின் பல இடங்களில் மேற்கண்ட நூல்களிலிருந்து பல செய்திகள் எடுத்துக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். சனற்குமார வாஸ்து சொல்லிய கிரகாரம்ப விதி (பாடல்:17) என்ற தலைப்பிலமைந்த பாடலைக் குறிப்பிடலாம். மேலும், பொருத்தங்களைப் பற்றிப் பேசும்பொழுது, மயன்-சனற்குமாரவாஸ்து -கடகவாஸ்து-வீமேசுரமாலை - உள்ளமுடையான்-காலாமிர்தம் இவைகளும் அடி- க-க்கு இப்பொழுது வழங்கிவரும் அங்குலம்...." என்தைச் சுட்டிக்காட்டலாம். இதனால் மனையடி சாத்திரப் பதிப்புகளில், சனற்குமாரே வாஸ்து, கடக வாஸ்து, விமேசுமாலை, உள்ளமுடையான், காலாமிர்தம் முதலான நூற்செய்திகளும் இணைக்கப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

சனக்குமார வாஸ்து, கடகவாஸ்து ஆகிய இரண்டு நூல்களும் கட்டடக்கலை தொடர்பான நூல்களாகும்.

வீமேசுரமாலை, உள்ளமுடையன், காலாமிர்தம் ஆகியவை சோதிட நூல்களாகும். எனவே, அமரம்பேடு இராஜரத்தின முதலியார் அவர்களின் பதிப்புரையின் அடிப்படையில் காணும்பொழுது, கட்டடக்கலை நூல்களிடையே ஜோதிடத்தை இணைத்துக் கூறும் மரபு வளர்ச்சியடைந் துள்ளது என்பது தெளிவாகிறது.

இவற்றைக் கொண்டு நோக்கும்பொழுது, காலக் கணிப்பு, அளவு முறைகள் முதலானவை சங்ககாலம் தொட்டுப்பேசப்பட்டாலும் பின்னாளில் சோதிடத்தோடு மிகுதியான தொடர்புடைய சாத்திரமாக வழங்கத் தொடங்கியுள்ளது எனலாம்.

இந்நூல்களுக்குப் பிறகு சுமார் இருபதாண்டு கால இடைவெளிக்குப் பிறகு 1981 ஆம் ஆண்டு 'மனைநூல்' என்ற பெயரில் மனையடி சாத்திர நூல் வெளிவந்தது. இச்சுவடிப் பதிப்பின் பதிப்பாசிரியர் முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்கள். சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக இந்நூல் வெளிவந்தது. இந்நூல் மனையின் இலக்கணத்தைக் கூறும் பல்வேறு சுவடி நூல்களின் தொகுப்பாக அமைந்துள்ளது. பழங்கால மனிதனின் வீடு, வாழ்க்கை, அனுபவத்தால் பெற்ற சிந்தனை, செயல்பாடு முதலானவை இந்நூலாய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மனைநூல் விளக்கம், மனையெடுக்கப் பயன்படுத்தும் அளவு கோல்கள், விதிமுறைகள் முதலான பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளன. வீடு கட்டுவதற்கான செய்திகள் பலவற்றையும் தொகுத்துப் பகுத்துக் கூறுகின்றது.

இந்நூலுக்குப் பின்னர் மீண்டும் முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட மயனூல் என்னும் மனையடி சாஸ்திரம் என்ற நூல் 1995 ஆம் ஆண்டு வெளிவந்தது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள மனையடி சாஸ்திரம் (சு. எண். ஆர். 3396, ஆர். 2678, ஆர். 3818, ஆர். 165 ஆர். 195), மனைநூல் (சு. எ. ஆர்.

243), மனை வாஸ்து லட்சனம் (சு. எ. ஆர். 238 ), சிற்ப சாஸ்திரம் (சு. எண. ஆர். 243a) ஆகிய எட்டு ஓலைச்சுவடி களில் இருந்த செய்திகளைத் திரட்டி இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மனை தொடர்பான பாடலாகவும் உரைநடையாகவும் கிடைத்த செய்திகள் அனைத்தும் திரட்டப்பட்டு, அவை 20 தலைப்புகளாகப் பகுக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலில் முன்னூற்று முப்பத்து மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. நிமித்தங்கள், மண்சோதனை, புற்று நிமித்தம், மனைகோலுதல், தேங்காய்க்குறி, நீள அகலம் அளவு கோலும் அளக்கும் முறையும், கூரைக்கால் அமைத்தல், மரத்தின் இலக்கணம், வாசற்கால் முதலியன வைத்தல், கதவு இலக்கணம், வாஸ்து புருஷன், மனைகோல நல்லநாள், வீடு கட்டுவதற்குரிய பலன்கள், நட்சத்திரம் அருக்கன் நிலை, ஆருட முறை, கிணறு அமைத்தல், பொருத்தங்கள் என பகுக்கப்பட்ட இந்நூலில், அந்தந்தத் தலைப்புகளில் அமையுமாறு அமைத்து உரைநடையாக அதன் விபரங்கள் தரப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டும் இச்செய்திகள் தரப்பட்டுள்ளன. இதுவரை வந்த மனைசாத்திர நூல்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடியதாகச் சிறந்த பதிப்பாக இந்நூல் விளங்குகின்றது.

இவையன்றி, விஸ்வகர்மாவாகிய மயனென்பார் திருவாய் மலர்ந்தருளிய சிற்ப நூலென்றும் பெரிய சிற்ப சாஸ்திர களஞ்சியம் என்று தொடங்கக் கூடிய மனையடி சாத்திரநூல் காணப்படுகிறது. இந்நூல் பல்வேறு சுவடிகளில் இருந்து தொகுக்கப்பட்ட 678 பாடல்களால் ஆனது. பெயருக்கு ஏற்றாற் போன்று மனையடி சாத்திரங்களின் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது. இந்நூலைப் பதிப்பித்தவர், வெளியிடப்பட்ட ஆண்டு முதலான செய்திகள் கிடைக்கவில்லை. மனையைக் கட்டத் தேவையான செய்திகள் மிகுந்த இந்நூல் அளவில் பெரியது.

மிகுதியான பாடல்களைக் கொண்டது. பாடல்களுக்கு உரைகள் உள்ளன என்றாலும், ஆங்காங்கே சில பாடல்களுக்கு உரைகள் இல்லை. சிற்சில இடங்களில் செய்திகள் உரைநடையாகச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழில் அமைந்துள்ள மற்றொரு மனையடி சாத்திர நூல், 'சில்பரத்னாகரம்' என்ற நூலாகும். இந்நூல் 1927 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலை சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி, ப. அ. கிருஷ்ணசாமிப்பிள்ளை ஆகிய இருவரும் சேர்ந்து பதிப்பித்துள்ளனர். இந்நூலின் முன்னுரையில்,

"இவ்வகைய இல்லம் இயற்றும் சாஸ்திரம் எழுதிய மயன் என்பார் 10000 சுலோகங்களடங்கிய ஒரு பெருநூல் எழுதியிருக்கின்றனர். அதனுள் ஒரு பகுதியாகிய இந்நூலோ சிற்பரத்நாகரம் என்னும் பெயருடையதாயிலங்குகிறது. இதில் மனை ஆக்குவிக்கும் முறையொன்றனையே பெரிதும் விசேஷித்துக் கூறியிருக்கிறார். பொது நன்மையை உத்தேசித்து உருச்சிதைந்த கைப்பிரதிகளிலிருந்து எளிய நடையுடையனவாகிய சுமார் 1400 பாக்களைப் பொறுக்கித் தொகுத்துத் தொடர்பு குன்றாத ஒரு பூரண நூலாக்கிக் கோத்து ......." (முன்னுரை, ப. 6) என்பதனைக் கொண்டு இந்நூலைப் பற்றி விரிவாக அறிய முடிகிறது. தமிழில் அமைந்துள்ள மனைசாத்திரச் சுவடிகளில் இந்நூல் மிகவும் விரிவானது. மூலம் மட்டுமே இந்நூலில் அமைந்துள்ளது. இதுவும் ஒரு தொகுப்பு நூலாகவே காணப்படுகிறது. "பழைய ஏட்டுச் சுவடியாகிய மயநூல் பதினாயிரத்தினின்றும் தொகுக்கப் பெற்ற சிற்பரத்நாகரம்" என்று நூலின் தலைப்பில் கூறியிருப்பதும் இங்குச் சுட்டத்தக்கது.

இல்லம் இயற்றுவது குறித்த ஒரு கலைக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகின்றது என்றால் மிகையாகாது. பாடல்கள் யாப்புப் பிரிப்பின்றி காணப்படுகின்றன. அதனால் இன்று இந்நூலைப் படிப்போருக்கு இடர்பாடு ஏற்படுகின்றது.

எனினும் தமிழில் அமைந்துள்ள அரிதான மனைநூல் என்ற பெருமைக்கு உடையது.

சங்ககாலம் முதற்கொண்டு இலக்கியங்களைப் படைத்த புலவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். அரசர், வள்ளல் போன்றோர் அவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்களுக்குப் பொருளை வாரி வழங்கினர். ஆனால் கலைகள் தொடர்பான நூல்களை எழுதியோர் அதனை இயற்றியமைக்காகப் பொருள் பெற்ற செய்திகள் இதுவரை கிடைக்கவில்லை. அக்கலைகளைத் தங்கள் தொழிலாகக் கொண்டு செயல்பட்டுப் பொருள்களை ஈட்டியிருப்பர். இதுபோன்ற கலை நூல்கள் அந்தந்தத் தொழிலைச் செய்வோரால் மரபு மரபாகப் பாதுகாத்துவரப்பட்டவையாகும்.

சுவடிப்பதிப்பாசிரியர்களுள் முதன்மையானவராகப் போற்றப்படும் உ. வே. சாமிநாதையர் அவர்கள், "சிற்ப சாஸ்திரம் பண்டைக்காலத்தில் மகோன்னத நிலையை அடைந் திருந்தது. நான் படித்துக் கொண்டிருந்த பொழுது, திருவாவடுதுறையிலும் சுவாமிமலையிலும் திருவிடைமருதூரிலும் திருவீழிமிழலையிலும் பிறஊர்களிலும் சிறந்த சிற்பிகள் அல்லது ஸ்தபதிகள் இருந்தார்கள். அவர்களுடைய பயிற்சி மிக ஆச்சரியப்படத் தக்கதாக இருந்தது. இப்பொழுதும் ஆங்கங்கே சிலர் இருக்கிறார்கள். நான் கையெழுத்துப் பிரதிகளைத் தேடிக்கொண்டுபோன காலத்தில் அநேக இடங்களில் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் சிற்ப நூல்கள் பல இருந்தன" (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் ப. 142) என்று குறிப்பிடுகிறார். இதனால் குலத்தொழிலாக விளங்கி வந்த கலைகள் சிலரிடமே தஞ்சமடைந்திருந்தன எனலாம். சிற்ப சாஸ்திரம் என்பது கோயில், அரண்மனை, மூர்த்திகள் செய்தல், வீடு கட்டுதல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. இதனால்

இக்கலையின் இலக்கணங்களை, இக்கலைகளோடு தொடர்புடையவர்களே அறிந்திருந்தனர். அவர்கள் தங்கள் சந்ததியினருக்கு மட்டுமே அவற்றைக் கூறிச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனால் இக்கலை தொடர்பான விரிவான செய்திகளை மற்றவர்கள் அறிந்துகொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. மேலும் பிறர் இதைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டவில்லை எனலாம்.

பற்பல இடங்களுக்குச் சென்று தமிழ் இலக்கியங்களை மிக முயன்று தேடிச் சேகரித்த உ. வே. சா. அவர்கள் தமிழிலும் சமஸ்கிருதமாகிய வடமொழியிலும் சிற்பநூல்கள் பல இருந்தன என்று கூறுமிடத்தும் கூட அந்நூல்களின் பெயர்களைப் பற்றி சிந்தித்து, “இப்பொழுது கட்டிடங்களின் பல உறுப்புக்களை ஆங்கிலச் சொற்களால் குறிப்பிடு கிறார்கள். நான் கண்ட சுவடிகளில் எல்லா உறுப்புக்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே இருந்தன. சிறந்த சிற்பிகளைக் கண்டு கேட்டால், புருஷ வடிவமாகிய பட்டணத்துக்கும் ஊர்களுக்கும் வீடுகளுக்கும் முகம், கண், தலை முதலிய உறுப்புகள் எவையோ அவை இன்ன இன்ன இடத்தில் இருக்க வேண்டுமென்பது விளங்கும். திடீரெனத் தோன்றும் நகர்கள், ஊர்கள், வீடுகள் இவற்றின் இலக்கணக் குறைவுகள் இன்னவென்றும் சிற்ப நூல்கள் நன்கு தெரிவிக்கும் என்கிறார். (*சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் - 142)*

இன்று கட்டிடங்களுக்கு உடலுறுப்புக்களின் பெயர்களைத் தமிழில் கூறும் நூல்கள் இல்லையென்றே சொல்லிவிடலாம். இந்நூல் பதிப்பிற்காகப் பதினாறு ஓலைச்சுவடிகளில் சேகரித்த பொழுதும், வீடு கட்டுதல் தொடர்பான அச்சு நூல்கள் பலவற்றைக் கண்டபொழுதும் ஒரே ஒரு ஓலைச்சுவடியில் மட்டும் இச்செய்தி காணப்பட்டது. அதிலும் ஒரு சில பாடல்களே கிடைத்தன.

"மகரமுதல் ஓரைந்தும் மறிமுதலோர் மூன்றும்
செகமகிழ் பஞ்சமிக ளோடெட்டும் சேரா
நகமில்லை மூக்குபல் லுகிர்பொருத்தம் முந்தியில்லை
இகலாமென் மயனுரைத்தா ரளவு "

(2078b : 15)

என்ற பாடலில் நகம், மூக்கு, பல் முதலான உறுப்புகள் குறைந்த மனையைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை இவ்வைந்து நாட்களும், மேஷம், ரிஷபம், மிதுனம் ஆகிய இம்மூன்று இராசிகளும், பஞ்சமி, அஷ்டமி ஆகிய இவ்விரண்டு திதிகளும் கூடி வந்தால், அம்மனைக்கு நகம், மூக்கு, பல், நகம் ஆகியவற்றில் குறைபாடு உண்டு என்று உரைக்கப் பட்டுள்ளது. மேலும்,

"ஆதாயம் ஒன்பதின் கீழ் அஸ்தமுதல் ஓர்நான்கும்
தீதான பூருவமும் திருதிகை நிறைமதியாம்
பாதான கைகால் பெருவிரலும் கூழையென்றே
வேதமயன் இதுவுரைத்தார் இருந்து."

(2027a : 16)

என்ற பாடலில் கை, கால், மார்பு, கணு, விரல், கண்டம், மயிர் ஆகிய குறைபாடு உள்ள மனையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆதாயம் ஒன்பதற்குக் கீழ்வரும்பொழுது அஸ்தம், கேட்டை, மூலம், பூராடம் இந்த நான்கு நாட்களும் பூர்வபட்சத்துத் திருதிகையும், பௌர்ணமி, அமாவாசை இவை கூடிவந்தாலும் மேற்கண்ட குறைபாடுகள் உள்ள வீடாகும். இவையன்றி முப்பத்து இரண்டு உறுப்புகளும் சிறப்புடன் அமைந்த வீடு,

"சகடுவி சாகம் தனிமான் தலைபூசம்
விகடமா யிலியம் புனர்தம்வில் வந்திட
மகிழ்துலாமீன் நன்றுசுகம் சுறாவோடு கும்பமுடன்
பகமாவென் றாங்குறிப்புப் பேசினார்."

(2027a : 17)

என்று உரோகணி, விசாகம், மிருகசீரிடம், பூசம், ஆயிலியம், புனர்பூசம் இவற்றுடன் தனுசு, மீனம், துலாம், மிதுனம், மகரம், கும்பம் முதலான இராசிகள் சேர்ந்திருந்தால் உறுப்பு முப்பத்து இரண்டும் முழுமையாக அமைந்த வீடென உரைக்கப்பட்டுள்ளது. நம் உடல் முப்பத்து இரண்டு உறுப்புக்களை அமைத்துக் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது. இதுகுறித்து விரிவான செய்திகள் மனையடி சாத்திர நூல்களில் கிடைக்கவில்லை என்பது இங்குச் சுட்டத்தக்கது.

## நூலின் செய்திகள்

மனையடி சாத்திரம் (தொகுப்பு நூல்) என்ற இந்நூலில் பதினாறு சுவடிகளில் உள்ள மனை கட்டுதல் தொடர்பான செய்திகள், சிற்பன், நிலம், சகுனங்கள், மரங்கள், அளவுகோலும் அளக்கும் முறைகளும், வாசல், கதவும் நிலையும், வாஸ்து, வீட்டின் அமைப்பு, வீட்டின் அளவு, வீடுகட்டும் காலமும் பலன்களும், வீடு கட்டும் காலமும் நேரமும், முகூர்த்தத் தேங்காய், முகூர்த்தக்கால் நாட்டுதல், கிணறும் குளமும், வீடுகட்ட ஆகாதவை, சுவர் வெடிப்பின் பலன், கறையான் வந்த பலன், ஆருட முறையில் சல்லியம் காணல், பொருத்தங்கள் ஆகிய பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, அவை இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### சிற்பனுக்குரிய இலக்கணம்

சிற்பனுக்குரிய இலக்கணங்கள் இவை இவை என்று நூலுள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பொன்னாலாகிய பூணூல் இட்டவன்; பவித்ர மோதிரம் அணிந்தவன்; தலையில் குடுமியும் உடையவன்; தேவ பூசையில் விருப்பம் உடையவன்.

காதிலே குண்டலமும், கையிலேமண்டலமும், நெற்றியில் பட்டையும், சிவபூசையும், செபமாலையும் கொண்டு கூர்மாசனத்தோடு வேதபாராயணம் உடையவன்.

குலத்திற்கேற்ற நல்ல அம்சங்களைக் கொண்டவன்; தூய்மையான மனத்தை உடையவன்; சிவந்த நிறம் உள்ளவன். பிறகுலமாதர்களைச் சேராதவன். நான்குவேதங்களையும் சிறப்புற ஓதுபவன்; அறிவில் தெளிவுடையவன்; அனுட்டானங்களைத் தக்க நாட்களில் செய்பவன்; பல கலை நூல்களையும் ஓதவல்லவன் என்று சிற்பனுக்குரிய இலக்கணங்களைப் பலபாடல்கள் எடுத்துரைக்கின்றன.

## சிற்பன் செய்யும் தொழில்

கோயில்கள், நகரங்களையும், பட்டணங்களையும் அமைத்தல், வீடு கட்டுதல், நீர்நிலை அமைத்தல், கிணறுகள் அமைத்தல் முதலானவை சிற்பன் செய்யக்கூடியவை. இவற்றைக் கட்டத்தொடங்கும்பொழுது செய்கின்ற சடங்குகளைச் சிற்பன் மட்டுமே செய்யவேண்டும்.

வீட்டினைக் கட்டும்பொழுது சிற்பனைத் தவிர்த்து வள்ளுவன், அன்னிய சாதியினர் சடங்குகள் செய்ய மனையானது பாழாகும். மனைக்குரியவனின் மனைவி மரணமடைவாள்; செல்வம் கையை விட்டுப்போகும்; மனைக்குக் கேடுண்டாகும். மனையைக் கட்டுபவனுக்கு ஆகாது; மன்னர்களால் கேடுண்டாகும்; மனையைக் கட்டுபவனுக்கு ஆகாது; மன்னர்களால் கேடுண்டாகும்; மனத்துயரத்திற்கு ஆள்வார்கள் என்று இந்நூல் உரைக்கிறது.

## சிற்பனுக்குத் தரவேண்டியவை

உயர்ந்த மனையை எடுக்கும் பொழுது, தலைமுறை தலைமுறைகளாக மனைகளைக் கட்டிவரும் சிற்பனுக்குப் பொன், ஆடைகள் முதலானவற்றை பலநாட்கள் தரவேண்டும். அவர்களுக்கு சுவைமிக்க உணவினைப் பல நாட்களுக்கு அளிக்க வேண்டும். மனைகட்டத் தொடங்கும் நாளில் சந்தனம், மலர்கள் போன்றவற்றோடு புதிய

ஆடைகளையும் பொருள்களையும் கொடுத்து மனைப்பொருத்தங்களை சிற்பனிடம் கேட்க வேண்டும். என்று இந்நூல் எடுத்துரைக்கிறது.

### சிற்பனின் தொழில்நுட்பம்

ஒரு மனையைக் கட்டும்பொழுது, தேவைப்படும் முக்கியமான கருவிகளும், அதன் தொழில் நுட்பமும் குறித்து மனையடி சாத்திரங்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. இந்நூலில், முழக்கோல், மட்டக்கோல், சங்கு, கலன் பேழை, கற்பம், பிடிக்கயிறு, முளை போன்ற கருவிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், முளையின் அளவு, குறியிடங்கள், உத்திரம் இசைத்தல், விட்டம், சட்டம், பல சட்டங்களையும் இணைத்தல், கால் மரங்கள், கை மரங்கள், முகட்டு உயர்வு, வாசலின் அகல அளவு, நிலையின் அளவு, கதவு, தாழ்ப்பாள் போன்றவற்றைப்பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### கிராமங்களில் வீடுகள்

கிராமத்தை உருவாக்குவதற்குக் கத்தரிக்கோல் போலவும், முக்கோணத்தைப் போலவும், கண்களைப் போலவும் இருக்கும் நிலங்கள் பொருந்தாது. இத்தகை நிலங்களில் வீடுகளைக் கட்டக்கூடாது. மேலும், மத்தளம் போலவும் கொட்டைப்பாக்கு போலவும் உள்ளும் புறமுமாக இருக்கப்பட்ட நிலங்களில் வீடுகளைக் கட்டக்கூடாது.

உப்பு நிலமாக உள்ள கிராமத்திலும் அல்லது கிராமத்தின் மத்தியிலும் மூலையிலும் பள்ளமான நிலத்திலும் தண்ணீர் ஓட்டம் உள்ள நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. பலரும் வேண்டாம் என்று தடுக்கும் நிலத்திலும் கோயிலுக்காக விடப்பட்ட நிலத்திலும் பாம்பின் புற்று இருந்த இடத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. புற்று

இட்டிருந்த நிலத்திலும் சுடுகாட்டு நிலத்திலும், மேடிட்ட இடத்திலும், கால்நடைகள் கட்டப்பட்டிருந்த நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. மேலும், மத்தளம் போலவும் கொட்டைப்பாக்கு போலவும் உள்ளும் புறமுமாக இருக்கப்பட்ட நிலங்களில் வீடுகளைக் கட்டக்கூடாது.

உப்பு நிலமாக உள்ள கிராமத்திலும் அல்லது கிராமத்தின் மத்தியிலும் மூலையிலும் பள்ளமான நிலத்திலும் தண்ணீர் ஓட்டம் உள்ள நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. பலரும் வேண்டாம் என்று தடுக்கும் நிலத்திலும் கோயிலுக்காக விடப்பட்ட நிலத்திலும் பாம்பின் புற்று இருந்த இடத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. புற்று இட்டிருந்த நிலத்திலும், சுடுகாட்டு நிலத்திலும், மேடிட்ட இடத்திலும், கால்நடைகள் கட்டப்பட்டிருந்த நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. மேற்குப் பார்த்த நிலம் சேதத்தைத் தரும். கிழக்குப் பார்த்த நிலம் சிறந்தது. அகலம் குறைந்த, நீர்நிலைக்கு அருகிலுள்ள நிலத்திலும், நெய்யின் மணமுடைய நிலத்திலும் வீடுகட்டக்கூடாது. தயிர், தேன், எண்ணெய், இரத்தம், மீன், பிணம் முதலானவற்றின் மணம் பொருந்தியதாக அமையும் நிலத்தில் வீடுகட்டக்கூடாது.

### நிலம்

ஒரு மனையைத் தேர்ந்தெடுத்து வீடுகட்டுவதற்கு முயலும்பொழுது, முதலில் அந்த நிலத்தின் வடிவம், அந்நிலத்தின் மட்டம், மண்ணின் சுவை போன்ற பல்வேறு செய்திகளை மனதில் கொண்டு வீடுகட்டியுள்ளனர்.

### நிலத்தின் வடிவமும் இருப்பிடமும்

உடுக்கையைப் போலுள்ள பூமியும், வேல் போன்ற பூமியும், ஏரிக்கரையிலுள்ள பூமியும் சோலைகளைச் சார்ந்த பூமியும், அகன்ற குளத்திற்கு அருகிலுள்ள பூமியும்,

சன்னியாசிகள் வசிக்கும் பூமியும் மனைகட்ட ஆகாதவை. அவ்வாறு கட்டினால் அந்த வீடு நசிந்துபோகும்.

வீடுகட்டும்போது நிலம் சூலம் போன்று இருப்பின், அங்கு வீடு கட்டுதல் கூடாது, நீண்ட நிலமாக ஒத்து இருப்பின், அங்கு வீடு கட்டினால் எந்நாளும் செல்வம் உண்டாகும். முக்கோணமான பூமியிலும் மாமிச நாற்றமுடைய பூமியிலும், மேற்கும், தெற்கும் கிழக்கும் தாழ்ந்த பூமியிலும் வீடு கட்டினால் தனதானியம் முதலான செல்வங்கள் நீங்கி, புத்திரர்கள் மரணமடைவதோடு அம்மனையும் பாழாகும்.

வட்டத்தையும் முக்கோணத்தையும் போன்றும் சாரை, மயில், குடம், குரங்கு, மீன், பன்றி, மழு, சங்கு, விளக்கு, சூலம் முதலான வடிவங்களில் இருக்கும் நிலங்களில் பல்லி, ஓணான், பாம்பு, பறவை போன்ற வடிவங்களில் உள்ள நிலங்களில் வீடுகட்டலாகாது.

### நிலத்தின் தன்மை-மண்ணினால் காணுதல்

மனை கோலுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நிலத்தின் நடுவே, ஒரு முழ நீளம்,ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் குழியைத் தோண்டி, அதிலுள்ள மண்ணை எடுத்து, மீண்டும் அந்தக் குழியில் கொட்டினால், மண் மீதி இருக்குமானால், **உத்தம** நிலமாகும். மண்ணைக் கொட்ட, குழியில் மீதியின்றிச் சமமாக இருக்குமானால் **மத்திம** நிலமாகும். குழியில் மண்ணைக் கொட்ட, குறைவாக இருக்குமானால் அதம நிலமாகும். உத்தம நிலத்தில் வீடுகட்ட, அளவற்ற செல்வம் கிடைக்கும்.

### நிலத்தின் தன்மை-நீரினால் காணுதல்

மனைக்கு நடுவே சதுரமாக ஒரு முழ அகலமும் ஒரு முழ நீளமும் ஒரு முழ ஆழமுமாக ஒரு குழியைத் தோண்ட

வேண்டும். அதில் நிறைய நீர் விடவேண்டும். நீரை விட்டபொழுது, நீரானது வலம்புரியாகச் சுற்றினால் மனைக்கு உரியவனுக்கு மிகுந்த செல்வம் வந்து சேரும். நீரானது இடம்புரியாகச் சுற்றினால் மனைக்கு உரியவன் மரணமடைவான். குழியில் உள்ள நீரில் நீர்க்குமிழி தோன்றினால், அம்மனையில் வீடு கட்டினால், அந்த வீடு தீயினால் எரிந்துபோகும் குழியில் மாலை நேரத்தில் மிகுதியாக நீர் ஊற்றி வைத்துச் சூரிய உதயத்தின்பொழுது வந்து பார்த்தால், அதில் நீர் இருக்க, மனைக்குரியவனின் வீட்டில் குபேரனுடைய செல்வத்தைப் போல செல்வம் பெருகும். சூரிய உதயத்தின்பொழுது வந்து பார்த்தால், நீர் குறைந்து, சிலந்தியின் கால்களைப் போல வற்றி விரிந்திருந்தால் வியாதியுண்டாகும். செல்வம் அழிந்து போகும். பிதுர்சாபத்தினால் மனைக்குரியவனின் பொருள்கள் நாசமாகும்.

### நிலத்தின் தன்மை, நீரில் மலரிட்டுக் காணுதல்

மனைக்கு நடுவில் சதுரமாக ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் இருக்கும்படியாக ஒரு குழியைத் தோண்டி, அதில் நீரைவிட்டு, அதில் ஒரு பூவை மிதக்கவிடவேண்டும். வானிலுள்ள கதிரவனை நோக்கியுள்ள பூக்கள் வலமாகச் சுற்றிவரில் மிகுந்த நன்மை உண்டாகும். இடமாகச் சுற்றிவரில் அம்மனையைக்கட்ட தீங்கு உண்டாகும்.

1. இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் மலரானது நிற்குமாகில், தனதானிய சம்பத்தும் செல்வமும், புத்திரர் தோன்றுதலும் கிட்டும்; தீர்க்காயுள் உண்டாகும்; பசுக்கள் முதலான கன்றுகாலிகள் சேரும்.

2. அக்கினி திசை எனப்படும் தென்கிழக்குத் திசையில் மலரானது நிற்குமாகில், அம்மனைக்குரியவனுக்குக்

குழந்தைபேறு இருக்காது. பாம்பினால் அச்சம் உண்டாகும்; வீடு கட்டினால், அவ்வீடு தீயினால் அழிந்து போகும்; துன்பங்கள் மிகுதியாக வரும்; கள்வர்கள் பொருள்களைக் கவர்வர். கலகம் உண்டாகும்.

3. இயமன் திசை என்று சொல்லப்படும் தெற்குத் திசையில் மலர் வந்து நிற்குமாகில், மனதில் குழப்பமும் கலக்கமும் செருக்கும் உண்டாகும்; இதனால் கலகம் உண்டாகும். தீமைகள் ஏற்படுவதோடு, நோயினால் அச்சம் உண்டாகும்.

4. கன்னி மூலையாகிய தென்மேற்குத் திசையில் மலர்வந்து நின்றால், நல்ல உணவும் மிகுந்த செல்வமும் வந்து சேரும்; திருமகள் தன் அருளை வழங்குவாள்; பொன், தானியம் போன்றவை எந்நாளும் நீங்காமல் பொருந்தி யிருக்கும்.

5. வருண திசையாகிய மேற்குத் திசையில் மலர் வந்து நின்றால், சங்கநிதி, பதுமநிதி முதலான பெருஞ்செல்வங்கள் உண்டாகும்; தீவினைகள் அனைத்தும் மாறி, நினைத்தவை நிறைவேறும்; இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி சிறப்புடன் வளம்பெற்று வாழ்வார்கள்.

6. வாயு மூலை என்று சொல்லப்படும் வடமேற்கு திசையில் மலர்வந்து நின்றால், அம்மனைக்கு உரியவன், காச நோயினால் மரணம் அடைவான்; திருட்டியினால் பொருள்கள் கையைவிட்டுப் போகும்; பேய் பிடித்துக் கொள்ளும்; மனையானது பிணங்களைச் சுடும் சுடுகாடு போலாகும்; மனைக்குரியவனின் புதல்வர்களுக்கும் அழிவு உண்டாகும்.

7. குபேரன் திசையாகிய வடக்குத் திசையில் மலர் வந்து நின்றால், செல்வம் வந்து சேரும்; பொன், பொருள் மிகும்;

அம்மனைக்கு உரியவன் சபை நடுவே பெரியோனாக மதிக்கப்படுவான்; பிறருக்குப் பொருளை வழங்கும் தர்மசிந்தனை உடையவனாக விளங்குவான்; தன்னிடம் அடைக்கலமாக வந்தோருக்கெல்லாம் உதவுபவனாக இருப்பான்.

8. ஈசானிய திசை என்று சொல்லப்படுகின்ற வடகிழக்குத் திசையில் மலர் வந்து நின்றால், பொன் பொருள் சேரும்; தீர்க்காயுள் உண்டாகும்; புத்திரர்கள் தோன்றுவர்; வாழ்வு மேன்மேலும் பெருகுவர்; இவையன்றி, இம்மனைக்குரியவன் பெரியோர்களுக்கும் தபோதனர் களுக்கும் அன்னதானம் செய்பவனாக இருப்பான்.

## நிலத்தில் புற்று தோன்றுதலின் பலன்கள்

வீடு கட்டுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள மனையில் புற்று தோன்றுவதால் உண்டாகும் நன்மை தீமைகளைக் கண்டறிந்து வீடு கட்டவேண்டும். முதலில் புற்று மனையின் எப்பகுதியில் அமைந்துள்ளது என்பதைக் காண வேண்டும். அதற்கு மனையை ஒன்பது சமமானப் பகுதிகளாகப் பகுத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| வாயு பாகம் | குபேர பாகம் | ஈசானிய பாகம் |
| வருண பாகம் | பிரம்ம ஸ்தானம் | இந்திர பாகம் |
| நிருதி பாகம் | இயமன் பாகம் | அக்கினி பாகம் |

1. இந்திர திசையாகிய கிழக்குத் திசையில் புற்று தோன்றினால், செல்வம் உண்டாகும்.

2. அக்கினித்திசையாகிய தென்கிழக்குத் திசையில் புற்று தோன்றினால், மனை இடியும்.

3. எமன் திசையாகிய தெற்குத் திசையில் புற்று தோன்றினால், துக்கம் உண்டாகும்.

4. நிருதி திசையாகிய தென்மேற்குத் திசையில் புற்று தோன்றினால், புகழும் வளமான வாழ்வும் ஏற்படும்.

5. வருண திசையாகிய மேற்குத் திசையில் புற்று தோன்றினால் , புகழும் வளமான வாழ்வும் ஏற்படும்.

6. வாயு திசையாகிய வடமேற்குத் திசையில் புற்று தோன்றினால், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும்.

7. குபேர திசையாகிய வடக்குத் திசையில் புற்று தோன்றினால், மனைக்குரியவனுக்கு பல நன்மைகள் ஏற்படும்.

8. ஈசான திசையாகிய வடகிழக்குத் திசையில் புற்று தோன்றினால், மனைக்குரியவனுக்கு நோய் உண்டாகும்.

9. மனையின் நடுவிடமாகிய பிரமஸ்தானத்தில் புற்று தோன்றினால் மனைக்குரியவனுக்கு மரணம் ஏற்படும்.

**சல்லியங்கள்**

நல்லநாள், திதி, பொருத்தங்களை ஆராய்ந்து மனைக்கு நடுவே தோண்டிப் பார்க்கும் பொழுது, மண்ணின் கீழ் கிடைக்கும் பொருள்களுக்கு ஏற்ப நன்மை, தீமைகள் வாழ்வில் நடக்கும் என்ற நம்பிக்கை மனையடி சாத்திர நூல்களில் காணப்படுகின்றன.

மனைக்கு நடுவே தோண்டிப் பார்க்கும்பொழுது முதலில் கரி வெளியே தெரியுமானால், நோயுண்டாகும்.

விறகு வெளியே தெரியுமானால், மனைக்குரியவனின் பெரும்பொருள் அழிந்து போகும். உமி வெளிப்படுமானால், அம்மனைக்கு உரியவனுக்குப் பொருள்கேடு உண்டாகும்; சிப்பியைக் கண்டால், சுற்றத்தார்க்கு அழிவு ஏற்படும்; எறும்பு, தேள், கறையான், கட்டை, கபால எலும்பு முதலானவற்றைக் கண்டால், குலம் நாசமடையும்; வண்டு, நகம், மயிர் போன்றவற்றைக் கண்டால் அந்த மனைக்கு அழிவு நேரிடும். மணல் வெளிப்பட்டால், பொருட்கள் ஒன்றுமில்லாமல் போகும். மண்டை ஓடு, பானை ஓடு, மரப்பட்டை, புறப்புச்சோறு, சுக்கான்கல், சாம்பல் போன்றவற்றைக் கண்டால், தீங்கு நேரிடும். கருங்கல், எலும்பு போன்றவற்றைக் கண்டால், அம்மனைக்கு உரியவனின் மனைவி இறப்பதோடு அவனும் இறந்துபடுவான்.

பாம்பு, எலி, ஓணான் முதலானவற்றைக் கண்டால், அம்மனையில் வீடுகட்ட, இகழ்ச்சியுண்டாகும். பல்லைக் கண்டால், வீட்டில் மரணம் நேரிடும். தீவினைகள் சூழ்ந்து, துன்பம் நேரிடும்.

பசுவின் கொம்பு, தவளை, விலையுயர்ந்த கற்கள், மணிகள், செல்வம் போன்றவற்றைக் கண்டால், அம்மனையில் வீடுகட்ட நன்மையாகும். பொன், செம்பு, வெள்ளி இவைகளில் ஒன்று வெளிப்பட்டால் நன்மையாகும் இரும்பு, ஈயம், பித்தளை முதலான உலோகங்களில் ஒன்றைக் கண்டால், மத்திமமான பலன் உண்டாகும். கல், செங்கல், சிப்பி முதலானவற்றைக் கண்டால், கன்றுகாலிகள் பெருகும். நல்ல வாழ்க்கை உண்டாகும்; செல்வம் மிகும்; பொருள் சேர்க்கை உண்டாகும்; புத்திரர்கள் தோன்றுவர் அனைத்து நலன்களும் பெற்று வாழ்வர். தவளையைக் கண்டால், மிகுதியான தானியங்கள் கிடைக்கும். நண்டினைக் கண்டால், மிகுந்த பாக்கியங்கள் உண்டாகும். பூமியைத் தோண்டும் பொழுது செல்வத்தைக் கண்டால் இன்பமாகும்.

அம்மனையில் செல்வம் சேரும். அதைப்போல, தானியங்களைக் கண்டாலும் அம்மனையில் செல்வம் சேரும். சிப்பியையும் கல்லையும் கண்டால், நன்மையுண்டு எனவும், தீமையாகும் எனவும் முரண்பட்ட கருத்துக்கள் இப்பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

**தளமட்டம்**

மனைகோல தேர்ந்துள்ள இடத்தில் கிழக்கு, வடக்கு ஆகிய திசைகளில் நிலம் தாழ்ந்து காணப்பட்டால் மிகுந்த நன்மையைக் கொடுக்கும். மேற்கு, தெற்கு ஆகிய திசைகளில் நிலம் உயர்ந்து இருந்தால், மனைக்குரியவன் தன் சுற்றத்தார் சூழ, மகிழ்ச்சியோடு வாழ்ந்திருப்பான். கிழக்குத் திசையில் நிலம் தாழ்ந்திருப்பின் தீமை என்று ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. பாடவேறுபாட்டில் இக்கருத்து முரண்படுகிறது.

மனைகோலும் இடத்திற்கு நடுவே, ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் சதுரமாகக் குழியைத் தோண்டி மண்ணை நிரப்பும் பொழுது மண்மிகுந்து இருப்பின், அந்த இடத்தில் நீரை மிகுதியாக ஊற்ற வேண்டும். விட்டநீர் வழிந்து பரந்து நான்கு திசைகளிலும் வழிந்து முளைக்கும் ஏற்றம் குறைவு இல்லாமல் இருந்தது என்றால் தளம் சமமாக உள்ளது என்பதை அறியவேண்டும்.

குழியில் விட்ட நீர்,கிழக்கு, வடக்கு மூலைகளில் சென்று தங்கினால், அந்நிலத்தில் மனையைக்கட்ட நன்மையாகும். மனைக்கு உரியவனுக்கு மிகுந்த பொருட்கள் வந்து சேரும். தெற்கில், மேற்கு மூலைகளில் நீர் சென்று தங்கினால், மனைக்குரியவனின் மனைவிக்குத் தீங்கு நேரிடும்.

**மண்ணின் மணம்**

மக்கள் பலரும் பயன்படுத்துகின்ற வழியில் உள்ள நிலத்திலும் குறுகிய வழி அமைந்துள்ள நிலத்திலும், வழிகள்

பல ஒன்று சேருகின்ற நிலத்திலும் உவர் மண்ணாக உப்புச் சுவை உடையதான, உப்பு மணம் உடையதான இடங்களில் வீடு அமைக்க, அந்த மனைக்கு உரியவனின் உற்றார் உறவினர்கள் இறந்து, அந்தவீடு சுடுகாட்டுக்கு ஒப்பானதாக விளங்கும்.

மனைகோல தேர்ந்துள்ள இடத்தில் உள்ள மண், புன்னைப் பூவைப் போலும், தாமரைப்பூவைப் போலும், பாதிரிப்பூவைப் போலும், பசுவின் நீரைப் போலும், சந்தனம் முதலாகிய மணப்பொருட்களைப் போலும், மண் உடையதாக இருப்பின், அம்மனைக்கு உரியவன் நிறைந்த செல்வம் பெற்று, மிகுந்த சுற்றத்தார் சூழ, நீண்டகாலம் வாழ்வான். தயிர் மணம் போலும், நெய் மணம் போலும், தேன் மணம் போலும், இரத்த மணம் போலும், மயிர்ச்சிக்கு மணம் போலும் மீன் கவிச்சு மணம் போலும், பறவையின் மணம் போலும், மோரின் மணம் போலவும் இருக்க, இந்நிலத்தில் பயிரிட்டால் விளையாது. வீடு கட்டினால், பாழாகும்.

### மண்ணின் சுவை

மனைகோலுவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ள மண்ணில் இனிப்பான சுவை இருப்பின், அந்த இடத்தில் மறையோர் வீடுகட்டவேண்டும்; கார்ப்பான சுவை இருப்பின், அந்த இடத்தில் அரசர்கள் தம் அரண்மனையைக் கட்டவேண்டும், புளிப்பான சுவை இருப்பின் அந்த இடத்தில் வணிகர்கள் வீடுகட்ட வேண்டும். கைப்புச்சுவை இருப்பின், அந்த இடத்தில் சூத்திரர்கள் வீடுகட்ட வேண்டும் என்ற கருத்து அக்காலத்தில் நிலவி வந்துள்ளது.

### மண்ணின் நிறமும் சுவையும் மணமும்

சிவந்த நிறமுள்ள நிலம், துவர்ப்புச் சுவையுள்ள நிலம், குதிரை வாசனையுள்ள நிலம் ஆகியவை மன்னர்களுக்கு

அரண்மனை கட்ட ஏற்ற இடமாகும். அவ்வாறு கட்ட, குபேரனைப் போன்று பெருஞ்செல்வம் பெற்று, துன்பங்கள் அனைத்தும் அகன்று, பரிவாரங்களுடன் தடைகள் எவையுமின்றி சிறப்புடன் வாழ்வார்கள்.

வெளுத்த நிலம், இனிப்புச் சுவையுள்ள நிலம், தாமரைப்பூ மணமுள்ள நிலம் ஆகியவை அந்தணர்களுக்கு வீடு கட்ட ஏற்ற இடமாகும். அவ்வாறு கட்ட, குடும்பம் மேன்மேலும் வளரும். நன்மைகள் பெருகும். அனைத்து நலன்களும் பெற்றுச் செல்வச்செழிப்போடு வாழ்வார்கள்.

**சகுனங்கள்**

மனையடி சாத்திர நூல்களைப் பொறுத்த வரையில் சகுனங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. மனைகோல வந்தவர்களோடு சிற்பன் செல்லும் பொழுதும் மனையில் இருவரும் நிற்கும்பொழுதும் உண்டாகும் சகுனங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இவற்றின் நற்சகுனங்களைக் காணில், செய்யத் தொடங்கும் செயல் சிறப்புடன் நிறைவேறும் எனவும், தீய சகுனங்களை எதிர்கண்டால் தீமை விளையும் என்ற நம்பிக்கையும் நிலவுகின்றன.

மனைகோல வந்தவர்களோடு சிற்பன் செல்லும் பொழுது அழகான பெண்கள் எதிர்ப்பட்டு வணங்கினால், நல்ல யோகம் உண்டாகும். மதுக்குடம், மாமிசம், பால், நெய், தண்ணீர், நிறைந்தகுடம், சுமங்கலி பெண், ஒற்றையாள், இரட்டை அந்தணர், விலைமகளிர் போன்ற சகுனங்கள் தோன்றினால் நன்மை உண்டாகும். பூரண கும்பம், யானை, தலைவன், குதிரை, பல்லக்கு முதலானவற்றைக் கண்டாலும் நன்மை உண்டாகும். வண்ணான், அன்னம், கரும்புக்கட்டு போன்றவற்றை எதிர்கண்டாலும் நற்சகுனமாகும். நரி, கிளி, புலி, முயல், கோழி, கொக்கு, மயில், ஓணான், மான், பசு, எருது, நாரை,

அணில், கழுதை, செம்போத்து ஆகியவை வலதுபக்கம் சென்றால் நல்ல சகுனமாகும்.

குரங்கு, நாய், பூனை, கருங்குருவி, கோட்டான், பன்றி, மூஞ்சுறு, ஒட்டகம், எலி, சாரைப்பூம்பு, கூகை, கருடன், ஆந்தை, காடை, உடும்பு, கீரி இவைகள் மனைகோலச் செல்லும் பெழுது வலப்புறமிருந்து இடப்புறம் போனால் நன்மையுண்டாகும் என்று ஒரு பாடல் எடுத்தோதுகிறது. நிறைகுடத்தை மனைகோலச் செல்லும்பொழுது எதிரே கண்டால், செல்வம் வந்து சேரும்.

**தீமைதரும் சகுனங்கள்**

மனைக்கு உரியவன் மனைகோலச்செல்லும்பொழுது குறைகுடத்தைக் கண்டால், துன்பம் உண்டாகும்; படமெடுத்து ஆடும் நாகப்பாம்பினைக் கண்டால், பகை உண்டாகும்; நெருப்பைக் கண்டால், சுற்றத்தார் அனைவரும் அழிந்து போவார்கள்.

குடியன், வலையன், சுடுகாட்டாண்டி, முடவன், செக்கான், மூக்கரையன், கூனன், குருடன் இவர்களை எதிரில் காணில், அந்த மனையைக் கட்ட நசிந்துபோகும் மேலும், விரித்த தலையை உடையவன், மொட்டைத்தலையன், தவசி, சன்னியாசி, ஒற்றைப் பிராமணன், ஸ்தனங்கள் இல்லாப் பெண், புதுப்பானை, வாணியன் இவர்கள் எதிரில் வந்தால் தீய சகுனமாகும். மேலும், அழக்கு ஆடையை உடையவன்; செம்பட்டைத் தலையன் சுருட்டைத் தலையன், நொண்டி, முகத்தில் மயிர் இல்லாதவன், ஒற்றைக் கண்ணன், விதவைப் பெண், தடிக்கொம்பை உடையவன், கயிறு உடையவன் இவர்கள் எதிரில் வந்தால், உயிருக்குச் சேதம் உண்டாகும். மனைகோலச் செல்லும்பொழுது காறித்துப்புதல் போன்ற சத்தங்களைக் கேட்டாலும், கைம்பெண்ணைக் கண்டாலும், துக்கமான நிகழ்வுகளைக் கண்டாலும் வழியில் நாற்றம் அடித்தாலும் தீமை தரும் சகுனமாகும்.

**மனையில் நிற்கும்போது சகுனங்கள்**

சிற்பியும் மனைக்கு உரியவனும் மனையில் நிற்கும்பொழுது, பல்லி முன்பு வலமாகச் சொன்னால் நன்மையாகும். இடமாகச் சொன்னால் அம்மனைக்கு உரியவன் அரச்ரகளுக்குப் பிரியமுள்ளவனாகப் புத்திரர் களுடன் மனைவியுடனும் இன்பமாக வாழ்வான்.

வெள்ளைப்புறாவும் வெள்ளைப்பசுவும், வெள்ளை எருதும், வெள்ளைநிற மானும், வெண்மை நிறமுள்ள பெண்ணும் நிற்பதைத் தங்கள் மனையில் நின்றபோது கண்டால் மிகவும் சிறப்பானதாகும்.

பகண்டை என்னும் குருவி, வலப்பக்கத்தில் பாடிச் சென்று மீண்டும் இடப்பக்கத்தில் திரும்பி வந்து பாடினால், மனைக்குரியவனுக்குத் துன்பங்கள் நீங்கி நன்மைகள் உண்டாகும். முயல், கருடன், கரடி, மான், ஆடு, பருந்து, அட்டை, சாரைப்பாம்பு, குரங்கு, நாய் ஆகியவை குறுக்கிட்டு ஓடுமாகில் நன்மை உண்டாகும்.

மனையில் சிற்பனும் மனைக்குரிவனும் நிற்கும் பொழுது,குயில், மயில், செம்போத்து, நரையான், வல்லூறு, கவுதாரி, வலியன், நரி, புலி, ஓணான், எலி, பன்றி, நாகம் ஆகியவை வலம்போக நன்மையாகும். மேலும் வண்டு, அரணை, பல்லி, மண்புழு, சிலந்திப் பூச்சி இவைகளைக் கண்டபின், அம்மனையில் வீடுகட்ட நன்மையாகும்.

**தீமை தரும் சகுனங்கள்**

உடும்பு, தேரை, தேள், ஆமை, பூரான், எலி ஆகியவற்றைக் கண்டால், அம்மனையைக் கட்டக் கூடாது. கட்டினால் அந்த வீடு பாழாகும். நாய், கூகை, பாம்பு, புற்று, தேன்கூடு, கருடன், பறவை, ஆண் குரங்கு, ஓணான் போன்றவற்றைக் கண்டால் அம்மனையில் பேய் இருக்கும். அம்மனையில் வீடுகட்டி வாழ, மனைக்கு உரியவரின் மக்கள்

மரணமடைவர். சிற்பனும் மனைக்கு உரியவனும் மனையில் சென்று நின்றபொழுது, எறும்புகள் வரிசையை விட்டு விலகி, சிதறிச் சென்றாலும் கரையான் பரவியிருந்தாலும் வண்டுகள் பூமியில் இருந்து மேலே பறந்தாலும் அந்த மனையில் வீட்டைக் கட்டினால் தீமையுண்டாகும்.

## மரங்கள்

வீடு கட்டுவதற்கு முக்கியமான மூலப்பொருளாக விளங்குவது மரமாகும். இந்த மரங்கள் குறித்த பல்வேறு செய்திகள் மனையடி சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளன. மாட மாளிகைகள், மண்டபங்கள் கட்டும்பொழுது மரங்களின் நன்மை, தீமை முதலானவற்றைக் கருத்தில் கொண்டு கட்டவேண்டும். மரங்களில் ஆண்மரம், பெண்மரம், அலிமரம் என்ற மூன்று வகை மரங்களைக் குறித்து இந்நூல் கூறுகிறது. மரங்களின் அமைப்பைக் கொண்டு இப்பாகுபாடுகள் அமைந்துள்ளன. இன்றைய தாவரவியல் நூல்களில் இத்தகைய பாகுபாடு இல்லை.

### ஆண்மரம்

மரத்தின் அடிப்பாகமும் நுனிப்பாகமும் ஒரே அளவாக ஒரே சீராக தூணைப்போல திரண்டு இருந்தால், அது ஆண் மரமாகும். தூண்கள் செய்யவும் வாசற்கால், சன்னல் போன்றவற்றின் கால்களுக்கும் ஆண்மரத்தையே பயன்படுத்த வேண்டும்.

### பெண்மரம்

மரத்தின் அடிப்பாகம் பருத்தும் நுனிப்பாகம் சிறுத்தும் உயர்ந்து பரந்து இருந்தால் இது பெண் மரமாகும். இம்மரத்தை வீட்டின் உத்திரம் வளைவு போன்றவற்றைச் செய்ய பயன்படுத்த வேண்டும்.

### அலி மரம்

மரத்தின் அடிப்பாகம் சிறுத்து உயர்ந்து நுனிபாகம் பருத்துக் காணப்பட்டால், இது அலிமரமாகும். இம்மரத்தை

வீட்டின் விட்டம், சட்டம் முதலானவை செய்ய பயன்படுத்தவேண்டும்.

**மரங்களின் பாகுபாடுகள்**

ஆண் மரம், பெண்மரம், அலி மரம் என்ற பாகுபாட்டினையன்றி, மரங்களை,

1. வீடு கட்டுவதற்கு ஆகும் மரங்கள்
2. வீடு கட்டுவதற்கு ஆகாத மரங்கள்

என இரு பாகுபாடுகள் கூறப்பட்டுள்ளன. வீடுகட்டுவதற்கு ஆகும் மரங்கள் தேக்கு, சந்தனம், வேம்பு, செம்பணம், கடுக்காய், இங்குலிகம், மாமரம், கொன்றை, இலுப்பை, நாவல், மருது, நுணா, வேங்கை, இருமுடி, வேலமரம், உசிலை, ஆச்சா, வெள்ளொடுவை, மூங்கில், கமுகு, தென்னை, பனை, கடம்பு, பாலை, ஓடுவை, புரசு ஆகிய மரங்கள் வீடுகட்டுவதற்கும் மாடமாளிகைகள் கட்டுவதற்கு ஆகும் மரங்களாகும்.

இவற்றுள்ளும் வடம், நிலை போன்றவை நான்கு வருணத்தாருக்கும் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளன. தேவர்க்குக் கோயில் அமைக்கும்பொழுது, மாமரத்தைக் கொண்டு வடம், நிலையை அமைக்க வேண்டும். அதைப்போல அந்தணர்கள் வேப்ப மரத்தையும், அரசர்கள் தேக்கு மரத்தையும், செட்டிகள் இலுப்பை மரத்தையும் வேளாளர் வேங்கை மரத்தையும் வீடுகளைக் கட்டும்பொழுது வடம், நிலைகளை அமைக்க பயன்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட கதவு நிலைகளுக்குக் குறிப்பிட்ட வடமே பயன்படுத்த வேண்டும் என்று பொதுவான செய்தியொன்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, எட்டி, நாவல், தேத்தா, பாலை, ஆயில் ஆகிய மரங்களின் கதவு நிலைக்கு அந்தந்த மரங்களின் நிலைகளையே பயன்படுத்த வேண்டும். தனக்கு, ஆல், அரசு, இச்சி வடங்களுக்கு வெள்ளுசிலை நிலையைப் பயன்படுத்தவேண்டும்.

**அளவுகோல்**

மரங்களை வீடுகட்டப்பயன்படுத்தும்பொழுது அளப்பதற்கு அளவுகோல் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த அளவு கோலைச் செய்வதற்கு மூங்கில், ஆச்சா, தேக்கு, வேங்கை ஆகிய மரங்கள் ஏற்ற மரங்களாகும். இந்த அளவுகோல் செய்யும்பொழுது நான்கு வருணத்தாருக்கும் நான்கு வகை மரங்களினால் அளவுகோல்கள் செய்து பயன்படுத்தப்பட்டன.

மூங்கிலால் செய்த முழக்கோல்களைப் பிராமணர்களும் ஆச்சா மரத்தால் செய்த முழக்கோல்களை அரசர்களும் தேக்கு மரத்தால் செய்த முழக்கோல்களை வணிகர்களும் வேங்கை மரத்தால் செய்த முழக்கோல்களும் வேளாளர்களும் வீடுகட்டும்போது பயன்படுத்த வேண்டும்.

**மட்டக்கோல்கள்**

வீடு கட்டும் பொழுது மட்டக்கோல்களைப் பயன் படுத்துவர். இந்த மட்டக்கோலைச் செய்வதற்கு மூங்கில் ஆச்சா, தேக்கு, கருங்காலி, வேங்கை, ஆகிய மரங்களும் இரும்பும் பயன்படுத்தப்பட்டன. இந்த மட்டக்கோல்களைச் செய்யும் பொழுது நான்கு வருணத்தாருக்கும் ஏற்ற வகையில் மரங்கள் பயன்படுத்தப்பட்டன.

மூங்கிலால் செய்த மட்டக்கோலை அந்தணர்களும், ஆச்சா மரத்தால் செய்த மட்டக்கோலை அரசர்களும், தேக்கு மரத்தினால் செய்த மட்டக்கோலை வணிகர்களும், கருங்காலி, வேங்கை முதலான மரங்களால் செய்யப்பட்ட மட்டக்கோல்களைச் சூத்திரர்களும் வீடுகள் கட்டும்போது பயன்படுத்த வேண்டும். இரும்பினால் செய்த மட்டக்கோலைக் கோயில்கள் கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும்.

**வீடுகட்ட ஆகாத மரங்கள்**

அக்காலத்தில் அனைத்து மரங்களும் வீடுகட்டப் பயன்படுத்தப்படவில்லை. மரத்தின் இயல்பிற்கு ஏற்ப மரங்களைத் தேர்ந்தெடுத்து வீடுகளைக் கட்டினர். மரங்களுள் அத்தி, ஆல், இச்சு, அரசு, இலவு, பரசு, குச்சம், இலந்தை, பீலி, விளா, மகிளம், வெண்குடசை போன்ற மரங்கள் வீடுகட்ட ஆகாத மரங்களாகும். இவற்றைக் கலந்து வீடுகட்ட துன்பம் உண்டாகும். செல்வம் குறைந்து போகும். மேலும் வக்கணா, வாகை, கூகை, உசிலை, அழிஞ்சி ஆகியவை முனிவர்க்கும் தேவர்க்கும் மனிதர்களுக்கும் தீமையைச் செய்வன. ஆகவே அவற்றை வீடுகட்டப் பயன்படுத்தக் கூடாது.

வன்னி, கள்ளி, விடத்தலை, வேல், வாகை, வில்வம், கருங்காலி, விளா, பரம்பை முதலிய முள்ளுள்ள மரங்களை வீடுகட்டப் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன் படுத்தினால் மனைக்குரியவனுக்கு உணவு கிடைப்பது அரிதாகும்; மரணபயம் உண்டாகும்; துன்பம் நேரிடும்; இத்தகைய மரங்கள் முனிவர்க்கும் தேவர்க்குமாகும். மனிதர்களுக்கு ஆகாது.

இம்மரங்களையன்றி, குறிப்பிட்ட இடங்களில் வளரும் மரங்களும் வீடுகட்ட ஆகாத மரங்களாகும். அம்பலத்தில் இருந்தது; ஊர் மத்தியில் இருந்தது; கோயில்களில் இருந்தது; அனலில் வெந்தது; பறவைக் கூட்டங்கள் இருந்தது; புற்றின் மீது முளைத்தது; தேள் இருந்தது; வம்புக்காய் காய்த்தது; கொடி சுற்றி இருப்பது; புழுவெட்டு உள்ளது; மிருகங்கள் தங்கி இருப்பது; குளத்தருகில் இருப்பது, கிணற்றருகில் வளர்வது; தானே வளராமல் பூமியில் நட்டு வைத்து வளர்வது; யானை முறித்தது; காற்றுமோதி முறிந்தது; சுடுகாட்டில் நின்றது; பாழ்மனையில் இருந்தது; சேரி இருந்த இடத்தில் வளர்ந்தது; வெம்பி கிடந்தது; பாம்பு குடி இருப்பது; பூதம், பிசாசுகள்

நின்றது; மக்கி வீழுந்த மரம் முதலானவை வீடுகட்ட தீமையானதாகும். இவற்றைத் தவிர வௌவால் உறைந்த மரம், கொடி, புல்லுருவி பாய்ந்த மரம், மயானத்தில் இருந்த மரம் ஆகியவை வீடு கட்டுவதற்கு ஆகாத மரங்களாகும். இவ்வகைப்பட்ட மரங்களால் வீடுகள் கட்ட, மனைக்குரியவனின் குலம் நாசமடையும் என்று கூறப்பட்டுள்ளது.

**மரத்தைத் தேர்ந்தெடுத்தல்**

வீடுகட்டுவதற்குக் கவனமாக மரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கும்போது ஆண்மரமாகப் பார்த்து, குற்றங்கள் இல்லாததாக, தேரைகள், பொந்துகள் இல்லாததாக, உள்வளைசல் இல்லாததாகப் பார்த்து வெட்ட வேண்டும்.

**மரங்கள் வெட்டும் விதி**

மரங்களை வெட்டுவதற்கு முன் அதிகாலையில் எழுந்து நீராடி, நியமங்களைச் செய்தபின் பணியாரம், பாற்சோறு முதலானவற்றை உண்ண வேண்டும். கச்சை தொப்பரம் கட்டியபின், பாக்கு வெற்றிலை தின்ன வேண்டும்.

மரங்களை வெட்டச் செல்லுவதற்கு ஏற்ற முகூர்த்தத்தில் காட்டிற்குச் சென்று பற்பல பணியார வகைகளுடன் வனதேவதைக்குப் பலி கொடுத்து ஆண்மரத்திற்கு அருகில் செல்ல வேண்டும். கோடாலியைப் பாலிலும் நெய்யிலும் தோய்த்துப் பின் மரங்களை வெட்ட வேண்டும்.

மரத்தடியில் மயனாரும் மரம் வெட்டுபவரும் சென்று தூபம் காட்டி, கணபதி பூசை செய்து, வணங்கி, கோடாலியையும், தர்ப்பையையும் வலது புறத்தில் வைத்து, ஆண்மரத்தைத் தழுவி, மேற்கொம்பு பார்த்து, ஒரு முழம் விட்டு மூன்று வெட்டு வெட்டுவது. மீண்டும் மரம் வெட்டவேண்டும்.

### மரம் வெட்டும்போது சகுனம்

மரத்தை வெட்டும்பொழுது, வெட்டினவாயில் இருந்து நீர் வழிந்தாலும், இரத்தம் போல விழுந்தாலும், பால் போல் விழுந்தாலும், தேரை உள்ளிருந்து ஓடினாலும் நஷ்டத்தையும் துன்பத்தையும் தோஷத்தையும் காட்டும், மரம் வெட்டி விழுகின்றபொழுது புலி, யானையின் ஒலியைப் போலவும் இராகம் பாடியதைப் போலவும் ஓசை எழும்பினால் நன்மை யாகும். அழுவது, சிரிப்பது, மனிதர், பேய் இவர்கள் அலறுவது போல ஓசை எழும்பினால் பொருட்சேதம் உண்டாவதோடு, தீமையும் விளையும்.

### வெட்டி விழும் திசையும் பலனும்

மரத்தை வெட்டும்பொழுது, மரத்தின் தலைப்பகுதி வடக்கு அல்லது கிழக்கு திசைகளில் விழுந்தால் நன்மையும் செல்வமும் பெருமையும் உண்டாகும். மேற்கு அல்லது தெற்கு திசைகளில் மரத்தின் தலைப்பகுதி விழுந்தால் தீவினைகள் மிகுந்து துன்பத்தைத்தரும். தோஷம் உண்டாகும். எனவே மரத்தின் தன்மையும், மரம் விழும் பொழுது ஓசையும் சரியாக இருக்கும் மரத்தினை அக்காலத்தவர் பயன்படுத்தி இருப்பதை அறியலாம். அவர்கள் கண்ட அனுபவ உண்மைகளைக் கொண்டு வீடுகளைக் கட்ட மரங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது இதனால் புலனாகும்.

### மரம் அமைத்தல்

வாசற்கால், தூண் போன்று மரம் நின்ற நிலையில் வைக்க வேண்டுமானால், அடிமரம் கீழே இருக்கும்படி யாகவும் தலைப்பகுதி மேலே இருக்கும்படியாகவும் இசைத்துக்கொள்ள வேண்டும். இதையன்றி, உத்திரம் இணைக்கும்பொழுது கையாள வேண்டிய அளவு முறைகள், செயல்பாடுகள் போன்றவை கூறப்பட்டுள்ளன.

**நிலை அமைக்க மரம்**

வீட்டிற்கு நிலைகளைச் செய்யும்பொழுது நான்கு வருணத்தினருக்கும் ஏற்ற வகையில் மரங்களைப் பயன்படுத்த வேண்டும். அந்தணர்களுக்கு வேம்பினாலும் அரசர்களுக்கு ஆச்சா, தேக்கு மரங்களாலும் வைசியர்களுக்கு இலுப்பை மரத்தாலும் வேளாளர்களுக்கு தென்னை, உசிலை மரங்களாலும் நிலைகள் செய்தல் வேண்டும் என்பது அக்காலத்தவர் கருத்து.

**வீடும் மரங்களும்**

வீடுகள் கட்டுவதற்காகப் பயன்படுத்தும் மரங்களை யன்றி வீட்டில் வளர்க்கக்கூடிய மரங்களையும் வீட்டில் வளர்க்கக் கூடாத மரங்களையும் பாகுபடுத்திக் கூறியுள்ளனர். தென்னை மரம், பலாமரம், வாகை மரம், பாக்கு மரம், மாதுளை மரம், திராட்சி மரம், வேப்ப மரம், எலுமிச்சை மரம், நாவல்மரம், மாமரம், வம்பளை மரம், நாரத்தை மரம் போன்றவை வீட்டில் வளர்ப்பதற்கு ஏற்ற நல்ல மரங்களாகும்.

ஓங்கி உயர்ந்த இலவமரம், கோங்கமரம், விளாமரம், புளியமரம், கூளாமரம், இலுப்பை மரம், வில்வ மரம், அலரி மரம், கற்பாசம், மச்சமரம், முருங்கைமரம், வாகைமரம், ஆமணக்கு, அற்க மரம் போன்றவையும் அகத்தி, இலுப்பை பனை, எட்டி, நாவல், எருக்கு, புளி, இலந்தை, முருக்கு, நெல், பருத்தி முதலானவை வீட்டிற்கு அருகே இருக்குமானால், வீட்டிற்குத் தீங்கு நேரிடும் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றுள் மரமல்லாத சில பயிர்களையும் கூறியிருப்பது சுட்டத்தக்கது. சான்று : நெல்.

**அளவுகோலும் அளக்கும் முறைகளும்**

இன்று இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படுவது போன்று தரப்படுத்தப்பட்ட அளவுகோல் அக்காலத்தில் இல்லை. வாய்பாடுகளும் சுவடிக்குச் சுவடி மாற்றம் பெற்று கிடைக்கிறது. எனினும் அடிப்படையான அளவைகள் ஒன்றாக உள்ளது எனலாம்.

**முதல் வாய்பாடு**

அணு எட்டுக் கொண்டது ஒரு பஞ்சின் தூள்;
பஞ்சின் தூள் எட்டுக் கொண்டது ஒரு மயிர் முனை;
மயிர்முனை எட்டுக் கொண்டது ஒரு மணல்;
மணல் எட்டுக் கொண்டது ஒரு கடுகு;
கடுகு எட்டுக் கொண்டது ஒரு மூங்கில் அரிசி;
மூங்கில் அரிசி எட்டுக் கொண்டது ஒரு அங்குலம்;
அங்குலம் ஆறு கொண்டது கால்முழம்;
அங்குலம் பன்னிரண்டு கொண்டது அரை முழம்;
அங்குலம் பதினெட்டுக் கொண்டது முக்கால்முழம்;
அங்குலம் இருபத்து நான்கு கொண்டது ஒரு முழம்;

அங்குலம் ஆறு, பன்னிரண்டு, பதினெட்டு, இருபத்து நான்கிற்கு முறையே அதமாதமம், அதமம், மத்திமம், சந்தி அல்லது மாநாங்குலம் என்ற பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

**மற்றொரு வாய்ப்பாடு**

அணு எட்டுக் கொண்டது புல்நுனி;
புல்நுனி எட்டுக்கொண்டது நுண்மணல்;
நுண்மணல் எட்டுக்கொண்டது எள்ளு;
எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு;
நெல்லு எட்டுக் கொண்டது துவரை;
துவரை எட்டுக்கொண்டது விரல்;
விரல் ஆறு கொண்டது கால்முழம்;
கால்முழம் நான்கு கொண்டது ஒரு முழமாகும்;

**நான்கு வருணத்தார்க்கும் அளவு கோல்கள்**

அக்கால வழக்கப்படி நான்கு வருணத்தார்க்கும் தனித்தனியாக அளவுகோல்கள் இருந்தன. அவரவர்கள் வீடுகட்டும்பொழுது, அந்தந்த அளவுகோல்களைக்கொண்டு அளந்து வீடு கட்டும் வழக்கம் இருந்தது.

கிடகு என்னும் இருபத்து நான்கு விரல்கொண்டது வேளாளருக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும்;

**பிரஜாபத்தியம்** என்னும் இருபத்து ஐந்து விரல் கொண்டது வணிகருக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும்; **தனுமுட்டி** என்னும் இருபத்து ஆறு விரல் கொண்டது அரசருக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும்; **தனுக்கிரகம்** என்று சொல்லப்படும் இருபத்து ஏழு விரல் கொண்டது அந்தணர்க்கு ஒருமுழம் என்று சொல்லப்படும்.

*மானாங்குலம் 24 விரலளவு கொண்டது சூத்திரருக்காகும்;*
*பிரசாபத்தியம் 25 விரலளவு கொண்டது வைசியர்க்காகும்;*
*தனுமுட்டி 26 விரலளவு கொண்டது க்ஷத்திரயருக்காகும்;*
*தனுக்கிரகம் 27 விரலளவு கொண்டது அந்தணர்க்காகும்;*

என்று கூறும் பாடல்களும் உள்ளன.

### நான்கு வருணத்தாருக்கும் முழக்கோல் செய்ய மரங்கள்

அக்காலத்தில் மனைகள் கட்டும் பொழுது ஒவ்வொரு வருணத்தாரும் ஒவ்வொரு வகையான மரத்தைப் பயன்படுத்தி முழக்கோல்களைச் செய்யவேண்டும். மூங்கிலால் செய்த முழக்கோல்களை அந்தணர்கள் வீடுகள் கட்டும்பொழுது அளக்கப் பயன்படுத்த வேண்டும்; ஆச்சா மரத்தால் செய்த முழக்கோல்களை அரசர்கள் வீடுகள் கட்டும்பொழுது அளக்கப் பயன்படுத்த வேண்டும்; தேக்கு மரத்தால் செய்த முழக்கோல்களை வைசியர்கள் வீடுகள் கட்டும்பொழுது அளக்கப் பயன்படுத்த வேண்டும்; வேங்கை மரத்தால் செய்த முழக்கோல்களை வேளாளர்கள் வீடுகள் கட்டும் பொழுது அளக்கப் பயன்படுத்த வேண்டும் என்று கருதினர். மேலும் முழக்கோல் செய்வதற்கு யானையின் தந்தம், கருங்காலி, சந்தனமரம், பனைமரம், தாமரை முதலானவற்றையும் பயன்படுத்தலாம் என்ற குறிப்பொன்றும் காணப்படுகிறது.

### மட்டக்கோல் செய்ய மரங்கள்

அக்காலத்தில் மட்டக்கோல் செய்வதற்குப் புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா ஆகிய நான்கு மரங்களைப்

பயன்படுத்தியுள்ளனர். மனைகள் கட்டும்பொழுது ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு வகையான மரத்தைப் பயன்படுத்தி மட்டக்கோல் செய்ய வேண்டும். புளிய மரத்தினால் செய்யப்பட்ட மட்டகோலை அந்தணர்கள் வீடு கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும். ஆச்சா மரத்தினால் செய்யப்பட்ட மட்டக்கோலை அரசர்கள் தங்கள் அரண்மனையைக் கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும்; தேக்கு மரத்தினால் செய்யப்பட்ட மட்டக்கோலை வணிகர்கள் வீடு கட்டும்பொழுது பயன் படுத்தவேண்டும். வேங்கை மரத்தினால் செய்யப்பட்ட மட்டகோலை வேளாளர்கள் வீடு கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும். கோயில்கள் கட்டும்பொழுது இரும்பினால் செய்யப்பட்ட மட்டகோலைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து விளங்கியுள்ளது. இவையன்றி கருங்காலியும் மட்டக்கோல் செய்ய ஏற்ற மரமாகும்.

### மூலை மட்டக்கோல்

மூலைமட்டக்கோல் செய்யும்பொழுது, ஒரு தலை பத்துவிரல் நீளம் ஒரு தலை எட்டு விரல் நீளம், நடுமூலை வளைசதுரம் ஒரு விரலளவு இருக்க வேண்டும்.

### அளவு நூல் கயிறு

அளவு நூல் கயிறு, பனை, தாழை, மருள், ஆல், ஆத்தி, இலதை இவைகளின் நாரினோடு பருத்தி நூல் கட்டி விரல் நுனி அளவாகக் கயிற்றை முறுக்கிக் கொள்ள வேண்டும்.

பட்டுநூல், தருப்பை, ஆலம் விழுது, பனையின்நார் பருத்தி நூல் இவை தேவர், மறையோர்க்ஷத்திரியர், வைசிரியர், சூத்திரர் ஆகியோருக்கு உரியனவாகும். இவர்களுள்ளும் தேவர்களுக்குப்பட்டுநூலால் முப்புரிக் கயிறு செய்ய வேண்டும். அந்தணர்களுக்குத் தருப்பையினால் முப்புரிக்கயிறு செய்யவேண்டும்; அரசருக்கு ஆலம் விழுதால் முப்புரிக்கயிறு செய்ய வேண்டும்; வைசியருக்குப் பருத்தி

நூலால் இருபுரிகளையுடைய கயிறு செய்ய வேண்டும்; சூத்திரர்களுக்குப் பனைநாரினால் இருபுரிகளையுடைய கயிறாகும் என அக்காலத்தில் வரையறை செய்யப்பட்டிருந்தது.

அந்தணர்கள் தருப்பை நூலால் முப்புரிக் கயிறு செய்ய வேண்டும். அரசர்கள் கதம்பை நூலால் இருபுரிகளையுடைய கயிறு செய்ய வேண்டும். வணிகர்கள் பனைநாரினால் இருபுரிகளையுடைய சூத்திரர்கள் ஆத்திநார் கொண்டு இருபுரிகளையுடைய கயிறு செய்ய வேண்டும் என்ற கருத்தும் அக்காலத்தில் நிலவியது என்பதை இந்நூலின் வழி அறியலாம்.

**முளை கடாவும் அளவு**

முளைக்கு நீளம் பதினொரு விரல் தொடங்கி ஒரு விரல் அதிகமாகி இருபத்து நான்கு விரல் அளவு கொள்ளவேண் டும் முளையை நடும்பொழுது வாஸ்துவின் வயிற்றுப்பகுதியில் தோண்டி தென்மூலையில் கடாவித் தென்கீழ், வடகீழ், வடமேல் மூலைகளில் கடாவி விடவேண்டும். மாறுபட்ட கருத்துக்களைக் கூறும் பாடல்களும் உள்ளன.

**முளையடிக்கும் முறை**

முளையை இடது கையில் வாங்கி, இறைவனைத் துதித்து, முளையில் எட்டு அடிகள் அடித்து நூலைப் பூட்டி மஞ்சள் பூசி, முளையைக் கடாவ வேண்டும்.

**முளையடிக்கும் போது பலன்கள்**

முளையை எட்டு அடிகள் அடிக்கும்பொழுது முளையில் உச்சி அலறினால் அந்த வீடு பாழாகும்; அடித்த அடியால் முளையின் தலை பிளந்து போனால் நோய் உண்டாகும்; முளை தெறித்துப்போனால் அந்த வீட்டிற்குரியவன் மரணமடைவான்; முளையின் பகுதி தூள்தூளாகச் சிதறினால், வீட்டிற்குரியவனுடைய செல்வங்கள் சிதறிப் போகும்.

### மனைகோலுதலும் வாசல் விடுதலும்

மனைகோலும் பொழுது மயன் என்ற தேவ சிற்பாச்சாரியர் கூறியுள்ளபடி அளவெடுத்து, வாசல் முதலியன அளவோடு விட்டுப் பரப்புப் பரப்பி குடிபுகுந்தால், அந்த வீட்டில் செல்வம் மிகும். அவ்வாறு வாசல் அமைக்கும்பொழுது பத்திகள் சேர்ந்தால் இனிதாக வாழ்வார். பத்திகள் கலையுமாகில் பதி குலைந்து போகும்.

### தலைவாசல் படியின் அளவு

வீட்டின் தலைவாசல் படிக்கு முப்பது அங்குலம் உயரம் வைத்துக் கட்ட வேண்டும். வீதி தலைவாசல் படிக்கு இருபத்து நான்கு அங்குலம் உயரம் வைத்துக் கட்ட வேண்டும்.

### வாசல் வைக்கும் நாள்

வாசல் வைக்கும்பொழுது, அதற்குரிய நாட்களைத் தேர்ந்தெடுத்து வாசல் அமைக்க வேண்டும். வாரத்தில் திங்கட்கிழமையிலும் வாசல் வைக்க, பொருள் சேரும்; தானியம் பெருகும்; செல்வம் சேரும்; அனைத்திலும் இலாபம் கிட்டும் மனைக்குரியவனுக்குச் சிறப்பான வாழ்க்கை அமையும்.

### மனைக்கு வாசல் அமைத்தல்

மனையினுடைய அகலம் அல்லது நீளத்தைச் சாதியடி அல்லது தச்சு முழம் இவற்றில் ஒன்றால் அளந்துகொண்டு, மொத்தம் இத்தனையடி என்று தெரிந்து, அதை ஒன்பது கூறு செய்து, வந்த ஈவைக் கணக்கிட்டு பங்கு ஒன்று இத்தனை சாதியடி என்றும். அதில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது எனப் பாகம் செய்து சந்திரன் புதன் பாகத்தில் வாசல் வைக்க உத்தமம். அதிலும் அம்மனைக்கு இடதுபுறம் மூன்று பாகமும் வலது புறம் ஐந்து பாகமும் நீக்கி நின்ற பாகத்தில் வாசல்விட மகா உத்தமம். தேவாலயங்களுக்கு மையத்தில் வாசல்விட உத்தமம்.

**வாசலுக்கு நவக்கிரகப் பலன்**

மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி,

1. சூரியன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குத் துன்பம் உண்டாகும்; பொருள் கையை விட்டுப் போகும்; புத்திரர்கள் குறைவாகும்; மனைவியும் பிரிந்து செல்வாள்; மனையும் தீயினால் அழிந்து பாழாகும்.

2. சந்திரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குச் செல்வமும் பொருளும் வந்து சேரும்; திருமகள் அவனுடைய வீட்டில் குடியிருப்பாள்; பூமி இலாபம், புத்திர இலாபம் உண்டாகும்.

3. செவ்வாய் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்கு வறுமையும் கவலையும் மிகுதியாக வந்து சேரும்; அம்மனையில் காட்டேரி, வீரன், கறுப்பன் முதலானவர்கள் குடியிருப்பர்.

4. புதன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவன் அனைத்து விதமான பாக்கியங்களையும் பெறுவான்; பால்பெருகும்; கால்நடைகள் மிகுதியாகும்; புத்திரர்கள் தோன்றுவார்கள்; பொருள்களும் தானியங்களும் வந்துசேரும். திருமகள் எந்நாளும் அந்த மனையில் தங்குவாள்.

5. குரு அமைந்துள்ள கூறில் வாசலிடுதல் ஆலயங் களுக்கு ஏற்றதாகும். வீடுகளுக்கு ஆகாது. அவ்வாறு வாசலிட, மனைக்குரியவனுக்கு நோய் மிகுதியாகும்; பொருள் கையைவிட்டுப் போகும்; மனையாள் மரணமடைவாள்; மிகுந்த துயரங்கள் உண்டாகும்.

6. சுக்கிரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குத் திருடரால் பயமுண்டாகும்; வறுமை மிகும்; இவனுடைய மனைவி பொய் கூறுவபவளாகவும் திருடுபவளாகவும் இருப்பாள்; மனைவியால் சுகம் கிடைக்காது; மனைக்குரியவன் விரைவில் மரணமடைவான்.

7. சனி அமைந்துள்ள கூறில் வாசலிட மனைக்கு உரியவனுக்கு வீணான சண்டைகள் வந்துசேர்ந்து துன்பம் விளையும்; அலைச்சல் மிகுதியாகும்; புத்திரப்பேறு கிட்டாது; அம்மனையில் மனைவி முதலாக பலரும் மரணம் அடைவர்; செல்வம் அம்மனையைய விட்டு நீங்கும்; ஊராரின் பகைக்கு ஆளாக நேரிடும்.

8. இராகு அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்கு உரியவனைப் பாம்பு முதலான நச்சு உயிர்கள் தீண்டி துயரம் செய்யும்; அம்மனை பாழாகும்.

9. கேது அமைந்துள்ள கூறில் வாசலிட, அம்மனைக்கு உரியவனைப் பாம்பு முதலான நச்சு உயிர்கள் தீண்டி துயரம் செய்யும்; அம்மனைக்கு உரியவனுக்கு மனதில் தீய சிந்தனைகள் தோன்றும்.

**வாசலும் இராசிகளும்**

மனைக்குரியவனின் இராசிக்கு வலது பக்கத்தில் அல்லது முன்னால் வாசல் வைக்க, நன்மையாகும். அவனுடைய இராசிக்கு இடது பக்கத்தில் அல்லது பின்னால் வாசல் வைக்க, அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் அழிவு நேரிடும்.

இடபம், மிதுனம், கடகம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, வடக்குத் திசைகளில் வாசல்விட வேண்டும்; சிம்மம், கன்னி, துலாம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, தெற்குத் திசைகளில் வாசல்விட வேண்டும்; விருச்சிகம், தனுசு, மகரம் இந்த மூன்று இராசிகளுக்கும் மேற்கு, தெற்குத் திசைகளில் வாசல்விட வேண்டும். கும்பம், மீனம், மேடம் இந்த மூன்று இராசிகளுக்கும் வடக்கு, மேற்குத் திசைகளில் வாசல்விடவேண்டும்.

**மாதங்களும் வாசல் அமைய வேண்டிய திசைகளும்**

வீடுகட்டும் மாதங்களின் அடிப்படையில் வாசல் வைக்க வேண்டும். தை, ஆவணி, ஆடி மாதங்களில் வீடு கட்டும்பொழுது, மேற்குச் சார்பும் கிழக்குத் திசையில் வாசலும் அமைக்க வேண்டும். சித்திரை, வைகாசி, ஐப்பசி மாதங்களில் வீடு கட்டும்பொழுது வடக்குச் சார்பும் தெற்குத் திசையில் வாசலும் அமைக்க வேண்டும். மற்றொரு பாடலில்,

1. சித்திரை, வைகாசி மாதங்களில் தென்சார் மனையில் வடக்கில் வாசலிட வேண்டும்.

2. ஆடி, ஆவணி மாதங்களில் மேல்சார் மனையில் கிழக்கில் வாசல் அமைக்க வேண்டும்.

3. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தென்சார் மனையில் வடக்கில் வாசல் அமைக்க வேண்டும்.

4. தை, மாசி மாதங்களில் கீழ்ச்சார் மனையில் மேற்கே வாசல் அமைக்க வேண்டும்.

என்று கூறப்பட்டுள்ளது.

**வாசல் உதயம்**

சிங்கம் ஜனிக்கில், தென்வாசல்; ரிஷபம் ஜனிக்கில், மேற்கு வாசல்; யானை ஜெனிக்கில், வடக்கு வாசல்; கொடி ஜனிக்கில், கிழக்கு முதல் நான்கு திசைக்குமாகும். அவற்றுள் சிங்கம் ஜனிக்கில் பெருமாள் கோயிலுக்காகும்; ரிஷபம் ஜனிக்கில் மகாதேவருக்காகும்; யானை ஜனிக்கில் விநாயகருக்காகும்; கொடி ஜனிக்கில் எல்லோருக்குமாகும்.

**தலைவாசல் அமைத்தல்**

தெற்கு வடக்கான மனையில் தலைவாசல் வடக்கிலிட வேண்டும். கிழக்கு மேற்கான மனையில் தலைவாசல் மேற்கிலிட வேண்டும். வாஸ்து புருஷன் கிடக்கையில் தலை, மார்பு, முதுகு முதலான இடங்களில் வாசலிட நாசம் விளையும்.

**சார்பும் வாசலும்**

நான்கு வருணத்தாருக்கும் சார்பும் வாசலும் இவை இவையென அக்காலத்தில் வரையறுக்கப்பட்டது. அதன்படி, தென்சார் மனையும் வடக்கு வாசலும் அந்தணர்களுக்காகும்; மேல்சார் மனையும் கிழக்கு வாசலும் மன்னர்க்கு உரியதாகும்; வடசார் மனையும் தெற்கு வாசலும் வணிகர்களுக்காகும்; கீழ்ச்சார் மனையும் மேற்கு வாசலும் சூத்திரர்க்காகும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**கதவு அமைத்தல்**

சிறப்புடைய தேவர்களுக்கு இரண்டு கதவுகளை அமைத்தல் வேண்டும். ஒன்று அடைப்பதற்காகும். ஒன்று திறப்பதற்காகும். அகன்ற கதவு தேவர்களுக்கு மட்டுமே ஏற்புடையது. வீடுகளில் அகன்ற கதவாக அமைப்பின், மனைக்குரியவனுக்கு நோயைச் செய்யும். இரு கதவுகள் தேவர்கள், மறையவர்கள் மற்றும் பொது இடங்களுக்கு ஏற்புடையது.

தேவர்களுக்கு நாவல் மரத்தால் கதவுகள் செய்ய வேண்டும். அரசர்களுக்குத் தேக்கு மரத்தால் கதவுகள் செய்ய வேண்டும்; வைசியர்களுக்கு இலுப்பை மரத்தால் கதவுகள் செய்ய வேண்டும்; வேளாளர்களுக்குத் தென்னை மரத்தால் கதவுகள் செய்ய வேண்டும். எட்டி மரத்தைக் கொண்டு எவருக்கும் கதவுகள் செய்யக்கூடாது.

**கதவு அளவு**

நடு நீளம் நாலு பங்கு. கடை இரண்டு பங்கு. கடை இரண்டு பங்கு. மூன்று பங்கு தள்ளி நின்ற நடுவிலே கதவுக்குக் கம்பைப் பதிப்பது. நெம்புத் துளையும் அந்தப்படி துளை போட்டு நெம்பி இறுக்கவும், நடு மூன்று நீளம், கடை நான்கு நீளம் சேர்ப்பது.

**கதவின் ஓசை**

கதவைச் சாத்தும் பொழுது சங்கின் முழக்கத்தைப் போன்று ஒலி எழும்பினாலும் தாள ஓசையைப் போன்று ஒலி

எழுவம்பினாலும் மனைக்கு உரியவனுக்கு மிகுதியாகப் புத்திரர்கள் பிறப்பார்கள். அந்த வீட்டில் செல்வம் மிகுதியாக வந்து சேரும். சுகம் உண்டாகும். பொன் அதிகமாகக் கிடைக்கும்.

கதவைச் சாத்தும் பொழுது, ஆண் குரலும் செக்கின் ஓசையும் கூடியது போன்று ஓசை உண்டாக்குமாகில், அம்மனையில் வாழ்பவர்கள் மிகுந்த செல்வத்தைப் பெற்று வாழ்வார். புத்திரர்கள், மனையாள் போன்றோர், நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவர். ஆனால் நோய் வந்து நலிவடையச் செய்யும்.

கதவைச் சாத்தும்பொழுது, பெண்குரலைப் போன்றும் செக்கின் ஓசையைப் போன்றும் சத்தம் எழுமானால், அந்த மனையில் செல்வம் உண்டாகும். கரும்பாலையைப் போன்று மிகுந்த ஓசை எழுமாகில் அந்த மனையில் வாழலாகாது. மேலும், தாளம் போன்றும் யானை பிளிறுவது போன்றும் சங்கின் முழக்கம் போன்றும் ஓசை எழும்ப நன்றாகும்.

ஒன்று, மூன்று, ஐந்து தாள்கள் உள்ள கதவைச் சாத்தும்பொழுது, கழுதை குரல்போலும் இருந்தால் தீராத கவலையைத் தரும். மேலும், கரும்பாலையைப் போன்று ஓசை எழும்புமாகில் புத்திரர்க்கு அழிவுண்டாகும். பெண்களால் பழியும் மிகுந்த துன்பங்களும் உண்டாகும். மனைக்கு உரியவன் மிகுந்த துயரங்களுக்கு ஆளாவான். செக்கின் ஓசையைப் போன்று மிகுந்த ஓசையை எழுப்பினால் மனைக்குரியவனுக்கு புத்திர பாக்கியம் இருக்காது. மனையாள் மரணமடைவாள். மிகுந்த கவலையை உண்டாக்கும்.

கதவானது மந்தங்கொண்டு வாதம், பித்தம் ஆகிய இரண்டு நாடிகளைப் போல மாறுபட்ட ஓசையை எழுப்புமாகில், நடுகட்டத்தில் ஆணி ஒன்று

குறைபாடுடையதாக இருக்கின்றது என்பதை அறிய வேண்டும். இத்தகைய ஓசை கேட்டால், மனைக்கு உரியவனுக்கு நோயானது தீராமல் எந்நேரமும் வருத்திக்கொண்டே இருக்கும்.

கதவானது வடகீழ் மூலையில் நின்றாடிடில் இராசாக்களால் கேடு வரும்; தெற்கே நின்றாடிடில் மனைக்கு உரியவனின் உயிருக்குக் கேடு உண்டாகும்; தென்மேற்கு மூலையில் நின்றாடிடில் பொருள் சேதம் உண்டாகும்; மேற்கே நின்றாடிடில் மனைக்கு உரியவனின் உயிருக்கு அழிவு நேரிடும்.

மூடிய கதவைத் திறந்த நிலையில் வைக்க, தானே சாத்திக் கொண்டால், மனையில் வாழ்பவர்களின் உயிருக்குச் சேதம் உண்டாகும். தானே மூடிக்கொள்ளாமல் பிறர் மூடும்பொழுது கிளியைப் போன்று கீச்சென்று ஒலியெழுப்ப, அந்த மனையானது பாழாகும். நின்ற நிலையில் நிற்குமாகில் நிறைந்த செல்வம் வந்து சேரும். கதவு தானே பின்புறம் திறக்கில், அம்மனையில் வாழ்பவர்களுக்கு நோயுண்டாகும்.

**வாஸ்து புருஷன்**

வாஸ்து புருஷன் என்பவன் விழித்திருக்கும் நேரங்கள் மனைகோல ஏற்றவை என்ற கருத்து நிலவுகிறது. வாஸ்து;வின் தோற்றம் அவன் விழித்திருக்கும் காலம். அவன் படுத்திருக்கும் முறை, வாஸ்துவுக்கும் வாசலுக்கும் உள்ள தொடர்பு, அவன் நித்திரை கொள்ளும் நேரம் முதலாகப் பல செய்திகள் மனையடி சாத்திர நூல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

**வாஸ்து புருஷன் தோற்றம்**

வாஸ்து புருஷனின் முகம் கோபத்தால் சிவந்திருக்கும்; ஒரு கை சேவலையும் மற்றொரு கை மரத்தையும்

பிடித்துக்கொண்டு இருக்கும்; கால்கள் தேவர்களை எட்டி உதைத்தபடி இருக்கும்; முதுகு கூன் உடையதாக இருக்கும்; சடாமுடி நீண்டு கிடக்கும். பற்களும் வாயும் கொடுமை யானவையாகப் பயங்கரமாகக் காட்சியளிக்கும். இவ்வாறாகக் காட்சியளிக்கும். வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்தில் சூரியன் நின்ற இராசியில் காலை நீட்டி, அந்த இராசிக்கு எதிராக அதன் ஏழாம் இராசியில் தலையை வைத்துப் படுத்திருப்பான். அவ்வாறு படுக்கும்பொழுது இடக்கை கீழும் வலக்கை மேலுமாக இருக்குமாறு எப்பொழுதும் படுத்திருப்பான்.

**வாஸ்து புருஷன் விழித்திருக்கும் மாதங்கள்**

வாஸ்து புருஷன் பன்னிரண்டு மாதங்களில் எட்டு மாதங்களில் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நாழிகைகளில் விழித்திருப்பான் (சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி ஆகியவை வாஸ்து புருஷன் விழித்திருக்கும் மாதங்களாகும்).

சித்திரை மாதம் பத்தாம் தேதி ஐந்து நாழிகைக்கு மேலும், வைகாசி மாதம் இருபத்தோராம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், ஆடி மாதம் பதினோராம் தேதி இரண்டு நாழிகைக்கு மேலும், ஆவணி மாதம் ஆறாம் தேதி இருபத்தொரு நாழிகைக்கு மேலும், ஐப்பசி மாதம் பதினோராம் தேதி இரண்டு நாழிகைக்கு மேலும், கார்த்திகை மாதம் எட்டாம் தேதி பத்து நாழிகைக்கு மேலும், தை மாதம் பன்னிரண்டாம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், மாசி மாதம் இருபதாம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், மூன்றே முக்கால் நாழிகை வரை வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நேரங்களாகும்.

ஆனி மாதம், புரட்டாசி மாதம், மார்கழி மாதம், பங்குனி மாதம் ஆகிய நான்கு மாதங்களில் மனைகோலினாலும் குடிபுகுந்தாலும் நாசம் உண்டாகும்.

**வாஸ்துவின் சமயம்**

வாஸ்து புருஷன் விழித்திருப்பது மூன்றே முக்கால் நாழிகையாகும். இதற்குச் சமயங்கள் என்று சொல்லப் படுபவை ஐந்து. சமயம் ஒன்றுக்கு முக்கால் நாழிகையாகும். முதல் சமயம் வரும் முக்கால் நாழிகையில் வாஸ்து புருஷன் பல் துலக்குவான். இந்த வேளையில் முகூர்த்தம் செய்தால், அரசரால் பயமுண்டாகும். இரண்டாம் சமயம் வரும் முக்கால் நாழிகையில் வாஸ்து புருஷன் நீராடுவான். அந்த நேரத்தில் மனை முகூர்த்தம் செய்தால் பீடை உண்டாகும். மூன்றாம் சமயம் வரும் முக்கால் நாழிகையில் வாஸ்து புருஷன் பூசை செய்வான். அந்த நேரத்தில் மனை முகூர்த்தம் செய்தால் வறுமையில் வாடுவார்கள். நான்காம் சமயம் வரும் முக்கால் நாழிகையில் வாஸ்து புருஷன் உணவு கொள்வான். அந்த நேரத்தில் மனை முகூர்த்தம் செய்தால் புத்திரர்கள் பிறப்பார்கள். ஐந்தாம் சமயம் வரும் முக்கால் நாழிகையில் வாஸ்துருஷன் தாம்பூலம் கொள்வான். அந்த நேரத்தில் மனை முகூர்த்தம் செய்தால் மகா உத்தமம் என்பர்.

**நிலை நீளம் கணக்கிடுதல்**

1. நிலை நீளத்தை அளந்து கணக்கிட வேண்டும். வளையின் கீழ் மன்னர்களுக்காகும். எட்டுப் பாகங்களாகச் செய்து ஆறரை மிச்சம் கொள்வது. அதனை எட்டுப் பாகங்களாகச் செய்து நடு ஆறு ஒன்று கூட்டி, இரண்டு துளை கொள்வது. முன் சொன்ன பாகங்கள் ஆறையும் ஐந்து பாகங்களாகச் செய்து துளையில் கடாவி நீக்கி, நின்ற மூன்று கூறும் படியாக வைப்பது நன்மையாகும்.

2. நிலை நீளத்தில் ஒன்றரை பாகங்களையும் ஐந்து பாகங்களாகச் செய்து கொண்டு, ஒன்பது பாகங்களாகப் பகுக்கப்பட்ட நிலை அகலத்தில் இரு பாகங்களில் இரு துளைகளை ஏற்படுத்த வேண்டும்.

3. சுவர் கனத்தை ஆறு பாகங்களாகச் செய்துகொண்டு மையத்தில் இல்லாமல், நான்கு பாகங்களில் நிலையைப்

பொருத்த வேண்டும். ஒரு பாகம் விட்டு உள்ளாக நிலையை வைக்க வேண்டும் என்று இந்நூலின் ஒரு பாடல் கூறுகின்றது.

4. நிலை நீளத்தை ஒன்பது பாகங்களாகச் செய்து 2-5 இதில் விரல் முறியாமல் பாதி விரல் ஒற்றிக் கொள்வது. 2-9 பாகங்களாகச் செய்து மேல் ஐந்து கீழ்நான்கு என அமைத்தல் வேண்டும்.

5. நிலை நீளத்தை ஏழு பாகங்களாகச் செய்து 6-2 பாகங்களை நீக்கி, நின்றதை ஒன்பது பாகங்களாகச் செய்து மேல் ஐந்து கீழ் நான்கு இரண்டு கூட்டில் பாதி போகும். விரலொற்றிக் கொள்ளவேண்டும்.

6. நிலையின் அகலத்தைக் கணக்கிடும் போது, நிலையின் அகலத்தைக் கொண்டு கனம் கொள்ள வேண்டும். நிலையின் அகலத்தில் முக்கால், அரை, கால் இவையொன்று நிலையகலத்தால் வந்த நிலத்தளவு ஒத்ததாக இருக்கும்.

## நிலைக்கு பயன்படும் மரங்களும் பிறவும்

நிலை அமைக்க வேம்பு, ஆச்சா, இலுப்பை, தென்னை, உசிலை முதலான மரங்களும் கல்லும் பயன்படும். தேவர்களுக்குக் கல்லால் நிலை செய் வேண்டும். அந்தணர்களுக்கு வேம்பின் மரத்தால் நிலை செய்ய வேண்டும். அரசர்களுக்கு ஆச்சா மரத்தால் நிலை செய்ய வேண்டும். வைசியர்களுக்கு இலுப்பை மரத்தால் நிலை செய்ய வேண்டும். வேளாளர்களுக்குத் தென்னை மரம், உசிலை மரம் ஆகியவற்றைக் கொண்டு நிலை செய்ய வேண்டும்.

## வாஸ்து படுத்துக் காலை நீட்டும் இராசிகளும் மாதங்களும்

மிதுனம், கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சூரியன் நிற்கும் ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மூன்று மாதங்களில் வாஸ்து புருஷன் வடக்கே தலையை வைத்துந் தெற்குத்

திசையில் காலை நீட்டிக் கொண்டு, கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டு ஒரு கையில் சூலத்தை ஏந்தியவனாக, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வைத்துக்கொண்டு வாஸ்து புருஷன் கிடப்பான்.

கன்னி, துலாம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் சூரியன் நிற்கும் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களில் வாஸ்து புருஷன் கிழக்குத் திசையில் தலையை வைத்து, மேற்குத் திசையில் கால்களை நீட்டிக்கொண்டு, தெற்குத் திசையை நோக்கிக் கொண்டு, ஒரு கையில் சூலத்தை ஏந்தியவனாக, இடக்கை கீழும், வலக்கை மேலுமாக வைத்துக் கொண்டு வாஸ்து புருஷன் கிடப்பான்.

தனுசு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் சூரியன் நிற்கும் மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் வாஸ்து புருஷன் தெற்குத் திசையில் தலையை வைத்து, வடக்குத் திசையில் கால்களை நீட்டிக்கொண்டு, மேற்குத் திசையை நோக்கிக் கொண்டு, கையில் சூலத்தை ஏந்தியவனாக, இடக்கை கீழும், வலக்கை மேலும் இருக்குமாறு வாஸ்து புருஷன் கிடப்பான்.

மீனம், மேடம், இடபம் இந்த மூன்று இராசிகளில் சூரியன் நிற்கும் பங்குனி, சித்திரை, வைகாசி ஆகிய மூன்று மாதங்களில் வாஸ்து புருஷன் மேற்கே தலையை வைத்துக் கிழக்கே காலை நீட்டிக் கொண்டு, வடக்குத் திசையை நோக்கித் துயிலும்பொழுது கையில் சூலத்தை ஏந்தியவனாக இடக்கை கீழாகவும் வலக்கை மேலாகவும் இருக்குமாறு வாஸ்து புருஷன் கிடப்பான்.

**ஒரு நாளில் வாஸ்து புருஷனின் கிடக்கை**

வாஸ்து புருஷன் காலையில் வடக்கே தலையை வைத்துத் தெற்கே காலை நீட்டிக் கிடப்பான்; நண்பகலில் கிழக்கே தலையை வைத்து மேற்கே காலை நீட்டிக் கிடப்பான்; சாயங்காலம் தெற்கே தலையை வைத்து, வடக்கே காலை நீட்டிக் கிடப்பான்; மாலையில் மேற்கே தலையை வைத்துக் கிழக்கே காலை நீட்டி இருப்பான்.

### வாஸ்துவும் வாசலும்

இடக்கை கீழும் வலக்கை மேலுமாகக் கிடந்தவன் எழுந்திருந்து வலமாக வரும்பொழுது வயிறு இருக்கும் இடம் பார்த்து வாசல்தனை அமைக்க வேண்டும். வயிற்றில் வாசல் வைத்தால், சுகங்களும் செல்வமும், வந்து சேரும் கைப்பகுதியில் வாசல் வைத்தால், புத்திரர்களுக்கு அழிவு நேரிடும். மார்புப் பகுதியில் வாசல் வைத்தால், வீடு எரிந்து போகும். தலைப் பகுதியில் வாசல் வைத்தால், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும். காலில் வாசல் விட்டால் மனைவிக்கு மரணம் உண்டாகும்; தலையில் வாசல் விட்டால், தலைவனுக்கு ஆகாது; முதுகில் வாசல் விட்டால், அரசனால் அச்சம் உண்டாகும்.

வாஸ்து புருஷன் கிடக்கையில் மனைகோலுவதற்காகக் காலில் குழி தோண்ட மனையாளுக்கு மரணம் நேரிடும்; முதுகுப் பகுதியில் குழி தோண்ட பொருள் கைவிட்டுப் போகும்; தலைப் பகுதியில் குழிதோண்ட பெற்றோருக்கு மரணம்நேரிடும். வயிற்றுப் பகுதியில் குழி தோண்ட நல்வாழ்வு வந்து சேரும்.

### வாஸ்து பாராமல் மனைகோலும் பலன்

வாஸ்து புருஷனின் கிடக்கையை அறிந்து, மனைக்கு உரியவன் மனையைக் கோலாவிடில், அவன் கட்டிய வீடு பாழாகும்; ஊர் பாழாகும்; சேர்த்து வைத்த செல்வங்கள் அழிந்து போகும்; மனைகோலிய சிற்பனுக்கும் துன்பங்கள் வந்து சேரும்; மனைக்குரியவனின் மனைவிக்கும் சிற்பனுக்கும் மரணம் நேரிடும்; பகைவரால் துன்பமும், உடலில் நோய்களும் வந்து சேரும்.

### வாஸ்து செய்யும் இடம்

வாஸ்து புருஷனின் விழிநோக்கு அறிந்து முகூர்த்தம் செய்யும் பொழுது, அந்த மனையை இருபத்தெட்டு பாகம்

செய்து காலில் பதினேழு பாகமும் தலையில் பத்து பாகமும் தள்ளி நடுவில் ஒரு பாகத்தில் முகூர்த்தம் செய்தால், இராஜ சம்பத்து உண்டாகும்.

## வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் மாதங்களும் பலன்களும்

பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த நான்கு மாதங்களுக்கும் மூலை மாதங்கள் என்று பெயர். இந்த நான்கு மாதங்களும் வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் காலமாதலால், இம்மாதங்களில் வீடு குடி போனால் பொருள் அழியும்; துன்பங்கள் வரும்; நோய்கள் வரும்; உயிர்ச்சேதம் உண்டாகும்; அம்மனையில் மூதேவி வாசமும் எஜமான் பெண்டு பிள்ளைகளோடு வியாதியால் மெலிவர்; அம்மனைகோலிய சிற்பனும் நோயால் வருந்துவான்.

மார்கழி மாதத்தில் பாரதப்போர் முதலான வீணான பொல்லாங்குகள் விளைந்தன. புரட்டாசியில் இரணியன் மாண்டான். பங்குனி மாதத்தில் சிவன் ஆலகால விஷத்தை அமுதாகக் கொண்டார். மன்மதனும் அப்பங்குனி மாதத்தில் எரிந்தான். மாபலி சக்ரவர்த்தி ஆனி மாதத்தில் ஊரைவிட்டு ஓடினார். ஆகையால் ஆனி மாதம் முதலாகிய மேற்கூறிய மாதங்களில் மனைகோல, குடிபுக முயற்சி செய்தால், அந்த இடத்தைவிட்டு நீங்குவதும் அல்லாமல் பிச்சை யெடுக்கும் நிலை ஏற்படும். தேவர்களாலும் இதைத் தடுக்க இயலாது என்று ஒரு பாடல் எடுத்துரைக்கிறது.

## ஊரில் வீடு அமையுமிடம்

மனைநூல்களில், இந்தந்த வருணத்தவர் இந்தந்த திசைகளில் வீடுகட்டி வாழ வேண்டும் என்று கூறியுள்ளன. அதன்படி, அந்தணர்கள் தெற்குத் திசையிலும், வேளாளர்கள் கிழக்குத் திசையிலும், வணிகர்கள் வடக்குத் திசையிலும் வேளாளர்கள் கிழக்குத் திசையிலும் குடியிருக்க வேண்டும்.

அவ்வாறு குடியிருந்தால், செல்வம் பொருந்தி வாழ்வார்கள். ஊரின் நடுவாகிய பிரமஸ்தானத்தைக் கோவிலுக்கும் அம்பலத்திற்கும் இடமாகவிட சிறப்பாக இருக்கும்.

## மனையில் தேவதைகள் இருப்பிடம்

வீட்டு மனையை நான்கு பக்கமும் அளந்துகொண்டு, நீள அகலங்களை எட்டு, எட்டுப் பகுதிகளாகப் பிரிக்க அறுபத்து நான்கு பகுதிகளாகும். அவற்றுள், நடுவில் இருக்கக் கூடிய நான்கு பாகங்கள் **பிரமஸ்தானமாகும்**. அதனையடுத்து, நான்கு திசைகளிலும் உள்ள எட்டுப் பாகங்கள் **உருத்திர பாகங்களாகும்**. நான்கு மூலைகளிலும் உள்ள நான்கு மூலை பாகங்கள் **பேய்ப்பாகங்களாகும்**. மனையின் அறுபத்து நான்கு பாகங்களில் நான்கு திசைகளிலும் உள்ள எட்டெட்டுப் பாகங்களான முப்பத்து இரண்டு பாகங்கள் **விஷ்ணு பாகங்கள்** எனப்படுவதாகும். மற்றுள்ள பதினாறு பாகங்கள் **தேவர்களது பாகங்கள்** எனப்படுவதாகும்.

<table>
<tr><td>தேவர் பாகம்</td><td colspan="3">விஷ்ணு பாகம்</td><td>தேவர் பாகம்</td></tr>
<tr><td rowspan="3">விஷ்ணு பாகம்</td><td>பேய் பாகம்</td><td>உருத்திரர் பாகம்</td><td>பேய் பாகம்</td><td rowspan="3">விஷ்ணு பாகம்</td></tr>
<tr><td>உருத் திரர் பாகம்</td><td>பிரம ஸ்தானம்</td><td>உருத் திரர் பாகம்</td></tr>
<tr><td>பேய் பாகம்</td><td>உருத்திரர் பாகம்</td><td>பேய் பாகம்</td></tr>
<tr><td>தேவர் பாகம்</td><td colspan="3">விஷ்ணு பாகம்</td><td>தேவர் பாகம்</td></tr>
</table>

பிரம ஸ்தானத்தை அடுத்து நான்கு திசைகளில் உள்ள எட்டறைகள் தேவர்கள் காவலாக இருப்பர் என்றும், விஷ்ணு

பாகங்களைக் கூறாது, நாற்பத்து எட்டு அறைகள் குடிகளுக்காகும் என்று கூறும் பாடலும் இந்நூலில் காணப்படுகிறது.

**மனையும் உடலமைப்பும்**

அண்டத்திற்கு ஒத்தது நம் மனித உடலாகும். இந்த மனித உடலோடு ஒப்புமை உடையது வீடு. வீட்டிற்குக் கண், மூக்கு , கைகள், கால்கள், தலை, துவாரங்கள் போன்ற பகுதிகள் உள்ளன.

**பிரம ஸ்தானத்தில் வீடு கட்டப் பலன்**

பிரம ஸ்தானம் என்னும் தேவதை ஸ்தானத்தில் வீடு கட்ட, அவ்வீட்டில் வாழ்பவர்களுக்கு நோய்கள் வந்து சேரும்; பொருள் அழிவு உண்டாகும்; ஆடு மாடு முதலான கால்நடைகள் இறந்து போகும். அவ்வீட்டிலுள்ள பெண்கள் மரணமடைவர்; நிலம் கையை விட்டுப் போகும். தீத்தொழில் செய்ய நேரிடும்; செல்வம் அழியும். மன்னர்களால் துயரத்திற்கு ஆளாக வேண்டி வரும்; விலங்குகளை விரட்ட நேரிடும்.

**பேய்த்தானத்தில் வீடுகட்டப் பலன்**

பேய்த்தானம் எனப்படும் பேய்ப்பாகத்தில் வீடுகட்ட அவ்வீட்டில் பிறக்கும் குழந்தைகள் இறக்கும்; தாய் தந்தையர் இறப்பர்; ஆடு, மாடு முதலான கால்நடைகளுக்கு அழிவு நேரிடும்; வீட்டில் வாழும் மனைவிக்கு மரணம் உண்டாகும்; தீவினைகள் வந்து சேரும். வறுமை மிகுதியாகும். உடலில் பல்வேறு நோய்கள் வந்து சேரும். துன்பங்கள்அதிகரிக்கும்.

**மனையின் அமைப்பும் பயனும்**

மனையடி சாத்திர நூல்களில் கூறப்பட்டுள்ள முறையின்படி வீட்டினைக் கட்ட, அந்த வீடு சுமார் நூறு ஆண்டுகள் நிலைத்து நிற்கும்; கன்றுகாலிகள், கறவைப் பசுக்கள் போன்றவை பல்கிப் பெருகும்; செல்வம் மேன்மேலும் பெருகும்.

**வீட்டின் அறைகளைப் பயன்படுத்துதல்**

வீட்டில் உள்ள அறைகளில், எந்தெந்த திசைகளில் உள்ள அறைகளில் என்னென்ன செயல்களைச் செய்ய வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

1. இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் போகம் செய்ய வேண்டும்.

2. தென்கிழக்கு மூலையாகிய அக்கினித் திசையில் உணவை உண்ண வேண்டும்.

3. எமன் திசையாகிய தெற்குத் திசையில் ஆடைகளைக் கொண்டு வந்து வைக்க வேண்டும்.

4. நிருதி மூலையாகிய தென்மேற்குத் திசையில் தண்ணீரைக் கொண்டுவந்து வைக்கவேண்டும்.

5. வருண திசையாகிய மேற்குத் திசையில் பூசைகள் முதலானவற்றைச் செய்ய வேண்டும்.

6. வாயு மூலையாகிய வடமேற்கு மூலையில் தானியங்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

7. வடக்குத் திசையாகிய குபேரனுடைய திசையில் பணத்தைச் சேமித்து வைக்க வேண்டும்.

8. ஈசானிய மூலை எனப்படும் வடகிழக்கு மூலையில் பிள்ளைப்பேறு நடத்த வேண்டும்.

கிழக்கு

வடக்கு | தெற்கு

| | | |
|---|---|---|
| பிள்ளைப் பேறு அறை | போக அறை | உணவு உண்ணும் அறை |
| பணத்தைச் சேமிக்கும் அறை | | ஆடைகள் வைக்கும் அறை |
| தாணியங்கள் சேகரிக்கும் அறை | பூசைகள் செய்யும் அறை | தண்ணீர் வைக்கும் அறை |

மேற்கு

**உறவினர்கள் மனையில் தங்கும் இடங்கள்**

உறவினர்கள், வீட்டில் எவ்வெவ்விடங்களில் தங்க வைக்கப்பட வேண்டும் என்று மனையடி சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. தன் குலத்தில் பெரியவர்களுக்கும் குருக்களுக்கும் தாய் தந்தையர்க்கும் தன்னைக் காட்டிலும் மூத்தோர்க்கும் தெற்குத் திசையில் தங்குமிடத்தை அமைத்து, மனைக்குரியவன் மேற்குத் திசையில் இருக்க மிகவும் கெடுதியாகும். அவர்களைத் தெற்குத் திசையில் வைத்து, மனைக்கு உரியவன் வடக்குத் திசையில் இருக்க மிகுந்த சுகத்தைக் கொடுப்பதோடு, அவ்வீட்டில் எட்டு வகையான செல்வங்களும் வந்து சேரும். மேலும், அவர்களை மேற்குத் திசையில் இருக்க வைத்து மனைக்குரியவன் கிழக்குத் திசையில் இருக்க சுகங்கள் கிட்டும்.

**மனையில் புறப்பகுதிகளைப் பயன்படுத்துதல்**

மனையில் வீடு கட்டிய பகுதியைத் தவிர உள்ள புறப்பகுதிகளில் எங்கெங்கு எதனை அமைக்க வேண்டும். என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி,

1. வடகிழக்குத் திசையில் தண்ணீர்விட சால் வைக்க வேண்டும்.

2. கிழக்குத் திசையில் ஆட்டுத் தொழுவை அமைக்க வேண்டும்.

3. தென்கிழக்குத் திசையில் பசுத்தொழு வைக்கப்பட வேண்டும்.

4. தெற்கில் குப்பைகளைக் கொட்டுமிடம் அமைக்க வேண்டும்.

5. மேற்கு மூலையில் எருமைத் தொழுவம் அமைக்க வேண்டும்.

6. வடமேற்கு மூலையில் தானியக் களஞ்சியம் வைக்க வேண்டும்.

7. வடக்குத் திசையில் பசுவின் தொழுவத்தை அமைக்க வேண்டும்.

8. தென்மேற்குத் திசையில் வைக்கோல் போர் அமைக்க வேண்டும்.

கிழக்கு

வடக்கு

| | | |
|---|---|---|
| தண்ணீர் சால் | ஆட்டுத் தொழுவம் | சேமம் |
| பசுவின் தொழுவம் | வீடு | குப்பை |
| தாணிய களஞ்சியம் | எருமைத் தொழுவம் | வைக்கோல் போர் |

தெற்கு

மேற்கு

இவ்வாறு அமைக்க அம்மனைக்கு உரியவனுக்குத் துன்பம் நேராது. எந்நாளும் இன்பம் வந்து சேரும். தென்கிழக்குத் திசையிலும் பசுத்தொழு என்று கூறும் பாடல் ஒன்று இந்நூலில் காணப்படுகிறது.

**நீர்ப்போக்கு**

வீட்டிற்குள் தேங்கும் நீரை வெளியேற்ற நீர்ப்போக்கு அமைக்க வேண்டியது அவசியமாகும். முற்றத்து நீரை வெளியேற்ற கிழக்குத் திசையிலும், வடமேற்குத் திசையிலும், மேற்குத்திசையிலும் நீர்ப்போக்கு அமைக்க வேண்டும். மற்ற திசைகளில் நீர் வெளியேற வழி அமைக்கக் கூடாது. வடக்கு, கிழக்கு மேற்கு திசைகளில் நீரை வெளியேற்ற வேண்டும் என்று இந்நூலில் மற்றொரு பாடல் எடுத்தோதுகிறது.

**வீட்டின் உயர்வு தாழ்வு**

வீடு கட்டும்பொழுது, மனையின் கிழக்கு, தெற்குத் திசைகளைத் தாழ்த்தி, மேற்கு வடக்கு திசைகளை உயர்த்தி வீடு கட்ட வேண்டும். அவ்வாறு வீட்டைக் கட்ட, பெருஞ் செல்வம் சேரும்; கல்வி மேன்மேலும் பெருகும்; மனைவி மக்கள் சிறப்படைவர்; தானியம் முதலான எட்டு வகையான செல்வங்களும் கிடைக்கும்; பெரும்புகழ் உண்டாகும்; வாழ்க்கையில் உயர்வு கிட்டும்; சுகம் பெருகும்; தீர்க்காயுள் பெறுவர்.

**வீட்டின் அளவு - பலன்கள்**

வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் மனையில் முழுவதிலும் வீடு கட்டுவதில்லை. ஒரு குறிப்பிட்ட பகுதியை வீடு கட்டுவதற்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்டு வீட்டைக் கட்டுகின்றனர். கட்டப்போகும் வீட்டில் அறைகள், கூடம், தாழ்வாரம் வாசல் முதலானப் பகுதிகளை அமைக்கும் பொழுது, அந்த வீட்டிற்குரிய நீள அகலம்; அறை, கூடம் போன்ற பகுதிகளுக்கான நீள அகலம் எத்தனை அடிகளாக அமைத்தால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பன பல பாடல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஐந்தடிக்குள் எத்தனை அடியாக இருந்தாலும் கொட்டகை, நடைவழி முதலானவை அமைக்க நன்மையாகும்; கன்றுகாலிகள் பெருகும்; பால், பாக்கியங்கள் மிகுதியாகும்; தனம், தானியங்கள் பெருகும்; தீர்க்காயுள் உண்டாகும்.

ஆறடி அகல நீளம் இருந்தால், தானியம் பெருக்கம் உண்டாகும்; மனைவி மக்களுடன் சுகம் பெறுவர்; தனம் மிகுதியாக சேரும்; சகல பாக்கியங்களும் உண்டாகும்.

ஏழடி அகல நீளம் இருந்தால், நினைத்த காரியங்கள் அனைத்தும் தீங்காகும்; வறுமை ஏற்படும்; நோயும் மரணமும் உண்டாகும்; உறவினர் பகையாவார்.

எட்டடி அகல நீளம் இருந்தால், எண்ணிய செயல்கள் இனிதாக நிறைவேறும்; பகைவர் விலகி நிற்பர்; மிகுந்த பாக்கியங்கள் உண்டாகும்.

ஒன்பதடி அகல நீளமானால், ஐம்பது வயதில் மரணம் நேரிடும்; துன்பங்கள் மிகுதியாகத் தோன்றும். குடி நசிந்துப் போகும்; அனைவரும் சலிப்பாய்ப் பேசுவார்கள்.

பத்தடி அகல நீளமானால், கால்நடைச் செல்வங்கள் மிகுந்து வளமான வாழ்க்கை உண்டாகும்; விளைச்சல் மிகுதியாகும்.

பதினோரடி அகல நீளமானால், செல்வமும் ஆபரணங்களும் மிகுதியாகச் சேரும்; நல்ல உணவு கிட்டும்; பகைவர்கள் விலகிப் போவார்கள்; பாக்கியங்கள் அனைத்தும் கிட்டும்; வளமான வாழ்க்கை உண்டாகும்; சிவனருள் கிடைக்கும்.

பன்னிரண்டடி அகல நீளமானால், செல்வம் அனைத்தும் கையை விட்டுப் போகும்; மனைக்குரியவனின் திறமைகள் அனைத்தும் வீணாகும்; மிகுந்த வருத்தம் உண்டாகும்; சுகமிழப்பர்; வியாதியால் துன்புற்று சேதம் உண்டாகும்; மனைவி, மக்களும் துயரமுறுவர்.

பதிமூன்றடி அகல நீளமானால், எண்ணிய காரியங்கள் அனைத்தும் தீங்காகும். நன்றாக வாழ்ந்தவர்களுக்கு அனைவரும் பகையாவார்கள். மிகுந்த துன்பங்கள் உண்டாகும்; உறவினர்கள் அழிந்து போவார்கள்; நிலைமை தாழ்வடையும்.

பதினான்கு அடி அகல நீளமானால், இன்பம் கிட்டாது; மக்கள் அழிவர்; கால்நடைகள் போன்றவற்றிற்கு அழிவு உண்டாகும். தரித்திரம் ஏற்படும். ஆடை, ஆபரணங்கள் கையை விட்டுப் போகும். மனைவியைப் பிரிய நேரிடும்.

பதினைந்தடி நீள அகலமானால், மிகுந்த தீமைகள் உண்டாகும்; நோயினால் மரணம் ஏற்படும். செய்யும்

காரியங்கள் அனைத்தும் தீமையில் முடியும். பழிபாவங்கள் வந்து சேரும்; பாக்கியங்கள் கிட்டாது.

பதினாறடி நீள அகலமானால், மிகுந்த பாக்கியங்கள் வந்து சேரும். புத்திரர்கள் தோன்றுவர். மேன்மையான வாழ்க்கை உண்டாகும்; பகைவர்கள் விட்டு விலகிச் செல்வார்கள்; இறைவன் மீது பக்தி மிகும்.

பதினேழடி நீள அகலமானால், பகைவனும் வந்து வணங்கி நிற்பான்; இறையருள் கிட்டும்; பாரில் மன்னராக விளங்குவார்; மிகுந்த பாக்கியங்கள் கிடைக்கும். சிறப்பும் செல்வமும் பெற்று உயர்ந்து வாழ்வார்கள். அரச வெகுமானமும், மனைவி மக்களால் மகிழ்ச்சியும், உயர்வுகளும் உண்டாகும்.

பதினெட்டடி நீள அகலமானால், அநத வீட்டில் வறுமை விளங்கும்; வீட்டிலுள்ள பொருள்களை விற்க வேண்டியதாரும்; வீட்டுக்குரியவனின் மனைவிக்கு நோயும் மரணமும் நேரிடும்; பொருளின்றி வாட நேரிடும்.

பத்தொன்பதடி நீள அகலமானால், அந்த வீட்டிற்கு உரியவனின் மனைவி, பணியாட்கள் மரணமடைவர் பயிர்த்தொழில் நஷ்டம் உண்டாகும்; மனதில்வலை ஏற்படும்; புத்திரர்கள் மரணமடைவர்.

இருபதடி நீள அகலமானால், வீட்டில் மிகுந்த மேன்மைகள் உண்டாகும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் தோன்றுவர்; பலவிதமான இன்பம் உண்டாகும்; குதிரை இலாபம் கிட்டும்; வியாபாரம் செழிக்கும்; செல்வமுடன் மகிழ்ச்சியும் நிறையும்.

இருபத்து ஓரடி நீள அகலமானால், பசுக்கள் பெருகி, பால் வளம் மிகும்; பாக்கியங்கள் உண்டாகும்; மனக்குழப்பங்கள் நேராது.

இருபத்து இரண்டடி நீள அகலமானால், அவ்வீட்டிற்கு உரியவனைக் கண்டு பகைவர் நடுங்குவர்; மகிழ்ச்சியான

வளமான வாழ்க்கை கிட்டும்; ஆண் குழந்தைகளும் பெண்குழந்தைகளும் தோன்றுவர் என்று ஒரு பாடலிலும் இதற்கு மாறுபட்ட பலன் மற்றொரு பாடலிலும் காணப்படுகிறது. அப்பாடலின்படி அம்மனையில் மூதேவி வாசம் செய்வர்; பெண்கள், குழந்தைகள் மரணமடைவர்; தீராத மனக்கவலை உண்டாகும்; பழி பாவம் வந்து சேரும்.

இருபத்து மூன்றடி நீள அகலமானால், அனைத்து நோய்களும் அணுகும்; மனம் கலக்கமுறும்; அற்ப வாழ்வு உண்டாகும்; தீவினை மிகும்; மிகுந்த துயரம் பொருள் அழிவும் உண்டாகும்; விளைச்சல் குறையும்.

இருபத்து நான்கடி நீள அகலமானால், ஆயுள் குறைவு உண்டாகும்; இருபத்து ஐந்தடி நீள அகலமானால், தெய்வ அருள் கிட்டாது; இருபத்து ஆறடி நீள அகலமானால்,மிகுந்த செல்வத்தையடைந்து குடும்பத்தில் ஒற்றுமையாய் வாழ்வார்கள். இருபத்து ஐந்தடி நீள அகலமானால், இலட்சுமி கடாட்சம் எய்தும்; இருபத்து ஆறடி நீள அகலமானால், தேக பீடையும் மாறாத கவலையும் உண்டாகும் என்று மாறுபட்ட கருத்தைக் கூறும் பாடலும் உள்ளது.

இருபத்து ஏழடி நீள அகலமானால், யோகம் உண்டாகும்; நிறைவான வாழ்வு கிடைக்கும்; அனைவரும் போற்றும் வகையில் வாழ்க்கை கிட்டும்; நல்ல விளைச்சல் காணும்; தீவினைகள் நெருங்காது.

இருபத்து எட்டடி நீள அகலமானால், அவ்வீட்டிற்கு உரியவரைக் கண்டால், பகைவனும் அஞ்சி நிற்பான். வீட்டில் அனைத்துச் செல்வங்களும் பெருகும்; வளமான வாழ்க்கை உண்டாகும். இறைவனின் அருளால் எந்த ஒரு குறையும் நேராது. மற்றொரு பாடலில் மாறுபட்ட கருத்து காணப்படுகிறது. இதன்படி இருபத்து எட்டடி நீள அகலமானால், புத்திரர் மரணம் அடைவர்; தனச்சேதமும் தரித்திரமும் உண்டாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இருபத்து ஒன்பதடி நீள அகலமானால், செல்வம் மேன்மேலும் பெருகும்; முப்பதடி நீள அகலமானால், நல்ல இராசயோகம் வந்து சேரும்; ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் பிறப்பார்கள்; புகழ் கிட்டும்; மனக்கவலை நீங்கும்.

முப்பத்து ஓரடி நீள அகலமானால், இறைவனின் அருள் கிட்டும்; முப்பத்து இரண்டடி நீள அகலமானால், சகல நன்மைகளும் உண்டாகும்; அடிமையாட்கள் இருப்பார்கள்; புத்திரர்கள் தோன்றி சிறந்திருப்பார்கள். முப்பத்து மூன்றடி நீள அகலமானால், மனைவி, மக்கள் அனைவரும் சிறப்புற விளங்குவார்கள். முப்பத்து நான்கடி நீள அகலமானால், அவ்வீடு அழிந்து போகும்; முப்பத்து ஐந்தடி நீள அகலமானால், அஷ்டலட்சுமியின் அருள் கிட்டும்; முப்பத்து ஆறடி நீள அகலமானால் இராசயோகமும் பாக்கியங்களும் உண்டாகும்.

முப்பத்து ஏழடி நீள அகலமானால், மகிழ்ச்சி உண்டாகும்; எதிலும் இலாபம் கிட்டும்; முப்பத்து எட்டடி நீள அகலமானால், அம்மனையில் பிசாசுகள் குடியிருக்கும். முப்பத்து ஒன்பதடி நீள அகலமானால், செல்வம் பெருகும்; வசதிகள் உண்டாகும்; நாற்பதடி நீள அகலமானால், தீராத மனச்சலிப்பு உண்டாகும்.

நாற்பத்தோரடி அகல நீளமாகில், குபேரனைப் போன்று மிகுந்த செல்வம் உண்டாகும்; நாற்பத்து இரண்டடி நீளஅகலமாகில், இலட்சுமி கடாட்சத்தால் சகல பாக்கியங்களும் கிட்டும்; நாற்பத்து மூன்றடி அகல நீளமாகில், பொல்லாப்பு உண்டாகும்; நாற்பத்து நான்கடி நீள அகலமாகில், நீங்காத நோய்கள் தோன்றி, பொருட்சேதமும் உண்டாகும்.

நாற்பத்தைந்தடி நீள அகலமானால் இலட்சுமி கடாட்சம் உண்டாகும்; நாற்பத்தாறடி நீள அகலமானால்,

அம்மனைக்குத் தலைவனாகிய நாயகன் இருக்க மாட்டான். நாற்பத்தேழடி நீள அகலமானால், எந்நாளும் வறுமையை யுடையவனாக இருப்பான். நாற்பத்தெட்டடி நீள அகலமானால், அவ்வீடு தீயினால் அழிந்து போகும்.

நாற்பத்தொன்பதடி நீள அகலமானால், அம்மனையில் வறுமை நிலைத்திருக்கும். ஐம்பதடி நீள அகலமானால், பசு, பால், பாக்கியங்கள் மேன்மேலும் பெருகும். ஐம்பத்தோரடி நீள அகலமானால், அம்மனையில் அஷ்டலட்சுமிகளும் வாசம் செய்வார்கள். ஐம்பத்திரண்டடி நீள அகலமானால், அதிக செல்வம் கிட்டும்.

ஐம்பத்து மூன்றடி நீள அகலமானால், அதிகமான கவலைகளும் நோயும் வந்துசேரும். ஐம்பத்து நான்கடி அகல நீளமாகில், செய்யும் வியாபாரத்தில் மிகுந்த இலாபம் கிட்டும். ஐம்பத்து ஐந்தடி நீள அகலமானால், சிறிது ஆக்கமும் சிறிது பொருளழிவும் உண்டாகும். ஐம்பத்து ஆறடி நீள அகலமானால், குறையாத செல்வமும் அனைத்துப் பாக்கியங்களும் கிட்டும்.

ஐம்பத்தேழடி நீள அகலமானால், அரச வாழ்க்கையும், குதிரை வாகனமும் உண்டாகும். ஐம்பத்தெட்டடி அகல நீளமானால், திரவிய நாசமும் தீராத நோயும் மாறாத கவலையும் உண்டாகும். ஐம்பத்து ஒன்பதடி நீள அகலமானால், ஆடு மாடுகள் பெருகும்; பொருள் வரவும் பாக்கியங்களும் கிடைக்கும்.

வீட்டிற்கு அமையும் நீள அகலங்களின் அடிப்படையில். அம்மனைக்குரியவனுக்கு பலன் நன்மை, தீமைகள் நிகழுகின்றன என்பதை மனதில் கொண்டு, வீட்டைக் கட்டும்பொழுது, வீட்டின் நீள அகலங்களைக் கணக்கிட்டு அமைக்க வேண்டும்.

### வீடுகட்டும் மாதங்களும் பலன்களும்

வீடு கட்டுவதற்குரிய மாதங்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, முன்னோர்கள் தங்களுடைய அனுபவங்களின் வெளிப்பாடாகக் கூறியுள்ளவற்றைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. சித்திரை மாதத்தில் வீடுகட்ட, செல்வத்திற்கு அழிவுண்டாகும்.
2. வைகாசி மாதத்தில் வீடுகட்ட, சுபபலன்கள் உண்டாகும்.
3. ஆனி மாதத்தில் வீடுகட்ட, பிள்ளைகளுக்குக் கண்டமும் பயமும் உண்டாகும்.
4. ஆடி மாதத்தில் வீடுகட்ட, காராம் பசுக்கள் இறக்கும்; செல்வமும் சிறப்பும் நீங்கும்.
5. ஆவணி மாதத்தில் வீடுகட்ட, உறவினர்களின் வருகை ஏற்படும்.
6. புரட்டாசி மாதத்தில் வீடுகட்ட, மிகுநத நோய்கள் தோன்றும்.
7. ஐப்பசி மாதத்தில் வீடுகட்ட, வீட்டில் கலகமும் சேதமும் ஏற்படும்.
8. கார்த்திகை மாதத்தில் வீடுகட்ட, செல்வம் நிலைக்கும்.
9. மார்கழி மாதத்தில் வீடுகட்ட மிகுந்த பயம் உண்டாகும்.
10. தை மாதத்தில் வீடுகட்ட, அவ்வீட்டில் மரணம் நிகழும்; அக்கினி பயம் உண்டாகும்.
11. மாசி மாதத்தில் வீடுகட்ட, சிறுமைகள் நீங்கி செல்வம் மிகும்.
12. பங்குனி மாதத்தில் வீடுகட்ட, செல்வங்கள் கொள்ளை போகும்.

### மனைகோலும் திதிகளின் பலனும்

வளர்பிறைத் திதிகள் வீடுகட்ட நன்மை தருவனவாகும். தேய்ப்பிறைத் திதிகள் வீடுகட்ட ஆகாதவை. வளர்பிறையில் திருதியை முதல் பௌர்ணமி நீங்கலாகத் தேய்பிறைத் திதியில் சப்தமி வரையில் வளர்பிறைத் திதிகளாகவே கொண்டு வீடுகட்டத் தொடங்கலாம். பிற தேய்பிறைத் திதிகள் சிறிதும் ஆகாதவை என்றும் கூறப்பட்டுள்ளது.

1. பிரதமை, சஷ்டி, ஏகாதசி ஆகிய மூன்று திதிகளும் **அந்தக திதிகளாகும்**. இத்திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால், பொருள் அழிவு ஏற்படும்.

2. துவிதியை, சப்தமி, துவாதசி ஆகிய மூன்று திதிகளும் **பத்திரை திதிகளாகும்**. அந்தத் திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால், சிறைவாசம் ஏற்படும்.

3. திருதியை, அட்டமி, திரயோதசி ஆகிய மூன்று திதிகளும் **செயித்திய திதிகளாகும்**. அந்தத் திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால், நல்ல பலன் ஏற்படும்.

4. சதுர்த்தி, நவமி, சதுர்தசி ஆகிய மூன்று திதிகளும் **ரிக்கத் திதிகளாகும்**. இந்த மூன்று திதிகளில் வீடு கட்டத்தொடங்கினால், பகைவர்களால் பயம் உண்டாகும்.

5. பஞ்சமி, தசமி, பௌர்ணமி ஆகிய மூன்று திதிகளும் **பூரண திதிகளாகும்**. இந்த மூன்று திதிகளில் வீடுகட்டத் தொடங்கினால், வெற்றி உண்டாகும்.

6. அமாவாசையில் வீடு கட்டத் தொடங்கினால் உயிர்ச்சேதம் ஏற்படும். எனவே, வீடு கட்டத் தொடங்கும் பொழுது, ஏற்ற திதிகளை அறிந்து, தொடங்க வேண்டும்.

**மனையெடுக்கும் இராசிகளும் பலன்களும்**

பன்னிரு இராசிகளில், அந்தந்த இராசிகளில் மனையெடுக்க, அவற்றுக்குரிய பலன்கள் கிடைக்கும்.

1. மேட இராசியில் மனையெடுக்க, மேன்மையும் புகழும் உண்டாகும்; வருமானம் பெருகும்; மனைவி அன்புடன் விளங்குவாள்; பெரியோர்களின் நட்பு கிட்டும்; பயிர்த்தொழில் பெருகும்; இறையருள் கிட்டும்; தானியங்கள் மிகுதியாக வந்து சேரும்.

2. இடப இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும்; மிகுந்த துயரங்கள் உண்டாகும்; பிணியின் காரணமாக உடல் வற்றும்;

நல்ல புத்திரர்களும் உதவ மாட்டார்கள்; குடும்பத்தின் புகழ் குன்றும்; மனைக்குரியவன் பிழைப்பிற்கு வழியின்றி அலைவான்.

3. மிதுன இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனுக்கு வீண்பழிகள் வந்து சேரும்; சேர்த்து வைத்தப் பொருட்களனைத்தும் செலவாகும்; மனைவி பிரிந்து செல்வாள்; வீட்டில் வறுமை உண்டாகும்; பல வழிகளிலும் கலகம் விளையும்.

4. கடக இராசியில் மனையெடுக்க, மனையெடுப்பவனிடத்து அன்பு பாராட்டுபவர்கள் எல்லாம் பகைவர்கள் ஆவார்கள்; அரசரின் தண்டனைக்கு ஆளாக நேரிடும்; செலவிற்கு மேல் செலவு வந்து சேரும்; மனைவி பிரிந்து செல்வார்கள்; நோய்கள் தோன்றும்; குடும்பத்தில் பல குறைகள் உண்டாகும்; பலரும் இழிவாகப் பேசும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

5. சிம்ம இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனுக்கு மிகுதியான செல்வம் வந்து சேரும்; பொன் முதலானவற்றைப் பூமியில் புதைத்துக் காப்பான்; தர்மவானாக விளங்குவான்; பயிர்த்தொழிலில் விளைவு மிகுதியாகும்; மனைவியுடன் இன்புற்று வாழ்வான்; புத்திரர்கள் தோன்றுவார்கள்.

6. கன்னி இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனுக்குப் பொன்னாபரணங்களும் விலையுயர்ந்த நவமணிகளும் வந்து சேரும்; அரணாகப் புகழுடன் விளங்குவான்; பல வழிகளிலும் செல்வம் வந்து சேரும்; இறையருள் கிட்டும்; நல்ல உணவை உண்பாம்; மனைவி மக்களுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வான்.

7. துலா இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவன் சுகம் பெற்று அனைத்துப் பாக்கியங்களையும் பெறுவான்;

தானிய இலாபம் கிட்டும்; குலம் செழித்திடும்; செல்வம் மேன்மேலும் பெருகும்; புகழ் நிலைபெற வாழ்வான்.

8. விருச்சிக இராசியில் மனையெடுக்க, அவ்வீட்டில் வறுமை உண்டாகும். மனைக்குரியவன், அடிமையிலும் அடிமையாய் ஊர் ஊராய் அலைய நேரிடும். மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு அகல நேரிடும்; மனத்துயருடன் உடல்மெலிந்து வாழ்வான்.

9. தனுசு இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனுக்கு எந்நேரமும் கவலை இருந்துகொண்டே இருக்கும்; துன்பத்தினால் வருந்துவான்; உறவினர்களும் நண்பர்களும் கலகம் செய்வார்கள்; சுகம் கிட்டாது; செல்வம் அழியும்; யாரும் மதிக்க மாட்டார்கள்; மனைக்குரியவன் மனத்துயருற்றுத் தெருவினில் அலைவான்.

10. மகர இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனின் பிள்ளைகளும் மனைவியும் மரணமடைவர்; வீட்டில் செல்வம் நீங்கி, வறுமை உண்டாகும்; ஆடு, மாடுகளும் அழியும்; நிலம், வீடு போன்றவை கையை விட்டுப் போகும்; மனைக்குரியவன் மனம் நொந்து வாடி நிற்பான்.

11. கும்ப இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவனுக்கு நல்ல மனைவி கிடைப்பாள்; தன்னை நாடி வந்தவர்களுக்கும், நம்பி வாழ்பவர்களுக்கும் இவன் மிகுந்த நன்மைகளைச் செய்வான். உடன்பிறந்தோர், பெற்றோர், உறவினர்கள், மனைவி, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் விளங்குவர்; இறைவியின் அருளைப் பெறுவான்; மிகுந்த பொருளைப்பெற்று மனநிறைவுடன் வாழ்வான்.

12. மீன இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவன் செல்வனாக விளங்குவான்; புராணம், காவியம்

போன்றவற்றை விரும்பிக் கேட்டு மகிழ்வான்; மிகுந்த வல்லமைப் படைத்தவனாக விளங்குவான். நல்ல மனைவி, புத்திரர்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் இருப்பான்; ஞானம் மிக்கவனாகத் திகழ்வான்; அதிகமான செல்வத்தை உடையவனாக விளங்குவான்.

**வீடுகட்டும் யோகங்களும் பலன்களும்**

பஞ்சாங்கத்தில் கூறப்படும் இருபத்தேழு யோகங்களில், பிராமியம், மாகேந்திரம், சாத்தியம், சிவம், சுப்பிரம், ஆயுஷ்மான், சௌபாக்கியம், துருவம், வைதிருதி, சோபனம், சுபம், பிரீதி, சித்தம், சித்தி ஆகிய பதினான்கு யோகங்கள், மனையெடுக்க ஏற்ற யோகங்களாகும். இந்த நேரத்தில் மனையெடுக்க நன்மைகள் உண்டாகும். வியாகாதம், கண்டம், சூலம், விஷ்கம்பம், வச்சிரம், அதிகண்டம், வியதிபாதம், பரீகம், வைதிருதி ஆகிய ஒன்பது யோகங்கள், மனைகோல ஆகாத யோகங்களாகும். எஞ்சியுள்ள ஆறு யோகங்களைப் பற்றி பாடல்களில் கூறப்படவில்லை என்பது இங்குச் சுட்டத்தக்கது.

**மனையெடுக்கத் தேர்ந்தெடுக்கும் கரணங்களும் பலன்களும்**

பஞ்சாங்கத்தில் கூறப்படும் பதினொரு கரணங்களில் பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, பத்திரை ஆகிய ஆறு கரணங்களும், மனையெடுக்க ஏற்ற கரணங்களாகும். சகுனி, நாகவம், சதுஷ்பாதம், கிமிஸ்துஷிணம், வனசை ஆகிய ஐந்து கரணங்களும் மனைகோல ஆகாத கரணங்களாகும்.

**வீடு கட்டத் தொடங்கும் சாரப்பலன்கள்**

1. பரணி நட்சத்திரத்தின் பிற்பகுதி இரண்டு பாதங்கள் கார்த்திகை நான்கு பாதங்கள், உரோகணி முதற்பாதம் ஆகிய ஏழு பாதங்களில் சூரியன் நிற்க, மனைகோல, அந்த மனைக்குத் தீயினால் பயமுண்டாகும்.

2. கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம் இரேவதி இந்த ஏழ நட்சத்திரக் கால்களில் செவ்வாய் நிற்க, மனைகோல, அந்த மனைக்குத் தீயினால் அழிவுண்டாகும். புத்திரர்கள் மரணமடைவார்கள்.

3. அசுவினி, மிருசீரிடம், அஸ்தம், உத்திரம், சித்திரை, உரோகணி ஆகிய ஆறு நட்சத்திரக் கால்களில் புதன் இருந்து, புதன் உச்சத்தில் அல்லது ஆட்சியில் இருக்க, மனைகோல, நன்மைகள் மிகும்; புத்திரர்கள் தோன்றுவர்; அரசரால் நன்மைகள் உண்டாகும்; பெருமைகள் சேரும்.

4. திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிடம், ஆயிலியம், உரோகணி, பூசம் ஆகிய ஒன்பது நட்சத்திரக் கால்களில் குரு நின்றாலும் உத்திர நட்சத்திரக் கால்களில் குரு நின்று, ஆட்சி அல்லது உச்சம் பெற்று விளங்க, மனைகோல, அந்த மனையில் எந்நாளும் செல்வம் நிலைத்து நிற்கும்.

5. கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவினி பூராடம், அவிட்டம், அனுஷம், விசாகம் திருவாதிரை, சதயம் ஆகிய நட்சத்திரக் கால்களில் சுக்கிரன் நிற்க, மனைகோல, அம்மனைக்கு மிகுந்த நன்மைகள் உண்டாகும். அம்மனையில் குற்றங்கள் நீங்கி , சுகம் கிட்டும்.

6. சதயம், பூரட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை ஆகிய இந்த எட்டு நட்சத்திரக் கால்களில் சனி நிற்க, மனைகோல, அந்த மனைக்குரியவனுக்கு உறவுகள் அற்றுப் போகும்; அந்த மனை பாழாகிப் போகும். மேலும், அந்த மனையில் பூதங்கள், மூதேவி, பிரம்மராட்சதன் ஆகியோர் தங்குவர்.

7. இராகு இருந்த இராசிக்கு எதிரே இருக்கும் பதினான்கு நட்சத்திரங்களின் கால்களும் தீமை தருவனவாகும். இந்த நட்சத்திரக் கால்களில் இராகு இருக்க, மனைகோல, சொல்ல இயலாத அளவிற்கு மிகுந்த துன்பங்கள் உண்டாகும்.

**வீடுகட்டும் திசைகளின் பலன்கள்**

வீட்டினைக் கட்டத் தொடங்கும்பொழுது நல்ல திசைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் ஒன்றில் வீடு கட்டத்தொடங்க வேண்டும். அவ்வாறு வீடு கட்டினால், வீடு கட்டியவனுக்கும், அந்த வீட்டிற்கும் நன்மைகள் உண்டாகும்

1. இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் மனைகோல, அம்மனைக்கு உரியவனின் மனைவி இறந்து போவாள்; மேன்மேலும் துக்கம் உண்டாகும்; உறவினர் களால் துன்பம் நேரிடும்; பயிர்த்தொழிலில் அழிவுண்டாகும்; யாரும் மதிக்க மாட்டார்கள்; வீடு தீயினால் அழியும் துன்பங்களும் துயரங்களும் அதிகமாகும்.

2. அக்கினி மூலையாகிய தென்கிழக்குத் திசையில் மனைகோல, அம்மனைக்கு உரியவனின் மனைவி மலடியாக இருப்பாள்; பாம்பு தீண்டும்; வீடு தீப்படும்; மனையாள் மரணமாவாள்; பொருள்கள் களவு போகும்.

3. எமன் திசையாகிய தெற்குத் திசையில் மனைகோல, மனைக்குரியவனின் மனைவி எக்காலமும் சண்டை யிடுபவளாக இருப்பாள்; புதல்வன் மரணமடைவான்; மரணத்திற்கு ஒப்பான நோயினால் உடல் வற்றிப் போகும்; மனைவிக்கு அழிவு நேரிடும்; மனைக்குரியவனுக்குக் குஷ்டநோய் தோன்றும்.

4, கன்னி மூலையாகிய தென்மேற்குத் திசையில் மனையெடுக்க, மனைக்குரியவனுக்கு மிகுந்த பொருட்கள் சேரும்; பொன்னும் தானியங்களும் மேன்மேலும் சேரும்; நிலம், வயல் முதலானவை மேன்மேலும் சேரும்; செல்வம் மிகும்; செய்தொழிலில் அதிக இலாபம் கிட்டும்; கருதியபடி அனைத்துக் காரியங்களும் கைகூடும். மனைக்கோலுபவன் மன்னனைப் போன்று விளங்குவான்.

5. வருணன் திசையாகிய மேற்குத் திசையில் மனையெடுக்க, புத்திரர்கள் தோன்றுவார்கள்; அழகான

மனைவி கிடைப்பாள்; மனைக்குரியவன் பிறருக்குப் பொருள்களை வாரி வழங்குவான்; பொருள் மேன்மேலும் பெருகும்; இறைவனின் அருள் கிட்டும்.

6. வாயு திசையாகிய வடமேற்குத் திசையில் மனையெடுக்க, மனையெடுப்பவனின் வயிற்றில் நோய்கள் உண்டாகி, அதனால் மரணமடைவான், பொருள்கள் களவு போகும்; மனையானது பாழடைந்து பேய்கள் குடிகொண்டு, பிணங்களைப் புதைக்கும் சுடுகாடு போலாகும்.

7. குபேர திசையாகிய வடக்குத் திசையில் மனையெடுக்க, வீட்டில் மிகுந்த விலையுயர்ந்த அணிகலன்களும் செல்வங்களும் சேரும்; வேலையாட்கள்; மிகுதியாகச் சேருவார்கள்; தவம் செய்வோர் வாழ்த்துவர்; அனைத்து பாக்கியங்களும் வந்து சேரும்.

8. ஈசன் திசையாகிய வடகிழக்குத் திசையில் மனையெடுக்க, மனைகோலுபவனுக்குத் திருமணம் நடக்கும்; புத்திரர்கள் தோன்றுவார்கள்; பொன், பொருள்கள் சேரும்; மனைவி, மக்களால் மகிழ்ச்சி உண்டாகும்; உற்றார் உறவினர்களுடன் செல்வம் மிக்கவனாக வாழ்வான்.

**மனையெடுக்க ஏற்ற காலமும் நேரமும்**

மனையெடுக்க எண்ணுபவன் முதலில் நல்ல மாதங்களிலும், நல்ல வாரங்களிலும், நல்ல திதிகளிலும், நல்ல நட்சத்திரங்களிலும், நல்ல யோகங்களிலும், நல்ல இராசிகளிலும் மனைகோல நலமுண்டாகும். தீய மாதங்களிலும் தீய வாரங்களிலும், தீய திதிகளிலும், தீய நட்சத்திரங்களிலும், யோகங்களிலும், தீய இராசிகளிலும் மனைகோல தீமையுண்டாகும். மனையெடுப்பவர் தன் இராசிக்கு முன் இராசிகளில் வலமாகக் கொண்டால், மிகவும் நன்று. தன் இராசிக்குப் பின் இராசிகளில் இடமாகக் கொண்டால், பீடை உண்டாகும். அவ்வாறு மனைகோல பொன், பொருள், உயிர் இவற்றுள் ஒன்று மனைக்கு உரியவனுக்கு இருக்காது.

**மனையெடுக்க ஏற்ற வாரமும் நட்சத்திரமும்**

1. ஞாயிற்றுக் கிழமையில் இரேவதி, அஸ்தம், மூலம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் வீடுகட்ட, மனைக்குரியவன், தலைவனைப் போன்று குதிரை வாகனத்துடன் செல்வம் மிகுந்தவனாக வாழ்வான். மேலும், இறைவனருளால் அனைத்து நன்மைகளும் பெற்றுப் புத்திரர்களோடு வாழ்வான்.

2. திங்கட்கிழமையில் சுவாதி உரோகணி, புனர்பூசம், திருவோணம், மிருகசீரிடம் ஆகிய நாட்கள் வந்தாலும், துதிகை, சப்தமி, ஏகாதசி ஆகிய திதிகள் வந்தாலும் அந்த நாட்களில் வீடு எடுக்க, குடிபுக அம்மனையைக் கோல்பவன் பொருட்செல்வங்களைப் பெற்று உலகையாள்பவன்; தானியம் பெருகும்; மங்கையை மணம் முடிந்து மகிழ்வான்; புத்திரர்களைப் பெற்று நிறைந்த வாழ்க்கையை வாழ்வான்.

**மனையெடுக்க ஏற்ற குளிகைக் காலம்**

எந்தக் கிழமையில் குளிகன் காலம் பார்க்க வேண்டுமோ அந்தக் கிழமை முதலாய் சனிக்கிழமை வரையிலும் கணக்கெண்ணி வந்த தொகையை மூன்றே முக்காலிற் பெருக்கிக் கண்ட நாழிகையைக் குளிகைக் காலமாக்கிக் கொண்டு மனையெடுக்க, நன்மையாகும்.

**மனைகோல ஏற்ற வாரங்கள்**

மனைகோல ஏற்ற வாரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. ஞாயிற்றுக்கிழமை மனைகோல, அலைய வைக்கும்.
2. திங்கட்கிழமை மனைகோல, நன்மையைத் தரும்.
3. செவ்வாய்க்கிழமை மனைகோல, அவ்வீடு தீயினால் அழியும்.
4. புதன்கிழமை மனைகோல, புத்திரர்கள் தோன்றுவார்கள்.
5. வியாழக்கிழமை மனைகோல, பொருள் சேரும்.
6. வெள்ளிக்கிழமையில் மனைகோல, தானியம் பெருகும்.
7. சனிக்கிழமையில் மனைகோல, வம்சம் விருத்தியாகும்.

இரத்தினங்களின் பலன்களை மனதில் கொண்டு, மனைகோல ஏற்ற வாரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்

**மனைகோல ஏற்ற நாட்கள்**

அசுபதி முதல் இரேவதி வரையிலான இருபத்து ஏழு நட்சத்திரங்களில், அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகணி, மகம், பூரம், உத்திரம், அஸ்தம், பூராடம், உத்திராடம், திருவோணம் ஆகிய பன்னிரண்டு நட்சத்திரங்களும் வரும் நாட்கள் **ஏறு நாட்கள்** என்று சொல்லப்படுவனவாகும். இந்த நாட்களில் மனை, மாடகூடம், அம்பலம், கோயில் ஆகியவை கட்ட ஏற்ற நாட்களாகும். திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி ஆகிய பன்னிரண்டு நட்சத்திரங்களும் வரும் நாட்கள் **இறங்கு நாட்கள்** என்று சொல்லப்படுவனவாகும். இந்த நாட்களில் கோபுரம், ஆலயம், மாடகூடம் ஆகியவை கட்ட இடிந்து பாழாகும். மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய இரண்டு நட்சத்திரங்களும் வரும் நாட்கள் **முகட்டு நாட்கள்** என்று சொல்லப்படுவனவாகும். இந்த நாட்களில் முகடுகளை உயர்த்த நன்மையாகும்.

**மனைகோல ஏற்ற பஞ்சகம்**

ஞாயிறு முதல் அன்றைய வாரம் வரையும் பிரதமை முதல் அன்றைய திதி வரையும், அசுவதி முதல் அன்றைய நட்சத்திரம் வரையும், மேடம் முதல் அப்பொழுது உதயமாகும் இலக்கனம் வரையும் எண்ணிக் கண்ட தொகையை ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதி **பஞ்சகம்** எனப்படும்.

ஒன்று மீதியாக வந்தால் **மிருத்துப் பஞ்சகம்**
இரண்டு மீதியாக வந்தால் **அக்கினி பஞ்சகம்**
மூன்று மீதியாக வந்தால் **நிஷ் பஞ்சகம்**
நான்கு மீதியாக வந்தால் **இராஜ பஞ்சகம்**
ஐந்து மீதியாக வந்தால் **நிஷ் பஞ்சகம்**

ஆறு மீதியாக வந்தால் **சோர பஞ்சகம்**
ஏழு மீதியாக வந்தால் **நிஷ்பஞ்சகம்**
எட்டு மீதியாக வந்தால் **ரோக பஞ்சகம்**

இவற்றுள் மூன்று, ஐந்து, ஏழு மீதியாக வந்தால், வருகின்ற நிஷ்பஞ்சகம் மனைகோல ஏற்ற பஞ்சகமாகும்.

**மனைக்குரியவர் பிறந்த இலக்கன அடிப்படையில் பலன்கள்**

மனைக்குரியவர் பிறந்த இலக்கனத்தை அடிப்படையாகக் கொண்டு, மனைகோலுதற்குரிய சிறந்த நாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்த நல்ல நாட்களில் மனைகோலினால் நன்மையான பலன்கள் உண்டாகும். தீய நாட்களில் மனைகோலினால் தீமையான பலன்கள் உண்டாகும்.

1. பிறந்த இலக்கனத்திற்கு நான்காம் இடத்தில் அல்லது [illegible]ாமிடத்தில் சந்திரன் இருக்க, பதினோராமிடத்தில் குரு, செவ்வாய், சனி ஆகியோர் இருக்க, மனைகோலினால், அவ்வீடு நூறு ஆண்டுகாலம் உயர்ந்து விளங்கும்.

2. பிறந்த இலக்கணத்தில் குரு, சுக்கிரன் ஆகிய கோள்கள் இருக்க, ஐந்தாமிடத்தில் அல்லது மூன்றாமிடத்தில் சூரியன் இருக்க, ஆறாமிடத்தில் செவ்வாய் இருக்கும் நாளில் மனைகோலினால் நூறு ஆண்டுகள் விளங்கும்.

3. பிறந்த இலக்கணத்தில் சந்திரன் இருக்க, நான்காமிடத்தில் ஆறு நூறு ஆண்டுகள் அம்மனை நிலைப்பெற்றிருக்கும்.

4. பிறந்த இலக்கனத்தில் அல்லது பத்தாமிடத்தில் சுக்கிரனும், மூன்றாமிடத்தில் புதனும், அத்தமனம் பெற்று, குருவும் இருக்கும் நாளில் மனைகோலினால், அம்மனை அறுநூறு ஆண்டுகள் நன்மை தரும்.

5. பிறந்த இலக்கனத்தில் குருவும், சுக்கிரனுடைய வீட்டில் புதனும் இருக்கக் கூடிய நல்லநாளில் மனைகோலினால் எண்ணூறு ஆண்டுகள் நன்மைகளைத் தரும்.

6. பிறந்த இலக்கனத்தில் அல்லது பத்தாமிடத்தில் சந்திரன் இருக்க, சூரியன் அஸ்தமனம் பெற்ற நாளில் மனைகோலினால், ஆயிரம் ஆண்டுகள் நன்மை கிட்டும்.

7. பிறந்த இலக்கனத்திற்கு ஏழாமிடத்தில் குரு, பத்தாமிடத்தில் சந்திரன், இலக்கனத்தில் சுக்கிரன் இருக்க, மனைகோல, அம்மனை ஆயிரம் ஆண்டுகள் நலமுடன் விளங்கும்.

8. பிறந்த இலக்கனத்தில் குருவும் சுக்கிரனும் இருக்க, மனைகோலினால், அம்மனைக்கு தீயினால் என்றும் அழிவு ஏற்படாது.

9. கடகம், மகரம், மீனம் ஆகிய இலக்கனங்களில் சுக்கிரன் இருக்க, கூரை வேய, அம்மனையில் இருப்போருக்கு மேன்மேலும் வெற்றி கிட்டும்.

10. பூராடம், திருவோனம், உரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களில் வியாழன் இருக்க, வியாழக்கிழமையில் மனைகோலினால், மகிழ்ச்சி உண்டாகும்.

11. சல இராசியில் சுக்கிரன் இருக்க, அந்நாள் வெள்ளிக்கிழமையாக இருக்க மனைகோல செல்வம் கிடைக்கும். சல இராசியில் சந்திரன் இருக்க, அந்நாள் திங்கட்கிழமையாக இருக்க மனைகோல சுமாரான பலன் கிடைக்கும்.

12. பிறந்த இலக்கனத்திற்கு நான்காமிடத்தில் அல்லது ஏழாமிடத்தில் குருவும் சுக்கிரனும் கூடி இருக்க, சூரியன் ஆறாம் இடத்திலும் சனி மூன்றாமிடத்திலும் இருக்க, கோயில், வீடு, பீடம் முதலானவற்றைக் கட்ட அவை நூறாண்டுகள் அழியாமல் விளங்கும்.

13. இராசியில் சுக்கிரனும் இலக்கனத்திற்கு ஏழாமிடத்தில் குருவும், பத்தாமிடத்தில் சந்திரனும் இருக்க, வீடுகள் கட்ட, அவ்வீடு இவ்வுலகில் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கும்.

14. புதனும் வியாழனும் பதினோராமிடத்தில் இருக்க அல்லது புதனின் இராசியாக, சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் இருக்க, அந்த மனை ஆயிரம் வருடங்கள் சிறப்புடன் விளங்கும்.

15. இலக்கனத்திற்குப் பத்தாமிடத்தில் சந்திரன், சுக்கிரன், குரு இருக்க, செவ்வாய், குரு ஆகியவை பதினோராமிடத்தில் இருக்க, மனைகோலில் அம்மனை காலம் காலமாக மண்ணில் விளங்கும்.

16. சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில், செவ்வாய், சுக்கிரன், சூரியன், குரு ஆகியோர் நிற்க அல்லது சென்ம இராசியிலாவது மூன்றாமிடத்திலாவது, ஐந்தாம் இடத்திலாவது இருக்க, மனைகோல, அந்த மனை இருநூறு ஆண்டுகள் நிலைபெற்று விளங்கும்.

17. சென்ம இராசியிலாவது பத்தாமிடத்திலாவது ஏழாமிடத்திலாவது சந்திரன், புதன், குரு ஆகிய கோள்கள் நிற்க, கோயில், நகரம், வீடு முதலானவற்றைக் கட்டினால், நூறு ஆண்டு காலம் நிலைபெற்று விளங்கும்.

18. சூரியன், புதன், சுக்கிரன் ஆகியோர் பிறந்த இலக்கனத்திற்குப் பதினோராமிடத்தில் அல்லது பிறந்த இராசியில் இருக்க, குரு கேந்திர கோணங்களில் இருக்க, மாளிகை செய்தானாகில், அம்மாளிகை இவ்வுலகில் ஆயிரம் ஆண்டுகள் நிலைபெற்று விளங்கும்.

19. பிறந்த இலக்கனத்திற்கு ஏழாமிடத்தில் குரு இருக்க, மனைகோலில், அந்த மனைக்குரியவன் கட்டி, முடிப்பதற்கு முன்னால் அரசன் கைப்பற்றிக் கொள்வான்.

20. பிறந்த இலக்கனத்திற்கு ஏழாமிடத்தில் புதன் இருக்க, அவ்வீட்டைக் கட்டியவனின் புதல்வர்களில் ஒருவன் இறந்து போவான். ஏழாமிடத்தில் சந்திரன் இருக்க, மனைகோல, அவ்வீடு அழிந்துபோய் எரிப்பதற்கு விறகாகப் பயன்படும்.

**மனைகோலுபவனின் இராசியும் மனைகோலும் இராசியும்**

மனைக்கு உரியவன் தன்னுடைய சனன இராசி, நாம இராசி, ஐந்தாம் இராசி, ஒன்பதாம் இராசி இவற்றில் வீடு கட்டினால், உறவினர்களைப் பாதுகாப்பான். அவனுடைய இராசிக்கு மூன்றாம் இராசி, ஏழாம் இராசி, பதினோராம் இராசி இவற்றில் வீடு கட்டினால், அன்னியரைப் பாதுகாப்பான். இரண்டாம் இராசி, நான்காம் இராசி, எட்டாம் இராசி, பன்னிரண்டாம் இராசி இவற்றில் வீடு கட்டினால் தீமையாகும்.

**மனைகோலுபவனின் இராசிக்கு ஆகாத திசைகள்**

இராசிகளில் மேடம், இடபம் ஆகியவை கீழ்த்திசை, மிதுனம்-தென்கிழக்குத்திசை; கடகமும் சிம்மமும் தென்திசை; கன்னி-தென்மேற்குத்திசை; துலாமும் விருச்சிகமும் மேற்குத்திசை, தனுசு-வடமேற்குத்திசை; மகரமும் கும்பமும் வடக்குத் திசை, மீனம்-வடகிழக்குத்திசை.

கிழக்கு - துவசாயம் - விருட்சிக இராசிகாரர்களுக்கு ஆகாது
தென்கிழக்கு-தூமாயம்-மீன இராசிக்காரர்களுக்கு ஆகாது
தெற்கு-சிம்மாயம்-கடக இராசிக்காரர்களுக்கு ஆகாது
தென்மேற்கு-சுனகாயம்-கன்னி இராசிக்காரர்களுக்கு
மேற்கு-ரிஷபாயம்-தனுசு இராசிக்காரர்களுக்கு ஆகாது
வடமேற்கு-காளாயம்-துலா இராசிக்காரர்களுக்கு ஆகாது
வடக்கு-கெஜாயம்-மேஷ இராசிக்காரர்களுக்கு ஆகாது
வடகிழக்கு-காகாயம்-கும்ப இராசிக்காரர்களுக்கு ஆகாது

எஞ்சியுள்ள மகரம், மிதுனம், சிங்கம், ரிஷபம் இந்த இராசியுடையோர் கிராமத்திற்கு மத்தியில் வீடுகட்டக் கூடாது. அவ்வாறு கட்டினால் அந்த மாளிகை முழுமை பெறாது; தோஷம் உண்டாகும்; அழிவு நேரிடும்; விருத்தி அடையாது; விரைவாக அழிந்து போகும்.

**மனைகோல ஏற்ற இராசிகள்**

மனைகோலுவோர், இராசியின் பலன் அறிந்து, சிற்பனின் மொழி கேட்டு, சோதிடக் குறிப்பின்படி மனைகோல வேண்டும்.

மேட இராசியில் மனையெடுக்க, நன்மையாகும்;
இடப இராசியில் மனையெடுக்க, தன இலாபம் கிடைக்கும்;
மிதுன இராசியில் மனையெடுக்க, பசு விருத்தியாகும்;
கடக இராசியில் மனையெடுக்க, நன்மையும் தீமையும் கலந்து நடக்கும்;
சிம்ம இராசியில் மனையெடுக்க, உற்றார், உறவினர் வந்து சேருவார்கள்;
கன்னி இராசியில் மனையெடுக்க, நோய் வந்து சேரும்;
துலா இராசியில் மனையெடுக்க, நன்மையாகும்;
விருச்சிக இராசியில் மனையெடுக்க, மிகுந்த செல்வம் சேரும்;
தனுசு இராசியில் மனையெடுக்க, செல்வம் அழியும்;
மகர இராசியில் மனையெடுக்க, தானியம் மேன்மேலும் பெருகும்;
கும்ப இராசியில் மனையெடுக்க, இரத்தின மணிகள் இலாபமாகக் கிட்டும்;
மீன இராசியில் மனையெடுக்க, பயம் மிகுதியாகும்;

இந்நூலில் மேற்கூறிய கருத்துக்களினின்றும் மாறுபட்ட செய்திகளும் காணப்படுகின்றன. அவற்றின்படி மேடம், துலாம், கன்னி, சிம்மம், மீனம், கும்பம் ஆகிய இராசிகளில் மனையெடுக்க நன்மையாகும்; செல்வம் பெருகும்; புத்திரர் தோன்றுவர்; மனையாள் சுகம் கிடைக்கும்; நிறைவான வாழ்க்கை உண்டாகும்; புகழ் வளரும்; பொருள் சேரும்.

மிதுனம், தனுசு ஆகிய இராசிகளில் மனையெடுக்க, மனைக்கு உரியவன், தன் மனைவியையும் மக்களையும் இழக்க நேரிடும். இடபம், இடபம், கடகம், விருச்சிகம் மகரம் ஆகிய இராசிகளில் மனையெடுக்க, செல்வம் சேராது; வறுமை வந்து சேரும். இவையன்றி,

1. துலாம், கும்பம், மிதுனம் ஆகிய மூன்று இராசிகளும் **இருந்த இராசிகளாகும்**. இந்த மூன்று இராசிகளில் மனைகோல, இன்பம் உண்டாகும்.

2. தனுசு, மீனம், மேடம் ஆகிய மூன்று இராசிகளும் **நடந்த இராசிகளாகும்**. இந்த மூன்று இராசிகளில் மனைகோல, சண்டைகள் ஏற்படும்.

3. கடகம், சிம்மம், விருட்சிகம் ஆகிய மூன்று இராசிகளும் **நின்ற இராசிகளாகும்.** இந்த மூன்று இராசிகளில் மனைகோல, பொன், பொருள் சேரும்.

4. இடபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று இராசிகளும் **கிடந்த இராசிகளாகும்.** இந்த மூன்று இராசிகளில் மனைகோல, மரணம் உண்டாகும்.

**ஸ்திர, சர, உபய இராசிகளில் வீடுகோல மலன்கள்**

1. இடபம், சிங்கம், விருட்சிகம், கும்பம் ஆகிய இந்த நான்கு இராசிகளும் ஸ்திர இராசிகளாகும். இந்த இராசிகளில் மனைகோல உத்தமமான பலன்கள்.

2. மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த நான்கு இராசிகளும் சர இராசிகளாகும். இந்த இராசிகளில் மனைகோல மத்திமமான பலன்கள் கிடைக்கும்.

3. கன்னி, மிதுனம், மீனம், தனுசு இந்த நான்கு இராசிகளும் உபய இராசிகளாகும். இந்த இராசிகளில் வீடு கட்டக் கூடாது. இந்த இராசிகளில் வீடுகள், மாளிகைகள் கட்டினால் தீங்கு விளையும்.

**மனைகோல ஏற்ற சல இராசிகள்**

1. **பூரண சல இராசிகள்** என்று சொல்லப்படுபவை. மீனம், மகரம், கடகம் ஆகிய மூன்று இராசிகளாகும்.

2. **பாத சல இராசிகள்** என்று சொல்லப்படுபவை துலாம், விருச்சிகம், மேஷம் ஆகிய மூன்று இராசிகளாகும்.

**நிறைசல இராசிகள்** என்று சொல்லப்படுபவை கன்னி, மிதுனம், தனுசு ஆகிய மூன்று இராசிகளாகும். இந்த நான்கு வகையான சல இராசிகளில் பூரண சல இராசிகள் என்று சொல்லப்படும் மீனம், மகரம், கடகம் ஆகிய மூன்று இராசிகளும் வீடுகட்ட ஏற்ற நல்ல சல இராசிகளாகும். இந்த இராசிகளில் இருந்து குருவும் சுக்கிரனும் பார்த்தாலும், சந்திரன் பார்த்தாலும் மாடம், தனி மாளிகைக் கட்டினால், செவ்வாய் தோஷம் இல்லை.

**மனைகோலுவதற்குப் பூசை**

மனைகோலுவதற்காகத் தக்க நேரத்தைத் தேர்ந்தெடுத்து மனைக்குச் சென்றவுடன், கணபதிக்குத் தேங்காய் உடைத்துப் புத்தாடை அணிவத்து, செம்பொன் வைத்துப் பூசைகள் செய்து பின்னர், முழம், சாண் எனத் தக்கவாறு மனையினைத் தோண்டும்பொழுது நற்சொல் அறிந்து மனைகோல வேண்டும்.

**சங்கு**

மனைகட்டும்பொழுது 'சங்கு நடுதல்' என்பது ஒரு முக்கியமான செயலாகும். சங்கு என்பது மரத்தால் கடைந்து கூம்பு வடிவில் செய்யப்படுவது. சங்கின் அளவு சில பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

**சங்கின் அளவு**

சங்கின் நீளம் பன்னிரண்டு விரலளவாகும். இதனை நான்கு கூறிட்டு, அதிலே மூன்று கூறு பருமனான தலைச்சுற்று. ஒரு கூறு கூர்மையான நீளம். இவ்வாறு அளவு பார்த்துச் சங்கு செய்தால், தோஷம் வராது; சுகத்தைக் கொடுக்கும்; செல்வம் பெருகும்.

சங்கின் நீளம் எவ்வளவாக இருந்தாலும் அதைச் சங்கின் பருமனாகக் கொள்ளவேண்டும். பருமனில் முக்கால் தலைப்பருமன். கால் பங்கு ஊசிப்பகுதியின் பருமன். ஒரு முழப் பரப்பளவில் இச்சங்கினை நடவேண்டும்.

உத்தமச் சங்கு செய்வதற்கு ஒரு முழ உயரம். அடியில் கனம் ஆறு அங்குலம். தலை கனம் ஒரு அங்குலம் என்ற கணக்கில் வட்டமாகத் திரளுமாறு கடைசல் செய்து, இச்சங்கினை உருவாக்க வேண்டும் என்று எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

**சங்கு செய்யும் மரங்கள்**

சங்கு செய்ய சில குறிப்பிட்ட மரங்களே ஏற்றவை யாகும். சங்கு செய்யத் தொடங்கும் பொழுது அத்தகைய மரங்களைத் தேர்ந்தெடுத்துத் தக்க அளவில் அவற்றைச் செய்தல் நன்மை பயக்கும். மரங்களையன்றி, யானைக்கொம்பினாலும் சங்குகள் செய்யும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. அது தேவர்க்கு மட்டுமே உரியது.

சந்தனம், வன்னி, தேக்கு, கருங்காலி ஆல், அரசு, அத்தி, இத்தி ஆகிய மரங்களாலும், பால் உள்ள பால்மரங்களிலும் சங்குகள் செய்யலாம். அவற்றுள்ளும் சிலவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். தேவர்க்கும் மனிதர்களுக்கும் ஆல், அரசு, அத்தி, இத்தி முதலான மரங்களைக்கொண்டு சங்கு செய்ய வேண்டும். பரம்பை, கருங்காலி முதலானவை முள்மரங்கள். ஆகையால் இவற்றை தேவர்களுக்குச் சங்கு செய்யும் பொழுது கடைந்து வைக்க வேண்டும். இம்முள் மரங்களைக் கொண்டு மனிதர்களுக்குச் சங்கு செய்யக்கூடாது. அது தோஷத்தைக் காட்டும்.

மனிதர்களுள்ளும் அவரவருக்குரிய வருணங்களின் அடிப்படையில் மரத்தின் பாகுபாடு கூறப்பட்டுள்ளது. அதன்படி கருங்காலி அந்தணர்களுக்கும், வன்னிமரம் அரசர்க்கும், தேக்குமரம் வைசியர்க்கும் புளியமரம் சூத்திரர்க்கும் ஏற்றதாகும்.

சங்கு மரங்களைப் பகுத்துக் கூறுவதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. சில நூல்கள் கருங்காலி மரம்

தேவர்க்குரியது என்றுரைக்கின்றன. சில நூல்கள் கருங்காலி மரம் முள்மரமாக இருப்பினும் அந்தணர்க்கு ஏற்றது என்று கூறுகிறது. இந்நூல் பல்வேறு மனையடி சாத்திரச் சுவடி நூல்களின் தொகுப்பு நூலாகையால் ஒன்றுக்கொன்று முரணான இரு செய்திகளும் பாடல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை பதிப்புரையிலும் கூறப்பட்டுள்ளன.

**சங்கு நடும் தளம்**

மனை எடுக்க தொடங்குமுன், சங்கினை நடுவதற்கு பூமியை மட்டமாக்கி, அந்தச் சமதரையில் எந்தக் கோலை அளப்பதற்குப் பயன்படுத்துகிறோமோ, அந்தக்கோலால் அளந்து, ஒரு கோல் அகலம், ஒரு கோள் நீள சதுரப் பரப்பளவில் சங்கினை நடவேண்டும்.

**சங்கு நடும் மாதம்**

ஆவணி, ஐப்பசி கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களில் மனிதர்களுக்கு சங்கு நாட்ட வேண்டும்; மற்ற ஒன்பது மாதங்களில் தேவர்களுக்கு சங்கு நாட்ட வேண்டும்.

**சங்கு நடும் நேரம்**

ஆவணி ஐப்பசி கார்த்திகை முதலான மாதங்களில் சுபமுகூர்த்த நாட்களில் சுபமுகூர்த்த நேரங்களில் மதிய வேளைகளில் சங்கு நட வேண்டும். மேலும் உத்தராயணத்தில் வாரம், இலக்கனம், நட்சத்திரம் இவைகளைத் திறமாகப் பார்த்து ஆகாயத்தில் களங்கம் இல்லாமல் சூரியன் விளங்கும்பொழுது நடவேண்டும்.

உத்தராயணத்திலும் தட்சணாயத்திலும் அவச்சாயலைக் கண்டு, அந்த மண்டலத்தில் வந்த புள்ளி இரண்டிலும் நூலை ஓட வாங்கி கிழக்கு மேற்கில் அறிய வேண்டும். இரண்டு புள்ளிகள் மீது கயல் மீனாக வீசி, மீனின் முகத்திலும் வாயிலும் கூடுதலை இரண்டிலும் வாங்கிக் கொள்ள வேண்டும். பின்னர் உத்தராயணத்திலும் தட்சணாயத்திலும் இரண்டு நூல்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும்,

### சங்கு வைக்க அவச்சாயல் அறிதல்

சங்கு வைக்க அவச்சாயல் அறிதல் வேண்டும். வைகாசி, புரட்டாசி ஆகிய இவ்விரண்டு மாதங்களுக்கும் அவச்சாயல் இல்லை. ஆவணி, சித்திரை, ஐப்பசி, ஆனி இந்த நான்கு மாதங்களுக்கும் இரண்டங்குலம் விலக்கம் ஆகும். ஆடி, கார்த்திகை, பங்குனி இந்த மூன்று மாதங்களுக்கும் நாலங்குலம் அவச்சாயல். தை மாதத்திற்கு எட்டங்குலம் அவச்சாயல் என்று கூறியுள்ளார்கள்.

### கருப்பப்பேழை

கருப்பப் பேழையைச் செய்ய குறிப்பிட்ட சில இடங்களில் கிடைக்கும் மண் தேவையாகும். நண்டு தோண்டிய மண், யானையின் தந்தத்தால் கீறிய மண், புற்றில் இருக்கும் மண், குளத்து மண், எருதின் கொம்பால் கீறிய மண் இவைகளைச் சேர்த்துச் செய்ய வேண்டும்.

கருப்பப்பேழையில் ஐந்து அறை, ஏழு அறை, ஒன்பது அறை, பதினைந்து அறை என்ற எண்ணிக்கையில் ஒரே அளவு இருக்குமாறு அந்த அறைகளைச் செய்து கொள்ள வேண்டும். அந்த அறையின் நடு அறையில் பொன்னும் விலையுயர்ந்த மணிகளும் இட்டுச் சுற்றிலும் இருக்கும் அறைகளில் பஞ்சலோகங்களையும் தானியங்களையும் இட்டு வைக்க வேண்டும்.

கருப்பப்பேழையில் ஒன்பது அறைகளை உண்டாக்கி ஒன்பது வகையான இரத்தினங்களையும் அதிலே போட்டு, அதற்கு பூசைகள், நெய்வேத்தியம், தீபதூபம் காட்டி, மனைக்கு ஈசானிய மூலையாகிய வடகிழக்கு மூலையில் வைக்க, அவ்வீட்டில் நிறைந்த வாழ்வும் செல்வமும் உண்டாகும். கருப்பப் பேழையில் விலையுயர்ந்த மணிகள், பொன், வெள்ளி முதலான உலோகங்கள், தானியங்கள், பவளம், கிழங்குகள், மருந்துப்பொருட்கள் முதலான வற்றை இட்டு வாஸ்துவிற்குப் படைக்க, மனையில் குடிபுகுவோர்க்கு அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்று கூறும் பாடலொன்றும் உள்ளது.

மனை கட்டுவதற்கு உரைத்த மாதம் மற்றும் அயனங்கள், வாரங்கள் போன்றவற்றில் நல்ல நாளைத் தேர்ந்தெடுத்து அவ்வூருக்குப் பொருந்தும் நல்ல இராசியில், கோள்களின்அமைப்பு சிறப்பாக இருக்கும் வேளையில் இரவு நேரத்தில் கருப்பத்தை அமைக்க வேண்டும்.

கருப்பத்தை பூமியில் அமைக்க சில அளவுகளை அளந்து பின் அமைக்க வேண்டும். மனையின் மையப் பகுதியை கண்டறிந்து, நீள அகலங்களின் ஒன்பது கூறுகளைக் கண்டறிய வேண்டும். மேற்கு நான்கு, கிழக்கு மூன்று, தெற்கு நான்கு, வடக்கு மூன்று கூறும் விட்டு நடுவே கருப்பம் செய்ய வேண்டும்.

**மனைக்குக் கருப்பதிக்க முகூர்த்தம்**

வாரங்களில் வெள்ளி, வியாழன், சனி, திங்கள், புதன் ஆகிய கிழமைகளும், இராசிகளில் சர இராசிகளும், நட்சத்திரங்களில் உத்திரம், உத்திராடம், திருவோணம், மகம், புனர்பூசம், சதயம், மிருகசீரிடம், உரோகணி, அனுஷம், இரேவதி ஆகிய நட்சத்திரங்களும் அஷ்டமியும், உவாவும், இருத்தையும் நீக்கி கருப்பதிக்க வேண்டும்.

**கருப்பதிக்கும் இராசிகளும் பலன்களும்**

பன்னிரு இராசிகளிலும் கருப்பதிக்க, அதற்கேற்ப பலன்கள் உண்டாகும்.

மேஷத்தில் பதித்தால், ஆயுள் குறைந்து போகும்
ரிஷபத்தில் பதித்தால், நோயுண்டாகும்
மிதுனத்தில் பதித்தால், துக்கம் உண்டாம்
கடகத்தில் பதித்தால், செல்வமும் புத்திர சம்பத்தும் உண்டு
கன்னியில் பதித்தால், நினைத்ததெல்லாம் கைகூடும்
துலாத்தில் பதித்தால், சிறப்பான வாழ்வுண்டு
விருச்சிகத்தில் பதித்தால், சிறப்பான வாழ்க்கை கிட்டும்
மீனத்தில் பதித்தால், நல்ல வாழ்க்கை அமையும்

என்று ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. சிம்மம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய இராசிகள் குறித்து இப்பாடலில் கூறப்படவில்லை.

இந்நூலின் மற்றொரு பாடலில் மாறுபட்ட கருத்துக்கள் அமைந்துள்ள அப்பாடலில்,

மேஷத்தில் பதித்தால், ஆயுள் குறைந்து போகும்
ரிஷபத்தில் பதித்தால், தீமையைத் தரும்
மிதுனத்தில் பதித்தால், மனையாள் துக்கம் உண்டாகும்
கற்கடகத்தில் பதித்தால், புத்திர சம்பத்து உண்டாகும்
சிம்மத்தில் பதித்தால், புத்திர சம்பத்து உண்டாகும்
துலாத்தில் பதித்தால், நீரின் காரணமாக நோயுண்டாகும்
விருச்சிகத்தில் பதித்தால், நீரின் காரணமாக நோயுண்டாகும்
மகரத்தில் பதித்தால், சுபமுண்டாகும்
கும்பத்தில் பதித்தால், சுபமுண்டாகும்
என்று கூறப்பட்டுள்ளது. கன்னி, தனுசு, ஆகிய இராசிகளின் பலன்கள் இப்பாடலில் கூறப்பட வில்லை.

**மனையில் குடிபுக ஏற்ற மாதங்கள்**

மாதங்களில் சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி ஆகிய எட்டு மாதங்களும் குடிபுக ஏற்ற மாதங்களாகும்.

**மனையில் குடிபுக ஏற்ற வாரங்கள்**

வாரங்களில் திங்கட்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகியவை குடிபுக ஏற்ற வாரங்களாகும். சனிக்கிழமையில் குடிபுக நன்று என்று ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

**மனையில் குடிபுக ஏற்ற நட்சத்திரங்கள்**

நட்சத்திரங்களில் அஸ்தம், சித்திரை, புனர்பூசம், அனுஷம், விசாகம், அசுபதி, உத்திரம், உத்திரட்டாதி, திருவோணம், இரேவதி ஆகிய நட்சத்திர நாட்கள் குடிபுக நல்ல நாட்களாகும்.

இவையன்றி, சுக்கிரனுக்குப் பின்னே மனையெடுக்க சுபம் உண்டாகும். சுக்கிரனுக்கு இடக்கண்ணாகில் மகா உத்தமம்.

மனையில் குடிபுகும்பொழுது வேதவொலி எழ, யாக பூசை செய்து, மங்கள ஒலிகள் முழங்க, நிறைந்த நெல் மணிகளை நாழியில் வைத்து விளக்கேற்றி, அலங்காரம் செய்து, அந்தணர், சிற்பன் ஆகியோருக்கு பொருள்களைக் கொடுத்துக் குடிபுக, நன்மைகள் கிட்டும்.

**மனையில் குடிபுக ஏற்ற வாரம்**

மனையில் குடிபுக ஏற்ற நாட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

1. ஞாயிற்றுக்கிழமையில் குடி புகுந்தால், செல்வம் பெருகும்
2. திங்கட்கிழமையில் குடிபுகுந்தால், செல்வம் பெருகும்
3. செவ்வாய்க்கிழமையில் குடி புகுந்தால், தீரா சண்டைகள் உண்டாகும்.
4. புதன்கிழமையில் குடிபுகுந்தால், அம்மனையிலும் இன்பமுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.
5. வியாழக்கிழமையில் குடிபுகுந்தால், செல்வம் பெருகும்
6. வெள்ளிக்கிழமையில் குடி புகுந்தால், அம்மனைக்கு உரியவரின் மனைவி, தீயநடத்தையை உடையவளாவாள்
7. சனிக்கிழமையில் குடிபுகுந்தால், அனைத்து நன்மைகளும் கிடைக்கும்.

**மனைக்குப் புகும்போது செய்யவேண்டியவை**

மனையில் குடிபுகும்பொழுது, வேதவொலி எழ, யாக பூசை செய்து, மங்கள ஒலிகள் முழங்க, நிறைந்த நெல்மணிகளை நாழியில் வைத்து விளக்கேற்றி, அலங்காரம் செய்து, அந்தணர், சிற்பன் ஆகியோருக்கு நல்ல பொருள்களைக் கொடுத்துத் திருமகளை மனதில் நினைத்து வணங்கி மனைக்குள்ளே புகுதல் நன்மையைத் தரும்.

**மனையில் குடிபுக ஆகாத மாதங்கள்**

மூலை மாதங்களாகிய பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி ஆகிய நான்கு மாதங்களும் ஆடி மாதமும் மனையில் குடிபுக ஆகாத மாதங்களாகும் அ[illegible]னைக் கருத்தில் கொள்ளாது

குடிபுகுந்தால், மனைக்குரியவனுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் நோய்கள் தோன்றி, துன்பங்களை விளைவிக்கும். அழிவு நேரிடும். வேறு நாட்டிற்குச் சென்று குடியேறி வாழ்ந்தாலும், பிச்சையெடுத்து உண்ண நேரிடும்.

ஆடி மாதத்தில் இராவணன் போரில் இறந்து போனான்; மார்கழி மாதத்தில் மகாபாரதப் போர் நடந்து பெரும் அழிவு ஏற்பட்டது; புரட்டாசி மாதத்தில் இரணியன் இறந்து போனான்; பங்குனி மாதத்தில் பிரமன் தன் மகுடத்தை இழந்தான். ஆதலால், இந்த மாதங்கள் குடிபுக ஏற்றவையல்ல.

**மனையில் குடிபுக ஆகாத இராசிகள்**

துலாத்திலும் விருச்சிகத்திலும் தென்திசையில் குடிபுகுந்தால், மனைக்குரியவனின் செல்வங்கள் பாழாகும். மகரத்திலும் கும்பத்திலும் மேற்குத்திசையில் குடிபுகுந்தால் அம்மனை நாசமாகும். மேலும், அந்த மனைக்குரியவன் மரணமடைந்து அந்தக் குடும்பம் சிதறிப்போகும். சூரியன் திசையாகிய கிழக்கில் கடகத்திலும் சிங்கத்திலும் குடிபுகுந்தால், வீடு பாழாகும்.

**மனையில் குடிபுக ஆகாத வாரங்கள்**

ஞாயிற்றுக்கிழமையிலும் செவ்வாய்க் கிழமையிலும் குடிபுக துன்பம் உண்டாகும். சனிக்கிழமையில் குடிபுக அழிவைத் தரும். மனைக்குரியவன் பிறந்த நாளுக்கு முன்னும் பின்னும் உள்ள நாட்களிலும் குறையுடைய நாட்களிலும் பாவ நாட்களிலும் மனையில் குடிபுக கேடுண்டாகும்.

**மனையில் குடிபுக ஆகாத திதிகள்**

திதிகளில் சதுர்த்தி, உவா, இருத்தை ஆகிய திதிகள் மனைபுக ஆகாதவை. இத்திதிகளை நீக்கி குடிபுக வேண்டும்.

மேற்கூறிய மாதம், இராசிகள், வாரங்கள், திதிகள் ஆகியவற்றைத் தவிர விட்டி, விஷகடிகை, வெள்ளி எதிர்தல், மூடம், பாடு, வெள்ளி, வலக்கண், சூலம் நேரே இருக்கக் குடிபுக நஷ்டம் உண்டாகும்.

**முகூர்த்தக்கால் நாட்டுதல்**

மூகூர்த்தக்கால் நாட்டுவதற்குத் தக்க சமயங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்ய நன்மையாகும். சந்திரன் உதிக்க ஸ்தம்பம் முதலியவை நாட்டிப் புதனுதிக்கப் பரப்புப் பூட்டி, சுக்கிரன் உதிக்க தளம் அல்லது ஓடு வேய்ந்து, குரு உதிக்க கிரகப் பிரவேசம் செய்தால் மிகுந்த செல்வத்துடன் வாழ்வார்கள்.

**முகூர்த்தக்காலின் உயரம்**

கோவிலுக்கு முன்னால் மனையெடுக்க முகூர்த்தக்கால் நடும்பொழுது, கோயிலுக்கு முக்கால் அல்லது பாதி அளவு இருக்கும் வண்ணம் நடவேண்டும். அரசனுடைய மனைக்குச் சமமாக முகூர்த்தக்காலை நாட்டினாலும் வீட்டினைக் கட்டினாலும் குற்றமாகும். ஊர் அழிந்து போகும்.

**முகூர்த்தக்கால் நடும்போது செய்யவேண்டியவை**

மூகூர்த்தக்காலை மனைக்குத் தென்மேற்கு மூலையில் நடவேண்டும். நடுவதற்கு முன்னால், முகூர்த்தக்காலைப் பால், நெய் முதலானவற்றில் நனைத்துக்கொள்ள வேண்டும். நடுவதற்காகத் தோண்டியுள்ள குழியில் அணி, இரத்தின மணிகள் முதலானவற்றைப் போட்டு, பால், நீர் இவற்றை விட்டு, விநாயகருக்குப் பூசை செய்து, பின்னர் முகூர்த்தக்காலை நடவேண்டும்.

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

மனைக்கு முகூர்த்தம் செய்து தேங்காய் உடைக்கும்பொழுது, முடி பருத்து அடி சிறுத்துக் காணப்பட்டால் செல்வம் சேரும். மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலுமானால் சந்தோஷம் உண்டாகும். ஐந்து பங்கு சிரசு, மூன்று பங்கு பாதத்திலுமானாலும் ஐந்து பங்கு சிரசு இரண்டு பங்கு பாதத்திலுமானாலும், செல்வம் உண்டாகும். நரம்பு பிடித்தால், மனைக்குரியவன் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவான். கடுகளவு சிதழ் உள்ளே

விழுந்தால், ஒன்பது வகையான இரத்தினங்களும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும். நடுவே பிளந்தால், மிகுந்த துயரம் உண்டாகும். நடு மத்தியில் உடைந்தால் நன்மை. நான்கு, ஆறு சுக்கல்களாய் உடைந்தால், மிகுந்த துன்பம் உண்டாகும். உடலில் தேங்காய்ச் சில் தெறித்தால், அந்த மனைக்கு உரியவன் இறந்து போவான். ஓடு விட்டால், உணவு கிடைக்காது, ஓடு தெறித்தால் உடலில் நோய் உண்டாகும். பூமியில் விழுந்தால் , அம்மனைக்கு உரியவன் வீடு வாசலை விற்று துக்கமடைவான். செல்வம் அம்மனையை விட்டுச் சென்றுவிடும். அம்மனைக்கு உரியவனின் மனைவி மரணமடைவாள்.

தேங்காய் பலவாறாகச் சிதறிவிட்டால், மனைக்கு உரியவனின் மனைவிக்குத் தீங்கு உண்டாகும். உள்ளே ஒன்றும் இல்லாது ஓடாக இருந்தால் அம்மனைக்கு உரியவனின் வாழ்வு பாழாகிவிடும். தேங்காயின் கண் உள்ள பகுதி உடைந்து போனால் ஆயுள் குறையும். தேங்காய் அழுகலாக இருந்தால், அம்மனையைக் கட்டினால் தீமையாகும்.

மூடி சரிபாதியாக உடைந்தால் செல்வம் சேரும். கொப்பறையாகக் கழன்றுவரின் நன்மையாகும். மேலும், தேங்காயில் குருத்து விட்டிருந்தால், நன்மையாகும். தேங்காயில் துளையிட்டுச்சென்று எறும்புகள் இருக்குமானால், உயிர்ச்சேதம் உண்டாகும். இவ்வாறு தேங்காய் உடைக்கும் பலன்கள் நூலின் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

**கிணறு தோண்டும் பலன்கள்**

கிணறு எடுக்கும் பகுதிக்கு உரிய மனையைப் பதினாறு பாகம் செய்து இடைப்பகுதியாக உள்ள நான்கு பாகங்களைப் பிரமஸ்தானமாகக் கொள்ள வேண்டும். மற்ற பன்னிரண்டு பாகங்களையும் பன்னிரண்டு இராசிகளாகக் கொள்ள வேண்டும். வடமேற்குப் பாகத்தை மேட இராசியாக வைத்து

வலம் இடமாகப் பன்னிரண்டு இராசிகளையும் அமைத்து அந்தந்த இராசிகள் அமையும் இடத்திற்கேற்ப பலனை அறிதல் வேண்டும். அதன்படி மனையின்,

1. மேஷ இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் கற்பாறையாக இருக்கும்
2. ரிஷப ,, ,, ,, ,, தண்ணீர் கிடைக்கும்
3. மிதுனம் ,, ,, ,, ,, உப்புநீர் கிடைக்கும்
4. கடக ,, ,, ,, ,, மிகுதியாகத் தண்ணீர் கிடைக்கும்
5. சிம்ம ,, ,, ,, ,, கற்பாறை வரும்
6. கன்னி ,, ,, ,, ,, பெருமளவு நீர் கிடைக்கும்
7. துலாம் ,, ,, ,, ,, புற்று இருக்கும்
8. விருச்சிக ,, ,, ,, ,, பழங்கிணறுதோன்றும்
9. தனுசு ,, ,, ,, ,, வெள்ளம் வரும்
10. மகர ,, ,, ,, ,, இடிகரை காணும்
11. கும்ப ,, ,, ,, ,, குடலைக்கல் காணும்
12. மீன ,, ,, ,, ,, கல்லும் தண்ணீரும் கிடைக்கும்

## கிணறு தோண்டும் திசைகளின் பலன்கள்

சந்திரன் எழுகின்ற மேகங்களையுடைய வருண திசையாகிய மேற்குத் திசையில் கிணறு எடுக்க மிகுந்த நன்மைகள் உண்டாகும். மனைக்குக் கிழக்கு, தென்கிழக்கு தெற்கு, தென்மேற்கு ஆகிய திசைகளிலும் மனைக்கு நடுவாகிய பிரமன் திசையாகிய பிரம ஸ்தானத்திலும் கிணறு வெட்ட மனைக்குரியவனின் உற்றார் உறவினர்களும் புத்திரர்களும் அழிவதோடு, அவனுடைய செல்வத்தையும் இழந்து, பிறரிடம் இரந்து உண்ண நேரிடும்.

மனையில் கிணறு தோண்டும்பொழுது, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் கிணறு தோண்ட,

நன்மைகள் வளரும்; மேற்கில் கிணறு எடுத்தால், இன்பம் மிகுதியாகும்; வடமேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவரின் புத்திரருக்கு மரணம் நேரிடும்; தென்மேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவருக்கு நோயுண்டாகும்; தெற்குத் திசையில் கிணறு எடுக்க, மனைக்குரியவனுக்குப் பிள்ளைப்பேறு கிட்டாது; மனையின் நடுவாகிய பிரம ஸ்தானத்தில் கிணறு எடுக்க, பொருட்சேதம் உண்டாகும்.

**மனையில் குளம் வெட்டும் திசையின் பலன்கள்**

மனையின் தென்கிழக்குத் திசையில் குளம் வெட்டினால், அம்மனைக்குரியவனின் மனைவி இறப்பதோடு, செல்வமும் கையைவிட்டுப் போகும்; தென்திசையான எமன் திசையில் குளம் வெட்டினால், செல்வம் நீங்கி வறுமை உண்டாகும்; மேற்குத்திசையில் குளம் வெட்டினால், செல்வம் வந்து சேரும்; வடமேற்குத் திசையான வாயு திசையில் குளம் வெட்டினால் தீமை உண்டாகும்.

மனையின் கிழக்கு திசையிலும் மேற்குத் திசையிலும் குளம் வெட்டினால், செல்வமும் கல்வி விருத்தியும் உண்டாகும். ஈசன் திசையான வடகிழக்குத் திசையில் குளம் வெட்டினால், பலவகையான பாக்கியங்களும் கிட்டும்; தென்மேற்கு மூலையான நிருதி திசையில் குளம் வெட்டினால் மனைக்கு உரியவனுக்கு மிகுதியான நோய்களும் வறுமையும் உண்டாகும்.

மனைக்கு தெற்கிலும் கிழக்கிலும் தென்கிழக்கிலும் குளம் வெட்டினால் வீட்டிற்கு ஆகாது. தென்மேற்கிலும், மேற்கிலும், வடகிழக்கிலும் குளம் வெட்டினால், அம்மனைக்குரியவனுக்கு நிறைவான வாழ்க்கையும் நன்மைகளும் உண்டாகும்.

## இராசிகளில் குளம் அமைக்கப்பலன்

மனையின் ரிஷப இராசி, துலாம் இராசி, கன்னி இராசி, சிம்ம இராசி, விருச்சிக இராசி, கும்ப இராசி, முதலான இராசிப் பகுதிகளில் குளம் அமைக்க, மனையில் வாழ்பவர்கள், சிறப்புற்று விளங்குவர். மேஷ இராசி, மிதுன இராசி, கடக இராசி, தனுசு இராசி, மகர இராசி மீன இராசி முதலானவற்றில் குளம் அமைக்க, மனைக்குரியவனுக்கும் அவன் சுற்றத்தாருக்கும் கேடு விளைந்து, மனையும் பாழாகும். கட்டிய வீட்டின் முன்புறத்தில் தென்திசையில்லே குளம் இருப்பின் மனைக்குரியவனுக்கு நன்மையாகும். வீட்டிற்குப் பின்னே குளம் இருந்தால், மனைக்குரியவனுக்கு நோய்களும் துன்பங்களும் வந்து சேர்ந்து வருத்தத்தைத் தரும்.

## வீடுகட்ட ஆகாத இடங்கள்

வீடு கட்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அவற்றிற்கு அருகில், எதிரில், பக்கங்களில் உள்ள இடங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது நம் முன்னோர்களின் எண்ணம். தங்கள் அனுபவங்களை மனதில் கொண்டு, மனைகோல ஆகாத இடங்களை எடுத்துரைத்துள்ளனர்.

தண்ணீர்துறைக்கு எதிரிலும், தேர் ஓடுகின்றே வீதி முச்சந்தி இவற்றுக்கு எதிரிலும், அரசரின் கோட்டைக்கு எதிரிலும், ஊர் சுடுகாட்டுக்கு எதிரிலும் தெருச்சாயலின் முன்னரும், புகைத்தலையுடைய செங்கல் சூளைக்கு எதிரிலும் மனையெடுக்க, கட்டிய வீடு பாழாகும். எனவே அந்த இடங்களில் மனைகோலக்கூடாது.

மனைக்கு மத்தியில் புற்றும் பாறையும் இத்தி மரமும் ஆலமரமும் அரசமரமும் எட்டி மரமும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் மனையில் வீடு கட்டக்கூடாது. இவற்றோடு மா, பலா, புன்னை, பாதிரி, வேம்பு, கொய்யா, கொழுமிச்சை, எலுமிச்சை, நாவல் முதலான மரங்கள் சேர்ந்து

இருந்தாலும், அந்நிலத்தில் வீடுகட்டக்கூடாது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும்; அந்த மனையும் பாழாகும்.

ஆலயத்திற்குப் பக்கங்களில் உள்ள இடங்களிலும் எதிரில் உள்ள இடங்களிலும் பிசாசுகள் இருக்கும் இடங்களிலும் காளிகோயிலின் அருகிலுள்ள இடங்களிலும், ஐயன் கோயிலுக்கு அருகிலுள்ள இடத்திலும், சாலையில் உள்ள இடத்திலும், மனைகோலக்கூடாது.

பாழடைந்த கோயில், பாம்பிருக்கும் புத்துகள், மலஜலம் கழிக்குமிடங்கள், ............... செம்மன் குடிசை, முனிகள் நிலை நிற்குமிடங்கள், சுடுகாடு, போர்க்களம் ஆகிய இடங்களிலும் மனைகோலக்கூடாது. அவ்வாறு கட்ட, அந்த வீடு காடாகிவிடும்.

வட்டம், முக்கோணம், ஆமை, சுளகு, ஒடுக்கு, ஈட்டி, சூலம், குளம் போன்ற வடிவுடைய நிலங்களில் வீடுகட்டலாகாது. வீதிகளின் கோடியிலும் இராச வீதியிலும் வீடுகட்டக்கூடாது. வேர்கள் ஓடியிருக்கும் நிலங்களில் வீடுகளைக் கட்டக்கூடாது.

முகடுகள், மண்டபங்கள், நந்தவனம், வேதங்களைக் கற்றுத்தரும் பாடசாலைகள், சந்துகள், முடுக்கு, கோடி, மறையவர் வீடுகள், புற்றுகள், குளங்கள், கிணறுகள் இவற்றிற்கு அருகில் வீடுகளைக் கட்டக்கூடாது.

**மனைக்கு ஆகாதவை - குத்தல்கள்**

1) வாசற்படியில் கோடி குத்தல், முற்றம் நடுவில் சுவர், மிகுதியான கம்பங்கள், உயரம் அதிகமான கம்பங்கள், நீண்ட உத்தரம், உயர்ந்த மெத்தை படிகள் போன்றவை இயல்பான அளவுகளில் இருந்து மாறுபாடுடையனவாக இருந்தால், அனைத்துத் துயரங்களும் மனைக்குரியவனுக்கு [illegible]

2) நடுவீட்டில் கம்பம் இருந்தாலும், நடுவீட்டில் வாசல் இருந்தாலும் இரட்டைச் சுவர் இருந்தாலும், ஏத்துங்கை ஒற்றையாக இருப்பினும், வளை தாழ்ந்து இருந்தாலும், முந்துகை ஏறி இருந்தாலும், அந்த வீட்டிற்கு உரியவன் மரணமடைவான்.

3) தேர் ஓடுகின்ற வீதி, ஒழுங்கு தவறி இருக்க அல்லது சாலை பொருத்தம், அகலம், உச்ச அளவு இவைகள் குறைவுபட்டாலும், நீண்டும் அகன்றும் ஒன்றுக்கொன்று முறைவழுவி மாறுபடுமாகிலும், அந்த ஊரிலும் மனையிலும் குடிபுகக்கூடாது.

4) வாசல் படிதனில் வாரகை இருப்பினும், கோடி குத்தல் இருப்பினும், முற்றத்தின் நடுவில் சுவருடன் நிலையிருப்பினும், கம்பங்கள், உத்திரம், மாடிகள் இவை மாறி இருந்தாலும், அம்மனைக்கு உரியவனுக்குத் துன்பங்கள் வந்து சேரும்.

## வீடுகட்ட ஆகாத பாய்ச்சல்கள்

வீடு கட்ட இடங்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது பாய்ச்சலைக் காண வேண்டும். பாய்ச்சல் இருப்பின், அவ்விடங்களில் வீடுகட்டக்கூடாது. கோவிற் பாய்ச்சல், வீட்டுப் பாய்ச்சல், வயலிற் பாய்ச்சல், சந்திப் பாய்ச்சல் ஆகியவை இருந்தால் வீடுகட்டக்கூடாது. ஆனால் நூறு அடிக்கு மேல் இடைவெளி இருந்தால் கட்டலாம்.

கோடிப்பாய்ச்சல், கட்டைப் பாய்ச்சல் முதலானவை வீடுகளுக்கு ஆகாது. அவ்வாறு பாய்ந்தால், வீட்டிலுள்ள பொன்னும் பொருளும் கையைவிட்டுப் போகும்; கட்டிய மனையும் பாழாகும். கோடிப்பாய்ச்சல் மனைக்கு இருக்குமானால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். குறுக்குப் பாய்ச்சலாக இருக்குமானால், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும்; வீட்டிற்கு எதிரில் சாலைக்குத்தலானால், வீட்டில் அனைவருக்கும் நோய் உண்டாகும்.

கோயில் குத்தல், பிரகாரக்குத்தல், தீபக்குத்தல், வேலிக்குத்தல் ஆகியவை இருப்பின், வீட்டிற்குத் தீமை விளையும். சந்துக்குத்தல், குளத்துக் குத்தல், கட்டைக் குத்தல், நிரப்புக்குத்தல், மேட்டுக்குத்தல், கிணற்றுக்குத்தல் போன்றவை வீட்டிற்குத் தீமையை அளிப்பனவாகும். அவ்வாறு இருப்பின், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும்.

**குத்தல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்**

தேவர்களுக்குரிய ஆலயங்களுக்கும் பிர்மாவின் ஆலயங்களுக்கும் சிவனுடைய ஆலயங்களுக்கும் விஷ்ணுவினுடைய ஆலயங்களுக்கும் வீட்டிற்கும் இடையே நூறடி சந்து இருந்தால் கோயில் குத்தல் இல்லை. குளங்களுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குளக்குத்தல் இல்லை; வீட்டிற்கும் துரவு, கிணறு போன்றவற்றிற்கும் இடையே முப்பதடி சந்து இருப்பின், கிணறு குத்தல் இல்லை; வீட்டிற்கும் அரண்மனைக்கும் இடையே பதினைந்தடி சந்து இருப்பின், குத்தல் இல்லை; மண்டபங்கள், சத்திரங்கள், தொட்டிகள் இவற்றுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குத்தல் இல்லை.

வீட்டிலிருந்து வீதியானது நாற்பதடி தூரத்தில் இருப்பின், வீதி குத்தல் இல்லை; வீடு குடிபுகும்போது, பிணங்கள் நேர்படச் சென்றால், தோஷங்கள் இல்லை, மண்டபம், குளம், மாளிகை, சத்திரம், விலாவு, வீதிகள், மச்சு, மதிள் போன்ற குத்தல்கள் வீட்டிற்கு இருந்து, சந்துகள் இருப்பின் குத்தல்கள் இல்லையென்று கூறியுள்ளார்கள்.

கிணறு நீர்மட்டம் வரையிலான நிலத்தில் கிணற்றுக்குக் கிழக்கு, மேற்குத் திசைகளில் வீடுகட்டக்கூடாது. ஆனால் கிணற்றுக்கும் மனைக்கும் நடுவில் தெரு, வீடு, கிணறு, ஆலயம் ஆகியவற்றிற்கு இடையே தெரு இருக்குமானால், குத்தல்கள் இல்லை.

**மனைக்கு ஆகாத செயல்கள்**

மனையெடுக்கும்போது முளைபறித்தல், கயறு அறுத்தல், விட்ட வாசலை அடைந்து வேறு வாசல் விடுதல், நட்ட கம்பத்தைப் பிடுங்கி நடுதல், மரமிசைந்து ஆணி போடுதல் முதலான செயல்களைச் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும்; மனைக்குரியவனும் மரணமடைவான். மற்றொரு பாடலில் மனைக்குரியன் தன் அழகினை இழப்பான்; மன்னரின் கோபத்திற்கு ஆளாவான்; கலகம் நேரிடும்; கைப்பொருளும் கையை விட்டுப் போகும் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்குத் திசை, தெற்குத்திசை ஆகியவை பார்த்து கட்டியுள்ள வீட்டைப் பெயர்த்துக் கட்ட குற்றம் உண்டாகும். எடுப்பு, சாய்ப்பு, முருக்கு, கோடி, மறுபாடி, மூலை வாங்கியிருந்தால் ஆகாது. அவ்வாறு கட்டினால், மனையில் உள்ளவர்கள் நோயால் வருந்துவார்கள்; பொருள்கள் களவு போகும்; மனைவிக்கு மரணம் நேரிடும்; கொடுமையான பகைவர் தோன்றி வருத்துவர். வீட்டை இடித்துக் கட்டும் பொழுது மேற்குத் திசையில் மீண்டும் கட்ட, மனையில் உள்ளவர்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாகும்.

ஊருக்கு தென்கிழக்குத் திசையில், வடமேற்குத் திசையில், பிரமதானத்தில் வீடுகட்டக்கூடாது. வீட்டு வாசலுடன் கோயில் சேர்ந்து இருப்பின், அம்மனைக்கு உரியவனுக்குச் செல்வம் கையை விட்டுப் போகும்; அந்த ஊர் பாழாகும்; மனைக்குரியவனின் தாய்க்கு நோய்கள் மிகும்; மனைக்குரியவன் துன்பம் மிகுதியாகி, ஊரைவிட்டே செல்லுவான்.

### மனைகோல ஆகாத நட்சத்திரங்கள் காலற்ற, உடலற்ற, தலையற்ற நட்சத்திரங்கள்

நட்சத்திரங்களில் கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய மூன்றும் **காலற்ற நாட்களாகும்.** மிருகசீரிடம், அவிட்டம், சித்திரை ஆகிய மூன்றும் **உடலற்ற நாட்களாகும்.** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய மூன்றும் **தலையற்ற நாட்களாகும்.** இந்நாட்களில் மங்கலமான காரியங்களை விலக்க வேண்டும்.

இந்தக் காலற்ற, உடலற்ற, தலையற்ற நட்சத்திரங்களில் மனை, மாளிகை கோல அவை அழிந்து போகும். நிலையும் வைக்கக்கூடாது. எனவே, இந்நாட்களில் மனையைக் கோலக்கூடாது.

### எரிகின்ற நட்சத்திரங்கள்

ஞாயிற்றுக்கிழமையில் மக நட்சத்திரம் இருப்பினும், திங்கட்கிழமையில் விசாக நட்சத்திரம் இருப்பினும், செவ்வாய்க்கிழமையில் திருவாதிரை நட்சத்திரம் இருப்பினும், புதன் கிழமையில் ஆயிலிய நட்சத்திரம் இருப்பினும், வியாழக்கிழமையில் சதய நட்சத்திரம் இருப்பினும் வெள்ளிக்கிழமையில் உரோகனி நட்சத்திரம் இருப்பினும், சனிக்கிழமையில் பூராட நட்சத்திரம் இருப்பினும் அவை எரிகின்ற நட்சத்திரங்களாகும். இந்நாட்களில் மாடகூடம், மனையெடுத்தல் போன்றவை செய்யக்கூடாது.

### பிறந்தநாள் வாரம்கூடில் மனையெடுக்க ஆகாத நாட்கள்

பிறந்த நாளான ஞாயிற்றுக்கிழமையும் பரணி நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், திங்கட்கிழமையும் சித்திரை நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், செவ்வாய்க்கிழமையும் உத்திராட நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும் வியாழக்கிழமையும் கேட்டை நட்சத்திரமும் ஒன்று

கூடும் நாளிலும், வெள்ளிக்கிழமையும் பூராட நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், சனிக்கிழமையும் இரேவதி நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும் மனையெடுக்க, அம்மனை பாழாகும்.

## திதியும் நாளும் கூடில் மனையெடுக்க ஆகாத நாட்கள்

பஞ்சமி திதியும் மக நட்சத்திரமும் ஒன்றுகூடும் நாளிலும், திருதிகையும் அனுஷ நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், நவமியும் கார்த்திகை நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், அஷ்டமியும் உரோகணி நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும், சதுர்த்தியும் உத்தர நட்சத்திரமும் ஒன்று கூடும் நாளிலும் மனைகோலில், அந்த ஆண்டு முடிவதற்குள் மனைக்குடையவர் மரணமடைவார்.

பரிவேடமும், கொடிய நாட்களாகிய ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களும், மந்தாரம், மழை முறிதல், கிராணம் முதலான நாட்களும் பொல்லாத நாட்களாகும். விட்டி, கரணம், விஷக்கடிகை, அட்டமி, அமாவாசை, பூரணை, இருத்தை இவை வராமல் நீக்கி, நல்ல வாரத்திலே முகூர்த்தம் இடவேண்டும். சதுர்த்தி, சதுர்தசி ஆகியவற்றையும் நீக்க வேண்டும் என்று ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

## சல்லியம் ஆருட முறையில் காணுதல்

பூமியைத் தோண்டிப் பார்த்து அதனுள் காணும் பொருட்களைக் கொண்டு நன்மை தீமைகளைக் கணக்கிடுவதைத் தவிர, மற்றொரு முறையிலும் கணக்கிட்டு அறிந்துள்ளார்கள். யாரேனும் ஒருவன் 'கிரக சல்லியம்' வந்து கேட்டால் அடியளந்து, அவச்சாயை, பாதச்சாயைகள், நின்ற அடியுடனே இருபத்தெட்டு கூட்டி, பதினாறில் வகுக்க,

ஒன்று மீதியாக வந்தால், தலையோடு;
இரண்டு மீதியாக வந்தால், எலும்பு;

மூன்று மீதியாக வந்தால் விட்டிகை;
நான்கு மீதியாக வந்தால், ஓடு;
ஐந்து மீதியாக வந்தால் விறகு;
ஆறு மீதியாக வந்தால் தெய்வம்;
ஏழு மீதியாக வந்தால், சாம்பல்;
எட்டு மீதியாக வந்தால் கரி;
ஒன்பது மீதியாக வந்தால், சவம்;
பத்து மீதியாக வந்தால் தானியம்;
பதினொன்று மீதியாக வந்தால் பொன்;
பன்னிரண்டு மீதியாக வந்தால் கருங்கல்;
பதிமூன்று மீதியாக வந்தால் தவளை;
பதிநான்கு மீதியாக வந்தால், பசுவின் கொம்பு;
பதினைந்து மீதியாக வந்தால், நாயெலும்பு;
பதினாறு மீதியாக வந்தால் மதமதக்காசால்;

என்று கணக்கிட்டுள்ளனர். இருபத்தெட்டைக் கூட்டிய பின்னர் பன்னிரண்டால் பெருக்கி, அதற்குப் பிறகு பதினாறால் வகுக்க வேண்டும் என்று மற்றொரு பாடலில் காணப்படுகிறது.

ஆருட முறையின்படி சல்லியம் கூறும் முறையும் அக்காலத்தில் இருந்துள்ளது. உதய ஆருட இராசியில் சந்திரன் நின்ற இராசி உடல் இராசி, உதயாருட இராசி உயிர் இராசி. ஒருவர் சல்லியம் கேட்கவரும்பொழுது அவரை ஒரு இராசியைத் தொடச்சொல்லி, அந்த இராசிக்குச் சனி, சூரியன், செவ்வாய், இராகு, நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம், ஆகியவற்றில் அமரபட்சத்துச் சந்திரன் இருந்தால், பட்டமரமும், பானை ஓடும், எலும்பும் சாம்பலும் பூமிக்குள் இருக்கின்றன என்று சொல்ல வேண்டும்.

ஆருட இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால், நன்மை. பதினோராமிடம், ஏழாமிடம், இரண்டாமிடம்,

மூன்றாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால், அம்மனையில் சல்லியங்கள் இருக்குமென்று சொல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால், மனைக்கு உரியவனுக்குப் பல நோய்கள் தோன்றும்.

பத்தாமிடத்தில் கோள்கள் நின்றால் அந்த மனையில் கல், எலும்பு, இரும்பு, தரா, கட்டை, ஈயம், பித்தளை இவைகளில் ஒன்று இருக்கென்று சொல்லவேண்டும். அவ்வாறு இருந்தால் மனைக்குரியவர்களின் செல்வம் போகும் அந்த வீடும் நாசமாகும்.

உயிரெனப்பட்டது ஆருட இலக்கனம் உடல் எனப்பட்டது உதய இலக்கனம். இதற்கு இரண்டாம் இடத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் மயிர், நகம் முதலானவை இருக்குமென்று செல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும். தைரியமும் பலமும் குறையும். செல்வம் அழிந்து போகும். உதய ஆருடத்திற்கு ஐந்தாமிடத்தில் கோள்கள் நின்று, அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திர ஸ்தானங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கல், மரம், கட்டை, எலும்பு முதலானவை இருக்குமென்று சொல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால், மனைக்கு உரியவனின் குலம் அழிந்துபோகும்.

உதய இராசிக்கு ஏழாமிடத்தில் எந்தக் கோள் இருந்தாலும் அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கரி, உமி, எலும்பு முதலியன இருக்கும் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால், அந்த மனைக்கு உரியவனின் மனைவி தீமை செய்பவளாக இருப்பாள். மனைக்கு உரியவனுக்கு நோய்கள் வருவதோடு, துன்பங்கள் மிகுதியாகும். குணம் கெடும்.

உதய இலக்கனத்தில் கிரகங்கள் நின்று அதன் கேந்திரங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாடியும்

எலும்பும் இருக்குமென்று சொல்லவேண்டும். அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனின் மனைவி மரணமடைவாள். குலம் நாசமாகும் என்று சொல்ல வேண்டும்.

உதயாருட இராசிக்குக் கேந்திரத் தானங்களாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாம்பல், எலும்பு முதலியன இருக்கும் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால், மனைக்கு உரியவனுக்குச் சோம்பல் மிகுதியாக இருக்கும்; பாம்பினால் அச்சம் உண்டாகும்; மனைவியால் விரோதமும் பொருள் சேதமும் உண்டாகும்.

ஆருட இராசிகளில் உதயத்தில் இராகு நின்று, நாலு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் சனி, சந்திரன் ஆகிய இரண்டு கோள்களும் நின்றால், கரி, ஓடு, எலும்பு முதலானவை அம்மனையில் இருக்கும் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு இருந்தால் நன்மை இல்லை. இரண்டாமிடம், மூன்றாமிடங்களில் சூரியனும் இருக்கின்றது என அறிந்து, அதனை எடுக்க வேண்டும்.

சுக்கிரனுக்கு எதிரில் புதனும் சனியும் சூரியனும் வக்கிரமில்லாமல் இருந்தாலும், சூரியனுக்கு ஆறில் சனி இருக்க, அந்தப் பூமியில் செல்வம் கிடைக்கும். அவ்வாறு கிடைக்காவிட்டால், வெள்ளியாவது கிடைக்கும், சந்திரனுக்கு நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றிலொன்றில் குரு, புதன் ஆகிய கோள்கள் ஒன்று கூடி நின்று, அதற்கு மூன்று, ஆறு, எட்டில் சூரியன் இருந்தால், மனையைத் தோண்டிப் பார்க்க, புதையல் கிடைக்கும் என்று சொல்ல வேண்டும்.

தனங்கள் சூனியம், கரி, எலும்பு இவைகளை எடுக்க வேண்டும் என்றால், அவ்விடத்தை இருபத்தெட்டு பாகம் செய்து, சந்திரன் எந்த வீட்டில் இருப்பானோ அந்த இடத்தில் இருக்கும் என்று சொல்லவேண்டும். இருக்கின்ற பொருள் சூனியமெடுக்கவென்றால், கறுப்பன், இருளன், காட்டேரி;

காளி, துர்க்கை, வயிரவன் ஆகிய காவல் தெய்வங்களின் காவலை விலக்க வேண்டும். அதற்குத் தீப தூப நைவேத்தியத்தோடு, விநாயகக் கடவுளை பக்தியோடு வணங்க வேண்டும். அதற்குப் பூமியைச் சதுரமாக மெழுகிக் கும்பம் ஸ்தாபித்து ஓமாதியக்கிய செபம் செய்து நாற்சதுரமாகக் கீறிக்கொள்ளவேண்டும். எட்டுத் திசைகளிலும் சுற்றி நூலாணிகொண்டு செபதப மந்திர சித்தியுடன் ஆணிகொண்டு பலிகொடுத்துச் சோதனை செய்தால், பொருள் கிடைக்கும். பொருள் வரவைக் காண வேண்டுமானால், குமரன் பூசை, அனுமன் பூசை, சனி பூசை செய்து அந்த இடத்தில் சோதித்தால், குறித்த பொருள் கண்ணில் துலக்கமாகத் தெரியும்.

**மனையின் சுவர் வெடிப்பின் பலன்கள்**

வீட்டின் சுவர்களில் பல்வேறு காரணங்களால் வெடிப்புகள் உண்டாகலாம். அவ்வாறு வெடிப்புகள் ஏற்பட்டால், அந்த வெடிப்பு ஏற்படும் திசையைக் கண்டு, அதன் பலனை அறிய வேண்டும். வீட்டின்,

| | | | | |
|---|---|---|---|---|
| கிழக்குப் | பாகத்தில் | வெடிப்பு | ஏற்பட்டால், | அழிவு உண்டாகும் |
| தென்கிழக்கு | ,, | ,, | ,, | துன்பம் நேரிடும் |
| தெற்கு | ,, | ,, | ,, | அழகு போகும் |
| தென்மேற்கு | ,, | ,, | ,, | சுகம் உண்டாகும் |
| மேற்கு | ,, | ,, | ,, | ஆக்கம் ஏற்படும் |
| வடமேற்கு | ,, | ,, | ,, | மரணம் நிகழும் |
| வடக்கு | ,, | ,, | ,, | இலாபம் கிட்டும் |
| வடகிழக்கு | ,, | ,, | ,, | அழிவு உண்டாகும் |

கிழக்கு, வடகிழக்குத் திசைகளில் சுவரில் விரிசல் ஏற்பட்டால், நன்மையுண்டாகும் என்று ஒரு பாடலில் கூறப்பட்டிருப்பது சுட்டத்தக்கது.

**மனையில் கறையான் தோன்றும் பலன்கள்**

செஞ்சேல் அல்லது செஞ்சிதல் என்று சொல்லப்படும் கறையான் மனையில் தோன்றினால், அவை தோன்றிய திசைக்கு ஏற்ப நல்ல அல்லது தீமையான பலன்கள் கிடைக்கும் என்பது முன்னோரின் கருத்து. கறையான், அயன் பகுதியாகிய மனையின் பிரம்ம தானத்தில் தோன்றினால், மனைக்குரியவனின் வாழ்நாள் குறையும். கிழக்குத் திசையில் தோன்றினால், செல்வம் கிடைக்கும். தென்கிழக்குத் திசையில் தோன்றினால், கேடு உண்டாகும். தெற்குத் திசையில் தோன்றினால், மரணபயம் ஏற்படும். தென்மேற்குத் திசையில் தோன்றினால், இன்பம் கிட்டும். மேற்குத் திசையில் தோன்றினால், செல்வம் சேரும். வடமேற்குத் திசையில் தோன்றினால், வறுமை உண்டாகும். வடக்குத் திசையில் தோன்றினால் நிறைவான வாழ்வு கிட்டும். வடகிழக்குத் திசையில் தோன்றினால், கால்நடைகள் மடியும்

குறிப்பு: தென்மேற்குத் திசையில் கறையான் தோன்றினால் பசி என்று மற்றொரு பாடலில் கூறியிருப்பது இங்கு சுட்டத்தக்கது. இவையன்றி கட்டில் கால், படி, சாலின் கீழ் கறையான் பிடிக்க நோய் உண்டாகும். கோயில், ஊர்க்கிணறு, அம்பலம், பள்ளி முதலான இடங்களில் கறையான் பிடிக்க, நாட்டுக்குக் கேடுண்டாகும்.

## பொருத்தம்

மனையில் வீடு கட்ட விரும்புகிறவர்கள் அந்த வீட்டிற்கான முழு பொருத்தங்களை அறிந்து, அவற்றின்படி வீடு கட்டுதல் வேண்டும். மனையடி சாத்திர நூல்களில் பதினாறு பொருத்தங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளன. இந்தப் பொருத்தங்களைக் கணக்கிட்டு நன்மை தீமைகளை அறிந்து வீடு கட்டுதல் வேண்டும். இந்தப் பதினாறு பொருத்தங்களில் எட்டுப் பொருத்தங்களுக்கு மேல் அளவினை அமைக்க வேண்டும்.

### மனைப்பொருத்தங்கள்

*1. கற்பம், 2. ஆதாயம், 3. விரயம், 4. திதி, 5. வாரம், 6. நட்சத்திரம், 7. யோனி, 8. இராசி, 9. அம்சம், 10. வம்சம், 11. கணம், 12. கண், 13. சூத்திரம், 14. யோகம், 15. வயது, 16. தாரா என்பன.*

### 1. ஆயம் அல்லது கற்பம்

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழியை எட்டால் வகுக்க, மீதி எண் ஆயம் ஆகும். மீதி இல்லையானால் மீதி எட்டு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

ஒன்றுக்கு-துவசம்-கருட கற்பம்-இந்திரன்- புண்ணியவான்
இரண்டுக்கு-தூமம்-புறா கற்பம்-அக்கினி-மிருத்துப்பிரதம்
மூன்றுக்கு-சிம்மம்-சிங்க கற்பம்-இயமன்டே-விஷப்பிரதம்
நான்கிற்கு-சிவன்-சுவான கற்பம்-நிருதி-ரோகப்பிரதம்
ஐந்திற்கு-ரிஷபம்-பசு-கற்பம்-வருணன்-இராட்சதப்பிரதம்
ஆறுக்கு-தானம்-காக்கை கற்பம்-வாயுசெல்வப்பிரதம்
ஏழுக்கு-கஜம்-யானை கற்பம்-குபேரன்-சுபப்பிரதம்
எட்டுக்கு-காகஆயம்-கழுதை கற்பம்- ஈசானியன்-நிஷ்பலம்

ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு ஆகிய எண்கள் மீதியாக வருமானால் மிகுந்த நன்மையாகும். இரண்டு, நான்கு, ஆறு, எட்டு ஆகிய எண்கள் மீதியாக வருமானால், மனைக்கு உரியவனுக்குத் தீங்கு நேரிடும்.

### 2. ஆதாயம்

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினால் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி ஆதாயம் எனப்படும். மீதி இல்லையானால், மீதி பன்னிரண்டு என்று கொண்டு பலன் காண வேண்டும். ஆதாயம் என்பதற்கு வரவு என்பது பொருள்.

ஒன்று மீதியாக வந்தால், யோகம் கிட்டும்
இரண்டு மீதியாக வந்தால், போகம் கிட்டும்
மூன்று மீதியாக வந்தால், சம்பிரிதி உண்டாகும்
நான்கு மீதியாக வந்தால், வீரம் உண்டாகும்
ஐந்து மீதியாக வந்தால், பகைவர்கள் நாசமடைவர்
ஆறு மீதியாக வந்தால், வீட்டில் தானியம் நிறைந்திருக்கும்
ஏழு மீதியாக வந்தால், எடுத்த காரியம் வெற்றியாகும்
எட்டு மீதியாக வந்தால், வீட்டில் உள்ளவர்கள்சுகமடைவர்
ஒன்பது மீதியாக வந்தால், நினைத்த காரியம் நிறைவேறும்
பத்து மீதியாக வந்தால், நீண்ட ஆயுள் கிட்டும்
பதினொன்று மீதியாக வந்தால், புத்திர இலாபம் உண்டாகும்
பன்னிரண்டு மீதியாக வந்தால், ஞானம் கிட்டும்.

ஒன்று, மூன்று, இரண்டு, ஏழு, ஒன்பது, எட்டு, நான்கு, பன்னிரண்டு ஆகியஎண்கள் மீதியாக அமையுமானால், வெற்றியும் செல்வமும் கிட்டும். ஐந்து, பத்து, ஆறு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் மிகுந்த துன்பம் உண்டாகும்.

### 3. விரயம்

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கிப் பத்தில் வகுக்கக் கிடைக்கும் மீதி விரயம் எனப்படும். மீதி இல்லாயானால், மீதி பத்து என்று கொண்டு பலன் காண வேண்டும். விரயம் என்பதற்குச் செலவு என்பது பொருள்.

ஒன்று மீதியாக வந்தால், தீயினால் பயம் உண்டாகும்
இரண்டு மீதியாக வந்தால், விருத்தி ஏற்படும்
மூன்று மீதியாக வந்தால், இலாபம் உண்டாகும்
நான்கு மீதியாக வந்தால், புத்திரர்கள் பிறப்பார்கள்
ஐந்து மீதியாக வந்தால், மனையிலுள்ள பெண்களுக்குத் துன்பம்
ஆறு மீதியாக வந்தால், வெற்றி கிட்டும்
ஏழு மீதியாக வந்தால், தீமைகள் உண்டாகும்

எட்டு மீதியாக வந்தால், மனைவியும் எதிரியாவாள்
ஒன்பது மீதியாக வந்தால், புத்திரர்க்கு அழிவுண்டாகும்
பத்து மீதியாக வந்தால், ஞானம் வரும்

இரண்டு, ஆறு, பத்து ஆகிய எண்கள் மீதியாக வந்தால், மரணம் உண்டாகும். எட்டு, நான்கு ஆகிய எண்கள் மீதியாக வந்தால் நோய் உண்டாகும். ஒன்று மீதியாக வந்தால் சிறந்த பலன்கள் கிட்டும். ஒன்பது, ஐந்து, மூன்று, ஏழு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், சுபவிரயங்கள் உண்டாகும் என்று ஒரு பாடல் எடுத்துரைக்கிறது. மற்றொரு பாடலில் ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் தீயினால் துயரம், மனவருத்தம், நோய், பகை, களத்திர அழிவு முதலியவற்றால் துன்பம் உண்டாகும். இதில் சற்று மாறுபாடான பலன்கள் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

விரயங்களைத் தவிர்ப்பதற்கு மனையில் வீட்டின் சுற்று முழுத்தைக் கூட்டிட நன்மை அடைவர். இல்லாவிடில் நோயினை அடைந்து வறுமையால் வருந்துவார்கள்.

### 4. திதிப்பொருத்தம்

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, பதினைந்தில் வகுக்க வரும் மீதி திதி எனப்படும். மீதி இல்லையானால் பதினைந்து எனக் கொண்டு, பலன் காண வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், பிரதமை துன்பம் உண்டாகும்
இரண்டு மீதியாக வந்தால், திவிதியை நன்மை கிடைக்கும்
மூன்று மீதியாக வந்தால், திருதியை அனைத்திலும் வெற்றி
நான்கு மீதியாக வந்தால், சதுர்த்தி துன்பம் உண்டாகும்
ஐந்து மீதியாக வந்தால், பஞ்சமி - நன்மை கிடைக்கும்
ஆறு மீதியாக வந்தால், சஷ்டி - வெற்றி கிட்டும்
ஏழு மீதியாக வந்தால், சப்தமி - சுகம் உண்டாகும்
எட்டு மீதியாக வந்தால், அஷ்டமி - துக்கம் ஏற்படும்

ஒன்பது மீதியாக வந்தால், நவமி-சுமாரான நன்மைகள் கிடைக்கும்
பத்து மீதியாக வந்தால், தசமி - நன்மைகள் கிடைக்கும்
பதினொன்று மீதியாக வந்தால், ஏகாதசி-சுமாரான நன்மைகள் கிடைக்கும்
பன்னிரண்டு மீதியாக வந்தால், துவாதசி- நன்மைகள் கிடைக்கும்
பதிமூன்று மீதியாக வந்தால், திரயோதசி - தீமை உண்டாகும்
பதினான்கு மீதியாக வந்தால், சதுர்தசி - தீமை உண்டாகும்
பதினைந்து மீதியாக வந்தால், அமாவாசை - சண்டை விளைவுகள் வரும்

திதிப்பொருத்தம் காணுவதில் மற்றொரு முறையும் கூறப்பட்டுள்ளது. மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, முப்பதால் வகுத்துக் கிடைக்கும் மீதி திதி எனப்படும். இந்தக் கணக்கீட்டில் மீதியாக ஒன்று முதல் பதினைந்து வரை உள்ளவற்றை வளர்பிறைத் திதிகளாகவும், பதினாறு முதல் முப்பது வரை மீதியாக வந்தவற்றைத் தேய்ப்பிறைத் திதிகளாகவும் கணக்கில் கொண்டு, பலன் கூற வேண்டும். பிரதமை முதலாக இத்திதிகளைக் கணக்கிடவேண்டும். மீதிவரவில்லையென்றால், முப்பதை மீதி எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

பொதுவாக 2, 3 ஆகியவை மீதியாக வந்தால், இன்பம் உண்டாகும். 12, 13 மீதியாக வந்தால், கல்விநலம் பெருகும். 15, 10, 5 ஆகியவை மீதியாக வந்தால், நன்மைகள் விளையும். 30, 6, 9 ஆகியவை மீதியாக வந்தால் சுமாரான பலன் கிட்டும். 8, 14, 11 ஆகியவை மீதியாக வந்தால், பகை உண்டாவதுடன் தீவினையும் உண்டாகும்.

மற்றொரு பாடலில் 1,4,2,8,9,14 ஆகியவை மீதியாக வந்தால், தீமையைத் தருவனவாகும். தேய்பிறையில் இத்திதிகள் மிகுந்த தீமையை விளைவிக்கும். வளர்பிறையாக

இருப்பினும் தேய்பிறையாக இருப்பினும் இரட்டையாக வரும் திதிகள் பொதுவாகத் தீமையை விளைவிப்பனவாகும்.

**5. வாரப் பொருத்தம்**

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதி வாரம் எனப்படும். மீதி இல்லையானால், ஏழு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், ஞாயிறு - பயம் உண்டாகும்
இரண்டு மீதியாக வந்தால், திங்கள் - பல மனைவியர் கிடைப்பர்
மூன்று மீதியாக வந்தால், செவ்வாய் - செல்வத்திற்கு அழிவு
நான்கு மீதியாக வந்தால், புதன் - உடல் ஆரோக்கியம் சிறப்புடன் விளங்கும்
ஐந்து மீதியாக வந்தால், வியாழன் - புத்திரர்கள் பிறப்பார்கள்
ஆறு மீதியாக வந்தால், வெள்ளி - காரியசித்தி உண்டாகும்
ஏழு மீதியாக வந்தால், சனி - சுமாரான பலன்கள் கிடைக்கும்

மீதியாக இரண்டு, நான்கு, ஐந்து ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளைக் குறிக்கும். இவை நன்மையைத் தரும். மீதியாக ஒன்று, மூன்று, ஏழு ஆகிய நாட்கள் வந்தால், அவை முறையே, ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய வாரங்களைக் குறிக்கும். இவை செல்வத்திற்கு அழிவை உண்டாக்கும். நோய்களைத் தரும். கலகத்தை ஏற்படுத்தும் மனைக்குரியவர் பிறந்த கிழமையானால் நன்மைகளாகும் என்றவாறு.

**6. நட்சத்திரப் பொருத்தம்**

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டால் பெருக்கி, இருபத்தேழில் வகுக்க கிடைக்கும் மீதி நட்சத்திரம் எனப்படும். மீதி வரவில்லை யென்றால், அதை இருபத்தேழு என்று கணக்கிட வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், அசுபதி - வெற்றி கிடைக்கும்
இரண்டு மீதியாக வந்தால், பரணி - மரணம் நேரிடும்
மூன்று மீதியாக வந்தால், கார்த்திகை - தீயினால் பயம்

நான்கு மீதியாக வந்தால், உரோகணி - வெற்றி கிடைக்கும்
ஐந்து மீதியாக வந்தால், மிருகசீரிடம் - பகைவர் அழிவர்
ஆறு மீதியாக வந்தால், திருவாதிரை - வெற்றி கிடைக்கும்
ஏழு மீதியாக வந்தால், புனர்பூசம் - வெற்றி கிடைக்கும்
எட்டு மீதியாக வந்தால், பூசம் - புண்ணியச்செலவுகள் அதிகரிக்கும்
ஒன்பது மீதியாக வந்தால், ஆயிலியம்-மரணபயம் உண்டாகும்
பத்து மீதியாக வந்தால், மகம் - விருத்தி உண்டாகும்
பதினொன்று மீதியாக வந்தால், பூரம்-வெற்றி கிடைக்கும்
பன்னிரண்டு மீதியாக வந்தால், உத்திரம்-பயம் ஏற்படும்
பதிமூன்று மீதியாக வந்தால், ஹஸ்தம் - பசுக்கள் பெருகும்
பதினான்கு மீதியாக வந்தால், சித்திரை - நோய் உண்டாகும்
பதினைந்து மீதியாக வந்தால், சுவாதி-பாக்கியங்கள் பெருகும்
பதினாறு மீதியாக வந்தால், விசாகம் - துன்பம் உண்டாகும்
பதினேழு மீதியாக வந்தால், அனுஷம்-வித்தை பெருகும்
பதினெட்டு மீதியாக வந்தால், கேட்டை-செல்வம் உண்டாகும்
பத்தொன்பது மீதியாக வந்தால், மூலம் - நோய் உண்டாகும்
இருபது மீதியாக வந்தால், பூராடம் - மரணபயம் உண்டாகும்
இருபத்தொன்று மீதியாக வந்தால், உத்திராடம்-நன்மைகள் கிடைக்கும்
இருபத்து இரண்டு மீதியாக வந்தால், திருவேணம்-செல்வம் பெருகும்
இருபத்து மூன்று மீதியாக வந்தால், அவிட்டம்-நன்மைகள் உண்டாகும்
இருபத்துநான்கு மீதியாக வந்தால், சதயம் - நன்மைகள் உண்டாகும்
இருபத்தி ஐந்து மீதியாக வந்தால், பூரட்டாதி - புத்திரப்பேறு கிடைக்கும்
இருபத்து ஆறு மீதியாக வந்தால், உத்திரட்டாதி - நன்மைகள் உண்டாகும்
இருபத்து ஏழு மீதியாக வந்தால், இரேவதி - நோய்உண்டாகும்

பொதுவாக 15, 12, 21, 26, 5 ஆகியவை மீதியாக வந்தால், மிகுந்த சுகம் உண்டாகும். 24, 4, 1 ஆகியவை மீதியாக வந்தால், வெற்றி கிடைக்கும். 22, 7, 8, 13 ஆகியவை மீதியாக வந்தால்,

புத்திரர்கள் பிறப்பார்கள். 17 மீதியாக வந்தால், கல்வியில் மேன்மை உண்டாகும். 23 மீதியாக வந்தால், செல்வம் பெருகும். 25, 14, 19, 6 ஆகியவை மீதியாக வந்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும். 3 மீதியாக வந்தால், தீயினால் மிகுந்த பாதிப்பு உண்டாகும். 2, 9 ஆகியவை மீதியாக வந்தால், மரணம் நேரிடும். 18 மீதியாக வந்தால், நன்மையாகும். 16 மீதியாக வந்தால், காயம் உண்டாகும். இருபது மீதியாக வந்தால், நோயுண்டாகும் என்று சில பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

**7. யோனிப்பொருத்தம்**

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்தக் குழித்தொகையை மூன்றில் பெருக்கி, எட்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி யோனி எனப்படும். மீதி இல்லையானால் எட்டு என்று கொண்டு பலன் காணவேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், கருடன்-கிழக்கு-மிகுந்தசெல்வம்
இரண்டு மீதியாக வந்தால், பூனை-தென்கிழக்கு-கலகம் விளையும்
மூன்று மீதியாக வந்தால், சிங்கம்-தெற்கு-வெற்றி கிட்டும்
நான்கு மீதியாக வந்தால், சுவானம்-தென்மேற்கு-நோய் உண்டாம்
ஐந்து மீதியாக வந்தால், சர்ப்பம்-மேற்கு-பொன் கிடைக்கும்
ஆறு மீதியாக வந்தால், எலி-வடமேற்கு-பொருளுக்கு அழிவு
ஏழு மீதியாக வந்தால், கஜம்-வடக்கு-வெற்றி கிட்டும்
எட்டு மீதியாக வந்தால், முயல்-வடகிழக்கு-நோயும் வருத்தமும் உண்டாகும்

மீதியாக ஐந்து வந்தால் எருது பிறப்பு என்றும் மீதியாக ஆறு வந்தால், கழுதைப் பிறப்பு என்றும் சில பாடல்களில் கூறப்பட்டுள்ளன. பருந்து யோனி உதிக்க நன்மையாகும். உள்ளத்தில் உறுதி உண்டாகும்; கள்ளரால் துன்பம் உம்டாகும்; ஐந்து புதல்வர், புதல்வியர் தோன்றுவர்; பயிர்த்தொழில் சிறந்து விளைவு பெருகும்; செல்வம் மிகும்.

பூனை யோனி உதிக்க வீண்வாதங்கள், சூழ்ச்சிகள், வழக்குகள் உண்டாகி மிகுந்த துன்பமுடன் பொருள் வீணாகும்; மாடு கன்றுகள் அழிந்துபோகும். புத்திரர்களும் புத்திரிகளும் மரணமடைவார்கள்.

சிங்கப் பிறப்பு சிறப்பு மிக்கது. உள்ளத்திலும் உடலிலும் வலிமையுண்டாகும்; அதிக புகழுடன் விளங்குவான்; மிகுந்த செல்வம் உண்டாகும்; புவியாளும் மன்னனாக விளங்குவான்; புத்திரர் ஐவரும் புத்திரி மூவரும் இருப்பர்; பொன் மிகுதியும் பெற்றவனாக விளங்குவான்.

நாய் யோனியாக இருந்தால், மிகுந்த அலைச்சல் உண்டாகும்; மற்றவர்களோடு ஒத்துப்போகமாட்டான்; பிறரால் மதிக்கப்படமாட்டான்; எல்லோருடைய சொல்லையும் கேட்பான்; சொந்த புத்தி இல்லாதவன்; சொந்தமாகப் பூமி இல்லாதவன்; பிறரோடு சண்டையிட மாட்டான்; மாடு, கன்று போன்ற எந்த செல்வமும் இல்லாதவன்; தனக்குத்தானே தலைவனாகக் கருதும் தன்மையுடையவன்.

நாகப் பிறப்பு என்னும் பாம்பு யோனியாக இருந்தால் நன்மையாகும்; நல்ல குணம் உடையவனாக இருப்பான்; நல்ல உணவை உண்ணுபவன்; இரண்டு மனைவியரைக் கொண்டவன்; யோகம் மிக்கவன்; நல்ல வாணிபம் உடையவன்; பூமிக்குச் சொந்தக்காரன்; உள்ளத்தில் உயர்ந்தவன்; நோய் இல்லாதவன்; பெருமைகள் உடையவனாக விளங்குபவன்; எங்குச் சென்றாலும் செல்வத்துடன் விளங்குவான்.

எலி யோனியாக இருந்தால், தீமையாகும். விலங்கு பூண நேரிடும். எந்நாளும் அலைந்து திரிந்து வாழ்வான்; இவனுடைய மனைவியும் பிள்ளைகளும் வாடுவார்கள்.

யானை யோனி உதிக்க, செல்வம் மிகவும் வந்து சேரும்; சிறந்து வாழ்வான்; எதையும் சாதிக்க வல்லவன்; தீயவர்களுக்கு எமனாக விளங்கக் கூடியவன்; தமிழில்

விருப்பம் உடையவன்; தைரியமும் வீரமும் உடையவனாக இருப்பான். சூரியனை வழிபடுபவன்.

முயல் யோனி உதிக்க, பெண்களுக்கு மிகுந்த தீமையை விளைவிக்கும்; அவர்களுக்கு வறுமையை உண்டாக்கும்; கைகளிலும் உடலிலும் நோய்கள் தோன்றி வருத்தும். உடல் வற்றிப்போகும்.

உலகத்தில் மனையில் பருந்து, சிங்கம், யானை, பாம்பு முதலான யோனிகள் வந்தால், மக்களுக்கு நல்ல முறையில் திருமணங்கள் நடைபெறும்; நாட்டில் மழை பொழியும்; அனைவரும் கல்வி கற்றுத் தேர்வர்; பொருள்கள் சேரும்; மாடுகள் கன்றுகள் பெருகும்; பெண்கள், புதல்வர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வளமாக வாழ்வார்கள்.

மனையில் பூனை, எலி, முயல் நாய் முதலான யோனிகள் அமையுமானால், சன்னி நோய்கள் தோன்றும்; பலம் குறைந்து போகும்; அறிவுத்திறன் குறைந்து போகும்; அழகு மாறும்; செல்வம் கைவிட்டுப் போகும்.

பருந்து, சிங்கம், பாம்பு, யானை ஆகிய நான்கு யோனிகள் இருப்பின் நன்று. இவற்றுள்ளும் சிங்கம், பாம்பு ஆகிய இரு யோனிகளும் மிகவும் நன்மை பயப்பனவாகும்.

### 8. இராசிப் பொருத்தம்

மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதிக்கு இராசி என்று பெயர். மீதியாக ஒன்றும் வரவில்லையென்றால் பன்னிரண்டு என்று கொண்டு கணக்கிட வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், மேட இராசி-தர்மம் செய்தல்
இரண்டு மீதியாக வந்தால், இடப இராசி-செல்வம்சேரும்

மூன்று மீதியாக வந்தால், மிதுன இராசி-துன்பத்தைககொடுக்கும்
நான்கு மீதியாக வந்தால், கடக இராசி-செல்வம் கிடைக்கும்
ஐந்து மீதியாக வந்தால், சிம்ம இராசி ,, ,,
ஆறு மீதியாக வந்தால், கன்னி இராசி-வறுமை உண்டாகும்
ஏழு மீதியாக வந்தால், துலாம் இராசி- நன்மைகள் ,,
எட்டு மீதியாக வந்தால், விருச்சிகஇராசி-சுமாரான பலன்கள் கிடைக்கும்
ஒன்பது மீதியாக வந்தால், தனுசு இராசி-வெற்றி கிடைக்கும்
பத்து மீதியாக வந்தால், மகர இராசி-புத்திரபேறு கிட்டும்
பதினொன்று மீதியாக வந்தால், கும்ப இராசி-நன்மை உண்டாகும்
பன்னிரண்டு மீதியாக வந்தால், மீன இராசி-புத்திரர்க்கு அழிவு உண்டாகும்

பொதுவாக, இரண்டு மீதியாக வந்தால், புண்ணியம் பெருகும். நான்கு, ஆறு ஆகியவை மீதி எண்களாக வந்தால், பூரண ஆயுள் உண்டாகும்; ஐந்து ஏழு, பதினொன்று, ஒன்பது ஆகியவை மீதி எண்களாக வந்தால், செல்வம் உண்டாகும்; மேலும் இனிய கர்மங்களும் புத்திர விருத்தியும் உண்டாகும். பன்னிரண்டு மூன்று ஆகியவை மீதியாக வந்தால், சுமாரான பலன்கள் கிடைக்கும். ஒன்று மீதியாக வந்தால், நோய்கள் உண்டாகும்; எட்டு மீதியாக வந்தால், துன்பம் அதிகமாகும்.

சிலர், மனையில் நீள அகலங்களைப் பெருக்கி வந்தக் குழித்தொகையை நான்கால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதியை இராசி என்று கூறுவார்கள் என்று ஒரு பாடல் எடுத்துக்கூறுகிறது.

### 9. அம்சப் பொருத்தம்

மனையின் நீள அகலங்களை அளந்து, பெருக்கி வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கி, ஒன்பதால் வகுக்க வரும் மீதி அம்சம் எனப்படும். மீதி இல்லையென்றால் ஒன்பதை மீதி எனக்கொண்டு கணக்கிடவேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், தஸ்கர அம்சம்-அழிவு ஏற்படும்
இரண்டு மீதியாக வந்தால், புத்தி அம்சம்- செல்வம் சேரும்

மூன்று மீதியாக வந்தால், சத்தி அம்சம் - சுகமாகும்
நான்கு மீதியாக வந்தால், தான்யாம்சம் - செல்வமும் சுகமும் சேரும்
ஐந்து மீதியாக வந்தால், நரபதி அம்சம் - தீர்க்காயுள்
ஆறு மீதியாக வந்தால், கிலீபாம்சம் - சுகம் உண்டாகும்
ஏழு மீதியாக வந்தால், நிர்பீதியாம்சம் - சுகக்குறைவு
எட்டு மீதியாக வந்தால், நிதனனாம்சம் - செல்வம் அழியும்
ஒன்பது மீதியாக வந்தால், பிரோசிகாம்சம் - புத்திரர்கள் தோன்றுவர்

இந்த ஒன்பது அம்சங்களில், புத்தியம்சம் வருமானால் பொன்னும் பொருளும் மிகுதியாகச் சேர்ந்திடும்; அறிவு வளரும்; தினமும் வேள்வி, தவம் முதலானவற்றை மேற்கொள்வர். அனைத்திலும் வெற்றி கிட்டும்; தெய்வ காரியங்களைச் செல்வர். அனைவரும் போற்றி வணங்கும் பேறு பெறுவர்; புகழ் உண்டாகும்.

தானிய, சத்தி அம்சம் வருமானால் அம்மனைக்கு உரியவன் உலகை ஆளக் கூடியவனாக விளங்குவான்; புதிதாக நாட்டை உருவாக்குவான்; நல்ல புத்திரர்களையும் நிறைந்த வாழ்க்கையையும் பெறுவான்; வேலையாட்களைக் கொண்டவன்; ஆடு, மாடுகள் முதலான கால்நடைகளைக் கொண்டவன் அனைத்திலும் வெற்றி பெறுபவன்; அறிவு மிக்கவன் தருமம் செய்பவன்; கேட்டவர்க்கு உதவி செய்யும் நல்ல மனம் படைத்தவன்.

பிரோசிகாம்சம், நரபதி அம்சம் வருமானால், அம்மனையில் வாழ்பவன் சொன்ன சொற்களைத் தவறாதவனாக விளங்குவான்; அன்னதானம் முதலாகிய பலதானங்களையும் தினமும் செய்வான்; உலகோர் வணங்கிட ஆட்சிப் பொறுப்பில் அமர்வான்; செல்வம் மிக்கவனாக விளங்குவான்.

தஸ்கர அம்சம் உடையவனாக இருந்தால், அம்மனையில் வாழ்பவன் சொல்லமுடியாத துயரங்களை

அடைவான். அம்மனையில் குடியிருப்போருக்கு ஈளை நோய், சுரம் முதலானவை தோன்றும்; மனை இடியும்; தீமைகள் வந்துசேரும். செல்வம் குறையும்.

கிலீபாம்சம் வருமானால் மனைக்குரியவன் இடறி வீழ்வான்; தலையில் இடி விழும்; விடம் தீண்டும்; இறக்க நேரிடலாம்; தீராத துன்பங்கள் வந்து சேரும். மாடு, கன்றுகள், சுற்றத்தார், பிள்ளைகள் போன்றோருக்கு அழிவு நேரிடும்; வட்டிக்காகக் கொடுத்த பணமும் கடனாகக் கொடுத்த பணமும் திரும்ப கிடைக்காது.

நிர்பீதியம்சம் வருமானால், மனைக்குரியவனின் தாய் தந்தைக்கு மரணம் நேரிடும்; மனைக்குரியவனுக்குத் துன்பம் மிகும்; நோய்கள் உண்டாகும்; காதுகள் செவிடாகும்;: கள்வரால் துன்பங்கள் நேரிடும்; வீட்டில் கலகங்கள் விளையும்; வீண்வாதங்கள் நடக்கும்.

நிதனனாம்சம் வருமானால், துக்கம் உண்டாகும்; சுரம் முதலான நோய்கள் தோன்றும்; அடிதடிகள், வழக்குகள் உண்டாகும்; தீய கணவுகள் வந்து அலைக்கழிக்கும். மனைக்குரியவர் ஒடுங்கி, நடுங்கி, ஓடித்திரிவதோடு உன்மத்தம் பிடித்தவர் போன்று இருப்பர்; அழகான தோற்றம் மாறும்; நிலம் கையை விட்டுப் போகும்.

பொதுவாகப் புத்தியம்சம், சத்தியம்சம், தானியாம்சம், நரபதியம்சம், பிரஜாம்சம் அல்லது பிரோசிகாம்சம் என்று சொல்லப்படும் இந்த ஐந்து அம்சங்களும் வருமானால் நன்மைகள் பெருகும். அஷ்ட இலட்சுமிகளும் மனையில் தங்குவர்; ஆயுள் வளரும்; பெரியோர்களுக்கு உதவுவான்; பொருள்கள் மேன்மேலும் வந்து சேரும்; செல்வங்கள் சேரும்; கால்நடைகள் பெருகும்.

ஒன்று, ஆறு, ஏழு, எட்டு மீதியாக வருமானால், வரும் அம்சங்கள் தீங்கு விளைவிப்பவை; இரண்டு மூன்று நான்கு

ஐந்து ஒன்பது மீதியாக வருமானால் வரும் அம்சங்கள் நன்மை விளைவிப்பவை; அவற்றுள்ளும் ஒற்றைப்படை எண்கள் மீதியாக வந்தால், அவை மிகுந்த நன்மையளிப்பவையாகும். சில பாடல்களில் இந்த அம்சத்தின் பெயர்கள் நவக்கிரகங்களின் பெயர்களில் அமைந்து விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

ஒன்று மீதியாக வந்தால்,தினகரனம்சம்-நிலைபெறா வாழ்க்கை
இரண்டு மீதியாக வந்தால், சோமனம்சம்-போகபாக்கியம்
மூன்று மீதியாக வந்தால்,குஜனம்சம்-ஆரோக்கியம்
நான்கு மீதியாக வந்தால், புதனம்சம்-இலாபம் கிட்டும்
ஐந்து மீதியாக வந்தால், குருவம்சம்-நற்பலன் கிடைக்கும்
ஆறு மீதியாக வந்தால், சுக்கிரவம்சம்-கலகம் உண்டாகும்
ஏழு மீதியாக வந்தால், சனியம்சம்-ஜனவிரோதம், களவு
எட்டு மீதியாக வந்தால்,இராகுவம்சம்-சகலமும் மத்திம பலன்
ஒன்பது மீதியாக வந்தால், கேதுவம்சம்-அனைத்தும் உத்தமம்

இவை அம்சப் பொருத்தத்திற்குத் தரப்பட்டுள்ள மற்றொரு விளக்கமாகும். இருப்பினும், பலன்கள் என்ற நிலையில் ஒத்த தன்மையுடையனவாக விளங்குகின்றன என்பது சுட்டத்தக்கதாகும்.

### 10. வம்சப்பொருத்தம்

மனையின் நீள அகலத்தை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, நான்கில் வகுக்கக் கிடைக்கும் மீதி வம்சம் எனப்படும். மீதி இல்லையானால், நான்கு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், பிராமணர்-சுகமும் காரியசித்தியும்
இரண்டு மீதியாக வந்தால், க்ஷத்திரியர்-வெற்றியாகும்
மூன்று மீதியாக வந்தால், வைசியர்-செல்வமாகும்
நான்கு மீதியாக வந்தால், சூத்திரர்-தாஸியமாகும்

### 11. கணப்பொருத்தம்

1. அசுவனி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அஸ்தம், அனுஷம், திருவோணம், இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் ஒன்பதும் தேவகணம். இதன் பலன் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

2. பூரம், உத்திரம், பரணி, பூராடம், பூரட்டாதி, உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, திருவாதிரை ஆகிய நட்சத்திரங்கள் ஒன்பது மனித கணம். இதன் பலன் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

3. கேட்டை, மூலம். சித்திரை, அவிட்டம், மகம், விசாகம், கார்த்திகை, சதயம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்கள் ஒன்பதும் இராட்சத கணம்.

தேவகணமும் தேவகணமும்-நல்ல பலனைத் தரும்
மனித கணமும் மனித கணமும் - நல்ல பலனைத் தரும்
இராட்சத கணமும் இராட்சதகணமும்-நன்மையானது
தேவகணமும் மானிட கணமும்=மத்திமமான பலன்
இராட்சக கணமும் தேவகணமும்-பகையுள்ளதாகும்
மனித கணமும் இராட்சதகணமும்- மரணத்தைத் தரும்

### 12. கண் பொருத்தம்

ஞாயிற்றுக்கிழமை முதல் கணக்கிட வேண்டிய கிழமை வரை எண்ணி அந்த எண்ணை மூன்றால் பெருக்கிய தொகையை அசுபதியை முதலாககொண்டு கழித்து எஞ்சியுள்ள முதல் ஒன்பது நட்சத்திரங்கள் ஞாயிற்றுக்கிழமை முதல் கணக்கிட வேண்டிய கிழமை வரை எண்ணி அநத எண்ணை மூன்றால் பெருக்கிய தொகையை அசுபதியை முதலாகக் கொண்டு கழித்து எஞ்சியுள்ள முதல் ஒன்பது நட்சத்திரங்கள் ஒற்றைக் கண்ணைக் கொண்டவை; அடுத்துவரும் பன்னிரண்டு நட்சத்திரங்கள் இரட்டைக் கண்களைக் கொண்டவை; அதனை அடுத்து வரும் ஆறு நட்சத்திரங்கள் குருட்டுக் கண்களைக் கொண்டவை. இவை தீமையைச் செய்வன.

1. ஞாயிற்றுக்கிழமைக்கு- உரோகணி முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக் கண். அஸ்தம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக் கண். பூரட்டாதி முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

2. திங்கட்கிழமைக்கு - புனர்பூசம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக்கண் விசாகம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண் அசுவதி முதல் ஆறு நட்சதிரங்களுக்கும் குருட்டுக்கண்.

3. செவ்வாய்க்கிழமைக்கு - மகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக்கண். மூலம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண். உரோகணி முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

4. புதன்கிழமைக்கு - அஸ்தம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக்கண். திருவோணம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண். புனர்பூசம் முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

5. வியாழக்கிழமைக்கு - விசாகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக்கண். பூரட்டாதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண் மகம் முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

6. வெள்ளிக்கிழமைக்கு - மூலம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக் கண். அசுவதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண். அஸ்தம் முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

7. சனிக்கிழமைக்கு - திருவோணம் முதல் ஒன்பது நட்சத்திரங்களுக்கும் ஒற்றைக்கண். உரோகணி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் இரட்டைக்கண். விசாகம் முதல் ஆறு நட்சத்திரங்களுக்கும் குருட்டுக்கண்.

இவற்றுள், 1. ஒற்றைக்கண்ணுள்ள நாட்கள் சமபலனைத் தருவன. 2. இரட்டைக்கண்ணுள்ள நாட்கள் சிறப்புடையவை. 3. குருட்டுக்கண்ணுள்ள நாட்கள் தீமையானவை.

இந்த விதியை உணர்ந்து குருட்டு நாட்கள், ஒரு கண்ணுள்ள நாட்கள் ஆகியவற்றை நீக்கிவிட்டு, மற்ற நாட்களில் மனைக்கு முகூர்த்தம் வைக்க வேண்டும்.

**13. சூத்திரப்பொருத்தம்**

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினிற் பெருக்கி, ஐந்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி சூத்திரம் எனப்படும். மீதி எதுவும் வரவில்லை என்றால், ஐந்து எனக்கொண்டு, கணக்கிடவேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், பாலசூத்திரம் - நன்மை பயக்கும்
இரண்டுமீதியாக வந்தால், குமார சூத்திரம் - நன்மை பயக்கும்
மூன்று மீதியாக வந்தால், அரச சூத்திரம் - நன்மை பயக்கும்
நான்கு மீதியாக வந்தால், விருத்த சூத்திரம்-மத்திமபலன்
ஐந்து மீதியாக வந்தால், மரண சூத்திரம் - கொடியது

அசுபதி முதலாக மனைக்குச் செல்லும் நாள் வரையிலான தொகையை ஐந்தில் வகுத்து மீதி வருவதைச் **சூத்திரம்** என்று மற்றொரு பாடலில் கூறப்பட்டுள்ளது.

**14. யோகம்**

1. ஞாயிற்றுக்கிழமையில்,

அ. உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, மூலம், திருவோணம், அஸ்தம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்.**

ஆ. மகம், அவிட்டம், அனுஷம், கேட்டை, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்.**

இ. அசுபதி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, பூராடம், சதயம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் **சித்தயோகம்.**

2. திங்கட்கிழமையில்,

அ. மிருகசீரிடம், சுவாதி, திருவோணம், புனர்பூசம், உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்.**

ஆ. பூசம், பூராடம், பூரட்டாதி, அசுபதி, உத்திராடம், விசாகம், மகம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் **மரணயோகம்**.

இ. அசுபதி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், உத்திராடம், அஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **சித்தயோகம்**.

3. செவ்வாய்க்கிழமையில்,

அ. உரோகணி, மூலம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்**.

ஆ. சதயம், திருவாதிரை, பூரட்டாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்**.

இ. அசுபதி, பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், பூராடம், திருவோணம், அவிட்டம், இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **சித்தயோகம்**.

4. புதன்கிழமையில்,

அ. உத்திரம், பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திராடம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்**.

ஆ. அஸ்தம், மூலம், இரேவதி, அவிட்டம், அசுவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்**.

இ. பரணி, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, திருவோணம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **சித்தயோகம்.**

5. வியாக்கிழமையில்,

அ. புனர்பூசம், பூசம், அசுவதி, சுவாதி, மகம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்.**

ஆ. சதயம், மிருகசீரிடம், உத்திரம், கார்த்திகை, திருவாதிரை, உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்.**

இ. பரணி, ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, அனுஷம், மூலம், பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **சித்தயோகம்.**

6. வெள்ளிக்கிழமையில்,

அ. இரேவதி, மூலம், அசுவதி, அஸ்தம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்.**

ஆ. கேட்டை, உரோகணி, திருவோணம், மகம், ஆயிலியம், பூசம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்.**

இ. பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூரம், உத்திரம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், உத்திராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் **சித்தயோகம்.**

7. சனிக்கிழமையில்,

அ. கார்த்திகை, சதயம், மகம், உரோகணி, சுவாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **அமிர்தயோகம்.**

ஆ. ஆயிலியம், அஸ்தம், உத்திரம், பூரட்டாதி, சித்திரை, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரணயோகம்.**

இ. அசுபதி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூசம், பூரம், விசாகம், அனுசம், கேட்டை, பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **சித்தயோகம்.**

## 15. வயதுப்பொருத்தம்

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை, இருபத்து ஏழால் பெருக்கி, அதனை நூறால் வகுக்க வரும் மீதி **வயது** எனப்படும். மீதி இல்லையானால் நூறு எனக்கொண்டு கணக்கிட வேண்டும். ஒன்று முதல் நாற்பத்தைந்துக்குள்ளாக வந்த வயதினால் என்றும் துன்பம் உண்டாகும். நாற்பத்து ஐந்து வயதிற்குமேல் நூறு வயதிற்குள் எவ்வளவு உயர்கிறதோ அவ்வளவு நன்மை உண்டாகும்.

## 16. தாராபலன்

மனைக்குரியவரின் நட்சத்திரத்திற்கும் மனை நட்சத்திரத்திற்கும் கண்ட தொகையை ஒன்பதில் வகுத்து வரும் மீதி, **தாரை**, அல்லது **தாரா** எனப்படும். மீதி இல்லையென்றால், ஒன்பது எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

ஒன்று மீதியாக வந்தால், சென்ம தாரை- உடற்கேடு

இரண்டு மீதியாக வந்தால், சம்பத்தாரை-செல்வம் உண்டாகும்

மூன்று மீதியாக வந்தால், விபதாரை-விபத்து உண்டாகும்

நான்கு மீதியாக வந்தால், சேமதாரை-செல்வம் பெருகும்

ஐந்து மீதியாக வந்தால், பரதற்தாரை-காரியநாசம்

ஆறு மீதியாக வந்தால், சாதகதாரை - சர்வசித்தி
ஏழு மீதியாக வந்தால், வாததாரை-சனநாசம்
எட்டு மீதியாக வந்தால், விரதிய தாரை - சர்வசித்தி
ஒன்பது மீதியாக வந்தால், பரமதேர தாரை-அயிரோகயம்

பொதுவாக ஐந்து, மூன்று, ஏழு ஆகியவை மீதியாக வந்தால், தீங்கும் நோயும் வறுமையும் உண்டாகும். மீதியாக ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது ஆகியவை மீதியாக வந்தால், செல்வம் பெருகும். புத்திர விருத்தியும் மகிழ்ச்சியும் உண்டாகும். இருபத்து ஏழாவது நட்சத்திரம் வந்தால், நோயால் மிகவும் வருந்துவார்கள்.

# மனையடி சாத்திரம்

(தொகுப்பு நூல்)

## நூல்

## 1. கடவுள் வணக்கம்

### யானைமுகன் வணக்கம்

பரிவுடன் முன்னூல் செய்த
    பழமொழி சிற்ப நூலைத்
தெரிதான தமிழி னாலே
    சிற்றறி வதனால் செப்ப
பொரியவல் இளநீர் அப்பம்
    போதவே அமுது செய்யும்
கரிமுகன் திருத்தாள் போற்றி
    கருத்துடன் வணங்க லுற்றேன். 1

*(1005b- பா.எண். 1)*

*(இதன் பொருள்)* முன்னாளில் வடமொழியில் சொல்லப் பட்ட சிற்ப நூலை, அனைவருக்கும் தெரிவிக்கும் பொருட்டு, என் சிற்றறிவினைக் கொண்டு தமிழினால் மொழி பெயர்த்துச் சொல்லுவதற்குப் பொரி, அவல், இளநீர், அப்பம் ஆகியவற்றை விரும்பியுண்ணும் யானைமுகனின் திருத்தாள்களை வணங்கிப் போற்றுகின்றேன்.

### சிவன் வணக்கம்

வேதநான் மறைக ளாகி
    விளங்குமும் மூர்த்தி யாகி
பூதலந் தனைப்ப டைத்த
    புண்ணியன் தாளைப் போற்றித்
தீதிலா மயனார் சொன்ன
    சிற்பசாஸ் திரமாம் நூலை
நீதியாய்த் தமிழி னாலே
    நிலைபட உரைக்க லுற்றேன். 2

*(1005b : 2)*

(இ.ள்) இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்று கூறக்கூடிய நான்கு வேதங்களாகியும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று கூறக்கூடிய மும்மூர்த்திகளாகியும், ஆக்கல், காத்தல், அழித்தல் என்று சொல்லப்படும் முத்தொழில் களையும் நடத்த இவ்வுலகங்களையெல்லாம் படைத்த இறைவனின் திருத்தாள்களைப் போற்றிச் செய்து, மயனார் வடமொழியில் சொன்ன மனை நூலைத் தமிழிலும் சொல்லத் தொடங்குகின்றேன்.

### அவையடக்கம்

பழத்தொடு நெய்பாற் கண்டு
பகர்ந்தோர் அடிசில் தன்னைக்
கழிப்பரோ நல்லோர் தாமும்
கலந்ததில் கல்கி டந்தால்
வழிப்படு சாத்தி ரத்தின்
வளமைபுல் லறிவன் கூற
பழுததில் உறினும் கற்றோர்
பாவிப்பார் நலமாய்த் தானே. 3

(ம. நூ. : 2)

(இ. ள்) வாழைப்பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்கரையும் கலந்த உணவில் கல் கிடந்தால், அந்தக்க கல்லை மட்டும் நீக்கிவிட்டு, இன்பமாக உண்ணுவதைப் போல, சிற்றறிவு உடையவனாகிய நான் சொல்லும் இந்நூலில் பிழைகள் இருப்பின், மேலோர் அக்குற்றங்களைக் களைந்து நல்ல நூலென ஏற்றுக் கொள்வார்கள்.

## 2. சிற்பன்

### சிற்பன் இலக்கணம்

சிகையுமெக் ஞோப விதம்உத்த தரிக
திருந்திய ஏகவேட் டியுமாம்
சுகமுயர் கர்ண குண்டலங் கரத்தில்
துலங்கிய கமண்டலம் நுதலில்
அகமகிழ் கந்த அட்சதை பூசை
அருள்செப மாலையும் கூர்ம
உகமைசேர் பீடம் வேதபா டமுமாய்
உதிப்பவன் சிற்பனாம் உரையே. 4

*(742 : 8)*

*(இ. ள்)* சிகையாகிய உச்சிக் குடுமியும், முந்நூலும், உடையாகிய ஆடையும், உத்தீரியமும் ஏக வேட்டியும், காதிலே குண்டலமும், கையிலே கமண்டலமும், நெற்றியில் கெந்த அட்சதையும் சிவபூசையும் செபமாலையும் கொண்டு கூர்மாசனத்தோடும் வேதபாராயணத்தோடும் விளங்கப் பட்டவன் சிற்பன்.

### இதுவுமது

பொன்னொடு பூண நூலும்
பவித்திரம் கையி லிட்டுச்
சென்னியில் சிகைய தாகச்
செய்யதோர் நிறத்த னாகி[1]
மன்னிய மனமும் மிக்க
மனமிகத் துய்ய னாகி
அன்னிய சாதி கூடா
தறிந்தவன் சிற்பன் தானே. 5

*(886 a, 3)*

*(இ. ள்)* சிற்பன் என்பவன், பொன்னாலாகிய பூணூலிட்டுப் பவித்திர மோதிரம் விரலில் அணிந்து,

---

1. தேவபூ சையில் விரும்பும்

தலையில் குடுமியை முடிந்துகொண்டு, தேவபூசையில் விருப்பம் உடையவனாக, சிவந்த நிறத்தை உடையவனாகத் தூய்மையான மனத்தைக் கொண்டவனாக, பிற குல மாதர்களைக் கூடாதவனாக இருப்பான்.

## இதுவுமது

சுத்தமாய் வேத மோதித்
துய்யதோர் ஆடை பூண்டு[1]
சித்தமும் வாக்கும் ஒன்றாய்ச்
சேர்த்துக்கோ பங்க டிந்து
நித்தமும் அனுஷ்டா னங்கள்
நிறைவுடன் பூசை பண்ணி
வித்தக நூலைக் காலை
விளம்புதல் இயற்கை யாமே.[2] 6

*(ம. நூ. : 178)*

*(இ. ள்)* சிற்பன் என்பவன், சிறப்பாக நடப்பவனாகவும், சுத்தமாக நான்கு வேதங்களையும் ஓதுபவ னாகவும் தூய்மையான ஆடையை மடித்து சோமன் மறுதிட்டுக் கட்டி, அறிவில் தெளிவுடையவனாகவும், கோபத்தை நீக்கியவனாகவும், சிறப்பான அனுட்டானங்களைத் தக்க நாட்களில் செய்து, பூசைகளைச் செய்து, விடியற்காலையில் எழுந்து பலகலை நூல்களையும் ஓதவல்லவனாக இருப்பவனைத் தேடி மனைகோல வேண்டும்.

## சிற்பனையன்றி பிறர் கட்ட பலன்

ஆலயம் நகரம் பட்டணம் கிரகம்
அருளிய தடாகம்கூ பங்கள்
சீலமாம் சிற்பன் செய்கின்ற செய்கை
செய்வதைத் தப்பியே வேறோர்

1. துய்ய நல்

2. நித்தமோர் அனுட்டா னங்கள்
நெறிதவ றாமல் செய்து
பத்தியாய் நூற்க னாய்ந்த
பண்பினன் சிற்ப னாமே.

தாலத்தில் அன்னிய சாதியோன் செய்தால்
தாரணி மன்னவர் தாக்கும்
சாலவே கர்த்தன் தனக்குமே தோசம்
சஞ்சலம் மிகவுமுண் டாமே. 7

(742 : 9)

*(இ. ள்) ஆலயமாகிய கோயில்கள், நகர நிர்மாணம், பட்டணங்கள் நிர்மாணம், வீடு கட்டுதல், நீர்நிலை அமைத்தல், கிணறுகள் அமைத்தல் இவைகளுக்குச் சிற்பன் செய்கின்ற சடங்குகளை அன்னிய சாதியைச் சேர்ந்தவன் செய்தால், மன்னர்களால் கேடுண்டாகும். மனையைக் கட்டுபவனுக்கும் ஆகாது. மனத்துயரத்திற்கு ஆளாவார்கள்.*

## இதுவுமது

மனையது எடுக்கும் போது
வள்ளுவன் அன்னிய சாதி
அனைவர்கள் அஸ்தம் தன்னால்
அவசியம் சூனி யந்தான்
முனையது ஸ்ரீயும் மாடும்
முறைமுறை மரண மாகும்
மனையது தீதாம் என்று
மனையளந் தவரைத் தள்ளே. 8

(886 : 5)

*(இ. ள்) வீட்டினைக்கட்டும்பொழுது, சிற்பனைத்தவிர்த்து, வள்ளுவன், பிற சாதியினரின் கையால் சடங்குகளைச் செய்ய, மனையானது பாழாகும். மனைக்குரியவனின் மனைவி மரணமாவாள். செல்வம் கையை விட்டுப் போகும். மனைக்குக் கேடுண்டாகும். ஆகவே, பிறரைக்கொண்டு மனை கோலக்கூடாது.*

## சிற்பனுக்குத் தரவேண்டியவை

தள்ளிய பின்பு தானும்
தலைமுறை முனிவ னுக்கு
அள்ளியே சொர்ணம் வஸ்திரம்
அநேகநாள் அளித்துப் பின்பு

வள்ளிநா யகனை வாழ்த்தி
வருகின்ற பெரியோர் கட்கு
உள்ளிய அமிர்தம் ஊட்டி
உயர்மனை எடுக்கச் சொல்வாம். 9

(886 a : 4)

*(இ. ள்) தலைமுறை தலைமுறைகளாக மனைகளைக் கட்டிவரும் சிற்பனுக்குப் பொன், ஆடைகள் முதலானவற்றைப் பல நாட்களுக்கும் கொடுத்து, வள்ளி நாயகனாகிய முருகனை வழிபட்டுப் பெரியோர்களுக்கு சுவைமிக்க உணவினை விருந்தாகப் படைத்து, அதன் பின்னர் உயர்ந்த மனையை எடுக்கச் செய்ய வேண்டும்.*

**இதுவுமது**

நல்லதோர் சிற்ப னுக்கு
நன்மனை கோலும் போது
சொல்லுநற் றுகிலும் பொன்னும்
சுகந்தமும் மிகவ ளித்து
வல்லவர் வகுத்துக் கேட்டு
வருந்தியே பொருத்தம் பார்த்துச்
செல்லவம் மயனுஞ் சொன்ன
சிற்பநூல் பலிக்குந் தானே. 10

*(இ. ள்) ஒருவன் மனைகோலும் நாளில் சிற்பநூல் ஆசிரியனுக்குப் புதிய சோமனும் கைப்பொருளும் சந்தனம் புட்பம் முதலான வெகுமதியும் அளித்து பொருத்தம் கேட்கவென்று மயனால் சொல்லியது. (சி. நூ. பா. : 79)*

**சிற்பன் தொழில் நுட்பம்**

சிற்பனும் முழக்கோல் மட்டம்
திரள்சங்கு கலன்பெய் பேழை
கெற்பமாங் கயிறி னோடு
திரள்முளை தளத்தின் செய்கை

வற்கமா மரங்கள் வெட்டும்
வகையதன் குறியி டங்கள்
நிற்குந்தா னுத்தி ரத்தூண்
நேரிசை அனைத்தும் சொல்வாம். 11

*(இ. ள்)* சிற்பன் முடிக்கோல், மட்டக்கோல், சங்கு, கலன் பேழை, கெற்பம், பிடிக்கயிறு, முளையளவு, தளத்தின் செய்கை, மரவகை, வெட்டும் வகை, மரத்தின் குறியிடங்கள், தூண் மட்டம், உத்திர மிசைத்தல் முதலானவற்றைச் சொல்லத் தொடங்கியது. *(சி. நூ. பா. : 77)*

**இதுவுமது**

வளையொடு விட்டம் சட்டம்
மற்றபல் லிசைகள் நல்ல
அளவுகோல் கைம ரங்கள்
அதின்முது குயரம் சத்தி
விளைவிடு வாசற் கூறு
முகுநிலை கதவு தானும்
உளவதன் இயற்கை தன்னை
உள்ளவா றெடுத்து ரைப்பாம். 12

*(இ. ள்)* வளை, விட்டம், சட்டம், பற்பல இசைத்தல், அளவு, கால் மரங்கள், கை மரங்கள், முகட்டுயர்ச்சி, வாசலின் அகல அளவு, நிலையின் அளவு, கதவு, தாழ்ப்பாள் முதலான பற்பல வகையின் இயல்பு கூறுவாம். *(சி. நூ. பா. 78)*

# 3. நிலம்

## கிராமம்

### நிலத்தின் இயல்பும் பலன்களும்

### வடிவம்

செல்லும் கத்தரி தோன்றுகோல் போலவும்
வெல்லும் முக்கோணம் விளம்பிய போலவும்
பல்லும் நேத்திரம் புகன்றன போலவும்
கல்லு மேதலை கருதிய போலவே. 13

*(886 c : 53)*

*(இ. ள்)* கிராமத்தை உருவாக்குவதற்குக் கத்தரிக்கோல் போலவும், முக்கோணத்தைப் போலவும் கண்களைப் போலவும், இருக்கும் நிலங்கள் பொருந்தாது. இத்தகைய நிலங்களில் வீடுகளைக் கட்டக் கூடாது.

### இதுவுமது

போல மத்தளம் புகலடைக் காய்போல்
ஆல உள்ளும் அறிய புறம்புமாய்
கோல மான குவலயம் தன்னிலே
ஏல மாறி இசையஒண் ணாதிதே. 14

*(886 c : 54)*

*(இ.ள்)* இப்புவியில் மத்தளம் போலவும், கொட்டைப்பாக்கு போலவும் உள்ளும் புறமுமாக இருக்கப் பட்ட நிலங்களிலும் வீடுகளைக் கட்டக்கூடாது.

### மண்தன்மை, உயர்வு தாழ்வு

சேரும் உப்பு சிறக்கும் கிராமத்தில்
நேரும் மத்திபம் நெருங்குமூ லையிலும்
பாரும் பள்ளம் பகர்நில மாகிலும்
ஊரும் தண்ணீர் ஓடும் நிலமதே. 15

*(886 c : 55)*

*(இ. ள்)* உப்பு நிலமாக உள்ள கிராமத்திலும் அல்லது கிராமத்தின் மத்தியிலும், மூலையிலும் பள்ளமான

*நிலத்திலும், தண்ணீர் ஓட்டம் உள்ள நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது. (886 C : 55)*

### *கோயில் இடம், பாம்புப்புற்று உள்ள இடம்*

வரவு சொல்லும் வகுக்கும் பலபேர்கள்
திறமுடன் கூடாது என்ற நிலத்திலும்
உறையும் கோபுரம் உற்ற நிலத்திலும்
திரையும் அரவம் சேர்ந்தபுற் றுமிதே. 16

*(886 C : 56)*

*(இ. ள்) நல்மொழி பேசக்கூடிய பலபேரும் வேண்டாம் என்று தடுக்கும் நிலத்திலும் கோயிலுக்காக விடப்பட்ட நிலத்திலும் பாம்பின்புற்று இருந்த இடத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது.*

### *புற்றிட்ட இடம், சுடுகாட்டு இடம், தொழுவம்*

புற்றும் பேரும் புத்துவாய் சீறிய
சற்றும் மேவும் சதுர்நில மாகிலும்
தொற்று மேவும் சுடலைப் பதியிலும்
கத்து மாடுகள் கழறுமந் தையதே. 17

*(886 C : 57)*

*(இ. ள்) புற்று இட்டிருந்த நிலத்திலும் சுடுகாட்டு நிலத்திலும், மேடிட்ட இடத்திலும், கால்நடைகள் கட்டபட்டிருந்த நிலத்திலும் வீடுகளைக் கட்டக்கூடாது.*

### *அகலம் குறைந்த, நீர்நிலைக்கு அருகிலுள்ள இடங்கள்*

சேதம் மேற்குச் சிறந்த கிழக்குடன்
நீதி யாம்மனை நிறைதா யிருந்தாலும்
போத மேசலம் புகழ்நெடுக் காகிலும்
வேதம் ஓத விளங்கும் நெய்யதே. 18

*(886 C : 58)*

*(இ. ள்) மேற்குப் பார்த்த நிலம் சேதத்தைத் தரும். கிழக்கு சிறந்தது. அகலம் குறைந்த நீர்நிலைக்கு அருகிலுள்ள நிலத்திலும், வேதம் ஓதி வேள்வி செய்யும் பொழுது*

பயன்படுத்தபடும் நெய்யின் மணமுடையதாக இருக்கும் நிலத்திலும் வீடுகட்டக்கூடாது.

### மண்ணின் மணம்

நெய்யுடன் தயிரும் நேரும்புத் தேனுடன்
சொய்யும் எண்ணெய் குறிக்கும் உதிரமும்
பைய மச்சம் பகரும் சவமுடன்
வெய்ய பட்சி இருக்கைபொல் லாகுதே. 19

*(886 c : 59)*

*(இ. ள்)* நெய், தயிர், தேன், எண்ணெய், இரத்தம், மீன், மனம், பறவை முதலானவற்றின் மணம் பொருந்தியதாக அமையும் நிலத்திலும் வீடு கட்டக்கூடாது.

### சிற்ப நூல் பண்டிதர் கூற்று

பொல்லா திந்தப் புகலும் வழிமுறை
வல்லாண்மை கண்டு அறிந்திவை யெல்லாம்
எல்லாம் உணர்ந்த சிற்பநூல் பண்டிதர்
கல்லார் சிறந்தநூல் காட்சிஎய் தாதிதே. 20

*(886 c : 60)*

*(இ. ள்)* கிராமங்களில் எந்தெந்த இடங்களிலெல்லாம் வீடுகட்டலாகாது என்று கூறக்கூடிய இந்த வழிமுறைகளை யெல்லாம் தங்களுடைய வல்லமையினால், சிற்ப நூலினைக் கற்றுத் தேர்ந்த பண்டிதர்கள் அறிவார்கள். இத்தகைய நூல்களைக் கல்லாதவர் இவற்றை உணர மாட்டார்கள்.

### பொது

### வடிவம்

நாடிய பூமி தன்னில்
நலமுடன் துடிபோல் வேல்போல்
நீடிய கரைசல் தோட்டம்
நிலச்சுழி மகரம் சூழும்

ஓடிய கயமும் நீக்கி
உயர்த்தப் படியே யாகில்
கூடுவேற் கண்ணி னாளே!
குலமண தேறா தென்னே! 21
(886 a : 148)

*(இ. ள்)* உடுக்கையைப் போலுள்ள பூமியும் வேல் போன்ற பூமியும், ஏரிக்கரையிலுள்ள பூமியும் சோலைகளைச் சார்ந்த பூமியும், அகண்ட குளத்திற்கு அருகிலுள்ள பூமியும் சன்னியாசிகள் வசிக்கும் பூமியும் மனை கட்டுவதற்கு ஆகாதவை. அவ்வாறு கட்டினால், அந்த வீடு நசிந்து போகும்.

**இதுவுமது**

ஆண்டுதான் படியே பார்க்க
ஆனநற் சூலம் போலும்
நீண்டுகாண் பதுவே யாகா
நீள்நிலம் ஒத்துக் காணில்
சென்றுபூம் படியே! நீபார்
செல்வமுண் டதனில் நாளும்
நன்றுவென் றறிந்து முன்னோர்
நலம்பெற உரைத்த வாறே. 22
(886 a : 140)

*(இ. ள்)* வீடு கட்டும் நிலம் சூலம் போன்று இருப்பின், அங்கு வீடு கட்டுதல் கூடாது. நீண்ட நிலமாக ஒத்து இருப்பின், அங்கு வீடு கட்டினால் எந்நாளும் செல்வ முண்டாகும் என்பதைப் பெண்ணே! நீ அறிந்து கொள்வாயாக.

குறிப்பு : பலமாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

தன்நிறத் துடனே பார்க்கத்
தக்கதோர் சூலம் போலும்
நின்றுகாண் பதுவே யாகா
நீனிலம் ஒத்துக் காணில்

சென்றுபோம் படிநீ பாராய்
செல்வமுண் டதிலே நாளும்
நன்றுதென் றறிந்து முன்னோர்
நலம்பெற உரைத்த வாறே.

*(சி. நூ. பா. : 234)*

## இதுவுமது

முச்சது ரான பூமி
முடுகிய புலாலும் நாறி
இச்சையாய் மேற்கும் தெற்கும்
இடமுடன் கிழக்கும் தாழ்ந்தால்[1]
வச்சதோர் நிதியும் மேவறாய்
மக்களும் மரணம் என்றும்[2]
அச்சமும் தோன்றும் பாழாம்
அம்மனை இயல்பு தானே ! 23

*(இ. ள்) முக்கோணமான பூமியிலும், மாமிச நாற்ற முடைய பூமியிலும், மேற்கும் தெற்கும் கிழக்கும் தாழ்ந்த பூமியிலும் மனை கோலில், தனதானியம் முதலாகிய சம்பத்து போய் புத்திரர்கள் மரணமடைவதல்லாமல் அம்மனையும் பாழாம். (சி. நூ. பா. : 231)*

## இதுவுமது

வட்டமுக் கோணம் போலும்
வயிற்சாரை மயிலைப் போலும்
கொட்டுநற் குடங்கள் போலும்
குரங்குமீன் பன்றி போலும்
மெட்டுள மழுவும் சங்கு
மெலியவே விளக்குச் சூலம்
இட்டிய வடிவு போல
இசைந்தநல் பூமி யாகா. 24

*(886 a : 149)*

1. இடமுடன் தாழ மானால்
2. மக்களும் சாவார் கண்டீர்

*(இ. ள்) வட்டத்தையும் முக்கோணத்தையும் போன்ற வடிவங்களுடனும் சாரை, மயில், குடம், குரங்கு, மீன், பன்றி, மழு, சங்கு, விளக்கு, சூலம் முதலான வடிவங்களுடனும் இருக்கும் நிலங்களில் வீடுகட்டலாகாது.*

**வடிவமும் உயர்வு தாழ்வும்**

பல்லிகள் ஓந்தி போலும்
பாம்புடன் பறவை போலும்
மல்லிகை முடிந்த கூந்தல்
மங்கையே ! மேற்கும் தெற்கும்
சொல்லிய தாழ்ந்த பூமி
சுகமுறா தென்றும் சோரான்
துல்லியப் படவே யெல்லாம்
துணிந்துநீ அறிந்து கொள்ளே ! 25

*(இ. ள்) பல்லி, ஓணான், பாம்பு, பறவையைப் போலும் உள்ள பூமி வீடு கட்ட ஆகாது.* மேற்கும் தெற்கும் தாழ்ந்த பூமியும் மனைகோல தீமையுண்டாகும். *(சி. நூ. பா. : 223)*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்.**

பல்லிகள் ஓந்தி போலும்
பாம்புகள் பறவை போலும்
மல்லிகை ஊர்கை போலும்
அடையுடன் மேற்குத் தெற்கு
தல்லிய தாழ்ந்த பூமி
சதுர்முக வரினும் ஆகா
சொல்லிய படியே யெல்லாம்
துணிந்துநீ அறிந்து சொல்லே.

**நிலத்தின் தன்மை**

அளந்ததோர் குழியில் மண்ணை
ஆழத்தில் மேவி விட்டால்
வளந்திடில் உத்த மந்தான்
மத்திமம் ஒக்கு மாகில்

தளந்தது குறையு மாகில்
சாலவே அதமம் என்று
விளம்பினோம் குழியில் மண்ணை
மிக்கதோர் குறிகள் தானே. 26

*(886 a : 29)*

(இ. ள்) மனை கோலுதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நிலத்தின் நடுவே ஒரு முழ நீளம், ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் குழியைத் தோண்டி, அதிலுள்ள மண்ணை எடுத்து, மீண்டும் அந்தக் குழியில் கொட்டினால் மண் மீதி இருக்குமானால், **உத்தம நிலமாகும்**. மண்ணைக் கொட்ட குழியில் மீதி இன்றிச் சமமாக இருக்குமானால், **மத்திம நிலமாகும்**. குழியில் மண்ணைக் கொட்ட, குறைவாக இருக்குமானால் **அதம நிலமாகும்**.

## இதுவுமது

ஆக்கிய குழியை வெட்டி
அகன்றமண் ணதனை மீளத்
தேக்கியே நிரப்பும் போது
சிறிதுமண் தாழிற் கேடாம்[1]
தாக்கிய குழியின் மண்ணும்
சமதளம் மத்தி பந்தான்
நீக்குமண் அதிக மானால்
நிறைவரச் செல்வ மாமே.[2] 27

(இ. ள்) குழியை வெட்டி மேலே போட்டிருக்கும் மண்ணை மீளவும் குழியில் தள்ளும் போது மண் குழிக்குக் குறைந்து போகுமாகில் கெடுதி உண்டாகும். மண் சமனாகில் மத்திமம் மண் அதிகமாகில் அம்மனையில் வீடு கட்ட, அளவற்ற செல்வம் கிடைக்கும். *(சி. நூ. பா. : 210)*

---

1. தேக்கியே நிரப்பும் போது
சிறிதுமண் மிஞ்ச நன்றாம்
2. நீக்கிமண் குறையு மானால்
நிறைவிலா செல்வ மாமே.

### நீரிட்டுக் காணுதல்

நிலமது முழம தாக
நீர்தனை விட்ட போதே
வலமது புரியு மாகில்
வான்பொருள் வந்துசேரும்
இலமிடம் புரியு மாகில்
ஈண்டிசை மரண மாகும்
சலமது குமிழி யாகில்
தாட்சியாம் வெந்து போகும். 28

*(886 a : 25)*

*(இ. ள்)* மனைக்கு நடுவே சதுரமாக ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் இருக்கும்படியாக ஒரு குழியைத் தோண்ட வேண்டும். அதில் நிறைய நீரை விடவேண்டும். நீரை விட்ட பெழுது நீரானது வலம்புரியாகச் சுற்றினால் மனைக்கு உரியவனுக்கு மிகுந்த செல்வம் வந்து சேரும். நீரானது இடம்புரியாகச் சுற்றினால் மனைக்கு உரியவன் மரண மடைவான். குழியில் உள்ள நீரில் நீர்க்குமிழி தோன்றினால், அம்மனையில் வீடு கட்டினால், அந்த வீடு தீயில் எரிந்து போகும்.

### வேறு

துலங்கிய குழியைக் கெல்லி
சுத்தநீர் விட்ட போது
வலம்புரி வருமே யாகில்
வாழ்வொடு சம்பத் துண்டாம்
இலங்கிய இடமே யாகில்
இயற்றிடில் மனையை அக்கால்
குலமுதல் நசித்துத் தானும்
கொடியநோய்க் கிரையா வானே. 29

*(ம. நூ. பா. : 5)*

### இதுவுமது

நிறையநீர் வார்த்த போது
நீள்கதிர் எழுந்த போது
முறைமையால் வந்து பார்த்து
முற்படி நீருண் டானால்

இறையவன் இல்லம் போலே
இருநிதி பெருகும் என்று
நெறிவளை கையின் மாதே !
தெரிந்தவர் உரைத்த வாறே.[1] 30

*(886 a : 26)*

*(இ. ள்)* மனைக்கு நடுவே சதுரமாக ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் இருக்கும்படியாக ஒரு குழியைத் தோண்ட வேண்டும். அந்தக் குழியில் அந்திப்பொழுதில் அதிகமாக நீர் இட்டு வைத்துச் சூரிய உதயத்தின் பொழுது வந்து பார்த்தால், அதில் நீர் இருக்க, குபேரனுடைய செல்வத்தைப் போல, மனைக்குரியவனின் வீட்டில் செல்வம் பெருகும் என்பதை, நெருங்கிய வளையல்களை அணிந்த பெண்ணே! மனை நூலில் தெளிந்த அறிவுடையவர்கள் இதனைக் கூறியுள்ளார்கள்.

**இதுவுமது**

வத்திப்போய் சிறுக்கில் காலால்
வடிவுறப் பிளக்கு மாகில்
உத்ததோர் நோவு கொள்ளும்
உறும்பதி தனைஇ ழுக்கும்
செத்தவர் சிலபேர் வந்து
செல்வத்தைச் சிதைப்பார் என்று
மத்தநூல் முறைமை யாலே
மயனுமே சொன்ன வாறே. 31

*(886 a : 27)*

*(இ. ள்)* மனைக்கு நடுவே சதுரமாக ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் இருக்கும்படியாக ஒரு குழியைத் தோண்ட வேண்டும். அந்தக் குழியில் அந்திப்பொழுதில் நிறைய நீர் இட்டு வைத்துச் சூரிய உதயத்தின் பொழுது வந்து பார்த்தால், நீர் குறைந்து சிலந்திக் கால்களைப் போல வற்றி விரிந்திருந்தால் வியாதி யுண்டாகும். செல்வம் அழிந்து போகும். மாண்டுபோன பிதுர்களும் சாபமிடுவதன் காரணமாக, மனைக்குரியவனுடைய பொருள்களெல்லாம் நாசமாகும் .

---

1. செய்யதோர் மயனும் சொன்னார்.

## இதுவுமது

தாழ்விலா மனைநடு வேதான்
சதுரமாய் ஒருமு ழத்தில்
ஆழமும் அகலம் கெல்லி
அதனில்நீர் பூவும் விட்டால்
வான்கதி ரோனை நோக்கி
வலமிக வருவ தாகில்
தேன்புவி இடமே சுத்தில்
இயல்மனை எடுக்கப் பாழாம். 32
*(886 a : 24)*

*(இ. ள்) மனைக்கு நடுவில் சதுரமாக ஒரு முழ அகலமும் ஒரு முழ ஆழமும் இருக்கும்படியாக ஒரு குழியைத் தோண்டி அதில் நீரைவிட்டு, அதில் ஒரு பூவை மிதக்கவிடவேண்டும். வானிலுள்ள கதிரவனை நோக்கியுள்ள பூக்கள் வலமாகச் சுற்றிவரில் மிகுந்த நன்மை உண்டாகும். இடமாகச் சுற்றினால் அம்மனையைக் கட்ட, தீங்கு உண்டாகும்.*

## கிழக்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

இந்திரன் மூலை தன்னில்
இயல்புடன் கிழக்கில் நின்றால்
செந்திரு வாசம் ஆவாள்
செம்பொன்னும் சேரும் இன்ப
மைந்தரைப் பெற்று வாழ்வார்
வளர்கன்று காலி சேரும்
முத்தவே மயனார் சொன்ன
முறைமைநூல் இதுகண் டாயே. 33
*(742 : 63)*

*(இ. ள்) இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் பரிமளம் பொருந்திய மலரானது நிற்குமாகில், அதிக சௌந்தரிய இலட்சுமி விலாசமும் தனதானிய சம்பத்தும் சந்தான சம்பத்தும் சந்தான பாக்கியமும் தீர்காயுசும், பசுக்கள் முதலிய கன்றுகாலிகள் சேரும். மயனார் கூறியவை இவை என்பதைக் காண்பாயாக !*

### தென்கிழக்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

அக்கினி மீதில் நின்றால்
ஆயிழை மலடி யாவள்
சொக்கர்வாள் அரவம் தீண்டும்
தீப்படும் மனைஎ டுக்கில்
தொக்கது மிகவும் உண்டு
சோரங்கள் கலகம் உண்டாம்
இக்கரு மயனார் சொன்ன
இசையுநூல் இதுகண் டாயே. 34

*(742 : 64)*

*(இ. ள்)* அக்கினி திசை எனப்படும் தென்கிழக்குத் திசையில் வாசம் வீசுகின்ற மலரானது வந்து நின்றால், அம்மனைக்குரியவனின் மனைவிக்குக் குழந்தைபேறு இருக்காது. பாம்பினால் அச்சம் உண்டாகும். வீடு கட்டினால், அவ்வீடு தீயினால் அழிந்து போகும். துன்பங்கள் மிகுதியாக வரும். கள்வர்கள் பொருள்களைக் கவர்வர். கலகம் உண்டாகும் என்பது மயனார் கூறியுள்ள நூலில் கூறப்பட்டுள்ளது காண்பாயாக!

### தெற்கு திசையில் பூ வந்து நின்ற பலன்

அந்தகன் திக்கு[1] மூலை
அன்புடன் வந்து நிற்கில்
சிந்தனை மிகவும் உண்டாம்
செருக்குதாம் கலகம் உண்டு
பிந்திய தீமை யோடு
பிணியினால் அச்சம் உண்டாம்
செந்தமிழ்ப் புனைந்த பாடல்
தீதில்லா மயன்சொன் னாரே ! 35

*(742 : 65)*

*(இ. ள்)* இமயன் திசை என்று சொல்லப்படும் தெற்குத் திசையில் வாசம் வீசும் மலரானது வந்து நிற்குமாகில், மனதில் குழப்பமும் கலக்கமும் செருக்கும் உண்டாகும். இதனால்

---

1. தெற்கு

கலகம் உண்டாகும். தீமைகள் ஏற்படுவதோடு, நோயினால் அச்சம் உண்டாகும் என்று தமிழில் புனையப்பட்ட பாடலில் மயன் கூறியுள்ளார்.

### தென்மேற்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

கன்னிமூ லையிலே நின்றால்
கைப்பொருள் மிகவுண் டாகும்
அன்னமும் தனமும் சேரும்
ஆயிழை வந்து நிற்பள்
பொன்னொடு தானி யங்கள்
பொருந்திய செல்வம் உண்டாம்
முன்னமே மயனார் சொன்ன
முறைமைநூல் இதுகண் டாயே. 36
*(742 : 66)*

*(இ. ள்)* கன்னி மூலையாகிய தென்மேற்குத் திசையில் மலர் வந்து நின்றால், நல்ல உணவும் மிகுந்த செல்வமும் வந்து சேரும். திருமகள் தன் அருளை வழங்குவாள். பொன் தானியங்கள் முதலானவை எந்நாளும் நீங்காமல் பொருந்தி இருக்கும் என்பதை மயனார் தன் நூலில் கூறியுள்ளார். காண்பாயாக.

### மேற்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

வருணனாம் மேற்கு நோக்கி
வந்துமே நிற்கு மாகில்
இருநிதிச் செல்வம் உண்டாய்
இருக்குமே வினையும் மாறி
கருதிய கருமம் நன்றாம்
கருணையும் பெற்று வாழ்வாள்
மருவிய கனதை உண்டாம்
வளம்பெறு மயன்சொன் னாரே. 37
*(742 : 67)*

*(இ. ள்)* வருண திசையாகிய மேற்குத் திசையில் வாசம் பொருந்திய பூவானது வந்து நிற்கில் சங்கநிதி, பதுமநிதி என்று

சொல்லக்கூடிய பெருஞ் செல்வங்கள் உண்டாகும். தீவினைகள் அனைத்தும் மாறி, நினைத்தவை நிறைவேறும். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி, சிறப்புடன் வளம்பெற்று வாழ்வார்கள் என்று மயன் கூறினார்.

### வடமேற்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

வாயுவின் மூலை தன்னில்
வந்துடன் நிற்கு மாகில்
காயுநோய் கொண்டு சாவன்
களவினால் பொருலும் போகும்
பேயுமே பிடித்துக் கொள்ளும்
பிணம்சுடு காட தாகும்
சேயுமே சாகு மென்று
செயல்பெரு மயன்சொன் னாரே. 38
*(742 : 68)*

*(இ. ள்)* வாயு மூலை என்று சொல்லப்படும் வடமேற்கு திசையில் வாசம் பொருந்திய மலர் வந்து நிற்குமாகில், அம்மனைக்கு உரியவன், காசநோயினால் மரணம் அடைவான். திருட்டினால் பொருள்கள் கையை விட்டுப் போகும். பேய் பிடித்துக் கொள்ளும். மனையானது பிணங்களைச் சுடும் சுடுகாடு போலாகும். மனைக்குரியவரின் புதல்வர்களுக்கும் அழிவு உண்டாகும் என்று மயன் கூறியுள்ளார்.

### வடக்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

குபேரன்தன் திக்கு நோக்கி
குணம்பெற நிற்கு மாகில்
விபரமாய்ப் பொருள்கை கூடும்
வேண்டிய சொர்ணம் சேரும்
சபைநலம் பெரியோன் ஆவன்
தனம்சிந் தனைஉண் டாகும்
அபயம்என் றோரைக் காப்பன்
அருள்பெறு மயன்சொன் னாரே. 39
*(742 : 61)*

*(இ. ள்)* குபேரன் திசையாகிய வடக்குத் திசையில் வாசம் பொருந்திய மலரானது வந்து நிற்குமாகில், செல்வம் வந்து சேரும். பொன், பொருள் மிகும். அம்மனைக்கு உரியவன் சபை நடுவே பெரியோனாக மதிக்கப்படுவான். பிறருக்குப் பொருளை வழங்கும் தர்ம சிந்தனை உடையவனாக விளங்குவான். தன்னிடம் அடைக்கலமாக வந்தோருக் கெல்லாம் உதவுபவனாக இருப்பான் என்று மயன் கூறியுள்ளார்.

## வடகிழக்குத் திசையில் பூ வந்து நின்ற பலன்

ஈசானிய மூலை தன்னில்
    இன்பமாய் இனிது கொண்டு
வாசமாம் அதனில் நின்றால்
    வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனம் பெரியோர்க் கெல்லாம்
    பொருந்திய வனுமே யாவான்
வாசமின் குழலி னாளே !
    மயனுரை நூல்கண் டாயே ! 40

*(742 : 62)*

*(இ. ள்)* ஈசானிய திசை என்று சொல்லப்படுகின்ற வடகிழக்குத் திசையான பரமசிவன் திசையில் பரிமளம் பொருந்திய மலரானது வந்து நின்றால், கனக ஐஸ்வரியமும் தீர்க்காயுசும் புத்திர சம்பத்துடன் வாழ்வும் மேன்மேலும் விருத்தியாகிப் பெருகி, நீடுழிக்காலம் நிலைத்திருக்கும் இவையன்றி, இம்மனைக்குரியவன், பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் உணவு வழங்குபவனாக விளங்குவான் என்பதை, வாசனை உடைய பூக்களைச் சூடியுள்ள கூந்தலை உடைய பெண்ணே ! மயனுரை இது என்பதை அறிவாயாக.

## மனையில் புற்றெழும்பும் இலட்சனம்

எண்டிசையும் கிழக்குமுதல் இந்திரன் அக்கினி
    இடியுமே எமன்நிருதி வருணன் வாயு
அண்டமுறு முதலீசன் நிலையோர் எட்டில்
    அயனாகும் மனைநடுவில் புற்றெடுக்கு மாகில்

மண்டிய சாவுஇந்தி ரனில்செல்வம் அங்கி
மனையிடியும் யமன்துக்கம் நிருதி வாழ்வு
கொண்டல்வரு ணன்மகவு காற்று கூத்தன்
குபேரன்நன் றெழிலீசன் குறுகு நோயே. 41

*(886 a : 182)*

*(இ. ள்)*

| | | | |
|---|---|---|---|
| *மனையின் நடுவே பிரமஸ்தானம்* | | - புற்றெழும்பில் | மரணம் |
| கிழக்கு | - இந்திரன் | - புற்றெழும்பில் | செல்வம் |
| தென்கிழக்கு | - அக்கினி | - புற்றெழும்பில் | மனை இடிதல் |
| தெற்கு | - எமன் | - புற்றெழும்பில் | துக்கம் |
| தென்மேற்கு | - நிருதி | - புற்றெழும்பில் | வாழ்வு |
| மேற்கு | - வருணன் | - புற்றெழும்பில் | புத்திரர்பிறப்பு |
| வடமேற்கு | - வாயு | - புற்றெழும்பில் | மரணம் |
| வடக்கு | - குபேரன் | - புற்றெழும்பில் | நன்மை |
| வடகிழக்கு | - ஈசானன் | - புற்றெழும்பில் | வியாதி |

## இதுவுமது

இந்திரன் செல்வம் அக்கினி மனையும்
இடியுமே எமன்திசை துக்கம்
அந்தமாம் நிருதி நன்மையாம் வருணன்
அருளிய புத்திர இலாபம்
உந்திய வாயு துக்கமாம் குபேரன்
ஓங்கிய நன்மைஈ சானியன்
பிந்திய பிணியாம் பிரமஸ்தா னத்தில்
பெருகிய சாவென் புற்றே. 42

*(742 : 93)*

*(இ. ள்)*

| | | | |
|---|---|---|---|
| மனையில் | கிழக்கில் | புற்றெழும்பில் | செல்வம் சேரும் |
| தென்கிழக்கு | பாகத்தில் | புற்றெழும்பில் | மனை இடியும் |
| தெற்கு | பாகத்தில் | புற்றெழும்பில் | துக்கம் உண்டாகும் |
| தென்மேற்கு | பாகத்தில் | புற்றெழும்பில் | நன்மையாகும் |

---

*41. மயநூல், சுவடி எண். 886 a, பா.எண். 182*

*42. சில்ப சாத்திரம், சுவடி எண். 742 , பா.எண். 93*

மேற்கு பாகத்தில் புற்றெழும்பில் புத்திர இலாபம்
வடமேற்கு பாகத்தில் புற்றெழும்பில் துக்கமாகும்
வடக்கு பாகத்தில் புற்றெழும்பில் செல்வம் கிடைக்கும்
வடகிழக்கு பாகத்தில் புற்றெழும்பில் பிணி உண்டாகும்
மத்திய பாகமாகிய பிரமஸ்தானத்தில் புற்றெழும்பில் மரணம் ஏற்படும்.

## இதுவுமது

பிரமனில் எழுந்த புற்று
பிணியொடு சாவு சொல்லும்
இரவிமேல் எழுந்த புற்று
இனியதோர் இன்பம் சொல்லும்
கரவினால் அங்கி தன்மேல்
கட்டிய மனைதான் பாழாம்
நிரமிகு சாவு தெற்கு
நிருதிதான் நாச மாமே. 43
(1005 b)

(இ. ள்) மனைக்கு நடு இடமான பிரமதானத்தில் புற்றெழும்பினால், மனைக்குரியவனுக்கு நோயும் வியாதியும் உண்டாகும். கிழக்குத் திசையில் புற்றெழும்பினால் இன்பம் உண்டாகும். அக்கினி திசையான தென்கிழக்கு மூலையில் புற்றெழும்பினால், மனை இடிந்து போகும். தெற்கு மூலையில் புற்றெழும்பினால் மரணம் உண்டாகும். தென்மேற்கு மூலையான நிருதி திசையில் புற்றெழும்பினால் நாசம் உண்டாகும்.

குறிப்பு : தென்மேற்கு மூலையான நிருதி திசையில் புற்றெழும்பினால் நன்மைகள் கிட்டும் என்று பிறபாடல்கள் கூறுகின்றன.

## இதுவுமது

தாண்டிய வருணன் தன்மேல்
தையலாள் மக்கள் பேறு
பூண்டினம் காற்று பொன்போம்
பொருந்திடும் குபேரன் வாழ்க்கை

வேண்டிய தன்மைஈ சானன்
மேலெழந் திடும்புத் தாகில்
பாண்டவர் தங்க ளைப்போல்
பதியைவிட் டகல்வ தாமே. 44
*(1005b)*

*(இ. ள்) மனையில் வருண பாகத்தில் புற்றெழும்பினால் மக்கள் பேறு உண்டாகும். வாயு மூலையில் புற்றெழும்பினால் மனைக்குரியவரின் பொன் கையைவிட்டுப் போகும். குபேரன் திசையாகிய வடதிசையில் புற்றெழும்பினால் நிறைவான வாழ்க்கை உண்டாகும். வடகிழக்காகிய ஈசானன் திசையில் புற்றெழும்பினால் பாண்டவர்களைப் போல தாங்கள் வாழுமிடத்தில் இருந்து அகல நேரிடும்.*

## இதுவுமது

நடுவும் கிழக்கு முதலெட்டும்
நடுவளை தன்னில் புத்தெடுத்தால்
நடுவாய் எண்ணிப் பலன்சொல்லும்
அதனில் சாவு செல்வமதாம்
இடியும் தெற்கு துக்கமதாம்
என்னும் சிறிய புத்திரனும்
மடியும் மரணம் நன்மையதாம்
மற்ற வியாதி அதுவாமே. 45

*(இ. ள்) நடுவும் கிழக்கு முதல் எட்டு திசைகளிலும் மனையில் புற்றெடுக்கில் முறையே பலன் சொல்லுவது. நடுவாகில் சாவு; கிழக்காகில் செல்வம்; தென்கிழக்காகில் மனை இடிவு; தெற்காகில் துக்கம்; தென்மேற்காகில் பசி; மேற்காகில் புத்திரர் பேறு; வடமேற்காகில் மரணம்; வடக்கு நன்மை; வடகிழக்கு வியாதி. (சி. நூ. பா. : 472)*

### இதுவுமது

அறையும் இந்திரன் ஆன கிழக்கினில்
நிறையும் செல்வம் நெருங்கிப் பெருகிடும்
திறையும் அக்கினி தென்கிழக் காயிடிற்
குறையு மேமனை குமுறி யிடிக்குமே. 46

*(சி. நூ. பா. : 491)*

*(இ. ள்) மனையில் இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் புற்று எழும்பினால் நிறைந்த செல்வம் உண்டாகும். அது மேலும் மேலும் பெருகும். தென்கிழக்குத் திசையாகிய அக்கினி திசையில் புற்று எழும்பினால் மனையானது இடியும்.*

### இதுவுமது

போற்றும் எமன் புகலுந்தெற் காயிடில்
தோற்று துக்கம் துடருமே மாந்தர்க்கு
ஏற்று நிருதி எங்குந்தென் மேற்கிடில்
நாற்றிசை கீர்த்தி நவிலும்வாழ் உண்டாமே. 47

*(சி. நூ. பா. : 492)*

*(இ. ள்) மனையில் எமன் திசையாகிய தெற்குத் திசையினால் புற்று எழும்பினால், மனைக்கு உரியவருக்குத் துக்கம் உண்டாகும்ய நிருதி மூலையாகிய தென்மேற்குத் திசையில் புற்று எழும்பினால், மனைக்கு உரியவருக்கு நிறைந்த வாழ்வும் மிகுந்த புகழும் கிட்டும்.*

### இதுவுமது

கொண்ட வருணன் கூறுமேற் காயிடில்
வண்டமிழ்ப் பாவலர் வகுக்குஞ்செல் வங்களாம்
தண்டிடா வாயு தகும்வட மேற்காகில்
பண்டி தங்கள் பொய்யாது மரணமே. 48

*(சி. நூ. பா. : 493)*

*(இ. ள்) மனையில் வருணன் திசையாகிய மேற்குத் திசையில் புற்றெழும்பில் செல்வங்கள் மிகுதியாகக் கிடைக்கும். வாயு திசையாகிய வடமேற்குத் திசையில்*

புற்றெழும்பில் மனைக்கு புற்றெழும்பில் மனைக்கு உரியவனுக்கு மரணம் உண்டாகும் என்று சாத்திரங்கள் கூறியுள்ளன.

**இதுவுமது**

பாரு மேருபே ரன்வடக் காயிடில்
சீருஞ் செல்வம் சிறப்புமுண் டாகுமே
வாரு மீசன் வடகிழக் காயிடில்
கோரும் வியாதி குடியும் நசிக்குமே. 49

*(சி. நூ. பா. : 494)*

*(இ. ள்)* மனையில் குபேரன் திசையாகிய வடக்கு திசையில் புற்றெழும்பில் சிறப்பும் செல்வங்களும் உண்டாகும். ஈசானிய திசையாகிய வடகிழக்கு திசையில் புற்றெழும்பினால் மனைக்கு உரியவனுக்கு வியாதிகள் தோன்றும் அவனுடைய குடியும் அழிந்து போகும்.

**இதுவுமது**

பாரில் அட்டமர் பகரும் நடுவினில்
சேரும் பிரமம் சிறக்க இவற்றின்முன்
கூறும் நட்டம் குறைந்திடும் போதெல்லாம்
கோருஞ் சிந்தை குறிக்குந்தெய் வங்களே. 50

*(சி. நூ. பா. : 495)*

*(இ. ள்)* மனையில் எண்டிசைகளுக்கும் நடு இடமானது பிரமதானமாகும். இந்த இடமானது தெய்வங்கள் உறையும் இடமாகும்.

**இதுவுமது**

வஞ்சி கேளும் வகுக்கும் தருமமாம்
மிஞ்சு பிரமம் மிகுந்திடும் தானத்தில்
செஞ்சேல் புற்றுச் செழிக்கக் கிளம்பிடில்
கஞ்ச னானை கருது மிகசாவே. 51

*(சி. நூ. பா. : 496)*

*(இ. ள்)* பெண்ணே கேட்பாயாக ! மனையின் பிரமதானத்தில் கரையான் புற்று செழிப்புற எழும்பினால், அந்த மனைக்குரியவனுக்கு உறுதியாக மரணம் நேரும்.

## பூமி சல்லியம்

நல்லதோர் முகூர்த்தம் பக்கம்
நாளது பொருத்தம் கொண்டு
கெல்லிதான் பார்க்கும் போது
கரிஎழில் நோய் தாகும்
வல்லிய விறகு காணில்
வான்பொருள் சேத மாகும்
புல்லிய உமிய தாகில்
பொருளது கேட தாமே. 52

*(886 a : 18)*

*(இ. ள்)* நல்ல நாள், திதி, பொருத்தங்களை ஆராய்ந்து மனைக்கு நடுவில் தோண்டிப் பார்க்கும் பொழுது முதலில் கரி வெளியே தெரியுமானால் மனைக்குரியவனின் பெரும் பொருள் அழிந்துபோகும். உமி வெளிப்படுமானால் அம்மனைக்கு உரியவனுக்குப் பொருள்கேடு உண்டாகும்.

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

நல்லதோர் நாளும் பக்கம்
முகூர்த்தமும் பொருத்தக் கொண்டு
கெல்லியே பார்க்கும் போது
கரியெழில் நோய தாகும்
புல்லிய உமியே காணில்
பொருண்மிகக் கேடுண் டாகும்
வில்லிய விறகு காணில்
இவன்குலம் கேட தாமே.

*(சி. நூ. பா. : 215)*

## பூமி சல்லியம் - தீயவை

கரியது காணும் ஆகில்
காலத்தில் நோயே யாகும்
உரியதோர் எலும்பு காணில்
உற்றகோ அனைத்தும் சாவாம்

பிரியமாய் உமியே காணில்
பெரும்பொருள் அனைத்தும் கேடாம்
எரியுறு விறகு காணில்
இகழ்ச்சியாம் வினையுண் டாமே. 53

*(ம. நூ. பா. : 9)*

*(இ. ள்) பூமியைத் தோண்டிப் பார்க்கும்பொழுது, கரியைக் கண்டால் மனைக்குரியவனின் உடலில் நோய் உண்டாகும். எலும்புகளைக் கண்டால் மனையில் உள்ளவர்கள் அனைவருக்கும் மரணம் உண்டாகும். உமியைக் கண்டால் பெரும் செல்வம் நாசமாகும். விறகைக் கண்டால் மனைக்குரியவனுக்கு அவமானமும் தீமையும் விளையும்.*

**இதுவுமது**

நாற்றிசை நடுவே யாக
நலமிகு வட்டம் போல
தாற்றிய முழங்கை ஆழம்
தனிவதாய்க் கெல்லி நல்ல
தூற்றிய சிப்பி காணில்
சுற்றத்தார் கிளையை மாற்றும்
காற்றிய கரியைக் காணில்
கனப்படும் இல்லம் தானே. 54

*(சி. நூ. பா. : 214)*

*(இ. ள்) சதுரமாக உள்ள மனைக்கு நடுவே, வட்டவடிவில் முழங்கை ஆழத்திற்கு மண்ணைத் தோண்டிப் பார்க்க வேண்டும். அந்த மனையில் சிப்பியைக் காணில், சுற்றத்தார்க்கு அழிவு உண்டாகும். கரியைக் காணில், அம்மனையில் கட்டப்படும் வீட்டில் நெருப்பு விழும்.*

**இதுவுமது**

திண்டுமே எறும்பும் தேளும்
சிதலொடு கட்டை பொல்லா
வெண்டலை எலும்பு காணில்
வியன்குலம் கேட தாகும்

வண்டது உகிரும் கேசம்
வந்திடில் அழிந்து போகும்
தண்டமிழ் நூல்வல் லோர்கள்
சாத்தினார் தரணி யோர்க்கே. 55

*(886 a : 23)*

*(இ. ள்)* மனையின் நடுவில் தோண்டிப் பார்க்கும் பொழுது எறும்பு, தேள், கறையான், கட்டை, கபால எலும்பு முதலானவற்றைக் கண்டால் குலம் நாசமடையும். வண்டு, நகம், மயிர் ஆகியவற்றைக் கண்டால் அந்த மனைக்கு அழிவு நேரிடும் என்று மனைநூல் கற்ற தமிழ் வல்லோர்கள் இவ்வுலகத்தோர்க்குக் கூறியுள்ளார்கள்.

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

திண்டிறல் எறும்பும் தேளும்
சிதலொடு கட்டை பெல்லா
அண்டமும் உகிரும் கேசம்
அதுவூரில் முற்றும் ஆகா
வெண்டலை எலும்பு காணில்
வெறுமையும் கேடும் என்று
தண்டமிழ் நூல்வல் லோர்கள்
சாற்றினார் தன்மை யாலே !

*(சி. நூ. பா. : 216)*

## இதுவுமது

இளமணல் சூனி யங்கள்
இழந்திடும் தலைகள் ஓடு
வளமிகு பானை ஓடு
வளர்ந்திடும் மரங்கள் பட்டை
வளமிக புறப்புச் சோறு
உத்திடும் சுக்கான் கல்லு
தளமிகு உமியும் சாம்பல்
தலந்தனில் காண லாகா. 56

*(886 a : 19)*

*(இ. ள்)* பூமியைத் தோண்டும்பொழுது மணல் வெளிப்பட்டால் பொருட்கள் ஒன்றுமில்லாமல் போகும். மண்டை ஓடு, பானை ஓடு, மரப்பட்டை, புறப்புச் சோறு, சுக்கான் கல், உமி, சாம்பல் போன்றவற்றைக் காணுதல் தீமை பயப்பதாகும். அம்மனையைக் கோலக்கூடாது.

## இதுவுமது

தாண்டிய பசுவின் கொம்பும்
 தவளையும் மணியும் கல்லும்
ஈண்டிய தனம்பொன் காணில்
 இம்மனை எடுக்க நன்றாம்
வேண்டிய பூமி தன்னில்
 விஷவர வெலியு மோந்தி
பூண்டதோர் கரியும் கண்டால்
 புகழுள வாழ்வு போமே. 57

*(சி. நூ. பா. : 221)*

*(இ. ள்)* பசுவின் கொம்பு, தவளை, விலையுயர்ந்த கற்கள், மணிகள், செல்வம், பொன் போன்றவற்றைக் கண்டால், மனைக்குரியவன் அம்மனையைக் கோல நன்மையாகும். பாம்பு, எலி, ஓணான், கரி முதலியன வற்றைக் கண்டால், அம்மனையைக் கோல புகழ்மிக்க வாழ்வு இல்லாது இகழ்ச்சி ஏற்படும்.

## பூமி சல்லியம்-நல்லவையும் தீயவையும்

பொன்னொடு செம்பு வெள்ளி
 பொருந்திடில் நன்மை உண்டாம்
பின்னையும் இரும்போ டீயம்
 பித்தளை மத்தி பம்தான்
கன்னல்சேர் மொழியி னாளே
 கருங்கல்லோ டெலும்பு காணில்
மன்னிய மனையா ளோடு
 மாளுவன் கணவன் தானே. 58

*(886 a : 20)*

(இ. ள்) பொன், செம்பு, வெள்ளி இவைகளில் ஒன்று வெளிப்பட்டால் நன்மை உண்டாகும். இரும்பு, ஈயம், பித்தளை முதலான உலோகங்களால் ஒன்றைக் கண்டால், மத்திமமான பலனாகும். கருங்கல், எலும்பு முதலானவற்றை மனையில் கண்டால், அம்மனைக்கு உரியவனின் மனைவி இறப்பதோடு அவனும் இறப்பான்.

கல்லொடு செங்கல் சிப்பி
　　கன்றுகா லிகளும் வாழ்வாம்
நல்லுயிர் பெண்டு செல்வம்
　　நலம்படப் பெருகி வாழ்வார்
பல்லுடன் ஓடு சாம்பல்
　　படுகரி எலும்பு காணில்
இல்லத்தில் சாவு கேடாம்
　　இருவினை விளையும் மாதே ! 59

*(742 : 59)*

(இ. ள்) பூமியைத் தோண்டும் பொழுது, கல், செங்கல், சிப்பி முதலானவற்றைக் கண்டால் கன்று காலிகள் பெருகும். நல்ல வாழ்க்கை உண்டாகும். செல்வம் மிகும். பொருள் சேர்க்கை உண்டாகும். புத்திரர்கள் தோன்றுவர். அனைத்து நலன்களையும் பெற்று வாழ்வர். பல், ஓடு, சாம்பல், கரி, எலும்பு போன்றவற்றைக் கண்டால் வீட்டில் மரணம் நிகழும். தீயவினைகள் சூழ்ந்து துன்பம் நேரிடும்.

**இதுவுமது**

ஈண்டிய தனத்தைக் காணில்
　　இன்பமே வந்து சேரும்
காண்தகு தவளை காணில்
　　கனம்பெறு தானியம் உண்டாம்
வேண்டிய அலவன் காணில்
　　மிகுந்ததோர் பாக்கியம் உண்டாம்
பாண்டத்தின் ஓடு காணில்
　　பலமுள்ள உயிரும் போமே. 60

*(ம. நூ. பா. : 10)*

*(இ. ள்)* பூமியைத் தோண்டும்பெழுது, செல்வத்தைக் கண்டால், மனைக்கு உரியவனுக்கு மிகுந்த இன்பம் உண்டாகும். தவளை இருக்கக் கண்டால் மிகுதியான தானியங்கள் கிடைக்கும். நண்டினைக் கண்டால் மிகுந்த பாக்கியங்கள் உண்டாகும். மட்பாண்டங்களின் ஓட்டினைக் கண்டால் மனைக்குரியவரின் உயிர் போகும்.

## பூமி சல்லியம் - நல்லவை

ஈண்டிய தனத்தைக் காணில்
இன்பமே துன்பம் இல்லை
காண்தகு தனமும் சேரும்
தவளையும் கல்லும் காணில்
பாண்டியன் பசுவின் கொம்பு
பலதா னியங்கள் செங்கல்
வேண்டிய லோகம் காணில்
மிகுந்திடும் செல்வம் தானே. 61

*(886 a : 21)*

*(இ. ள்)* பூமியைத் தோண்டிப் பார்க்கும் பொழுது, செல்வத்தைக் கண்டால் இன்பமாகும். அம்மனையில் செல்வம் சேரும். தவளையையும் கல்லையும் கண்டாலும் பசுவின் கொம்பு, பலவகை தானியங்கள், செங்கல், உலோகங்கள் முதலானவற்றை எதிரே கண்டாலும் அம்மனையில் மிகுந்த செல்வம் வந்து சேரும்.

## நிலத்தின் உயர்வு தாழ்வு

குடதிசை வடக்குத் தாழ்தல்
உத்தமம் இன்பம் மேற்கு
இடமுடன் உயர மெத்த
இனிமைவந் தெய்தும் சால
திடமுள சுற்றத் தாரும்
தெளிந்தநீர் சுழிபோ லாக
படமுடன் காணில் கோடி
வயதுடன் வாழ்வர் தாமே. 62

*(886 a : 141)*

*(இ. ள்)* மனைகோல தேர்ந்துள்ள இடத்தில் கிழக்குத் திசை, வடக்குத் திசை. ஆகிய திசைகளில் நிலம் தாழ்ந்து காணப்பட்டால், மிகுந்த நன்மையைக் கொடுக்கும். மேற்குத் திசை, தெற்குத் திசை ஆகிய திசைகளில் நிலம் உயர்ந்து இருந்தால், மனைக்குரியன், தன் சுற்றத்தார் சூழ பன்னெடுங் காலம் இப்புவியில் மகிழ்வோடு வாழ்ந்திருப்பான்.

**இதுவுமது**

அருக்கன் நின்றதுகி ழக்கு
அருஞ்சோமன் வடக்க தாகும்
திருந்திய மேற்கு தெற்கு
திகழ்ந்திடும் பூமி மேலே
வருத்தமில் லாமல் வாழ்வர்
மனையினை யெடுத்துக் கொள்ளும்
கருத்தினை மயனு ரைத்த
காரணம் இவைகள் தானே. 63

*(சி. நூ. பா. : 222)*

*(இ. ள்)* அருக்கன் நின்றது கிழக்கு, சோமன் நின்றது வடக்கு. இவையிரண்டும் தாழ்ந்தும், தெற்கு மேற்கு உயர்ந்திருப்பதுமான ஒரு நிலம் கிடைக்குமானால் அதில் மனைகோல சகலசம்பத்தும் உண்டாம் என்றவாறு.

**குறிப்பு : பல்வேறு மாறுபாடுகளுடன் கிடைக்கும் பாடல்:-**

அருக்கனும் சோமன் தானும்
அழகுடன் மிகவே தாழ்ந்து
திருக்கிளர் மேற்கும் தெற்கும்
தெரிந்துயர் பூமி மேலாம்
வருத்தமில் வாழ்வார் நாளும்
மனையினை எடுத்துக் கொள்க
கருத்துயர் புலவர் யாரும்
காரணம் விளம்ப லுற்றார்.

*(ம. நூ. பா. : 28)*

### இதுவுமது

வடபால்மனை ஓங்கி உயர்ந்துளதாய்
தென்பால்மனை விழுந்து தான்பணிய
குணமாகிய தனங்கள் சோர்ந்துவிடும்
மாடமே வியமயன் உரைத்தாரே. 64

*(886 c : 61)*

*(இ. ள்)* மனை கோலுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நிலம் வடதிசையில் ஓங்கி உயர்ந்து, தென்திசையில் தாழ்வாக இருக்குமாயின், அம்மனையில் வீடுகட்ட, அம்மனைக்கு உரியவனுக்குச் செல்வம் அழியும் என்று மயன் கூறியுள்ளார்.

### இதுவுமது

மேல்பால்மனை யோங்கி உயர்ந்துளதாய்
கீழ்பால்மனை வீழ்ந்து தான்பணிய
தாழ்வேது மில்லா தனங்கள்தரும்
ஏழ்பாரில் எங்கும் எடுத்தனரே. 65

*(886 c : 62)*

*(இ. ள்)* மனைகோலுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ள நிலம் மேற்குத் திசையில் ஓங்கி உயர்ந்து, கிழக்குத் திசையில் தாழ்வாக இருக்குமாயின், அம்மனையில் வீடு கட்ட, அம்மனைக்கு உரியவனுக்குச் செல்வம் சேரும் என்று கூறியுள்ளார்கள்.

### நிலத்தின் தளமட்டம் நீரிட்டுக் காணுதல்

மட்டுநீர் கொண்ட மட்டும்
　　மதித்ததோர் வாங்கு தன்னை
வெட்டன நூலால் காண
　　விரைந்துடன் மிகவு மாகில்
நட்டென நடுவு தன்னில்
　　நலம்பெறச் சதுர மாக்கிச்
சட்டமாய் முழத்திற் செல்லி
　　சார்பில்நீர் விடுக நன்றே. 66

*(886 a : 28)*

*(இ. ள்)* மனைகோலும் இடத்திற்கு நடுவே ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் சதுரமாகக் குழியைத் தோண்டி

மண்ணை நிரப்பும்பொழுது மண் மிகுந்ததாகில், அவ்விடத்தில் மிகுதியான நீரை விடவேண்டும்.

**இதுவுமது**

நன்றெனு விட்ட நீரை
நாற்றிசைக் களவும் சென்று
சென்டுற முனையைத் தொட்டுச்
சிக்கென மிகவும் தாக்கி
நின்றென கண்ணு நேரே
நினைவுற நூலால் கண்டு
மன்றமாய் அதனில் நீர்தம்
மதித்தளம் மட்ட மாமே. 67

(886a : 32)

(இ. ள்) நிலத்தின் நடுவே ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் தோண்டி நீரைவிட்டு வைக்க வேண்டும். வட்ட நீர் வழிந்து பரந்து நான்கு திசை நூலிலும் வழிந்து, முளைக்கும் ஏற்றம் குறைவு இல்லாமல் இருந்தது என்றால் தளம் மட்டமாக உள்ளது.

**இதுவுமது**

பேந்திடும் கிழக்கு மூலை
பெருகிய வடக்குத் தன்னில்
ஆய்ந்ததோர் மனையும் நன்றாம்
அநேகநற் பொருளும் சேரும்
பாய்ந்திடும் தெற்கில் பொல்லாப்
பாரிய மனையாள் கேடாம்
வாய்ந்தசெந் தமிழோர் எல்லாம்
மனமகிழ்ந் துரைத்த வாறே. 68

(1005b)

(இ. ள்) குழியில் விட்ட நீரானது கிழக்கு, வடக்கு மூலைகளில் சென்று தங்கினால், அந்நிலத்தில் மனைகோல நன்மையாகும். அநேகப் பொருளும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும். தெற்கில் சென்று தங்கினால், மனைக்கு உரியவனின் மனைவிக்குத் தீங்கு நேரிடும் என்பதைச் செந்தமிழ்நூல் கற்றவர்கள் எடுத்தோதியுள்ளார்கள்.

### இதுவுமது

உத்திர திசையின் மூலை
உயர்ந்ததோர் கிழக்கில் பேர்ந்தால்
சித்திர மாடம் பொங்கி
சிறப்புடன் பெருகி வாழ்வார்
உத்ததெற்கு மேற்கில் பேர்ந்தால்
உகந்ததோர் மனையாள் கேடாம்
வித்தக நூல்வல் லோர்கள்
விளம்பினார் தமிழி னாலே. 69

*(1005 a)*

*(இ. ள்)* மனைகோலவிருக்கும் நிலத்திற்கு நடுவே ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழத்தில் தோண்டி நீரை விடவேண்டும். நீரானது நான்கு திசைகளிலும் பரவாது வடக்குத் திசையிலும், கிழக்குத் திசையிலும் தேங்கி நின்றால், அம்மனையில் வீடுகட்ட செல்வம் பெருகி, மனைக்குரியவன் சிறப்புடன் வாழ்வான் என்றவாறு. அந்த நீரானது தெற்கு, மேற்குத் திசைகளில் தேங்கி நின்றால், அம்மனைவிக்குத் தீங்குண்டாகும் என்று மனைநூலில் வல்லவர்கள். தமிழில் கூறியுள்ளார்கள்.

### இடம், மண்ணின் தன்மை

பலபல வழியே யாதல்
பதுங்குசிற் றடியே யாதல்
சிலசில வழியே யாதல்
சேர்ந்திடும் பூமி யாதல்
புலவிய உவரும் உப்புப்
பொருந்தியே நாற லாக
பலவும்கண் டிசைந்த பூமி
பாழ்சுடு காடு தானே. 70

*(886 a : 142)*

*(இ. ள்)* மக்கள் பலரும் பயன்படுத்துகின்ற வழியில் உள்ள நிலத்திலும் குறுகிய வழி அமைந்துள்ள நிலத்திலும், வழிகள் பல ஒன்று சேருகின்ற நிலத்திலும் உவர் மண்ணாக, உப்புச் சுவை உடையதான, உப்பு மணம் பொருந்திய

இடத்திலும் வீடு அமைக்க, அந்த மனைக்கு உரியவனின் உற்றார் உறவினர்கள் இறந்து அந்த வீடு சுடுகாட்டுக்கு ஒப்பானதாக விளங்கும்.

**மண்ணின் மணம் - நல்லவை**

புன்னையும் பூவைப் போலும்
பொருந்துதா மரையைப் போலும்
பன்னியபா திரியைப் போலும்
பசுவிரைக் கெந்தம் போலும்
பின்னையும் சிலம ணங்கள்
பிறந்திடில் நிறைந்த வாழ்வே
அன்னசுற் றத்துடன் பூமி
ஆயிரம் காலம் வாழ்வே. 71

*(886 a : 143)*

*(இ. ள்)* மனைகோல தேர்ந்தெடுத்துள்ள இடத்தில் உள்ள மண், புன்னைப் பூவைப் போலும், தாமரைப் பூவை போலும், பாதிரிப் பூவைப் போலும், பசுவின் நீரைப் போலும், சந்தனம் முதலாகிய மணப்பொருட்களைப் போலும் மணம் உடையதாக இருப்பின், அம்மனைக்கு உரியவன் நிறைந்த செல்வம் பெற்று, மிகுந்த சுற்றத்தார் சூழ, நீண்ட காலம் வாழ்வான்.

**மண்ணின் மணம்-தீயவை**

தயிரொடு நெய்தேன் எண்ணெய்
தாக்கிய உதிரத் தோடு
மயிர்பல சிறுமீன் பட்சி
மற்றுமோர் பொல்லா நாற்றம்
பயிரொடு பலமும் காணார்
பாழ்படு மனையெ டுக்கில்
வயிரவேல் விழியி னாளே !
மண்களின் குணங்கள் தானே ! 72

*(742 : 37)*

*(இ. ள்) மண்மணமாவது தயிர்மணம் போலும், நெய் மணம் போலும், தேன் மணம் போலும், இரத்த மணம் போலும், மயிர்ச்சிக்கு மணம் போலும், மீன் வீச்சு மணம் போலும், பட்சி மணம் போலும், மோர்மணம் போலும் இருக்க, அம்மனையில் பயிரிட்டாலும் பலியாது மனை யெடுக்கிலும் பாழாகும்.*

### மண்ணின் சுவை அதற்குரியோர்

இனிதாகிய இன்சுவைமண் மறையோர்க் காகும்
மனிதாகிய கசப்பது மன்னர்க் காகும்
புனிதாகிய புளிப்புமண் வைசியர்க் காகும்
சொனதாகிய கைத்தமண் சூத்தி ரர்க்கே. 73

*(886 a : 145)*

*(இ. ள்) மனைகோலுவதற்காகத் தேர்ந்தெடுத்துள்ள மண்ணில் இனிப்பான சுவை இருப்பின், அந்த இடத்தில் மறையோர் வீடுகட்டவேண்டும். கார்ப்பான சுவை இருப்பின், அந்த இடத்தில் அரசர்கள் தம் அரண்மனையைக் கட்டவேண்டும். புளிப்பான சுவை இருப்பின், அந்த இடத்தில் வணிகர்கள் வீடுகட்ட வேண்டும். கைப்புச் சுவை இருப்பின், அந்த இடத்தில் சூத்திரர்கள் வீடு கட்டவேண்டும்.*

குறிப்பு : பல்வேறு மாறுபாடுகளுடன் கிடைக்கும் பாடல்:-

இனிதாகிய மண்சுவை மண்மறையோர்
மனதாகிய கர்ப்பது மன்னவனும்
புனிதாகிய தேபுளிதான் வைசியர்
சொனதாகிய கைத்தமண் சூத்திரர்க்கே.

*(1005 a )*

### மண்ணின் நிறம், சுவை, மணம்

ஓதும் பூமி உயர்ந்த சிவப்புமாய்
காதல் ஆம்துவர் கருதிய பூமியும்
ஏத லாம்பரி எழில்மணம் போலவும்
பூத லத்தில் புகழ்மாளி கட்டவே. 74

*(ம. நூ. பா. : 24)*

(இ. ள்) சிவந்த நிறமுள்ள நிலம், துவர்ப்புச் சுவையுள்ள நிலம், குதிரை வாசனையுள்ள நிலம் இவைகளில் அரசர்கள் வீடுகட்டச் சிறப்பாகும்.

**இதுவுமது**

கட்டி னால்மாளி காசினி ராசர்கள்
பட்டி னம்வாழ் பகரும் குபேரன்போல்
கட்டம் நீங்கிக் காட்சி மிகப்பெற்று
அட்டி இல்லா தருமையாம் வாழ்வரே. 75

*(ம. நூ. பா. : 26)*

(இ. ள்) மேற்கண்ட நிலங்களில் அரசர்கள் அரண்மனையைக் கட்ட, குபேரனைப் போன்று பெருஞ் செல்வம் பெற்றுக் கஷ்டங்கள் அனைத்தும் நீங்கி, பரிவாரங்களுடன் தடைகள் எவையுமின்றிச் சிறப்புடன் வாழ்வார்கள்.

**இதுவுமது**

கூறும் பூமி குறிக்கும் வெளுப்புடன்
வீறும் தித்திப்பு விரும்பும் ருசியுடன்
பேரும் தாமரை பெருத்தபூ வாசனை
ஏறும் பூமி இருக்கமிக நன்றே. 76

*(ம. நூ. பா. : 22)*

(இ. ள்) வெளுத்த நிலம், இனிப்புச் சுவையுள்ள நிலம், தாமரைப்பூ வாசனையுள்ள நிலம் இவைகளில் அந்தணர்கள் வீடு கட்ட சிறப்பாகும்.

**இதுவுமது**

நன்றாம் ஆரியர் நவில்மாளி கட்டிடில்
குன்றாது எந்நாளும் கூற குடும்பமும்
நன்றாய் ஓங்கும் நலம்பெறு நற்சுபம்
வன்தா மரையாள் வகுக்கும்வா சமதே. 77

*(ம. நூ. பா. : 23)*

(இ. ள்) மேற்கண்ட நிலங்களில் அந்தணர்கள் வீடுகட்ட, குடும்பம் மேன்மேலும் வளரும். நன்மைகள் பெருகும். அனைத்து நலன்களும் பெற்றுச் செல்வச் செழிப்போடு வாழ்வார்கள்.

## 4. சகுனங்கள்

### மனைக்குச் செல்லும்போது நற்சகுனம்

மனையது கோல வென்று
வந்தவ னோடு சிற்பி
கனிவுடன் வழிசெல் போது
கானுமேல் காம ரூபி
வனிதையர் நிறமும் பொன்னாம்
வாவிய முகமன் செய்தல்
நினைவுடன் சிந்தை யாலே
நிசமாக நடக்கும் நன்றே.[1] 78

*(878 : 3)*

*(இ. ள்)* மனைகோல வேண்டுமென்று வந்தவர்களோடு சிற்பன் செல்லும்பொழுது, பொன்னிறமுடைய காமரூபி பெண்கள் எதிர்ப்பட்டு வணங்கினால் நல்ல யோகமாகும். விரைவாகச் சென்று மனையைக் கோல நன்மைகள் உண்டாகும்.

**பல மாற்றங்களுடன் அமைந்த பாடல்:-**

கனிவுடன் வழிசெல் போது
காணுமே காம ரூபி
வனிதையர் நிற்கப் பொன்னாம்
வாலிபர் முகமன் செய்தால்
நினைவுடன் சிந்தை யாலே
நேயமாய் நடக்கும் போது
அனமென நடக்கும் பாவாய் !
அதுஉத் தமமென் றோதே.

*(சி. நூ. பா. : 111)*

---

*1. வனிதையர் தம்மைக் கண் டக்கால்*
*வந்தது பாக்ய மென்றே*
*நனிவுடன் சிரத்தை யாக*
*நன்மையாய் நடக்க நன்றே.*

**இதுவுமது**

மதுக்குடம் மாமி சங்கள்
முதுபால் நெய்யும் நீரும்
கதுநிறை குடமும் கட்டுக்
கழுத்தியும் சூத்திரன் ஒற்றை
விதமிகு மறையோன் ரெட்டை
வேசியர் இவர்கள் எல்லாம்
ஒதுங்கவே தானும் கண்டால்
இருநிதி சேரும் தானே. 79

*(886 a : 113)*

*(இ. ள்) மனைகோலச் செல்லும்பொழுது, மதுக்குடம், மாமிசம், பால், நெய், தண்ணீர், நிறைந்தக்குடம், சுமங்கலி பெண், ஒற்றையாள், இரட்டை அந்தணர், விலைமகளிர் போன்றோரைக் கண்டால் சங்கநிதி, பதுமநிதி எனலாகும் மிகுந்த செல்வங்கள் வந்து சேரும்.*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

மதுக்குடம் மாங்கி சங்கள்
மதுரமாம் பால்நெய் நீரும்
கறித்திடு வாசங் கட்டு
கழுத்திபூ ரணமும் பந்தான்
மதித்திடும் யானை கோவு
மாம்பரி சிவிகை தானும்
எதிர்வரக் காணில் நன்றாம்
எய்திடில் கருமந் தானே.

*(சி. நூ. பா. : 112)*

**இதுவுமது**

மன்னிய நிறைகு டங்கள்
மாராயம் சொல்லும் வண்ணான்
மின்னிய தயிர்பால் சோறு
விடக்குடன் மதுக்கு டங்கள்

கன்னியர் தாசி வேசி
கரும்புக்கட் டெதிரே காணில்
மென்னிய இரட்டைப் பார்ப்பான்
எதிர்வரக் கருமம் நன்றே. 80

*(742 : 49)*

*(இ. ள்)* நிறைகுடம், வண்ணான், தயிர்குடம், பால்குடம், அன்னம், மதுக்குடம், அழகானப்பெண், தேவதாசி, கரும்புக்கட்டு, இரட்டைப் பார்ப்பார் இவர்கள் எதிர்வர நற்சகுனமாகும். சென்று மனைகோல நன்மை உண்டாகும்.

**இதுவுமது**

கொடிநரி கிள்ளை வேங்கை
கூர்முயல் கோழி கொக்கு
வடிவுள மஞ்ஞை ஒந்தி
மரையொடு பசுக்கள் மீதே
கடிகமழ் நாரை நாவி
கடுவாயன் செம்போத் தென்றும்
வடிவுடன் வலத்தில் சென்றால்
வந்திடும் கருமம் நன்றே. 81

*(742 : 50)*

*(இ. ள்)* நரி, கிளி, புலி, முயல், கோழி, கொக்கு, மயில், ஓணான், மான், பசு, மாடு, நாரை, அணில், கழுதை, செம்போத்து இவைகள் வலது பக்கம் சென்றால் நல்ல சகுனமாகும். நல்ல சகுனத்தைக் கண்டு சென்று மனையைக் கோல நன்மை உண்டாகும்.

**இதுவுமது**

வானரஞ் சுணங்கன் பூனை
வலியனுங் கோட்டான் டேகை[1]
ஏனமாம் மூஞ்சூ றொட்டை
எலியுடன் சாரை கூகை

---

1. 'டேகை' பொருள் விளங்கவில்லை.

கானமார் கருடன் ஆந்தை
காடைநல் உடும்பு கீரி
தானுவந் திடத்தே போகிற்
செய்யும் கருமம் நன்றே. 82

*(இ. ள்)* குரங்கு, நாய், பூனை, கருங்குருவி, கோட்டான், டேகை, பன்றி, மூஞ்சூறு, ஒட்டகம், எலி, சாரைப்பாம்பு, கூகை, கருடன், ஆந்தை, காடை, உடும்பு, கீரி இவைகளெல்லாம் மனைகோலச் செல்லும்பொழுது வலப்புறமிருந்து இடப்புறம் போனால் மிகவும் நன்மையாம். *(சி. நூ. பா. : 107)*

**மனைக்குச் செல்லும்போது தீயசகுனமும் நற்சகுனமும்**

நிறைந்திடு குடமே காணில்
நிலையதாய்ச் செல்வம் எய்தும்
குறைந்திடு குடமே காணில்
குறிப்பதாய்த் துன்பம் உண்டாம்
இறைந்திடு பாம்பு காணில்
இயல்பிலாப் பகை உண்டாகும்
அறைந்திரு நெருப்பு காணில்
அருங்குடி நசிந்து போமே. 83

*(சி. நூ. பா. : 487)*

*(இ. ள்)* நிறைந்த குடத்தை மனைகோலச் செல்லும் பொழுது எதிரே கண்டால், செல்வம் வந்து சேரும். குறை குடத்தைக்கண்டால்துன்பம் உண்டாகும். படமெடுத்து ஆடும் நாகப்பாம்பினைக் கண்டால், பகை உண்டாகும். நெருப்பைக் கண்டால் சுற்றத்தார் அனைவரும் அழிந்து போவார்கள்.

**மனைக்குச் செல்லும்போது தீயசகுனம்**

தண்டொடு வலையன் ஈமத்
தபசியும் முடவன் செக்கான்
கொண்டமூக் கரையன் கூனன்
குருடனும் எதிரே தோற்றக்

கண்டிடில் நசித்துப் போகும்
கருதிட வேண்டா மென்று
வண்டமர் குழலின் மாதே !
வகுத்துரை செய்வர் தாமே. 84

*(இ. ள்)* குடியன், வலையன், சுடுகாட்டாண்டி, முடவன், செக்கான், மூக்கரையன், கூனன், குருடன் இவர்களை எதிரில் காணில், அம்மனை கோலம் நசித்துப்போம். *(ம. நூ. பா. : 15)*

**இதுவுமது**

தலைவிரி மொட்டை மட்டை
தவசிசன் னியாசி பார்ப்பான்
முலையிலாக் கன்னி கும்பம்
மூக்கரை விறகுக் கட்டே
நலமிலா முதுநோ யாளன்
நாவிதன் குருடன் செக்கான்.
பலரும்வந் தெதிரே காணில்
பலனிலாக் கரும மாமே. 85

*(இ. ள்)* விரித்த தலையுடையவன், மொட்டைத் தலையன், தவசி, சன்னியாசி, ஒற்றைப் பிராமணன், ஸ்தனங்கள் இல்லாப் பெண், மதுப்பானை, மூக்கு இல்லாதவன், வாணியன் இவர்கள் எதிரே வந்தால் ஆகாது.
*(742 : 52)*

**இதுவுமது**

செய்யபுன் செய்ய வாடை
செம்பட்டை சுருட்டை நொண்டி
மெய்யினில் மயிரி லாதான்
விரிதலை ஒற்றைக் கண்ணன்
தையனூல் இழந்த மாது
தடிக்கொம்பு காண்பா னாகில்
கையிலே கயிறு காணக்
காலன்வாய்ப் படுவன் தானே. 86

*(இ. ள்) அழுக்கு ஆடையை உடையவன், செம்பட்டைத் தலையன், சுருட்டைத் தலையன், நொண்டி, முகத்தில் மயிர் இல்லாதவன், விரித்த தலையை உடையவன், ஒற்றைக் கண்ணன், விதவைப் பெண், தடிக்கொம்பை உடையவன், கயிறு உடையவன் இவர்கள் எதிரில் வந்தால் உயிருக்குச் சேதம் உண்டாகும். (742 : 51)*

### இதுவுமது

வாறது கேளாய் ! இன்னம்
மனைதனில் ஏகும் போது
காறுதல் கேட்க லாகா
கைம்பெண்ணைக் காண லாகா
வேறுதான் துக்கம் நாற்றம்
எய்திடில் ஆகா வேறு
சீறுதல் ஆகா தென்று
செப்பினார் மயனும் என்றே. 87

*(இ. ள்) மனை கோலச் செல்லும் பொழுது காறித் துப்புதல் போன்ற சத்தங்களைக் கேட்டாலும், கைம்பெண்ணைக் கண்டாலும், துக்கமான நிகழ்வுகளைக் கண்டலும் தீய சகுனமாகும். வழியில் நாற்றம் அடிக்கிலும் பாம்பு முதலியவற்றைக் கண்டலும், தீய சகுனமாகும் என்று மயனார் கூறியுள்ளார். (886 a : 14)*

### மனையில் நிற்கும் போது நற்சகுனம்

வலமிகச் சொலினும் பல்லி
இல்லது இடத்திற் கூற
பலமிக உடைய தாகும்
பாங்குடைக் கருமம் நன்றாம்
குலமிக வளரும் நாளுங்
கோற்குறு காதல் மைந்தர்
பலமிக உடைய ராவர்
பல்லியின் இயல்பு தானே. 88

*(878 : 3)*

*(இ. ள்)* சிற்பியும் மனைக்கு உரியவனும் மனையில் சென்று நிற்கும்பொழுது, பல்லி முன்பு வலமாகச் சொல்லில் நன்மையாகும். பின்பு இடமாகச் சொல்லில் அம்மனைக்கு உரியவன் அரசர்களுக்குப் பிரியமுள்ளவனாய்ப் புத்திரர் களுடனும் மனைவியுடனும் இன்பமுடன் வாழ்வான்.

**இதுவுமது**

வெள்ளிய புறாவி னோடு
விளங்கிய பசுவும் மற்றும்
ஒள்ளிய மாவின் ஏறும்
உயிருடன் காணு மாகில்
தெள்ளிய கருமம் நன்றாம்
சீர்மனைக் கோலச் சீராய்
வள்ளியர் ஆகி வாழ்வார்
மண்ணின்மேல் மனையுள் ளோரே. 89

*(இ. ள்)* வெள்ளைப் புறாவும், வெள்ளைப் பசுவும், வெள்ளை ரிஷபமும் வெள்ளை மானும், வெள்ளை மாதும் தங்கள் மனையில் நின்றபோது காணில் உத்தமம். *(ம.நூ.பா. : 12)*

குறிப்பு : ரிஷபம் - காளை.

**இதுவுமது**

பாங்குடை பகண்டை யுந்தான்
பண்ணொடு வலத்திற் பாடித்
தாங்குடன் இடத்தி னில்போய்த்
தனிக்குரல் வழியு மாகில்
ஓங்கிய மனையும் நன்றாம்
ஒள்ளிய பயனுண் டாகும்
தீங்குதான் வருவ தில்லை
செப்பிய வண்ணம் தானே. 90

*(739 : 6)*

*(இ. ள்)* சிற்பியும் மனைக்கு உரியவனும் மனையில் நிற்கும் பொழுது பகண்டை என்னும் குருவி, வலத்திற் பாடி,

வலத்திற் பாடி, வலத்திலிருந்து இடத்திற்குச் சென்று வழியுமாகில் மனைக்குரியவனுக்குத் துன்பங்கள் நீங்கி, நன்மைகள் உண்டாகும்.

## இதுவுமது

ஓருமுயல் கருடனொடு கரடிநல் புல்வாய்
ஆடிபெருந் தட்டையுடன் சுட்டிமுதல் சூரன்
மாடிதொடு சாரையொடு மந்தியுடன் நாயும்
ஓடிஇடம் போகிலிவை ஊனமில தாமே. 91

*(886 a : 11)*

*(இ. ள்) முயல், கருடன், கரடி, மான், ஆடு, பருந்து, அட்டை, சுட்டி, சூரைக்குஞ்சு, சாரைப்பாம்பு, குரங்கு, நாய் இவைகள் குறுக்கிட்டு ஓடுமாகில் மிகவும் நன்மையாம்.*

குறிப்பு: சுட்டி, சூரை இவற்றுக்குப் பொருள் விளங்கவில்லை.

## இதுவுமது

கரியகுயில் செய்யமயில் போற்றுநல் நரையான்
வரியமரை பரியசிவல் வலியகொடு காகம்
உரியவலம் போகலிவை ஊனமிலை நரியன்
அரியபுலி ஓந்திஎலி கேழலொடு நாகம். 92

*(சி. நூ. பா. : 114)*

*(இ. ள்) மனையில் சிற்பனும் மனைக்குரியவனும் நிற்கும்பொழுது, குயில், மயில், செம்போத்து, நரையான் அல்லது வல்லூறு, மான், கவுதாரி, வலியன், நரி, புலி, ஓணான், எலி, பன்றி, நாகம் இவை வலம் போக நன்மையாகும்.*

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

கரியகுயில் ,எழில்மயில் செம்போத்து நரையான்
அரியசிவல் வலியமரை மானோடு காகம்
நரியநாவி ஒந்தியொடு நாகமது தானும்
உரியவல மாகிலிவை ஊனமிலை தானே.

*(886 a : 10)*

### மனையில் நிற்கும்பொழுது நல்ல தீய சகுனங்கள்

வண்டுடன் அரணை பல்லி
மண்புழு சிலந்தி வட்டம்
நண்டுதான் கிடக்கு மாகில்
நன்மனை யெடுக்க நன்று
கொண்டுள்ள உடும்பு தேரை
கூறுந்தேள் ஆமை பூரான்
விண்டெலி காணு மாகில்
வெறுமனை யாகு மன்றே. 93

(886 a : 21)

*(இ. ள்) மனையில் நிற்கும்பொழுது வண்டு, அரணை, பல்லி, மண்புழு, சிலந்திப் பூச்சி இவைகளைக் கண்டால் அமனையில் வீடுகட்ட நன்மையாகும். உடும்பு, தேரை, தேள், ஆமை, பூரான், எலி ஆகியவற்றைக் கண்டால் அம்மனையைக் கட்டக்கூடாது. கட்டினால் வீடு பாவாகும்.*

குறிப்பு: மண்டுகம்; மண்டுகம் - தவளை

### இதுவுமது

இணங்கிய சுனங்கன் ஆமை
இயலுறு கூகை பாம்பு
வணங்கியே மனையில் புத்து
வைக்கதேன் கருடன் புள்ளு
இணங்கிய கடுவன் ஒந்தி
இவையெல்லாம் காணு மாகில்
வணங்கியே பேயுண் டாகும்
மக்களும் சாவார் கண்டீர். 94

(886 a : 1)

*(இ. ள்) மனைகோல ஒருவர் அழைக்க அவரோடு சிற்பி சென்று அம்மனையில் நிற்கும்பொழுது, நாய், ஆமை, கூகை, பாம்பு, புற்று, தேன்கூடு, கருடன், பறவை ஆண் குரங்கு*

ஓணான் போன்றவற்றைக் காணுவாரானால், அம்மனையில் பேய் இருக்கும். அம்மனையில் வீடு கட்டி வாழ, மனைக்கு உரியவரின் மக்கள் மரணமடைவர்.

**இதுவுமது**

எறும்புதான் ஒழுக்கம் விட்டு
மேவிடில் ஏத்த வேண்டாம்
கறங்கொடு கரையான் ஒந்தி
கண்டிடில் கருத வேண்டாம்
பறந்தது சுரும்பெ டுத்துப்
பரவிலும் வேண்டாம் வேண்டாம்
திறமிகு மொழியி னாளே !
தீமையைக் காட்டும் தானே. 95

*(878 : 5)*

*(இ. ள்)* சிற்பனும் மனைக்கு உரியவனும் மனையில் சென்று நின்றபொழுது, எறும்புகள் வரிசையை விட்டு விலகி, சிதறிச் சென்றாலும், கரையான் பரவி இருந்தாலும், ஓணானைக் கண்டாலும் அந்த மனையைக் கோலலாகாது.

## 5. மரங்கள்

மாடமா ளிகைகள் ஆதல்
மதித்ததோர் மண்ட பங்கள்
நீடிய மயனார் சொல்லும்
நெறிதனை இயம்பக் கேளீர்
கூடிய மரங்கள் தன்னில்
குணங்களாம் நன்மை தீமை
ஆடக மயிலி னாளே !
அறிந்தவர் உரைக்க லுற்றார். 96

*(இ. ள்) மாடமாளிகைகள், மண்டபங்கள் முதலானவைகளைக் கட்டுவதற்குரிய மரங்களுடைய நன்மை தீமை முதலானவற்றை மயனார் சொல்லுவதை அறிந்தவர்கள் உரைக்க அதனைக் கேட்பீர்களாக ! (நூ. பா. : 130)*

### மரங்கள் - பொது

அடிதலை இரண்டும் ஒத்தல்
ஆண்மரம் ஆகும் என்பர்
அடிபருத் திடிலே பெண்ணாம்
அலியது தலைப்ப ருக்கும்
வடிவுடன் தூணுக் காணாம்
வளைகள்உத் திரங்கள் பெண்ணாம்
வடிவலி விட்டம் சட்டம்
மற்றவைக் கேது வாமே. 97
*(1005 a)*

*(இ. ள்) அடிமரமும் மேல் பகுதியும் ஒத்த சுற்றளவு உள்ளவையாக அமைப்பின், ஆண் மரமாகும். அடிமரம் பெருத்து மேல் பகுதி சிறுத்து அமையின், பெண்மரமாகும். அடிமரம் சிறுத்துத் தலைப்பகுதி பெருத்து அமையின் அலிமரமாகும். ஆண்மரம் தூண்கள் செய்யப் பயன்படும். பெண்மரம் வளைவு, உத்திரங்கள் செய்யப் பயன்படும். அலிமரம், விட்டம், சட்டம் முதலானவற்றைச் செய்யப் பயன்படும்.*

## ஆண்மரம்

காணவே மரங்கள் தன்னைக்
　　கருத்துடன் அறியும் போது
தூணெனத் திரண்டு நின்று
　　சுத்தமாய் அடித்த லைதான்
நீணுயர் ஒத்து நேரே
　　நின்றிரு மாகில் நல்ல
ஆனதாம் மரம தென்றே
　　அருளினார் வேதத் தோரே. 98

*(இ. ள்)* மரத்தின் அடியும் தலையும் நடுப்பகுதியும் ஒத்த சுற்றளவுடனும்.தூணைப் போன்று திரண்டு உருண்டு செப்பமாய்க் கண்ணுக்கு அழகாய் இருந்தால் ஆண்மரம். *(739 : 56 )*

## இதுவுமது

அடியும் தலையும் சரியாக
　　அரணை வாலும் கயிற்போல
பிடியும் தூணும் ஒழுங்காகப்
　　பிரளத் திரட்சி யுண்டாகி
மடியா துயரம் நேருளதாய்
　　வருமே ஆணின் மரமாக
நெடியா யுளதென் றேமயனார்
　　நோகா துரைத்த வாறிதுவே. 99

*(சி. நூ. : 334)*

*(இ. ள்)* மரத்தின் அடியும் தலையும் அளவில் மாறுபாடு இல்லாமல் அரணையினுடைய வாலைப் போன்றும், கயிற்றைப் போன்றும் தூணைப் போன்றும் திரட்சியுடன் நீண்டு நேராக இருக்குமானால் அது ஆண் மரமாகும் என்று மயனார் கூறியுள்ளார்.

**பெண்மரம்**

கண்ணுற்ற மரங்கள் தன்னைக்
கருதியே பார்க்கும் போது
விண்ணுமை அடிப்ப ருத்து
ஓங்கியே பரந்து நேரே
வண்மையாய்த் தலைசி றுத்து
வடிவுடன் இருக்கு மாகில்
பெண்மையாம் மரங்க ளென்று
பேசினார் வேதத் தோரே. 100

*(இ. ள்) மரமானது அடிப்பருத்து நுனியானது சிறுத்து உயர்ந்து பரந்து இருந்தால் அது பெண்மரமாகும் என்று* வேதத்தோர் கூறுவார்கள். *(739 : 57)*

***குறிப்பு :***

கண்ணுற்ற மரங்கள் தன்னைக்
கருதியே பார்க்கும் போது
விண்ணுமை அடிப்ப ருத்து
மேலது சிறுத்து நின்றால்
பெண்ணென வடுத்து நன்றாய்ப்
பெருமையாய் ஓத லாம்பின்
துண்ணெனத் தமிழே யோதும்
துரிதமாய் மயன்சொன் னாரே.

*(சி. நூ. : 335)*

என்ற வடிவவேறுபாடு கிடைக்கின்றது.

***அலிமரம்***

இலங்கிய மரங்கள் தன்னை
இயல்புடன் பார்க்கும் போது
நிலமதில் சிறுத்து நின்று[1]
நெடுமைய தாகிப் பின்னும்
தலையது மிகப்ப ருத்துத்
தானது நிற்கு மாகில்
அலிமர மாகும் என்றே
அறைந்தனர் வேதத் தோரே. 101

---

1. நீண்டு

*(இ. ள்)* மரத்தைப் பார்க்கும்பெழுது, நிலத்தின் பகுதியில் காணலாகும் அடிமரம் சிறுத்து, உயரமாகத் தலைப் பகுதியானது மிகப்பருத்து நின்றால் அம்மரம் அலிமரம். *(739 : 59)*

### மரங்கள்

அகத்தினுக் காகா தென்று
அகற்றிய மரங்கள் தானும்
மிகுந்தது வேணு மென்று
விரும்பிய மரங்கள் தானும்
மகத்துள தேவர் கட்கும்
மற்றுள மாந்த ருக்கும்
பகுத்திரு வகையாய் ஆய்ந்த
மரவகை பலவும் செல்வாம். 102

*(சி. நூ. பா. : 257)*

*(இ. ள்)* மனைக்கு ஆகாத மரங்களும், மனைக்கு ஆகிய நல்ல மரங்களும் தேவர்கள், மனிதர்களுக்கான மரங்களும் இருவகையாக வேறுபாடு செய்து சொல்லுவோம்.

### வீடு, மாடகூடங்கள் கட்டப் பயன்படும் மரங்கள்

தேக்கத்தில் சந்து வேம்பு
செம்பனம் கடுக்காய் தூப
மாக்கொன்றை இலுப்பை நாவல்
மருதுடன் நுணாவும் வேங்கை
ஆக்கிரு முடிவேல் சீலை
ஆச்சாவெள் ளொடுவை மூங்கில்
பாக்குதென் பனைக டம்பு
பாலொடு புரசு வாமே. 103

*(இ. ள்)* தேக்கு, சந்தனம், வேம்பு, செம்பனம், கடுக்காய், இங்குலிகம் மாமரம், கொண்றை, இலுப்பை, நாவல், மருது, நுணா, வேங்கை, இருமுடி, வேல்மரம், சீலை,

*ஆச்சா, வெள்ளொடுவை, மூங்கில், கமுகு, தென்னை, பனை, கடம்பு, பாலை, ஒடுவை, புரசு இவையெல்லாம் மனை, மாடகூடங்களுக்கான மரங்கள். (739 : 60)*

**மரங்களின் பயன்கள்**

கருதியஆண் மரமே யாகில்
காலொடு தூணுக் காகும்
மருவுபெண் மரமே யாகில்
வளைவுத்ரம் பொதிகைக் காகும்
விரகலி மரமே யாகில்
விட்டமும் சட்டம் ஆகும்
உரவிய கைகள் ஆகி
உத்தம மரங்க ளாமே. 104

*(இ. ள்) ஆண் மரமாகில் கால்களும் தூண்களும் செய்யப் பயன்படும். பெண் மரமானால் வளையும் உத்திரமும், பொதிகையும் செய்யப் பயன்படும். அலி மரமாகில் விட்டம், சட்டம், கைகள் முதலானவை செய்யப் பயன்படும். இவையெல்லாம் உத்தம மரங்கள். (739 : 59)*

**கதவு, வடநிலைக்காகும் மரங்கள்**

எட்டி தேத்தா நாவல்வடம்
இதற்கு நிலையும் அதுவாகும்
பட்டி தனக்கு ஆளிச்சி
பாகு நிலையும் வெள்ளுசிலை
கிட்டு பாலை மாவிலங்கை
கிடந்த வடத்துக் கதுநிலையாம்
தொட்ட வடமும் நிலைதானும்
தொடுத்தெல் லோர்க்கும் இவையாமே. 105
*(739 : 64)*

*(இ. ள்) எட்டி வடத்துக்கு எட்டிநிலை, நாவல் வடத்துக்கு நாவல் நிலை, தேத்தா வடத்துக்கு தேத்தா நிலை. தணக்கு ஆல், அரசு, இச்சி வடங்களுக்கு வெள்ளுசிலை*

நிலை. பாலை வடத்திற்குப் பாலைநிலை. மாவிலங்கை வடத்திற்கு மாவிலங்க நிலை. அயில் வடத்திற்கு அயில் நிலை. இப்படியாகில் எல்லோருக்கும் பொருந்தும்.

### நான்கு வருணத்தாருக்கும் வடம், நிலை செய்ய மரங்கள்

மாமரம் தேவர்க் காகும்
மறையவர் வேம்ப தாகும்
கோமகன் தேக்க தாகும்
குணமுள்ள இலுப்பை செட்டி
பூமகன் வேங்கை யாகும்
பொருசாதி நான்கி னுக்குள்
தாமமாம் வடநி லையைத்
தருமயன் சாற்று வாரே. 106

*(இ. ள்)* நான்கு வருணத்தாருக்கும் வடம், நிலை செய்யப் பயன்படும் மரங்கள். தேவர்க்குக் கோயில் அமைக்கும் பொழுது, மாமரத்தைக்கொண்டு வடம், நிலையை அமைக்க வேண்டும். அந்தணர்கள் வேம்பின் மரத்தைக் கொண்டு வடம், நிலையை அமைக்க வேண்டும். வணிகர்கள் இலுப்பை மரத்தைக் கொண்டு வடம், நிலையை அமைக்க வேண்டும். வேளாளர்கள் வீடுகளைக் கட்டும் பொழுது வடம், நிலையை வேங்கை மரத்தைக் கொண்டு அமைக்க வேண்டும் என்று மயன் சாற்றியுள்ளார். *(739 : 63)*

### முழக்கோல் செய்ய ஏற்ற மரங்கள்

மூங்கிலுடன் ஆச்சா மொழிந்ததொரு தேக்கு
வேங்கையிவை கோல்கொள்ளும் வீறு மரங்கள்
மூங்கில்மறை யரசாச்சா மொழிவணிகன் தேக்கு
வேங்கையது கோல்கொள்ளும் வேளாளர்க் கென்றே.107
*(1005 b)*

*(இ. ள்)* மூங்கில், ஆச்சா, தேக்கு, வேங்கை ஆகிய மரங்கள் முழக்கோல் செய்ய ஏற்ற மரங்களாகும். அவற்றுள் மூங்கினால் செய்த முழக்கோல்களை அந்தணர் வீடுகட்டப்

பயன்படுத்த வேண்டும். ஆச்சா மரத்தால் செய்த முழக்கோல்களை அரசர்கள் அரண்மனை கட்டும்போது பயன்படுத்த வேண்டும். தேக்கு மரத்தால் செய்த முழக்கோல்களை வணிகர்கள் வீடு கட்டும்போது பயன்படுத்தவேண்டும். வேங்கை மரத்தால் செய்த முழக்கோல்களை வேளாளர்கள் வீடு கட்டும்போது பயன்படுத்த வேண்டும்.

### மட்டக்கோல் செய்ய ஏற்ற மரங்கள்

மறையும்நல் மறையோர் ஆச்சா
மன்னர்க்கு வணிகர் தேக்கு
பொறையுடை சூத்தி ரர்க்குக்
கருங்காலி வேங்கை யாகும்
குறியுடை இரும்பு தானும்
கொள்வதி தேவர்க் காகும்
நெறியுடன் மட்டக் கோல்தான்
நிகழ்த்திய வாறு தானே. 108

*(886 a : 39)*

*(இ. ள்)* மூங்கில் மரத்தினால் செய்த மட்டக்கோலை அந்தணர்கள் வீடு கட்டும்பொழுது பயன்படுத்தவேண்டும். ஆச்சா மரத்தினால் செய்த மட்டக்கோலை அரசர்கள் அரண்மனை கட்டும்பொழுது பயன்படுத்தவேண்டும். தேக்கு மரத்தினால் செய்த மட்டக்கோலை வணிகர்கள் வீடு கட்டும்பொழுது பயன்படுத்தவேண்டும். கருங்காலி, வேங்கை முதலான மரங்களினால் செய்த மட்டக் கோல்களைச் சூத்திரர்கள் பயன்படுத்தவேண்டும். இரும்பினால் செய்த மட்டக்கோல்களைக் கோயில்கள் கட்டும்பொழுது பயன்படுத்தவேண்டும்.

### வீடு கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாத மரங்கள்

அத்தியும் ஆலும் இச்சி
அரசுடன் இலவு தானும்
நத்திய புரசு குச்சம்
நவின்றிடும் இலந்தை பீலி

வித்தம் மகிழும் கூறும்
விளாவுடன் இவைகள் எல்லாம்
சித்தியாய் அகங்கள் கட்ட
செல்வமும் குன்றும் தானே. 109

*(இ. ள்)* அத்தி, ஆல், இச்சி, அரசு, இலவு, புரசு, குச்சம், இலந்தை, பீலி, விளா, மகிளம் ஆகிய மரங்களால் வீடு கட்டினால் செல்வம் குறைந்து போகும். *(742 : 102)*

**இதுவுமது**

அத்தியா லிச்சு அரசு புரசுவிளா
வெத்திமகிள் இலுப்பை வெண்குடசை-சுத்த
இலந்தை மரங்கள் இவைதான் பத்தும்
கலந்துவெட்டிக் கட்டிட லாகா. 110

*(இ. ள்)* அத்தி, ஆல், இச்சு, அரசு, புரசு, விளா, மகிள், இலுப்பை, வெண்குடசை, இலந்தை ஆகிய பத்து மரங்களும் வீடு கட்டுவதற்கு உதவாத மரங்களாகும். இவற்றைக் கலந்து வீடு கட்ட துன்பம் உண்டாகும். *(886 a : 232)*

**இதுவுமது**

வக்கணா வாகை கூகை .....
வருஞ்சிலை அழிஞ்சி மற்றும்
நிக்கொணா பூவு சீலை
நேரிய குருக்கு அத்தி
ஒக்கநால் வேதத் தோர்க்கும்
உயர்முனி வோர்க்கு மாக
பொக்கெனத் தீதாம் என்று
புகன்றனர் மயனும் தானே. 111

*(சி. நூ. பா. : 339)*

*(இ. ள்)* வக்ணாமரம், வாகைமரம், கூகை மரம், உசிலைமரம், அழிஞ்சிமரம், குருக்கத்தி ஆகிய மரங்கள் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் தீமையைச் செய்வன. அதனால் அவற்றை வீடு கட்ட பயன்படுத்தக் கூடாது.

**இதுவுமது**

கள்ளிவேல் விடத்தை வில்வம்
கருங்காலி விளாப ரம்பை
முள்ளுள மரங்கள் தேவர்
முனிவர்க்காம் மனிதர்க் காகா
வள்ளிய வாகை கூகை
வக்கணாச் சிலைய ழிஞ்சி[1]
உள்ளமுள் உசில கத்தி[2]
ஒருவர்க்கும் ஆகா தென்றே. 112

*(இ. ள்)* கள்ளி, வேல், விடத்தை, வில்வம், கருங்காலி, விளா, பரம்பை இப்படி முள் உள்ள மரங்கள் எல்லாம் தேவர்க்கும் முனிவர்க்கும் பயன்படும். மனிதர்களுக்குப் பயன்படாது. வாகை, கூகை, பக்கணா, சீலை, அழிஞ்சி, முள் உசிலை. குருக்கத்தி இவை ஒருவருக்கும் ஆகாது. தோஷத்தைக் காட்டும். *(739 : 61)*

***மனை மாட கூடங்களுக்கு உதவாத மரங்கள்-பலன்***

வன்னி கள்ளி விடத்தலைவேல்
வாகை வில்வம் காலிவிளா
துன்னும் பரம்பை முள்ளதுவும்
தோன்று மனையில் அதுசேரில்
அன்னம் கிடைப்ப தரிதாகும்
அரசன் மரணம் சிலுகுபெறும்
முன்னுள் முனிக்கும் தேவர்க்கும்
மொழியும் முறையும் இதுவாமே. 113
*(சி. நூ. பா. : 344)*

*(இ. ள்)* வன்னிமரம், கள்ளிமரம், விடத்தலை மரம், வேலமரம், வாகைமரம், வில்வமரம், கருங்காலி மரம், விளா மரம், பரம்பை மரம் இப்படி முள்ளுள்ள மரங்களை வீடு கட்டப் பயன்படுத்தினால், மனைக்கு உரியவனுக்கு உணவு

---

1. வக்கணம் அழிஞ்சில் ஆத்தி
2. உள்ளபூ உசிலி லந்தை

கிடைப்பது அரிதாகும். மரண பயம் உண்டாகும். துன்பம் நேரிடும். ஆனால் இத்தகைய மரங்கள் முனிவர்க்கும் தேவர்க்குமாகும் மனிதர்களுக்கு ஆகாது.

### வீடு கட்ட ஆகாத மரங்கள்

அம்பலம் சிற்றூர் கோயில்
அனற்படல் பறவை சேர்தல்
வம்புடன் கொடிகள் சுற்றல்
வல்புழ விலங்கின் சேர்க்கை
தும்பியால் காற்றால் வீழ்தல்
சுடலைபாழ் மனையும் சேரி
வெம்புற லுடன்பேய் பூதம்
ஏவல்வே ரற்ற தாகா. 114

*(இ. ள்)* அம்பலத்தில் இருந்தது, ஊர் மத்தியில் இருந்தது கோயில்களில் இருந்தது. அனல் தாவி வெந்தது. பறவைக் கூட்டங்கள் இருந்தது, புற்றின் மீது முளைத்தது, தேள் இருந்தது, வம்புக்காய் காய்த்தது, கொடி சுற்றியது. புழுவெட்டு உள்ளது, மிருகங்கள் தங்கி இருப்பது, குளத்தருகில் அல்லது கிணற்றருகில் நின்றது. பூமியில் நட்டு நீர்வார்த்தது, யானை முறித்தது காற்று மோதி முறிந்தது. சுடுகாட்டில் நின்றது, பாழ்மனை, சேரி இந்த இடங்களில் இருந்தது. வெம்பி மடிந்தது, பாம்பு குடிகொண்டது, பூதம், பிசாசுகள் நின்றது, தானே மக்கி வீழ்ந்தது முதலானவை தீமையையுடைய மரங்களாகும் இவ்வித மரங்களில் வீடுகட்டுதல் தீமையதாகும். *(சி. நூ. பா. : 354)*

### வீடுகட்டுவதற்கு பயன்படுதக்கூடாத மரங்கள்

காத்தே தும்பி முறித்தமரம்
தணலில் வெந்து விழுந்தமரம்
ஆத்து ஓரத் திருந்தமரம்
அடைந்து வௌவால் உறைந்தமரம்

கூத்தன் பேய்பாம் புறைந்தமரம்
கொடிய புல்லூர் உறைந்தமரம்
போற்றுங் கோயில் பலமரமும்
பொய்யும் வடிந்த தாகாதென். 115

*(இ. ள்)* காற்றில் விழுந்த மரம், யானை முறித்த மரம், நெருப்பில் வெந்த மரம், ஆற்றங்கரையில் நின்று விழுந்த மரம், வெளவால் உறைந்த மரம், பேய்கள், பாம்புகள் தங்கியிருக்கும் மரம், கொடி, புல்லுருவி பாய்ந்த மரம், கோயில் அம்பலத்தில் இருக்கும் மரம் ஆகியவை வீடு கட்டுவதற்கு ஆகாத மரங்கள். *(739 : 62)*

## இதுவுமது

சீறிய காற்றில் வீழ்ந்த
திறமைசேர் மரமும் அல்லால்
கூறிய ஆல யத்தில்
குணம்பெற நிற்கும் நல்ல
தேறிய மரம்மயா னத்து
இருந்துடும் மரம்அ கந்தான்
மாறியே கட்டு மாகில்
வமிசமும் நாச மாமே. 116

*(இ. ள்)* காற்றில் அடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்தில் இருந்த மரம், மயானத்தில் இருந்த மரம். இவ்வகைப்பட்ட மரங்களால் வீடுகள் கட்ட, மனைக்குரியவனின் குலம் நாசமடையும். *(742 : 103)*

## இதுவுமது

பெருங்காத்தில் வீழ்ந்து போனதில் வெந்ததும்
அருங்கோவில் லம்பலம்பதி லார்ந்ததும் - பெருந்திருவே
இந்த மரங்கள் எடுத்தில்லங் கட்டினால்
அந்தமனை பாழென் றறி. 117

*(886 a : 233)*

### மரத்தைத் தேர்ந்தெடுத்தல்

கானகந் தன்னில் வெட்டும்
　　கணக்கதைக் குறிப்பாய் நோக்கில்
ஆனதோர் குற்ற மில்லா
　　ஆண்மரம் தன்னைப் பார்த்தே
ஊனமுந் தேரை பொந்த
　　உறத்தஉள் வளைசல் இல்லா
தானதைக் கம்ப மாகச்
　　செயப்பிர திஷ்டை தானே. 118

*(இ. ள்)* மரத்தை வெட்டுவதற்கு தேர்ந்தெடுக்கும் பொழுது, ஆண் மரமாகப் பார்த்துக் குற்றங்கள் இல்லாததாய்த் தேரைகள் பொந்துகள் இல்லாததாய் உள்வளைசல் இல்லாததாய்ப் பார்த்து வெட்டுவது. *(சி. நூ. பா. : 346)*

### மரம் வெட்டுவதற்கு முன் செய்ய வேண்டியவை

மயன்மரம் வெட்டும் போது
　　மருவிய நீரில் மூழ்கி
தவமொடு பணியா ரங்கள்
　　தன்மையாய் அருந்திப் பின்னும்
தயவொடு சேலை கட்டித்
　　தாம்பூல இலைய ருந்தி
வியனொடு தறிகை தன்னை
　　விரும்பியநெய் பாலிற் தோயே. 119

*(இ. ள்)* மரம் வெட்டுவதற்கு முன் அதிகாலையில் நீரில் மூழ்கி, செய்ய வேண்டிய நியமங்களைச் செய்து, பணியாரம், பால்சோறு உண்டு, கச்சை, தொப்பரம் கட்டியபின், பாக்கு வெற்றிலை தின்று, தறிகையைப் பாலிலும் நெய்யிலும் தோய்த்து, நேரும் அடவிலே மரங்கள் வெட்ட வேண்டும். *(739 : 65)*

## மரம் வெட்டுவதற்கு முன் செய்ய வேண்டியவை

கருதிய முகூர்த்தங் கொண்டு
காட்டினுள் மரங்கள் வெட்டப்
பரிவுடன் பாலும் சோறும்
பணியாரம் பலவும் கொண்டு
மருவிய பூசை யிட்டு
வனதேவி பலிகொ டுத்துப்
புருவினாம் மரத்தின் கீழே
பொற்புற நிற்பர் தாமே. 120

*(இ. ள்) தனக்கிசைந்த முகூர்த்தத்தில் எழுந்து காட்டுக்குள் போய்ப் பற்பல பணியார வகைகளுடனே வனதேவதைக்குப் பலிகொடுத்து ஆண் மரத்திற்கு அருகில் செல்லவும். (சி. நூ. பா. : 355)*

## மரத்தை வெட்டுதல்

காட்டிய தூபத் தோடு
கணபதி தன்னைத் தொழுது
தீட்டிய [1]தறிகை தர்ப்பை
தென்புற மாக வைத்து
மீட்டிய ஆண்மரம் தழுவி
மேற்கொம்பு தானும் பார்த்து
மூட்டுமோர் முழங்கீழ் விட்டு
மூன்றுவெட் டாக வெட்டே. 121

*(இ. ள்) மரத்தடியில் மயனாரும் மரம் வெட்டுகின்றவரும் சென்று தூபம் காட்டி, கணபதி பூசை செய்து, வணங்கி தறிகையும் தர்ப்பையும் வலது புறத்திலே வைத்து, ஆண் மரத்தைத் தழுவி மேற்கொம்பு பார்த்து ஒரு முழம் விட்டு தறிக்கையினாலே மூன்று வெட்டு வெட்டுவது. மீண்டும் மரம் வெட்டுவது.*

---

*1. தறிகை - கோடாலி*

### மரம் வெட்டுதல்

தென்புறம் மேற்கு மாகத்
        தர்ப்பைகோ, டாலி வைத்துத்
துன்பமாம் பூதம் பேயைத்
        தூரமே போகச் சொல்லி
இன்பமாய்ப் பால்கு டித்து
        இதனிற்கோ டாலி தோய்த்து
அன்பிலோர் முழத்தை விட்டு
        அடைவுடன் வெட்டு வாயே. 122

*(சி. நூ. பா. : 356)*

*(இ. ள்)* தென்புறத்திலே தர்ப்பையும், மேற்புறத்திலே கோடாலியும் வைத்துப் பேய்பூதங்களை விலக்கி, மந்திர தியானத்துடனே பால் குடித்துப், பாலிலே கோடாலியை வைத்து, அடியிலொரு முழம்விட்டு, மரத்தை ஏறப்பார்த்து நமஸ்கரித்துக் கோடாலியாலே வெட்டவும்.

### மரம் வெட்டும்பொழுது தீய சகுனம்

வெட்டிய மரத்தின் வாயில்
        விழுந்துநீர் பாயில் தீதாம்
பட்டமி ரத்தம் போலே
        பார்க்கிலும் ஆகா தென்க
ஓட்டின தேரை தானும்
        உள்ளிருந் தோட லாகா
நட்டமாங் கேட தாகும்
        நன்மையோ இல்லை கண்டீர் ! 123

*(739 : 66)*

*(இ. ள்)* மரம் வெட்டின வாயில் தண்ணீர் ஒழுகி வீழ்ந்தாலும், இரத்தம் போலே பரந்து விழுந்தாலும், தேரை உள்ளிருந்து ஓடினாலும் நட்டமாய் கெடுதலையும் தோஷத்தையும் காட்டும். நன்மை இல்லை.

### இதுவுமது

வெட்டிய வாயில் நீர்பால்
வீழ்ந்திடில் ஆகா தென்க
வெட்டவீழ் மரத்தின் சத்தம்
வெம்புலி யானை நன்றாம்
வெட்டிவீழ் மரத்தின் சத்தம்
அழுகையும் சிரிப்பு மாகா
வெட்டிய மரங்கி ழக்கும்
வடக்குமாய் வீழ்தல் நன்றாம். 124

*(இ. ள்)* இந்தப்படி வெட்டும்பொழுது வெட்டுவாயில் அதிக நீர் பாய்தல், பால்போல் வடிதல் ஆகாது. வெட்டி விழுகிற மரம் புலி போல், யானைபோல், சப்திக்கில் நன்மை, அழுதல், சிரித்தல் போலும் சப்திக்கில் ஆகாது. வடக்கேயாவது கிழக்கேயாவது தலையாக விழுந்தால் நல்லது. *(சி. நூ. பா. : 379)*

### மரம் விழும்பொழுது எழும் ஒலியின் பலன்

விழுந்திடும் மரத்தின் சத்தம்
வியனொடு பாடி னாப்போல்
முழங்கியே வீழ மாகில்
முற்றிலும் கருமம் நன்றாம்
முழங்கியே மனிதர் பேய்போல்
அலறியே வீழு மாகில்
ஒழிந்திடும் மாதே ஆகா
உடன்பொருள் சேத மாமே.[1] 125

*(இ. ள்)* மரம் வெட்டி விழும்பொழுது, இராகம் பாடியதைப் போல் முழங்கி விழுமாகில், செய்யக் கூடிய செயல்கள் அனைத்தும் நன்றாக நடக்கும். மரம் வெட்டி விழும்பொழுது மனிதர், பேய் இவர்கள் அலறுவதைப் போல விழுந்தால் பொருள் சேதம் உண்டாவதுடும் தீமை விளையும். *(739 : 68)*

---

1. "ஒழிந்திடும் கரும மெல்லாம் உயிர்ப்பொருள் சேத மாமே" என்ற பாடவேறுபாடும் காணப்படுகிறது.

### மரத்தலை விழுந்த திசை - பலன் சொல்லுதல்

வடக்கொடு கிழக்க தாக
மரத்தலை விழுமே யாகில்
திடத்தொடு நன்மை யாகும்
செல்வமும் பெருமை உண்டாம்
குடக்கொடு தெற்க தாகக்
குணங்கெட வீழு மாகில்
உடைந்துடன் வினைகள் சூழ்ந்து
ஆகாது வேறு கூறே. 126

*(இ. ள்)* வடக்கே தலை வீழ்ந்தாலும், கிழக்கே தலை வீழ்ந்தாலும் நன்மையும் செல்வமும் பெருமையும் உண்டாகும். மேற்கே தலை விழுந்தாலும் தெற்கே தலை விழுந்தாலும் தீவினைகள் அடர்ந்து வந்து துன்பத்தைத் தரும். தோஷத்தைக் காட்டும். *(739 : 69)*

### மரவேலைக்கு முன் செய்ய வேண்டியவை

மரத்தினை முகூர்த்தம் பார்த்து
மயன்முக்கால் வெட்டும் போது
கருத்துடன் கோடாலி பத்தி
கடிதுமற் றோரும் வெட்ட
இரத்தொடு குறிகள் நன்றாம்
இடித்துடன் பார்த்து வீழ்ந்த
மரத்தினை எடுத்துப் பின்பு
வன்மையாம் தொழில்கள் செய்வாம். 127

*(இ. ள்)* நல்ல மரத்தினை முகூர்த்தம் பார்த்து சாஸ்திரத்தின் படியே மயன் முக்கால் மரத்தை வெட்டின பிறகு, மற்றுள்ள பேர்கள் கோடாலி கொண்டு வெட்ட வேண்டும். விழுந்த மரத்தை வெட்டி மரத்தின் தன்மையும் நன்றாக இருந்து, மரம் விழும் பொழுது ஓசையும் சரியாக இருக்கும் மரத்தினைக் கண்டு மயனானவன் வன்மையாகிய தொழிகளைச் செய்வான். *(739 : 70)*

### உத்திரம் இணைத்தல்

உத்திரம் இசைப்ப தாக
 உண்ணியே கேளு மெல்ல
அத்தனை அகலம் தன்னை
 அளந்துநீ சதுர மாக
வைத்தது கனத்தை நேரே
 வடிவுற நூலால் கண்டு
இத்தனை என்ப தாக
 இசைந்தனன் குடுமி யானே. 128

*(886 a : 252)*

*(இ. ள்)* உத்திரம் இசைக்கும் அகலத்தை அளந்து சதுரமாக்கி கனத்தை நூலளவு கண்டு அதனை ஒன்பதாக்கி இசைத்து நின்றது குடுமியாம்.

### உத்திரம் இசைத்தல் - பலன்

உத்திரம் இசையில் ஆணி
 உலகத்தில் வலம தாகில்
அத்தனார் அருளி னாலே
 அநேகபாக் கியமுண் டாகும்[1]
உத்திரம் இசையில் ஆணி
 உலகத்தில் இடம தாகில்
சத்துரு பெருத்துப் பின்னும்
 சாலைதீப் படுகை திண்ணம். 129

*(886 a : 253)*

*(இ. ள்)* உத்திரங்களைப் பொருத்தும் பொழுது, ஆணி வலப்பக்கம் இருப்பின், இறைவனின் அருளினால் பல்வேறு பாக்கியங்களும் உண்டாகும். ஆணி இடப்பக்கம் இருப்பின், பகைவர்கள் மிகுதியாவர். வீடும் தீயினால் அழியும்.

---

குறிப்பு: உத்திரத்திற்கு இசைக்கின்ற ஆணி தேவர்களுக்கு நடுவாகக் கொள்ளவும். மானிடர்க்கு வலமாகக் கொள்ளவும். இடமாகக் கொள்ளில் சத்துரு பெருத்து அந்த வீடு தீப்படும் என்றவாறு என்ற உரையும் காணப்படுகிறது. (சி. நூ. பா. : 360)

1. உத்தர மிசைக்கி லாணி உத்தம மாகக் கொள்ள.

### உத்திரம் இணைத்தல்

மையமே மனைகள் தன்னில்
மரத்தினை இசைப்பா னாகில்
கையினிற் பொருளும் போகும்
காவலன் தானும் சாவான்
பையவே ஆகில் மையம்
பாதியில் பாதி தன்னில்
செய்யவே கடவ நல்ல
சேர்ந்ததோர் இசையும் தானே. 130

*(இ. ள்) நடுமையத்தில் மரம் இசைத்தல் ஆகாது. இசைத்தால், அவ்வீட்டிற்கு உரியவனின் பொருள்கள் அழிந்துபோகும். அவனுக்கும் மரணம் உண்டாகும். மரங்களின் மையத்திற் பாதியில் பாதி இசைக்கவும். (886 a : 254)*

### மரம் இசைத்தல்

அடியது கீழ தாகும்
கசிரம் மேல தாகும்
படிமுத லான தெல்லாம்
பார்த்துடன் இசைத்துக் கொள்க
முடியவே ஓரை யாகில்
மூலமும் உள்ளே யாகும்
கடிகமழ் குழலி னாளே
கண்டவர் உரைத்த வாறே. 131

*(886 a : 255)*

*(இ. ள்) மணமுள்ள மலர்களைச் சூடியுள்ள குழலை உடைய பெண்ணே! மரத்தின் நன்மை தீமை அறிந்து உத்திரம் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கும் பொழுது, அடிமரம் கீழே இருக்கும்படியாகவும் தலைப்பகுதி மேலே இருக்கும்படியாக இசைத்துக்கொள்ளவேண்டும். இதனை மனைநூல் கண்டவர்கள் கூறியுள்ளார்கள்.*

**இதுவுமது**

இருந்த முதுதலை முதுதலையும்
இலந்தலை யோடே இளந்தலையும்
பொருந்தி இசைப்பா ராமாகிற்
பொல்லா நோயும் மிகத்தொடரும்
திருந்து முதுதலை இளந்தலைய்யும்
சேரு மிசைகள் மிகநன்றாம்
வருந்தி இசைப்பா ராமாகிற்
வாழ்வும் சம்பத் துண்டாமே. 132

(இ. ள்) முதுதலையோடு முதுதலையும் இளந்தலையோடு இளந்தலையும் இசைப்பாராகில் பொல்லாத நோயுண்டாகும். முதுதலையோடு இளந்தலை சேர இசைப்பது நன்றாம். இப்படி பார்த்து இசைப்பாராகில் வாழ்வும் சம்பத்தும் உண்டாம். *(சி. நூ. பா. : 365)*

**இதுவுமது**

இசைமுது தலைகீ ழாக
இளந்தலை மேல தாக
பசையுடன் நேர மாகிற்
பருந்தலை யுள்ள தாக
வசைவுற இசைப்பா னாகில்
வாழ்வொடு சம்பத் துண்டாம்
பிசகுதல் பெருமை யாகில்
பிணியொடு கேட தாமே. 133

*(இ. ள்)* மரம் இசைக்கும் பொழுது முதுதலை கீழாகவும் இளந்தலை மேலாகவும். ஓர் விசையாகில் முதுதலை உள்ளும் இளந்தலை புறத்திலுமாக இசைப்பது. குற்றம் வருமாகில் பிணி, கேடு உண்டாம். *(886 a : 250)*

**இதுவுமது**

முதுதலை இரண்டும் தென்மேல்
மூலையில் கூட வைத்துத்
திதமுற இசைக்கும் போது
தென்தலை மேல தாக

மதிஇளந் தலையி ரண்டும்
வடகீழாம் மூலை தன்னில்
விதிவிடத் தலைகீ ழாக
விளம்பினர் பிணைக்கத் தானே. 134

*(இ. ள்) மரம் இசைக்கும்பொழுது, முதுதலை இரண்டும் தென்மேல் மூலையில் பொருந்த வைத்துத் தென்தலை மேலாகவும், இளந்தலை இரண்டும் வடகீழ் மூலையில் பொருந்த வைத்து வடதலை கீழாகவும் இணைப்பன. (886 a : 240)*

**இதுவுமது**

இளந்தலை இரண்டும் வேறே
இடந்தனிற் இசைக்க லாகா
விளம்பட முதுதலை கள்தான்
மத்திடத் திசைக்க லாகா
விளம்பினோம் ' இசைப்பா னாகில்
வறுமைநோய் நலியும் என்று
தெரிந்தவர் உரைக்க லுற்றார்
சிற்பியின் நூலி னாலே. 135

*(இ. ள்) இளந்தலை இரண்டும் வடகீழ் மூலை ஒழிய வேறு இடத்தில் இசைக்கலாகாது. முதுதலை இரண்டும் தென் மேல் மூலையிலொழிய மற்ற இடங்களில் இசைக்கலாகாது. அவ்வாறு மனைக்குரியவன் இசைப்பானாயின், அவன் வறுமையாலும் நோயாலும் துன்புறுவான் என்பதை மனை நூல்களில் உள்ளவாறு கூறியுள்ளார்கள். (886 a : 241)*

**இதுவுமது**

நிறைநெய் இலாத வைரமுடன்
நெய்யிலா வைரம் தானிசைக்க
வறண்ட வைரம் தன்னுடனே
வறண்ட வைரம் தானிசைக்கச்

சிறந்த வலத்தில் நெடுவடையும்
சேரு மிடத்தில் குறுவடையும்
புறம்பிற் தச்சன் நின்றிசைக்கப்
புகழும் சிற்பன் உள்ளிசையே. 136

*(இ. ள்) நெய்யற்ற வைரத்துடன் நெய்யற்ற வைரமும், வறண்ட வைரத்துடன் வறண்ட வைரமும், வலத்தில் நெடுவடையும் இடத்தில் குறுவடையும் தச்சம் புறம்பும், சிற்பன் உள்ளும் சேர்த்து இசைக்கவும். (சி. நூ. : 363)*

## இதுவுமது

ஆன மரங்கள் ஒன்றுபல
வாகிற் பலன்கள் ஆராய்ந்து
ஊன மிலாத தையுரித்த
உரமாய் உத்திரம் தானிசைக்கில்
ஈன மில்லை மனக்கிடலும்
இல்லை வாழ்வு மிகவுண்டாம்
போன திசையும் நன்றாகும்
புகழும் சிற்பன் தனக்காமே. 137

*(இ. ள்) வேங்கை, வேம்பு, தேக்கு முதலிய மரங்களில் ஒரு சாதியிலாவது பலபல சாதியிலாவது பலமுள்ளதாகவும், ஊனமில்லாத மரமாகவும் சேர்த்து உத்தரம் இசைக்கவும் இப்படி இசைக்கில் மனைக்கு இடரும் இல்லை. பொருந்திய வாழ்வும் சம்பத்தும் உண்டாகும். (சி. நூ. பா. : 364)*

## மரவேலை - அளவு

அஞ்சிலே இரண்ட தாகில்
அகலத்தை இருப தாக்கி
ஒஞ்சஈ ராறு தானே
ஏற்றதோர் அஞ்ச தாகும்

மஞ்சாங்கை பதிமூன் றாகும்
நடுவாங்கை ஈரே ழாகும்
செஞ்சொமூ வஞ்சுகோ டாகை
கோடியீ ரெட்ட தாமே. 138

*(இ. ள்) அகலத்தை இருபது கூறு செய்து அஞ்சு பன்னிரண்டு மஞ்சாங்கை பதிமூன்று நடுவாங்கை பதினாலு. கோடாகை பதினைந்து. கோடி பதினாறு. இப்படி ஐந்து இரண்டாம் கைக்கு அளவு பிரமாணம் பார்த்து முறிப்பது. (739 : 71)*

## இதுவுமது

ஏழினில் மூன்றாங் கைக்குப்
பரப்பைமூ வெட்ட தாக்கி
வாழுமீ ரெட்டும் அஞ்சு
மஞ்சாகை பதினே ழாகும்
மூலையில் நடுவாங் கைக்கு
உரைத்தஈ ரொன்ப தாகும்
சூழிகோடா கைஈரைந் தொன்பான்
சொற்கோடி இருப தாமே. 139

*(இ. ள்) ஏழில் மூன்றாம் கைக்குப் பரப்பை இருபத்து நான்கு கூறு செய்து, அஞ்சு பதினாறு, மஞ்சாங்கை பதினேழு நடுவாங்கை பதினெட்டு. கோடாகை பத்தொன்பது. கோடி இருபது என்றவாறு. இப்படி ஏழில் மூன்றாம் கைக்கு அளவு பிரமாணம் பார்த்து முறிப்பது. (1005a)*

## இதுவுமது

ஏழிலே மூன்றுப ரப்பை
இருபத்து நான்கு செய்து
வாழ்பதி னாறு அஞ்சு
மஞ்சாங்கை பதினே ழாகும்

சூழ்வகை பதினெட் டாகும்
சொல்லுக நடுவாங் கைக்கே
ஊழியாங் கோடாகை பத்தொன்ப
திருபதாம் கோடி யாமே. 140

*(739 : 72)*

## இதுவுமது

ஒன்பது நாலாங் கைக்குப்
பரப்பைஇரு பத்தெட் டாக்கி
வன்பொடு பத்தொன் பதுக்கும்
அஞ்சுஇரு பதாம்மஞ் சாங்கை
இன்பமூ வேழாம்நடு வாங்கை
கோடாகை இருபத் ரெண்டு
உண்டாகும் கோடி இருபத்து
மூன்றென்பார் மயனார் தானே. 141

*(இ. ள்)* ஒன்பதில் நாலாங்கைக்குப் பரப்பை இருபத்தெட்டுக் கூறுகளாக்கி அஞ்சு பத்தொன்பது. மஞ்சாங்கை இருபது. நடுவாங்கை இருபத்தொன்று. கோடாகை இருபத்து இரண்டு. கோடி இருபத்து மூன்று என்பது. இப்படி ஒன்பது நாலாங்கைக்கு அறிந்து முறிப்பது. *(739 : 73)*

## இதுவுமது

ஒன்பது நான்கு தன்னில்
அகலமோ டிருபத் தெட்டு
அன்புஅஞ்சு பத்தொன்ப தாகும்
மஞ்சாங்கை இருப தாகும்
நன்பக்ரில் இருபத் தொன்றாம்
நடுவாங்கை கோடாகை கோடி
முன்புறு வழியோ ரொன்று
முறைமையாய் ஏற்றிக் கொள்ளே. 142

*(1005 b)*

### இதுவுமது

பரப்பினில் பாதி தன்னைப்
பன்னிரு கூறு செய்து
நிறப்புறும் ஐந்து கூறு
நின்றதும் ஏற்றம் அஞ்சாம்
இறப்பமஞ் சாங்கை ஆறாம்
ஏழது நடுவாங் கையோ
முறப்புகோ டாகை எட்டு
ஒன்பது கோடி தானே. 143

*(இ. ள்)* பரப்பினில் பாதியைப் பன்னிரண்டு கூறு செய்து, ஐந்து கூறு ஏற்றம் மஞ்சு, ஆறு மஞ்சாங்கை, ஏழு நடுவாங்கை , எட்டு மரமிசைக் கோடாகை, ஒன்பது கோடி. *(நூ. பா. : 121)*

### இதுவுமது

பண்புடன் அகலம் பாதி
பன்னிரு கூறு செய்து
அன்புடன் அஞ்சு அஞ்சாம்
ஆறாவதுமஞ் சாங்கை யாகும்
இன்பமோ டேழுநடு வாங்கையாம்
எட்டுகோ டாகை யாகும்
ஒன்பதாம் கூறு கோடி
என்றுரைத்தார் மயனார் தானே. 144
*(1005b)*

### இதுவுமது

அகலத்தோர் பாதி தன்னை
ஆறிரு கூறு செய்து
சகலர்க்கும் ஐந்து கூறே
தக்கதோர் ஓரம் அஞ்சாம்

மிகலுமஞ் சாகை ஆறாம்
ஏழுது நடவாங் கைக்கு
முகலுங்கோ டாகை எட்டு
ஒன்பது கோடி தானே. 145

(நூ. பா. : 121)

**உயர்ந்த பல கைகள் செய்ய அளவு**

பலவு யர்ந்த கைதனக்கு
பரப்பு மூன்று கையதனைக்
குலவி நான்கு கூறிட்டுக்
கோடா கைக்கு மூன்றாகும்
பிலகு நடுவாங் கைக்குரண்டு
மஞ்சாங் கைக்கே ஒன்றாகும்
இலகு மிழுக்கே இட்டபடி
இவைதான் அறிந்து செய்வீரே. 146

*(இ. ள்) பல உயர்ந்த கைக்கு இழுக்கு. பரப்பு மூன்று கைக்கு நான்கு கூறிட்டுக் கோடாகைக்கு மூன்று நடுவாங்கைக்கு இரண்டு. அஞ்சும் கைக்கு ஒன்று இருக்கின்றபடி அறிந்து கொள்வீர். (739 : 76)*

**கோடி கிழக்கு**

கோடி கிழக்குத் தான்சொல்லிற்
குறித்த சாஸ்திரத் துள்ளபடி
வாடி மனங்கள் தளராமல்
அஞ்சு முதுகி லுயரத்தை
ஓடி ஒன்பது கூறாக்கி
ஒன்று கோடி கிழக்கிடலாம்
நாடி மயனார் சொன்னதிலை
நன்றாய் அளந்து கொள்வீரே. 147

(1005 a)

*(இ. ள்) அஞ்சு முதுகுயரத்தை ஒன்பது கூறுகளாகச் செய்து அதிலே ஒரு கோடி கிழக்கு என்றது. மயனார் சொன்னபடி அறிந்தகொள்ளும்.*

**முதுகுயரம்**

ஆன அஞ்சில் முதுகுயரம்
அளவு பிடித்து அதுதன்னைத்
தானும் அதிலே ஓரஞ்சு
தக்க கூறு தானாக்கி
ஒன்றாய் அதிலே இரண்டேத்த
உற்ற கோடி முதுகுயரம்
என்றாம் மயனார் உரைத்ததிது
இருந்த வகையே செயநன்றே. 148
(1005 a)

*(இ. ள்) முதுகுயரத்தை நான்கு அளவு பிடித்து, அதனை அஞ்சு கூறாக்கி அதிலே இரண்டு ஏத்த கோடிக்கு ஒன்று முதுகுயரம் என்று மயனார் சொன்னது.*

**இதுவுமது**

ஏத்தும் சேடம் இரண்டுதன்னை
எடுத்து நாலு கூறாக்கி
நாற்றுங் கோடா கைமூன்று
நடுவாங் கைக்கே இரண்டாகும்
மாற்றம் அஞ்சாந் கைக்கொன்று
வைக்கும் முதுகின் உயரமென்று
தோற்ற முடனே மயனாகும்
சொன்னார் நூலின் படிதானே. 149

*(இ. ள்) முன் ஏற்றின சேடம் இரண்டையும் நான்கு கூறு செய்து கோடாகைக்கு மூன்று. நடுவாங்கைக்கு இரண்டு அஞ்சாங் கைக்கு ஒன்று. இது முதுகின் உயரம் என்று மயனார் சொன்னது. (739 : 78)*

### உயர்ந்த அளவு

பண்ணும் அஞ்சில் ரெண்டுகைக்குப்
பரப்புக் கூறு பத்தாக்கி
மண்ணும் எட்டுக் கூறதுவே
மருவும் தாட்பு தனக்காகும்
முன்னும் பிறவா கைக்கிரண்டே
உச்சத் தளவு தானாகும்
பின்னும் மயனார் சொன்னபடி
பேசு கின்றோம் புவிமீதே. 150

*(இ. ள்)* அஞ்சு இரண்டு கைக்கும் பரப்பைப் பத்துக் கூறு செய்து, எட்டு தாட்பு. இரண்டு பிறவாகை உச்சத்தளவு என்று பின்னும் மயனார் சொன்ன சாஸ்திரப்படி கூறப்பட்டுள்ளது. *(739 : 80)*

### இதுவுமது

அஞ்சினில் இரண்டட தான
கைக்குசரம் அளவு நீளம்
மிஞ்சிய முழம்மூன் றாக
வேதித்து ஒன்றை யேற்றித்
தஞ்சமில் அத்தோ டெட்டுத்
தாட்புனர் ஆக்க காலம்
மிஞ்சிடா திரண்டு தானும்
பிறவாகை யென்ன லாமே. 151

*(நூ. பா. : 129)*

### இதுவுமது

அண்ட முறவே உசத்துகின்ற
ஆழந் தன்னைச் சொல்லுங்கால்
கொண்ட பரப்பை நாலாக்கி
கோடா கைக்கு மூன்றாக்கி

மண்டும் நடுவாங் கைக்கிரண்டு
மஞ்சங் கைக்கே ஒன்றாகும்
பண்டு மயனார் சொன்னபடி
பகர லாகும் பாரிடத்தே. 152

*(இ. ள்) பரப்பை ஒன்று நான்கு கூறு செய்து கோடா கைக்கு மூன்று. நடுவாங் கைக்கு இரண்டு. மஞ்சாங்கைக்கு ஒன்று என்று முன்பு மயனார் சொன்னபடி பகர்கின்றோம். (739 : 79)*

## வீட்டின் பக்கதில் இருக்க வேண்டிய மரங்கள்

சீதநீர்க் குலைக்காய் தெங்கு
செழும்பலா வாகை பூகம்
மாதளை திராட்சி வேம்பு
வளறெலு மிச்சு நாவல்
தாதளை துளசி தூதம்
தக்கவம் பளைநா ரத்தை
மீதுள கொன்றை நாவல்
வீட்டின்பால் நிற்க நன்றே. 153
*(சி. நூ. பா. : 352)*

*(இ. ள்) குளிர்ச்சியான இளநீரைக் குலைக்ளாகத் தள்ளும் தென்னைமரம், பலாமரம், வாகைமரம், பாக்குமரம், மாதுளைமரம், திராட்சி மரம், வேப்பமரம், எலுமிச்சைமரம், நாவல்மரம், துளசி செடி, மாமரம், வம்பளை மரம், நாரத்தை மரம், கொன்றைமரம் ஆகியவை வீட்டின் அருகில் இருக்க வேண்டிய நல்ல மரங்கள்.*

குறிப்பு: **இப்பாடலில் இரண்டு முறை நாவல்மரம் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், மரங்களுக்கிடையில் துளசிச் செடி குறிப்பிடப் பட்டுள்ளது. திராட்சி, வம்பளை மரங்கள் பொருள் விளங்கவில்லை.**

### வீட்டில் வளர்க்கக் கூடாத மரங்கள்

விண்ணோங்கும் இலவு கோங்கு
விளாப்புளி மிளகு கூளா
கண்ணோங்கும் இலுப்பை வில்வம்
அலரிகற் பாசம் மச்சம்
தண்ணோங்கு முருங்கை வாகை
தாலமே ரண்ட மற்கம்
பண்ணோங்கே மனையில் நிற்கிற்
பாழ்படும் இல்லம் தானே. 154

*(சி. நூ. பா. : 353)*

*(இ. ள்)* விண்ணைத்தொடுமளவு ஓங்கி உயர்ந்த இலவமரம், கோங்குமரம், விளாமரம், புளியமரம், மிளகு, கூளாமரம், இலுப்பைமரம், வில்வமரம், அலரிமரம், கற்பாசம், மச்சமரம், முருங்கைமரம், வாகைமரம், ஆமணக்கு மரம், அற்க மரம் முதலானவை வீட்டில் இருக்கக்கூடாத மரங்களாகும்.

குறிப்பு: **மரங்களில் மிளகு என்ற மரம் இல்லை.**
**இவ்விடத்தில் பொருள் விளங்கவில்லை.**

### இதுவுமது

பருத்தி இலுப்பை பனைஎட்டி நாவல்
எருக்குப் புளிமா இலவமெட்டும் - பெருக்கமுடன்
இல்லில் இருந்தக்கால் இந்திரனே யாமாகில்
செல்லப்போய் நிற்பாள் திரு. 155

*(இ. ள்)* பருத்தி, இலுப்பை, பனை, எட்டி, நாவல், எருக்கு, புளி, இலவம் ஆகிய இந்த எட்டு மரங்களின் வேர்களும் வீடு கட்டுவதற்குக் குழி தோண்டும்பொழுது இருந்தால் செல்வம் குறைந்து போகும். *(742 : 104)*

குறிப்பு: **அகத்தி என்ற பாடவேறுபாடும் உண்டு.**
**எந்தமனை ஆயிடினும் இந்திரபதம் ஆனாலும்**
**அந்தமனை பாழாய் விடும்.**

## இதுவுமது

பருத்தி அகத்தி பனைநெல்லி[1] நாவல்
எருக்கு புளிஇலவம் ஏறிலந்தை - நெருக்கமுடன்
இல்லத்தில் வோரோடில் இந்திரனே யானாலும்
செல்லப்போய் நிற்கும் திரு. 156

*(இ. ள்)* பருத்தி, இலுப்பை, பனை, நெல்லி, நாவல், புளி, இலவம், இலந்தை ஆகிய ஒன்பது மரங்களின் வேர்களும் வீடு கட்டுவதற்குக் குழி தோண்டும்பொழுது இருந்தால் செல்வம் குறைந்துபோகும். *(நூ. பா. : 138)*

## இதுவுமது

எருக்குடன் அகத்தி நாவல்
இயல்புடன் முருக்கு நெல்லி
தருக்குநெற் பனைப ருத்தி
தானிவை எட்டும் சுத்தி
செருக்கியே வாழ மந்தே
செவ்வக மனையைச் சுத்தி
நெருக்கியே இருக்கு மாகில்
நிலவரம் கேட தாமே. 157

*(886 a : 184)*

*(இ. ள்)* வீடு கட்டியுள்ள இடத்தைச் சுற்றி எருக்கு, அகத்தி, நாவல், முருக்கம், நெல்லி, நெல், பனை, பருத்தி ஆகிய இவை வளர்ந்திருக்குமானால் அம்மனைக்குத் தீங்கு நேரும்.

---- ❋ ----

---

*1. எட்டி*

# 6. அளவுகளும் அளக்கும் முறைகளும்

## அளவுகள்

துன்னிய அணுவ தெட்டு
　　தூக்கிடில் பஞ்சித் தூளாம்
எண்ணியே பஞ்சின் தூளே
　　எட்டுமே மயிர்முனை யாகும்
நண்ணிய மயிர்முனை எட்டு
　　நவிலவே மணல தாகும்
திண்ணமாம் கடுகு எட்டு
　　செப்பவே துவரை யாமே. 158

*(742 : 10)*

*(இ. ள்)* அணு எட்டுக்கொண்டது ஒரு பஞ்சின் தூள். பஞ்சித்தூள் எட்டுக்கொண்டது ஒரு மயிர்முனை, மயிர்முனை எட்டுக்கொண்டது ஒரு நுண் மணல், நுண்மணல் எட்டுக் கொண்டது ஒரு கடுகு, கடுகு எட்டுக்கொண்டது ஒரு துவரை.

குறிப்பு: துவரை என்பதற்குப் பதிலாக மூங்கில் அரிசி என்று சில நூல்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் அடியார்க்குநல்லார் உரையில்,

அணு எட்டுக்கொண்டது தேர்த்துகள், தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி, இம்மி எட்டுக்கொண்டது எள்ளு, எள்ளு எட்டுக்கொண்டது நெல்லு, நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரலெனக் கொள்க என்று கூறப்பட்டுள்ளது. *(சில்ப. 3 : 97-100)*

## இதுவுமது

வேணுவோர் எட்டது ஆகில்
　　வேண்டிய விரல்ஒன் றாகும்
தாணுஇவ் விரலா றானால்
　　தகைமைசால் அதமா தமமாம்
உள்ளிய வரையே விள்ள
　　முயன்றிடும் அதம மாகும்
காணுமே முக்கால் பின்னும்
　　கருதிய மத்தி பந்தான். 159

*(742 : 13)*

*(இ. ள்)* மூங்கிலரிசி எட்டுகொண்டது. ஒரு அங்குலம், அங்குலம் ஆறு கொண்டது கால் முழம். இதற்கு **அதமாதமம்** என்றும் பெயர். அங்குலம் பன்னிரண்டு கொண்டது அரை முழம், இதற்கு **அதமம்** என்று பெயர். அங்குலம் பதினெட்டு கொண்டது முக்கால் முழம், அதற்கு **மத்திமம்** என்றும் பெயராம்.

குறிப்பு : சில நூல்களில் சாதி, சந்தம், விகற்பம், ஆபாசம் என்று நான்கு கோல்கள் உள்ளன. சாதி-ஒரு முழம், சந்தம்-முக்கால் முழம், விகற்பம்-அரை முழம். ஆபாசம்-கால்முழம் என்று கூறப்பட்டுள்ளது.

**(வேறு)**

துன்னிய அணுவும் புல்லும்
நுண்மணல் எள்ளும் நெல்லும்
பண்ணிய துவரை யெட்டால்
பரவிய விரல தாகும்
எண்ணிய ஆறி னாலே
இசைந்தகால் முழம தாகும்
நண்ணிய காலி னாலே
நாலினால் முழக்கோல் கொள்ளே. 160

*(இ. ள்)* புல்நுனி எட்டுக்கொண்டது நுண்மணல், நுண்மணல் எட்டுக்கொண்டது எள்ளு, எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு, நெல்லு எட்டுக்கொண்டது, துவரை, துவரை எட்டுக்கொண்டது விரல், விரல் ஆறு கொண்டது கால் முழம், கால் முழம் நான்கு கொண்டது ஒரு முழம் என்று கொள்ள வேண்டும். *(ம. சா. பா. : 93)*

**(வேறு)**

துண்ணிய துவரை எட்டு
கொண்டதோர் விரலொன் றாகும்
தண்ணிய விரல தாறும்
கொண்டது சாண தாகும்

பன்னியத் தமிழி லானே
பதைப்பற சாணி ரண்டு
அன்னிய மில்லா வண்ணம்
முழமென்று ஓர்ந்து கொள்ளே. 161

*(ம. நூ. பா. : 95)*

*(இ. ள்)* துவரை எட்டு கொண்டது ஒரு விரல், விரல் ஆறு கொண்டது ஒரு சாண், சாண் இரண்டு கொண்டது ஒரு முழம்.

குறிப்பு : துவரை என்பதற்குப் பதிலாக மூங்கில் அரிசி என்று சில நூல்களில் காணப்படுகிறது. இப்பாடலின் இரண்டாவது அடியில் விரலீ ராறும் என்று வந்திருக்க வேண்டும். அதைப் போல உரையில் விரல் பன்னிரண்டு கொண்டது ஒரு சாண் என்று வந்திருக்க வேண்டும்.

## முழக்கோல்

சாதியும் ஒன்ற தானால்
தருமுழம் உத்த மந்தான்
தீதறு பிரம ரோடு
சிறந்தக்ஷத் திரியர் சூத்திரர்
தூதரு விவேக வைசியர்
சுபமுடன் கொள்வ தற்கு
நிதியால் புனைந்த பாடல்
நெறிபட விளம்பல் உற்றாம். 162

*(742 : 12)*

*(இ. ள்)* அங்குலம் இருபத்து நான்கு கொண்டது ஒரு **முழம்** என்றும், **சந்தி** என்றும் **மானாங்குலம்** என்றும் சொல்லப்படும். ஆகையால் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் இவர்களுக்கு இன்ன முழம் என்று சொல்லுவோம்.

## இதுவுமது

துளங்குவிரல் கிடகுமுழம் சூத்திரருக் காகும்
விளம்பிரஜா பத்தியமும் வணிகர்தமக் காகும்
அளந்ததனு முட்டிவிரல் அரசர்களுக் காகும்
விளம்பிய தனுக்கிரகம் வேதியருக் காகும். 163

*(1005b)*

*(இ. ள்)* **கிடகு** என்னும் இருபத்து நான்கு விரல் கொண்டது வேளாளருக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும். **பிரஜாபத்தியம்** என்னும் இருபத்து ஐந்து விரல் கொண்டது வணிகருக்கு ஒரு முழம் என்று சொல்லுப்படும். **தனுமுட்டி** என்று சொல்லப்படும் இருபத்து ஆறுவிரல் கொண்டது அரசருக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும். **தனுக்கிரகம்** என்று சொல்லப்படும் இருபத்து ஏழு விரல் கொண்டது அந்தணர்களுக்கு ஒரு முழம் என்று சொல்லப்படும்.

குறிப்பு : இருபத்து நான்கு விரல் கொண்டது கிடகு என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. சில நூல்களில் மானாங்குலம் என இது சுட்டப்படுகின்றது.

**இதுவுமது**

துளங்குமா னாங்கு லந்தான்
சூத்திரர்க் குற்ற தாகும்
விளம்பர சாபத் தியந்தான்
வணிகளுக் குதவி யாகும்
அளந்தனு முட்டி யென்றால்
அரசருக் காகும் பாரில்
விளம்பனுக் கிரகந் தானே
வேதியர்க் கேற்ற தாமே. 164

*(சி. நூ. பா. : 85)*

*(இ. ள்)* மானாங்குலம் - **24** விரலளவு கொண்டது - சூத்திரருக்காகும். பிரசா பத்தியம் - **25** விரலளவு கொண்டது - வைசியருக்காகும். தனுமுட்டி - **26** விரலளவு கொண்டது - க்ஷத்திரயருக்காகும். தனுக்கிரகம் - **27** விரலளவு கொண்டது பிராமணர்களுக்காகும்.

குறிப்பு : மானாங்குலம் என்பது சில நூல்களில் 'கிடகு' என்று குறிக்கப்பட்டுள்ளது.

***தக்க இடங்களில் பயன்படுத்தவேண்டிய அளவுகோல்***

தாபரம் முதலா யுள்ள
சமயத்தோர் மனையும் மிக்க
மாபரம் மாடம் திவ்ய
மாளிகை அளக்கச் சொன்ன

தாபர சமய மெல்லாந்
தனுக்கிரக விரல்க ளாலே
கோபுரம் கூடம் சாலை
குருமானாங் குலத்தி னாலே. 165

*(742 : 14)*

*(இ. ள்) தாபரமாகிய சமயமாறுக்கும் மனை, மாட மாளிகைகளுக்குத் தனுக்கிரகம் கொண்ட கோலால் அளக்கவும். கோபுரம், கூடம், சாலை, இராஜர்களாயுதம், சத்திரம், சாமரை இவைகளெல்லாம் மானாங்குலத்தினால் அளக்கலாம்.*

குறிப்பு : *கணக்கதிகாரப் பாடலொன்று இந்த அளவுகள் குறித்து மாறுபட்ட கருத்தைக் கூறுகின்றது.*

*"இருபது நாலி னாலே முழுமனை கோல தாகும்*
*கருதிய இருபத் தஞ்சாம் கடவுளர் கோவி லுக்கு*
*பெருகிய இருபத் தாறாம் பெருந்திரு அமைச்சர் கோயில்*
*மேருவளர் மன்னர் கோவில் வளரிரு பத்தே ழென்ப"*

*(கணக்கதிகாரம் - பா. எண் - 52)*

## நான்கு வருணத்தாருக்கும் முழக்கோல் செய்ய மரங்கள்

சிறந்த சாதி நான்கினுக்குஞ்
சிறுகோல் வரிசை செப்பிடுங்கால்
இறைந்த மூங்கில் மறையவர்க்காம்
ஆச்சா சத்திரி யர்க்காகும்
நிறைந்த தேக்கு வணிகருக்காம்
நெடிய வேங்கை சூத்திரர்க்காம்
முறிந்தி டாமல் அவரவர்க்கு
முழக்கோ லதுகொண்டு அளப்பதுவே. 166

*(742 : 15)*

*(இ. ள்) மனைக்கட்டும்பொழுது, மூங்கிலால் செய்த முழக்கோல்களைப் பிராமணர்கள் வீடுகளுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆச்சா மரத்தால் செய்த முழக்கோல்களை அரசர்கள்*

அரண்மனைக்கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும். தேக்கு மரத்தால் செய்த முழக்கோல்களை வணிகர்கள் வீடுகள் கட்டும் பொழுது பயன்படுத்த வேண்டும். வேங்கை மரத்தால் செய்த முழக்கோல்க்ளைச் சூத்திரர்கள் வீடுகள் கட்டும்பொழுது பயன்படுத்த வேண்டும்.

### இதுவுமது

மூங்கிலில் செய்த கோல்கள்
முதுமறை வேதி யர்க்காம்
தீங்கிலா ஆச்சா வின்கோல்
திறைகொளும் அரசர்க் காகும்
வேங்கையில் செய்த கோல்கள்
வேளாளர்க் குரிய தாகும்
பாங்குறு தேக்கு வின்கோல்
பகர்ந்திடில் வணிகர்க் காமே. 167

*(ம. நூ. பா. : 101)*

### இதுவுமது

தாக்குடை மூங்கி லோடு
தக்கதோர் ஆச்சா வாகும்
தேக்குடன் வேங்கை யாலும்
செய்வது முழக்கோல் தன்னை
ஆக்கமுன் மறையோன் மூங்கில்
அரசர்க்கு ஆச்சா வாகும்
தேக்குடன் வணிக ருக்கே
செய்யுழ வோர்க்கு வேங்கை. 168

*(1005 a)*

### முழக்கோல் செய்ய உதவும் பொருட்கள்

தந்தியின் மருப்பு வேணு
தருங்கருங் காலி தேக்கு
சந்தனத் தாலம் தென்னை
மரமுந்தா மரையு மாகும்

விந்தைசேர் முழக்கோல் செய்வர்
மேவிய சிரசில் வில்வம்
அந்தமத் தியிலே ராஜ
லட்சுமி அடியிற் கூறே. 169
*(1005 a)*

*(இ. ள்)* முழக்கோல் செய்வதற்கு யானையின் தந்தம், மூங்கில், கருங்காலி, தேக்கு, சந்தனமரம், பனைமரம், தாமரை முதலானவற்றையும் பயன்படுத்தலாம். சிற்ப சாத்திர விதியின்படி சிரசில் வில்வம், மத்தியில் இராஜலெட்சுமி, பாதத்தில் பூமாதேவி.

**மட்டக்கோல் செய்ய ஏற்ற மரங்கள்**

பொருந்திய மட்டக் கோல்தான்
புளிவேங்கை தேக்கோ டாச்சா
வருந்திய புளிவேந் தர்க்காம்
மன்னவர்க் காச்சா வாகும்
விரும்பிய வணிகர் தேக்கு
வேளாளர் வேங்கை யூகும்
இரும்புதான் தேவர்க் காகும்
இயல்புடன் சமைத்துக் கொள்ளே.[1] 170
*(742 : 16)*

*(இ. ள்)* மட்டக்கோல் செய்வதற்குப் புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா ஆகிய நான்கு மரங்களையும் பயன்படுத்துவர். புளிய மரத்தால் செய்யப்பட்ட மட்டக்கோலை அந்தணர்கள் வீடு கட்டும்போது பயன்படுத்த வேண்டும். ஆச்சா மரத்தினால் செய்யப்பட்ட மட்டக்கோலை அரசர்கள் தங்கள் அரண்மனையைக் கட்டும்போது பயன்படுத்த வேண்டும் தேக்கு மரத்தினால் செய்யப்பட்ட மட்டக்கோலை வணிகர்கள் வீடு கட்டும் போது பயன்படுத்த வேண்டும். வேங்கை மரத்தினால் செய்யப்பட்ட மட்டகோலை வேளாளர்கள் வீடுகட்டும்போது பயன்படுத்தவேண்டும். கோயில்கள் கட்டும்பொழுது இரும்பினால் செய்யப்பட்ட மட்டக்கோலைப் பயன்படுத்த வேண்டும்.

1. யாவர்க்கும் ஆகு மன்றோ.

### இதுவுமது

பொருந்திய மட்டக் கோல்தான்
புளிவேங்கை தேக்கோ டாச்சா
திருந்திய மரையும் நல்ல
சேய்கருங் காலி தன்வீர்
அருந்திய புளிகள் நல்ல
மறுவில்லா மரங்க ளாகும்
இரும்புதான் மிகவும் நன்று
இன்பமாய்க் கொள்ளு வீரே. 171

*(886 a : 35)*

*(இ. ள்) புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா, கருங்காலி முதலியவை மட்டக்கோல் செய்ய ஏற்ற மரங்களாகும். இரும்பினால் மட்டக்கோல் செய்வது மிகவும் சிறந்தது.*

*குறிப்பு: இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சேய், மரை, புளிகள் முதலியவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை.*

### மூலை மட்டக்கோல் - அளவு

மட்டமது கோலினை வளம்பட உரைக்கில்
விட்டபடி பத்துவிரல் மேவுமொரு தலையாம்
எட்டுவிரல் ஒருதலை அதன்படி கொள்மூலை
பட்டுவளைச் சதுரமெனப் பார்த்துவிரல் வரையே. 172

*(886 a : 247)*

*(இ. ள்) மூலைமட்டக் கோலளவு சொல்லுமிடத்து ஒருதலை பத்து விரல் நீளம், ஒரு தலை எட்டுவிரல் நீளம், நடுமூலை பட்டுவளைந்து சதுரமாக்கி விரலளவு பார்த்து வரைந்து கொள்க.*

### கயிறு

தாலவுரி கேதகை சணத்தொடு மருட்பின்
நாலினவை மேலுரிநல் ஆத்தியுரி நூலால்
வாலிய கயிற்றினை வளம்பட முறுக்கி
ஏலவிர லின்நுனிய தாகமொழி மின்னே. 173

*(இ. ள்)* பனை, தாழை, ச்ணல், மருள், ஆல், அத்தி, இலதை இவைகளின் நாரினோடு பருத்தி நூல் கூட்டி, விரல் நுனி பிரமாணத்தில் கயிறு முறுக்கிக் கொள்ளவும். *(ம. நூ. பா. : 104)*

குறிப்பு : பிரமாணம் - அளவு.

**நான்கு வருணத்தாருக்கும் கயிறு**

பட்டுநூல் தருப்பை யோடு
பகருமால் விழுது பண்பார்
நட்டணைப் பனையி னாலும்
நவிலுநூல் தேவ ரோடு
திட்டமாம் மறையோர் தானும்
சிறந்தக்ஷத் திரிய ரும்தான்
மட்டவிழ் வைசிய ரோடு
வகையது பிரிவு சொல்லே. 174

*(742 : 71)*

*(இ. ள்)* பட்டுநூல், தருப்பை, ஆலம் விழுது, பனையின் நார், பருத்தி நூல் இவை தேவர், மறையோர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியோருக்கு உரியனவாகும்.

தேவர்க்குப் பட்டு நூலால்
சிறந்துமுப் புரிய தாகும்
மேவிய மறையோர் தருப்பை
விளங்குமுப் புரிய தாகும்
காவிஆல் விழுது மூன்று
புரியது வைசியர் நூலாம்
தாவுயர் சூத்திரர் பனைநார்
தானிரு புரிய தாமே. 175

*(742 : 72)*

*(இ. ள்)* தேவர்களுக்குப் பட்டு நூலால் முப்புரிக் கயிறு, பிராமணர்களுக்குத் தருப்பையினால் முப்புரிக் கயிறு, அரசர்களுக்கு ஆலம் விழுதால் முப்புரிக் கயிறு, வைசியர்களுக்குப் பருத்தி நூலால் இருபுரிகளையுடைய கயிறு, சூத்திரர்களுக்குப் பனைநாரினால் இரண்டு புரிகளையுடைய கயிறாகும்.

## கயிறு

### இதுவுமது

முப்புரிய தாய்ஒரு கயிற்றினை முறுக்கில்
விப்பிரர்கள் விண்ணவர்கள் மன்னவருக் காகும்
வைப்புரி இருபுரிகள் வணிகர்உழ வர்க்கே
ஒப்புருசி கொள்கவினி ஓதிஉரைக் கின்றேன். 176

(சி. நூ. பா. : 105)

*(இ. ள்) முப்புரிக்கயிறு தேவர்களுக்கும் மறையோருக்கும் அரசர்களுக்குமாகும். இருபுரிக் கயிறு வணிகருக்கும் வேளாளருக்குமாம்.*

### இதுவுமது

மறையவன் தருப்பை நூலால்
வான்புரி மூன்று கொள்க
இறையவன் கதம்பை தன்னால்
இருபுரி யதுவே கொள்க
பெறுமென வைசியர்க் காகிற்
பெண்ணைநார் புரியி ரண்டாம்
அறிவுள உழவர்க் காகில்
ஆத்திநூல் புரியி ரண்டே 177

(1005a)

*(இ. ள்) பிராமணர்கள் தருப்பை நூல் முப்புரி கொள்ளவேண்டும்; அரசர்கள் கதம்பை நூல் இருபுரி கொள்ள வேண்டும்; வணிகர்கள் பனைநார் இருபுரி கொள்ள வேண்டும்; சூத்திரர்கள் ஆத்திநார் இருபுரி கொள்ள வேண்டும்.*

## முளை கடாவும் அளவு

யகர்ந்ததோர் முளைக்கு நீளம்
பதினொரு விரல்தொ டங்கி
இகழ்ந்ததோர் விரலால் ஏற்றி
இருபத்து நான்குங் கொள்க

மகிழ்ந்தவை கடாவும் போது
வாஸ்துவின் வயிற்றில் கெல்லி
உயர்ந்ததென் மூலை தன்னை
உற்றுமுன் னிடமாய்த் தாக்கே. 178

*(1005 a)*

*(இ. ள்)* முளைக்கு நீளம் 11 விரல் தொடங்கி, ஒரு விரல் ஏழிட்டு இருபத்து நான்கு விரல் அளவுங் கொள்வது. முளை கடாவும் போது வாஸ்துவின் வயிற்றுப் பகுதியில் தோண்டிப் பின்பு தென்மேல் மூலையில் கடாவித் தென்கீழ், வடகீழ், வடமேல் மூலைகளில் கடாவி விடவும்.

### இதுவுமது

முளையது சொல்லிற் பத்தோர்
விரற்கடை நீளந் தானும்
விளைவுறு வித்து நான்கு
விரலள வாகக் கொண்டு
வளைவறக் கிடக்கு மந்த
வாஸ்துவின் வயிற்றிற் கெல்லி
முளையது தென்மேல் மூலை
முதலிட மாகத் தாக்கே. 179

*(சி. நூ. பா. : 95)*

### முளை அடித்தல்

முளைதனை இடக்கை வாங்கி
மூலமே குருவே என்று
தளம்பெற வாழ்வாய் என்று
தாக்கிளட் டடிஅ டித்து
கிளைவளர்க் கயிறு பூட்டிக்
கிதமுடன் மஞ்சள் பூசி
தலைகிடை முளை டிக்கில்
சாத்துவோம் மயனும் என்றார்.[1] 180

*(886 a : 77)*

---

1. கிளைவளர்க் கயிறு பூட்டிக்
கிளர்ந்தபால் மஞ்ச ளிட்டு
அளப்பலா முளைய டிப்ப
தாமென மயனும் சொன்னார்

*(இ. ள்)* முளையை இடது கையினால் வாங்கி, ஆதிமூலமே ! சற்குருவே ! என்று துதித்து வாழி வாழியென்று தொழுது எட்டடி அடித்துக் கயிற்றைப் பூட்டி மஞ்சள் பூசி முளையை இறுத்துவதென்று மயனுரைத்தார்.

### முளையடிக்கும்போது விளைவுகள் - பலன்

அடித்ததோர் முளையின் உச்சி
அலறிடில் இல்லம் பாழாம்
பிடித்ததோர் முளையின் கண்டம்
பிளக்கிலோ பிணிவந் தெய்தும்
அடித்ததோர் மாதே ! சிந்திப்
பறக்கிலே பதிசா வாகும்
செடித்தவர் முளைதெ றிக்கில்
செல்வமும் சிதறு மென்னே. 181

*(886 a : 78)*

*(இ. ள்)* இப்படி அடித்த முளையினுச்சி அலறிடில், அந்த வீடு பாழாகும், அடித்த அடியால் முளையின் தலை பிளக்கில், வியாதி வரும், தெறித்துப் போனால், வீட்டுக்குரியவன் சாவான், அடித்த அடியில் அம்முளை தூள் பறக்கில், அவன் செல்வங்கள் சிதறுண்டு போகும்.

### 7. வாசல் உதயம்

பத்திகள் பத்தி சேரில்
பதியுடன் இருந்து வாழ்வார்
பத்திகள் களையு மாகிற்
பதியது கலையு மென்ன
உத்திரத் தூண்கள் தானும்
ஒழுங்கிலே நில்லா தாகில்
சத்துரு வாலே யந்தச்
சாலைதீப் படுவ தாமே. 182

*(சி. நூ. பா. : 459)*

*(இ. ள்)* பத்திசேரில் பத்தியுடன் இனிதாக வாழ்வார். பத்திகள் கலையுமாகில் பதி குலைந்து போடும். உத்திரம் தூண் ஒழுங்கில் நில்லாவிட்டால் சத்துருக்களால் மனை தீப்படும்.

### இதுவுமது

வளவது வாசல் தன்னை
மன்னிய மயனார் சொன்ன
அளவினில் மனையைக் கோலி
அன்புடன் இருப்பா ராகில்
உளமது மகிழ மிக்க
உறவுடன் இனிது வாழ்வார்
இளமைதிங் களினாள் தன்னில்
இலட்சுமி கரமுண் டாமே 183

*(சி. நூ. பா. : 460)*

*(இ. ள்) மனைகோல வேண்டில், மயனென்னும் தேவ சிற்பாச்சாரியார் சொல்லிய நியமப் பிரகாரம் அளவெடுத்து வாசல் முதலியன அளவோடு விட்டுப் பரப்புப்பரப்பி சுபநாளில் குடிபுகுந்தால் இலட்சுமி கடாட்சம் பெற்று சுகித்து வாழ்வார்கள்.*

### தலைவாசல் அளவு

பன்னும் தலைவாசல் படிக்கு உயரங்கேள்
துன்னிய அங்குலம் துலங்குமுப் பதுமே
தானொத்த வீதி தலைவா சலுக்கு
மோனாத் தங்குலம் இருபத்து நாலுமே. 184

*(886 b : 53)*

*(இ. ள்) வீட்டின் தலைவாசல் படிக்கு முப்பது அங்குலம் உயரம் வைத்துக் கட்ட வேண்டும். வீதி தலைவாசல் படிக்கு இருபத்து நான்கு அங்குலம் உயரம் வைத்துப் படியைக் கட்ட வேண்டும்.*

### வாசல் வைக்க நாள்

புதன்மதி வாசல் வைக்க
பொருத்தமாம் பொருளும் சேரும்
இதம்பெறு தானி யங்கள்
இருப்பிடத் திருக்க நேரும்

மதம்பெரு வணிக ரெல்லாம்
வணங்கிசெம் பொன்னை ஈவார்
நிதம்வரும் இலாபச் செட்டால்
நேர்மையாம் வாழ்வுண் டாமே. 185
*(சி. நூ. பா. : 670)*

*(இ. ள்)* திங்கட்கிழமையிலும் புதன்கிழமையிலும் வாசல் வைக்க, பொருள் சேரும், தானியம் பெருகும். செல்வம் சேரும். அனைத்திலும் இலாபம் கிட்டும். மனைக்கு உரியவனுக்குச் சிறப்பான வாழ்க்கை கிட்டும்.

**வேறு**

ஆசாரங் கட்டி அதன்குறுக்கே வீடமைப்பார்
வாசாம கோசரமாய் வாழ்ந்திருப்பார் - ஆசாரி
பேசார் புதன்மதியில் பேணிவா சல்வைப்பார்
கூசாமல் கற்றோர் குணம். 186
*(சி. நூ. பா. : 661)*

***வாசல்***

ஊனமில் மனையில் வந்து
முழம்தனை அளந்து கொண்டு
மானிடர் தமக்கு வாசல்
மையத்தில் இடத்தே யாகும்
தேனமர் குழலி னாளே !
தேவர்கள் தமக்கு மையம்
ஆனது வாச லென்றே
அறிந்தவர் உரைத்த வாறே. 187
*(886 a : 257)*

*(இ. ள்)* நெடுந்தெருவில் தனக்கேற்பட்ட மனையை அகலம் அல்லது நீளமென்பதை சாதியடி அல்லது தச்சு முழம் இவற்றில் ஒன்றால் அளந்து கொண்டு, மொத்தம் இத்தனை யடியென்று தெரிந்து அதை ஒன்பது கூறு செய்து, வந்த

ஈவைக் கணக்கிட்டுப் பங்கு ஒன்றுக்கு இத்தனை சாதியடி என்றும், அதில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது எனப் பாகம் செய்து சந்திரன், புதன் பாகத்தில் வாசல் வைக்க உத்தமம். அதிலும் அம்மனைக்கு இடது புறம் மூன்று பாகமும் வலது புறம் ஐந்து பாகமும் நீக்கி நின்ற பாகத்தில் வாசல்விட மகா உத்தமம். தேவாலயங்களுக்கு மையத்தில் வாசல்விட உத்தமம்.

**இதுவுமது**

நிலமனை தனக்கு வாசல்
நவமது பாகம் செய்து
எல்லையில் கிழக்குத் தெற்கு
இளையவன் முதலாய் எண்ணி
.... .... .... ....
.... .... .... ....
வல்லவன் மயனார் சொன்ன
மதிபுதன் நயமே என்றார். 188

*(நட்சத்திரநிகண்டு சு. எண். 888)*

**இதுவுமது**

மன்றலார் மனையின் நீளம்
வகுத்ததோர் வாசல் தன்னை
ஒன்பது கூறு செய்து
ஒரு மூன்று இடத்தே போக்கி
நின்றதோர் வலத்தி லைந்து
நீக்கியே நின்ற கூறில்
அன்பொடு வாச லாக
அறிந்தவ ருரைத்த வாறே. 189

*(சி. நூ. பா. : 186)*

**இதுவுமது**

விடுப்பதை ஒன்பதாய் வீட்டை அளந்துகொண்
டிடப்புறம் மூன்றும் இயல்வல மைந்தும்
நடுப்புறத் தொன்றில் நலம்பெற வாசலாய்
எடுப்பது சொன்னோம் இனிக்கத விடுவதே. 190

*(சி. நூ. பா. : 190)*

### இதுவுமது

ஓதிய வீடறை ஒன்பது செய்து
நீதியோ டஞ்சறை நீள்வலம் விட்டு
கோதறு மூவறை கூறிடம் விட்டால்
மேதகு வாயில் விளம்பிடை செய்யே. 191

*(சி. நூ. பா. : 191)*

### வாசல் - அளவு

வந்ததோர் மனையின் நீளம்
வகுத்ததோர் அளவு தன்னை
ஒன்பது கூறு செய்து
ஒருமூன்று புறத்தே போக்கி
நின்றதோர் வலத்தில் ஐந்து
நீக்கியே நின்ற கூறில்
அன்பொடு வாச லாக
அறிந்தவர் உரைத்த வாறே. 192

*(886 a : 256)*

(இ. ள்) மனையினுடைய வாசல் வைக்கும் திசையின் மனை நீளத்தை ஒன்பது கூறுகளாக வகுத்துக் கொள்ள வேண்டும். இடது பாகத்தில் மூன்று கூறு நீளத்தையும் வலப்பக்கத்தில் ஐந்து கூறு நீளத்தையும் விட்டுவிட்டு இடையேயுள்ள ஒரு கூறு நீளத்தில் வாசல் வைக்க நன்று என்று மனைநூல் அறிந்தவர்கள் கூறியுள்ளார்கள்.

குறிப்பு: இப்பாடலின் மூலம் வீட்டின் வாசல், மனையின் நீளத்தில் ஒன்பதில் ஒரு பங்கு அளவு உடையதாக விளங்கும் என்பதை அறியலாம்.

### இதுவுமது

ஒன்றாகி நின்ற உயர்நிலம் அத்தனையும்
குன்றாமல் ஒன்பதுகூ றாக்கியே - நின்றநிலை
வாமத்தே மூன்றும் வலப்புறத்தே ஓரைந்தும்
சேமத்தே வாசலிடச் செப்பு. 193

*(886 a : 89)*

## நவக்கிரகப் பலன்

### சூரியனில் வாசல்

பானுவுறுங் கூறதனிற் பாங்கிலா வாசலிடத்
தானும் பொருளும் தடம்புரளும்-ஆனுமிலாச்
சந்ததியும் அற்பமாம் தன்மனையா ளும்பிரிவன்
வெந்துமனை பாழாய் விடும். 194

*(சி. நூ. பா. : 193)*

*(இ. ள்)* மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் சூரியன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குத் துன்பம் உண்டாகும். பொருள் கையை விட்டுப் போகும். புத்திரர்கள் குறைவாகும். மனைவியும் பிரிந்து சென்று விடுவாள். மனையும் தீயினால் அழிந்துப் பாழாகும்.

### இதுவுமது

பருதியில் வாச லாகில்
பாங்குடன் வியாதி யாகும்
குருவது கடாக்ஷ மில்லை
கூடின பொருளும் போகும்
மங்கையர் மயனார் சொன்னே
வளமைநூல் விளம்ப லுற்றார். 195

*(888)*

*(இ. ள்)* சூரியன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்கு நோய் வந்து சேரும். குருவின் அருள் கிட்டாது. சேர்த்து வைத்தப் பொருள்கள் கையை விட்டுப் போகும் என்று மயனார் கூறியுள்ளார்.

### சந்திரனில் வாசல்

சந்திரனில் வாசலிடச் சம்பத்து மென்மேலும்
இந்திரபோ கங்களுமே யெந்நாளும்-சந்ததியும்
பூதேவி லக்குமியும் புக்கின் குடியிருப்பாள்
மாதேவி யாய்வந்த மர்ந்து. 196

*(சி. நூ. பா. : 194)*

*(இ. ள்)* மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி அதில் சந்திரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்கு உரியவனுக்குச் செல்வமும் அனைத்துச் சுகங்களும் உண்டாகும். பூமி இலாபம், புத்திரர் இலாபம் உண்டாகும். அவனுடைய வீட்டில் திருமகள் வந்து குடியிருப்பாள்.

## இதுவுமது

சந்திரன் வாச லாகில்
சதிருடன் பொருளும் உண்டு
இந்திர சம்பத் துண்டு
இளையவள் வாச மாவாள்
நல்லதோர் மயனார் சொன்னார்
நலமைநூல் விளம்ப லுற்றார். 197
*(888)*

*(இ. ள்)* சந்திரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குச் செல்வமும் பொருளும் வந்து சேரும். திருமகள் அவனுடைய வீட்டில் குடியிருப்பாள் என்று மயனார் நூலில் கூறியுள்ளார்.

## செவ்வாயில் வாசல்

கொடியசேய் வாசலிடக் கொம்பனையே கேளாய்!
மிடியும் விசனம் மிகவே - குடியிருப்பாய்
காட்டேரி வீரன் கறுப்பன் அணுகுவனே
தேட்டமிலா தம்மனையின் சீர். 198
*(சி. நூ. பா. : 195)*

*(இ. ள்)* மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் செவ்வாய் அமைந்துள்ள கூறில் வாசலிடை, மனைக்குரியவனுக்கு வறுமையும் கவலையும் மிகுதியாக வந்து சேரும். அம்மனையில் காட்டேரி, வீரன், கறுப்பன் முதலானவர்கள் அம்மனையில் குடியிருப்பார்கள்.

### இதுவுமது

அங்காரகன் வாச லாகில்
ஆனதோர் பொருளும் போகும்
பங்கமே படுத்தி வைப்பார்
பாரெல்லாம் தீதே யாகும்
அங்கொரு துயரம் மெத்த
அனுபோகம் மெத்த உண்டு
தந்ததோர் மயனார் சொன்ன
தரணிநூல் விளம்ப லுற்றார். 199

*(888)*

*(இ. ள்) செவ்வாய் அமைந்துள்ள கூறில் வாசலிட மனைக்குரியவனின் பொருள் கையை விட்டுப் போகும். அனைவரும் துன்புறுத்துவர். மிகுந்த மனத்துயரோடு வாழ்வான் என்று இவ்வுலகத்தோருக்குத் தன்னுடைய நூலில் மயனார் எடுத்து வைத்துள்ளார்.*

### புதனில் வாசல்

மேலும் புதன்வாசல் விட்டிடவே மென்மேலும்
பாலும் பசுவுமிகப் பாக்கியமும் - தாலமதிற்
சந்தான சம்பத்துந் தானியமும் செந்திருவும்
வந்தான் மனைக்கெனவே வாழ்த்து. 200

*(சி. நூ. பா. : 196)*

*(இ. ள்) மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் புதன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவன் அனைத்து விதமான பாக்கியங்களையும் பெறுவான். பால் பெருகும். கால்நடைகள் மிகுதியாகும். புத்திரர்கள் தோன்றுவர். பொருள்களும் தானியங்களும் வந்து சேரும். திருமகளும் எந்நாளும் அம்மனையில் தங்குவாள்.*

### இதுவுமது

மதிமகன் வாச லாகில்
வரம்பொருள் வந்து சேரும்
பதிதனில் இருப்பார் நல்ல
பாக்கியம் மிகவுண் டாகும்

ததியினில் ஆணும் பெண்ணும்
சங்கரன் அருளிச் செய்வார்
வல்லவன் மயனார் சொன்ன
வண்மைநூல் விளம்ப லுற்றார். 201

*(888)*

*(இ. ள்) புதன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்கு வேண்டிய பொருள்வந்து சேரும். மிகுந்த பாக்கியங்கள் உண்டாகும். புத்திர விருத்தி உண்டாகும் என்று மயனார் கூறியுள்ளார்.*

## வியாழனில் வாசல்

அரிய குருவாசல் ஆலயத்துக் காகும்
பெரிய குடிக்கா காதுபேசில்-பிரிவிலா
நோய்மீறும் துன்பமுமே நோக்கு மிடமனையாள்
வாய்மீறும் சண்டை வரும். 202

*(சி. நூ. பா. : 197)*

*(இ. ள்) மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் குரு அமைந்துள்ள கூறில் வாசலிடுதல் ஆலயங்களுக்கு ஏற்றதாகும். ஆனால் வீடுகளுக்கு ஆகாது. அவ்வாறு வாசலிட மனைக்குரியவனுக்கு நோய் மிகுதியாகும். மிகுந்த துயரங்கள் உண்டாகும். மனைவியுடன் வாய்பேச்சினால் சண்டைகள் உண்டாகும்.*

## இதுவுமது

குருவது வாச லாகில்
கூடிய பொருளும் போகும்
வருவது மனையாள் சாவாள்
மகிழ்ச்சியாய் இருப்ப தில்லை
மங்கையாய் மயனார் சொன்னார்
வளமைநூல் விளம்ப லுற்றார். 203

*(888)*

*(இ. ள்) குரு அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனின் பொருள் கையை விட்டுப் போகும். மனையாள் மரணம் அடைவாள். மகிழ்ச்சி அரிதாகும் என்று மயனார் கூறியுள்ளார்.*

### சுக்கிரனில் வாசல்

வெள்ளிதனில் வாசலிட வேண்டாங்காண் விட்டாக்கால்
நள்ளிருளிற் சோரரால் நாசமாம்-பள்ளியறை
தன்னிற் படுக்கபயந் தானாகும் அம்மனையிற்
கன்னிசுகம் இல்லையது காண். 204

*(சி. நூ. பா. : 198)*

*(இ. ள்) மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் சுக்கிரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்குத் திருடரால் பயம் உண்டாகும். மேலும் அவனுக்கு மனைவியால் சுகம் கிட்டாது.*

### இதுவுமது

வெள்ளியும் வாச லாகில்
விளங்கிய உயிரும் போகும்
தள்ளிய கதவ டைக்கில்
தரித்திரம் மிகவுண் டாகும்
கள்ளியின் பேரெ டுப்பாள்
களவுபொய் நாட்ட மாகும்
நல்லதோர் மயனார் சொன்னார்
நலமைநூல் விளம்ப லுற்றார். 205

*(888)*

*(இ. ள்) சுக்கிரன் அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்கு மரணம் உண்டாகும். வறுமை மிகும். இவனுடைய மனைவி பொய் கூறுபவளாகவும் திருடுபவளாகவும் இருப்பாள் என்று மயனார் கூறியுள்ளார்.*

### சனியின் வாசல்

காணாச் சனிவாசல் கண்டவுடன் சண்டைவரும்
வீணான துன்பம் விளையுமே-ஆணான
பேருக் கலைச்சலாம் பெண்டுகெடும் அம்மனையே
ஊருக்கும் ஆகா தொழி. 206

*(சி. நூ. பா. : 199)*

(இ. ள்) மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் சனி அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்குரியவனுக்கு வீணான சண்டைகளும், துன்பங்களும் விளையும். அலைச்சல் மிகுதியாகும். மனைவிக்கு மரணம் நேரும். ஊராரின் பகைக்கு ஆளாக வேண்டியதாகும்.

### இதுவுமது

காரியும் வாச லாகில்
கனம்பெற மைந்த ரில்லை
பாரியாய் அந்த வாசல்
படுகளம் மெத்த உண்டு
சாரியாய் இளைய வள்போய்
தனித்துமே மூத்தவள் வருவாள்
வாரியாய் மயனார் சொன்ன
வளமைநூல் விளம்ப லுற்றார். 207

*(888)*

(இ. ள்) சனி அமைந்துள்ள கூறில் வாசலிட, மனைக்கு உரியவனுக்குப் புத்திரப்பேறு கிட்டாது. அம்மனையில் பலரும் மரணம் அடைவர். செல்வம் அம்மனையை விட்டு நீங்கி தரித்திரம் உண்டாகும் என்று மயனார் கூறியுள்ளார்.

### இராகு, கேது வாசல்

பாம்பிரண்டில் வாசலிடப் பல்கால மும்விஷங்கள்
வீம்புடனே தீண்டி வினைசெய்யும்-சோம்பலுடன்
நித்திரையு மேமிகுத்து நிஷ்டூர மேயாகும்
எத்திசையும் என்றே இயம்பு. 208

*(சி. நூ. பா. : 200)*

(இ. ள்) மனையின் நீளத்தை ஒன்பது கூறுகளாக்கி, அதில் இராகு அல்லது கேது அமைந்துள்ள கூறுகளில் ஒன்றில் வாசலிட, மனைக்குரியவனைப் பாம்பு முதலான விஷ உயிரிகள் தீண்டித் துயரம் செய்யும். சோம்பல் உண்டாகும்.

### இதுவுமது

இராகுதான் வாச லானால்
அம்மனை பாழ தாகும்
கேதுவே வாச லானால்
கெடுமதி வந்து சேரும்
மங்கையே ! மயனார் சொன்னார்
வளமைநூல் விளம்ப லுற்றார். 209

(888)

(இ. ள்) இராகு அமைந்துள்ள கூறில் வாசலிட, அம்மனை பாழாகும். கேது அமைந்துள்ள கூறில் வாசலிட, அம்மனைக்கு உரியவனுக்குத் தீய சிந்தனைகள் மனதில் தோன்றும் என்று மயனார் கூறியுள்ளார்.

குறிப்பு : இப்பாடலில் எதுகை மோனை முதலானவை சரியாக அமையவில்லை. மேலும், ஒரு பாடலடி விடுபட்டுள்ளது.

### மனைவாசல்-இராசி

நன்மனை எடுப்போர்க் கெல்லாம்
நாளுடன் இராசி தன்னை
முன்வலம் கொள்வா ராயின்
முயன்றிடும் கர்மம் நன்றாம்
இன்னெடுங் காலம் வாழ்வர்
இயல்தனம் மக்கள் பேறாம்[1]
பின்னிடம் கொள்வா ராகிற்
பிணியொடு கேட தாமே. 210

(742 : 84)

(இ. ள்) மனையெடுப்போர் இராசிதனை முன் வலமாகக் கொள்ளுவாராகில், ம்கா உத்தமம். பின் இடங்கொள்வாராகில் பீடையுண்டாம்.

குறிப்பு : மனையுடயவன் பெயர் ராசி அல்லது அவன் பிறந்த இராசி பார்த்து, அந்த இராசி மனைக்கு முன்னாக, வலமாக வாசல் விட நன்மையாகும். பின்னாக, இடமாக வாசல் விட தீமையாகும். இப்படிப் பார்த்து வளைவுக்கு வாசல் விடுவது என்றவாறு.

---

1. பன்னெடுங் காலம் வாழ்வார்
பயின்றநன் மக்கள் பேறும்

**வாசலும் இராசியும்**

நாயகன் இராசி தன்னை
நலமுற எண்ணிப் பார்த்து
வாசலே வலமும் முன்னும்
வளவர்க்க கொள்ளும் நன்மை
ஆயகன் இராசி தன்னை
இடத்திலும் பின்னும் கொள்ள
நாயகன் தன்னை வைத்து
மனையவள் தனக்கு நாசம். 211

*(886 b : 86)*

*(இ. ள்) மனைக்குரியவனின் இராசிக்கு வலது பக்கத்தில் அல்லது முன்னால் வாசல் வைப்பின் நன்மையாகும். அவனுடைய இராசிக்கு இடது பக்கத்தில் அல்லது பின்னால் வாசல் வைப்பின், மனைக்கு உரியவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் அழிவு நேரும்.*

**வாசல் விடுகிற இராசிப்பொருத்தம்**

ஏறுடன் தண்டு நண்டு
இயல்கிழக் குடன்வ டக்காம்
கூறியஅரி அரிவை கோலும்
குணம்பெறு கிழக்கும் தெற்கும்
வீறுசேர் தேளும் வில்லும்
மகரமும் மேற்குத் தெற்கு
தேறிய குடமீன் மேடம்
சிறப்புற வடக்கு மேற்கே. 212

*(742 : 79)*

*(இ. ள்) இடபம், மிதுனம், கடகம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, வடக்குத் திசைகளில் வாசல் விடவேண்டும். சிம்மம், கன்னி, துலாம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, தெற்குத் திசைகளில் வாசல் விடவேண்டும். விருச்சிகம், தனுசு, மகரம் இந்த மூன்று*

இராசிகளுக்கும் மேற்கு, தெற்குத் திசைகளில் வாசல் விடவேண்டும். கும்பம், மீனம், மேடம் இந்த மூன்று இராசிகளுக்கும் வடக்கு, மேற்குத் திசைகளில் வாசல் விட வேண்டும்.

### இதுவுமது

கிளர்த்திய விடையாழ் நண்டு
கிழக்குடன் வடக்க தாகும்
அளர்த்தரி அரிவை கோலும்
அழகிய கிழக்குத் தெற்காம்
வலந்திடும் தேளும் வில்லும்
மகரமும் மேற்கு தெற்கு
மனத்தின குடமீன் மேடம்
வாசலாம் வடக்கு தெற்கே. 213

*(சி. நூ. பா. : 598)*

### இதுவுமது

உழக்கிய குண்டையாழ் நண்டு
இற்குணம் வடக்கும் கிழக்கும்
அழலரி அரிவை கோலு
அழகிய கிழக்கும் தெற்கும்
விழுந்திடும் தேளும் வில்லும்
மகரமும் தெற்கும் மேற்கும்
வழுத்திநல் குடமீன் மேடம்
வாசலாம் வடக்கு மேற்கே. 214

*(886 a : 82)*

### இதுவுமது

மிட்டு மேஷ மீனகும்பம்
வடக்கு மேற்கு வாசலாகும்
விட்டம் மகரம் தனுசுதேள்
மேற்குத் தெற்கு வாசலதாம்

தெட்டுந் துலாமும் கன்னிசிங்கம்
தெற்குக் கிழக்கு வாசலதாம்
கிட்டும் கடகம் மிதுனரிஷபம்
கிழக்கு வடக்கு வாசலதே. 215

*(886உ : 81)*

(இ- ள்) மேஷம், மீனம், கும்பம் இந்த மூன்று இராசிகளுக்கும் வடக்கு, மேற்குத் திசைகளில் வாசல் விடவேண்டும். மகரம் தனுசு விருச்சிகம் இந்த மூன்று இராசிகளுக்கும் மேற்கு, தெற்குத் திசைகளில் வாசல் விடவேண்டும். துலாம், கன்னி, சிங்கம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, தெற்குத் திசைகளில் வாசல்விட வேண்டும். கடகம், மிதுனம், இடபம் இந்த மூன்று இராசிகளுக்கும் கிழக்கு, வடக்குத் திசைகளில் வாசல் விடவேண்டும்.

**மாதங்களும் வாசல் அமைய வேண்டிய திசைகளும்**

அடுத்தமாம் கும்பம் சிங்கம்
அவ்வணில் அருக்கன் மேவில்
குடக்கொடு கிழக்கு வாயில்
கூறிய மனைக ளாகும்
கடுத்ததோர் எருது மேஷம்
துலாத்தினில் கதிரோன் நின்றால்
வடக்கொடு தெற்கு வாயில்
வருமனை செய்ய நன்றே. 216

*(886உ : 196)*

(இ- ள்) தை, ஆவணி, ஆடி மாதங்களில் வீடு கட்டும் பொழுது மேற்குச் சார்பும் கிழக்குத் திசையில் வாசலும் அமைக்க வேண்டும். சித்திரை, வைகாசி, ஐப்பசி மாதங்களில் வீடுகட்டும்பொழுது வடக்குச் சார்பும் தெற்குத் திசையில் வாசலும் அமைக்க வேண்டும்.

## இதுவுமது

ஆடி ஆவணி மேல்சார் கிழக்குமே வாசலாகும்
கேடில் லாத தைமாசி கீழ்ச்சார் மேல்வாசல்
நாடி சித்திரை வைகாசி தென்சார் வடவாசல்
தேடின் அற்பசி கார்த்திகை வடசார் தென்வாசலே. 217

*(886 a : 83)*

*(இ. ள்)* ஆடி, ஆவணி மாதங்களில் மேல்சார் மனையில் கிழக்கில் வாசல் அமைக்க வேண்டும், தை, மாசி மாதங்களில் கீழ்ச்சார் மனையில் மேற்கே வாசல் அமைக்க வேண்டும், சித்திரை, வைகாசி மாதங்களில் தென்சார் மனையில் வடக்கில் வாசல் அமைக்க வேண்டும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வடசார் மனையில் தெற்கில் வாசல் வைக்க வேண்டும்.

## வாசல் உதயம்

சிங்கம் ஜனிக்கில் தென்வாசல்
சேவுங் களிறுந் தான்ஜனிக்கில்
சொங்கார் மேற்கும் வடக்குமதாம்
கொடியே ஜனிக்கில் நாற்றிசையாம்
சிங்கம் பெருமாள் கோயிலுக்காம்
சேவே மகர்தே வருக்காமே
சொங்கா ரானை கணபதிக்காம்
கொடிதான் யாவர் தமக்காமே. 218

*(சி. நூ. பா. : 458)*

*(இ. ள்)* சிங்கம் ஜனிக்கில் தென்வாசல், ரிஷபம் ஜனிக்கில் மேற்கு வாசல், யானை ஜனிக்கில் வடக்கு வாசல், கொடி ஜனிக்கில் கிழக்கு முதல் நான்கு திசையுமாம். அவற்றுள் சிங்கம் ஜனிக்கில் பெருமாள் கோயிலுக்காகும், ரிஷபம் ஜனிக்கில் தேவருக்காகும், யானை ஜனிக்கில் விநாயகருக்காகும். கொடி ஜனிக்கில் யாவருக்குமாகும்.

### தலைவாசல்

தெற்குடன் வடக்க தான
    தெருதலை வடக்க தாகும்
மிக்கதோர் கிழக்கு மேற்கு
    மேலது தலைய தாகும்
மைக்குழை வனிதே மாதே !
    மனைதெரு வாசல் வேண்டில்
தக்கதோர் தலைமார் முதுகு
    தனில்விட நாசம் தானே. 219

*(886 b : 45)*

*(இ. ள்)* தெற்கு வடக்கான மனையில் தலைவாசல் வடக்கிலிட வேண்டும். கிழக்கு மேற்கான மனையில் தலைவாசல் மேற்கிலிட வேண்டும். வாஸ்து புருஷன் கிடக்கையில் தலை, மார்பு, முதுகு முதலான இடங்களில் வாசலிட நாசம் விளையும்.

### மனைச்சார்பும் வாசலும்

திடமாகிய தென்சார்மனை செய்யவும் மறையோர்
குடசார்பெனும் கீழ்வாசலும் குலமன்னருக் காகும்
வடசார்மனை தென்வாசலும் வணிகர்க்கது ஓது
நடமானதோர் கீழ்சாரலும் நாட்டசூத் திரர்க்கே. 220

*(742 : 81)*

*(இ. ள்)* தென்சார் மனையும் வடக்கு வாசலும் அந்தணர்களுக்காகும். மேல்சார் மனையும் கிழக்கு வாசலும் மன்னர்க்கு உரியதாகும். வடசார் மனையும் தெற்கு வாசலும் வணிகர்களுக்காகும். கீழ்ச்சார் மனையும் மேற்கு வாசலும் சூத்திரர்க்காகும்.

### இதுவுமது

திடமா கியதென் மனைமா மறையோர்
குடசார் பெனுமேன் மனைகோ லரசர்
வடசார் பெனுமா மனைவை சியராம்
துடரா கியகீழ் மனைசூத் திரர்க்கே. 221

*(சி. நூ. பா. : 121)*

## 8. கதவும் நிலையும்

### தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் கதவு

சிறப்புடை தேவர்க் கன்றே
அடைத்தலும் திறத்தல் தானும்[1]
சிறப்புடை வடம்இ ரண்டாய்
அடைந்தலும் திறத்தல் தானும்
சிறப்புடை வடம தொன்றாய்த்
தேவர்கட் கன்றி யாகா
சிறப்புடை கதவும் கோலுஞ்
சிக்கெனச் செய்வ தாமே. 222

(1005b)

(இ. ள்) சிறப்புடைய தேவர்களுக்கு இரண்டு கதவுகளை அமைத்தல் வேண்டும். ஒன்று அடைப்பதற்காகும். ஒன்று திறப்பதற்காகும். அகன்ற கதவாக இருப்பது தேவர்களுக்கன்றி மனிதர்களுக்கு ஆகாது. சிறப்புடைய கதவையும் கோலையும் சிக்கெனக் கொள்க.

### இதுவுமது

இருக்கவே ஆகு மாகில்
ஒருவடம் முன்நோய் செய்யும்
இருவடம் மறையோர் தேவர்
மற்றெல்லா விடத்து மாகும்
கருதுகோல் எவர்க்கும் ஒக்க
இரட்டித்தால் தேவ ருக்காம்
மருவுதான் நடுவு கண்டால்
மார்க்கமாம் அளவு தானே. 223

(1005b)

(இ. ள்) வீடுகளில் அகன்ற ஒரே கதவு இருப்பின், மனைக்குரியவனுக்கு நோயைச் செய்யும். இரு கதவுகள் தேவர்கள், மறையவர்கள் மற்றும் பொது இடங்களுக்குமாகும். கோல் எல்லோருக்கும் ஒத்ததாகவே அமையும். தேவர்க்கு இரட்டித்த கோல் ஏற்புடையது.

---

1. அடைத்தல் திறத்தலா மிரண்டு மாகும்.

**நால் வருணத்தாருக்கும் கதவுகளின், மரங்கள் பாகுபாடு**

நாவலும் தேவர்க் காகும்
நான்மறை யோர்க்கு வேம்பாம்
மேவுமன் னவர்க்குத் தேக்காம்
மிக்கவை சியர்க்கி லுப்பை
தாவுவே ளாளர் தெங்கு
தனிஎட்டி எவர்க்கும் ஆகா
காவிய மாகச் சொன்னோம்
கதவுகள் இயல்பு தானே. 224

*(சி. நூ. பா. : 201)*

*(இ. ள்)* நாவல் மரம் தேவர்களுக்காகும். வேப்பமரம் மறையோர்க்காகும். தேக்கு மரம் அரசர்க்காகும். இலுப்பை மரம் வைசியர்க்காகும். தென்னை மரம் வேளாளர்க்காகும். எட்டிமரம் எவர்க்கும் ஆகாது.

**கதவுக்கு நெம்பு முளை ஏடுகளுக்கு இரட்டைத் துவாரமிடும் விதி**

நாலுக்கும் மூன்றுக்கும் நடுவுக்கும் நடுவே
காலுக்கும் கதவுக்குங் கம்பைக்கும் இதுவே
மேலுக்கும் கீழுக்கும் நடுவுக்கும் உடலாம்
ஓலைக்கும் நூலுக்கும் உறைமுற்றும் வையே. 225

*(1005 b)*

*(இ. ள்)* நடு நீளம் நாலு பங்கு கடை இரண்டு பங்கு மூன்று பங்கு தள்ளி நின்ற நடுவிலே கதவுக்குக் கம்பைப் பதிப்பது. நெம்புத் துளையும் அந்தப்படி துளை போட்டு நெம்பி இறுக்கவும். நடு மூன்று நீளம் கடை நான்கு நீளம் சேர்ப்பது.

**கதவின் ஓசை - நன்மை**

சங்கது போலே சாத்தித்
தாளம்போல் மூடு மாகில்
பொங்கம துடனே தானும்
புத்திரன் மிகவுண் டாகும்

துங்கமால் மாது சேர்வாள்
சோபனம் மிகவுண் டாகும்
தங்கமே ! பொழியு மென்று
சாற்றினார் வேதத் தோரே ! 226

*(ம. நூ. பா. : 151)*

*(இ. ள்) கதவைச் சாத்தும்பொழுது, சங்கின் முழக்கத்தைப் போன்று ஒலி எழும்பினாலும், தாள ஓசையைப் போன்று ஒலி எழும்பினாலும் மனைக்கு உரியவனுக்கு மிகுதியான புத்திரர்கள் தோன்றுவார்கள். செல்வம் அந்த வீட்டில் மிகுதியாக வந்து சேரும். சுகம் உண்டாகும். பொன் மிகும் என்று நான்கு வேதத்தைக் கற்று உணர்ந்தவர்கள் கூறியுள்ளார்கள்.*

**கதவின் ஓசை - நன்மையும் தீமையும்**

ஆடிய கதவி னோசை
ஆண்குரல் செக்குப் போல
கூடியே கத்து மாகில்
குபேரனைப் போல வாழ்வார்
நீடிய பிள்ளை பெண்டிர்
நீள்நெடுங் காலம் வாழ்வார்
சாடிநோய் வருத்து மென்று
சாற்றினார் வேதத் தோரே. 227

*(ம. நூ. பா. : 152)*

*(இ. ள்) கதவைச் சாத்தும் பொழுது, ஆண் குரலும் செக்கின் ஓசையும் கூடியது போன்று ஓசை உண்டாகுமாகில், அம்மனையில் வாழ்பவர்கள் மிகுந்த செல்வத்தைப் பெற்று வாழ்வார். புத்திரர்கள், மனையாள் போன்றோர் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவர். ஆனால் நோய் வந்து நலிவடையச் செய்யும் என்று நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.*

### இதுவுமது

பேசிய கதவு தானும்
பெண்குரல் செக்குப் போலே
வாசியாய்ப் பேசு மாகில்
மனையினில் தனமுண் டாகும்
மாசியாய் ஆலை போலக்
கூறிடு மாகி லேதான்
மாசில்லா மயனார் சொன்ன
மனையினில் வாழ்வொண் ணாதே. 228
*(ம. நூ. பா. : 153)*

*(இ. ள்) கதவைச் சாத்தும்பொழுது, பெண்குரலைப் போன்றும் செக்கின் ஓசையைப் போன்றும் சத்தம் எழுமானால், அந்த மனையில் செல்வம் உண்டாகும். கரும்பாலையைப் போன்று மிகுந்த ஓசை எழுமாகில், அந்த மனையில் வாழலாகாது என்று குற்றமற்ற மயனார் கூறியுள்ளார்.*

### இதுவுமது

தாளமை ஒன்று மூன்று
ஐந்தின்பால் கதவு நிற்க
மீளவே கதவு தானும்
விடுமதன் ஓசை வேறு
காளமாம் கழுதை செக்குக்
குரலது கவலை யாக்கும்
தாளவே ழத்தின் ஓசை
சங்கொலி மிகவும் நன்றே. 229
*(1005 a)*

*(இ. ள்) ஒன்று, மூன்று, ஐந்து தாள்கள் உள்ள கதவைச் சாத்தும்பொழுது கழுதை குரல் போலும் செக்கின் ஓசை போலும் இருந்தால் தீராத கவலையைத் தரும். தாளம் போன்றும், யானை பிளிறுவது போன்றும், சங்கின் முழக்கம் போன்றும் ஓசை எழும்ப உத்தமமாம்.*

### கதவின் ஓசை-பலன் தீமை

கரும்பாலை போலே தானுங்
கதறியே கத்து மாகில்
வரும்பால கர்க்கு நாசம்
மங்கைய ரிடத்திற் குற்றம்
பெரும்பாடு மெத்த வுண்டு
பெண்பழி தனையே வாங்கும்
அரும்பான கொங்கை மாதே!
அவத்தைஉண் டாகும் பாரே. 230

*(742 : 99)*

*(இ. ள்)* கதவைச் சாத்தும்பொழுது, கரும்பாலையைப் போன்று ஓசை எழும்புமாகில், புத்திரர்க்கு அழிவு உண்டாகும். பெண்களால் பழியும் மிகுந்த துன்பங்களும் உண்டாகும். மனைக்கு உரியவன் மிகுந்த துயரங்களுக்கு ஆளாவான்.

### இதுவுமது

கன்னியரே வாசல் கதவுக்குச் செக்கோசை
மன்னிய புத்திரனும் மத்திமமாம்-முன்னமே
கன்னியரைப் போக்கும் கவலை மிகப்படுத்தும்
அன்னமே! சொன்னேன் அறி. 231

*(742 : 98)*

*(இ. ள்)* கதவைச் சாத்தும் பொழுது, செக்கோசையைப் போன்று மிகுந்த ஓசையை எழுப்பினால் மனைக்குரியவனுக்குப் புத்திர பாக்கியம் இருக்காது. மனையாள் மரணமடைவாள். மிகுந்த கவலையை உண்டாக்கும்.

### இதுவுமது

மந்தமாம் வாத பித்தம்
மருவியே நடக்கு மாகிற்
சிந்தையாற் கதவு சத்தங்
கிளிமொழி போலே சீறும்[1]

1. சிந்தையில் கிளியின் கூச்சல்
சிதறியே கேட்டிட் டாலும்

அந்தமாம் நடுசட் டத்தில்
ஆணியொன் றூன மாகும்
தொந்தமாய் இருக்கும் நோய்தான்
தீராது துணிந்து சொல்லே. 232

*(742 : 97)*

*(இ. ள்) கதவானது மந்தங்கொண்டு வாத, பித்தம் ஆகிய இரண்டு நாடிகளைப் போல மாறுபட்ட ஓசையை எழுப்புமாகில், நடுச்சட்டத்தில் ஆணி ஒன்று குறைபாடு உடையதாக இருக்கின்றது என்பதை அறியவும். இத்தகைய ஓசை கேட்குமாயின், மனைக்குரியவருக்கு நோயானது தீராமல் வருத்தம் செய்யும்.*

## கதவு - ஆடுதல்

அங்கிமே லாடு மாகில்
அரசராற் கேடுண் டாகும்
சிங்கமே லாடு மாகிற்
சீவனுக் கிடறு சொல்லும்
தங்கிய நிருதி தன்னில்
தனியிலாச் செங்கோ லாகும்
மங்குற வருண நோக்கில்
ஆருயிர்க் கழிவு தானே. 233

*(சி. நூ. பா. : 457)*

*(இ. ள்) கதவானது வடகீழ் மூலையில் நின்றாடிடில், இராசாக்களால் கேடு வரும். தெற்கே நின்றாடிடில் , மனைக்கு உரியவனின் உயிருக்குக் கேடு உண்டாகும்; தென்மேற்கு மூலையில் நின்றாடிடில் பொருள் சேதம் உண்டாகும்; மேற்கே நின்றாடிடில் மனைக்கு உரியவனின் உயிருக்கு அழிவு நேரிடும்.*

## கதவு தானே மூடுதல் திறத்தல் பலன்

ஓடி யடைக்கில் உயிர்போகும் ஓடாமல்
பாடி யிடைக்கில் மனைப்பாழாம்-நாடியே
நின்றிடத்தில் நின்றால் நிறைசெல்வம் உண்டாகும்
பின்னிடத்தில் பாயும் பிணி. 234

*(886 a : 175)*

*(இ. ள்)* மூடிய கதவைத் திறந்த நிலையில் வைக்க, தானே சாத்திக் கொண்டால், மனையில் வாழ்பவர்களின் உயிருக்குச் சேதம் உண்டாகும். தானே மூடிக்கொள்ளாமல் பிறர் மூடும்பொழுது கிளியைப் போன்று கீச்சென்று ஒலியெழுப்ப, அந்த மனை பாழாகும். நின்ற நிலையில் நிற்குமாகில் நிறைந்த செல்வம் வந்து சேரும். கதவு தானே பின்புறம் திறக்கில், அம்மனையில் வாழ்பவர்களுக்கு நோயுண்டாகும்.

### இதுவுமது

ஓடி அடைக்குமே ஊர்திறந்து போற்றிடினும்
வாடி யதனை வருத்துவிக்கும் - வாடாது
நிற்கவெனில் நிற்குமே நிலைகெடுமே கேடாமே
கற்பகஞ்சேர் வாசல் கதவு. 235

*(ம. நூ. பா. : 148)*

### நிலையின் நீளம்

மட்டு கொண்ட நிலைநீளம்
வளையின் கீழ்மன் னவர்க்காகும்
எட்டுக் கூறிட் டாறுமொன்று
மிச்சம் மூன்று படியாகும்
வட்ட மலைபோல் தனம்படைத்த
மங்காய் ! துங்க மதிமுகத்தாய் !
சட்ட மாக மயனுரைத்த
சங்கை தெளிநூல் இதுவாமே. 236

*(இ. ள்)* நிலை நீளத்தை அளந்து கணக்கிடும் பொழுது வளையின் கீழ் மன்னவர்க்காகும். எட்டுக் கூறிட்டு ஆறரை மிச்சம் கொள்வது. அதனை எட்டுக் கூறிட்டு நடு ஆறு ஒன்று கூட்டி, இரண்டு துளை கொள்வது. முன் சொன்ன கூறு ஆறையும் ஐந்து கூறு செய்து துளையில் கடாவி நீக்கி நின்ற மூன்று கூறும்படியாக வைப்பது. *(ம. நூ. பா. : 449)*

### (வேறு)

ஒத்த நிலையகலம் உண்மையுடன் உரைக்கில்
ஒத்த நிலத்தளவென் றெய்தினான்-ஒத்ததனை
எண்கூறிட் டாறையும் மேல்துளை இரண்டும்
பண்பாகக் கொள்வாராம் பார். 237

*(1005 b)*

*(இ. ள்) நிலை நீளத்தை எட்டு பங்கு செய்து 6½ உட்கூடு. மீதி ½ மேல் துளை இரண்டு இடுவார்கள்.*

### இதுவுமது

பார்க்கும்கூ ரொன்றரையும் பஞ்சமஞ்சு கூறுசெய்து
ஆர்க்கவே வரன்கூறாம் ஒன்பதற்குச் - சீர்க்க
இருகூறாம் இருதுளைக்க டாவியிவை மூன்றும்
வருமாம் படியாக வை. 238

*(886 a : 245)*

*(இ. ள்) நிலை நீளத்தில் ஒன்றரை கூறையும் ஐந்து கூறுகளாகச் செய்து கொண்டு, ஒன்பது கூறாகச் செய்த நிலை அகலத்தில் இரு கூறில் இரு துளைகளைக் கடாவி வைக்க வேண்டும்.*

### இதுவுமது

வைத்த சுவர்கனத்தை வாக்காறு கூறுசெய்து
ஒத்ததில் மையம் இருப்புக்குத் - துத்துப்
புரம்பாக்கி நாலாம் பொருந்தும்மா மன்னர்க்குத்
திறம்பாமல் நூலாற் தெளி. 239

*(1005 a)*

*(இ. ள்) சுவர்கனத்தை ஆறு கூறாகச் செய்துகொண்டு மையத்தில் இன்றி, நான்கு கூறில் நிலையைப் பொருத்த வேண்டும்.*

குறிப்பு : இப்பாடலுக்குப் பொருள் தெளிவாகப் புரியவில்லை.

### இதுவுமது

அறியதோர் சுவர்க னத்தை
ஆறுள கூறு செய்து
நிரையாக நின்ற கூறில்
நிலையாக மையம் தன்னில்

சரியாக வைக்க வேண்டாம்
சாத்திரப் படியே நின்ற
ஒருகூறு ஏத்தித் தள்ளி
உள்ளாக வைக்க நன்றே. 240

*(சி. நூ. பா. : 452)*

*(இ. ள்)* வைத்த சுவர்கனத்தை ஆறு கூறு செய்து நின்ற கூறின் மையத்தில் வைக்க வேண்டாம். முன்னோர் சொன்ன சாஸ்திரத்தின் படியே நின்றதில் ஒரு கூறு ஒத்தித் தள்ளி உள்ளாக வைக்க நன்று.

## இதுவுமது

ஓதிய நிலைநீ ளத்தை
ஒன்பது கூறு செய்து
நீதியாய் இரண்டு மைந்தும்
இதில்விரல் முறியா வண்ணம்
பாதியாம் விரலை யொற்றிக்
கொள்வது பழுதொன் றில்லை.
மீதியாய் இரண்டொன் பானால்
மேலைந்து கீழ்நால் காண்க. 241

*(சி. நூ. பா. : 450)*

*(இ. ள்)* நிலை நீளத்தை ஒன்பது கூறு செய்து 2-5 இதில் விரல் முறியாமல் பாதி விரல் ஒற்றிக் கொள்வது. 2-9 கூறு செய்து மேல் ஐந்து கீழ் நான்கு என்று கொள்வது.

## இதுவுமது

மட்டுறை நிலைநீ ளத்தை
மன்னிய ஏழு செய்து
ஒட்டொடா இரண்டு நீக்கி
ஒன்றினை ஒன்ப தாக்கி
இட்டதோர் கூறு தன்னில்
மேலைந்து கீழ்நான் காகும்
எட்டிடில் பாதி போகும்
விரலொற்றிக் கொள்வார் தாமே. 242

*(சி. நூ. பா. : 451)*

*(இ. ள்) நிலை நீளத்தை ஏழு கூறு செய்து 6-2 கூறு நீக்கி நின்றதை ஒன்பது செய்து மேல் 5 கீழ் 4, 2 கூட்டில் பாதி போம். விரலொற்றிக் கொள்வது.*

## நிலை அமைத்தல்

கல்நிலை தேவர்க் காகும்
கனமறை யோர்க்கு வேம்பாம்
மன்னவர்க் காச்சா தேக்கு
வைசியர்க் கிலுப்பை யாகும்
பன்னுவே ளாளர் கட்டுப்
பகர்தெங்கு முசிலை யாகும்
இன்னவை தமிழி னாலே
இயம்பினார் வேதத் தோரே. 243

*(இ. ள்) கல்நிலை தேவர்களுக்காகும், மறையவருக்கு வேம்பாகும். அரசர்களுக்கு ஆச்சா, தேக்காகும், வைசியர்களுக்கு இலுப்பை மரமாகும். வேளாளர்களுக்குத் தென்னை மரமும் உசிலை மரமும் நிலைக்காகும். (சி. நூ. பா. : 447)*

## நிலை அளவு

நிலைஅக லங்கள் கொள்ளில்
நேர்படச் சொல்லும் போது
நிலைஅக லத்தி னாலே
கனமது நீட்டிக் கோணம்
நிலைஅக லத்தில் முக்கால்
அரையது காலே யாதல்
நிலைஅக லத்தால் வந்த
நிலத்தள வொத்த தாமே. 244

*(886 a : 101)*

*(இ. ள்) நிலையின் அகலத்தைக் கணக்கிடும் போது, நிலையின் அகலத்தைக் கொண்டு கனம் கொள்ளவேண்டும். நிலையின் அகலத்தில் முக்கால், அரை, கால் இவை என்று நிலையகலத்தால் வந்த நிலத்தளவு ஒக்கும்.*

# 9. வாஸ்து

## வாஸ்து புருஷன் தோற்றம்

உக்கிர முகமும் கண்ணும்
ஒருகையில் குக்குட மரமும்
நிக்கிர தேவர் கூட்டம்
தங்களைச் சாடும் தாளும்
மிக்கதோர் முதுகில் கூனும்
விரிசடை நிலத்தி னோடு
வக்கர முகம தாக
வாஸ்துமன் கிடக்கும் வாறே. 245

*(886 a : 108)*

*(இ. ள்)* கோபத்தால் சிவந்த முகத்தோடு, சிவந்த கண்களுடன் ஒரு கையில் சேவலையும் மற்றொரு கையில் மரத்தையும் பிடித்துக்கொண்டு, தேவர்களை எட்டி உதைக்கின்ற கால்களோடு, கூனான முதுகைக் கொண்டவனாக, நிலம் வரை சடாமுடியானது நீண்டு கிடக்க, பற்களும் வாயும் கொடுமையாகக் கொண்டவனாக வாஸ்துவின் தோற்றம் காணலாகும்.

குறிப்பு : வக்கர பல்லும் வாயும்
வாஸ்துவன் வடிவ மாமே.
முகத்தைப் பற்றி முதலடியிலேயேகூறப்பட்டிருப்பதால், இப்பாட வேறுபாடு சரியானது எனக் கருத்தில் கொண்டு உரை எழுதப்பட்டுள்ளது.

## வாஸ்து இடக்கை-பொது (தோற்றம்)

துங்க பானு தானின்று
துய்ய இராசி நிலையறிந்து
அங்கே பாதம் தனைநீட்டி
அதனுக் கேழில் தலைவைத்து
பங்கை இடக்கை கீழாகப்
பகரும் வலக்கை மேலாக
மங்கை பூத லந்தனிலே
வாஸ்து புருஷன் கிடப்பதுவே. 246

*(ம. நூ. : 160)*

*(இ. ள்) ஆதித்தன் நின்ற இராசியில் காலை வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் சிரம் வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வாஸ்து புருஷன் கிடப்பான்.*

### வாஸ்து கிடக்கை-பொது-காலம்

திங்களோர் இராசி தன்னில்
திகழவே சிரசை வைத்துப்
பொங்கிய இராசிக் கேழாம்
புகன்றிடும் இராசி தன்னில்
தங்கிய காலை நீட்டிச்
சகப்பிர திட்டை யாக
மங்கையே ! சொல்லக் கேளாய் !
வாஸ்துதான் கிடக்கும் வாறே ! 247

*(742 : 22)*

*(இ. ள்) மாதம் ஒரு இராசியில் சிரம் வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் காலை நீட்டி செகப் பிரதிட்டையாக வாஸ்து புருஷன் கிடப்பான்.*

### இதுவுமது

எங்கே மாதம் தானின்ற
இராசி நிலைகள் தானறிந்து
அங்கே பாதம் தனைநீட்டி
அதனுக் கெதிரே தலைவைத்து
பங்கை இடக்கைக் கீழாகப்
பகரும் வலக்கை மேலாக
மங்கை பூதலந்தனிலே
வாஸ்து புருஷன் கிடப்பதுவே. 248

*(சி. நூ. பா. : 147)*

*(இ. ள்) எந்த மாதமோ, அந்த மாத நிதானம் அறிந்து அந்த இராசியில் காலை நீட்டி, அந்த இராசிக்கு ஏழாம் இராசியிலே தலையை வைத்து, இடக்கைக் கீழும் வலக்கை மேலுமாக வாஸ்து புருஷன் படுத்திருப்பான்.*

### வாஸ்து கிடக்கை (பொது)

எத்திசை யெனினும் பாம்பு
இரவிதான் நிற்கும் இராசி
அத்திசை காலை நீட்டி
அதற்கெதிர் தலையை வைத்து
உத்திடும் இடக்கை கீழாய்
ஓங்கிய வலக்கை மேலாய்
மைத்தடங் கண்ணி னாளே !
வாஸ்துவின் கிடைய தாமே. 249

*(சி. நூ. பா. : 167)*

### இதுவுமது

திங்களில் இராசி நிற்கும்
திசைதனில் காலை நீட்டி
இங்கெதிர் தலையை வைத்தே
இடதுகை கீழ தாகப்
பொங்கிய வலக்கை மேலாய்ப்
பூதலம் விளங்க வென்றே
மங்கையே ! சொல்லக் கேளாய் !
வாஸ்துவின் கிடக்கை தானே. 250

*(ம. நூ. பா. : 154)*

### வாஸ்து புருஷன் விழித்தெழும் காலம்

சித்திரைமா தம்பத்துத் தேதி தன்னிற்
சிறந்தநா ழிகையைந்திற் றெளிவ தாகும்
மத்ததொரு வைகாசி இருபத் தொன்றில்
வருமெட்டு நாழிகையில் விழிப்ப தாகும்
சத்தியாய் ஆடியைப் பசியி லுந்தான்
தக்கபன்னோர் தேதியில்நா ழிகைஇ ரண்டாம்
பத்தியாய் ஆவணியில் ஆறாம் தேதி
பகரிருபத் தொன்றின்மேல் விழிப்பான் பாரே.251

*(சி. நூ. பா. : 178)*

*(இ. ள்)* வாஸ்து புருஷன் விழித்தெழுங்காலம் மாதம், தேதி, நாழிகைகள் அறியும்படி. சித்திரை மாதம் பத்தாம் தேதி ஐந்து நாழிகைக்கு மேலும், வைகாசி மாதம் இருபத்தோராம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், ஆடி மாதம் பதினோராம் தேதி இரண்டு நாழிகைக்கு மேலும், ஐப்பசி மாதம் பதினோராம் தேதி இரண்டு நாழிகைக்கு மேலும், ஆவணி மாதம் ஆறாம் தேதி இருபத்தொரு நாழிகைக்கு மேலும் வாஸ்து புருஷன் கண்விழிப்பான்.

### வாஸ்து புருஷன் விழித்திருக்கும் மாதங்கள்

சித்திரை வைகாசி ஆடி
சிறந்தஆ வணியும் மிக்க
வைத்தஅற் பசியி னோடு
மண்ணும்கார்த் திகையது தானும்
தத்தில்லா தையும் மாசியும்
தானிவை எட்டு மாதம்
புத்தியால் மனைகள் கோல
புகழுடன் நன்மை யாமே. 252
*(1005 a)*

*(இ. ள்)* சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இந்த எட்டு மாதங்களுக்கும் **குசை மாதங்கள்** என்று பெயர். இந்த மாதங்களில் மனைகோலவும் குடிபுகவும் நன்றாம். சுகத்தைச் சேர்க்கும்.

குறிப்பு : இந்த மாதங்கள் வாஸ்து புருஷன் விழிக்கும் மாதங்களாகும். இம்மாதங்களில் தக்க தேதிகளில் தக்க நாழிகைகளில் மனைகோலுதல், குடிபுகுதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

### வாஸ்து புருஷன் விழித்தெழும் காலம்

கார்த்திகைமா தந்தனிலே எட்டாம் தேதி
கருத்தாய்ப்பார் நாழிகையும் பத்த தாகும்
கீர்த்தியுள்ள தைமாதம் பன்னி ரண்டாந்
தேதியதில் நாழிகையும் எட்டின் மேலாம்

ஆர்த்தியுள்ள கணிதவிதி மாசி மாதம்
அறிகுவார் இருபதாம் தேதி தன்னில்
பார்த்திபனே பகலெட்டு நாழி கைக்குப்
படுக்கைவிட் டெழுந்திருப்பன் வாஸ்து தானே. 253

*(இ. ள்)* கார்த்திகை மாதம் எட்டாம் தேதி பத்து நாழிகைக்கு மேலும், தை மாதம் பன்னிரண்டாம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், மாசி மாதம் இருபதாம் தேதி எட்டு நாழிகைக்கு மேலும், மூன்றே முக்கால் நாழிகை மட்டும் இருந்து, அப்புறம் சூரியன் நின்ற இராசியிலே காலை நீட்டி அதற்கு எதிரான இராசியிலே தலையை வைத்து வாஸ்து புருஷன் படுத்திருப்பான். *(சி. நூ. பா. : 179)*

**வாஸ்து புருஷன் விழித்திருக்கும் மாதங்கள்**

ஏற்றஞ் சித்திரை ஓர்பத்தில்
இருபத் தொன்றில் வைகாசி
பார்த்த ஐப்பசி யோடாடி
பதினொன் றாவணி ஓராறில்
தத்தும் தையில் பன்னிரண்டில்
தக்கருங் கார்த்திகை இருநான்கில்
மத்து மாசிஇரு பத்தொன்றில்
வாஸ்து தான்உதிக் கும்வாறே. 254

*(இ. ள்)* சித்திரை மாதம் பத்தாம் தேதி, வைகாசி மாதம் இருபத்தோராம் தேதி, ஆடி மாதம் பதினோராம் தேதி ஆவணி மாதம் ஆறாம் தேதி, ஐப்பசி மாதம் பதினோராம் தேதி, கார்த்திகை மாதம் எட்டாம் தேதி, மாசி மாதம் இருபதாம் தேதி ஆகிய இந்தத் தேதிகளில் வாஸ்து புருஷன் எழுந்திருப்பான் இந்நாளில் மனைகோலில் அவரவர்க்குப் பொருந்திய திக்கில் வாசல் விடலாம், குடி புகலாம். *(739 : 18)*

குறிப்பு : கார்த்திகை எட்டுவதை ஈராறில்
காணும் மாசி இருபதனில்
வாஸ்து வுந்தான் எழுந்திருப்பன்
மனைதான் வாசல் கோலலாமே. *(நூ. பா. : 166)*

**இதுவுமது**

தத்தும் சித்திரை ஓர்பத்து
தளர்வை காசி மூவேழு
சித்தும் ஐப்பசி ஆடியுடன்
சிறந்தபதி னொன்றா வணியாறு
உத்தும் கார்த்திகை எட்டுடனே
உகந்த தையும் ஈராறு
மத்த மாசி இருபதனில்
வாஸ்து புருஷன் வரும்வாறே. 255

*(1005 b)*

**இதுவுமது**

கிடந்தான் மேஷம் ஒருபத்தில்
கிளரும் விடையம் மூவேழில்
அடுங்கோள் கடகம் பதினொன்றில்
அரியோ ராறில் தேளெட்டில்
குடந்தான் இருபத் திரண்டாகும்
கூறும் மகரம் பனிரெண்டில்
இடந்தான் எடுக்க லாமென்றார்
எல்லாத் திசையும் நல்லோரே. 256

*(886 a : 122)*

**இதுவுமது**

ஆடு தனக்குப் பத்தாகும்
அயனாண் டொன்று விடைதனக்கு
ஓடு நண்டு பதினொன்றும்
உயர்ந்த சிங்கம் எட்டாகும்
நீரும் துலாத்தில் பதினொன்றாம்
நெடிய தேளில் இருநான்காம்
சாடு நகரி பன்னிரண்டாம்
கும்பம் இருபத் திரண்டாமே. 257

*(886 a : 117)*

**இதுவுமது**

சித்திரை பத்தாம் நாளிற்
சிறந்ததோர் கடிகை ஐந்தில்
இத்தவை காசி நாளில்
இருப்பதோர் கடிகை எட்டில்
அத்ததோர் ஆனி நாசம்
ஆடிநாள் பன்னொன் றென்னில்
உத்ததோர் கடிகை ஐந்தில்
ஒண்டெனச் சாற்று வீரே. 258
*(1005a)*

**இதுவுமது**

ஆவணி ஆறு தன்னில்
கடிகையோர் அந்நான் கொன்றில்
பூவணி புரட்டை நாசம்
புகழ்ந்தஅற் பசிபன் னொன்றில்
தாவுறு கடிகை ரெண்டில்
கார்த்திகை மாதம் எட்டில்
பாவணி கடிகை தானும்
பத்தென்பர் பாவல் லோரே. 259
*(1005a)*

**இதுவுமது**

மார்கழி நாசம் தையில்
வந்தநாள் பன்னி ரெண்டில்
யாரடில் கடிகை எட்டில்
இராகதன் கடிகை எட்டில்
அழகுமா சிருபனி ரெண்டில்
பங்குனி நாச மாகும்
மார்சிறு கொங்கை யாளே !
வாஸ்துவன் எழும்பும் வாறே. 260
*(1005a)*

### இதுவுமது

குண்டைமான் குடங்கள் எட்டாம்
கொடியதேள் பத்த தாகும்
நண்டுகோல் இரண்ட தாகும்
நன்மேடம் ஐந்த தாகும்
திண்திறல் சிங்கம் தானே
சிறந்ததோர் மூவே ழாகும்
வண்திறல் முனிவன் சொன்ன
வாஸ்துதான் உதித்த வாறே. 261

*(ம. நூ. பா. : 169)*

### வாஸ்துவின் சமயம்

செய்யவாஸ் துவின்தன் நாட்டம்
திறமுடன் விழித்து நோக்கில்
துய்யதோர் கடிகை மூன்று
துரிதமுக் காலுக் குள்ளே
உய்யவே முதலாம் வேளை
உவந்ததோர் கடிகை முக்கால்
நையவே தந்த சுத்தி
ராசனார் பயம்உண் டாமே. 262

*(இ. ள்)* நாழிகை மூன்றே முக்காலுக்குச் சமயம் ஐந்து முதற் சமயம் கடிகை முக்காலுக்குள் தந்த சுத்தி செய்வான். அதில் மூகூர்த்தம் செய்தால் அரசரால் பயமுண்டாம். *(742 : 33)*

குறிப்பு : வாஸ்து எழுந்து விழித்திருப்பது மூன்றே முக்கால் நாழிகை. இதற்குச் சமயம் ஐந்து. சமயம் ஒன்றுக்கு நாழிகை முக்காலாக, சமயங்கள் ஐந்திற்கு நாழிகை மூன்றேமுக்கால்.

### இதுவுமது

ஏற்றிய இரண்டாம் வேளை
எழில்உயர் கடிகை முக்கால்
போற்றிய ஸ்நானம் செய்வன்
பொருந்திய பீடை உண்டாம்

சாற்றிய மூன்றாம் வேளை
தக்கதோர் கடிகை முக்கால்
மாற்றிய பூசை செய்வாய்
வறுமையால் வாடும் என்னே! 263
*(742 : 34)*

*(இ. ள்)* வாஸ்துவின் இரண்டாம் சமயமான கடிகை முக்காலுக்குள் நீராடுவான், அதில் முகூர்த்தம் செய்தால் பீடை உண்டாகும். மூன்றாம் சமயமான கடிகை முக்காலுக்குள் பூசை செய்வான். அதில் முகூர்த்தம் செய்தால் வறுமையால் வாடுவார்கள்.

**இதுவுமது**

பெருகிய நாலாம் வேளை
பேருயர் கடிகை முக்கால்
அருமையாய் அசனம் செய்வன்
அழகிய புத்திரர் உண்டாம்
திறமையாம் ஐந்தாம் வேளை
சேர்ந்ததோர் கடிகை முக்கால்
மருவுதாம் பூலம் கொள்வன்
மகிழ்ந்துஉத் தமம்என் றோதே! 264

*(இ. ள்)* வாஸ்து நாலாம் சமயமாகிய கடிகை முக்காலுக்குள் உணவு கொள்வான். அந்த நேரத்தில் முகூர்த்தம் செய்தால், புத்திர சந்தானம் உண்டாகும். ஐந்தாம் சமயமாகிய கடிகை முக்காலுக்குள் தாம்பூலம் கொள்வான். அந்த நேரத்தில் முகூர்த்தம் செய்தால் மகா உத்தமம். *(742 : 35)*

**இதுவுமது**

நடைதனில் முக்கால் நாழி
நலமுடன் பொசிப்பு முக்கால்
குடைதனில் முக்கால் நாழி
குறுகிய மலர்க்கண் முக்கால்

படிதனில் வீழ்ந்து மாய்ந்து
பரவசம் விளங்கு முக்கால்
அடவுடன் வாஸ்து வுக்கு
அகத்தியர் உரைத்த வாறே ! 265

*(886 a : 111)*

**வாஸ்து புருஷன் கிடக்கை**

தண்டொடு கடகம் சிங்கம்
தலைதனை வடக்கே வைத்துக்
கொண்டதோர் காலை நீட்டிக்
குறைவறக் கிடக்கும் போது
ஒண்கதிர் தன்னை நோக்கி
ஒருகையில் சூலம் ஏந்தி
மண்டினில் இடக்கை கீழாய்
வாஸ்துவும் கிடக்கும் வாறே. 266

*(886 a : 112)*

*(இ. ள்) மிதுனம், கடகம், சிங்கம் இந்த மூன்று மாதங்களில் வடக்கே தலையை வைத்துத் தெற்குதிசையான எமன் திசையில் காலை நீட்டிக்கொண்டு, கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டு, ஒரு கையில் சூலத்தை ஏந்தியவனாக, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வைத்துக்கொண்டு வாஸ்து புருஷன் கிடப்பான்.*

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

தண்டொடு நண்டு சிங்கம்
தலையது வடபால் வைத்துத்
தென்திசை யதனில் தானும்
திகழ்பெறக் காலை நீட்டி
என்றாய இடக்கைகீ ழாக
இந்திரன் திசையை நோக்கி
வண்டணி குழலி னாளே !
வாஸ்துவும் துயிலும் வாறே.

## வாஸ்து புருஷன் கிடக்கை

கன்னியும் துலாமும் தேளும்
கதிர்தனில் முடியை வைத்து
மின்னிய பாதந் தன்னை
மேற்காக நீட்டி யங்கே
தென்னில முகம தாகச்
செங்கையிற் சூலம் ஏந்தி
மின்னிய இடக்கை கீழாய்
வாஸ்துமன் கிடக்கும் வாறே. 267

*(886a : 113)*

*(இ. ள்)* கன்னி, துலாம், விருச்சிகம் இந்த மூன்று மாதங்களில், கிழக்குத் திசையில் தலையை வைத்துத் மேற்காக கால்களை நீட்டிக் கொண்டு, தெற்குத் திசையை நோக்கியவாறு, ஒரு கையில் சூலத்தை ஏந்தியவாறு இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வைத்துக்கொண்டு, வாஸ்து புருஷன் கிடப்பான்.

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

கன்னியும் துலாமும் தேளும்
கதிர்முடி கிழக்கே வைத்து
மின்னிய வருணன் மேலே
விசும்பெற காலை நீட்டி
என்னிசை இடக்கை கீழாய்
எமனுட திசையை நோக்கி
வன்னிய நுதலி னாளே !
வாஸ்துவும் துயிலும் வாறே.

## வாஸ்து கிடக்கை

வில்லொடு மகரம் கும்பம்
மேற்றிசை முகம தாக
மெல்லவே தலையை தெற்கே
விரிபெற விரித்து வடக்கே

கல்லடி காலை நீட்டி
கரத்தினில் சூலம் ஏந்தி
வல்லவுள் இடக்கை கீழாய்
வாஸ்துவும் கிடக்கும் வாறே. 268

*(886 a : 114)*

*(இ. ள்)* தனுசு, மகரம், கும்பம் இந்த மூன்று இராசிகளில் தெற்கே தலையை வைத்து, வடக்கே காலை நீட்டி, மேற்குத் திசையை நோக்கி, கரத்தினில் சூலத்தை ஏந்தியவனாக இடக்கை கீழாகவும் வலக்கை மேலாகவும் இருக்குமாறு வாஸ்து புருஷன் கிடப்பான்.

## வேறு

தனுவொடு மகரம் கும்பம்
தலையது தென்பால் வைத்து
வனிதையர் தனக்கு நல்லான்
வடக்கினிற் காலை நீட்டி
நினைவொடு முகமும் மேற்கே
நீதமாய் நிசங்க மாக
மனுவொடு இடக்கை கீழாய்
வாஸ்துவும் துயிலும் வாறே. 269

*(சி. நூ. பா. : 378)*

## வாஸ்து கிடக்கை

மீனொடு ஆடும் ஏறும்
மேற்றிசை முடியை வைத்துக்
கால்தனைக் கிழக்கே நீட்டிக்
கையைவைத் துயிலும் போது
ஊனமில் சூலம் ஏந்தி
உத்திர திசையை நோக்கி
மானிலம் இடக்கை கீழாய்
வாஸ்துவும் கிடக்கும் வாறே. 270

*(886 a : 115)*

*(இ. ள்)* மீனம், மேடம், இடபம் இந்த மூன்று மாதங்களில் மேற்கே தலையையே வைத்துக் கிழக்கே காலை

*நீட்டி, துயிலும்போது கையில் சூலத்தை ஏந்தியவனாக வடக்குத் திசை நோக்கி, இடக்கை கீழாகவும், வலக்கை மேலாகவும், இருக்குமாறு வாஸ்து புருஷன் கிடப்பான்.*

### வேறு

மீனமும் ஆடும் ஏறும்
மேற்கது தலையை வைத்துச்
சேனையிற் கிழக்கின் மீதே
திகழ்பெறக் காலை நீட்டி
ஊனமாய் இடக்கை கீழாய்
உத்திர திசையை நோக்கி
மானெனும் தோகை மாதே !
வாஸ்துவும் துயிலும் வாறே. 271

*(சி. நூ. பா. : 585)*

### வாஸ்து கிடக்கை-பொது

தென்வடல் வாஸ்து வுக்குத்
திருத்தலை வடக்க தாகும்
பன்னுகீழ் மேலும் வாஸ்து
பதியுடன் தலைமேற் காகும்
நன்குடல் கீழ்பால் மேல்பால்
நயந்துதான் கொள்வ தென்று
அன்புள்ள வாஸ்து வுக்கு
அடிதலை அறிந்து கொள்ளே ! 272

*(சி. நூ. பா. : 267)*

குறிப்பு : *இப்பாடலுக்கு பொருள் விளங்கவில்லை.*

### வாஸ்து-தலைவைத்துப் படுக்கும் திசை

காலை வடக்காகும் கட்டுச்சி நேர்கிழக்கு
சால வடிசாயிற் நான்தெற்கு - மாலை
பொழுதெல்லாமா மேற்காகும் பூமி தலையாகப்
பழுதில்லை வாஸ்துபடுப் பன். 273

*(சி. நூ. பா. : 184)*

*(இ. ள்) வாஸ்து புருஷன் தலை வைத்துப் படுக்கும் திசையின் விபரம். காலையில்* ***வடக்கே*** *தலையை வைத்துத்*

*தெற்கே காலை நீட்டிக் கிடப்பான், நண்பகலில்* ***கிழக்கே*** *தலையை வைத்து மேற்கே காலை நீட்டிக் கிடப்பான், சாயங்காலம்* ***தெற்கே*** *தலையை வைத்து, வடக்கே காலை நீட்டிக் கிடப்பான், மாலையில்* ***மேற்கே*** *தலையை வைத்துக் கிழக்கே காலை நீட்டி இருப்பான்.*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

காலை வடக்காகும் கட்டுச்சி நேர்கிழக்கு
மாலை படும்போது தெற்கு மண்ணுமே
சாலப் படுநாளில் மேற்காகும் நண்ணுதாய் !
வாஸ்து தலைதான் கிடக்கும் கருத்தே ! 274

*(1005*b*)*

## இதுவுமது

காலை கிழக்காகும் கட்டுச்சி தெற்காகும்
சாலவயன் மேற்காகச் சாயுமே - மாலை
வடக்காக வேமுகமும் வைத்துத் தான்நித்தம்
கிடக்கும் இதுவெனவே கேள். 275

*(886*a *: 117)*

## வாஸ்துவும் வாசலும்

கிடப்பதும் இடக்கைக் கீழாய்க்
கிடந்தவன் எழுந்தி ருந்து
நடப்பது வலமே யாக
நல்லதோர் இராசி தோறும்
படுக்கையாய் வயிறு பார்த்துப்
பரிவுடன் வாசல் தன்னை
விடப்பேறும் இல்லை யாகில்
வேதனை செய்யு மன்றே ! 276

*(இ. ள்) இடக்கைக் கீழும் வலக்கை மேலுமாகக் கிடந்தவன் எழுந்திருந்து வலமாக வரும்பொழுது, வயிறு பார்த்து வாசல்தன்னைக் கோலாவிட்டல், அம்மனைக்கு உரியவர்களுக்கு நன்மை விளையாது. தீமையை அடைவார்கள். (886*a *: 109)*

### இதுவுமது

துய்யதோர் வயிற்றில் வாசல்
சுகமொடு செல்வம் உண்டாம்
கையது வாச லாகிற்
கைக்குழந் தைகளும் பாழாம்
மெய்யதாய் மார்பே யாகில்
மேல்மனை எரிந்து போகும்
பையவே தலைய தாகிற்
பதிக்குள்ளோன் இறப்பன் என்னே! 277

*(ம. நூ. : 167)*

*(இ. ள்)* வாஸ்து புருஷன் கிடக்கையில் வயிற்றில் வாசல் வைத்தால் சுகங்களும் செல்வமும் வந்து சேரும். கைப்பகுதியில் வாசல்விட்டால், புத்திரர்களுக்கு அழிவுண்டாகும். மார்புப் பகுதியில் வாசல்விட்டால், வீடு எரிந்து போகும். தலைப் பகுதியில் வாசல் விட்டால், மனைக்குரியவன் மரணமடைவான்.

### இதுவுமது

காலதே வாச லாகிற்
கனங்குழல் சாவு சொல்லும்
சாலவே தலைய தாகில்
தானவன் சாவு சொல்லும்
கோலிய முதுகே யாகிற்
கோவினால் அச்சம் உண்டாம்
வாலிய வயிற்றில் விட்டால்
வான்பொருள் சேரு மன்றே! 278

*(இ. ள்)* வாஸ்து புருஷன் கிடக்கையில் காலில் வாசல் விட்டால் மனைவிக்கு மரணம் உண்டாகும், தலையில் வாசல் விட்டால் தலைவனுக்கு ஆகாது. முதுகில் வாசல்விட்டால் அரசனால் அச்சம் உண்டாகும். வயிற்றில் வாசல்விட்டால் மிகுதியான பொருள் சேரும். *(742 : 29)*

## வாஸ்து பார்த்து குழி தோண்டுதல்-பலன்

காலிடை முன்னம் கெல்லில்
கனங்குழைச் சாவு சொல்லும்
மேலாக முதுகில் கெல்லில்
வேண்டிய பொருளும் போகும்
சாலிதன் தலையில் கெல்லில்
தந்தைதாய் சாவு சொல்லும்
வாலிதன் வயிர தாகில்
வாழ்வுவந் தெய்தும் தானே. 279

*(886 a : 118)*

*(இ. ள்)* வாஸ்து புருஷன் கிடக்கையில் மனை கோலுவதற்காகக் காலில் குழிதோண்ட மனையாளுக்கு மரணம் நேரிடும். முதுகுப் பகுதியில் குழி தோண்ட பொருள் கைவிட்டுப்போகும். தலைப்பகுதியில் குழி தோண்ட பெற்றோருக்கு மரணம் நேரிடும். வயிற்றுப் பகுதியில் குழி தோண்ட நல்வாழ்வு வந்து சேரும்.

## வாஸ்து பாராமல் மனைகோலும் பலன்

வாஸ்துவின் கிடைய றிந்து
மனைதனைக் கோலா னாகில்
ஏத்திய மனையும் பாழாய்
இருந்தவர் ஊரும் பாழாய்
சேத்தநற் பொருளும் கேடாய்
செய்தவை அனைத்தும் பாழாய்
தோத்ததோர் வினையும் செய்யும்
முனியையும் தொடரு மென்றே ! 280

*(886 a : 110)*

*(இ. ள்)* வாஸ்து புருஷனின் கிடக்கையை அறிந்து, மனைக்கு உரியவன் மனையைக் கோலாவிடில், அவன் கட்டிய வீடு பாழாகும், ஊரும் பாழாகும். சேர்த்து வைத்த செல்வங்கள் அழிந்து போகும். மனைகோலிய சிற்பனுக்கும் துன்பங்கள் வந்துசேரும்.

## இதுவுமது

மேய வாஸ்து விரும்பிய நிலையன்றி
தூய மாமனை துடங்கி எடுத்திடில்
நேய மனைவியும் நிறைந்த கணவனும்
ஆய முகூர்த்தம் வைத்தவனும் சாவனே. 281

*(742 : 25)*

*(இ. ள்) வாஸ்து புருஷனின் கிடக்கையை அறிந்து மனைக்கு உரியவன் மனையைக் கோலாவிடில், அம்மனைக்கு உரியவனும், அவனுடைய மனைவியும், அம்மனைக்கு முகூர்த்தம் செய்துவைத்த சிற்பனும் இறப்பார்கள்.*

## இதுவுமது

சாமது நிட்சயந் தன்மனை கோல்பவன்
பூமலர் வாஸ்து புருஷன்முன் சென்றிடத்
தாமுறு பகைவராற் சடுதியில் மாய்ந்திடும்
சேமவெண் குட்டமும் சேரும் உடம்பில். 282

*(742 : 26)*

*(இ. ள்) வாஸ்து புருஷனின் கிடக்கையை அறிந்து மனைக்குரியவன் மனையைக் கோலாவிடில் பகைவரால் துன்பமும், உடலில் நோய்களும் வந்து சேரும்.*

## வாஸ்து செய்யும் இடம்

வாத்து புருடன் விழிநோக்கில்
மனைக்கு முகூர்த்தம் செயவேண்டிற்
பார்த்து மனையை நாலேழாய்ப்
பகுந்து காலிற் பதினேழுஞ்
சாத்துந் தலையில் ஈரைந்துந்
தள்ளி நடுவில் ஒரு பங்கு
ஏத்த மாக முகூர்த்தமிட்
இராச சம்பத் துண்டாமே. 283

*(சி. நூ. பா. : 171)*

*(இ. ள்)* வாஸ்துவின் விழி நோக்கு அறிந்து முகூர்த்தம் செய்யும்பொழுது, அந்த மனையை இருபத்தெட்டு பாகம் செய்து, காலில் பதினேழு பாகமும், தலையில் பத்து பாகமும் தள்ளி, நடுவில் ஒரு பாகத்தில் முகூர்த்தம் செய்தால் இராஜ சம்பத்து உண்டாகும்.

## வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் மாதங்களும் பலன்களும்

கூனி ஆனி புரட்டாசி மார்கழி
ஊன மான ஒரு நான்கு மாதமும்
மானி டர்கள் மனையே குடிபுகில்
ஈன மாகும் இடர்செய்யும் நோய்களே ! 284
*(1005 a)*

*(இ. ள்)* பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த நான்கு மாதங்களும் மூலை மாதங்கள் என்று பெயர். இந்த நான்கு மாதங்களும் வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் காலமாதலின், இம்மாதங்களில் வீடு குடிபுகில், பொருள் அழியும். துன்பங்கள் வரும். நோய்கள் வந்து இடர் செய்யும்.

## இதுவுமது

மிக்கதோர் ஆனிபுரட் டாசி கூனி
விரும்புதெய்வ மார்கழிமா தங்கள் நான்கில்
தக்கதோர் வாஸ்துநித் திரைசெய் காலம்
தானதிலே மனைத்தச்சு செய்ய லாகா
பக்கமுள்ள வீடுகுடி புகவு மாகா
பார்தனிலே வாழ்பவர்கள் இதனைப் பார்த்து
இக்கமாதங் கள்தள்ளி யுறக்கம் விட்டே
எழுங்காலம் மனைகோல்கள் செய்ய நன்றே. 285

*(இ. ள்)* ஆனி, புரட்டாசி, பங்குனி, மார்கழி இந்த நான்கு மாதங்களும் வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் காலமானதால் இம்மாதங்களில் மனைகோலலாகாது. குடி

*புகவும் ஆகாது. வையகம் வாழ்பவர் மீறிச் செய்வாரேல் பொருளழிவும் உயிர்ச்சேதமும் அம்மனையில் மூதேவி வாசமும் எஜமான் பெண்டு பிள்ளைகளோடு வியாதியால் மெலிதலும் அல்லாமல் அம்மனை கோலிய சிற்பனும் நோயால் மெலிகுவான். (சி. நூ. பா. : 177)*

### இதுவுமது

ஆனியுள் நாரி மிக்க
வந்தமார் கழியி னூடு
கூனியே இவைகள் நான்கும்
குடிபுகார் மனையே கோலார்
மீனமுறு மாதம் நான்கில்
மிகுமனை எடுப்பா ராகில்
வானமுறு தேவ ரேனும்
வாழ்வரி தென்ன லாமே. 286

*(இ. ள்) ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி இந்த மாதங்கள் வாஸ்து புருஷன் நித்திரை செய்யும் மாதங்களாகும். இம்மாதங்கள் வீடு குடிபோக மாட்டார்கள். மனைகோல மாட்டார்கள். அதனை நீக்கி, இந்நான்கு மாதங்களில் மனை கட்டுவாராகில், மனைக்குரியவர் தேவராக இருந்தாலும் அவருக்கு நல்வாழ்வு கிட்டுதல் என்பது அரிதாகும். (886a : 137)*

### இதுவுமது

ஆடித் திங்களில் இராவணன் பட்டதும்
ஆலித் தேபெரும் பாரதம் மார்கழி
நாடிக் கன்னி இரணியன் மாண்டதும்
நஞ்ச ருந்தினார் ஈசனும் கூனியில்
பாடிக் காமனும் வெந்ததப் பங்குனி
பார்க்குள் ஏகினான் மாபலி ஆனியில்
வீடிட் டதிலே குடிபுக வேண்டினோர்
வீடு விட்டிரந் துண்பர் உலகிலே. 287

*(இ. ள்) ஆடி மாதத்தில் இராவணன் முடி குலைந்தான் மார்கழி மாதத்தில் பாரதப்போர் முதலான வீணான*

பொல்லாங்குகள் விளைந்தன. புரட்டாசியில் இரணியன் மாண்டான். பங்குனி மாதத்தில் சிவன் ஆலகால விஷத்தை அமுதாகக் கொண்டார். மன்மதனும் அப்பங்குனி மாதத்தில் எரிந்தான். மாபலி சக்ரவர்த்தி ஆனி மாதத்தில் ஊரை விட்டு ஓடினார். ஆகையால் ஆனி மாதம் முதலாகிய மேற்சொல்லிய மாதங்களில் மாதங்களில் மனைகோலவாவது குடிபுகவாவது யத்தனித்தால் அந்த இடத்தைவிட்டு நீங்குவதும் அல்லாமல் பிச்சைக்குப் போவார். தேவர்களும் தடுத்திடல் அரிதாகும். *(சி. நூ. பா. : 322)*

குறிப்பு : "வீடேகி னான்புரட் டாசி இரணியன்
வேலைநஞ் சினைசிவன் உண்டது மாசியில்
நாடித் திங்களில் நன்மனை கோலிடில்
ஓட்டில் பிச்சை இரப்பதும் உண்மையே"

வாஸ்து நித்திரை செய்த மாதங்களில் மனைகோலில், குடிபுகில் தீங்கு நேரும் என்பதற்குச் சான்றுகளாக, மார்கழி, புரட்டாசி, பங்குனி, ஆனி முதலான மாதங்களில் நடந்த தீமையான புராண நிகழ்வுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### வாஸ்து அறிந்தபின் செய்வன

மனைதனில் வந்து நின்று
வாஸ்துவின் நிலைய றிந்து
வினவியும் அவ்வி டத்து
மேவியே முகூர்த்தம் செய்யக்
கனமெனும் மண்ணை வெட்டுங்
கருதிய குழியிற் குள்ளே
இனமெனும் சயனம் காணும்
இயலது விளம்பு வேனே. 288

*(742 : 56)*

*(இ. ள்)* மனையில் வந்து நின்று வாஸ்து புருஷனது நிதானத்தைச் செவ்வையாய்க் கண்டு அவ்விடத்தில் முகூர்த்தஞ் செய்யும் தருணத்தில் காண்கின்ற சகுன நன்மை தீமை என்னவென்று சொல்லுகிறேன்.

# 10. வீட்டின் அமைப்பு

## ஊரில் வீடு அமையுமிடம்

அந்தணர் தென்திசை அரசர் மேல்திசை
வந்திடும் வணிகர் வடதிசை யாகுமே
தொந்தமில் கீழ்த்திசைச் சூத்திரர்க் காகுமே
தந்திடும் நடுவது பிரமன் தானமே.[1] 289

*(742 : 80)*

*(இ. ள்)* அந்தணர்கள் தெற்குத்திசையிலும் அரசர்கள் மேற்குத் திசையிலும் வணிகர்கள் வடக்குத் திசையிலும் வேளாளர்கள் கிழக்குத் திசையிலும் குடியிருக்க வேண்டும். அவ்வாறு குடியிருந்தால் செல்வம் பொருந்தி வாழ்வார்கள். ஊரின் நடுவாகிய பிரமஸ்தானத்தைக் கோவிலுக்கும் அம்பலத்திற்கும் இடமாகவிட சிறப்பாக இருக்கும்.

## மனையின் அமைப்பு

அகந்தனை எல்லை நான்கு
அன்புடன் செய்துகொண்டு
திகழ்ஒரு ஆறு பத்து
நாலுடன் பாகம் செய்து
பகரவே பிரமஸ் தானம்
மத்தியில் நாலு பாகம்
சுகமுயர் திக்கு நான்கும்
ருத்திர பாகம் தானே. 290

*(742 : 74)*

*(இ. ள்)* மனையை நான்கு பக்கமும் அளந்துகொண்டு அறுபத்து நான்கு பாகம் செய்து, மத்தியில் நான்கு பாகங்களும் பிரமஸ்தானம். நான்கு திக்கும் உத்திர பாகம் இப்படிச் சொல்ல வேண்டும்.

குறிப்பு : 64 பாகங்களில் மனையின் நடுவில் உள்ள நான்கு பாகங்களும் பிரமஸ்தானம். நான்கு திக்கும் உத்திர பாகம் இப்படிச் சொல்ல வேண்டும்.

---

1. இந்த விதமும் இயம்பலுற் றேனே.

### இதுவுமது

மத்ததோர் திக்கு நான்கு
வகையுடன் சொல்லக் கேளாய் !
வித்தக னான விஷ்ணு
பாகமாம் விளம்பக் கேளு
சித்தமாங் குறைக ளெல்லாம்
தேவதை பாகம் என்னும்
சுத்தமாம் தமிழை ஓதும்
சுகமயன் சொன்ன வாறே. 291

*(742 : 75)*

*(இ. ள்)* மற்ற திசைகள் நான்கும் விஷ்ணு பாகங்களாகும். மற்றவை தேவர்களது பாகம் என்று மயனென்பவர் அனைவருக்கும் எடுத்துரைத்துள்ளார்.

குறிப்பு : *மனையின் 64 பாகங்களில் நான்கு திசைகளிலும் உள்ள எட்டெட்டுப் பாகங்களான (8 X 4 = 32) முப்பத்து இரண்டு பாகங்கள் விஷ்ணு பாகம் எனப்படுவதாகும். மற்றுள்ள பதினாறு பாகங்கள் தேவர்களது பாகங்கள் எனப்படுவ தாகும்.*

### மனையின் அமைப்பு-மாற்றுக் கருத்து

நாட்டும் புகழ்சேர் மனையதற்கு
நலங்கொள் எட்டெட் டறைசெய்து
வீட்டு நடுவில் நாலறையும்
விரிஞ்சன் மூலை நாலும்பேய்
ஈட்டும் திசைகள் ஒருநான்கும்
இருநான் கறையும் இறையவராம்
கோட்டு நாற்பத் தெட்டரையும்
குணமாய்க் கொள்வாய் கொம்பனையே ! 292

*(886 a : 130)*

*(இ. ள்)* வீடுகட்டத் தேர்ந்தெடுத்துள்ள நிலத்தை அறுபத்து நான்கு அறைகளாகச் செய்து நடுவில் உள்ள நான்கு அறைகள் பிரமஸ்தானமாகும். அதையடுத்த மூலை நான்கு அறைகளில் பேய்கள் காவலாகும். அதனையடுத்து நான்கு திசைகளில் உள்ள எட்டறைகளில் தேவர்கள் காவலாகும். மற்ற நாற்பத்தெட்டு அறையும் குடிகளுக்காகும்.

## இதுவுமது

இடுமனை ஒன்றி னுக்கு
எட்டெட்டாம் அறையைக் கீறில்
நடுவது பிரமத் தானம்
நான்குமூ லையுமே பேய்க்காம்
அடைவிலே எட்டும் தேவர்
ஆகுவார் நாற்பத் தெட்டும்
குடிபலர்க் காகு மென்று
கூறினார் மயனூல் வல்லார். 293

*(சி. நூ. பா. : 87)*

## இதுவுமது

தரணியில் புவியில் மனைக்கு மோயட்
டெட்டறை தனையாகச் செய்து
வருணனை நினைத்து ஊருக்குள் மூலை
வகுத்துச் சொல்பேய் எனவே
பரவணி நடுவில் தேவதை பிரமத்
தானமென் றுரைத்திர அறிந்து
மரணமென் றறிவீர் மூலைகள் தானம்
மைந்தரவர்க் குச்செந் தமிழோர். 294

*(796 : 1)*

## மனை அமைப்பு

அண்டத்துக் கொத்த நேர்மை
அருளிய பிண்ட மாகும்
பிண்டத்துக் கொத்த நேர்மை
பெருகிய கிரக மாகும்
கொண்டநேத் திரமும் நாசி
கூறிய கரங்கா லோடு
விண்டுய குந்தி சென்னி
மேவிய துவார மாமே. 295

*(742 : 76)*

*(இ. ள்)* அண்டத்துக் கொத்தபடி பிண்டம். பிண்டத்துக் கொத்தபடி வீடு. கர, சரணாதிகளோடுங் கூடி விளங்கியது கிரகம்.

### பிரமஸ்தானத்தில் வீடுகட்ட-பலன்

தேவதைத் தானத்தில் மனையெ டுக்க
திரேகத்தில் நோய்பிணி அணுகும்
ஆவது அழியும் ஆடுகள் மாடு
அகன்றிடும் மனையத னாலே
நாவது பூவை பூமிகள் அழியும்
நன்றல்லாத் தீத்தொழில் அழியும்
காவலால் விலங்கும் கட்டும் ஓட்டுவான்
கட்டிடும் அவர்க்குச்செந் தமிழோர். 296

***(796 : 2)***

*(இ. ள்)* பிரமஸ்தானம் என்னும் தேவதை ஸ்தானத்தில் வீடுகட்ட, அவ்வீட்டில் வாழ்பவர்களுக்கு நோய்கள் வந்து சேரும், பொருள் அழிவு உண்டாகும். ஆடு மாடு முதலான கால்நடைகள் இறந்து போகும். அவ்வீட்டிலுள்ள பெண்கள் மரணமடைவர், நிலம் கையை விட்டுப் போகும். தீத்தொழில் செய்ய நேரிடும். செல்வம் அழியும். மன்னனால் துயரத்திற்கு ஆளாக வேண்டிவரும். விலங்குகளை விரட்ட நேரிடும்.

குறிப்பு : பிரமஸ்தானம் என்பது வீடு கட்ட உள்ள இடத்தை அறுபத்து நான்கு கூறுகளாக்கில் நடுவில் உள்ள நான்கு பாகங்களாகும்.

### பேய்த்தானத்தில் வீடுகட்டப் பலன்

பேய்துஷ் தானம்தனில் மனையெ டுக்க
பிறந்திடும் சிசுவுகள் அரிஷ்டம்
தாயது தந்தை கன்றுகால் நடைகள்
தாட்டியே வீடுமனை யாட்டி

வாயதில் சேதம் வருகுமே வினைகள்
வறுமையால் தரித்திர முறுமே
காயமே றவிலும் கஷ்டங்கள் எனவே
கருதினார் அவர்க்குச்செந் தமிழோர். 297

*(796 : 3)*

*(இ. ள்)* பேய்ஸ்தானம் எனப்படும் பேய்ப்பாகத்தில் வீடுகட்ட, அவ்வீட்டில் பிறக்கும் குழந்தைகள் இறக்கும், தாய், தந்தை, இறப்பர். ஆடு, மாடு முதலான கால்நடை களுக்கு அழிவு நேரிடும். வீட்டில் வாழும் மனைவிக்கு மரணம் உண்டாகும். தீவினைகள் வந்து சேரும், வறுமை மிகுதியாகும். உடலின் பல நோய்கள் வந்து சேரும். துன்பங்கள் மிகும்.

**மனையின் அமைப்பும் பயனும்**

இந்தநல் விதமாய்ச் செய்தால்
இயல்பது வயது நூறாம்
செந்திரு என்னும் மாது
திகழ்பிர காச மாவள்
சந்ததி கன்று காலி
தக்கதோர் செம்பொன் சேரும்
இந்துமா முகத்தி னாளே
இதன்பயன் மயன்சொன் னாரே. 298

*(ம. நூ. பா. : 294)*

*(இ. ள்)* பிரமஸ்தானம் பேய்ஸ்தானம் ஆகியவற்றை நீக்கி, வீடு கட்டினால் அதற்கு வயது நிதானம் நூறு. கன்றுகாலிகள், கறவைப் பசுக்கள் இவை நாளுக்குநாள் விருத்தியாவதும் அன்றி, அந்த வீடு தாமரைக் கமலத்தில் வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்ததாண்டவம் புரிய விளங்கியிருக்கும்.

**வீட்டின் அமைப்பு**

இந்திரன் கிழக்கில் போகம்
இரவியில் அசனம் கொள்ள
அந்தகர் தெற்கு ஆடை
அருநிரு தியில்தண் ணீராம்

வந்தகர் வருணன் பூசை
வாழ்வில் தானி யங்கள்
இந்தகர் குபேரன் அத்தம்
ஈசானம் மக்கள் பேறே. 299
(742 : 78)

(இ. ள்) வீட்டில் இந்திரன் மூலையாகிய கிழக்குத் திசையில் போகம் செய்வது. அக்கினி திசையாகிய தென்மேற்கு மூலையில் உணவை உண்ணுவது. எமன் திசையாகிய தெற்கு திசையில் ஆடைகளைக் கொண்டுவந்து வைப்பது. நிருதி மூலையாகிய தென்மேற்கு மூலையில் தண்ணீர் கொண்டுவந்து வைப்பது. வடக்குத் திசையாகிய குபேர திசையில் பணத்தைச் சேகரித்து வைப்பது. ஈசான்ய மூலை எனப்படும் வடகிழக்கு மூலையில் பிள்ளைபேறு நடத்துவது முதலான செயல்களைச் செய்ய வேண்டும்.

### உறவினர்கள் மனையில் தங்கும் இடங்கள்

தன்குலத் தோர்கள் நவிலுநா யகனும்
தன்பெறு கிளையுளோர் மூத்தோர்
தென்திசை யவர்கள் திருந்திய மேற்கு
சேய்குடி இருக்கவும் தீதாம்
பொன்குல வவரைத் தெற்கினில் வைத்துப்
பொருந்திய வடகிழக் கிருந்தால்
இன்மைசேர் பொருளும் சுகத்தையும் கொடுக்கும்
இயல்மனை உரைத்தது இதுவே. 300
(742 : 82)

(இ. ள்) தன் குலத்தில் பெரியவர்களுக்கும் குருக்களுக்கும் தாய் தந்தையருக்கும், தன் உறவினர்களுக்கும் தன்னைக் காட்டிலும் மூத்தோர்க்கும் தங்குமிடத்தைத் தெற்குத் திசையில் அமைத்து மனைக்கு உரியவன் மேற்குத் திசையில் இருக்க, மிகவும் கெடுதியாகும். அவர்களைத் தெற்கு திசையில் வைத்து, மனைக்கு உரியவன் வடக்குத் திசையில் இருக்க, மிகுந்த சுகத்தைக் கொடுக்கும். எட்டு வகையான செல்வங்களும் சேரும்.

## இதுவுமது

நன்குலம் அவர்க்கும் நவில்நாய கனுக்கும்
தன்கிளையின் மூத்தவர் தனக்குமனை யில்தான்
தென்திசை மேற்றிசை இருப்புறின் நசிக்கும்
பொன்குலவு மேலையவை பூதலம் அவர்க்கே. 301

*(1005 a)*

*(இ. ள்) தன்னில் பெரியவர்களுடனும் குருக்களுடனும் தாய்தந்தையருடனும், சுற்றத்தாருடனும் தன்னைக் காட்டிலும் வயதில் மூத்தவருடனும் சேர்ந்து வசிக்கும் பொழுது, மனைக்கு உரியவன் அவர்கள் தங்கியுள்ள திசைக்கு தெற்கு, மேற்கு முதலான திசைகளில் இருப்பின் அழிவுண்டாகும். அவர்களைத் தெற்கு, மேற்கு முதலான திசைகளில் வைத்து, மனைக்குரியவன் வடக்கு, கிழக்கு முதலான திசைகளில் இருக்க, சுகத்தைக் கொடுக்கும்.*

## வீட்டின் அமைப்பு

இயற்றுவட கீழ்த்திசை யடுக்களை அமைப்பாம்
பயிற்றரு கிழக்கதனில் ஆடுகளை வைப்பாம்
செயிற்றெரிய அக்கினியில் சேமமது வைக்கப்
பயிற்பட மொழிந்தபடி பார்த்திடுதல் நன்றே. 302

*(1005 b)*

*(இ. ள்) மனையின் வடகிழக்குத் திசையில் தண்ணீர்விட சால் வைக்கவும் வேண்டும். கிழக்குத்திசையில் ஆட்டுத் தொழு வைக்க வேண்டும். தென்கிழக்கான அக்கினி மூலையில் சேமம் வைக்கவேண்டும். அவ்வாறு செய்ய மனைக்கு உரியவனுக்குத் துன்பம் வராது இன்பத்தைக் கொடுக்கும்.*

குறிப்பு : *அடுக்களை - மண்பாண்டம் (நீர் வைக்கும் சால் முதலியன)*

## வீடு புற அமைப்பு

தெற்கினிற் குப்பை நிருதியில் வைக்கோல்
திருந்திய மேற்கில் எருமை
தக்கதோர் தொழுவம் வாயுவின் மூலை
தகைமைசேர் தானியம் இடுவாம்
மிக்கதோர் குபேரன் வடக்கினில் பசுவின்
மேவிய தொழுவமும் அதுவாம்
இக்கரு வுடனே கட்டளை யாக
இயம்பிய மயனுரை இதுவே. 303

*(742 : 83)*

*(இ. ள்)* இருந்த மனைக்குத் தெற்கில் குப்பை கொட்ட வேண்டும். தென்மேற்கு மூலையில் வைக்கோல் போர் அமைக்க வேண்டும். மேற்கு பாகத்தில் எருமைத் தொழுவம் அமைக்க வேண்டும். வடமேற்கு மூலையில் தானியங்கள் சேகரித்து வைக்க வேண்டும். குபேரன் திசையான வடக்கு பாகத்தில் பசுவின் தொழுவத்தை அமைக்க வேண்டும்.

## இதுவுமது

தெற்கிலிடு குப்பைதிகழ் நிருதியிடு வைக்கோல்
விறகுமேல் திசைஎரு மைத்தொழு வைத்து
மறக்கொள் வடமேற்கு மச்சுடன் களஞ்சியம்
புறக்கடை வடக்கது பசுத்தொழு உண்டே. 304

*(1005 b)*

## இதுவுமது

நன்றாம் கிழக்கு முதலெட்டும்
நல்லான் தெற்குத் தொழுகுப்பை
குண்டாம் படப்பை எருமைநிலை
தொழநெற் கூடு நீரிச்சால்
உண்டாம் மனைக்குக் கிணறுகீழ்
ஈசான மதில்நீர் ரெழுகிழவன்
நண்டின் கதிர்மேல் நீட்டியெதிர்
த்லைவைத் திடின்கீழ்த் தான்கிடக்கும். 305

*(886 a : 177)*

(இ. ள்) மனைக்குக் கிழக்கே - ஆட்டுத்தொழு, தென்கிழக்கு - பசுத்தொழு, தெற்கு - குப்பை, தென்மேற்கு - தோப்பு, மேற்கு - எருமைத்தொழு, வடமேற்கு - நெல்கூடு, வடக்கு - பசுத்தொழு, வடகிழக்கு கிணறு. நீரெழுகிழவன், கடக இராசியில் சூரியன் வரும்பொழுது காலை நீட்டி, எதிரே தலைவைத்துக் கிடக்கும்.

### நீர்போக்கு

முத்தத்து நீர்கள் போக்கும்
முறைமையைச் செல்லக் கேளு
கொத்தயிந் திரன்தன் மேலும்
குளிர்குடை ஈசன் மேலும்
சுத்தமாம் சோமன் மேலும்
சொல்லிய நீர்ப்போக் காகும்
மத்ததோர் திக்கி லேதான்
மனையினில் போக லாகா. 306

*(886 a : 216)*

(இ. ள்) முற்றத்து நீரை வெளியேற்ற கிழக்குத் திசையிலும், வடமேற்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் நீர்ப்போக்கு அமைக்க வேண்டும். மற்ற திசைகளில் நீர்ப்போக வழி அமைக்க கூடாது.

### இதுவுமது!

இல்லறமே செய்ய இருமனையும் ஆகாது
வல்லபமாய்ச் சலதாரை வடக்கேவிடு-இல்லாவிட்டால்
மேற்கும் கிழக்கும் மெதுவாய்ப் பலனாகும்
ஆர்க்கும் தோற்காதென் றறி. 307

*(886 c: 49)*

(இ. ள்) இரு வீடுகளில் இல்லறம் செய்தல் ஏற்புடைய தன்று. வீட்டு நீரை வெளியேற்றும்போது வடக்கு, கிழக்கு, மேற்கு திசைகளில் விடவேண்டும்.

### உயர்த்தித் தாழ்த்திக் கட்டுதல்

வரும்பெரும் செல்வம் கல்விமென் மேலும்
வளர்தரு மனைவிமக் களும்சீர்
கருபல பலவாம் தானியம் முதலாய்ச்
சார்ந்திடும் எண்வகைச் செல்வம்
பெரும்புகழ் மேன்மை சோபனம் சுகங்கள்
பெருகிய ஆயுளும் வளமும்
அரும்பிளந் தையலாய் ! சிற்பநூற் புலவோர்
ஆய்ந்துரைத் திடும்பலன் இதுவே. 308

*(886 b : 53)*

*(இ. ள்)* கிழக்கு, தெற்கு ஆகிய திசைகளில் தாழ்த்தியும், மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் உயர்த்தியும், வீட்டைக்கட்ட பெருஞ்செல்வம் சேரும். கல்வி மேன்மேலும் பெருகும். மனைவி, மக்கள் சிறப்படைவர். தானியம் முதலான எட்டு வகையான செல்வங்களும் கிட்டும். பெரும்புகழ் உண்டாகும். வாழ்க்கையில் உயர்வு கிட்டும். சுகம் பெருகும். தீர்க்காயுள் கிடைக்கும். சிற்ப நூலோர் ஆராய்ந்து வைத்த பலன் இது என்பதைப் பெண்ணே ! நீ அறிவாயாக.

### வேறு

மேல்பால் மனையோங் கியுயர்ந் துளதாய்
கீழ்பால் மனைவி ழுந்துதான் பணிய
தாழ்வே துமில்லா தனங்கள் தான்தரும்
ஏழ்பா ரிலுமெங் கும்எடுத் தனரே. 309

*(1005 b)*

*(இ. ள்)* மனையின் மேற்கு உயர்ந்து கிழக்குப் பகுதி தாழ்ந்திருக்க நன்மையாகும். செல்வம் மிகுதியாகக் கிடைக்குமென்று ஏழுலகிலும் எங்கும் மனை எடுத்தார்கள்.

## இதுவுமது

கருடனே கிழக்காம் தெற்கினில் சிங்கம்
கருதிய மேற்கினிற் சர்ப்பம்
மருவிய வடக்கில் யானையாம் யோனி
வழங்கிடும் திசைகளென் றறிந்து
கருடனும் சிங்க யோனியும் தாழ்த்திக்
கரியொடு சர்ப்பமும் உயர்த்தி
பெருகிய வீடு கட்டிட வேண்டும்
பேசிய இதன்பலன் கேள்மின்! 310

*(886 b : 54)*

*(இ. ள்) யோனிகளில், கருடன்-கிழக்கு, சிங்கம்-தெற்கு, பாம்பு-மேற்கு, யானை-வடக்கு என்பதை அறிந்து கொண்டு, மனையில் கிழக்கு, தெற்குத் திசையைத் தாழ்த்தி, மேற்கு, வடக்குத் திசையை உயர்த்தி வீடு கட்டவேண்டும்.*

## 11. வீட்டின் அளவு

### வீட்டின் நீள அகலங்களும் பலன்களும்

மனைதனை அளந்து வைத்து
மகிழ்ச்சியாய் வாழ்வோர்க் கெல்லாம்
வினையில்லாச் சாத்தி ரத்தை
விளம்புவேன் **சொல்லக்** கேளும்
பனைநரி குடிபாற் **போலப்**
பாரினில் மயங்க வேண்டாம்
முனைமணி பூண்ட தந்தி
முகவனுங் காப்ப தாமே. 311

*(ம. நூ. பா. : 67)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைத் தேர்ந்தெடுத்து வீடு கட்டும்முறையினைச் சொல்லக் கேட்பாயாக! பனங்கள் குடித்த நரியைப் போன்று மனக்கலக்கம் இன்றி, இந்நூலினில் கூற, விநாயகன் காப்பாக அமைய வேண்டும்.*

### இதுவுமது

ஆரிய மறைகள் தன்னில்
அனைவர்க்கும் உதவி யாக
பார்புகழ் முகுந்தன் மைந்தன்
பங்கையன் வகுத்த நூலும்
தாரணி உமையோர் பாகன்
சதாசிவன் சொன்ன நூலும்
சீர்பெற ஆய்ந்து பார்த்துச்
செழித்திட மனைகோல் வாயே. 312

*(ம. நூ. பா. : 68)*

*(இ. ள்) வடமொழியிலுள்ள வேதங்களில் அனைவரும் பயன்பெறும் பொருட்டுத் திருமாலின் மைந்தனான பிரமன் வகுத்த நூலையும், உமையவளைத் தன் உடலில் ஒரு பாகத்தே கொண்டிருக்கக் கூடிய சிவபெருமான் சொன்ன நூலையும் ஆராய்ந்து வீட்டின் நீள அகலங்களைக் கணக்கிட்டு, வீடு கட்ட வேண்டும்.*

## மனைகளின் அளவு அறைகளின் அளவு போன்றவற்றிற்குப் பலன்

அவனவன் காலி னாலே
அளந்துகா லடியும் எண்ணிக்
கவனமாய் அகல நீளம்
கணக்கது கண்டு தானே
புவனிமேல் வீடு கட்டப்
பொருத்தமுள் ளளவு வைத்துச்
சிவனுமைக் குரைத்த தோர்நற்
சிற்பசாத் திரமீ தாமே. 313

*(இ. ள்)* உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அவனுடைய காலடியால் அளந்த காலடி எத்தனையென்று அகலமும் நீளமும் கணக்கிட்டுக்கொண்டு இத்தனையடிக்கு நல்ல பொருத்தம் உள்ளதென்று அறிந்து, அடியளந்து வீடுகட்டே மிகவும் நன்மை உண்டாகுமென்று ஓர் சிற்ப சாஸ்திரம் இதுவானதால் இதில் கண்டவண்ணம் மாடகூட மாளிகைகள் கட்ட உத்தமம். *(சி. நூ. பா. : **415**)*

ஒன்றுடன் இரண்டு மூன்றோ
டோன்குநான் கைந்தி னுக்குள்
நன்றுகொட் டகைதாழ் வாரம்
நடைவழி அமையச் ,செய்யில்
நன்றுபாற் பசுவி ருத்தி
நன்தனம் தீர்க்க வாயுள்
என்றுமே நன்மை யென்றே
இயம்பினார் ஈசன் தானே. 314

*(இ. ள்)* ஓரடி, ஈரடி, மூன்றடி, நான்கடி, ஐந்தடிக்குள் எத்தனையடியாக இருந்தாலும் கொட்டகை, தாழ்வாரம், நடைவழி முதலியன செய்யில் நன்மையாம். அதன் பலன், கன்றுகாலி விருத்தியும், பால் பாக்கிய விருத்தியும், தனதானிய விருத்தியும், ஆயுள் விருத்தியும் எந்நாளும் நன்னாளாய் நன்மையுண்டாம் என்று ஈசன் உரைத்ததாம். *(சி. நூ. பா. : **416**)*

## ஆறடிக்குப் பலன்

ஆறடி அகல நீளம்
அமைத்திடும் வீட தாகில்
சோறடி தானி யங்கள்
சுகமுநற் பாக்கி யங்கள்
சேறடி மனையாள் க்ஷேமம்
செல்வமும் மிகுதி யாகும்
வீறடி விமலை யாலே
மேன்மைசேய் விருத்தி யுண்டே. 315

*(இ. ள்) ஆறடி அகல நீளம் அமைந்து இருந்தால், இலட்சுமி கடாட்சத்தால் தானியப் பெருக்கம் உண்டாகும். தன் மனைவி மக்கள் நலமுடன் சுகம் பெறுவர். தனமென்னுஞ் செல்வச் சிறப்பும் மிக்க விருத்தியாய்ச் சல பாக்கியம் உண்டாகியிருக்கும். (சி. நூ. பா. : 417)*

ஏழடி முழமும் ஆகில்
எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் மிக்க நோய்தான்
வந்தவர் தன்னைக் கொல்லும்
தாழ்வில்லா விபர மாகச்
சரஸ்வதி சொன்ன நூலால்
ஊழ்வினை தீரா திந்த
உற்றதோர் வேதம் பாரீர் ! 316

*(ம. நூ. பா. : 69)*

*(இ. ள்) ஏழு முழ நீள அகலமாகில், நினைத்த காரியங்கள் அனைத்தும் தீங்காகும். மனைக்குரியவனை நோய் வந்து வருத்திக் கொல்லும். விரிவாக சரஸ்வதி சொன்ன நூலிலிருந்து அறியலாகும். இந்தத் தீவினையை எடுத்துரைக்கும் வேதங்களைக் காண்பீர்களாக.*

**(வேறு)**

ஏழடி அகல நீளம்
எண்ணியே அமைப்பா ராகில்
தாழவே பொருளும் ஏழும்
தரித்திரம் மிகவுண் டாகும்
ஊழதால் வினையும் உண்டாம்
உறவுளோர் பகையு மாகிப்
பாழதாய்ப் போகு மென்றே
பரமனும் உரைசெய் தாரே. 317

*(சி. நூ. பா. : 418)*

*(இ. ள்) ஏழு முழ நீள அகலமாகில், பொருள் கையை விட்டுப்போகும். தரித்திரம் உண்டாகும். ஊழ்வினையின் காரணமாகத் தீவினைகள் உண்டாகும். உறவு உடையவர்கள் பகையாவார்கள். அனைத்தும் அழிந்துபோகுமென்று சிவபெருமான் எடுத்துரைத்துள்ளார்.*

## எட்டடிக்குப் பலன்

எட்டடி அகல நீளம்
எண்ணிய கருமம் நன்று
துஷ்டனும் வருவ தில்லை
தூரத்தே அகன்று நிற்பான்
பட்டிட்ட மரம்து ளிர்க்கும்
பாக்கியம் மெத்த உண்டாம்
வட்டமாம் குழலி னாளே !
மயேசுரன் சொன்னார் பாரே. 318

*(ம. நூ. பா. : 70)*

*(இ. ள்) எட்டடி நீள அகலமானால், எண்ணிய செயல்கள் அனைத்தும் இனிதாக நிறைவேறும். பகைவர்கள் நெருங்காது விலகி நிற்பர். பட்டமரம் என்று கருதப்பட்ட மரம்கூட தளிர்த்து நன்மையைத் தரும். மிகுந்த பாக்கியங்கள் உண்டாகும் என்று சிவபெருமான் எடுத்தோதியுள்ளார்.*

### வேறு

எட்டடி அகல நீளம்
இசைந்துவீ டெடுப்பா ராகில்
துட்டநிக் கிரகம் உண்டாம்
சுதன்பெறு மனைவி யுண்டாம்
மட்டிலாச் செல்வம் ஓங்கும்
மைந்தராற் பதவி யுண்டாம்
பட்டதோர் மரம்து ளிர்க்கும்
பாக்கியம் மிகவுண் டாமே. 319

*(சி. நூ. பா. : **419**)*

### ஒன்பது அடிக்குப் பலன்

ஒன்பது அகல நீளம்
ஓங்கிடில் உயிரும் போகும்
ஐம்பது வயதும் ஆகும்
ஆயிழை தனக்குச் சாவாம்
சம்புவே பார்த்துச் சொன்னார்
சலிப்புகள் மெத்த உண்டாம்
வம்பது செய்ய வேண்டாம்
மறையவர் நூலைப் பாரீர். 320

*(ம. நூ. பா. : **71**)*

*(இ. ள்)* ஒன்பதடி அகல நீளமானால் ஐம்பது வயதில் மரணம் நேரிடும். மனையாள் தனக்கும் மரணம் நேரிடும். மனச் சலிப்பு நேரும்படியாகத் துன்பங்கள் மிகுதியாகத் தோன்றும். யாரிடமும் சண்டைக்குச் செல்லக் கூடாது என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

### வேறு

ஒன்பதாம் அகல நீளம்
ஓங்கிடில் உயிரும் சேதம்
அன்புடன் அதனில் வாழ்ந்தால்
அருங்குடி நசிந்துப் போகும்

இன்பமெந் நாளும் இல்லை
எவர்களும் சலிப்பாய்ச் சொல்வர்
முன்புள பொருள்போம் என்றே
முக்கண்ணன் இயம்பி னாரே. 321

*(சி. நூ. பா. : 420)*

*(இ. ள்)* ஒன்பதடி அகல நீளமாகில், உயிருக்குச் சேதம் உண்டாகும். இவன் குடு நசிந்துப் போகும். இன்பம் எந்நாளும் இல்லை, அனைவரும் சலிப்பாய்ப் பேசுவார்கள். இதுவரை சேர்த்து வைத்தப் பொருள்கள் கைவிட்டுப் போகும்.

### பத்தடிக்குப் பலன்

பத்துமே அகல நீளம்
பரிவுடன் வைத்த வர்க்குக்
கொத்துடன் ஆடு மாடு
குறைவில்லா வாழ்வுண் டாகும்
மெத்தவே பாலும் சோறும்
வேளாண்மை மிகுதி யாகும்
அத்தனார் அருளிச் செய்தார்
ஆராய்ந்து நூலைப் பாரீர்! 322

*(ம. நூ. பா. : 72)*

*(இ. ள்)* பத்தடி நீளமாகில், ஆடு, மாடு முதலான கால்நடைச் செல்வங்களுடன் அனைத்துச் செல்வங்களும் மிகுந்து வளமான வாழ்க்கை உண்டாகும். பயிர்த்தொழில் விளைச்சல் மிகுதியாகும் என்று சிவபெருமான் கூறியுள்ள நூலை ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்வீர்களாக!

### பதினொரு அடிக்குப் பலன்

பத்துடன் ஒன்ற தாகிற்
பலனது சொல்லக் கேளாய்!
அத்தமும் நகையும் உண்டாம்
அசனமும் மிகுதி யுண்டாம்

சத்துரு விலகிப் போவார்
சங்கரன் கிருபை யுண்டாம்
மெத்தவே பாக்கி யங்கள்
மென்மேலும் பெருகி வாழ்வாம். 323
*(சி. நூ. பா. : 422)*

(இ. ள்) பதினொரு அடி நீள அகலமானால் செல்வமும் ஆபரணங்களும் மிகுதியாகச் சேரும். நல்ல உணவு கிட்டும், பகைவர்கள் விலகிப் போவார்கள். பாக்கியங்கள் அனைத்தும் கிட்டும். வளமான வாழ்க்கை உண்டாகும். சிவனருள் கிட்டும்.

## பன்னிரண்டு அடிக்குப் பலன்

பத்துமே இரண்டு மாகில்
பரிவுடன் சொல்லக் கேளும்
தத்துமே செல்வம் எல்லாம்
தரணியில் இருப்ப தில்லை
சற்றுநீ பாரா யானால்
சதுரமும் குலைந்து போகும்
வைத்துமே கூறு போல
வருத்தமும் மெத்த உண்டே. 324
*(ம. நூ. பா. : 73)*

(இ. ள்) பன்னிரண்டு அடியானால், செல்வம் அனைத்தும் கையை விட்டுப் போகும். மனைக்குரியவனின் திறமைகள் அனைத்தும் வீணாகும். மிகுந்த வருத்தம் உண்டாகும்.

## வேறு

ஈராறு அடிய தாகில்
இன்பமும் சுகமும் இல்லை
பேராரும் பிணியி னாலே
பெண்டுபிள் ளைகளும் நைவார்

வாராத ஆபத் தெல்லாம்
வந்திடும் பொல்லாப் புண்டாம்
மாறாத கலக்க மென்றே
வழுத்தினார் அரனும் தானே. 325

*(சி. நூ. பா. : 423)*

*(இ. ள்)* பன்னிரண்டடி அகல நீளமாகில், இன்ப சுகங்களெல்லாம் இழந்து வியாதியால் துன்புற்று தேகம் மிக மெலிந்து, பெண்டு பிள்ளைகள் திண்டாட்டமாய் வாட அவர்களால் இடையூறும் பொல்லாப்பும் உண்டாகி வருந்துவான்.

### பதிமூன்றடிக்குப் பலன்

ஏழுடன் உறும்ஆ றானால்
எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் இருந்த பேர்க்கும்
வந்தவர் பகையே யாவர்
சூழவே தொல்லை உண்டு
சுற்றத்தார் அற்றுப் போவார்
தாழ்வது மெத்த உண்டு
சங்கரர் சொன்னார் பாரே. 326

*(ம. நூ. பா. : 74)*

*(இ. ள்)* பதிமூன்றடி அகல நீளமானால், எண்ணிய காரியங்கள் அனைத்தும் தீங்காகும். நன்றாக வாழ்ந்தவர்க்கு அனைவரும் பகையாவார்கள். மிகுந்த துன்பங்கள் உண்டாகும். உறவினர்கள் அழிந்து போவார்கள். தாழ்வுகள் உண்டாகும் என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

### வேறு

ஏழுடன் ஆற தாகில்
எண்ணிய கருமம் தீதாம்
தாழ்வுடன் செல்வம் போகும்
தரித்திரம் மிகவுண் டாகும்

வாழ்வுடன் மக்கள் நோயாம்
மகிழ்ச்சிஎந் நாளும் இல்லை
பாழ்படு மென்றே ஈசன்
பகவதி இயம்பி னாரே. 327

*(சி. நூ. பா. : 424)*

*(இ. ள்) பதிமூன்றடி அகல நீளமாகில், நினைத்த காரியம் முடியாமல் தாழ்வு பெற்றுச் செல்வத்தை இழந்து, தரித்திரமுண்டாகிப் பெண்டு பிள்ளைகள் பிணியால் தேகம் மெலியத் துன்பப் படுவதோடு அம்மனையும் பாழ்படும்.*

### பதினான்கு அடிக்குப் பலன்

எட்டுமே ஆறு மானால்
இன்பமும் இல்லை கண்டாய்
நட்டமும் உயிர்க்கு ஈனம்
நலமில்லை நாதர் சொன்னார்
கெட்டியாய் இந்த நூலைக்
கேவலம் பண்ண வேண்டாம்
சட்டமாய்ப் பாரும் பாரும்
சாத்திரம் வேறே வேண்டாம். 328

*(ம. நூ. பா. : 75)*

*(இ. ள்) பதினான்கடி அகல நீளமானால், இன்பம் கிட்டாது. மனைவி, மக்கள் அழிவர். கால்நடைகள் போன்றவற்றிற்கு அழிவு உண்டாகும் என்பதை இந்த நூலைப் புறம் தள்ளாது அறிந்து கொள்வாயாக. இதனையன்றி, வேறு நூல்களைக் கற்க வேண்டியது இல்லை.*

### வேறு

எட்டுடன் ஆறு மாக
இயல்மனை கோலு வானேல்
தட்டுமுட் டெல்லாம் தோற்றும்
தரித்திரம் மிகுதி யாகும்

பட்டுடன் பணிகள் போகும்
　　　　பைந்தொடி வேசி யாவாள்
கட்டிடும் பெண்டி ழந்தே
　　　　கவலையுற் றிருப்பான் பாரே. 329

*(இ. ள்) பதினான்கடி அகல நீளமாகில் தட்டுமுட்டு களாகிய பண்ட பாத்திரங்களும் தோற்றுத் தரித்திர மிகுதியால், பட்டு வஸ்திரங்களையும், அணிகளாகிய ஆபரணங்களையும் தாலி கட்டிய மனைவியினையும் பிறர்பால் கொடுத்துக் கவலையுற்றிருப்பான். (சி. நூ. பா. : 425)*

### பதினைந்து அடிக்குப் பலன்

மூவைந்து அடிய தாக
　　　　முடித்திடல் ஆகா தென்றும்
நோயினால் மரணம் செய்யும்
　　　　நோக்கிய கருமம் தீதாம்
பாவமும் வந்து நிற்கும்
　　　　பாக்கியம் சேரா தென்றும்
நாவினில் ஊறுகின்ற
　　　　நாயகி தனக்குச் சொன்னார். 330

(ம. நூ. பா. : 76)

*(இ. ள்) பதினைந்தடி நீள அகலமானால், மிகுந்த தீமைகள் உண்டாகும். நோயினால் மரணம் ஏற்படும். செய்த காரியங்கள் அனைத்தும் தீமையில் முடியும். பழி பாவங்கள் வந்து சேரும். பாக்கியங்கள் கிட்டாது என்று நாயகிக்குக் கூறினார்.*

### வேறு

மூவைந்து அகல நீளம்
　　　　முயற்சியாய் வைப்பா ராகில்
தாவந்தம் அதிக மாகும்
　　　　தரித்திரம் மிகவும் உண்டாம்

பாவமும் பழியும் நோயாற்
பாரினில் கிலேச மாகும்
ஆவது வேண்டாம் என்றே
அரனுமைக் குரைத்த வாறே. 331

*(இ. ள்)* பதினைந்தடி அகல நீளமாகில், தாவந்தமாகிய இக்கட்டும், தரித்திரமாகிய வறுமையும், பழிபாவமும், வியாதியால் மெலிந்தலும் மனக்கிலேசமும் உண்டாம். *(சி. நூ. பா. : 426)*

## பதினாறு அடிக்குப் பலன்

பத்துடன் ஆறே யாகில்
பாக்கியம் மிகவும் சேரும்
மெத்தவும் தனயர் உண்டு
மேன்மையாம் வாழ்வும் உண்டு
சத்துரு விலகிப் போவான்
சங்கரர் சொன்ன தைப்போல்
பத்தியாய் அடிமை வந்து
பரிவுடன் தொண்டு செய்வான். 332
*(ம. நூ. பா. : 77)*

*(இ. ள்)* பதினாறடி அகல நீளமானால், மிகுந்த பாக்கியங்கள் வந்து சேரும். புத்திரர்கள் தோன்றுவர். மேன்மையான வாழ்க்கையுண்டாகும். பகைவர்கள் விட்டு வில்கிச் செல்வார்கள். இறைவன் மீது பக்தி மிகுதியும் உடையவனாகத் தொண்டு செய்வான் என்று சிவபெருமான் கூறியுள்ளாார்.

## வேறு

பத்துடன் ஆற தாகில்
பாக்கியம் மிகவும் சேரும்
இரத்தினா பரணம் உண்டு
நற்றொழில் செட்டும் உண்டு

சத்துரு விலகிப் போவார்
சங்கைகள் ஒன்றும் இல்லை
மெத்தவும் அடிமை யுண்டு
வேளாண்மை மிகுதி யாமே. 333

*(இ. ள்) பதினாறடி அகல நீளமாகில், அழியாச் செல்வமும் ஆபரணச் சேர்க்கையும் அடிமையாள் விருத்தியும் சத்ருக்களால் நன்மையும், வியாபார விருத்தியும், வேளாண்மை பலிதமும் உண்டாம். (சி. நூ. பா. : 427)*

### பதினேழு அடிக்குப் பலன்

ஈரைந்தும் ஏழு மாகில்
எதிரியும் வணங்கி நிற்பான்
தாரணி கொன்றை சூடும்
சங்கரர் உதவி செய்வார்
பாரினில் மன்னர் ஆவர்
பாக்கியம் மிகவுண் டாகும்
சீர்கொண்டு வாழ லாகும்
செல்வமும் மெத்த வுண்டாம். 334

*(சி. நூ. பா. : 78)*

*(இ. ள்)* பதினேழடி அகல நீளமானால், பகைவனும் வந்து வணங்கி நிற்பான். சிவபெருமானின் அருள் கிட்டும். பாரில் மன்னராக விளங்குவார். மிகுந்த பாக்கியங்கள் கிடைக்கும். சிறப்பும் செல்வமும் பெற்று உயர்ந்து வாழ்வார்கள்.

### வேறு

ஈரைந்தோ டேழு மாகில்
எதிரியும் வணங்கி நிற்பன்
பாரினில் பெண்டு பிள்ளை
பாக்கியம் ஆக்கம் ஊக்கம்
வீரிய விருத்தி இராஜ
வெகுமதி வித்தை நாளும்
தாரியல் கொன்றை சூடும்
சங்கரர் உதவி யுண்டே. 335

(இ. ள்) பதினேழடி அகல நீளமாகில் ஆக்கமும் ஊக்கமும் அதிக பாக்கியமும், அரசர் வெகுமானமும், மனைவி மக்கள் க்ஷேமமும், மாற்றலர் கண்டால் வந்து வணங்கும்படியான உயர்வுகளும், மிகுந்த வித்தையும் மகாதேவர் உதவியும் உண்டாம். *(சி. நூ. பா. : 428)*

### பதினெட்டடிக்குப் பலன்

எட்டுடன் பத்து மாகில்
இலட்சுமி இருப்ப தில்லை
பட்டுடன் மணிகள்[1] எல்லாம்
பாரினில் விலைய தாகும்
கட்டுவன் காலன் வந்து
காரிழை பிணிய தாவள்[2]
தட்டுதான் செய்யும் என்றே
சங்கரர் சொன்னார் பாரே ! 336

*(சி. நூ. பா. : 79)*

(இ. ள்) பதினெட்டடி அகல நீளமானால், அந்த வீட்டில் வறுமை விளங்கும், வீட்டிலுள்ள பொருள்களை விற்க வேண்டியதாகும். வீட்டுக்குரியவனின் மனைவிக்கு நோயும் மரணமும் நேரிடும். பொருளின்றி வாட நேரிடும் என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

### பத்தொன்பது அடிக்குப் பலன்

ஈரொன்பதும் ஒன்றும் ஆகில்
ஏந்திழை அடியாள் சாவாள்
பாரினில் செட்டுச் செய்யப்
பலியாது தீது மெத்தப்

---

1. பணிதி
2. கட்டுள மனைவி நோயாற்
கலங்குவள் கடனும் உண்டாம்

போருடன் கிலேசம் உண்டு
புத்திரர் மரண மாவார்
மாறுடன் திரிய வேண்டாம்
மகதேவர் சொன்னார் பாரீர்.[1] 337

*(ம. நூ. பா. : 80)*

*(இ. ள்)* பத்தொன்பதடி நீள அகலமானால், வீட்டிற்குரியவனின் மனைவி, பணியாட்கள் மரணமடைவர், பயிர்த்தொழில் செய்ய அழிந்துபோகும். மனதில் கவலை யுண்டாகும். புத்திரர்கள் மரணமடைவார்கள் என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

## இருபது அடிக்குப் பலன்

இருபது அடிய தாகில்
ஏற்றமாம் மனையும் நன்றாம்
பெறுவது ஆணும் பெண்ணும்
பின்பல இன்பம் உண்டு
வருவதும் அசுவ யோகம்
வாணிபம் பலிக்கும் பாரு
திருவுடன் மகிழ்ச்சி செய்யும்
திருச்சடை நாதர் சொன்னார். 338

*(ம. நூ. பா. : 81)*

*(இ. ள்)* இருபதடி நீள அகலமானால் வீட்டில் மிகுந்த மேன்மைகள் உண்டாகும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் தோன்றும். பலவிதமான இன்பம் உண்டாகும். குதிரை இலாபம் கிட்டும். வியாபாரம் செழிக்கும். செல்வமுடன் மகிழ்ச்சி நிறையும் என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

---

1. வீரிய மனையாள் தானும்
வீடுவிட் டகன்று போவாள்
காரிய கெடுதி யென்றே
கர்த்தனும் உரைசெய் தாரே.

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

இருபது அடிய தாகில்
ஏற்றமாம் கிரகம் நன்றாம்
பிரபல கீர்த்தி ஓங்கும்
பெறுவது பிள்ளை யாகும்
வருவது அசுவ யோகம்
மன்னவர் நேயம் உண்டாம்
திருவுடன் மகிழ்ச்சி எய்தும்
செய்தொழில் விருத்தி யாமே.

*(சி. நா. பா. : 431)*

## இருபத்து ஓரடிக்குப் பலன்

நாலஞ்சும் ஒன்று மாகில்
நலமுடன் சொல்லக் கேளாய்
பாலுடன் பசுக்கள் மெத்த
பாக்கியம் மிகவுண் டாகும்
சாலவே வாழ்வ தற்குச்
சஞ்சலம் ஒன்றும் இல்லை
மாலுடன் ஈசர் தானும்
மகிழ்ச்சியாய்ச் சொன்னார் பாரீர் ! 339

*(ம. நா. பா. : 82)*

*(இ. ள்)* இருபத்து ஓரடி நீள அகலமானால் பசுக்கள் பெருகி, பால் வளம் மிகும். பாக்கியங்கள் உண்டாகும். மனக் குழப்பங்கள் நேராது என்று திருமாலும் சிவபெருமானும் கூறியுள்ளார்கள்.

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

நாலைந்தும் ஒன்று மாகில்
நாரணன் கிருபை யாலே
பாலுள பசுக்கள் மெத்த
பாக்கியம் வந்தே எய்தும்

சாலவே அயலூர் வாசம்
சஞ்சலம் அகன்று வாழ்வன்
ஆலமும் உண்ட ஈசர்
அருளினார் உமைக்குத் தானே !

*(சி. நூ. பா. : 432)*

## இருபத்து இரண்டு அடிக்குப் பலன்

இருபதும் இரண்டு மாகில்
எதிரியும் அஞ்சு வான்காண்
வருவது மகிழ்ச்சி யாக
வாழ்வுமே மெத்த உண்டாம்
பெறுவது ஆணும் பெண்ணும்
பின்பலம் ஆகி நிற்கும்
ஒருமையாய் இந்த நூலை
உமையவள் தனக்கு ரைத்தார். 340

*(ம. நூ. பா. : 83)*

*(இ. ள்)* இருபத்து இரண்டடி நீள அகலமானால், இவ்வீட்டிற்கு உரியவனைக் கண்டு பகைவர்கள் அஞ்சுவார்கள். மகிழ்ச்சியான, வளமான வாழ்க்கை கிட்டும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் பிறப்பார்கள் என்று சிவபெருமான் உமையவளுக்குக் கூறினார்.

## வேறு

மூவேழும் ஒன்று மானால்
மூத்தவள் வாச மாகும்
சாவது பெண்டு பிள்ளை
சலிப்புவந் தெய்தும் கண்டாய்
பூவது பூத்தி டாது
புண்ணியம் எய்தி டாது
ஆவதை அவனி மீது
அறிந்தரன் சொன்ன தாமே. 341

*(ம. நூ. பா. : 433)*

*(இ. ள்)* இருபத்து இரண்டடி அகல நீளமாகில், அம்மனையில் மூதேவி வாசம் செய்வது அன்றி, பெண்டு, பிள்ளை மரணமும் தீராக் கிலேசமும் பூவாது காயாது பூத்திடாது என்ற பழிபாவமும் உண்டாகுமாம்.

## இருபத்து மூன்று அடிக்குப் பலன்

இருபதும் மூன்றே யாகில்
எந்தநோய் தானும் உண்டு
வருவதும் கலங்கி நிற்கும்
வாழ்வுமே அற்ப மாகும்,
இருவினை மிகவும் உண்டு
இழப்பவர் கெடுதி யாகும்
மருவுள்ள சேதம் போகும்
மாரியும் பொய்யா தென்னே ! 342

*(ம. நூ. பா. : 84)*

*(இ. ள்)* இருபத்து மூன்றடி நீள அகலமானால், அனைத்து நோய்களும் அணுகும்; மனம் கலக்கமுறும்; அற்ப வாழ்வு உண்டாகும்; தீ வினை மிகும்; மிகுந்த துயரமும் பொருள் அழிவும் உண்டாகும்; பயிர்த்தொழில் செய்தால், மழையும் பொழியாது.

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

இருபது மூன்றே யாகில்
எய்திடும் கொடிய நோய்கள்
வருவது கலங்கி நிற்கும்
வாழ்வுமே அற்ப மாகும்
திருமகள் கடாட்சம் ஏடும்
செல்வமும் நசிந்து போகும்
மருவலர் பயமும் உண்டாம்
வயலின்வே ளாண்மை போமே.

*(சி. நூ. பா. : 434)*

## *24, 25, 26 அடிகளுக்குப் பலன்*

அறுநான்காம் அடிய தாகில்
அற்பமாம் வயது குன்றும்
ஒருநான்காம் இருபத் தொன்றில்
உமையவள் கடாட்சம் போகும்
இருநான்கும் எட்டும் பத்தும்
இந்திர செல்வம் பெற்று
ஒருமையாய் வாழ்வர் என்று
உமையவள் தனக்குச் சொன்னார். 343

(ம. நூ. பா. : 85)

*(இ. ள்)* இருபத்து நான்கடி நீள அகலமானால், ஆயுள் குறைவு உண்டாம்; இருபத்து ஐந்தடி நீள அகலமானால், தெய்வ அருள் கிட்டாது போகும்; இருபத்து ஆறு அடி நீள அகலமானால், மிகுந்த செல்வத்தை அடைந்து, குடும்பத்தில் ஒற்றுமையாய் வாழ்வார்கள் என்று சிவபெருமான் உமையவளுக்குக் கூறினார்.

### வேறு

உருநான்கும் இருப தாகில்
உற்றதோர் வயது குன்றும்
ஒருநான்கும் இருபத் தொன்றில்
உமையவள் கடாட்சம் ஏகும்
இருநான்கோ டெட்டுப் பத்தி
விலகும்நோய் கவலை யென்றே
தருமனோ மணியாள் பங்கன்
சதாசிவன் சொன்ன தாமே. 344

*(இ. ள்)* இருபத்து நான்கடி அகல நீளமாகில் ஆயுள் குன்றும். இருபத்தைந்தடி அகல நீளமாகில், உமையவள் கடாட்சம் ஏகும்; இருபத்தாறடி அகல நீளமாகில் தேக பீடையும் தீராக் கவலையும் உண்டாம். (சி. நூ. பா. : 435)

குறிப்பு : இருபத்து ஐந்தடி , இருபத்து ஆறு அடி நீள அகலங்களில் வீடு கட்டினால் கிட்டும் பலனைக் கூறும் இரு நூல்களிலும் முரண்பட்ட கருத்துகள் அமைந்திருப்பது இங்குச் சுட்டத்தக்கது

## இருபத்து ஏழு அடிக்குப் பலன்

ஏழுடன் இருப தாகில்
எழும்புமே யோகம் பாரு
தாழ்விலா வாழ்வு பெற்றுத்
தரணியில் மதிக்க வாழ்வார்
பாழ்போன பயிர்கள் தானும்
பலிதமாய் விளையும் பாரு
ஊழ்வினை ஒன்றும் இல்லை
உமைபரன் சொன்னார் பாரீர் ! 345

*(ம. நூ. பா. : 86)*

*(இ. ள்) இருபத்து ஏழடி அகல நீளமாகில், யோகம் உண்டாகும்; நிறைவான வாழ்வு கிடைக்கும். அனைவரும் போற்றும் வகையில் வாழ்வார்கள்; வாடிப்போன பயிர்களும் புத்துயிர் பெற்று வளர்ந்து விளைச்சல் காணும்; தீவினைகள் நெருங்காது என்று சிவனார் கூறியுள்ளார்.*

## இருபத்து எட்டு அடிக்குப் பலன்

எட்டுடன் இருப தாகில்
எதிரியும் அஞ்சி நிற்பான்
கொட்டுமே மனையில் வாழ்வு
குறைவிலா பாக்கி யத்தைக்
கெட்டுமே போகா தப்பா
கேசரி உதவி யாலே
கட்டுதான் வாரா தென்று
தாண்டவ மூர்த்தி சொன்னார். 346

*(ம. நூ. பா. : 87)*

*(இ. ள்) இருபத்தெட்டடி அகல நீளமானால், இவ்வீட்டிற்கு உரியவரைக் காணின், பகைவனும் அஞ்சி நிற்பான்; வீட்டில் அனைத்துச் செல்வங்களும் பெருகும்; வளமான வாழ்க்கை உண்டாகும்; இறைவனின் அருளால் எந்தவொரு குறைபாடும் நேராது என்று சிவபெருமான் கூறியுள்ளார்.*

**வேறு**

இருபதும் எட்டு மானால்
இன்பமும் துன்பம் இல்லை
கருவதில் உதித்த பிள்ளை
காலனூர் கடுகி யேகும்
வரும்பொரு ளதுவும் சேதம்
வறுமையும் மிகவுண் டாகும்
தருகுமில் விட்டு நீங்கச்
சதாசிவன் உரைத்த வாறே. 347

*(இ. ள்)* இருபத்தெட்டடி அகல நீளமாகில் அசௌக்கியமும், புத்திரர் மரணமும், தனசேதமும், தரித்திரமும் உண்டாகும். ஆதலால் அம்மனையை விட்டு நீங்குதலே உத்தமமாம். *(சி. நூ. பா. : 437)*

**இருபத்து ஒன்பது, முப்பது அடிகளுக்குப் பலன்**

இருபதும் ஒன்ப தானால்
எழும்புமே செல்வம் அப்போ
ஒருபதும் இருப தாகில்
உண்மையாய்ச் சொன்னேன் பாரும்
வருவதும் அநேக யோகம்
வந்தவர் சலிப்பில் லாமல்
பெறுவது ஆணும் பெண்ணும்
பித்தனார் தாம்உ ரைத்தார். 348

*(ம. நூ. பா. : 88)*

*(இ. ள்)* இருபத்து ஒன்பதடி நீள அகலமானால், செல்வம் மேன்மேலும் பெருகும்; முப்பதடி நீள அகலமானால் நல்ல இராசயோகம் வந்து சேரும். ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் தோன்றி, வீட்டிற்குரியவன் மகிழ்வான் என்று சிவபெருமான் கூறியுள்ளார்.

**வேறு**

ஒன்பது இருப தாகில்
ஓங்கிய செல்வம் எய்தும்
ஒன்பது இருபத் தொன்றில்
உலகெல்லாம் புகழ்ச்சி யுண்டாம்

அன்புள மனையாள் தானும்
ஆண்பெண்ணைப் பெற்று வாழ்வள்
இன்பமும் மனச்சந் தோஷமும்
இலகுமெந் நாளும் தானே. 349

*(இ. ள்)* இருபத்தொன்பதடி அகல நீளமாகில், அழியாச் செல்வம் உண்டாகும். முப்பதடி அகல நீளமாகில், புகழ்ச்சியும் கிலேச நிவர்த்தியும் உண்டாம். *(சி. நூ. பா. : 438)*

## முப்பத்து ஒன்று, முப்பத்து இரண்டடிக்குப் பலன்

முப்பதும் ஒன்று மானால்
முக்கணர் அருளும் உண்டாம்
முப்பதும் இரண்டு மாகில்
முகுந்தனார் கடாட்சத் தாலே
வைப்பது அடிமை மக்கள்
வையகம் முழுதும் வாழ்வார்
தப்பில்லை சொன்னேன் அந்தச்
சங்கரர் உமைக்குச் சொன்னார். 350

*(ம. நூ. பா. : 89)*

*(இ. ள்)* முப்பத்து ஓரடி அகல நீளமானால் முக்கண்ணனாகிய சிவபெருமான் அருளால் சகல பாக்கியங்களும் உண்டாகும். முப்பத்து இரண்டடி அகல நீளமானால் திருமாலின் அருளால் சகல நன்மைகளும் கிட்டும். அடிமையாட்கள் இருப்பார்கள்; புத்திரர்கள் தோன்றுவார்கள்; உலகம் போற்ற வாழ்வார்கள் என்று சங்கரனார் உமைக்குச் சொன்னார்.

**குறிப்பு : பல வேறுபாடுகளுடன் கிடைக்கும் பாடல்**

முப்பதும் ஒன்று மானால்
முக்கண்ணன் அருளுண் டாகும்
முப்பதும் இரண்டு மாகில்
முகுந்தனார் கிருபை உண்டாம்

செப்பிய மனைவி யின்பம்
சேயருற் பத்தி நன்மை
தப்பில்லை பொருள்வ ரத்து
சகலமும் விருத்தி யாமே.

*(சி. நூ. பா. : 439)*

**33, 34, 35, 36 அடிகளுக்குப் பலன்**

ஐயாறும் மூன்றும் ஆனால்
ஆனதோர் குடியும் நன்றாம்[1]
ஐயாறும் நான்கு மாகில்
அண்டிய குடிவிட்டு ஓட்டும்
ஐயாறு ஐந்து மானால்
அஷ்டலட் சுமியும் சேர்வாள்
ஐயாறு ஆறு மாகில்
அரசரோ டரசாள் வாரே. 351

*(ம. நூ. பா. : 90)*

*(இ. ள்)* முப்பத்து மூன்றடி அகல நீளமாகில், மனைவி, மக்கள் அனைவரும் சிறப்புற விளங்குவார்கள். முப்பத்து நான்கடி அகல நீளமாகில், அம்மனை நசிந்து போகும். முப்பத்தைந்தடி அகல நீளமாகில், அட்டலட்சுமியின் அருள் கிட்டும். முப்பத்தாறடி அகல நீளமாகில், இராச பாக்கியம் உண்டாகும்.

**37, 38, 39, 40 அடிகளுக்குப் பலன்**

ஏழஞ்சும் இரண்டு மாகில்
இன்பமாய் இலாபம் உண்டு
ஏழஞ்சும் மூன்று மாகில்
எப்போதும் பிசாசு சேரும்
ஏழஞ்சும் நாலு மாகில்
இன்பமும் சுகமுண் டாகும்
ஏழஞ்சும் ஐந்து மாகில்
என்றைக்கும் சலிப்புண் டாகும். 352

*(ம. நூ. பா. : 91)*

---

*1. அவனியில் செல்வம் உண்டாம்.*

(இ. ள்) முப்பத்தேழடி அகல நீளமாகில், சந்தோஷமும் இலாபமும் உண்டாகும். முப்பத்தெட்டடி அகல நீளமாகில், அம்மனையில் பிசாசுகள் குடியிருக்கும். முப்பத்தொன்பதடி அகல நீளமாகில், செல்வமும் தேக சௌக்கியமும் உண்டாகும். நாற்பதடி அகல நீளமாகில், தீராத மனச்சலிப்பு உம்டாகும்.

குறிப்பு: இன்பமும் பொருளும் உண்டாம்.

### 41, 42, 43, 44, அடிகளுக்குப் பலன்

எண்ணைந்தும் ஒன்றே யாகில்
இன்பமாம் குபேரச் செல்வம்
நண்ணவே ஏழா றாகில்
இலட்சுமி குடியி ருப்பாள்[1]
திண்ணமாய் ஏழைந் தெட்டும்
சிறப்பில்லை தீங்குண் டாகும்
கண்ணவே ஆறா றெட்டும்
கண்கெட்டுப் போவார் காணே. 353

(ம. நூ. பா. : 92)

(இ. ள்) நாற்பத்தோரடி அகல நீளமாகில், குபேரனைப் போன்று மிகுந்த செல்வம் உண்டாகும். நாற்பத்து இரண்டடி அகல நீளமாகில், இலட்சுமி கடாட்சத்தால் சகல பாக்கியங்களும் உண்டாகும். நாற்பத்து மூன்றடி அகல நீளமாகில், பொல்லாப்பு உண்டாகும். நாற்பத்து நான்கடி நீள அகலமாகில், நீங்காத நோய்கள் தோன்றி, பொருட்சேதமும் உண்டாகும்.

### 45, 46, 47, 48 அடிக்குப் பலன்

நாற்பதோ டைந்து மாகில்
இலட்சுமி கடாட்சம் உண்டாம்
நார்பதோ டாறு மாகில்
நாயகன் இருக்க மாட்டான்

---

1. இலட்சுமி கடாட்சம் உண்டாம்.

நாற்பதோ டேழு மாகில்
நலமிலை வறுமை யுண்டாம்
நாற்பதோ டெட்டு மாகில்
நட்டம்தீப் பட்டுப் போமே. 354

*(இ. ள்)* நாற்பத்தைந்தடி அகல நீளமாகில், இலட்சுமி கடாட்சம் உண்டாம். நாற்பத்தாறடி அகல நீளமாகில், அம்மனைக்குத் தலைவனாகிய நாயகன் இருக்க மாட்டான். நாற்பத்தேழடி அகல நீளமாகில், எந்நாளும் வறுமை யுடையவனாக இருப்பான். அம்மனையை விட்டு நீங்கில், அவன் வறுமையும் நீங்கிவிடுமென்று சொல்லவும். நாற்பத்தெட்டடி அகல நீளமாகில், அவ்வீடு தீப்பட்டுப் போகும் என்பதாகும். *(சி. நூ. பா. : 443)*

### 49, 50, 51, 52 அடிக்குப் பலன்

ஐம்பதிற் குறையொன் றானால்
அதிலேமூ தேவி வாசம்
ஐம்பது சரிய தானால்
ஆவுபால் பாக்கி யந்தான்
ஐம்பதும் ஒன்று மானால்
அட்டலெட் சுமியும் வாசம்
ஐம்பதும் இரண்டு மானால்
அதிகசம் பத்துண் டாமே. 355

*(சி. நூ. பா. : 445)*

*(இ. ள்)* நாற்பத்தொன்பதடி அகல நீளமாகில், அம்மனையில் மூதேவி வாசமாம். ஐம்பதடிஅகல நீளமாகில், பசு, பால் பாக்கியங்கள் மேன்மேலும் பெருகும். ஐம்பத்தோரடி அகல நீளமாகில், அம்மனையில் அட்டலெட்சுமிகளும் வாசம் செய்வார்கள். ஐம்பத்திரண்டடி அகல நீளமாகில், அதிக சம்பத்து உண்டாகும்.

**53, 54, 55, 56 அடிகளுக்குப் பலன்**

ஐம்பத்து மூன்று மாகில்
அடர்பிணி கவலை யுண்டாம்
ஐம்பதும் நால தாகில்
அதிகமாம் செட்டு லாபம்
ஐம்பதும் ஐந்து மாகில்
ஆக்கமும் பொருளும் நஷ்டம்
ஐம்பதும் ஆறு மாகில்
அத்தமும் குபேர வாழ்வே. 356

*(இ. ள்) ஐம்பத்து மூன்றடி அகல நீளமாகில், அதிகக் கவலையும் மிகுந்த நோயும் கொண்டிருப்பான். ஐம்பத்து நான்கடி அகல நீளமாகில், செய்யும் வியாபாரத்தில் மிகுந்த இலாபம் கிட்டும். ஐம்பத்து ஐந்தடி அகல நீளமாகில், சிறிது ஆக்கமும் பொருளுக்கு அழிவும் உண்டாகும். ஐம்பத்து ஆறு அடி அகல நீளமாகில், குறையாத செல்வமும் குபேர வாழ்க்கையும் உண்டாகும். (சி. நூ. பா. : 446)*

**57, 58, 59, 60 அடிகளுக்குப் பலன்கள்**

ஐம்பதும் ஏழு மாகில்
அசுவவா கனமும் உண்டாம்
ஐம்பதும் எட்டு மாகில்
அத்தமும் அகன்று போகும்
ஐம்பதும் ஒன்பா னாகில்
யாசகம் எடுத்து வாழ்வன்
ஐம்பதும் பத்து மாகில்
அதிகபாக் கியமு மாமே. 357

*(இ. ள்) ஐம்பத்தேழடி அகல நீளமாகில், அரச வாழ்க்கையும் குதிரை வாகனமும் உண்டாகும், ஐம்பத்தெட்டடி அகல நீளமாகில், திரவிய நாசமும் தீராத நோயும் மாறாத கவலையும் உண்டாகும். ஐம்பத் தொன்பதடி அகல நீளமாகில், பிச்சையெடுத்து உண்பான். அறுபதடி நீள அகலமாகில். ஆடுமாடுகள் பெருகும். பொருள்வரவும் பாக்கியங்களும் கிடைக்கும். (சி. நூ. பா. : 446)*

# 12. வீடு கட்டும் காலமும் பலன்களும்

## வீடு கட்டும் மாதங்களும் பலன்களும்

### சித்திரை மாதம்

செப்பும் சித்திரை சிறந்த மதிதனில்
ஒப்பு மாளிகை ஒவ்வ அமைத்திடில்
தப்பி லாமல் தனமதற்கு ஆனியாம்
மெய்ப்பு டன்மயன் விரும்பி உரைத்ததே. 358

*(இ. ள்)* சித்திரை மாதத்தில் வீடு கட்ட செல்வத்திற்கு அழிவுண்டாகும் என்று மயன் கூறியுள்ளார்.

### வைகாசி மாதம்

பேசும் வைகாசி பெருக்கமா ளிகட்டில்
தேசும் புருஷ செயப்பிர தங்களாம்
நேசமாம் பெண்டிர் நெருங்கும் சுபாபலம்
மாசி லாமயன் மன்னர்க்கு அறைந்ததே. 359

*(இ. ள்)* வைகாசி மாதத்தில் வீடு கட்ட, வெற்றிகள் கிட்டும், பெண்கள் மகிழ்ச்சியுடன் விளங்குவர். சுப பலன்கள் உண்டாகும் என்று மயன் உரைத்துள்ளார்.

### ஆனி மாதம்

உள்ள இராசி உரைக்கின்றேன் மாந்தர்க்குத்
தெள்ளும் ஆனியில் திடமாளி கட்டிடில்
பிள்ளை குட்டி புகல்மிருத் துப்பயம்
கொள்ள மயன்உரை கூறியது உண்மையே. 360

*(இ. ள்)* ஆனி மாதத்தில் வீடுகட்ட, பிள்ளைகளுக்குக் கண்டம் உண்டாகும்; பகைவரால் பயம் ஏற்படும் என்று மயன் உரைத்துள்ளார்.

குறிப்பு: *358 - 375 வரையிலான பாடல்கள் மயநூல் என்னும் மனையடி சாஸ்திர நூலில் 193-232 வரை அமைந்தவை.*

## ஆடி மாதம்

சொல்லும் ஆடி தொடர்ந்த மாளிகட்டில்
சொல்லும் காராம் பசுக்கள்நஷ் டங்களாம்
சொல்லும் செல்வமும் சீரும் அழிந்திடும்
சொல்லு மயனார் தொகுத்த சிற்பநூலே. 361

*(இ. ள்)* ஆடி மாதத்தில் வீடு கட்ட, காராம் பசுக்கள் இறந்து போகும். செல்வமும் சிறப்பும் நீங்கும் என்று மயன் கூறியுள்ளார்.

## ஆவணி மாதம்

உரைத்திடும் ஆவணி மாளிகை கட்டிடில்
நிரைத்தி டும்பந்து வர்க்கம் வரத்துமாம்
உரைத்தி டும்மயன் வாக்குப்பொய் யாதுகாண்
பரைத்திடும் பஞ்சனத் தார்க்கு அறைந்ததே. 362

*(இ. ள்)* ஆவணி மாதத்தில் வீடுகட்ட, உறவினர்கள் வருகை ஏற்படும் என்று மயனார் கூறியுள்ளார்.

## புரட்டாசி மாதம்

தேயு மேபுரட் டாசி மதிதனில்
ஏயு மாளி எழில்பெறக் கட்டிடில்
மாயு நோயும் மகாரோகம் எய்திடும்
தாயு மேமயன் தயவாய் உரைத்ததே. 363

*(இ. ள்)* புரட்டாசி மாதத்தில் வீடு கட்ட, மிகுந்த நோய்கள் தோன்றும் என்று மயன் கூறியுள்ளார்.

## ஐப்பசி மாதம்

காணும் ஐப்பசி கனத்த மாளிகட்டில்
ஆணும் பெண்ணும் அறிய கலகமாம்
பூணும் ஆடை புகலும்ஆ பரணமும்
வேணும் சேதம் விளையும்எமன் மேலுமே.364

*(இ. ள்)* ஐப்பசி மாதத்தில் வீடு கட்ட, அந்த வீட்டில் கலகம் உண்டாகும். ஆடை, ஆபரணங்கள் சேதமாகும்.

### கார்த்திகை மாதம்

கனத்த மாரி கழறுங்கார்த் திகையில்
தனத்த மாளி தகைமையாய்க் கட்டிடில்
அனர்த்தம் வாராது ஒருநாளும் மாந்தர்க்கு
நினைத்த இலட்சுமி நெருங்கும் வாசமதே. 365

(இ. ள்) கார்த்திகை மாதத்தில் வீடுகட்ட, செல்வம் நிலைக்கும். தீங்கு ஏற்படாது.

### மார்கழி மாதம்

சொல்லு மேதிரு வாதிரை மார்கழி
புல்லு மாளி புகழவே கட்டிடில்
கொல்லு மேபயம் குவலயம் தன்னிலே
வெல்லு மயனார் விரும்பி உரைத்ததே. 366

(இ. ள்) மார்கழி மாதத்தில் வீடுகட்ட, மிகுந்த பயம் உண்டாகும் என்று மயனார் கூறியுள்ளார்.

### தை மாதம்

கிரணம் வீசும் கிளர்க்கும்தை மாதத்தில்
முரண மாக முகிழ்மனை கட்டிடில்
மரண மேதரும் அக்கினி பயமுண்டாம்
சரணம் பண்ணித் தடுப்பது நன்மையே ! 367

(இ. ள்) தை மாதத்தில் வீடுகட்ட, அவ்வீட்டில் மரணம் நிகழும். அக்கினி பயம் உண்டாகும்.

### மாசி மாதம்

அருமை யாக அறைகிறேன் சிற்பநூல்
பெருமை யாய்மாசி பிலக்க மாளிகட்டில்
சிறுமை நீங்கிச் சிறக்கும்செல் வங்களாம்
ஒருமை யாக உரைக்கும் மயன்நூலே ! 368

(இ. ள்) மாசி மாதத்தில் வீடு கட்ட, சிறுமைகள் நீங்கி, செல்வம் மிகும் என்று மயனார் கூறியுள்ளார்.

### பங்குனி மாதம்

மெள்ளவே பங்குனி மாளிகை கட்டிடில்
உள்ள இரத்தினம் உரையில்ஆ பரணமும்
தென்றே மட்ட சிறந்ததோர் செல்வமும்
கொள்ளை போமென்று கூறுவர் சிற்பரே. 369

(இ. ள்) பங்குனி மாதத்தில் வீடு கட்ட, சேர்த்து வைத்துள்ள எட்டு விதமான செல்வங்களும் கொள்ளை போகும் என்று சிற்பர்கள் கூறியுள்ளார்கள்.

### மனைகோல ஏற்ற திதிபலன்

நெறியும் சுக்கில பட்சமது
நேரும் சுபப்பிர தமாதம்
செறியும் கிருஷ்ண பட்சமது
சிறந்த இரவி போனதன்பின்
பெருகும் திரிதிகை முதலாகப்
பேசும் பௌர்ண மிதொடங்கி
உருகும் சத்தமி தன்வரைக்கும்
ஓங்கும் சுக்கில பட்சமதே. 370

(இ. ள்) சுக்கில பட்சம் சுபப்பிரதம். கிருஷ்ண பட்சம் அமாவாசை போன திருதியை முதல் பௌர்ணமி போன சப்தமி வரையில் வளர்பிறைத் திதிகளாகக் கணக்கில் கொண்டு வீடு கட்டத் தொடங்கலாம். பிற தேய்பிறைத் திதிகள் சிறிதும் ஆகாதவை.

குறிப்பு : பௌர்ணமிக்குப் பிறகு வரும் திதிகளில் சப்தமி வரையிலான திதிகளில் வீடுகட்டத் தொடங்கலாம். அவற்றையும் வளர்பிறைத் திதிகளாகக் கொள்ளலாம் என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இது ஆய்விற்குரியது.

மற்றநாள் கிருஷ்ண பட்சமுத லாகா
உற்ற பிரதமை ஒருங்கும்சஷ் டிகளும்
முற்றும் ஏகா தசியிது கனத்தைப்
பெற்ற திதிபலன் பேரத்த வாணியே. 371

*(இ. ள்) வீடு கோலுவதற்கு கிருஷ்ண பட்சத் திதிகள் ஏற்றவையல்ல. பிரதமை, சஷ்டி, ஏகாதசி ஆகிய மூன்று திதிகளும் **அந்தக திதி**களாகும். இத்திதிகளில் வீடுகட்டத் தொடங்கினால், பொருள் அழிவு ஏற்படும்.*

வாறிட்டார் துவிதியை சத்த மிகளும்
ஓரிட்டு துவாதசி பத்தி ரைதிதி
நேரிட் டதிதி நிகழ்பலன் பந்தனம்
கூறிட் டார்மயன் குறித்த உண்மையே. 372

*(இ. ள்) துவிதியை, சப்தமி, துவாதசி ஆகிய மூன்று திதிகளும் **பத்திரை திதி**களாகும். அந்தத் திதிகளில் வீடுகட்டத் தொடங்கினால் சிறைவாசம் ஏற்படும்.*

தக்க அட்டமி தாக்கும் திரிதிகை
பக்க மேதிர யோதசி தன்முதல்
மக்கன செயத்தி யதிதி யாமிவை
சிக்குஞ் சுபமெனச் செப்பினர் சிற்பரே. 373

*(இ. ள்) திருதியை, அட்டமி, திரயோதசி ஆகிய மூன்று திதிகளும் **செயித்திய திதி**களாகும். அந்தத் திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால், நல்ல பலன்.*

சீரது பெறுஞ்ச துர்த்தி நவமிகளும்
தாரது செறியும் சதுர்த்த சிமுதல்
ஊரது பெறுமறிக் கத்திதி யின்பலன்
போரது செறிமி ருத்துவின் பயமிதே. 374

*(இ. ள்) சதுர்த்தி, நவமி, சதுர்தசி ஆகிய மூன்று திதிகளும் **ரிக்கத் திதி**களாகும். இந்த மூன்று திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால் பகைவர்களால் பயம் உண்டாகும்.*

சொல்லும் பஞ்சமி தோற்றுந் தசமிதான்
வெல்லும் பௌர்ணமி வேண்டும்பூ ரணதிதி
புல்லும் இதன்பலன் போற்றும் செயப்பிரதம்
அல்லும் அமாவாசி அர்த்த ஆனியே. 375

*(இ. ள்) பஞ்சமி, தசமி, பௌர்ணமி ஆகிய மூன்று* **பூரண திதி***களாகும். இந்த மூன்று திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால், வெற்றி உண்டாகும். ஆமாவாஸையில் வீடு கட்டினால், உயிர்ச்சேதம் ஏற்படும்.*

## வீடுகட்டும் இராசி லட்சணம்

### மேஷ இராசி

மேசத்தில் வீடு மனையெடுத் திடவே
மேன்மையும் புகழுமுண் டாகும்
மாசத்தி லவர்க்கு வரும்படி யதிகம்
மனைவியும் வலியவே வருவாள்
நேசத்திற் பெரியோர் நேசம துண்டாம்
நீணிலத் துறும்பல பயிரும்
ஆசத்தி கிருபை அருணாந்தா னியங்கள்
யாவும் வந்துசேர்ந் திடுமே. 376

*(இ. ள்) மேட இராசியில் மனையெடுக்க, மேன்மையும் புகழும் உண்டாகும்; வருமானம் பெருகும்; மனைவி அன்புடன் விளங்குவாள்; பெரியோர்களின் நட்பு கிட்டும்; பயிர்த்தொழில் பெருகும்; இறையருள் கிடைக்கும்; தானியங்கள் மிகுதியாக வந்து சேரும்.*

### இடப இராசி

ஏறெனும் இடபம் தனில்மனை யெடுக்க
ஏந்திழை இருந்திடார் வாழை
நாறினாற் கட்டும் பூவதிற் சிக்கி
நசுங்கிடும் வாறுபோ லாகும்
ஊறிடும் பிணியால் உடலது மெலியும்
உற்றநற் பிள்ளையும் உதவாப்
பேறிடும் வீட்டிற் பிரபலம் குன்றும்
பிழைப்பிலா தலைகுவன் பெண்ணே ! 377

குறிப்பு: *376 - 387 வரையிலான பாடல்கள் சிற்ப நூல் களஞ்சியத்தில் 497- 508 வரை அமைந்தவை.*

*(இ. ள்) இடப இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். மிகுந்த துயரங்கள் உண்டாகும். பிணியின் காரணமாக உடலானது வற்றிவிடும். நல்ல புத்திரர்களும் உதவ மாட்டார்கள். குடும்பத்தின் புகழ் குன்றும். மனைக்குரியவன் பிழைப்பிற்கு வழியின்றி அலைவான்.*

**மிதுன இராசி**

மிதுனத்தின் வீடு மனைதனை யெடுக்க
வீண்பழி வந்துமே சேரும்
அதனமாய்ப் பொருட்கள் செலவுக ளாகும்
ஆயிழை அகன்றுமே போவாள்
பதனமாய்ப் பதியும் துலக்க தில்லை
பாடுபட் டலையவே வேண்டும்
விதனமா யந்நாள் பலவழி யதனால்
விளைந்திடும் கலகமு மாமே. 378

*(இ. ள்) மிதுன இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவனுக்கு வீண்பழிகள் வந்து சேரும்; சேர்த்து வைத்த பொருட்களனைத்தும் செலவாகும்; மனைவி பிரிந்து செல்வாள்; வீட்டில் வறுமை உண்டாகும்; பல வழிகளிலும் கலகம் விளையும்.*

**கடக இராசி**

நண்டதில் வீடு மனையெடுத் திடவே
நல்லதோர் இஷ்டர்கள் பகையாம்
தெண்டமும் வருமே தேசமன் னவராற்
செலவுமேற் செலவதுண் டாகும்
கொண்டவள் பிரிவாள் கொடும்பிணி யதனாற்
குடும்பத்திற் குறைபல உளவாம்
அண்டினோர் அடுத்தோர் கண்டவர் நின்றோர்
யாவரும் பேசியே சுவரே. 379

(இ. ள்) கடக இராசியில் மனையெடுக்க, மனையெடுப்பவனிடத்து அன்பு பாராட்டுபவர்கள் எல்லாம் பகைவர்களாவார்கள்; அரசரின் தண்டனைக்கு ஆளாக நேரிடும்; செலவிற்கு மேல் செலவு வந்து சேரும்; மனைவி பிரிந்து செல்வாள்; நோய்கள் தோன்றும்; குடும்பத்தில் பல குறைகள் உண்டாகும்; பலரும் இழிவாகப் பேசும் நிலைக்கு ஆளாக நேரிடும்.

### சிம்ம இராசி

சிங்கத்தில் வீடு மனைதனை யெடுக்கத்
திருமகள் கொழுநனைப் போலத்
தங்கமும் பொன்னும் தனமுமே புதைப்பன்
தருமத்துக் குடையவ னாகிப்
பாங்கினிற் வளரும் பயிர்விளை வாகப்
பாரினிற் மணமது புரிந்தே
மங்கைய ரோடு வாழ்மனை யதனில்
மகவின்பே றுண்டெனை வழுத்தே. 380

(இ. ள்) சிம்ம இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவனுக்குத் திருமாலைப் போல மிகுதியான செல்வம் வந்து சேரும். பொன் முதலானவற்றைப் பூமியில் புதைத்துக் காப்பான். தர்மவானாக விளங்குவான். பயிர்த்தொழிலில் விளைவு மிகுதியாகும். மனைவியுடன் இன்புற்று வாழ்வான். புத்திரர்கள் தோன்றுவார்கள்.

### கன்னி இராசி

கன்னியில் வீடு மனைதனை யெடுக்கக்
கனகபூ ஷணநவ மணிக்கு
மன்னவ னாகிப் பிரபல மடைவன்
வரும்பல ஊதியம் வளரும்
பன்னகா பரணன் கிருபையும் உண்டாம்
பாலுடன் அன்னமும் புசிப்பன்
உன்னத மனையிற் பாரிமக் களுமே
உண்டென உலகினில் உரையே. 381

(இ. ள்) கன்னி இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவனுக்குப் பொன்னாபரணங்களும் விலையுயர்ந்த நவமணிகளும் வந்து சேரும். அரசனாகப் புகழுடன் விளங்குவான். பல வழிகளிலும் செல்வம் வந்து சேரும். இறையருள் கிட்டும். நல்ல உணவை உண்பான். மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக வாழ்வான்.

குறிப்பு : பன்னகா பரணன் - பொருள் விளங்கவில்லை.

## துலா இராசி

துலாத்தினில் வீடு மனைதனை யெடுக்கச்
சுகமுடன் சகலபாக் கியமும்
சலாசலம் பெருகும் தானியம் பலிக்கும்
சந்ததி வளரும்வா னுலவும்
நிலாவெனச் சொலிக்கும் நிதியும்பூ ஷணமும்
நிலைபெற வாழ்குவன் நிதமும்
உலாசமாய் நடக்கும் மனையலங் காரம்
உண்டென மயனுரைத் தனரே. 382

(இ. ள்) துலா இராசியில் வீடு யெடுக்க, மனைக் குரியவன் சுகம் பெற்று, அனைத்துப் பாக்கியங்களையும் பெறுவான்; தானிய இலாபம் கிட்டும்; குலம் செழிக்கும்; செல்வம் மேன்மேலும் பெருகும்; புகழ் நிலைபெற வாழ்வான்.

## விருச்சிக இராசி

தேளினில் வீடு மனைத்னை எடுக்கத்
திருமகள் அகன்றுமே போவாள்
ஆளினில் ஆளாய் அடிமைய தாகி
அவதிபட் டவனியில் அலைவன்
கோளினிற் கோளாங் குண்டுணி யாலே
குழந்தையும் தேவியும் பிரிவர்
ஊழினில் விதித்த விதியென நினைத்தே
உடல்மெலிந் துயிர்பிழைப்ப பானே. 383

*(இ. ள்)* விருச்சிக இராசியில் மனையெடுக்க, அவ்வீட்டில் வறுமை உண்டாகும்; மனைக்குரியவன், அடிமையிலும் அடிமையாய் ஊர் ஊராய் அலைய நேரிடும்; மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு அகல நேரிடும்; மனத்துயருடன் உடல்மெலிந்து வாழ்வான்.

## தனுசு இராசி

வில்லினில் வீடு மனைதனை யெடுக்க
விசனமும் துக்கமும் தோன்றும்
சொல்லினும் பந்து மித்திரர் கலகம்
சுகமிலை கைப்பொருள் சேதம்
பல்லியும் நாலாப் பக்கமே பகரும்
பார்த்தவர் மதிக்கவே மாட்டார்
தில்லையில் வாழும் ஈசனே யென்று
தெருவினிற் றிரிந்திடு வானே. 384

*(இ. ள்)* தனுசு இராசியில் மனையெடுக்க, மனைக் குரியவனுக்கு கவலை இருந்து கொண்டே இருக்கும்; துன்பத்தினால் வருந்துவான்; உறவினர்களும் நண்பர்களும் கலகம் செய்வார்கள்; சுகம் கிட்டாது; செல்வம் அழியும்; யாரும் மதிக்க மாட்டார்கள்; மனைக்குரியவன் மனத் துயருற்றுத் தெருவினில் அலைவான்.

## மகர இராசி

மகரத்தில் வீடு மனைதனை யெடுக்க
மண்டிடும் மக்களும் பெண்டீர்
நகரத்தில் வாழும் லட்சுமி அகல
நாளுக்கு நாள்நிதி நழுவும்
அகரத்தில் உலவும் ஆடுமா டுகளும்
அகன்றிடும் நிலங்கரை வீடும்
சிகரத்தின் உருவாய்ச் செழித்திடும் சீவன்
திகைத்திடச் சிந்தைவா டுவனே. 385

*(இ. ள்)* மகர இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனின் பிள்ளைகளும் மனைவியும் மரணமடைவார்கள். வீட்டில் செல்வம் நீங்கி, வறுமை உண்டாகும். ஆடு, மாடுகளும் அழியும். நிலம், வீடு போன்றவை கையை விட்டுப் போகும். மனைக்குரியவன் மனம் நொந்து வாடி நிற்பான்.

## கும்ப இராசி

கும்பத்தில் வீடு மனைதனை யெடுக்கக்
கூர்விழி கொம்பனை சேர்வள்
நம்பின பேர்க்கும் இரப்பவர் தமக்கும்
நன்மையே செய்குவன் நாட்டில்
தம்பியும் தமயன் தாய்பிதா சுற்றமும்
தாரமும் தனயரும் வாழ
அம்பிகை பாத தரிசனம் செய்தே
அருளுடன் பொருளைவைத் தாள்வான். 386

*(இ. ள்)* கும்ப இராசியில் மனையெடுக்க, மனைக்கு உரியவனுக்கு நல்ல மனைவி கிடைப்பாள். தன்னை நாடி வந்தவர்களுக்கும், நம்பி வாழ்பவர்களுக்கும் இவன் மிகுந்த நன்மைகளைச் செய்வான். உடன்பிறந்தோர், பெற்றோர், உறவினர்கள், மனைவி, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் விளங்குவர். இறைவயின் அருளைப் பெறுவான். மிகுந்த பொருளைப் பெற்று மனநிறைவுடன் வாழ்வான்.

## மீன இராசி

மீனத்தில் வீடு மனைதனை யெடுக்க
வேண்டிய பொருளெலாம் இருக்கும்
தானத்தி லிருந்தே புராணகா வியங்கள்
தன்னையே கேட்டுளங் களிப்பன்

வானத்தை வில்லாய் வளைக்கும்வல் லபனாம்
மனைமகப் பேறுடன் வாழ்வன்
ஞானத்திற் சிந்தை நன்மதி கூடும்
நாடிய பொருள்வரத் தாமே. 387

(இ. ள்) மீன இராசியில் மனையெடுக்க, மனைக்குரியவன் செல்வனாக விளங்குவான்; புராணம், காவியம் போன்றவற்றை விரும்பிக் கேட்டு மகிழ்வான்; மிகுந்த வல்லமைப் படைத்தவனாக விளங்குவான்; நல்ல மனைவி, புத்திரர்களைப் பெற்று மகிழ்ச்சியுன் இருப்பான்; ஞானம் மிக்கவனாகத் திகழ்வான்; அதிகமான செலவத்தை உடையவனாக விளங்குவான்.

## வீடுகட்ட நல்ல, ஆகாத யோகங்கள் யோக பலன்

தங்கு மேசுகம் தாக்கும்பி ராமியம்
பொங்கு மாகேந்திரம் போற்றும்நற் சாத்திரம்
எங்கு மேசிவம் ஏற்குஞ்சுப் பிரமுடன்
அங்க மாயுஷ்மா னாகுஞ்சௌ பாக்யமே. 388

(இ. ள்) பிராமியம், மாகேந்திரம், சாத்திரம், சிவம், சுப்பிரம், ஆயுஷ்மான், சௌபாக்கியம் இவையும்,

காணுந் துருவம் கடிறும்வை திருதியாம்
வேணுஞ் சோபனம் விரும்பும் சுபமதாம்
தோணும் பிரீதியும் தோற்றுஞ்சித் தஞ்சித்தி
பூணும் யோகம் புகலும் பதினான்கே. 389

(இ. ள்) துருவம், வைதிருதி, சோபனம், சுபம், பிரீதி, சித்தம், சித்தி இவையும் சேர்ந்துள்ள பதினான்கு யோகங்களும் சுபமானவை.

குறிப்பு: *388 - 393 வரையிலான பாடல்கள் மயனூலில் (சுவடி எண் 886 C) 34 - 38 வரை அமைந்தவை.*

மாதுவி யாகாதம் வழுத்துங்கண் டங்களாம்
கோது சூலம் குறிக்கும்விஷ் கம்பமாம்
ஓதும் வச்சிர மோங்கு மதிகண்டம்
நீதி யாம்விதி பாதம்பொல் லாதிதே. 390

*(இ. ள்) வியாகாதம், கண்டம், சூலம், விஷ்கம்பம், வச்சிரம், அதிகண்டம் வியதிபாதம் இவையும்,*

பொல்லா தையா புகலும் பரீகமும்
நல்லவை திருதி இந்தயோ கங்களும்
பொல்லாப் பென்று புகலுவன் சிற்பர்கள்
புல்லா ஒன்பதும் போற்றும்பொல் லாதிதே. 391

*(இ. ள்) பரீகம், வைதிருதி இவையும் மனைகோல ஆகாத யோகங்களாகும்.*

### மனையெடுக்கத் தேர்ந்தெடுக்கும் கரணங்களும் பலன்களும்

பண்ணும் பாலவம் பகரும் பவமுடன்
அன்ன லாருரை யறையும் கௌலவம்
எண்ணுந் தைதுலை யேற்கும் கரசையாம்
நண்ணும் பத்திரை நற்சுப மீயுமே. 392

*(இ. ள்) பாலவம், பவம், கௌலவம், தைதுலை, கரசை, பத்திரை இந்தக் கரணங்கள் ஆறும் சுபமானவை. மனைகோல, மனைபுக ஏற்றவை.*

உய்யு நாகவம் ஓங்கு சகுனியாம்
பைய வேசதுஷ் பாதம் வணசையும்
மெய்ய வேகிமிஸ் துக்கினம் ஐந்துமே
நையு மக்கரணம் பொல்லா தென்னுமே. 393

*(இ. ள்) நாகவம், சகுனி, சதுஷ்பாதம், வணசை, கிமிஸ்துக்கினம் இந்த ஐந்து கரணங்களும் அசுபமானவை. மனைகோல, மனைபுக ஆகாத கரணங்களாம்.*

## வீடு கட்டுதலும் சார பலன்களும்

### சூரிய சார பலன்

கூறும் பரணி குறிக்கும்இரண் டாம்பாதம்
வீருங் கார்த்திகை விளம்பும்நா லாம்பாதம்
கோரும் ரோகணி குறிக்கும் முதற்பாதம்
மாறும் எழிலும் வகுக்கும் பரிதியே ! 394

(இ. ள்) பரணி நட்சத்திரத்தின் பிற்பகுதி இரண்டு பாதங்கள், கார்த்திகை நான்கு பாதங்கள், உரோகணி முதற்பாதம் ஆகிய ஏழு பாதங்களில்,

பரிதி நின்று பகர்மாளி கட்டிடில்
குருதி அக்கினி கொடிய பயன்சொல்லும்
பரிதி போல்மயன் பகரும்நல் சாத்திரம்
நிருதி மாந்தர்க்கு நேராய் உரைத்ததே. 395

(இ. ள்) சூரியன் நிற்க, மனை கோல தொடங்கினால், அந்த மனைக்குத் தீயினால் பயம் உண்டாகும் என்று உலக மாந்தர்க்குச் சூரியனைப் போன்று மயன் தன் சாத்திரத்தில் எடுத்துரைத்துள்ளான்.

### செவ்வாய் சார பலன்

செப்பி டும்மதி சிறந்ததோர் கார்த்திகை
ஒப்பிடும் பூசம் ஓங்கு மகமுடன்
வெப்பும் பூரமும் விளங்கிடும் அஸ்தமும்
தப்பிலா ரேவதி மூலம்பொல் லாதிதே. 396

(இ. ள்) கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம், ரேவதி இந்த ஏழு நட்சத்திரங்களின் கால்களில்.

குறிப்பு: *394 - 411 வரையிலான பாடல்கள் மயநூல் என்னும் மனையடி சாஸ்திரத்தில் 497- 508 வரை அமைந்தவை.*

பொல்லாது ஐயா புகலும் குருமொழி
கொல்லும் நட்சத் திரபலன் ஏழிலும்
வெல்லும்அங் காரகன் இருக்க மாளிகட்டில்
புல்லும் புத்திரர் புகல ஆனியதே ! 397

*(இ. ள்) செவ்வாய் நிற்க, மனைகோலத் தொடங்கினால், அந்த மனைக்குத் தீயினால் அழிவுண்டாகும். புத்திரர்கள் மரணமடைவர்.*

### புதசார பலன்

பொன்னும் அஸ்தம் புகலும் அசுவினி
மன்னும் உத்திரம் மாமிருக சீரிடம்
வின்னும், ரோகணி விளங்கிடும் சித்திரை
துன்னும் ஆறும் தொகுப்பால் உரைத்ததே. 398

*(இ. ள்) அசுவினி, மிருகசீரிடம், அஸ்தம், உத்திரம், சித்திரை, உரோகணி ஆகிய இந்த ஆறு நட்சத்திரங்களின் கால்களில்,*

உரைத்தி டும்பதி ஓங்கும்புத னிருந்து
இரைத்திடும் கனத்து இனிதெனில் ஆவது
உரைத்தி டும்பதி உச்சத்தில் ஆவது
குறைத்தி டாமாளி கட்டுவது ஆட்சியே ! 399

*(இ. ள்) புதன் உச்சத்தில் அல்லது ஆட்சியில் இருக்க மாளிகைக் கட்டத் தொடங்கினால், நன்மைகள் மிகும்.*

ஆட்சி யன்றி அணிபெறும் புத்திரர்
மாட்சி மேவும் அதிகமாம் மன்னவர்
காட்சி யாவும் களித்திடும் இப்பலன்
தாட்சி இன்றி தனிய அறைந்ததே. 400

*(இ. ள்)* புத்திரர்கள் தோன்றுவர்; பெருமைகள் வந்து சேரும். அரசரால் நன்மைகள் மிகுதியாக உண்டாகும் என்பதைக் கூறியுள்ளார்கள்.

### குரு சார பலன்

ஆய உத்திரம் ஆன திருவோணம்
தூய உத்திராடம் உத்திரட் டாதியும்
ஏய பூராடம் ஏற்கும்மகா ரோகணி
காயு மிருகம் கடிறுபூ சமதே. 401

*(இ. ள்)* திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிடம், ஆகிய நட்சத்திரக் கால்களிலும்,

பூச மேவும் புகலும் ஆயிலியம்
வாசம் வீசும் வருக்கு நட்சத்திரம்
நாசம் செய்யும் நவில ஒன்பதும்
நேசம் செய்யா நெருங்கும் பலமதே. 402

*(இ. ள்)* ஆயிலியம், ரோகணி, பூசம் ஆகிய நட்சத்திரக் கால்களிலும் (ஆக ஒன்பது நட்சத்திரக்கால்களிலும்) குரு நின்றாலும்,

செல்ல உத்திரம் செழிக்கக் குருநிற்கில்
வல்ல இலக்கனம் வழங்குஉச் சத்திலும்
செல்வ மாளி சிறக்கவே கட்டினால்
நல்ல லட்சுமி நவிலும்வா சமதே. 403

*(இ. ள்)* உத்திர நட்சத்திரக் கால்களில் குரு நின்று ஆட்சி பெற்று விளங்க, அல்லது உச்சம் பெற்று இருக்க, அவ்வேளையில் வீடு கட்டத் தொடங்கினால், அந்த மனையில் எந்நாளும் செல்வம் நிலைத்து நிற்கும்.

**சுக்கிர சார பலன்**

நண்ணும் கேட்டை நவிலும் புனர்பூசம்
ஒண்ணும் சித்திரை ஓங்கும் அசுவினி
வண்ணம் மேவும் வகுக்கும்பூ ராடமாம்
அண்ண லார்உரை அறையும் அவிட்டமே. 404

*(இ. ள்)* கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவனி, பூராடம், அவிட்டம் ஆகிய நட்சத்திரக் கால்களில் சுக்கிரன் இருந்தாலும்,

மேவி டும்அனு ஷம்விசா கத்துடன்
தாவு மேதிரு வாதிரை தன்முதல்
மேவும் சதயம் விளம்புமிப் பத்திலும்
தூவு சுக்கிரன் தோன்றலும் நன்மையே ! 405

*(இ. ள்)* அனுஷம், விசாகம், திருவாதிரை, சதயம் (பத்து நட்சத்திரக் கால்கள்) ஆகிய நட்சத்திர கால்களில் சுக்கிரன் இருக்க மனைகோல, அம்மனைக்கு மிகுந்த நன்மைகள் உண்டாகும்.

நன்மை யாம்பதி நவிலும்சுக் கிரனும்
வன்மை யாக வலுத்துமே நின்றிடில்
புன்மை யாம்மாளி புகலவே கட்டிடில்
துன்மை நீங்கிச் சுகம்தரும் உண்மையே. 406

*(இ. ள்)* சுக்கிரன் ஆட்சியாக இருக்க அல்லது உச்சம் பெற்று இருக்க, மனைகோல, அம்மனையில் உள்ள குற்றங்கள் நீங்கி, எந்நேரமும் நன்மைகளும் சுகங்களும் உண்டாகும்.

### சனி சார பலன்

வருமே சதயம் வகுக்கும்பூ ரட்டாதி
இருமே சுவாதி எழில்உத்தி ரட்டாதி
ஒருமே பரணியாம் ஓங்கும்அ விட்டமும்
தருமே அனுஷமும் தாக்கும்கேட் டையதே. 407

*(இ. ள்)* சதயம், பூரட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை ஆகிய இந்த எட்டு நட்சத்திரக் கால்களில் சனி நிற்க,

இந்த நட்சத்தி ரப்பலன் எட்டிலும்
தொந்த மேவும் தொடரும்சனி நிற்கில்
அந்த மாக அறையமாளி கட்டிடில்
பந்தம்அற் றுப்போய் பாழும் அடைவதே ! 408

*(இ. ள்)* அந்த நேரத்தில் மனைகோல, அந்த மனைக்குரியவனுக்கு உறவுகள் அற்றுப் போகும். அந்த மனை பாழாகிப் போகும்.

அடையும் பூதம் அறையும்மா ளிதனில்
படையும் அற்றுப் பகரும்மூ தேவியாள்
அடையு மேபிரம்ம ராட்சதன் எப்போதும்
இடையும் சீதேவி எழில்வாக்கு தப்பாதே ! 409

*(இ. ள்)* மேலும், அந்த மாளிகையில் பூதங்கள் வாழும், மூதேவி அம்மனையில் விளங்குவாள். பிரம்மராட்சதன் அம்மனைக்கு வந்து சேர்வான்.

### இராகு சார பலன்

சொல்லு மேவு தொடரும் இராகுதான்
வெல்லும் இலக்கனம் மேவும் எதிர்சாரம்
புல்லு மேபதி நான்குநட் சத்திரம்
கொல்லும் மிருத்துவச் சாரம்பொல் லாதிதே. 410

*(இ. ள்) இராகு இருந்த இராசிக்கு எதிரே இருக்கும் பதினான்கு நட்சத்திரங்களின் கால்களும் தீமை செய்பவைகளாகும்.*

பொல்லாது ஐயா புகலுமந்த சாரம்
நல்ல மாளிகை நவில அமைந்திடில்
சொல்ல ஒண்ணாமல் தோற்றிடும் துன்பமும்
அல்லும் பகலும் அறையஒண் ணாதிதே. 411

*(இ. ள்) தீமை செய்யக்கூடிய இந்தப் பதினான்கு நட்சத்திரங்களின் கால்களில் இராகு இருக்க, மனைகோல சொல்ல இயலாத அளவிற்கு மிகுந்த துன்பங்கள் உண்டாகும்.*

### வீடு கட்டும் திசைகளின் பலன்
### கிழக்குத் திசையில் மனைகோலும் பலன்

இந்திரன் திக்கில் தானே
எழிலுறும் மனையெ டுக்கிற்
சொந்தமாம் மனையாள் சாவாள்
துக்கமென் மேலும் உண்டாம்
பந்தமாம் பயிரும் கேடாம்
............. மதியா தாவான்
அந்தமாம் வீடு தீப்பட்
டவதியும் அதிக மாமே. 412

*(சி. நூ. பா. : 614)*

*(இ. ள்) இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் மனைகோல, அம்மனைக்கு உரியவனின் மனைவி இறந்து போவாள்; மேன்மேலும் துக்கம் உண்டாகும்; உறவினர்களால் துன்பம் நேரிடும்; பயிர்த்தொழிலில் அழிவுண்டாகும்; யாரும் மதிக்க மாட்டார்கள்; வீடு தீயினால் அழியும்; துன்பங்களும் துயரங்களும் அதிகமாகும்.*

### தென்கிழக்குத் திசையில் மனைகோலும் பலன்

அங்கியில் மனையெ டுக்க
மங்கைதான் மலட தாகும்
கொங்கைவாழ் அரவம் தீண்டும்
தீப்படும் மனையாள் சாவாள்
பொங்குமாங் குழலி னாளே !
பொருளது களவு போகும்
மங்கைவேள் மயனார் சொன்ன
வண்மைநூல் விளம்ப லுற்றேன். 413
*(886 a : 93)*

*(இ. ள்) அக்கினி மூலையில் மனைகோல, அம்மனைக்கு உரியவனின் மனைவி மலடியாக இருப்பாள்; பாம்பு தீண்டும்; வீடு தீப்படும்; மனையாள் மரணமாவாள்; பொருள்கள் களவு போகும்; விரிந்த பரந்த கூந்தலையுடைய பெண்ணே ! மயனார் எடுத்தோதியுள்ள நூலின் திறத்தைக் கூறுகின்றேன்.*

### தெற்குத் திசையில் மனை கோல பலன்

எமனுட திசையிற் றானே
ஏற்றதோர் மனையெ டுக்கிற்
சமனிலை மனைவி சண்டை
தானொடு புதல்வன் சாவு
நமனிலை பிணியிற் சிக்கி
நலிந்திட மெலியும் தேகம்
குமரியும் அழிவுண் டாகும்
குஷ்டநோய் குறையுண் டாமே. 414
*(சி. நூ. பா. : 616)*

*(இ. ள்) தெற்குத் திசையில் மனையெடுக்கில், மனைக்குரியவனின் மனைவி எக்காலமும் சண்டையிடுபவளாக இருப்பாள்; அன்புக்குரிய புதல்வன் மரணமடைவான்; மரணத்திற்கு ஒப்பான நோயினால் உடல் மிகவும் வற்றிப் போகும்; மனைவிக்கு அழிவு நேரிடும்; மனைக்குரியவனுக்குக் குஷ்டநோய் தோன்றும்.*

## தென்மேற்குத் திசையில் மனைகோல பலன்

கன்னிமேல் மனையெ டுக்கில்
கைப்பொருள் மிகவும் உண்டாம்
அன்னமும் சொர்ணத் தாலும்
ஆயிழை விளங்கி நிற்பாள்
பொன்னொரு தானி யங்கள்
பொருந்தவே மிகவுண் டாகும்
முன்னமே அரனார் சொன்ன
முறைமைநூல் விளம்ப லுற்றேன். 415

*(886 a : 94)*

*(இ. ள்) தென்மேற்குத் திசையில் மனையெடுக்கில், மனைக்குரியவனுக்கு மிகுந்த பொருட்கள் சேரும்; வீட்டில் திருமகள் இருந்து விளங்குவாள்; பொன்னும் தானியங்களும் மேன்மேலும் சேரும்; முன்னாளில் சிவபெருமான் எடுத்துரைத்த இந்நூலை இந்நாளில் கூறுகின்றேன்.*

### வேறு

நிருதிமேல் மனையெ டுக்கில்
நிலங்கரை வயலும் உண்டாம்
திருமகள் அருளும் உண்டாம்
செய்தொழில் அதிக லாபம்
கருதிய படிகை கூடும்
கனதனங் களுமுண் டாகும்
பருதிபோல் ராஜ னாகிப்
பார்தனில் வாழு வானே. 416

*(சி. நூ. பா. : 617)*

*(இ. ள்) தென்மேற்குத் திசையில் மனையெடுக்கில், நிலம், கரை, வயல் முதலானவை மேன்மேலும் சேரும்; செல்வம் மிகும்; செய்தொழிலில் அதிக இலாபம் கிட்டும். கருதியபடி அனைத்துக் காரியங்களும் கைகூடும். மனைகோலுபவன் மன்னனைப் போன்று விளங்குவான்.*

### மேற்குத் திசையில் மனைகோலும் பலன்

வருணன்மேற் றிசையில் தானே
வளர்மனை தனையெ டுக்கில்
அருணன்போற் புதல்வ ருண்டாம்
அழகிய மனைவி யுண்டாம்
கருணன்போற் தயாள முண்டாம்
கைப்பொருள் அதிக முண்டாம்
தருணத்தில் உதவி செய்யும்
சண்முகன் அருளுண் டாமே. 417

*(சி. நூ. பா. : 618)*

*(இ. ள்) மேற்குத் திசையில் மனையெடுக்க, புத்திரர்கள் தோன்றுவார்கள்; அழகான மனைவி கிடைப்பாள்; மனைக்குரியவன் பிறருக்குப் பொருள்களை வாரி வழங்குவான்; பொருள் மேன்மேலும் பெருகி இருக்கும்; இறைவனின் அருள் கிட்டும்.*

### வடமேற்குத் திசையில் மனை கோல பலன்

வாயுமேல் மனையெ டுக்கில்
வயிற்றினில் பிணிகள் உண்டாம்
காயநோய் கொண்டு சாவான்
காவினால் பொருளும் போகும்
பேயொடு குடியும் கொள்ளும்
பிணம்சுடு காட தாகும்
மாயவேள் மயனார் சொன்ன
வண்மைநூல் விளம்ப லுற்றேன். 418

*(886 a : 95)*

*(இ. ள்) வடமேற்குத் திசையில் மனையெடுக்கில், மனைகோலுபவனின் வயிற்றில் நோய்கள் உண்டாகி, அதனால் மரணமடைவான்; பொருள்கள் களவு போகும்; மனையானது பாவடைந்து பேய்கள் குடிகொண்டு, பிணங்களைப் புதைக்கும் சுடுகாடு போலாகும் என்று மயனார் சொன்னதை எடுத்துரைத்துள்ளேன்.*

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

வாயுமேல் மனையெ டுக்கில்
வயிற்றினிற் பிணியுண் டாகும்
தேயுமே தேகம் தானும்
தேய்பிறைச் சந்தி ரன்போல்
மாயுமே மனையாள் பிள்ளை
வழக்குகள் மிகவுண் டாகும்
பேயுமே கூடிக் கொல்லும்
பின்சுடு காட தாமே. *(ம. நூ. பா. : 271)*

**வடக்குத் திசையில் மனைகோலும் பலன்**

குபேரன்வாழ் திசையிற் றானே
கோலமா மனையெ டுக்கில்
நபேரமணி பிரபை போன்ற
நவமணி பூஷ ணங்கள்
அபாரமாம் பொருளும் சேரும்
அடிமையாள் அதிக மாகும்
தபோதனர் வரவும் உண்டாம்
சகலபாக் கியமுண் டாமே. 419

*(சி. நூ. பா. : 620)*

*(இ.ள்) வடக்குத்திசையில் மனையெடுக்க, மிகுந்த விலையுயர்ந்த அணிகலன்களும், செல்வங்களும் சேரும்; வேலையாட்கள் மிகுதியாகச்சேருவார்கள்; தவம்செய்வோர்வந்து வாழ்த்துவார்கள்; அனைத்துவிதமான பாக்கியங்களும் வந்து சேரும்.*

**வடகிழக்குத் திசையில் மனைகோல பலன்**

ஈசன்மேல் மனையெ டுக்கில்
ஏந்திழை மணமுண் டாகும்
காசினி மக்கள் உண்டாம்
சதிருடன் பொருளும் உண்டாம்
வாசமாம் திருவே சேரும்
மனையவள் சிறப்பாய் வாழ்வாள்
மாசிலாப் பிள்ளை உண்டாம்
மயனுமே சொன்ன நூலே. 420

*(886 a : 96)*

*(இ. ள்)* வடகிழக்குத் திசையில் மனையெடுக்கில், மனைகோலுபவனுக்குத் திருமணம் நடக்கும்; புத்திரர்கள் தோன்றுவார்கள்; பொன், பொருள்கள் சேரும்; மனைவி, மக்களால் மகிழ்ச்சி உண்டாகும் என்று மயன் எடுத்தோதியுள்ளார்.

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

ஈசானிய மூலை தன்மேல்
இயல்புடன் இருந்துகொண்டு
வாசமாம் இதனில் வாழ்ந்தால்
வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனார் புவியோர்க்கு எல்லாம்
பொருந்திய மனுசன் ஆவான்
வாசமின் குழலி னாளே !
வகைமனைக் குறிகள் கண்டாய்.

*(ம. நூ. பா. : 270)*

**வேறு**

ஈசனார் திசையிற் றானே
எழிலுறும் மனையெ டுக்கிற்
போசனம் பண்டம் ஆடை
பொருள்சுகம் பெண்டு மக்கள்
கேசவன் தன்னைப் போலே
கிளைவழி பலமே லோர்கள்
நேசமாய்ப் பூவில் வாழ்வன்
லெட்சுமி கடாக்ஷம் தானே. 421

*(சி. நூ. பா. : 621)*

*(இ. ள்)* வடகிழக்குத் திசையில் மனையெடுக்கில், மனைகோலுபவனுக்குப் போசனம், தின்பண்டங்கள், ஆடைகள், பொருட்கள் போன்றவை சேரும். மனைவி, மக்களால் மகிழ்ச்சியடைவான். உற்றார் உறவினர்களுடன் திருமாலைப் போன்று விளங்கி, செல்வம் மிக்கவனாக வாழ்வான்.

# 13. மனைகோலும் காலமும் நேரமும்

## மனைகோல ஆகும், ஆகா நாட்கள்

நன்னாளினும் மனைகோலினும் நலதாகு இராசி
முன்னாவது வலமாவது முளரித்திரு வுறையும்
பின்னாவது இடமாவது பேணிமனை கோலில்
பொன்னாவது பொருளாவது உயிராவது போமே. 422

*(சி. நூ. பா. : 127)*

*(இ. ள்)* நல்ல மாதங்களிலும், நல்ல வாரங்களிலும், நல்ல திதிகளிலும், நல்ல நடசத்திரங்களிலும், நல்ல யோகங்களிலும், நல்ல இராசிகளிலும் மனைகோல நலமுண்டாகும். தீய மாதங்களிலும், தீய வாரங்களிலும், தீய திதிகளிலும், தீய நட்சத்திரங்களிலும், தீய யோகங்களிலும், தீய இராசிகளிலும் மனைகோல தீமையுண்டாகும். மனையெடுப்போர் இராசி தன்னை முன் வலமாகக் கொள்வாராகில், மிகவும் நன்று. பின் இடமாகக் கொள்வாராகில், பீடையுண்டாகும். அவ்வாறு மனைகோல பொன், பொருள், உயிர் இவற்றுள் ஒன்று மனைக்குரியவனுக்கு இருக்காது.

## மனைகோல ஏற்ற நாட்கள்

கதிரெனும் வாரம் ரேவதி அத்தம்
கர்த்தனா மூலத்திரு வோணம்
பதியென வாழ்வார் உத்திரம் மூன்றும்
பாங்குரை ஒன்றுரைப் பதினான்
அதிபதி யாக அசுபதி யுடனே
அர்த்தத்தின் வாழ்குவன் வந்தால்
மதிமுகன் அருளால் சகலத்தைப் படைத்து
மைந்தருண் டாகி வாழ்வான். 423

*(796 : 28)*

*(இ. ள்) ஞாயிற்றுக்கிழமையில் ரேவதி, அஸ்தம், மூலம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் வீடுகோல, மனைக்குரியவன், தலைவனைப் போன்று, குதிரைவாகனத்துடன், செல்வம் மிகுந்தவனாக வாழ்வான். மேலும், இறைவனருளால் அனைத்து நன்மைகளையும் பெற்றுப் புத்திரர்களோடு வாழ்வான்.*

திங்களில் சோதி ரோகணி புனர்த்தம்
திருவோணம் மான்தலை வரினும்
சங்கரன் அருளால் துதிகைசப் தமியும்
சார்ந்தஏ காதசி வரினும்
தங்குமெய்ப் பொருளொடு தரணியை ஆளுவான்
தானியம் தினமும் ஆள்வனாம்
மங்கையும் மணமும் மாகமுடி தரித்து
மைந்தருண் டாகி வாழ்வான். 424

*(இ. ள்) திங்கட்கிழமையில் சுவாதி, உரோகிணி, புனர்த்தம், திருவோணம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தாலும் அன்று மனைகோலில் மனைக்குரியவனுக்குப் பொருள் சேரும்; உலகை ஆளுவான். தானியம் பெருகும்; மங்கையை மணம் முடித்து மைந்தர்கள் தோன்றி, மகிழ்ச்சியுடன் வாழ்வான்.*

**மனைகோல நாட்கள்**

அந்தக் கிழமை தனைத்தெட்டு
ஆகும் சனியாம் அளவெண்ணி
முந்தி மூன்றே முக்காலின்
முறையே பெருக்க வருங்குளிகன்
வந்த குளிகன் நிலம்பேர்க்க
மனைமு கூர்த்தக் கால்நாட்டத்
தந்த வாகனம் தானேறத்
தானியம் போட தான்நன்றே. 425

*(இ. ள்)* எந்தக் கிழமையில் குளிகன் காலம் பார்க்க வேண்டுமோ அந்தக்கிழமை முதலாய் சனிக்கிழமை வரையிலும் கணக்கெண்ணி வந்த தொகையை மூன்றே முக்காலிற் பெருக்கிக் கண்ட நாழிகையைக் குளிகைக் காலமாக்கிக் கொண்டு மனைகோல, ஊரேற்ற, முகூர்த்தக்கால் நாட்ட, வாகனங்கள் ஏற, தானியங்கள் இருப்புக் கட்ட உத்தமமாகும். *(சி. நூ. பா. : 292)*

## பிறந்த நட்சத்திரத்திற்கு ஏற்ற மனைகோலும் நாட்கள்

பிறந்தநாள் இரண்டு நான்கும்
ஒன்பது எட்டும் ஆறும்
சிறந்தநாள் ஆகும் மற்றும்
சீருடன் சம்பத் தாகும்
அறிந்தநூல் கற்ற வல்லோர்
மூன்றஞ்சோ டேழு நீக்கி
சிறந்ததால் மொழிந்த தெல்லாம்
திண்ணெனப் பொருந்தும் காணே. 426

*(886 a : 65)*

*(இ. ள்)* ஒருவன் பிறந்த நாளுக்கு இரண்டாம் நாளும், நான்காம் நாளும், ஒன்பதாம் நாளும், எட்டாம் நாளும், ஆறாம் நாளும் மனைகோல நல்ல நாட்களாகும். இந்த நாட்களில் மனையைக் கோல, மனைக்கு உரியவனுக்குச் சீரும் சிறப்பும் மற்றும் செல்வங்களும் வந்து சேரும். ஒருவன் பிறந்த நாளின் மூன்றாம் நாளும், ஐந்தாம் நாளும், ஏழாம் நாளும் மனைகோல தீய நாட்களாகும். இவற்றைக் கற்று வல்ல பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

குறிப்பு : இப்படியே ஒன்பது ஒன்பது நாட்களாக இருபத்து ஏழு நாட்களுக்கும் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். பாடலில் உள்ள செய்தியைக் கூறும் மற்றொரு பாடலும் காணப்படுகிறது.

### வேறு

தனதுநா ளும்பின் நாளும்
சாய்த்திடும் நான்கும் ஆறும்
வினவில்எட் டொன்பான் நாளும்
விருத்தியே மிகவும் உண்டாம்
பினவுமுன் றைந்து நாளும்
ஏழாம்நாள் இவைபொ ருந்தா
நினவுமுன் சொன்ன நாளில்
நிதமனை யெடுக்கு மாறே. 427

*(886 a : 62)*

### மனைகோல ஏற்ற நாட்கள் வாரங்களின் பலன்கள்

ஞாயிறு அலையப் பண்ணும்
நன்மையாம் திங்க ளாகில்
சேயுறப் படுவ தாகும்
செழும்புதன் மக்கள் பேறு
வீசிய வியாழம் பொன்னாம்
வெள்ளியே விளைவுண் டாகும்
ஆயதோர் சனிபெ ருக்கும்
அகந்தனை எடுக்கும் காலே. 428

*(886 a : 107)*

*(இ. ள்) ஞாயிற்றுக்கிழமை - அலைய வைக்கும்; திங்கட்கிழமை - நன்மையைத் தரும்; செவ்வாய்க் கிழமை - தீப்படும்; புதன்கிழமை; புத்திரர்கள் தோன்றுவர்; வியாழக்கிழமை - பொருள் சேரும்; வெள்ளிக்கிழமை - தானியம் உண்டாம்; சனிக்கிழமை வம்ச விருத்தி. ஆகையால் இந்த தினங்களை அறிந்து, மனைகோல வேண்டும்.*

### இதுவுமது

அருக்கன் அலைகாட்டும் அருந்திங்கள் ஊண்காட்டும்
செந்தீபெறும் செவ்வாய் சுடர்காட்டும் - சுந்தரமாய்
புந்திக முரைக்கும் பொன்வெள்ளி களையடுக்கும்
விந்தை மனங்காரி மன். 429

*(886 a : 202)*

## மனைகோல நாட்கள்
## ஏறுநாள், முகட்டுநாள், இறங்குநாள்

இலிங்கதா பரங்கள் போல
இசைந்மூ வரையும் கீறி
விலங்குபோல் வரைநால் கீற
மேலது முகட்டு நாளாம்
குலுங்குமாம் இறங்கு நாளில்
கோபுரம் மாட கூடம்
துலங்கவீழ்ந் திடிந்து பாழாய்
துக்கமும் காணு மென்றே. 430

*(886 a : 154)*

*(இ. ள்)* இலிங்க தாபரம் போலே மூன்று வரை கீறி, குறுக்கே நாலுவரை கீற மூன்று இலிங்க சொரூபமாகும். அடிவரை முதலாக அசுவதி தொட்டு எண்ணிற் சரியாக இருபத்தேழு நட்சத்திரங்களும் பொருந்தும். அதில் ஏறிவரும் நாளில் மனை, மாடகூடம், அம்பலம், கோயில் எடுக்க நன்றாம். இறங்கு நாளில், கோபுரம், ஆலயம், மாடகூடம் மனையெடுக்க இடிந்து பாழாகும். முகட்டு நாளில் முகடுயர்த்த நன்றாம்.




*(இ. ள்)* அடிக்கோட்டில் (காட்டியுள்ளபடி) முதல் தானத்தில் துவங்கி அசுபதியை நிறுத்தி, அது முதலாக எண்ணிவர, அசுபதி, பரணி, கார்த்திகை, ரோகணி ஆகிய நான்கு நாட்களும் **ஏறு நாட்கள்**. மிருகசீரிடம் **முகட்டுநாள்**. திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம் ஆகிய நான்கு நாட்களும் **இறங்கு நாட்கள்**. மகம், பூரம், உத்திரம், அஸ்தம் இவை நான்கும் **ஏறு நாட்கள்**. சித்திரை **முகட்டுநாள்**. சுவாதி,

விசாகம், அனுஷம், கேட்டை இவை நான்கும் **இறங்கு நாட்கள்.** மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் இவை நான்கும் **ஏறு நாட்கள்.** அவிட்டம் **முகட்டு நாள்.** சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி இவை நான்கும் **இறங்கு நாட்கள்** என்று அறிய வேண்டும்.

### மனைகோல ஏற்ற பஞ்சகம்

வாரநற் திதிநாள் ஓரைஇன் றுவரை
வகைவரு தொகையையொன் றாக்கி
பாரிலொன் பானில் அரித்துறு சேடம்
பஞ்சக மாகுமொன் றிரண்டும்
ஈரிரண் டாறும் எட்டுமிம் முறையே
எறிமிருத் தக்கினி இராஜ
சோரரோ கமதாம் மூன்றைந்தே எழான்பான்
தூயநிஷ் பஞ்சகம் தாமே. 431

*(886 b : 35)*

*(இ. ள்)* ஞாயிறு முதல் அன்றைய வாரம் வரையும், பிரதமை முதல் அன்றைய திதி வரையும், அசுவதி முதல் அன்றைய் நட்சத்திரம் வரையும், மேடம் முதல் அப்பொழுது உதயமாகும் இலக்கனம் வரையும் எண்ணிக் கண்ட தொகையை ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதி **பஞ்சகம்** எனப்படும்.. மீதியாக ஒன்றுவந்தால் **மிருத்து பஞ்சகம்**: மீதியாக இரண்டு வந்தால், **அக்கினி பஞ்சகம்**; மீதியாக மூன்று வந்தால், **நிஷ் பஞ்சகம்**; மீதியாக நான்கு வந்தால், **இராஜ பஞ்சகம்;** மீதியாக ஐந்து வந்தால், **நிஷ் பஞ்சகம்**; மீதியாக ஆறு வந்தால், **சோர பஞ்சகம்**; மீதியாக ஏழு வந்தால், **நிஷ் பஞ்சகம்**; மீதியாக எட்டு வந்தால், **ரோக பஞ்சகம்.** நிஷ் பஞ்சகம் மனைக்கோல, குடிபுக நல்லது.

குறிப்பு : பகலில் இராஜ பஞ்சகமும், அக்கினி பஞ்சகமும் இரவில் சோர பஞ்சகமும், ரோக பஞ்சகமும் ஆகாது. மிருத்து பஞ்சகம் சகல காரியங்களுக்கும் ஆகாதென்பதாம் *(சோதிடப் பேரகராதி பக் 158-159)*

## மனைகோல நல்லநாள் தேர்ந்தெடுத்தல்

தக்கசன்மம் நாலுபத்தில் சசிதான் நிற்கத்
தருபதினொன் றில்குருவுங் குசனும் மந்தன்
மிக்கஇவர் தான்இருந்து முகூர்த்தம் செய்தால்
மேவியதோர் மனைதனக்கு வயது நூறாம்
தக்கதொரு இலக்கனத்தில் குருவும் சுக்கிரன்
தரும்ஐந்தில் மூன்றுவெய்யோன் தகைமை ஆறில்
திக்குயரும் குசனிருந்தால் அகத்துக் கேதான்
திறவயது நூறெனவே செப்பி னாரே ! 432

*(இ. ள்) சென்ம இலக்கனத்திற்கு நான்காமிடம் அல்லது பத்தாமிடத்தில் சந்திரன் நிற்க, பதினொன்றாம் இடத்தில் குரு, செவ்வாய், சனி இவர்களிருக்க முகூர்த்தம் செய்தால், மனை நூறு ஆண்டுகள் வரை நிலைத்து நிற்கும். இலக்கனத்தில் குருவும் சுக்கிரனும் இருக்க, ஐந்தாமிடம், மூன்றாமிடம் இவற்றில் ஒன்றில் சூரியன் இருக்க, ஆறாமிடத்தில் செவ்வாய் இருக்க முகூர்த்தம் செய்யில் அந்த மனை நூறு ஆண்டுகள் வரை நிலைத்து நிற்கும். (ம. நூ. பா. : 170)*

## இதுவுமது

மேவியசீர் இலக்கனத்தில் சோமன் நாலில்
விரும்புபுதன் குருஅதீத மான காலம்
தாவியபட் டணம்நகரம் முகூர்த்தம் செய்தால்
தகைமைவய திருமூன்று நூற தாகும்
மேவியதோர் உதயத்தில் பத்தில் வெள்ளி
ஒருமூன்றில் புதன்குருவும் அஸ்த மானம்
மாவுயர்பட் டணம்நகரம் முகூர்த்தம் செய்யில்
வரும்நூறு இருமூன்றாய் வகுத்த வாறே. 433

*(இ. ள்) இலக்கனத்திற் சந்திரன் நிற்க, நான்காமிடத்தில் புதன் இருக்க, குரு அஸ்தமனமாக முகூர்த்தம் செய்தால், அந்த மனைக்கு அறுநூறு வயதாகும். இலக்கனத்திற்குப்*

*பத்தாமிடத்தில் சுக்கிரன் இருக்க, மூன்றாமிடத்தில் புதன் இருக்க, குரு அஸ்தமனமாக முகூர்த்தம் செய்தால், அந்த மனை அறுநூறு ஆண்டுகள் விளங்கும். (ம. நூ. பா. : 171)*

## இதுவுமது

பொங்குகுரு க்ஷேத்திரத்தில் வெள்ளி வீட்டிற்
புதனிருக்க நகர்மூகூர்த்தம் புரிவீ ராகில்
தங்குவயது இருநான்கு நூறது ஆகும்
தரும்இரவி உதயம்அஸ்த மானகாலம்
சங்கைதரு பத்ததிலே சோமன் நிற்க
தகமைநகர் ஆலயமே முகூர்த்தம் செய்தால்
இங்கிதமாய் வயதுஒரு சகஸ்திரம் என்று
இம்மொழிக்கு மயனுரையும் இயம்பி னாரே! 434

*(இ. ள்) குரு, க்ஷேத்திரத்தில் இருக்க, சுக்கிரனின் வீட்டில் புதன் இருக்க, முகூர்த்தம் செய்தால், அம்மனை இவ்வுலகில் எண்ணூறு ஆண்டுகள் வரை நிலைபெற்று இருக்கும். சூரியன் அஸ்தமன காலத்தில் இலக்கனத்திற்கு பத்தாமிடத்தில் சூரியன் நிற்க, ஆலயம் முகூர்த்தம் செய்யில் ஆயிரம் ஆண்டுகள் வரை அந்த ஆலயம் நிலைபெற்று நிற்கும். (ம. நூ. பா. : 172)*

## இதுவுமது

தேசுயர்ந்த சுக்கிரனும் உதய மாகத்
திருந்தியதோர் ஏழதிலே குருவி ருக்க
மாசகன்ற பத்ததிலே சோமன் நிற்க
வளர்முகூர்த்தம் ஆலயமே மகிழ்ந்து செய்யில்
பேசுவது வயதும்ஒரு சகஸ்திரம் என்றே
பேசலாம் ஓரைதனில் வெள்ளி நிற்க
வாரகுரு க்ஷேத்திரமாம் நகருக் கேதான்
மருவுமன்ற சேதமில்லை மகிழ வாரே. 435

*(இ. ள்)* இலக்கனத்தில் சுக்கிரன் இருக்க, ஏழாமிடத்தில் குரு இருக்க, பத்தாமிடத்தில் சந்திரன் இருக்க, மனைகோல முகூர்த்தம் செய்தால், அந்த ஆலயம் ஆயிரம் ஆண்டுகள் அழியாமல் இருக்கும். பிறந்த இலக்கனத்தில் சுக்கிரன் இருக்க, குரு ஆட்சி பெற்று இருக்க, முகூர்த்தம் செய்தால், தீயினால் பயம் இல்லை. *(ம. நூ. பா. : 173)*

## இதுவுமது

வரும்கடக மகரமது மீனம் தன்னில்
　　வளமைமிகு சந்திரனும் மருவி நின்றால்
திருஉயர்ந்த கிரகமதில் வைக்கோல் போடச்
　　செயமதுவாம் பூராடம் திருவோ ணம்தான்
தருஉயர்ந்த உரோகணிஉத் திரங்கள் மூன்றும்
　　தங்கியஆ யிலியமது சாற்றக் கேளு
வருமிருக சீரிடத்தில் குருஇ ருக்க
　　வரும்குருவா ரங்கள்செய மகிழ்ச்சி யாமே. 436

*(இ. ள்)* கடகம், மகரம், மீனம் இந்த இராசிகளில் ஒன்றில் சந்திரன் இருக்க, கூரை வேய, நன்மையாகும். பூராடம், திருவோணம், உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம் இவைகளில் குரு நிற்க, வியாழக்கிழமைகளில் கூரை வேய நன்மையாகும். *(ம. நூ. பா. : 174)*

## இதுவுமது

திருந்துசல இராசியதில் வெள்ளி நிற்க
　　சிறந்தசுக்ர வாரமுமாய் இருந்தால் ஆக்கம்
பொருந்துசல இராசிதனில் சோமன் நிற்க
　　புகலுதிங்கள் வாரமதாய் இருக்கு மாகில்
வருந்துமக மனையாளும் கர்ப்ப மாகில்
　　வளர்முகூர்த்தம் குடிபுகவும் மத்தி பம்தான்
வருந்தியதோர் கிரகபலன் இதுவாம் என்று
　　மயன்உரைஇவ் வாறதனை மகிழ்ந்து பாரே. 437

*(இ. ள்) சல இராசியில் சுக்கிரன் இருக்க, வெள்ளிக் கிழமையாக இருந்தால், செல்வம் உண்டு. சல இராசியில் சந்திரன் இருக்க, திங்கட்கிழமையாக இருந்தால், மனைகோல, சுமாரான பலன் கிடைக்கும். (ம. நூ. பா. : 175)*

## இதுவுமது

இருங்குரு வெள்ளி தானும்
இலக்கனம் நாலேழ் ஏறில்
வருங்கதிர் ஆறில் மேவி
மந்தனோர் மூன்றில் நிற்க
பெரும்புறம் கோயில் வீடு
பீடமே செய்வீ ராகில்
திருந்திய வருஷம் நூறு
தீர்க்கமாய் விளங்கு மென்றே. 438

*(886 a : 157)*

*(இ. ள்) இலக்கனத்திற்கு நான்காமிடத்தில் அல்லது ஏழாமிடத்தில் குருவும் சுக்கிரனும் கூடி இருக்க, சூரியன் ஆறாம் இடத்திலும் சனி மூன்றாமிடத்திலும் இருக்க, கோயில், வீடு, பீடம் முதலானவற்றைக் கட்ட அவை நூறாண்டுகள் அழியாமல் விளங்கி நிற்கும்.*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

இருங்குரு வெள்ளி வாரம்
இலக்கனம் நாலேழ் தன்னில்
வருங்கதிர் ஆறில் தாக்க
வந்தனன் மூன்றில் நிற்க
பெரும்புறங் கோயில் வீடு
பீடமே செய்வீர் ஆகில்
திருந்தவே வயது நூறு
தீர்க்கமாய் விளங்கும் மாதே !

*(ம. நூ. பா. : 176)*

## இதுவுமது

உரைபுகர் வியாழம் திங்கள்
ஓரையேழ் பத்தில் நிற்க
வரந்தர மனைகள் செய்யில்
வருஷமா யிரமும் மண்ணில்
பருமணி நாட கங்கள்
பராக்கிரம மாகும் பூமன்
திருவருள் புரிந்த வேந்தர்
பத்தியம் பாத்திர மாமே. 439

*(886 a : 157)*

*(இ. ள்)* இராசியில் சுக்கிரனும் இலக்கனத்திற்கு ஏழா மிடத்தில் குருவும், பத்தாமிடத்தில் சந்தினும் இருக்க, வீடுகள் கட்ட, அவ்வீடு இவ்வுலகில் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கும். அவ்விடத்தில் கருணையையுடைய வேந்தர்கள் விரும்பித்தங்கிவீரத்துடனும்தைரியத்துடனும்விளங்குவார்கள்.

## இதுவுமது

பொருது மந்தணன் புந்திபன் தோன்றிடில்
அரிய ஓரையி லாசனன் கேந்திரம்
மருவு லாவிய மாளிகை செய்வீரால்
வருஷ மாயிரம் மண்ணில் விளங்குமே ! 440

*(சி. நூ. பா. : 323)*

*(இ. ள்)* புதனும் வியாழனும் பதினோராமிடத்தில் இருக்க, அல்லது ஓரையாக சுக்கிரன் கேந்திர திரிகோணங்களில் இருக்க, மனைகோலில் அந்தமனை ஆயிரம் வருடம் பிரகாசித்திருக்கும்.

## இதுவுமது

பரவு திங்கள் பளிங்குபொன் பத்துற
தரவு சேய்சனி தாக்கப்பன் னொன்றினில்[1]
மருவு லாவிய மாளிகை செய்வீரால்
வருஷ மாயிரம் ஆகியும் வாழ்வரே. 441

*(886 a : 155)*

---

*1. பொன்னொன்றில்.*

*(இ. ள்)* இலக்கனத்திற்குப் பத்தாமிடத்தில் சந்திரன், சுக்கிரன், குரு இருக்க, செவ்வாய், சனி ஆகியவை பதினொராமிடத்தில் இருக்க, மனைகோலில் அம்மனை காலம் காலமாக மண்ணில் விளங்கும்.

குறிப்பு : இப்பாடல் பல மாற்றங்களுடன் நூல் ஒன்றில் காணப்படுகிறது.

பரவு திங்கள்பொன் பத்துறில் நாலுறத்
தரணி சேயசத் தாகப்பன் னொன்றினில்
வரையி லெய்திய வாழ்மனை செய்திடில்
வருஷ மெண்பது மண்ணில் விளங்குமே.

*(சி. நூ. பா. : 324)*

## இதுவுமது

பார்ம கன்புகர் பானுபொன் ஆறுடன்
ஓரை மூன்றுயர் ஐந்தினில் உற்றிட
ஊரிடம் புறமோர் அதம்செய்து வாழ்ந்திடில்
ஓரிடம் ஆண்டு இருநூறு விளங்குமே.[1] 442

*(886 a : 160)*

*(இ. ள்)* சென்ம இலக்கனத்திற்கு ஆறாமிடத்தில் செவ்வாய், சுக்கிரன், சூரியன், குரு ஆகியோர் நிற்க, அல்லது சென்ம இராசியிலாவது மூன்றாமிடத்திலாவது ஐந்தாமிடத்திலாவது இருக்க, மனைகோல, அந்த மனை இருநூறு ஆண்டுகள் நிலைபெற்று விளங்கும்.

## இதுவுமது

தூய வோரைபத் தேழினில் சொல்லிய
மேய திங்கள் புதன்குரு மேவவே
கோயில் மாநகர் கூரகம் செய்வீரேல்
ஆய ஆண்டது நூறுவி ளங்குமே. 443

*(886 a : 160)*

1. ஊரி டம்புற மோர்நகர் செய்திடில்
ஏர்கொள் ரெண்டுநூ றாண்டுவி ளங்குமே.

*(இ. ள்)* சென்ம இராசியிலாவது பத்தாமிடத்திலாவது ஏழாமிடத்திலாவது சந்திரன், புதன், குரு ஆகிய கோள்கள் நிற்க, கோயில், நகரம், வீடு முதலானவற்றைக் கட்டினால் நூறு ஆண்டுகாலம் நிலைபெற்று விளங்கும்.

### இதுவுமது

பருதி புந்தி புகர்பதி னொன்றில்
அரிய ஓரையில் அந்தணர் கேந்திரம்
மருவு லாவிய மாளிகை செய்வீரால்
வருஷ மாயிரம் மண்ணில் வழங்குமே. 444

*(886 a : 156)*

*(இ. ள்)* சூரியன், புதன், சுக்கிரன் ஆகியோர் சென்ம இலக்கனத்திற்குப் பதினோராமிடத்தில் அல்லது சென்ம இராசியில் இருக்க, குரு கேந்திர கோணங்களில் இருக்க, மாளிகை செய்தானாகில், அம்மாளிகை இவ்வுலகில் ஆயிரம் ஆண்டுகள் நிலைபெற்று விளங்கும்.

### இதுவுமது

மந்திரி ஏழில் நிற்க
மனையது செய்வா னாகில்
அந்தரி அந்தி யேதான்
அரசன்வந் தாண்டு கொள்வான்
புந்திசேய் ஏழில் நிற்க
புத்திரன் ஒருவன் சாவான்
இந்துவே ஏழில் நிற்க
எரிப்பது விறகு தானே. 445

*(886 a : 162)*

*(இ. ள்)* குரு, இலக்கனத்திற்கு ஏழாமிடத்தில் நிற்க, மனைகோலில், அந்த மனையை மனைக்குரியவன் கட்டி முடிப்பதற்கு முன்னால், அரசன் கைப்பற்றிக் கொள்வான்.

ஏழாமிடத்தில் புதன் இருக்க, அவ்வீட்டைக் கட்டியவனின் புதல்வர்களில் ஒருவன் இறந்து போவான். ஏழாமிடத்தில் சந்திரன் இருக்க, கட்டப்பட்ட வீடு அழிந்து எரிப்பதற்கு விறகாகப் பயன்படும்.

## மனையெடுப்பவனின் இராசி

அகமுறு சென்மம் மூன்று
ஐந்துடன் ஆறும் ஏழும்
பகருமொன் பதுவும் பத்தும்
பதினொன்று நன்மை யாகும்
இகழுள இரண்டும் நான்கும்
எட்டுமீ ராறும் ஆகா
புகழுள ராசி தன்னிற்
பொருத்தம துரைத்தி டாயே. 446

*(இ. ள்)* செனனமும் *5, 3, 6,7, 9, 10, 11* ஆகிய இந்த இராசிகள் பொருந்தும். இது தவிர *2, 4, 8, 12* பொருந்தா.து. ஆகையால் சென்ம நட்சத்திரமாவது நாம நட்சத்திரமாவது பார்த்துச் சொல்லவும்.

குறிப்பு : மனைக்கு உரியவன் சனன இராசி, நாம இராசி ஐந்தாம் இராசி, ஒன்பதாம் இராசி இவற்றில் வீடு கட்டினால் உறவினர்களைப் பாதுகாப்பான். அவன் இராசிக்கு மூன்றாம் இராசி, ஏழாம் இராசி, பதினோராம் இராசி இவற்றில் வீடு கட்டினால் அன்னியரைப் பாதுகாப்பான். இரண்டாம் இராசி, நான்காம் இராசி, எட்டாம் இராசி, பன்னிரண்டாம் இராசி இவற்றில் வீடு கட்டினால் தீமையாகும்.

## இராசி - திசை

மேட மிடபம் நேர்கிழக்கு
மிதுனம் தென்கீழ்த் திசையாகும்
தேடும் கடகம் சிங்கமது
தென்மேற் றிசையும் கன்னி
கூடும் துலாமும் விருச்சிகமும்
குடக்காம் வடமேல் தனுவாகும்
நீடு மகரம் குடம்வடக்கு
நிலையாம் வடகீழ் மீனதுவே. 447

*(இ. ள்)* மேடமும் இடபமும் கீழ்த்திசை. மிதுனம் தென்கிழக்குத் திசை. கடகமும் சிங்கமும் தென்திசை. கன்னி தென்மேற்கு. துலாமும் விருச்சிகமும் மேற்கு. தனுசு வடமேற்கு, மகரமும் கும்பமும் வடக்கு, மீனம் வடகிழக்காம். *(சி. நூ. பா. : 318)*

| | | | |
|---|---|---|---|
| மீனம் வடகிழக்கு | மேடம் | ரிஷபம் கிழக்கு | மிதுனம் தென்கிழக்கு |
| கும்பம் வடக்கு | | | கடகம் தெற்கு |
| மகரம் | | | சிங்கம் |
| தனுசு வடமேற்கு | விருச்சிகம் | துலாம் மேற்கு | கன்னி தென்மேற்கு |

## மனைகோலுபவனின் இராசிக்கு ஆகாத திசைகள்

மன்னு மேவும் கிழக்குத் துவசாயம்
மின்னு விருச்சிக இராசிக்கும் ஆகாது
துன்னு மேவுதென் கிழக்குத்தூ மாயமாம்
நன்னு மீன இராசிக்கும் ஆகாது. 448

*(ம. நூ. பா. : 5)*

*(இ. ள்)* கிழக்கு **துவசாயம்**. விருச்சிக இராசிக்காரர்களுக்கு ஆகாது. தென்கிழக்கு **தூமாயம்**. மீன இராசிக்காரர்களுக்கு ஆகாது.

## இதுவுமது

அறியும் தெற்கு அருள்சிம் மாயமாம்
உறுதென் மேற்கு உரையும்சுன காயமாம்
செறியு மேற்கு சிறந்த ரிஷபாயம்
நறியும் தனுசு இராசிக்கும் ஆகாதே. 449

*(ம. நூ. பா. : 256)*

*(இ. ள்)* தெற்கு **சிம்மாயம்**. கடக இராசிக்காரர்களுக்கு ஆகாது. தென்மேற்கு **சுனகாயம்**. கன்னி இராசிக்காரர்களுக்கு ஆகாது. மேற்கு **ரிஷபாயம்**. தனுசு இராசிக்காரர்களுக்கு ஆகாது.

**இதுவுமது**

அச்ச மான வரையும் வடமேற்கு
நிச்ச காளாயம் நேரும் துலாவுக்கு
உச்ச மானது ஒருபோதும் கூடாது
சொச்ச மயனார் சுளுவாய் அறைந்ததே. 450

*(ம. நூ. பா. : 257)*

*(இ. ள்)* வடமேற்கு **காளாயம்.** துலா இராசிக்காரர்களுக்கு ஆகாது. உச்சமான இது ஒருபோதும் கூடாது என்று மயனார் எடுத்தோதியுள்ளார்.

**இதுவுமது**

உன்னு மேவும் உறையும் வடக்கதாம்
நன்னு கெஜாயம் நவில உரைக்கிறேன்
தன்னு மேஷரா சிக்காரர்க்கு ஆகாது
அன்ன மயனார் அறிய உரைத்ததே. 451

*(ம. நூ. பா. : 258)*

*(இ. ள்)* வடக்கு **கெஜாயம்**. மேஷ இராசிக்காரர்களுக்கு ஆகாது என்று மயனார் எல்லோரும் அறிய எடுத்துரைத்துள்ளார்.

**இதுவுமது**

இலங்கு மேவட கிழக்குக்குக் காகாயமாம்
துலங்கு கும்பராசிக் காரருக்கு ஆகாது
நலங்கொள் மகரம் நவிலும் மிதுனமாம்
பலங்கொள் சிங்கம் பகரும் ரிஷபமே. 452

*(ம. நூ. பா. : 259)*

*(இ. ள்)* வடகிழக்கு **காகாயம்**. கும்ப இராசிக்காரர்களுக்கு ஆகாது. மகரம், மிதுனம், சிங்கம், ரிஷபம் ஆகிய இராசிக்காரர்கள்,

சொல்லும் இந்தத் துலங்கும்ரா சிக்காரர்
வெல்லும் கிராமம் விளங்கிடும் மத்தியில்
புல்லும் மாடம் புகலவே கட்டொணாது
அல்லும் மயனார் தமிழில் உரைத்ததே. 453

*(ம. நூ. பா. : 260)*

*(இ. ள்) கிராமத்தின் மத்தியில் வீடு கட்டலாகாது என்று மயனார் தமிழில் கூறியுள்ளார்.*

கட்டினால் மாட மாளிகை பின்னழாம்
கட்டினால் தோஷம் கருதும் ஹானியாம்
கட்டினால் மாளிகை விருத்தியும் ஆகாது
கட்டினால் சீரணம் கடுக அடைவதே. 454

*(ம. நூ. பா. : 261)*

*(இ. ள்) அவ்வாறு கிராமத்தின் மத்தியில் கட்டினால் மாளிகை இடியும். கட்டியவனுக்குத் தோஷமும் குறையும் உண்டாகும். விருத்தி அடையாது. தரைமட்டமாக விரைவில் விழுந்துவிடும்.*

## வேறு

சொல்லும் மேடம் சுபப்பிரத் தங்களாம்
நல்லதோர் இடபம் நலதன லாபமாம்
வெல்லு மேமிது னம்பசு விர்த்தியாம்
புல்லும் நண்டு பொருந்தச் சம்னதே. 455

*(சி. நூ. பா. : 524)*

*(இ. ள்) மேடத்தில் மனையெடுக்க, சுபப்பிரதம்; இடபத்தில் மனையெடுக்க, தன இலாபம் கிடைக்கும்; மிதுனத்தில் மனையெடுக்க, பசு விருத்தியாகும்; கடகத்தில் மனையெடுக்க , நன்மையும் தீமையும் கலந்து நடக்கும்.*

## இதுவுமது

அறையும் சிங்கம் அரும்பந்து சேர்தலாம்
நிறையும் கன்னி நெருங்கும் மகாரோகம்
இறையு மேதுலாம் ஏகும் சௌக்கியம்
நறையும் தேளுக்கு நாட்டர்த்த இலாபமே. 456

*(இ. ள்) சிம்மத்தில் மனையெடுக்க, உற்றார் உறவினர்கள் சேர்க்கையாகும்; கன்னியில் மனையெடுக்க, நோய் வந்து சேரும். துலாமில் மனையெடுக்க, நன்மையாகும். விருச்சிகத்தில் மனையெடுக்க மிகுந்த செல்வம் சேரும்.*

## இதுவுமது

நவிலும் வில்லில் நவிலர்த்த ஹானியாம்
சலியும் மானது தானிய விர்த்தியாம்
இலியும் கும்பம் இரத்தின இலாபமாம்
ஒலியும் மீனம் ஓங்கும் பயமிதே. 457

*(சி. நூ. பா. : 526)*

*(இ. ள்)* தனுசு இராசியில் மனையெடுத்தால், செல்வம் அழியும்; மகர இராசியில் மனையெடுக்க, தானியம் மேன்மேலும் பெருகும்; கும்ப இராசியில் மனையெடுக்க, இரத்தின மணிகள் இலாபமாகக் கிட்டும்; மீன இராசியில் மனையெடுக்க, பயம் மிகும்.

## இதுவுமது

கண்டுமே இராசி காசினி மானிடர்
விண்டு மேசிற்பி விளம்பும் வாக்கியம்
கொண்டு சோதிடக் குறிப்பின் பிரகாரம்
முன்டி டாமல் முடிப்பது தின்னமே. 458

*(சி. நூ. பா. : 527)*

*(இ. ள்)* இவ்வுலகத்தோர் இதுபோன்று இராசியின் பலனறிந்து, சிற்பனின் மொழிகேட்டு, சோதிடக் குறிப்பின்படி மனை கோலவேண்டும்.

ஆடுதுலை கன்னியரி மீனமொடு கும்பம்
நாடியதி லேமனை எடுக்கிலது நன்றாம்
மாடுமக்கள் பாரிசுக வாழ்வுமிக உண்டாம்
நீடுபுகழ் நேயருடன் நிகழ்நிதியு மாமே. 459

*(886 a : 204)*

*(இ. ள்)* மேடம், துலாம், கன்னி, சிம்மம், மீனம், கும்பம் ஆகிய இராசிகளை நாடி, அதிலே மனை எடுக்க நன்மையாகும். செல்வம் பெருகும், புத்திரர் தோன்றுவர். மனையாள் சுகம் கிட்டும். நிறைவான வாழ்க்கை உண்டாகும். புகழ் வளரும் பொருள் சேரும்.

## இதுவுமது

அங்கிமிது னந்தனுவில் அகமவை எடுக்கில்
மங்கையொடு மக்களை இழப்பர்பின் னிரப்பர்
துங்கவிடை[1] நண்டினொடு தேள்மகர மாகில்
திங்கள்விடை யானெனினும் மாதுதிரு சேராள்.[2] 460

*(886a : 205)*

*(இ. ள்)* மிதுனம், தனுசு ஆகிய இராசிகளில் மனையெடுக்க, மனைக்கு உரியவன், தன் மனைவியையும், மக்களையும் இழக்க நேரிடும். இடபம், கடகம், விருச்சிகம், மகரம் ஆகிய இராசிகளில் மனையெடுக்க, மூன்றாம் பிறை தரித்த சிவபெருமானாக இருப்பினும் செல்வம் சேராது. வறுமை வரும்.

## மனைகோல இராசி

ஏறுங் கன்னி மகரம் கிடந்தது
கூறும் விற்கயல் கொச்சை நடந்தது
தேறும் நண்டரி தேளிவை நின்றது
மீறும் கோல்குடம் மிதுனம் இருந்தது. 461

*(1005b)*

*(இ. ள்)* இடபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று இராசிகளும் **கிடந்த இராசி**களாகும்; தனுசு, மீனம், மேடம் ஆகிய மூன்று இராசிகளும் **நடந்த இராசி**களாகும்; கடகம், சிங்கம், விருச்சிகம் ஆகிய மூன்று இராசிகளும் **நின்ற இராசி**களாகும்; துலாம், கும்பம், மிதுனம் ஆகிய மூன்று இராசிகளும் **இருந்த இராசி**களாகும்.

## கிடந்த, நடந்த, நின்ற, இருந்த இராசிகளின் பலன்கள்

இருந்தது இன்பம் சேரும்
யல்நடை பூசல் காட்டும்
பொருந்தவே நின்ற தெல்லாம்
பொன்னுடன் வரவுண் டாகும்

1. பொங்கு மிடை.
2. செங்கமல மாதுதிரு மால்தனையும் சேராள்.

வருந்தவே கிடந்த தெல்லாம்
மத்திமம் சாவாம் என்று
திருந்திய மொழிநன் மாதே !
செப்புநீ தெளிந்து கொண்டே. 462

*(சி. நூ. பா. : 101)*

*(இ. ள்)* இருந்த இராசிகளான துலாம், கும்பம், மிதுனத்தில் மனைகோல இன்பம் உண்டாகும்; நடந்த இராசிகளான தனுசு, மீனம், மேடம் ஆகிய இராசிகளில் மனைகோல சண்டைகள் ஏற்படும். நின்ற இராசிகளான கடகம், சிங்கம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் மனைகோல பொன், பொருள் சேரும்; கிடந்த இராசிகளான இடபம், கன்னி மகர இராசிகளில் மனைகோல மரணம் உண்டாகும்.

### வேறு

இருந்தது இன்பம் சேர்க்கும்
இயங்கியதோர் பீடை காட்டும்
வருந்தியே நின்ற தாகில்
வான்பெறும் வரவு சொல்லும்
குருந்தவே கிடந்த தாகில்
செத்திடும் திண்ணம் என்றும்
பொருந்திய ராசி வண்ணம்
புகன்றநன் பலன்கள் தானே. 463

*(1005 b)*

### வீடு கட்டும் இராசி
### ஸ்திர இராசி

பால சிங்கம் பகரும் இடபமாம்
ஞால கும்பம் நவிலும் விருச்சிகம்
சீல மாமிந்தச் சேத்திரம் திரமென
ஏல வேநன்மை யென்றுமுண் டாகுமே. 464

*(சி. நூ. பா. : 574)*

*(இ. ள்)* ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஆகிய இந்த நான்கு இராசிகளும் ஸ்திர இராசிகளாகும். இந்த இராசிகளில் மனைகோல உத்தமமாகும்.

### சர இராசி

சாரு மேநண்டு சாற்றிடு மேஷமும்
சேரு மேதுலாம் சிறந்த மகரமும்
நேரும் நாலும் நிகழ்சர லக்கனம்
பாரு மத்திமம் பகர்சிற்ப நூலிதே. 465

*(சி. நூ. பா. : 575)*

*(இ. ள்)* மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த நான்கு இராசிகளும் சர இராசிகளாகும். இந்த இராசிகளில் மனைகோல மத்திமமான பலன்கள் கிடைக்கும்.

### உபய இராசி

ஏய கன்னி எழிலா மிதுனமும்
தூய மீனந் தொடரும் தனுசுவும்
ஆய நான்கு மறையும் சுபபலன்
நேய இராசி உபயமு மானதே. 466

*(சி. நூ. பா. : 576)*

*(இ. ள்)* கன்னி, மிதுனம், மீனம், தனுசு இந்த நான்கு இராசிகளும் உபய இராாசிகளாகும். இந்த இராசிகளில் வீடு கட்டக் கூடாது.

ஆன தாலறை மாளிகை கட்டிடில்
கான மேவும் கடும்ராசி பொல்லாது
ஊன மான வுரைலக்கி னாதிபன்
போன கோட்கள் புகலப்பொல் லாதிதே. 467

*(சி. நூ. பா. : 577)*

*(இ. ள்)* உபய இராசிகளில் வீடுகள், மாளிகைகள் கட்டினால் தீங்கு விளையும். இலக்கனாதிபன். தீயகோள்களாக இருப்பின் தீங்கு விளையும்.

இலகு சத்துரு க்ஷேத்திரம் தன்னிலும்
குலவு லக்கன கூறுங்க னேசுரன்
அலகு சத்துரு ஆனக்ஷேத் திரத்திலும்
காக லக்கனம் பத்தா மிடமதே. 468

*(சி. நூ. பா. : 578)*

*(இ. ள்)* இலக்கனத்தில் இருந்து கிரகத்துக்குச் சத்துரு க்ஷேத்திரமான இலக்கனேசுவரன் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்தாலும் இலக்கனத்திற்குப் பத்தாமிடத்தில் இருந்தாலும், அப்படிப்பட்ட வேளையில் வீடு கட்டினால், அவ்வீடு பாழாகிப் போகும்.

இருந்த மாளி எழிலாய் அமைந்திடில்
பொருந்த வேளை புகலப்பொல் லாதிது
பருந்து மேவும் பராதீன மாய்போகும்
தெரிந்து மாமயன் தெளிய உரைத்ததே. 469

*(சி. நூ. பா. : 579)*

*(இ..ள்)* அப்படிப்பட்ட வேளையில் வீடு அழகாக வீடு அமைத்தால், அது தீமையை விளைவிக்கும். கட்டப்பட்ட அந்த வீடு பாழாகிப் போகும் என்று மயன் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

**மனை கோல இராசி**
**பூரண சல இராசிகள்**

வஞ்சி கேளும் வழங்கு மகாமீனம்
மிஞ்சி மகரம் மேவும் கடகமும்
செஞ்சு பூரண செலமுள இராசியாம்
சஞ்ச மயனார் கழறுநூல் பொய்யாதே. 470

*(ம. நூ. பா. : 262)*

*(இ. ள்)* பெண்ணே ! கேட்பாயாக ! மீனம், மகரம், கடகம் ஆகிய மூன்று இராசிகளும் **பூரண சல இராசி**களாகும் இதனை மயனார் நூலில் கூறியுள்ளார். அது பொய்யாகாது.

### பாத சல இராசிகள்

வகுத்தி டும்துலாம் வழங்கும் விருச்சிகம்
தொகுத்தி டும்மேஷம் தோன்று மிகப்பாதம்
பகுத்தி டும்சல இராசி எனலாகும்
நிகழ்த்து மயனார் நேராய் அமைத்ததே. 471

*(ம. நூ. பா. : 263)*

*(இ. ள்)* துலாம், விருச்சிகம், மேஷம் ஆகிய மூன்று இராசிகளும் **பாதசல இராசி**களாகும். மயனார் இதனை அமைத்து எடுத்தோதியுள்ளார்.

### அர்த்த சல இராசிகள்

பாரில் கும்பம் பகுக்கும் ரிஷபமாம்
சேர சிம்மம் சிறக்க இவைகளும்
சீரும் அர்த்த சலராசி யென்னலாம்
பேர மயனார் பேணி உரைத்ததே. 472

*(ம. நூ. பா. : 264)*

*(இ. ள்)* கும்பம், இடபம், சிம்மம் ஆகிய மூன்று இராசிகளும் **அர்த்த சல இராசி**களாகும். இதனை மயனார் எடுத்துரைத்துள்ளார்.

### நிறை சல இராசிகள்

பாரெ லாம்கன்னி பகரும் மிதுனமாம்
ஏறும் தனுசு ஏற்கஇவை மூன்றும்
கார்நி றைச்சல இராசி எனப்படும்
சீரும் பூரண சேர்சல இராசியே. 473

*(ம. நூ. பா. : 265)*

*(இ. ள்)* கன்னி, மிதுனம், தனுசு ஆகிய மூன்று இராசிகளும் **நிறை சல இராசி**களாகும். இவ்வாறாக நான்கு வகையான சல இராசிகள் உள்ளன.

ஏந்தும் இந்த எழில்பெறும் இராசியில்
போந்த மாளிகை புகல அமைந்திடில்
வேந்தன் உத்தம மான ராசிதனில்
கூந்தல் வேனில் குருசுக்கிர னாமே. 474

*(ம. நூ. பா. : 266)*

*(இ. ள்) இந்த நால்வகை சல இராசிகளில் பூரண சல இராசியில் வீடு கட்டினால் உத்தமமாகும். உத்தமமான இராசியை குருவும் சுக்கிரனும் பார்த்தாலும்,*

ஆமே சந்திரன் அறையும் பார்வைதனில்
தாமே மாடம் தனிமாளி கட்டிடில்
போமே அங்கார தோஷம் பொலிவில்லை
நாமே சிற்பநூல் நவிய உரைத்ததே. 475

*(ம. நூ. பா. : 267)*

*(இ. ள்) சந்திரன் பார்த்தாலும் மாடம், தனி மாளிகை கட்டினால், அங்காரக தோஷம் இல்லையென்று சிற்ப நூலில் கூறப்பட்டுள்ளது.*

**மனைகோலும் போது பூசை**

ஊண்டிய கணப திக்கு
உகந்ததோர் தேங்காய் பூசை
வேண்டிய ஆடை நல்கி
பெருகவே செம்பொன் வைத்து
காண்டியே முழஞ்சா ணிட்டு
கன்மனை தன்னிற் கெல்லி
தோண்டியே வண்மை பெற்ற
சொற்குறி அறிந்து கொள்வாம். 476

*(886 a : )*

*(இ. ள்) மனை கோலுவதற்காக மனைக்குச் சென்றவுடன், கணபதிக்குத் தேங்காய் உடைத்துப் புத்தாடை அணிவித்து, செம்பொன் வைத்துப் பூசைகள் செய்து பின்னர்,*

முழம், சாண் எனத் தக்கவாறு மனையினைத் தோண்டும் பொழுது, நற்செயல் அறிந்து மனைகோல வேண்டும்.

### சங்கின் அளவு

சங்குவின் நீள மாக
வந்ததோர் விரலி னாலே
பங்குற முன்நான் காலே
கொண்டதோர் பரும னாகும்
மங்கதன் நாலில் மூன்று
அத்தது சுற்ற தாகும்
தொங்கிய ஏக மாகக்
கொண்டதோர் ஊசி தானே ! 477

*(1005 a)*

*(இ. ள்)* சங்குவின் நீளம் பன்னிரண்டு விரலளவாகும். இதனை நான்கு கூறிட்டு. அதிலே மூன்று கூறு பருமனான தலைச்சுற்று. ஒரு கூறு ஊசி நீளமாகக் கொள்வது. இப்படிச் சங்குக்கு அளவு பார்த்துக் கடைந்து செய்தால், தோஷம் வராது. சுகத்தைக் கொடுக்கும். செல்வமும் பெருகும்.

### சங்கு செய்ய மர அளவுகள்

உத்தம சங்குக் கேதான்
உயரம்ஓர் முழம தாகும்
நத்திய அடியில் ஆறு
அங்குலம் நடுவில் கேளு
சுத்தமாய்த் தலைக னந்தான்
சொல்லும்அங் குலம்ஒன் றாகும்
பத்தியாய்த் திரள நன்றாய்ப்
பரிவுடன் கடைதல் செய்வாம். 478

*(742 : 41)*

*(இ. ள்)* உத்தமச் சங்கு செய்வதற்கு உயரம் ஒரு முழம்; அடியில் கனம் அங்குலம் ஆறு; தலைகனம் அங்குலம் ஒன்று; அதற்காக வட்டமாய்த் திரளக் கடைசல் செய்யவும்.

### சங்கின் அளவு

சங்குதிர ளும்பருமன் தாரமது நீளம்
சங்குதலை யின்பருமன் தன்னடியின் முக்கால்
பொங்குபுனல் மட்டமது கோலளவு பூமி
பங்கது நடுப்பட நடுப்பரிசு தானே. 479

*(சி. நூ. பா. : 409)*

*(இ. ள்)* சங்கின் நீளம் எவ்வளவாக இருந்தாலும் அது சங்கின் பருமனாகும். அச்சங்கின் பருமனில் முக்கால் தலைப் பருமன். ஒரு முழத்தின் பரப்பிலே இச்சங்கு நடுப்பட நாட்டுவது.

### சங்கு செய்யும் பொருளும் மரங்களும்

தந்தியின் கொம்பு வாச்ச
சந்தனம் வன்னி தேக்கு
முந்திய புளியி னோடும்
உயர்கருங் காலி செய்வாம்
விந்தையாய் இவையல் லாமல்
வேண்டும்பால் மரந்தா னாகும்
அந்தமாம் வைரத் தோடே
அமைந்ததோர் பிரிவு சொல்வாம். 480

*(742 : 42)*

*(இ. ள்)* யானைக் கொம்பினால் சங்கு செய்யலாம். இதனையன்றி, சந்தனமரம், வன்னி மரம், தேக்கு மரம், புளிய மரம், கருங்காலி மரம் இவற்றினால் சங்கு செய்யலாம். இவையன்றி, எந்த மரத்தில் பாலுண்டோ அந்த மரங்களிலும் சங்கு செய்யலாம். ஆகையால் தேவர் முதல் நான்கு வருணத்தாருக்கும் சங்கு செய்ய வேண்டிய பொருள், மரங்கள் போன்றவை குறித்துச் சொல்லுகிறோம்.

## தேவர்க்கும் மனிதருக்கும் சங்கு செய்ய ஏற்ற மரங்கள்

வானுடைய தேவருக்கும் மானிடர்க்கு மாகும்
தானுடைய சங்குமரம் தக்கவகை சொல்லில்
வானபுக ஆலரசு அத்தியுடன் இத்தி
கானான பரம்பையுடன் கருங்காலி மின்னே ! 481

*(1005a)*

*(இ. ள்)* சங்கு செய்யவதற்குத் தேவருக்கும் மனிதர் களுக்கும் ஆல், அரசு, அத்தி, இத்தி முதலான மரங்களைக் கடைந்து வைக்கலாம். பரம்பை, கருங்காலி ஆகியவை முள்மரங்கள். ஆகையால் இவற்றை தேவர்களுக்குச் சங்கு செய்யும் பொழுது கடைந்து வைக்கலாம். மனிதர்களுக்கு ஆகாது. தோஷத்தைக் காட்டும்.

## தேவர், நான்கு வருணத்தாருக்கும் சங்கு

சந்தனம் தந்திக் கொம்பு
தகைமைசேர் தேவர்க் காகும்
விந்தையாம் மறையோர்க் கேதான்
மிகுகருங் காலி வன்னி
சிந்தைசேர் மன்ன ருக்குத்
தேக்குவை சியருக் காகும்
புந்திசேர் புளியி னோடு
சூத்திரர்க் கென்று ஓதே. 482

*(742 : 43)*

*(இ. ள்)* தேவர்க்குச் சங்கு செய்வதற்கு யானைக் கொம்பும் சந்தன மரமும் ஏற்றதாகும்; கருங்காலி மரம் அந்தணர்க்கு ஏற்றது; வன்னி மரம் அரசர்களுக்கு ஏற்றது; தேக்கு மரம் வைசியர்களுக்கு ஏற்றது; புளியமரம் சூத்திரர்களுக்கு ஏற்றது.

## சங்கு நடும் தளம்

பண்ணிய சங்கு வைக்கப்
பார்தனை மட்ட மாக்கி
எண்ணிய ஒருகோல் கொண்டால்
அகலமும் அதுவே யாகும்
தன்னிய மட்ட நீளம்
ஒக்கவே கொண்ட பின்பு
திண்ணியே பொருளி னாலே
தீங்கிலாச் சங்கு வையே. 483

*(ம. நூ. பா. : 181)*

*(இ. ள்)* சங்கு வைக்க வேண்டிய இடத்தில் பூமியின் ஒரு கோல் அளவு அகலமும் நீளமும் இருக்கும்படியாக தளமட்டத்தைச் சரிசெய்து, முகூர்த்தங்கொண்டு, நடுவே பொருளினால் சங்கு வைக்க வேண்டும்.

## சங்கு நடும் தளம்

ஒருதெண்டுக் கொருதெண் டேதான்
உண்மையாய்ச் சதுர மாக்கி
விரவியே மட்டங் கொண்டு
விளங்கநீர் மட்டம் செய்து
பரவியே நடுவின் வட்டம்
பரவுமண் டலம்போல் வீசி
திருந்தி சங்கை ஊனச்
செய்யும்பிர மானம் செப்பே. 484

*(742 : 40)*

*(இ. ள்)* ஒரு தெண்டுக் கொரு தெண்டு சதுரம் செய்து, நடுவில் மட்டக்கோல் கொண்டு, நீர்மட்டம் செய்து, அந்தச் சதுரத்தில் மண்டலம் போல் வீசி, அதிலே சங்கை ஊன்றுதல் வேண்டும். அந்தச் சங்கு செய்வதற்கான அளவுகளைக் கூறுவோம்.

### சங்கு நடும் மாதம்

ஆவணியும் ஐப்பசியும் ஆனஎரி மாதம்
பூவணியில் வாழ்ந்திடு புராதனர் தமக்காம்
தேவணியில் நாள்தவிர மற்றவைதே வர்க்காம்
தாவணிய தாய்மனையில் சங்குநட லாமே. 485

*(இ. ள்) ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களில் மனிதர்களுக்குச் சங்கு நாட்ட வேண்டும். மற்ற மாதங்களில் தேவர்களுக்குச் சங்கு நடவேண்டும். (ம. நூ. பா. : 182)*

### சங்கு நடும் மாதமும் நேரமும்

ஆவணியு மைப்பசியு மானநெறி தேளும்
பூவணியு மலர்க்குழலி நாள்மணருங் காலம்
தேவணி தெரிவையர்கள் சேரவரு நாளில்
தாவணி முகூர்த்தமது சங்குநட லாமே. 486
*(742 : 38)*

*(இ. ள்) ஆவணி, ஐப்பசி, கார்த்திகை முதலான மாதங்களில் கல்யாண மூகூர்த்த நாட்களில் நல்ல சுப முகூர்த்தத்தில் மத்தியான வேலையில் சங்கு நடவும்.*

### சங்கு ஸ்தாபிதம் - நாள்

உத்தரா யணமு மாக
உயர்ந்தநல் வாரம் பார்த்து
சித்திரை நட்சத் திரங்கள்
சிறப்புடன் பார்த்து வானில்
சுத்தமாய்க் களங்கம் இல்லாச்
சூரியன் விளங்கும் போது
நத்தியே அவ்வி டத்தில்
நவிலுவேன் இனிது கேளே ! 487
*(742 : 39)*

(இ. ள்) சங்கு ஸ்தாபிக்கும் நாளாவது உத்தராயணத்தில் வாரம், இலக்கனம், நட்சத்திரம் இவைகளைத் திறமாகப் பார்த்து, ஆகாயத்தில் களங்கம் இல்லாமல் சூரியன் விளங்கும்போது, செய்யும் விபரத்தைச் சொல்லுவோம்.

### சங்கு நடுதல்

மேவுமுத் தரபா கத்தும்
மிகுந்ததட் சணபா கத்தும்
மாஅவச் சாயல் உண்டு
அந்தமண் டலத்தில் வந்த
ஓவியப் புள்ளி ரண்டால்
ஓடவே கிழக்கு மேற்கு
தாவிய அந்நாள் தன்னில்
தகைமையை அறிய லாமே. 488

(இ. ள்) உத்தராயணத்திலும் தட்சணாயணத்திலும் அவச்சாயல் உண்டு. அந்த மண்டலத்தில் வந்த புள்ளி இரண்டிலும் நூலை ஓட வாங்கி கிழக்கு மேற்கு அறிவாம்.
*(742 : 44)*

இரண்டுபுள் ளியின்பால் மீது
ஏகவே வெளியில் நன்றாய்த்
திரண்டசேர் கயல்மீ னாகச்
சிறப்புடன் வீசிப் பின்னும்
முரண்டசேல் மீனின் வாயில்
முகத்திலும் கூடு நூலை
இரண்டதை ஓட வாங்கி
ஆகநூல் இரண்டும் சொல்வாம். 489
*(742 : 45)*

*(இ. ள்)* இரண்டு புள்ளிகளின் மீது கயல் மீனாக வீசி மீனின் முகத்திலும் வாயிலும் கூடி தலை இரண்டையும் ஓட வாங்கிக் கொள்வோம்.

### சங்கு அமைத்தல்

திறமைதட் சணபா கத்தின்
சிறந்ததட் சணத்தின் மீதே
உறமையுத் தரபா கத்தில்
உத்தர பாகம் மீதே
முறமையாம் இரண்டி டத்தில்
உயர்ந்திரு நூலைப் பெற்று
உறமுடன் கொள்ளு வாய்பின்
உண்மையை விளம்பு வேனே. 490

*(742 : 46)*

*(இ. ள்)* தட்சணாயணத்திலும் உத்தராயணத்திலும் இரண்டு நூலையும் பெற்றுக்கொள்ளுவோம்.

### சங்கு வைக்க அவச்சாயல் அறிதல்

மேவுவை காசி யோடு
மிடுபுரட் டாசி ரெண்டுந்
தாவவச் சாயல் இல்லை
சாற்றுவேன் இனிது கேளு !
ஆவணித் திங்கள் மேடம்
ஐப்பசி ஆனி மாதம்
ஓவியச் சாயல் ரண்டு
உண்மையங் குலமென் றோதே ! 491

*(இ. ள்)* வைகாசி, புரட்டாசி இவ்விரண்டு மாதங்களுக்கும் விலக்கம் இல்லை. ஆவணி, சித்திரை, ஐப்பசி, ஆனி இந்த நான்கு மாதங்களுக்கும் இரண்டங்குலம் விலக்கம். *(சி. நூ. பா. : 279)*

## இதுவுமது

ஆடிகார்த் திகையாங் கூனி
அங்குலம் நான்கு சாயல்
நீடுமார் கழியும் மாசி
நிறைவிரல் ஆறு சாயல்
தேடுதை மாதம் எட்டும்
திறமையங் குலசா யற்றான்
பாடலாம் புகழைக் கூற
பண்பிது பகரு வேனே. 492

*(இ. ள்)* ஆடி, கார்த்திகை, பங்குனி இந்த மூன்று மாதங்களுக்கும் நாலங்குலச் சாயல். மார்கழி, மாசி இந்த இரண்டு மாதங்களுக்கும் ஆறங்குலச் சாயல், தை மாதம் எட்டங்குலச் சாயல்.

## கருப்பம் வைக்கப் பேழை

அலவனில் எழுந்த மண்ணும்
ஆனையின் கோட்டு மண்ணும்
நிலனூறு புற்று மண்ணும்
நீடிய கயத்தின் மண்ணும்[1]
குலவிய எருது மண்ணும்
கூடநீ சேர்த்துக் கொண்டு
பலமிடு கர்ப்பம் வைக்கப்
பேழையைப் பண்ணிக் கொள்ளே. 493
***(742 : 91)***

*(இ. ள்)* நண்டு வளையில் இருக்கும் மண், யானைத் தந்தத்தில் கீறிய மண், புற்றில் இருக்கும் மண், குளத்து மண், எருதின் கொம்பால் கீறிய மண் இவைகளையெல்லாம் சேர்த்துக் கருப்புப் பேழையைச் செய்து கொள்ள வேண்டும்.

---

1. நீருள குளத்து மண்ணும்

### கருப்பப் பேழை - அமைப்பு

பண்ணிய கருப்பப் பேழை
அஞ்சேழில் ஒன்ப தாக
எண்ணிய பதினைந் தாக
அறையினைப் பண்ணிப் பின்னைப்
பண்ணிய மணியும் பொன்னும்
பலபல தானி யங்கள்
திண்ணென விடுக என்று
செப்பினார் நூலி னாலே. 494

*(1005a)*

*(இ. ள்)* கருப்பப் பேழையில் ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து என்ற எண்ணிக்கைகளில் அறைகள் செய்து, ஒத்த அளவுள்ள அந்த அறைகளின் நடு அறையில் பொன்னும் விலையுயர்ந்த மணிகளையும் இட்டும் சுற்றிலும் இருக்கும் அறைகளிலே பஞ்சலோகமும் பல தானியங்களையும் இட்டு வைப்பது.

### இதுவுமது

ஒன்பதும் ஏழும் ஐந்தும்
உத்ததோர் பதினைந் தாதல்
அன்புடன் நெறியப் பண்ணி
அதினடு பொன்ன வைத்து
முன்புதான் தானி யங்கள்
முத்துமே சுத்தி வைத்து
அன்பது நலங்க ளான
பேழையை நடுவே வையே. 495

*(886a : 179)*

### கருப்புப் பேழையின் அமைப்பு, வைக்கவேண்டிய திசை, பலன்

பெட்டியில் ஒன்ப தாகப்
பெருமைசேர் அறைவுண் டாக்கி
திட்டமாம் இரத்தி னங்கள்
செய்யஒன் பதிலே சேர்த்து

சட்டமாய்ப் பூசை செய்து
தருமீசா னியத்தின் மீது
திட்டமாம் மனையில் வைக்க
செல்வமும் வாழ்வும் உண்டாம். 496
(742 : 96)

(இ. ள்) கருப்புப் பேழையில் ஒன்பது அறைகளை உண்டாக்கி ஒன்பது வகையான இரத்தினங்களையும் அதிலே போட்டு, அதற்குப் பூசை நெய்வேத்தியம், தீப, தூபம் காட்டி, மனைக்கு ஈசானிய மூலையாகிய வடகிழக்கு மூலையில் வைக்க, அவ்வீட்டில் நிறைந்த வாழ்வும் செல்வமும் உண்டாகும்.

## கர்ப்பப் பேழையில் இடுதலின் பலன்

தருமணி சிறந்த தாது
தானியம் பவளம் செம்பொன்
புகழுமண் கிழங்கி னோடு
புகல்மருந் தனைய யாவும்
வகையுடன் அடவி னாலே
வாஸ்துவுக் கினிய தாக
துகளறக் கருப்பம் வைக்கில்
சுகபலம் எய்தும் என்றே. 497
(886 அ : 102)

(இ. ள்) கருப்பப் பேழையில் விலையுயர்ந்த மணிகள் பொன், வெள்ளி முதலான உலோகங்கள், தானியங்கள், பவளம், கிழங்குகள், மருந்துப் பொருட்கள் முதலானவற்றை இட்டு வாஸ்துவிற்குப் படைக்க, மனையில் குடி புகுவோர்க்கு அனைத்து நன்மைகளும் கிடைக்கும்.

## கர்ப்பம் வைக்கும் நேரம்

அகம்புக வுரைத்த மாதம்
அயனவா ரங்கள் தன்னில்
புகழ்ந்திடும் திரமாய் ஊர்க்குப்
பொருந்துறல் இராசி தன்னில்

நிகழ்ந்தசக் கரத்தின் மேவி
நின்றநற் கோட்ப தத்தின்
மகிழ்ந்துயர் கங்குல் தன்னில்
வைத்திடக் கருப்பம் நன்றே. 498

(886 a : 193)

(இ. ள்) மனை கட்டுவதற்கு உரைத்த மாதம் மற்றும் அயனங்கள், வாரங்கள் போன்றவற்றில், அவ்வூருக்குப் பொருந்தும் நல்ல இராசியில், கோள்களின் அமைப்பு சிறந்துள்ள வேளையில் இரவு நேரத்தில் கருப்பம் அமைத்தல் வேண்டும்.

### கருப்பம் வைக்குமிடம்

சாலையின் மையம் பற்றித்
தன்னினில் அகலம் பற்றிக்
கோலிலே ஒன்ப தாக்கிக்
குறித்திடும் மேற்கு நாலு
வாலிய கிழக்கு மூன்று
தெற்குமே நான்கு விட்டு
சீலமாம் வடக்கு மூன்று
நடுவது கர்ப்பஞ் செய்யே. 499

(ம. நூ. பா. : 192)

(இ. ள்) வீடுகட்டும் மனையின் மையப்பகுதியை அறிந்து நீள அகலங்ளை ஒன்பது கூறுகளாகச் செய்து கொண்டு, மேற்கே நான்கு கூறுகளையும், கிழக்கே மூன்று கூறுகளையும் தெற்கே நான்கு கூறுகளையும் வடக்கே மூன்று கூறுகளையும் விட்டு நடுவில் கருப்பம் செய்ய வேண்டும்.

### மனைக்குக் கருப்பதிக்க முகூர்த்தம்

வெள்ளி வியாழன் சனிதிங்கள்
மேவும் புதனும் சரராசி
தெள்ளுஞ் சோதி உத்திரங்கள்
திருவோ ணமகம் புனர்பூசம்

உள்ள சதயம் மிருகசிரம்
உரோகணி அனுஷம் இரேவதியில்
எள்ளும் அட்டமி உவாவுடனே
இருத்தை நீக்கிக் கருப்பதியே. 500
*(886 a : 29)*

*(இ. ள்)* வாரங்களில் வெள்ளி, வியாழன், சனி, திங்கள் புதன் இவையும், இராசிகளில் சர இராசிகளும், நட்சத்திரத்தில் உத்திரம், உத்திராடம், திருவோணம், மகம், புனர்பூசம், சதயம், மிருகசீரிடம், உரோகணி, அனுஷம், இரேவதி இவையும் அஷ்டமியும் உவாவும் இருத்தையும் நீக்கி கருப்பதிக்கவும்.

## இதுவுமது

ஆட்சி மீனம் குடியாக்கும்
ஆடும் எருதும் நோய்செய்யும்
சூட்ச மிதுனம் துயர்விளைக்கும்
துய்ய நண்டு நிதியாகும்
காட்சிக் கினிய புதல்வருண்டு
கன்னி கருமம் கைகூடும்
மாட்சி கோலும் தேளுமுடன்
மனையில் பெரிதாய் வாழ்வாரே. 501
*(சி. நூ. பா. : 462)*

*(இ. ள்)* மீன இராசியில் பதிக்கில் - சுபகரமாம். மேஷம், ரிஷபத்தில் பதித்தால் - நோயுண்டாம். மிதுனத்திற் பதித்தால் - துக்கமுண்டாம். கற்கடகத்தில் பதித்தால் - செல்வமும் புத்திர சம்பத்தும் உண்டாம். கன்னியில் பதித்தால் நினைத்ததெல்லாம் கைகூடும். துலாத்திலும் விருச்சிகத்திலும் பதித்தால் - மனைவி, புதல்வர்களுடன் சிறப்புற்று வாழ்வார்கள்.

## மனைக்குக் கருப்பதிக்க முகூர்த்தம்

கோல மறியில் குறைவயதாம்
கொடிதாம் குண்டை மீன்சேரில்
சால மிதுனம் தன்மனையாள்
சாமருண் டரியும் மகன்வாழ்வாம்
ஏல கோல்தேள் நீர்ப்பிணியாம்
மிக்க சுறாச்சால் இன்பமதாம்
மால்தா னுரைக்க வேதமுனி
வகுத்தார் புட்ப மணிகுழலே ! 502

(886 a : 30)

(இ. ள்) மேஷத்தில் பதித்தால் - ஆயுள் குறைந்து போகும். ரிஷபம், மீனத்திற் பதித்தால் தீமையைத் தரும். மிதுனத்தில் பதித்தால் மனையாள் துக்கம் உண்டாம். கற்கடகத்திலும் சிங்கத்திலும் பதித்தால் புத்திர சம்பத்து உண்டாம். துலாத்திலும் விருச்சிகத்திலும் பதித்தால், நீரின் காரணமாக நோயுண்டாகும். மகரத்திலும் கும்பத்திலும் சுபமுண்டாம் என்று வேதமுனி வகுத்துள்ளார்.

## மனைப்புக ஆகும் ஆகா நாட்கள் பலன்

மங்கைஞா யிற்று நாளில்
மனைபுகில் வாழ்வு மீறும்
திங்களில் இல்லம் சேரிற்
திருமகள் கடாட்சம் உண்டாம்
பங்கமாம் செவ்வாய் நாளில்
மனைபுகில் சண்டை யுண்டாம்
மங்கையே மயனார் சொன்ன
வண்மையை அறிந்து கொள்ளே. 503

(886 a : 153)

(இ. ள்) ஞாயிற்றுக் கிழமையில் குடிபுகுந்தால், செல்வம் பெருகும்; திங்கட்கிழமையில் குடிபுகுந்தால், இலட்சுமி கடாட்சம் உண்டாகும். செவ்வாய்க்கிழமையில் குடி புகுந்தால் தீரரத சண்டைகள் உண்டாகும்.

குறிப்பு: பொங்கிய புதனே யாகில்
போனவர் அகத்தில் வாழ்வார்

## இதுவுமது

பொங்கிய புதனே யாகில்
போனவர் அகத்தில் வாழ்வார்
மங்கிய வியாழன் நாளில்
மனைபுகில் வாழ்வுண் டாகும்
பங்குற வெள்ளி நாளிற்
பாரியாள் வேசி யாவாள்
தங்கிய சனியில் போனால்
சலிப்பில்லை சுகம தாமே. 504

*(சி. நூ. பா. : 470)*

(இ. ள்) புத வாரத்தில் குடி புகுந்தால், அம்மனையில் மகிழச்சியோடு இன்பமுடன் வாழ்ந்திருப்பார்கள். வியாழக் கிழமையில் குடி புகுந்தால் அம்மனைக்குரியவரின் மனைவி தீய நடத்தை உடையவளாவாள். சனிக்கிழமையில் குடி புகுந்தால், சுபகரமுண்டாகும்.

## வேறு

வையதோர் வியாழம் நாளில்
மனைபுகில் வாழ்வு மீறும்
பையவே வெள்ளி நாளில்
பாரியும் வேசி யாவாள்

தையலே !, சனியில் போகில்
சலிப்பில்லை சுகமே யாகும்
வையகம் தன்னி லுள்ளோர்
வகையிதென் றறிய லாமே. 505

*(886 : 154)*

## குடிபுக ஆகாத மாதங்கள்

கூனி யான புரட்டாசி மார்கழி
ஊன மான ஒருநான்கு மாதமும்
மானி யாமன் மனைகுடி தான்புக்கில்
ஈன மாகி இடர்செய்யும் நோய்களே ! 506

*(ம. நூ. பா. : 278)*

*(இ. ள்)* பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி ஆகிய இந்த நான்கு மாதங்களில் குடி போகக்கூடாது. அவ்வாறு இன்றிக் குடிபுகுந்தால், மனைக்குரியவனுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் நோய்கள் தோன்றி, துன்பங்களை விளைவிக்கும்.

## குடிபோகக்கூடாத காரணம்

ஆடித் திங்களில் இராவணன் பட்டதாம்
ஆலித் தேபெரும் போரும் மார்கழி
வீடித் தேபுரட் டாசி இரணியன்
வேதத் தோன்முடி அற்றது பங்குனி. 507

*(ம. நூ. பா. : 279)*

*(இ. ள்)* ஆடி மாதத்தில் இராவணன் போரில் இறந்து போனான். மார்கழி மாதத்தில் மகாபாரதப்போர் நடந்து பெரும் அழிவு உண்டானது. புரட்டாசி மாதத்தில் இரணியன் இறந்து போனான். பங்குனி மாதத்தில் வேதத்தோன் தன் மகுடத்தை இழந்தான்.

### குடி போனால் உண்டாகும் பலன்

நாடித் தேதியில் நன்மனை போயிடில்
நாட்டில் மாந்தர்கள் நாசம் அடைகுவார்
ஓடித் தேசங் குடியேறிப் போனாலும்
ஓட்டில் இரந்து உண்ணவும் ஆகுமே. 508

*(இ. ள்)* ஆடி, மார்கழி, புரட்டாசி, பங்குனி ஆகிய மாதங்களில் குடி புகுந்தால், அனைவருக்கும் தீங்கு நேரிடும்; வேறு நாட்டிற்குச் சென்று குடியேறி வாழ்ந்தாலும் பிச்சையெடுத்து உண்ண நேரிடும்.

### மனைக்கு ஆகாதவை - நாட்கள்

துலாமொடு தேளும் தெற்கில்
தோணுதல் செய்வா னாகில்
பலாபலம் எல்லாம் பாழாம்
பதிமனை குடிபோக் குண்டாம்
நிலாவெனும் முகவன் மாதே !
நிறைமனை எடுக்க வேண்டாம்
தலாதல முன்னே சொன்ன
சமயத்தை அறிந்து பாரே. 509

*(886 a: 102)*

*(இ. ள்)* துலாத்திலும் விருச்சிகத்திலும் தென்திசையிற் குடி புகுந்தாலும் மனை கோலினாலும், மனைக்குரியவனின் செல்வங்கள் பாழாகும்; குடும்பமும் நசிந்து போகும். ஆதலால் பூரண நிலவையொத்த பெண்ணே ! இத்தகைய நாட்களில் நிறைந்த மனையை கட்டக் கூடாது.

### இதுவுமது

மகரமாம் கும்பம் மேற்கே
வாழ்மனை புகுவா னாகில்
நிகரமாந் தலங்கள் வேறாய்
நிறைமனை அழிந்தே போகும்

சிகரமாந் தலைவன் சாவான்
சிதைவுறும் திண்ண மாகும்
அகரமாந் தலமல் லாது
ஆட்சியும் அல்ல கேடே. 510

*(இ. ள்)* மகரத்திலும் கும்பத்திலும் மேற்கே குடி புகினும், மனைகோலினும் அம்மனை நாசமடைவதன்றி, அந்த மனைக்கு உரியவன் மரணமடைந்து குடும்பம் பலவாறு சிதறிப்போம். *(சி. நூ. பா. : 468)*

## இதுவுமது

கடகமும் சிங்கந் தானும்
கதிரவன் திசையிற் செல்லிற்
படமுடை அரவம் தீண்டும்
பார்மனை பாழ தாகும்
திடமான அதனிற் புத்து
சேர்ந்திடக் காண லாகும்
விடமெனும் விழியி னாலே
விதிவழி திண்ணம் தானே. 511

*(886 a : 185)*

*(இ. ள்)* கடகத்திலும் சிங்கத்திலும் சூரியன் திசையாகிய கிழக்கில் குடிபுகுந்தால் விஷத்தையுடைய பாம்பு கடிப்பதல்லாமல், வீடும் பாழாகும். புற்றெழும்பும்.

## மனைக்கு ஆகும் ஆகா நாட்கள்

நனிகதிர்சேய் அலையப் பண்ணும்
நனைத்திடும் திங்கள் வெள்ளி
கனகுடு புந்தி நன்றாம்
கரியவன் நாச மாகும்

தனதுநாள் முன்னும் பின்னும்
தான்குறை பாவ நாளில்
வனிதையே ! அணைவார் கேடாம்
வாழ்மனை ஏகில் அன்றே. 512

*(886 a : 186)*

*(இ. ள்)* ஞாயிற்றுக்கிழமையிலும் செவ்வாய்க் கிழமையிலும், குடிபுக அலையவைத்துத் துன்பத்தைத் தரும். திங்கட்கிழமையிலும், வெள்ளிக் கிழமையிலும், வியாழக் கிழமையிலும், புதன்கிழமையிலும் குடிபுக நன்மைகள் உண்டாகும். சனிக்கிழமையில் குடிபுக அழிவைத்தரும். மனைக்குரியவன் பிறந்த நாளுக்கு முன்னும் பின்னும் உள்ள நாட்களிலும் குறையுடைய நாட்களிலும் பாவ நாட்களிலும் மனையில் குடிபுக கேடுண்டாகும்.

### மனையில் குடிபுக ஆகாத நாட்கள்

தத்தும் கதிர்சேய் இவையாகா
சனிபொன் புந்தி மதிவாரம்
அத்தம் சித்திரை புனர்பூசம்
அனுஷம் சோதி அசுபதியும்
உத்த ரங்கள் ஒரு மூன்று
வோணம் ரேவதி இவைநன்றாம்
ஏத்தும் குடந்தேள் சதுர்த்தியுவா
இருத்தை நீக்கிக் குடிபுகுமே. 513

*(இ. ள்)* வாரங்களில் ஞாயிறு, செவ்வாய் ஆகாது. சனி, வியாழன், திங்கள், புதன் நன்று. நட்சத்திரங்களில் அஸ்தம், சித்திரை, புனர்பூசம், அனுஷம், விசாகம், அசுபதி, உத்திரம், உத்திரட்டாதி, திருவோணம், இரேவதி நன்று. இராசிகளில் கும்பம், விருச்சிகம் ஆகாது. பட்சங்களில் சதுர்த்தி, உவா, இருத்தை ஆகாது. இவை நீக்கி குடிபுக வேண்டும். *(சி. நூ. பா. : 464)*

**இதுவுமது**

அட்டமி உவாஇ ருத்தை
அருக்கன்சேய் மூலை மாதம்
விட்டிலும் விஷக்கடி கையோடு
வெள்ளியே எதிரில் மூடம்
சுட்டிய வலக்கண் சுங்கன்
சூலமும் நேரே யாதல்
நட்டமா மனைபு குந்தால்
நாசமென் றுரைக்க லாமே. 514

*(இ. ள்) உவா, இருத்தை, ஞாயிறு, செவ்வாயும், மூலை மாதங்களாகிய பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழியும், விட்டியும், விஷகடிகையும், வெள்ளி எதிரும் மூடம், பாடு, வலக்கண் வெள்ளியும், சூலம் எதிரும் குடிபுகுவாராகில் நஷ்டமாம். (சி. நூ. பா. : 465)*

**சுக்கிரன் பலன்**

சுக்கிரன் எதிரே யாகிற்
தொல்குடி உயிர்க்குக் கேடாம்
சுக்கிரன் வலமே யாகில்
வான்பொருள் சேதம் காணும்
சுக்கிரன் பின்னே யாகில்
சுகமுடன் வாழ்வ தாகும்
சுக்கிரன் இடக்கண் ணாகில்
துக்கமே இல்லை கண்டாய். 515
(1005a)

*(இ. ள்) சுக்கிரனுக் கெதிராக மனையெடுக்கில் மரணம் கேடு உண்டாகும். சுக்கிரன் வலக்கண்ணாகிற் பொருள் சேதமாம். சுக்கிரனுக்குப் பின்னேயாகில் சுபம் உண்டு. சுக்கிரனுக்கு இடக்கண்ணாகில் மகா உத்தமம். வெள்ளியின் பாடும், மூடமும் ஆகாது. புதுமனை கோலவும், குடி புகவும் நாள் பார்க்க நன்றாம்.*

குறிப்பு: 1. சுக்கிரன் எதிரே யாகில்
தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் வலக்கண் ணாகிற்
தோன்றிய பொருளும் சேதம்

2. துக்க மொன் றில்லை யென்னே.

## மனைக்குப் புகும்போது செய்ய வேண்டியவை

மறையொலி ஓமம் ஓங்க
மங்கள முழக்கம் ஆர்ப்ப
நிறைமணி விளக்கி னோடு
நீழலங் கார மென்ன
மறைமய மதனு வோரில்
அடுத்தநற் பொருட்கள் கொண்டு
குறையறத் திருவை யுண்ணிக்
குடிமனை புகுத நன்றாம். 516

*(886a : 191)*

*(இ. ள்)* மனையில் குடிபுகும்பொழுது, வேதவொலி எழ, யாக பூசை செய்து, மங்கள ஒலிகள் முழங்க, நிறைந்த நெல்மணிகளை நாழியில் வைத்து, விளக்கேற்றி, அலங்காரம் செய்து, அந்தணர், சிற்பன் ஆகியோருக்கு நல்ல பொருள்களை கொடுத்துத் திருமகளை மனதில் நினைத்து வணங்கி, மனைக்குள்ளே புகுதல் நன்மையைத் தரும்.

## 14. முகூர்த்தக் கால் நாட்ட நல்ல நாள்

மதிதனில் காலை நட்டு
வன்புதன் கையை ஏத்தி
விதிதனில் வெள்ளி வேய்ந்து
வியாழத்தில் குடியே புக்கில்
சதிருடன் பகைவர் வந்தே
தனலெரி முட்டி னாலும்
பதிதனில் இந்தி ரன்போல்
பயன்பெற வாழ லாமே. 517

*(886 a : 189)*

*(இ. ள்)* முகூர்த்தம் வைத்து திங்கட்கிழமை உதயத்தில் காலை நட்டு, புதன்கிழமை உதயத்தில் வீட்டை உயர்த்திக்கட்டி வெள்ளிக்கிழமை உதயத்தில் கூரை வேய்ந்து, வியாழக்கிழமை உதயத்தில் குடி புகுந்தால், பகைவர்கள் நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் அந்த வீடு வெந்து போகாது. அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் இந்திரனைப் போல போக போக்கியத்தை அடைவார்கள்.

### இதுவுமது

மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கைவைத்து
மிதிவெள்ளி தானுதிக்க மேய்ந்து - கதிர்பெறவே
மந்திரிமார் தானுதிக்க மாடம் புகுவீரேல்
இந்திரன்போல் வாழ்வீர் இசைந்து. 518

*(சி. நூ. பா. : 261)*

*(இ. ள்)* சந்திரனுதிக்க ஸ்தம்பம் முதலியவை நாட்டி, புதனுதிக்கப் பரப்புப் பூட்டி, வெள்ளியுதிக்க தளம் அல்லது ஓடு இசைந்து, வியாழம் உதிக்க கிரகப் பிரவேசம் செய்தால் தேவசம்பத்துடன் வாழ்வார்கள்.

### இதுவுமது

மதியுதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கையேத்தி
விதியுதிக்க வெள்ளியினால் வேய்ந்து - பதிதோறும்
மந்திரியே முன்னாக மாடமனை புகுந்தால்
இந்திரன்போல் வாழ்ந்துண் டிரு. 519

*(886 a : 188)*

### முகூர்த்தக் காலின் அளவு

நாயகன் மனைக்கு முன்னே
நலமதாய் வரும்ம னைக்கு
நாயகன் மனைக்கு முக்கால்
கால்பாதி நாட்ட நன்றாம்
நாயகன் மனைக்கு ஒப்பாய்
நன்மனை தன்னைச் செய்தால்
நாயகன் தனக்குக் குத்தம்
நகரியும் அழியு மன்றே. 520

*(886 a : 106)*

*(இ. ள்)* கோவிலுக்கு முன்னால் மனை எடுக்க முகூர்த்தக்கால் நடும்பொழுது, கோயிலுக்கு முக்கால் அல்லது பாதி அளவு இருக்கும் வண்ணம் முகூர்த்தக்காலை நடவேண்டும். நாயகனுடைய மனைக்குச் சமமாக முகூர்த்தக்காலை நாட்டினாலும், வீட்டினைக் கட்டினாலும் குற்றமாகும். ஊரும் அழிந்துபோகும்.

குறிப்பு: 1. நாயகன் என்பதற்கு அரசன் எனவும் பொருள் கொள்ளலாம்.

### முகூர்த்தக் கால் நாட்டும்போது செய்ய வேண்டியது

தென்மேலை மூலைக் காலைச்
சிறப்புடன் பால்நெய் தோய்த்து
மென்மையாம் அணியும் பொன்னும்
மாரத்தின மணியும் இட்டு

மென்மையாம் பால்நீர் விட்டு
விநாயக பூசை பண்ணி
நன்மையாய் முகூர்த்தங் கொண்டு
நாட்டிடுங் கால்கள் தானே. 521
*(1005 b)*

*(இ. ள்)* மனையின் தென் மேற்கு மூலையில் முகூர்த்தக் காலை, பால், நெய் ஆகியவற்றில் நனைத்து, குழியில் அணி, இரத்தின மணிகள் முதலானவற்றைப் போட்டு, பால், நீர், இவற்றை விட்டு, விநாயகருக்குப் பூசை செய்து, பின்னர் காலை நாட்ட வேண்டும்.

முன்னிய முகூர்த்தம் தன்னில்
முதல்வனைப் பூசை செய்து
பொன்னொடு மணியும் பாலும்
பொலிவுடன் குழியிற் சேர்த்து
தென்மூலை மூலைக் காலை
சிறப்புடன் எழுந்து நாட்டி
தென்கீழும் வடக்கீ ழும்மேல்
மூலையும் தெரிந்து நாட்டே. 522
*(886 a : 249)*

*(இ. ள்)* நல்ல முகூர்த்தத்தில் வினாயக பூசைப் பண்ணி, பொன், நவமணி, பால் ஆகியவற்றைக் குழியிலே விட்டு, முதலில் தென்மேல் மூலையில் காலை நாட்டி, தென்கீழ் மூலை, வடகீழ் மூலை, வடமேல் மூலை அடரவே சேர நாட்ட வேண்டும்.

**கூரைக்கால் நாட்டுதல்**

பரப்பினை ஒன்பதாக்கி
பண்புடன் ஒன்று நீக்கி
இருப்பதோர் எட்டும் காலாம்
இரண்டுகீழ் மேலே தானும்

குருத்துடன் கவரத் தானும்
கொள்வது மிச்ச மாகும்
திருத்தமாய் முகூர்த்தம் கொண்டு
தென்மேலை மூலை நாட்டிடே. 523

*(1005 b)*

(இ. ள்) பரப்பினை ஒன்பது கூறு செய்து ஒரு கூறு தணியக் காலளவாம். இரண்டு கூறு குழி நட்டு, மற்ற ஆறு கூறு செய்து மேலே கவர்வதற்கு ஒரு கூறு. ஐந்து கூறு மிச்சம் கொள்ளவும். தென்மேல் மூலையில் கால் நாட்டுவது.

**இதுவுமது**

அகலத்தை ஒன்ப தாக்கி
அதிலொன்று குறைக்கக் காலாம்
புகலுற்ற கழிக்கு ரெண்டு
போக்குமேல் ஆறு கூறின்
மிகலுற்றே கவர்வ தற்கு
மேலது ஒன்று போக்கிச்
சகலர்க்கும் நடுவோர் ஐந்து
கூறெனச் சாற்றி னாரே. 524

*(சி. நூ. பா. : 474)*

## 14. முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்

முடிபருத்து வட்டமிடிற் றிருவே சேரும்
மூன்றில்ஒரு பங்குடைந்தால் செயசந்தோஷம்
நெடியஐந் திரண்டிற்குத் தொலையாச் செல்வம்
நீங்கிநரம் பேபிடித்தால் நீடு வாழ்வாம்
கடுகுதனை உள்ளானால் இரத்தினம் சேரும்
கனகவந்து இரண்டிற்கும் கருது பூசல்
வடிவமெனும் தமிழோதும் மயனார் சொன்ன
வளமைதேங் காய்ச்சகுன வண்மை கேளே.525

*(742 : 54)*

(இ. ள்) மனைக்கு முகூர்த்தம் செய்து தேங்காய் உடைக்கும் போது முடி பருத்து அடி சிறுத்துக் காணப்பட்டால் செல்வம் சேரும். மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலுமானால் சந்தோஷம் உண்டாகும். ஐந்து பங்கு சிரசு, மூன்று பங்கு பாதத்திலுமானாலும் ஐந்து பங்கு சிரசு, மூன்று பங்கு பாதத்திலுமானாலும் ஐந்து பங்கு சிரசு இரண்டு பங்கு பாதத்திலுமானாலும் செல்வம் உண்டாகும். நரம்பு பிடித்தால் மனைக்குரியவன் நீண்ட ஆயுளைப் பெற்று விளங்குவான். கடுகளவு சிதழ் உள்ளே விழுந்தால் ஒன்பது வகையான இரத்தினங்களும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும். நடுவில் பிளந்தால் மிகுந்த துயரம் உண்டாகும்.

### முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்

ஒன்றிரண்டு தனக்குநன்மை ஆறு நாலாய்
உடையவெகு துன்பமது ஓதக் கேளு
அண்டிமெய்யிற் கண்தெறித்தால் மரண மாவான்
ஆகவும்நல் ஓடுவிட்டால் அசனம் இல்லை
விண்டுஓடு தெறித்திடுமேல் பிணியாம் மெய்யில்
மேதினியில் வீடுவாசல் விலையு மாவன்
பண்டுதமிழ் அறிந்துஓதும் மயனார் சொன்ன
பாடல்தேங் காய்ச்சகுனம் பகரக் கேளே. 526

*(742 : 55)*

(இ. ள்) மனை முகூர்த்தம் செய்து தேங்காய் உடைக்கும் பொழுது, நடுமத்தியில் உடைந்தால் நன்மை. ஆறு சுக்கல், நான்கு சுக்குகளாய் உடைந்தால், மிகுந்த துன்பம் உண்டாகும். உடலில் தேங்காய்சில் தெறித்தால், அந்த மனைக்கு உரியவன் இறந்து போவான். ஓடு விட்டால், உணவு கிடைக்காது. ஓடு தெறித்தால், உடலில் நோய் உண்டாகும். பூமியில் விழுந்தால், அம்மனைக்கு உரியவன் வீடுவாசலை விற்று துக்கமடைவான் என்று மயனார் சொன்னதைக் கேட்பாயாக!

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

அடித்ததோர் தேங்காய் தானும்
அகலவே சிதறி விட்டால்
முடித்ததோர் மனைவிக் காகா
முகிலுடன் ஓடு மாகில்
எடுத்ததோர் சிற்பன் கையில்
இடறியே விழுவ தாகில்
வடித்தது சிவாச கங்கள்
வாழ்வில்பா ழாகும் என்றே. 527

*(ம. நூ. பா. : 63)*

(இ. ள்) மனைகோல முகூர்த்தம் செய்யும் பொழுது, தேங்காய் பலவாறாகச் சிதறிவிட்டால், மனைக்கு உரியவனின் மனைவிக்குத் தீங்கு உண்டாகும். உள்ளே ஒன்றும் இல்லாது ஓடாக இருந்தாலும், தேங்காயை எடுக்கும் பொழுது அது சிற்பன் கையிலிருந்து நழுவி விழுந்தாலும் அம்மனைக்குரியவனின் வாழ்வு பாழாகிவிடும்.

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

வாங்கிய தேங்காய் தன்னை
மகிழ்வோடு சிற்பன் தானும்
தாங்கியே உடைக்கும் போது
தவறியே வீழு மாகிற்

பூங்கொடி மரண மாவாள்
　　பூமகள் தானும் நில்லாள்
பாங்கொடு மயனார் சொன்ன
　　பண்டுநூல் இதுவு மாமே. 528

*(சி. நூ. பா. : 314)*

*(இ. ள்)* *மனை முகூர்த்தத்திற்கான தேங்காயைச் சிற்பன் உடைக்கும்பொழுது, கையிலிருந்து தேங்காயானது தவறி விழுமானால், அந்த மனைக்கு உரியவனின் மனைவி மரணமடைவாள். செல்வம் அம்மனையை விட்டுச் சென்றுவிடும் என்று பழமையான நூல்களில் மயனார் கூறியுள்ளார்.*

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

உற்றிடு முகூர்த்தத் தேங்காய்
　　உடைத்திடும் பலனைக் கேளு
மற்றது தெரிக்கச் சாவன்
　　வளரும்பெண் முடிபெ ருக்கில்
கற்றறி புதல்வ ருண்டாங்
　　கண்விடில் வாழ்வு குன்றும்
சற்றதி லழுக லாகிற்
　　தான்செய்யும் கருமம் தீதே. 529

*(சி. நூ. பா. : 315)*

*(இ. ள்)* *மனை முகூர்த்தத்திற்காகத் தேங்காயைச் சிற்பன் உடைக்கும்பொழுது, தேங்காய் சுக்குநூறாக உடையுமானால் அம்மனைக்கு உரியவன் மரணம் அடைவான். குடுமி உடைய மூடிப்பக்கம் பெரியதாகவும் அடிப்பக்கம் சிரியதாகவும் இருக்கில், புதல்வர் தோன்றுவர். தேங்காய்க் கண் உள்ள பகுதி உடைந்து போனால், ஆயுள் குறையும். தேங்காய் அழுகலாக இருந்தால், அம்மனையைக் கட்டினால் தீமையாகும்.*

**முகூர்த்தத் தேங்காய் உடைக்கும் பலன்**

மூடிஇரண் டாக உடைந்திடில் தனமெய்தும்
மூடிபெருத் தாலும் நன்மை
முக்கியம தாகவே கீழ்மூடி தன்னில்
ஓடுமுடனில் மெத்த நன்மை
கூடிவளர் கீழ்மூடி தன்னிலொரு கூறாவது
சமதாகும் கொப்பறை இனங்கள்
கழன்றாலும் வெகு நன்மை யாகும்
குருத்துடன் முளையும் நன்மை
ஊடலுட னேகுறுக் காகிலது திண்மையாம்
உதிரியாய்ச் சிதறு மாகில்
ஒண்டனை தனங்களாய் துன்பம்வரும் அகலில்
உடலில் வெகுநோய்கள் சேரும்
தேடிய எறும்பாடல் என்னிலுயிர் சேதமாம்
சீர்மூடி கொஞ்ச மாகா
தேங்காய் உடைத்தபலன் என்றறிக கவிகுளது
சித்தமாய்க் கண்டு கொள்ளே! 530

*(886a : 235)*

*(இ. ள்)* மூடி சரிபாதியாக உடைந்தால் செல்வம் சேரும். குடுமி உள்ள மூடி பெரியதாக உடைந்தால் நன்மை உண்டாகும். சிறிய சிதழ் தேங்காயின் கீழ் மூடியில் விழுந்தால் மிகுந்த நன்மை. கொப்பறையாகக் கழன்றுவரின் நன்மை. தேங்காயில் குருத்து விட்டிருப்பின் நன்மையாகும். குறுக்கே பிளவுபட்டாலும் பல்வேறு சுக்கல்களாக உடைந்து போனாலும் அந்த மனைக்கு உரியவனுக்குத் துன்பம் வந்து சேரும். தேங்காயை உடைக்கும்பொழுது அழுகலாக இருந்தால், மிகுந்த நோய்கள் உண்டாகும். தேங்காயில் துளையிட்டுச் சென்று எறும்புகள் இருக்குமானால், உயிர்ச் சேதம் உண்டாகும். இவ்வாறு தேங்காய் உடைக்கும் பலன்கள் கவியால் கூறப்பட்டுள்ளன.

# 16. கிணறும் குளமும்

## இராசிகளில் கிணறு அமைத்தல்

ஆன மேஷம் அறையுங்கற் பாறையாம்
வான ரிஷபம் வரையும்தண் ணீராகும்
பான மிதுனம் பகரும் கடற்கரை
மான கர்க்கடகம் மதிக்கஆறு ஓடுமே. 531

*(ம. நூ. பா. : 316)*

(இ. ள்) மனையின், மேஷ இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கற்பாறையாக இருக்கும்; ரிஷப இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், தண்ணீர் கிடைக்கும்; மிதுன இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், உப்புநீர் கிடைக்கும்; கடக இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் மிகுதியாகத் தண்ணீர் கிடைக்கும்.

குறிப்பு: கிணறு எடுக்கும் பகுதிக்கு உறிய மனையைப் பதினாறு பாகம் செய்து இடைப்பகுதியாக உள்ள 4 பாகங்களை பிரம ஸ்தானமாகக் கொள்ள வேண்டும். மற்ற பன்னிரண்டு பாகங்களையும் பன்னிரண்டு இராசிகளாகக் கொள்ள வேண்டும். வடமேற்குப் பாகத்தை மேட இராசியாக வைத்து வலம் இடமாகப் பன்னிரண்டு இராசிகளையும் அமைத்து அந்தந்த இராசிகள் அமையும் இடத்திற்கேற்ப பலனை அறிதல் வேண்டும். *(ம. நூ. பா. : 225)*

வடக்கு

| | | | |
|---|---|---|---|
| மே | ரி | மிது | கட |
| மீன | | | சிம் |
| கும் | | | கன் |
| மக | தனு | விரு | துலா |

மேற்கு (இடப்புறம்) — கிழக்கு (வலப்புறம்)

தெற்கு

## இராசிகளில் கிணறு அமைத்தல்

வேந்தன் சிங்கம் விரும்பும்கற் பாறையாம்
ஏந்து கன்னி இசைந்ததோர் தெற்குமுன்
போந்த கல்லும் புகலும் வடக்கதாம்
கூந்தல் மோழை குமுற வருகுமே. 532

*(ம. நூ. பா. : 317)*

*(இ. ள்)* மனையின் சிம்ம இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கற்பாறை வரும்; கன்னி இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், பெருமளவு நீர் கிடைக்கும்.

## இதுவுமது

ஆய புற்று அம்மயும்து லாமிடம்
தூய விருச்சிகம் தோன்றும் பழங்கிணறு
ஏய வேதனு சுக்குவாய் மட்டமுன்
பாய வேகிழக் கும்படு மோழையே. 533

*(ம. நூ. பா. : 318)*

*(இ. ள்)* மனையின் துலாம் இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், புற்று இருக்கும்; விருச்சிக இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் பழங்கிணறு தோன்றும்; தனுசு இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால் வெள்ளம் காணும்.

## இதுவுமது

ஆன மகரம் அறையும் இடிகரை
தான கும்பம் தடுக்கும் குடலைக்கல்
மீனம் தெற்கு மிசைந்த கல்வடக்கு
ஊனம் இல்லா உயர்ந்தண் ணீரதே. 534

*(ம. நூ. பா. : 318)*

*(இ. ள்)* மனையின் மகர இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், இடிகரை காணும்; கும்ப இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், குடலைக் கல் தோன்றும்; மீன இராசிப் பகுதியில் கிணறு எடுத்தால், கல்லும் தண்ணீரும் கிடைக்கும்.

**கிணறு - திசை - நன்மை**

தேடுமவர் சிந்தைதனி லேயுரையு மீசன்
நாடுமவர் மாமுடியி லேயணிநல் சோமன்
மாடுகுலை கொண்டல்வரு ணன்திசையின் மீதிற்
கேடிலை மிகுந்தநல மாங்கிணறு வெட்டில். 535

*(886 a : 225)*

*(இ. ள்) தன்னைத் தேடி அருளை நாடிவரும் அடியவர்களின் எண்ணங்களிலே உறைந்திருக்கின்ற சிவபெருமானின் சிறந்த சடாமுடியில் அணிந்திருக்கின்ற சந்திரன் எழுகின்ற, மேகங்களையுடைய வருணதிசையாகிய மேற்குத் திசையில் கிணறு எடுக்க மிகுந்த நன்மை உண்டாகும்.*

**கிணறு - திசை - தீமை**

நெடுத்தகதி ரங்கிளமன் நிருதியொடு காத்தின்
விடுத்தபிர மன்திசையீ லேகிணறு வெட்டில்
அடுத்துவரும் மக்களும் மலிந்துடைமை பாழாய்
கெடுத்தபடி யாமெனவே ஓடதுவே கிடைக்கும். 536

*(886 a : 171)*

*(இ. ள்) மனைக்கு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய திசைகளிலும் மனைக்கு நடுவாகிய பிரமன் திசையாகிய பிரம ஸ்தானத்திலும் கிணறு வெட்ட மனைக்குரியவனின் உற்றார் உறவினர்களும் புத்திரர்களும் அழிவதோடு, அவனுடைய செல்வத்தையும் இழந்து, பிறரிடம் இரந்து உண்ண நேரிடும்.*

**கிணறு திசை**

வடபா லீசன் கிழக்கோடு
வளரும் மேற்குக் கிணறாகில்
படவா ளின்பம் சுகம்கொடுக்கும்
பாலன் மரணம் வாயுவினில்

அருநோய் நிருதி எமன்மரணம்
அங்கி யாகில் பிள்ளையில்லை
நடுவே யாகில் பொருள்சேதம்
நகரின் மனைகள் தன்கிணறே. 537

*(886 a : 197)*

*(இ. ள்)* மனையில் கிணறு தோண்டும் பொழுது, வடக்கு, வடகிழக்கு, கிழக்கு ஆகிய திசைகளில் கிணறு தோண்ட நன்மைகள் வளரும்; மேற்கில் கிணறு எடுத்தால் இன்பம் மிகுதியாகும்; வடமேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவரின் புத்திரருக்கு மரணம் நேரிடும்; தென்மேற்குத் திசையில் கிணறு எடுக்க, அம்மனைக்கு உரியவருக்கு நோயுண்டாகும்; தெற்குத்திசையில் கிணறு எடுக்க, மனைக்குரியவனுக்குப் பிள்ளைப் பேறு கிட்டாது; மனையின் நடுவாகிய பிரம ஸ்தானத்தில் கிணறு எடுக்க பொருட்சேதம் உண்டாகும்.

**குளம் வெட்டுதல்**

கண்டவக் கினிமூ லைக்கு
கள்ளமாய்க் குழிகு ளங்கள்
உண்டெனில் அடியாள் சாவாள்
உயிருடன் பொருளும் சேதம்
தென்திசை எமனின் திக்கில்
சிறப்பில்லை மிடியே யாகும்
வண்டனி மேற்குச் செல்வம்
மத்திமம் வடமேற் காகா. 538

*(886 c : 17)*

*(இ. ள்)* மனையின் தென்கிழக்குத் திசையில் குளம் வெட்டினால், அம்மனைக்கு உரியவனின் மனைவி இறப்பதோடு, செல்வமும் கையை விட்டுப் போகும். தென்திசையான எமன் திசையில் குளம் வெட்டினால், செல்வம் நீங்கி வறுமை உண்டாகும். மேற்குத் திசையில் குளம் வெட்டினால் செல்வம் வந்து சேரும். வடமேற்குத் திசையான வாயு திசையில் குளம் வெட்டினால் தீமை உண்டாகும்.

குறிப்பு: இண்டிய கொடியோன் திக்கில்
இலட்சமாம் பொருள்வந்த தெய்தும்

(இ-ள்) வடகிழக்கு திசையாகிய ஈடானிய திசையில் குளம் வெட்டினால் மிகுதியான பொருள் வந்து சேரும்.

## குளம் வெட்டுதல்

ஆம்பொருள் கிழக்குச் சோமன்
அத்தமும் கல்வி செல்வம்
தாம்முதற் பலவும் சேரும்
தையல்கேள்! ஈசன் திக்கில்
வேம்படு நிருதி தன்னில்
மிக்கநோய் வறுமை காணும்
நாமிது உரைத்த தல்ல
நன்மயன் உரைத்த வாறே 539

*(886 c : 2)*

(இ. ள்) மனையின் கிழக்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் குளம் வெட்டினால், செல்வமும் கல்வி விருத்தியும் உண்டாகும். ஈசன் திசையான வடகிழக்குத் திசையில் குளம் வெட்டினால் பலவகையான பாக்கியங் களும் கிட்டும்; தென்மேற்கு மூலையான நிருதி திசையில் குளம் வெட்டினால் மனைக்கு உரியவனுக்கு மிகுதியான நோய்களும் வறுமையும் உண்டாகும் என்பதை நல்ல மயன் உரைக்க, பெண்ணே! நான் உனக்கு உரைக்கின்றேன்.

## குளம் அமைத்தல்

சிங்கமும் பருந்து பூனை
சிறந்திடும் திக்கி லேதான்
அங்கொரு குளமுண் டாகில்
அதன்பலன் மனைக்கே யாகா
தங்கிய கன்னி மேற்குத்
தனுமதி ஈசன் திக்கில்
மங்கைகேள்! குளத்தி னாலே
மனையினில் வாழ்வு நன்மை. 540

*(886 a : 168)*

(இ. ள்) மனைக்குக் கிழக்கிலும் தெற்கிலும் தென்கிழக்கிலும் குளம் வெட்டினால் வீட்டிற்கு ஆகாது. தென்மேற்கிலும் மேற்கிலும் வடகிழக்கிலும் குளம் வெட்டினால், பெண்ணே ! இக்குளத்தினால் மனைக்கு உரியவனுக்கு நிறைவான வாழ்க்கையும் நன்மைகளும் உண்டாகும்.

## இராசிகளில் குளம் அமைக்கப் பலன்

குளமது இருந்தால் இப்பால்
கூறிய பலனே கேளும்
வளமது விடைகோல் கன்னி
வரிசையாய் யவனச் சிங்கம்
தளமது தேளும் குடமும்
தயவுடன் மனையும் வாழும்
களமது மத்த இராசி
காருத்த மனைபா ழாமே. 541
(1005a)

(இ. ள்) மனையின் ரிஷப இராசி, துலாம் இராசி, கன்னி இராசி, சிம்ம இராசி, விருச்சிக இராசி, கும்ப இராசி முதலான இராசிப் பகுதிகளில் குளம் அமைக்க, மனையில் வாழ்பவர்கள் சிறப்புற்று விளங்குவர். மேஷ இராசி, மிதுன இராசி, கடக இராசி, தனுசு இராசி, மகர இராசி, மீன இராசி முதலான இராசிப் பகுதிகளில் குளம் அமைக்க, மனைக்கு உரியவனுக்கும் அவன் சுற்றத்தாருக்கும் கேடு விளைந்து, மனை பாழாகும்.

## குளம் அமைக்கும் திசைகளும் அவற்றின் பலன்களும்

செய்திடும் மனைக்கு முன்னே
தென்புறம் குளமே யாகில்
துய்யநீர் நன்மை செய்யும்
சொல்லிய பின்னே யாகில்

வெய்யதோர் வியாதி பீடை
வேதனை செய்யும் என்று
பொய்யல்ல மயனார் சொன்னார்
பூங்கமழ் கோதை மாதே ! 542

*(886 c : 1)*

*(இ. ள்)* கட்டிய வீட்டின் முன்புறத்தில் தென்திசையில் குளம் இருப்பின், மனைக்குரியவனுக்கு நன்மையாகும். வீட்டிற்குப் பின்னே குளம் இருந்தால், மனைக்குரியவனுக்கு நோய்களும் துன்பங்களும் வந்து சேர்ந்து வருத்தத்தைத் தரும் என்று, மணம் மிக்க பூமாலையை அணிந்துள்ள பெண்ணே ! மயனார் கூறியுள்ளார்.



## 17. மனைக்கு ஆகாதவை

### இடங்கள்

தண்ணீர்த் துறைமுன் னர்மனைமுன்
தாவுந் தேருமுச் சந்திகள்முன்
உண்ணீர் அரசர் கோட்டையின் முன்
ஊரு நடுவி ல் சுடலையின்முன்
மின்னே ! தெருவுச் சாயலின்முன்
வேரும் சூலை புகைச்சலின்முன்
இன்னிலந் தன்னில் மனையெடுக்க
எடுத்த மனையும் பாழாமே. 543

*(886 a : 15)*

*(இ. ள்)* தண்ணீர்த் துறைக்கு எதிரிலும், தேர் ஓடுகின்ற வீதி, முச்சந்தி இவற்றுக்கு எதிரிலும், அரசரின் கோட்டைக்கு எதிரிலும், ஊர் சுடுகாட்டுக்கு எதிரிலும், தெருச்சாயலின் முன்னரும், புகைச்சலையுடைய செங்கல் சூளைக்கு எதிரிலும் மனையெடுக்க, கட்டிய வீடு பாழாகும்.

### இதுவுமது

வாழ்வுறும் மனையில் புக்க
வழிகுளம் நிறைந்த ஏரி
தாழ்வுள்ள வாய்க்கால் ஆறு
தாழ்ந்திடும் தலங்க ளோடு
நீளமாம் தெருக்கள் கோடு
நிலைதண்ணீர் துறைகள் மூலை
பாழ்தரு மனையில் பட்டால்
பாலகன் மடியும் தானே. 544

*(886 c : 13)*

*(இ. ள்)* மனைக்கு அருகில் வழியில் குளம், ஏரி, தாழ்ந்த வாய்க்கால், ஆறு, தாழ்ந்த இடங்கள் இருப்பின், அங்கு வீடுகட்டக் கூடாது. தெருக்களின் கோடி, நீர்நிலைகள், மூலை, பாழான இடங்கள் இவற்றில் வீடு கட்ட பாலகன் மரணமடைவான்.

## இதுவுமது

மத்தியில் புத்து மாகா
　　மதித்தெழும் பாறை யாகா
இத்தியா லரசு வில்வம்
　　எட்டியோ டிவைகள் ஆகா
சுத்தமா மரங்க ளெல்லாம்
　　சூழ்ந்துடன் அதன்மேல் நிற்கில்
வித்தகன் தனக்கு மாகா
　　வினைகளும் விளையு மன்றே. 545

*(சி. நூ. பா. : 229)*

*(இ. ள்) மனையில் மத்தியில் புற்றும் பாறையும் இத்தி மரமும் ஆலமரமும் அரசமரமும் வில்வமரமும் எட்டிமரமும் இருக்கலாகாது. அவ்வாறு இருக்கும் மனையில் வீடு கட்டலாகாது. இம்மரங்களோடு கூடச் சுத்தமாகிய மா, பலா, புன்னை, பாதிரி, வேம்பு, கொய்யா, கொழுமிச்சை, எலுமிச்சை, நாவல் முதலான மரங்கள் சேர்ந்து நிற்கிலும், அந்நிலத்தில் வீடு கட்டலாகாது. இங்ஙனம் இருப்பின், மனைக்குரியவனுக்கு கேடு நேரிடுவதோடு, அம்மனையும் பாழாகும்.*

## இதுவுமது

ஆலய முகப்பு மையம்
　　அண்டிடும் பிசாசு கோயில்
நீலியாம் துர்க்கா தேவி
　　நெறிபட ஐயன் கோயில்[1]
சாலையில் வாரா வண்ணம்
　　சமர்த்துடன் தவிர்த்துக் கொள்ள
மாலையாம் அதிப திக்கும்
　　வல்லவன் உரைத்த நூலே.[2] 546

*(886 a : 150)*

---

*1. நெறியையன் வலக்ண் ணோட்டம்*

*2. மாலையம் பதிகி ழக்கு*
*வல்லவன் மயனும் சொன்னான்.*

(இ. ள்) ஆலயத்திற்குப் பக்கங்களில் உள்ள இடங்களிலும், எதிரில் உள்ள இடங்களிலும், பிசாசுகள் இருக்கும் இடங்களிலும், காளி கோவிலின் அருகிலுள்ள இடத்திலும், ஐயன் கோயிலுக்கு அருகிலுள்ள இடத்திலும், சாலையில் உள்ள இடத்திலும், மனைகோலுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். மன்னவனாக இருப்பினும், இதனை மேற்கொள்ள வேண்டுமென்று சிற்பநூல் வல்லவர்கள் தம் நூலில் கூறியுள்ளார்கள்.

## இதுவுமது

அழிந்திடும் கோவில் தானும்
அரவுசேர் இடம லங்கள்
விழித்திடும் செம்மான் .........
மேவிய முனிக ளெல்லை
அழிந்திடும் சுடுமண் காடு
அமருமப் பூமி யாகா[1]
ஒழிந்திடும் அந்த இல்லம்[2]
ஓங்கிய வனம தாமே. 547

*(886 a : 146)*

(இ. ள்) பாழடைந்த கோயில், பாம்பிருக்கும் புத்துகள், மலஜலம் கழிக்கு மிடங்கள், செம்மான் குடிசை கட்டியிருக்குமிடம், முனிகள் நிலைநிற்கும் இடங்கள், சுடுகாடு, போர்க்களம் இவைகளில் மனை கட்டக் கூடாது. அவ்வாறு கட்ட அந்த வீடு காடாகிவிடும்.

## இதுவுமது

வட்டமுக் கோணம் ஆமை
சுளகுசூலம் குளம்அ ரங்கம்
கட்டிநீ சலிப்பால் போலும்
கருதிய மனைகள் ஆகா

---

1. பொழிந்திடும் ஈமக் காடு
போர்களத் தவனி யாகா

2. வீடு

செம்மான் என்பதன் பொருள் விளங்கவில்லை.

தொட்டிநீர் தடத்தின் எல்லை
ஆலயம் எதிரில் கோடி
விட்டநா ராச வீதி
வேரோடும் மனையும் ஆகா. 548

*(886 a : 47)*

*(இ. ள்)* வட்டம், முக்கோணம், ஆமை, சுளகு, சூலம், குளம் போன்ற வடிவுடைய நிலங்களில் வீடுகட்டலாகாது. நீர் நிலைகளின் அருகிலும் ஆலயத்தின் எதிரிலும் வீடுகளைக் கட்டக்கூடாது. வீதியின் கோடியிலும் இராச வீதியிலும் வீடுகளைக் கட்டக்கூடாது. வேர்கள் ஓடியிருக்கும் நிலத்தில் வீடுகட்டலாகாது.

## இதுவுமது

முடுக்கு வீதிகள் முகடுகள் மண்டபம்
தொடுக்க நந்த வனத்தொடு கோயில்கள்
விடுக்க வேத மொழியும் மடங்களும்
இடுக்க மாகும் மனையும் தவிர்க்கவே. 549

*(886 c : 10)*

*(இ. ள்)* தெரு வீதிகள், முகடுகள், மண்டபங்கள், நந்தனம், கோயில்கள், வேதங்களைக் கற்றுத்தரும் பாடசாலைகள் இவைகளுக்கு அருகில் மனைகளைக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

## இதுவுமது

சந்துகள் முடுக்குக் கோடி
சதுர்மறை யவர்கள் கோயில்
பந்தமாம் குளங்கள் கூவல்
பணியிடை புத்து வானம்
சுந்தரம் ஒடுக்குச் சூலம்
சுறகுடன் முறங்கள் ஈட்டி
இந்தநல் வடிவு கண்டால்
இயல்மனை எடுக்க லாகா. 550

*(886 c : 14)*

*(இ. ள்)* சந்துகள், முடுக்கு, கோடி, மறையவர் வீடுகள், புற்றுகள், குளங்கள், கிணறுகள் இவற்றிற்கு அருகில் வீடுகளைக் கட்டக் கூடாது. ஒடுக்கு, சூலம், சுளகு, முறம், ஈட்டி இந்த வடிவிலான நிலங்களில் வீடுகளைக் கட்டலாகாது.

**இதுவுமது**

கூறிய வாசல் படிதனில்
வாரமுங் கோடி குத்தல்
ஏறிய முற்றம் நடுவில்
சுவருடன் அநேக கம்பம்
மீறிய கம்பங்க ளுத்திர
மெத்தைகள் மேன்ம னைசூழ்
மாறிய இருந்தி டில்தான்
எல்லாத் துயரும் வந்திடுமே. 551

*(886 a : 231)*

*(இ. ள்)* வாசல்படியில் கோடி குத்தல், முற்றம் நடுவில் சுவர். மிகுதியான கம்பங்கள், உயரம் அதிகமான கம்பங்கள். நீண்ட உத்தரம், உயர்ந்த மெத்தை, மாடிகள் போன்றவை இயல்பான அளவுகளில் இருந்து மாறுபாடுடையனவாக இருக்க, அனைத்துத் துயரங்களும் மனைக்குரியவனுக்கு வந்து சேரும்.

**கடைக்குத்தல்**

நடுமனை கம்ப மாகில்
நடுமனை வாச லாகில்
எடுசுவர் இரட்டை யாகி
ஏத்துங்கை ஒற்றை யாகி
முடிவளை தாழு மானால்
முந்துகை ஏறு மானால்
விடுகுடி புகுது முன்னே
விடுவது சீவன் தானே. 552

*(886 a : 2)*

*(இ. ள்) நடுவீட்டில் கம்பம் இருப்பினும், நடுவீட்டில் வாசல் இருப்பினும், இரட்டைச் சுவர் இருந்தாலும், ஏத்துங்கை ஒற்றையாக இருந்தாலும், வளை தாழ்ந்து இருப்பினும் முந்துகை ஏறி இருந்தாலும், அவ்வீட்டில் குடிபுகுவதற்கு முன்னால் மனைக்குரியவன் மரணமடைவான்.*

### செயல்கள்

தேரோடு தெருஒ ழுங்கை
தெண்டக சாலை எல்லாம்
வாரோடும் அகலம் உச்சம்
வடிவது வாகக் கொள்வீர் !
நேரோடும் அகலம் தன்னில்
நின்றொன்று தாழு மாகில்
ஊரோடு மனையில் புக்கார்
ஒடுவர் வீடு விட்டே. 553

*(886 a : 147)*

*(இ. ள்) தேர் ஓடுகின்ற வீதி, ஒழுங்கு தவறி இருக்க, அல்லது சாலை பொருத்தம், அகலம், உச்ச அளவு இவைகள் குறைவுபடுமாகிலும், நீண்டும் அகன்றும் ஒன்றுக்கொன்று முறைவழுவி மாறுபடுமாகிலும், அந்த ஊரிலும் மனையிலும் புகமாட்டார்கள். அவ்விடத்தை விட்டே ஓடிப்போக நேரிடும்.*

### இதுவுமது

கூறிய வாசல் படிதனில் வாரகை கோடிகுத்தல்
ஏறிய முற்றம் நடுவில் சுவருடன் நிலையைவிட
மூறி கம்பங்கள் உத்திரம் மெத்தைகள் மேன்மனைசூழ்
மாறி இருந்திடப் பொல்லாத் துயரங்கள் வந்திடுமே.

*(இ. ள்) வாசல் படிதனில் வாரகை இருப்பினும், கோடி குத்தல் இருப்பினும், முற்றத்தின் நடுவில் சுவருடன் நிலையிருப்பினும், கம்பங்கள், உத்திரம், மாடிகள் இவை மாறி இருந்தாலும் அம்மனைக்கு உரியவனுக்குத் துன்பங்கள் வந்து சேரும்.*

### பாய்ச்சல்கள்

சட்டமாம் கோவிற் பாய்ச்சல்
சதிர்பெரும் வீட்டுப் பாய்ச்சல்
விட்டமாம் வயலிற் பாய்ச்சல்
இதமுறு சந்திப் பாய்ச்சல்
வட்டமாய் அடிநூ றாகில்
வருவதே தோஷம் இல்லை
திட்டமாய் மயனார் சொன்னார்
திடம்பெற வாழ்வார் என்றே. 555

*(886 c : 23)*

*(இ. ள்) கோவிற் பாய்ச்சல், வீட்டுப் பாய்ச்சல், வயலிற் பாய்ச்சல், சந்திப் பாய்ச்சல் ஆகியவை இருப்பின், வீடு கட்டக் கூடாது. அவ்வாறு கட்டினால் வீட்டிற்குத் தீங்காகும். ஆனால் இவை நூறு அடிக்கு மேல் இடைவெளி இருப்பின் தோஷம் இல்லையென்று மயனார் சொன்னார். இவ்வாறு கட்டப்பட்டுள்ள மனையில் வாழ்பவர்கள் சிறப்புடன் விளங்குவர்.*

### இதுவுமது

கன்னமாங் கோடி பாய்ச்சல்
கருதிய கட்டை பாய்ச்சல்
வின்னமாய் ஒன்றுக்கொன்று
வி.... .... .....
கண்டகுள் ளாகி நின்றால்
சொர்ணமாம் பொருளும் போகும்
பன்னமா விழியி னாளே !
பதிமனை பாழ தாமே. 556

*(886 c : 16)*

*(இ. ள்) கோடிப் பாய்ச்சல், கட்டைப் பாய்ச்சல் முதலானவை வீடுகளுக்கு ஆகாது. ஆங்ஙனம் பாயில், வீட்டிலுள்ள பொன்னும் பொருளும் கைவிட்டுப் போகும். கட்டிய மனையும் பாழாகும் என்பதை பெரிய விழிகளையுடைய பெண்ணே ! அறிவாயாக.*

## இதுவுமது

கோடியொடு கோடி பாயில்
குலமகள் தனக்கு நாசம்
நாடியே குலுக்குப் பாய்ச்சல்
நாயகன் தனக்கு நாசம்
நீடியே எதிருஞ் சாலை
நோய்படும் வாச லாகில்
வாடியே போமி தன்றி
வலம்விட வாச லாமே. 557

*(886 c : 4)*

*(இ. ள்)* கோடிப் பாய்ச்சல் மனைக்கு இருக்குமானால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். குறுக்குப் பாய்ச்சலாகில், மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும். வீட்டிற்கு எதிரில் சாலைக் குத்தலானால் நோய் உண்டாகும். வீட்டின் வாசலை வலப்புறத்தில்விட நிறைந்த வாழ்வு உண்டாகும்.

## குத்தல்கள்

மருவியே மயனார் சொன்ன
வண்மையை உரைக்கக் கேளும்
உருமையால் உலகில் உற்ற
உத்தகுத் தல்கள் தானும்
பெருகிய கோவில் குத்தல்
பிரகார தீபக் குத்தல்
தருவிய வேலிக் குத்தல்
தவிர்த்திட நன்மை தானே. 558

*(886 c : 26)*

*(இ. ள்)* மயனார் கூறியுள்ள மனைக்கு ஆகாத குத்தல்களைக் கூறக் கேட்பாயாக. கோவில் குத்தல், பிரகாரக் குத்தல், தீபக் குத்தல், வேலிக் குத்தல் ஆகியவை இருப்பின், வீட்டிற்குத் தீமை விளையும். ஆகவே அவற்றை நீக்கிக் கொள்ளுதல் நன்மையைத் தரும்.

## இதுவுமது

ஒன்றான சந்து குத்தல்
ஓங்கிய குளத்துக் குத்தல்
கண்ணான கட்டைக் குத்தல்
கையுடன் நிரப்புக் குத்தல்
பண்ணான மேட்டுக் குத்தல்
பழகிய கிணற்றுக் குத்தல்
நன்னாளும் சாவு சொல்லும்
நன்மயன் உரைத்த நூலே. 559

*(886 c : 25)*

*(இ. ள்)* சந்துக் குத்தல், குளத்துக் குத்தல், கட்டைக் குத்தல், நிரப்புக் குத்தல், மேட்டுக் குத்தல், கிணற்றுக் குத்தல் போன்றவை வீட்டிற்குத் தீமையை அளிப்பனவாகும். அவ்வாறு இருப்பின் மனைக்குரியவனுக்கு மரணம் நேரிடும் என்று மயனார் கூறியுள்ளார்.

## குத்தல்

சன்னதி விளக்குக் குத்தல்
சாய்ந்தகோ புரத்தின் குத்தல்
உன்னிய மதிலும் குத்தல்
ஒருபுறம் சந்து குத்தல்
முன்னிய பிடாரி ஐயன்
விநாயகர் துர்த்தெய் வங்கள்
நன்னிய சந்துண் டாகில்
நலமுடன் குத்தல் இல்லை. 560

*(886 b : 50)*

*(இ. ள்)* சன்னதி குத்தல், விளக்குக் குத்தல். கோபுரத்தின் குத்தல், மதில் குத்தல், சந்து குத்தல், பிடாரி கோயில், அய்யனார் கோயில், விநாயகர் கோயில், துர்த்தெய்வங்களின் கோயில் குத்தல் போன்றவை வீட்டிற்கு இருப்பின் தீங்குண்டாகும். வீட்டிற்கும் மேற்கண்டவற்றிற்கும் இடையே சந்து இருப்பின், குத்தல் இல்லை.

## குத்தல் (வேறு)

பொருத்தமனை இசையாட்டால் சந்து போடு
ஏத்தபடி கட்டவுந்தான் நன்மை யாகும்
குடித்தனமும் சம்பத்தும் குபேரன் போல
குறைவன்றி வாழ்வரென்று கூறி னாரே. 561
*(886 c : 32)*

*(இ. ள்)* மனையடி சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள பல்வேறு குத்தல்களும் மனைக்குரியவனைப் பாதிக்காமல் இருக்க வேண்டுமாயின், இடையில் சந்து இருக்கும்படி வீடு கட்ட வேண்டும். அவ்வாறு கட்ட செல்வமுடன் குபேரன் போன்று நிறைந்த வாழ்வு பெறுவர்.

## குத்தல்களும் இன்மையும்

தேவால யங்களும் பிரமால யங்களும்
சிவவிஷ்ணு ஆல யங்களும்
திறமாக நூறடி குளங்கள் பத்தடி
துரவுகிணர் முப்ப தடியாம்
காவலர்கள் அரசாளும் அரசுபதி னைந்தடி
கருதியே மண்டப சத்திரம்
கருநீல தொட்டிகள் சந்துகள் பத்தடி
கிடந்திட குத்தல் இல்லை. 562

*(இ. ள்)* தேவர்களுக்குரிய ஆலயங்களுக்கும் பிர்மாவின் ஆலயங்களுக்கும், சிவனுடைய ஆலயங்களுக்கும் விஷ்ணுவினுடைய ஆலயங்களுக்கும் வீட்டிற்கும் இடையே நூறடி சந்து இருப்பின் கோயில் குத்தல் இல்லை. குளங்களுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குளக்குத்தல் இல்லை. வீட்டிற்கும் அரண்மனைக்கும் இடையே பதினைந்தடி சந்து இருப்பின், குத்தல் இல்லை. மண்டபங்கள், சத்திரங்கள், தொட்டிகள் இவற்றுக்கும் வீட்டிற்கும் இடையே பத்தடி சந்து இருப்பின், குத்தல்கள் இல்லை.

**இதுவுமது**

நாடிய வீதி தானும்
　　நாற்பது அடியுண் டானால்
கோடியாம் குத்தம் தீர்க்கும்
　　கோவீடு புகல்ந டக்கில்
நீடிய மணம்பி ணங்கள்
　　நேர்பட போமே யாகில்
ஓடிடும் தோஷம் என்று
　　உண்மையாய் மயன்சொன் னாரே. 563

*(886 c : 9)*

*(இ. ள்)* வீட்டிலிருந்து வீதியானது நாற்பது அடி தூரத்தில் இருப்பின், வீதி குத்தல் முதலான குத்தல்கள் நீங்கும். வீடு குடிபுகும்போது, பிணங்கள் நேர்படச் சென்றால் தோஷங்கள் நீங்குவிடும் என்று மயனார் கூறியுள்ளார்.

**இதுவுமது**

மண்டபம் திருக்கு ளங்கள்
　　மாளிகை சத்தி ரங்கள்
விண்டது விலாவு குத்தல்
　　வீதிகள் மச்சுக் குத்தல்
நண்டது மதில்கால் குத்தல்
　　நடுவினில் சந்து கண்டால்
ஒண்டினில் குத்தல் இல்லை
　　உலகினில் வகுத்தோர் மாதே ! 564

*(886 c : 10)*

*(இ. ள்)* மண்டபம், குளம், மாளிகை, சத்திரம், விலாவு, வீதிகள், மச்சு. மதில் போன்ற குத்தல்கள் வீட்டிற்கு இருப்பின், வீட்டிற்கும் மேற்சொன்னவற்றிற்கும் இடையே சந்து இருப்பின், குத்தல்கள் இல்லையென்று உலகினில் வகுத்துள்ளார்கள்.

### கிணறு குத்தல்

சொல்லிய கிணற்று நீளம்
 தொகுத்தநீர் மட்ட மட்டும்
எல்லவன் கிழக்கு மேற்கு
 இயல்மனை எடுக்க லாகா
வல்லிகேள் ! நடுவில் வீதி
 மனைகிண றால யங்கள்
பல்லவே தெரு உண்டாகில்
 பாய்ச்சலொன் றில்லை தானே. 565

*(886 c : 5)*

*(இ. ள்)* கிணற்றுநீர்மட்டம் வரையிலான நிலத்தில் கிணற்றுக்குக் கிழக்கு, மேற்குத் திசைகளில் வீடுகட்டக் கூடாது. ஆனால் மனைக்கும் வீடு, கிணறு, ஆலயம் ஆகியவற்றிற்கும் இடையே தெரு இருக்குமானால், குத்தல் என்ற குற்றம் இல்லை.

### செயல்கள்

கொட்டு மூலை முளைபறித்தல்
 கோத்த கயறு அறுத்துவிழல்
விட்ட வாசல் தனையடைத்தல்
 வேறே வாச லதுவிடுதல்
நட்ட காலைப் பிடுங்கிநடல்
 நடுவில் ஆணி மரமிசைத்தல்
சட்ட மனையாள் சாவதுவும்
 தானும் மரணம் தப்பாதே. 566

*(742 : 96)*

*(இ. ள்)* மனையெடுக்கும் பொழுது, முளைபறித்தல், கயறு அறுத்தல், விட்டவாசலை அடைத்து வேறு வாசல் விடுதல், நட்ட கம்பத்தை பிடுங்கி நடுதல். மரமிசைத்து ஆணி போடுதல் முதலான செயல்களைச் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால், மனைக்குரியவனின் மனைவிக்கு மரணம் நேரிடும். மனைக்குரியவனும் மரணமடைவான்.

**வேறு**

கொட்டிய முளைபிடுங்கல் கோர்த்திடுங் கயிறறுத்தல்
நட்டகால் தனைப்பறித்தல் நடுவாணி மரமிசைத்தல்
விட்டவா யிவைஅடைத்தல் வேறுவா யிலைவிடுதல்
சட்டமாம் மனையாளும் தரிப்பதும் அரிதுதானே. 567
*(சி. நூ. பா. : 98)*

**வேறு**

நட்டக்கால் பிடுங்கி நாட்டல்
நடுவிலே இசைஇ சைத்தல்
கொட்டுவாய் முனைமு றித்தல்
கோலிய கயிறு தேற்றல்
விட்டதோர் வாசல் மாறி
வேத்திட மாகச் செய்தால்
கட்டழ கிழந்து மன்னர்
கலகமாய்ப் பொருளும் போமே. 568
*(886 c : 6)*

*(இ. ள்)* மனையெடுக்கும்பொழுது, நட்டக் கம்பத்தைப் பிடுங்கி நடுதல், மரமிசைத்து ஆணி போடுதல், கொட்டுவாயின் முனையை முறித்தல். கயிற்றினை அறுத்தல், விட்டவாசலை அடைத்து வேறு இடத்தில் வாசல் அமைத்தல் போன்றவற்றைச் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால், மனைக்குரியவன் தன் அழகினை இழப்பான். மன்னரின் கோபத்திற்கு ஆளாவான். கலகம் நேரிடும். கைப்பொருளும் கையைவிட்டுப் போகும்.

**செயல்கள்**

குடக்குத் தெற்கு மனைபெயரில்
குற்ற மிகவே தானுண்டு
வடக்கும் கிழக்கும் மனையெடுக்கில்
வசிய முண்டு மிகநன்றாம்

எடுப்பும் சாய்ப்பும் மிகவாகா
எண்ணும் கருமம் துலங்காது
முடுக்குங் கோடி மறுமாடி
மூலை வாங்கிலும் தீதாமே. 569

*(742 : 88)*

*(இ. ள்)* மேற்குத் திசை, தெற்குத்திசை இவற்றில் கட்டியுள்ள வீட்டைப் பெயர்த்துக் கட்ட குற்றம் உண்டாகும். வடக்குத்திசை, கிழக்குத் திசை ஆகிய திசைகளில் கட்டியுள்ள வீட்டை இடம் பெயர்ததுக் கட்ட நன்மையாகும். எடுப்பு, சாய்ப்பு, முறுக்கு, கோடி, மறுமாடிகள், மூலை வாங்கியிருந்தால் ஆகாது.

## இதுவுமது

கூறுவிர லால்முகடு கொண்டமறு மாடி
மாறுபட வானவைகள் வாழுமனை எடுக்கில்
வீறுபடு நோய்களவு இல்லவளும் இல்லாள்
வேறுபடும் வெம்பகை விளம்புவது மெய்யே. 570

*(886 c : 89)*

*(இ. ள்)* மனையெடுக்கும்பொழுது, முகடுகள், மறுமாடிகள், மாறுபாடானவைகள் இருப்பில், மனையில் உள்ளவர்கள் நோயால் வருந்துவர். பொருள்கள் களவு போகும். மனைவிக்கு மரணம் நேரிடும். கொடுமையான பகைவர் தோன்றி வருத்துவர்.

## செயல்கள்

மனையது பெயர்த்துக் கட்டில்
வடக்கொரு தெற்கு நன்றாம்
தனமுறு செல்வம் உண்டாம்
தரணியில் இனிது வாழ்வர்
அனமுறு தெற்கும் மேற்கும்
அல்லவே மிகவும் செய்யும்
வளமுறு மயனார் சொன்னார்
விளம்பினார் வேதத் தோரே. 571

*(886 c : 90)*

*(இ. ள்) வீட்டை இடித்து மீண்டும் கட்டுபொழுது, வடக்குத் திசையிலும் தெற்குத்திசையிலும் கட்ட மிகவும் நன்மையாகும். செல்வம் பெருகும். மனைக்கு உரியவர்கள் இப்புவியில் இன்பமுடன் நிறைந்த வாழ்வு வாழ்வார்கள். வீட்டை இடித்துத் தெற்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் மீண்டும் கட்ட. அதனால் மனையில் உள்ளவர்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாகும் என்று மயனார் கூற, மற்றோர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.*

**இதுவுமது**

ஊர்க்கு அக்கினி வாயு நடுவில்
உயர்ந்த வீடு அமர்ந்து இருக்கில்
பார்க்கும் போது குணங்களும் அப்படி
பகர்ந்திரு வாசல் ஆலயம் சேர்ந்திடில்
சேர்க்கும் தேரணி இப்படி ஆகிடில்
செல்வமும் அந்த ஊருமே பாழதாம்
தாய்க்கு நோய்பிணி ஊரைவிட் டோடுவான்
தாரணி யில்மயன் சொன்ன மொழியிதே. 572

*(886 c : 50)*

*(இ. ள்) ஊருக்கு அக்கினி மூலையில் (தென்கிழக்கு), வாயு மூலையில் (வடமேற்கு), நடுவில் (பிரமதானம்) இவற்றில் வீடு கட்டக்கூடாது. வீட்டு வாசலுடன் கோயில் சேர்ந்து இருப்பின், அம்மனைக்கு உரியவனுக்குச் செல்வம் கையைவிட்டுப் போகும்; அந்த ஊர் பாழாகும்; மனைக்குரியவனின் தாய்க்கு நோய்கள் மிகும்; மனைக்குரியவன் துன்பம் மிகுதியாகி, ஊரைவிட்டே செல்லுவான் என்று உலகத்தோர்க்கு மயன் சொன்ன மொழி இதுவாகும்.*

## மனைகோல ஆகாத நாட்கள்
## தலையற்ற, உடலற்ற, காலற்ற நாட்கள்

கார்த்திகையும் உத்திரமும் உத்தி ராடம்
காலற்ற நாளாகும் கண்டு பாரு
கீர்த்தியுள மிருகசீ ரிடம விட்டம்
சித்திரையும் உடலற்ற நாள தாகும்
பூர்த்தியாம் விசாகமொடு பூரட் டாதி
புனர்பூசம் தலையற்ற நாள தாகும்
நேர்த்தியிலை மங்களமாம் காரி யங்கள்
நீவிலக்கிச் செய்யெனவே நிகழ்த்தி னோமே.

*(இ. ள்)* நட்சத்திரங்களில் கார்த்திகை, உத்திரம், உத்திராடம் மூன்றும் **காலற்ற நாட்களாகும்.** மிருகசீரிடம், அவிட்டம், சித்திரை மூன்றும் **உடலற்ற நாட்களாகும்.** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி மூன்றும் **தலையற்ற நாட்களாகும்.** இந்நாட்களில் மங்களமான காரியங்களை விலக்க வேண்டும். *(சி. நூ. பா. : 143)*

## இதுவுமது

காலற்றன உடலற்றன தலையற்றன நாளில்
கோலக்குல மடவார்தமை கூடின்மல டாவார்
மாலிட்டொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தவர் வழிபோகினும் நலமெய்திடார் அவமே.

*(இ. ள்)* காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்களில் பெண்களைச் சேரில் அவர்கள் மலடாவார். மனை, மாளிகை கோல, அவை அழிந்து பாழாகும். பயணத்தை மேற்கொண்டால், அவர்கள் வழியிலேயே மரணத்தை அடைவார்கள். *(சி. நூ. பா. : 144)*

## இதுவுமது

தலையற்றன வுடலற்றன தாளற்றன நாளில்
நிலைவைத்தவர் மனைகோபுரம் நீடுபதி நாசம்
கலைகற்றவர் பிணியுற்றவர் கடுகிப்பய ணத்தார்
வலையற்றிடு மானாடுவர் மணம்செய்திடிற் பிணமே.

*(இ. ள்)* தலையற்ற, உடலற்ற, காலற்ற நாட்களில் நிலை வைத்தாலும், மனை, கோபுரம் போன்றவற்றைக் கட்டினாலும் அழிந்து போகும். கலைகளைக் கற்றவராக இருப்பினும், நோய்வாய்ப் பட்டவராக இருப்பினும், விரைவில் பயணம் செய்பவராக இருப்பினும் வலையில் அகப்பட்ட மானைப் போன்று துன்பமுறுவர். திருமணம் செய்தால், பிணமாவார். *(சி. நூ. பா. : 145)*

## இதுவுமது

காலற்றநாள் உடலற்றநாள் தலையற்ற நாளதனில்
மாலுக்கேனும் மனைகோலினும் வழிபோகினும் மரணம்
வேலொத்தநல் விழிமாதரை மனைமேவினும் விதவை
ஞாலத்தவர் நடைபோயினும் நாசவிதி நாசம். 576

*(886 a : 68)*

## எரிக்கின்ற நாட்கள்

கதிருக்கு மகமாம் மதிக்கந்த விசாகம்
திருகுசெவ்வா யாதிரை ஆயிலி யம்புதன்
விருகுருவெண் சதயம் வெள்ளி ரோகணி
எரிசனிபூ ராடமிவை எரிக்கின்ற நாளே. 577

*(1005 a)*

*(இ. ள்)* ஞாயிறு - மகம், திங்கள்-விசாகம், செவ்வாய்-திருவாதிரை, புதன்-ஆயிலியம், வியாழன்-சதயம், வெள்ளி-உரோகணி, சனி-பூராடம் இவை எரிக்கின்ற நாட்கள். இந்நாட்களில் மாட கூடம், மனையெடுத்தல், நல்ல காரியங்கள் போன்றவை செய்யலாகாது.

## வேறு

விரிகதிர் மாமகம் விசாகம் திங்களாம்
அருங்குஜன் ஆதிரை ஆயிலி யம்புதன்
விரைகுரு சதயமும் வெள்ளி ரோகணி
இரைசனி பூராடம் எரிக்கும் நாட்களே. 578
*(சி. நூ. பா. : 137)*

## பிறந்த நாள் வாரம் கூடில் மனையெடுக்க ஆகாத நாட்கள்

செங்கதிரோன் பிறந்தநாள் பரணி யாக
செழுமதிக்குச் சித்திரைசெவ் வாய்உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம் பொன்மேல் கேட்டை
புகர்வெள்ளி பூராடம்சனி ரேவதி நாளில்
மங்கையனார் மணம்புணரில் விதவை யாகும்
மனையெடுக்கிற் பாழாம்வழி போகில் மரணம்
செங்குழலாள் திருப்பூத்தால் மலடி யாவாள்.
சிறுகுழவி பிறந்திடிலே சேதம் தானே. 579
*(886 a : 63)*

*(இ. ள்)* ஞாயிறு - பரணி, திங்கள் - சித்திரை, செவ்வாய் - உத்திராடம், புதன் - அவிட்டம், வியாழன் - கேட்டை, வெள்ளி - பூராடம், சனி - இரேவதி இந்நாட்களில் திருமணம் செய்தால், பெண் விதவையாவாள்; மனையெடுக்கப் பாழாகும்; பயணம் செய்தால் - வழியில் மரணம் உண்டாகும். திருப்பூத்தல் செய்யில் - மலடியாவாள்; குழந்தை பிறந்தால் இறந்துவிடும்.

குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்

செங்கதிரோன் வாரநாள் பரணி கூடில்
செழுமதியிற் சித்திரைநாள் உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம்பொன் வாரங் கேட்டை
புகற்பூராடம் காரிரே வதியிற் நாளில்

மங்கையரை மணம்புனரில் விதவை யாகும்
மனையெடுக்கின் பாழ்வழியிற் போகிற் சாவாம்
செங்கயற்கண் ணார்பூத்தால் மலடி யாவர்
சிறுகுழவி பெரின்மரிக்கும் திண்ணம் தானே.

*(ம. நூ. பா. : 282)*

## வேறு

வந்திக்கும் கதிர்க்குக் காடு
மதிக் குச்சித் திரைசேய்க் காடி
புந்திக்கு விட்டம் பொன்மேற்
கேட்டையாம் புகர்பூ ராடம்
கிந்திக்கும் சனிக்குத் தோணி
கிழமைகள் பிறந்த நாளாம்
சிந்திக்கும் கரும மெல்லாம்
தீமையாய் விளையும் மாதே. 580

*(சி. நூ. பா. : 142)*

## மனைகோல ஆகாத நாட்கள்

அஞ்சு மகமும் அனுடமொரு மூன்றுநவம்
மிஞ்சுகார்த் திகைமிக்க வேவெண்ணம் ரோகணியும்
நஞ்சுநான் குத்தரமிந் நாளில்மனை கோலுமவர்
துஞ்சுவரவ் வாண்டுக்குள் துய்யமயன் சொல்லிதுவே.

*(இ. ள்)* பஞ்சமியும்-மகமும், திருதிகையும் - அனுஷமும், நவமியும்-கார்த்திகையும், அஷ்டமியும்-உரோகணியும், சதுர்த்தியும் - உத்தரமும் கூடின நாளில் மனைகோலில், அந்த ஆண்டு முடிவதற்குள் மனைக்கு உடையவர்மரணமடைவர்.

## மனைக்கு ஆகாதவை - நாட்கள்

வட்டமும் கொடிய வாரம்
மந்தாரம் மழையே முறிதல்
தொட்டிடும் கிராணம் பார்த்துக்
குலைந்திடும் பொல்லா நாட்கள்

விட்டியும் வெள்ளிப் பாடும்
விடமுள்ள கடிகை நேரம்
அட்டமி உவாவி ருத்தை
ஆகநாள் நீக்கிக் கூட்டே. 582

*(886 a : 138)*

*(இ. ள்)* பரிவேடமும், கொடிய நாட்களாகிய ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களும், மந்தாரம், மழை முறிதல், கிராணம் முதலான நாட்களும் **பொல்லாத நாட்களாகும்.** விட்டி, கரணம், விஷக்கடிகை, அட்டமி, அமாவாசை, பூரணை, இருத்தை இவை வராமல் நீக்கி, நல்ல வாரத்திலே முகூர்த்தம் இடுவது.

**இதுவுமது**

வட்டமாம் பரிவே டக்கல்
மழைமுறை கிராணம் பத்தும்
மட்டசந் திரனை மிக்க
அமாவாசை அதுவும் தீதாம்
சட்டிபவ றணையும் நான்கும்
சதுர்த்தசி மற்று மங்கள
ஒட்டிய பக்கம் மிக்க
உத்தம மாகு மென்றே. 583

*(886 a : 73)*

*(இ. ள்)*, சந்திரனையும் சூரியனையும் பரிவேடமிட்டிருந்தால் கொடிய வாரமாம். மந்தாரம், மழைத்தூறல், கிரணம் தீண்டல், அமாவாசை, சஷ்டி, பௌர்ணமி, சதுர்த்தி, சதுர்தசி இவைகளை நீக்கி வளர்பிறையில் நல்ல நாட்களில் முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும்.

---- ❋ ----

# 18. பூமி சல்லியம் - கணக்கிட்டுக் காணல்

அப்போ தளந்தவடி யாமிருபத் தெட்டுடனே
தப்பாமற் கூட்டித் தவறாமற் - செப்பமுடன்
பன்னிப் பயனைப் பதினாறுக் கீய்ந்தபலம்
உன்னியவர்க் கெல்லம் உரை. 584

*(சி. நூ. பா. : 407)*

*(இ. ள்) யாரேனும் ஒருவன் கிரக சல்லியம் வினவினால் அடியளந்து அவச்சாயை, பாதச்சாயைகள் நின்ற அடியுடனே இருபத்தெட்டு கூட்டி பதினாறில் வகுக்க,*

*மீதி ஒன்றானால் தலையோடு; மீதி இரண்டானால் எலும்பு;*
*மீதி மூன்றானால் விட்டிகை; மீதி நான்கானால் ஓடு;*
*மீதி ஐந்தானால் விறகு; மீதி ஆறானால் தெய்வம்;*
*மீதி ஏழானால் சாம்பல்; மீதி எட்டானால் கரி;*
*மீதி ஒன்பதானால் சவம்; மீதி பத்தானால் தானியம்;*
*மீதி பதினொன்றானால் பொன்; மீதி பன்னிரண்டானால் கருங்கல்;*
*மீதி பதிமூன்றானால் தவளை; மீதி பதினான்கானால் பசுவின் கொம்பு*
*மீதி பதினைந்தானால் நாயெலும்பு; மீதி பதினாறானால் மதமதக்காசால்;*

*இந்தப்படி பதினாறும் பூமி சல்லியம்.*

**குறிப்பு : பல மாற்றங்களுடன் கிடைக்கும் பாடல்**

அப்போ தளந்த அடியோ டிருப்பதெட்டும்
தப்பாமல் கூட்டி தகறில் - இப்புவியில்
பன்னிரெண் டால்பெருக்கிப் பதினாறுக் கீய்ந்தபலன்
உன்னியவர்க் கெல்லமா உரை.

*(1005 a)*

குறிப்பு: **இப்பாடலில் இருபத்தெட்டு கூட்டிப் பன்னிரண்டால் பெருக்கிப் பின் பதினாறால் வகுக்க வேண்டும் என்று கூறப்பட்டிள்ளது நோக்கத்தக்கது.**

### பூமி சல்லியம் - வகை

உள்ளும் முறமைதலை யோடெலும்போ டிட்டிகையும்
வள்ளோடு சுள்ளி மகிழ்தெய்வம் - தெள்ளியதோர்
சாம்பல் கரிசபமும் தானியம்பொன் கற்றவளை
யாங்குசுவா னத்தெலும்பு மாம். 585

*(இ. ள்)* பூமி சல்லியம் பதினாறு வகைப்படும். அவை 1. தலையோடு, 2. எலும்பு, 3. விட்டிகை, 4. ஓடு, 5. சுள்ளி, 6. தெய்வம், 7. சாம்பல், 6. கரி, 9. சவம், 10. தானியம், 11. பொன், 12. கருங்கல், 13. தவளை, 14. பசுவின் கொம்பு, 15. நாயெலும்பு, 16. மதமதக்கா சால். இந்தப்படி பதினாறும் பூமி சல்லியம். *(சி. நூ. பா. : 406)*

### ஆருடம்
### பூமி சல்லியம் - பலன் காணல்

உதயவா ரூடம் தன்னில்
உடலுயிர் அறிய வேண்டில்
மதிதமாய் வந்த நாட்கள்
வருமுழு நாட்கள் தன்னில்
புதியதாய் உடலீ தென்றும்
பொழுதுநாள் உயிர தென்றும்
பதியவே பலன்கள் சொல்லும்
பகர்ந்தன முறையு மாதே. 586

*(இ. ள்)* உதய ஆருட இராசியில் உடல் இராசி இன்னதென்றும் உயிர் இராசி இன்னதென்றும் தெரிய வேண்டி இருப்பதால், அது விபரம். சந்திரன் நின்ற இராசியே உடல் இராசியென்றும், உதயாரூட இராசியே உயிர் இராசி என்றும், தெரிந்து கொள்ள வேண்டும். இந்த இராசிகளில் முழு நாளை எண்ணி பலன் சொல்ல வேண்டும். *(சி. நூ. பா. : 397)*

## பலன் சொல்லுதல்

தொட்டலக் கனத்தில் காரி
சூரியன் செவ்வாய் இராகு
திட்டம்நா லேழு பத்தில்
சீரண மதியே சேர்ந்தாற்
பட்டிடு மரங்கள் கட்டை
பானையோ டெலும்பு சாம்பல்
சட்டமாய் இருக்கும் என்றே
சாற்றினார் மயனும் தானே. 587

*(இ. ள்)* யாரேனும் ஒருவர் வினவிக் கேட்க வரும்பொழுது, அவரை ஒரு இராசியைத் தொடச்சொல்லி, அந்த இராசிக்குச் சனி, சூரியன், செவ்வாய், இராகு, நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம், அமரபக்கம் சந்திரன் கூடியிருந்தால், பட்ட மரமும் பனையோடும் எலும்பும் சாம்பலும் இருக்கின்றது என்று சொல்லுவது. *(சி. நூ. பா. : 398)*

## பூமி சல்லியம் - தீயவை

ஆறெட்டில் பன்னி ரண்டில்
ஆனதோர் சல்லி யங்கள்
கூறாட்டு நின்ற தாலே
குத்தமே இல்லை நன்மை
வீறாட்ட இலாபம் எல்லாம்
வித்தைசேர் மூன்றில் நின்றால்
பேரிட்ட சல்லி யங்கள்
பெரும்பிணி மிகவுண் டாமே. 588

*(1005 b)*

(இ. ள்) ஆருட இலக்கனத்திற்கு ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால் நன்மை. பதினோராமிடம், ஏழாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் இவைகளில் கோள்கள் நின்றால், அம்மனையில் சல்லியங்கள் இருக்குமென்று சொல்வது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குப் பெரும் பிணிகள் தோன்றி வருத்தும்.

### பூமி சல்லியம் - தீயவை

கருங்கல்லோ டெலும்பு கூடி
காரிய ஸ்தானம் தன்னில்
இரும்பொடு தராவும் கட்டை
ஈயம்பித் தளைதான் சேர்ந்தால்
அரும்பொருள் நாச மாகும்
அம்மனை அழியு மென்று
தருந்திருப் புவன மாதே!
சாத்திரம் மயன்சொன் னாரே. 589
(1005 b)

(இ. ள்) காரியஸ்தானம் எனப்படும் பத்தாமிடத்தில் கிரகங்கள் நின்றால், அந்த மனையில் கல், எலும்பு, இரும்பு, தரா, கட்டை, ஈயம், பித்தளை இவைகளில் ஒன்று இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவர்களின் செல்வம் அழிந்து போகும். அந்த வீடும் நாசமாகும்.

### இதுவுமது

உயிருடன் ரெண்டி லந்த
உத்தமதோர் சல்லி யங்கள்
மயிர்முனை கூடி நின்றால்
மன்னவர் தனக்கு மாகா

தயிரியம் பலம்சம் பத்தும்
தானுமே அழியு மென்று
குயில்மொழி அனைய மாதே !
கூறினார் மயனார் அன்றே ! 590
*(1005b)*

*(இ. ள்)* உயிரெனப்பட்டது **ஆரூட இலக்கனம்**. உடல் எனப்பட்டது. **உதய இலக்கனம்**. இதற்கு இரண்டாம் இடத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் மயிர், நகம் முதலானவை இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும். தைரியமும் பலமும் குறையும். செல்வம் அழிந்து போகும் என்று மயனார் கூறியதை குயில் போன்ற இனிய மொழியை உடைய பெண்ணே அறிவாயாக.

## இதுவுமது

புத்திரத் தானம் தன்னில்
பொருந்திய சல்லி யங்கள்
சத்துற கல்லு மற்றும்
தழைத்திடு மரங்கள் கட்டை
பெத்திட எலும்பு கூடி
பெரியதோர் மனையில் நின்றால்
அத்திடும் குலங்கள் என்றே
ஆதியில் மயனார் சொன்னார். 591
*(1005b)*

*(இ. ள்)* உதய ஆரூடத்திற்கு ஐந்தாமிடத்தில் கிரகங்கள் நின்று, அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திர ஸ்தானங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கல், மரம், கட்டை, எலும்பு முதலானவை இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்குரியவனின் குலம் அழிந்து போகும்.

## இதுவுமது

களத்திரத் தானம் தன்னில்
கரியொடு உமிள லும்பு
வளத்துடன் மனையில் நின்றால்
மனைவியாள் மரண மாகும்
விளைத்திடும் தீமை இல்லாள்
வியாதியாம் சங்கை பீடை
கிளத்திடும் குணங்கள் தன்னைக்
கெட்டிட மயனார் சொன்னார். 592
*(1005 b)*

*(இ. ள்)* உதய இராசிக்கு ஏழாமிடத்தில் எந்தக் கிரகமாவது இருக்க, அதற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் கரி, உமி, எலும்பு முதலியன இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், அந்த மனைக்கு உரியவனின் மனைவி தீமை செய்பவளாக இருப்பாள். மனைக்கு உரியவனுக்கு நோய்கள் வருவதோடு, துன்பங்க்ள் மிகுதியாகும். குணம் கெடும் என்று மயனார் சொன்னார்.

குறிப்பு: கிளைத்திடும் குலமும் பொன்னும்
கெடுதியாம் மயன் சொன்னாரே.

## இதுவுமது

சாடியோ டெலும்பு கூடி
தழைத்திடும் மனையில் நின்றால்
ஓடிய கப்பல் ஆழி
உடைந்தது போலே யோகம்
கூடிய மனையில் நின்று
குலந்தனை நாசம் பண்ணும்
பாடிய மயனார் சொன்ன
பயனறிந் துரைசெய் தேனே. 593
*(1005 b)*

*(இ. ள்)* உதய இலக்கனத்தில் கிரகங்கள் நின்று அதன் கேந்திரங்களில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாடியும் எலும்பும் இருக்குமென்று சொல்வது. அவ்வாறு இருந்தால், ஓடி வருகின்ற கப்பல் கடலில் உடைந்தது போல தீய யோகமாகும். மனைக்குரியவரின் மனைவி மரணாவாள். குலம் நாசமாகும்.

**இதுவுமது**

சாம்பலோ டெலும்பு கூடி
தழைத்திடு மனையில் நின்றால்
சோம்பலே மிகவுண்டாகும்
சுகமது இல்லை கண்டீர் !
பாம்பினால் அச்சம் உண்டாம்
பாரியால் விரோதம் உண்டாம்
நாம்பல நூல்கள் கண்டு
ஞாயமாய் உரைத்த வாறே. 594

*(1005 b)*

*(இ. ள்)* உதயாரூட இராசிக்குக் கேந்திர தானங்களாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் சந்திரன் இருந்தால், அந்த மனையில் சாம்பல், எலும்பு முதலியன இருக்குமென்று சொல்லுவது. அவ்வாறு இருந்தால், மனைக்கு உரியவனுக்குச் சோம்பல் மிகுதியாக இருக்கும். பாம்பினால் அச்சம் உண்டாகும். மனைவியினால் விரோதமும் பொருள் சேதமும் உண்டாகும்.

**இதுவுமது**

ஆருடந் தன்னில் இராகு
அதற்குநா லேழு பத்திற்
காரியும் மதியும் நின்றாற்
கரியொடு உமிள லும்பு

வீரிய முடனே காணும்
மேலதிக் இரண்டு மூன்றிற்
சூரியன் மதியும் நின்றாற்
சூனியம் இருக்குந் தானே. 595

(இ. ள்) ஆரூட இராசிகளில் உதயத்தில் இராகு, நாலு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் சனி, சந்திரன் ஆகிய இரண்டு கோள்களும் நின்றால் கரி ஓடு, எலும்பு இவைகள் அம்மனையில் இருக்கும் என்று சொல்லவேண்டும். அவ்வாறு இருப்பின், நன்மை இல்லை. இரண்டாமிடம், மூன்றாமிடங்களில் சூரியனும் சந்திரனும் கூடி நின்றால், சூன்யம் இருக்கின்றதென்று அறிந்து அதனை எடுக்க வேண்டும். *(சி. நூ. பா. : 396)*

## இதுவுமது

சுக்கிரற் கெதிரே புந்தி
தோன்றிய காரி மன்னன்
வக்ரமில் லாதி ருந்தால்
மன்னவர்க் காறில் மந்தன்
சிக்கவே திரவி யங்கள்
நிலந்தனில் இல்லை யாகில்
பக்குவ மான வெள்ளி
பாரினில் மிகவுண் டாமே. 596

(இ. ள்) சுக்கிரனுக்கு எதிரில் புதனும் சனியும், சூரியனும் வக்கிரமில்லாமல் இருந்தாலும் சூரியனுக்கு ஆறில் சனியிருக்க, அந்தப் பூமியில் செல்வம் கிடைக்கும். அவ்வாறு கிடைக்காவிட்டால் வெள்ளியாவது கிடைக்கும். *(சி. நூ. பா. : 400)*

## இதுவுமது

மதிக்குநா லேழு பத்தில்
மந்திரி புந்தி கூடி
அதற்குமூன் றெட்டில் ஆறில்
ஆதித்தன் இருப்பா னாகில்
இதிக்கவோர் பத்தி னாலே
இருந்தவன் பலவான் என்னில்
நிதிக்குளோர் பயனே சொல்லும்
நிச்சயம் மயன்சொன் னாரே. 597

*(இ. ள்) சந்திரனுக்கு நாலாமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் ஆகியவற்றில் குரு, புதன் ஆகிய கோள்கள் ஒன்று கூடி நின்று அதற்கு மூன்று, ஆறு, எட்டில் சூரியன் இருந்தால், மனையைத் தோண்டிப் பார்க்க, புதையல் கிடைக்கும் என்று மயன் சொல்லியிருக்கிறார். (சி. நூ. பா. : 399)*

## பூமி சல்லியம் எடுத்தல்

தனமிகு சூனி யத்தால்
தருகரி எலும்பி னோடும்
குனமுடன் காண வென்றால்
இயம்புவேன் அரசே கேளாய் !
மனதுடன் இருபத் தெட்டு
வாகுள பாகஞ் செய்து
வினவிய நிலவு வீட்டில்
விருப்பமாய் இருக்குந் தானே ! 598

*(இ. ள்) தனங்கள், சூனியம், கரி, எலும்பு இவைகளை எடுக்க வேண்டுமென்றால், அவ்விடத்தை இருபத்தெட்டு பாகம் செய்து, அதில் சந்திரன் எந்த வீட்டில் இருப்பானோ அந்த இடத்தில் இருக்கும். (சி. நூ. பா. : 401)*

## இதுவுமது

இருப்பதாம் பொருட்த னக்கு
இயல்புடன் வகையைக் கேளு
கருப்பென இருளன் காளி
கணந்துர்க்கை வயிர வன்தான்
இருப்பது கால லாக
இருந்தவர் தனைவி லக்க
விருப்பமாம் கணப தித்தாள்
விரும்பியே பூசை செய்யே. 599

*(இ. ள்)* இருக்கின்ற பொருள் சூனியமெடுக்க வென்றால், அதைக் காத்திருக்கின்ற கறுப்பன், இருளன், காட்டேரி, காரி, கணம், துர்க்கை வயிரவன் இவர்களின் காவலை விலக்க வேண்டும். அதற்குத் தீபதூப நைவேத்தியத்தோடு விநாயகக் கடவுளை பக்தியோடு அர்ச்சிக்க வேண்டும். *(சி. நா. பா. : 402)*

## இதுவுமது

செய்யதோர் பூமி தன்னைச்
சிறப்புடன் மெழுகிப் பின்னும்
மெய்யதாய் கும்பம் தன்னை
விரும்பித்தா பிதமே செய்து
ஐயனே ஓம குண்டத்
தக்கினி செபம்செய் தங்கே
துய்யநாற் சதுரம் தன்னை
துலங்கநன் றாகச் செய்யே ! 600

*(இ. ள்)* பூமியைச் சதுரமாக மெழுகிக் கும்பம் ஸ்தாபித்து ஓமாதியக்கிய செபம் செய்து நாற்சதுரமாகக் கீறிக் கொள்ள வேண்டும். *(சி. நா. பா. : 403)*

## இதுவுமது

துலங்கவே எட்டுத் திக்கும்
சுற்றிநூ லாணி கொண்டு
இலங்கிய ஜெபத்தி னோடே
இன்பமாய் ஆணி கொண்டு
அலங்கிரு தபலி கொடுத்து
அவ்விடம் சோதித் தக்கால்
நலங்கொள நீகு றித்த
நற்பொருள் சொல்லக் கேளே ! 601

*(இ. ள்)* எட்டுத் திக்கும் சுற்றி நூலாணி கொண்டு ஜெபதப மந்திர சித்தியோடு ஆணிகொண்டு, பலி கொடுத்து அவ்விதமாகச் சோதனை செய்தால் நீ குறித்த பொருள் கிடைக்கும். *(சி. நூ. பா. : 404)*

## இதுவுமது

சொல்லுவேன் நீகு றித்த
சுகப்பொருள் வரத்துக் காண
வல்லதோர் குமரன் பூசை
மாருதி மந்தன் பூசை
சல்லாப மாகச் செய்தால்
தனம்பொருள் காணும் சொன்னேன்
புல்லிய மயனார் சொன்ன
புகழ்பெறு நூலி தாமே. 602

*(இ. ள்)* பொருள் வரவைக் காண வேண்டுமாயின், குமரன் பூசை, அனுமன் பூசை, சனிக்கு பூசை செய்து அவ்விடத்தில் சோதித்தால், குறித்த பொருள் கண்ணிற் றுலக்கமாய்க் காணும். *(சி. நூ. பா. : 405)*

## 19. சுவர் வெடிப்பு

குடதிசை பிளக்க நாசம்
　　குணதிசை தளமே உண்டாம்
வடதிசை மக்கட் பேறு
　　வெளவிய சாவு தெற்கு
நடலையே படுத்தும் அங்கி
　　நல்லது நிருதி மூலை
கடகியே ஈசன் நாசம்
　　காற்றுமேல் கூத்த னாமே. 603

*(1005 b)*

*(இ. ள்)* கிழக்குத் திசையில் சுவரில் வெடிப்புத் தோன்ற, அழிவு நேரிடும்; மேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, செல்வம் உண்டாகும்; வடக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, புத்திரர் தோன்றுவர்; தெற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற மரணம் நேரிடும்; தென்கிழக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, துன்பம் மிகும்; தென்மேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, நன்மைகள் பெருகும்; வடகிழக்குத் திசையில் வெடிப்புத் தோன்ற, அழிவு நேரிடும்; வடமேற்குத் திசையில் வெடிப்புத் தோன்ற மரணமுண்டாகும்.

**இதுவுமது**

ஆனதோர் சுவர்வெ டிப்பு
　　அடுத்ததோர் கிழக்கு நாசம்
வானந்தீ மூலை யல்லால்
　　மானமாம் அகோரம் தெற்கு
தேனுதல் கன்னி போகம்
　　சிறந்ததோர் மேற்கு ஆக்கம்
கோன்வட மேற்குச் சாவு
　　குறித்தநல் வடக்கு லாபம். 604

*(742 : 85)*

*(இ. ள்) வீட்டின் கிழக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் அழிவு உண்டாகும்; தென்கிழக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், துன்பம் ஏற்படும்; தெற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், அழகு நீங்கும்; தென்மேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் சுகம் உண்டாகும்; மேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், ஆக்கம் ஏற்படும்; வடமேற்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால், அந்த மனையில் மரணம் நிகழும்; வடக்குப் பாகத்தில் வெடிப்பு ஏற்பட்டால் இலாபம்.*

## வானம், சுவர் விரிவுகளின் குறி

வானமாம் சுவரி லீசன்
வழங்குமிந் திரனே நன்மை
காணலக் கினியே துன்பம்
கருதிடில் எமனும் ஆகா
மாணவே நிருதி செல்வம்
வருணனே தவங்கள் உண்டாம்
கோணவே வாயு நோயாம்
குபேரனுக் கழகுண் டாமே. 605

*(சி. நூ. பா. : 330)*

*(இ. ள்) மனையில் வாணம், சுவர் இவைகளில் வடகிழக்கு, கிழக்கு முதலான திசைகளில் விரிவு ஏற்பட்டால், நன்மையாகும். தென்கிழக்கு மூலையில் விரிவு ஏற்பட்டால், துன்பமாகும். தெற்குத் திசையில் விரிவு ஏற்பட்டால், தீங்கு நேரிடும். தென்மேற்குத் திசையில் விரிவு ஏற்பட்டால், செல்வம் சேரும். மேற்குத் திசையில் தவம் உண்டாகும். வடமேற்கு திசையில் விரிவு ஏற்பட்டால், பீடை காட்டும். வடக்கு திசையில் விரிவு ஏற்பட்டால், அழகு மிகுந்து செல்வமும் உண்டாகும்.*

**கறையான்**

குறுகும்செஞ் சேலயன்மேல் தோனில் நன்றாம்
கொடுங்கதிர் கேடங்கிமி ருத்துயமன் இன்பம்
பெறுநிருதி மழைவருணன் செல்வம் காற்று
பொன்போக்கு வடக்கதிலே வாழ்வு ஈசன்
முறியுங்கீழ்க் கன்றுகாலி கள்தான் மாயும்
கட்டில்படி யில்காலின் கீழ்நோ யாகும்
இறைவனிடம் ஊருணியம் பலம்பள்ளி தெண்டில்
ஏறிநாடு கெடும்சுவர்மேல் இலங்கில் தானே. 606

*(886 : 180)*

(இ. ள்) செஞ்சேல் அல்லது செஞ்சிதல் என்று சொல்லப்படும் கறையான் அயன் பகுதியாகிய மனையின் பிரம்ம தானத்தில் (நடுவில்) தோன்றினால் மனைக்கு உரியவனின் வாழ்நாள் குறையும். கிழக்குத் திசையில் தோன்றில், செல்வம் கிட்டும்; தென்கிழக்கு மூலையில் தோன்றில், கேடு உண்டாகும்; தெற்கு மூலையில் தோன்றில் மரணபயம் உண்டாகும்; தென்மேற்கு மூலையில் தோன்றினால், இன்பம் கிட்டும்; மேற்குத் திசையில் தோன்றில், செல்வம் உண்டாகும்; வடமேற்குத் திசையில் தோன்றில், செல்வம் கைவிட்டுப் போகும்; வடக்குத் திசையில் தோன்றில், நிறைவான வாழ்வு கிட்டும்; வடகிழக்குத் திசையில் தோன்றில், கால்நடைகள் மடியும்; கட்டில் கால், படி, சாலின் கீழ் கறையான் பிடிக்க, நோய் உண்டாகும். கோயில், ஊர்க்கிணறு, அம்பலம், பள்ளி முதலான இடங்களில் கறையான் பிடிக்க, நாட்டுக் கேடு உண்டாகும்.

---

606. 886 a : 180

## இதுவுமது

செஞ்சிதல் மனையில் வந்து
சேர்ந்திடில் பலன்கள் தன்னை
முன்சொன்ன நடுகி ழக்கு
முதலண்ட மெட்டுங் கொள்க
மிஞ்சிய கேடு நன்மை
விருத்தமாம் இன்ப மாகும்
மஞ்சுறு மனையே செல்வ
மனையுமே வாழ்வு பீடை. 607

*(இ. ள்) செஞ்சிதல் மனையில் தோன்ற, நடுவாகில் சாவு; கிழக்காகில் செல்வம்; தென்கிழக்காகில் மனையிடியும்; தெற்காகில் துக்கம்; தென்மேற்காகில் பசி, மேற்காகில் புத்திர விருத்தி; வடமேற்காகில் மரணம்; வடக்காகில் நன்மை; வடகிழக்காகில் வியாதியுண்டாம். (சி. நூ. பா. : 473)*

## இதுவுமது

வஞ்சி கேளும்! வருங்க ருமமாம்
பிஞ்சு பிரம மிகுந்திடும் தானத்தில்
செஞ்சேல் புற்று செழிக்கக் கிளம்பிடில்
கஞ்ச னாணை கருதிமிகச் சாவே. 608

*(ம. சா. பா. : 218)*

*(இ ள்) பெண்ணே! கேட்பாயாக! வீட்டின் நடுவாகிய பிரமத்தானத்தில் கறையான் புற்று தோன்றுமாகில், மனைக்குரியவனுக்கு உறுதியாக மரணம் நேரிடும்.*

## 20. பொருத்தங்கள்

கற்பமா தாயமுடன் கேள்செலவு யோனியுமே
உற்பனவிண் மீனும் உறவாரம் - அற்புதந்தான்
அங்கீசமும் சாதிதிதி ராசியா கும்வயது
தங்குபதி னொன்று பொருத்தம். 609

***(இ. ள்) 1. கற்பம், 2. ஆதாயம், 3. செலவு, 4. யோனி, 5. நட்சத்திரம், 6. வாரம், 7. அங்கிசம், 8. ஜாதி, 9. திதி, 10. இராசி, 11. வயது, இவ்விதம் பதினொரு பொருத்தங்களாகும். (சி. நூ. பா. : 13)***

மலர்தரு கற்பகம் நல்லாயம் வியம்திதி வாரமுடு
நிலவுறு யோனி இராசி அங்கிசம் நேர்வமிசம்
பொலிகணம் நேத்திரம் சூத்திரம் யோகம் புகல்வயது
தலமகிழ் தாரையோ டீரெண் பொருத்தமும் சாற்றுவனே. 610

***(886 : 1)***

***(இ. ள்) பதினாறு பொருத்தங்களாகிய 1. கற்பம், 2. ஆதாயம், 3. விரயம், 4. திதி, 5. வாரம், 6. நட்சத்திரம், 7. யோனி, 8. இராசி, 9. அம்சம், 10. வம்சம், 11. கணம், 12. கண், 13. சூத்திரம், 14. யோகம், 15. வயது, 16. தாரை ஆகிய பொருத்தங்களைக் கூறுவேன்.***

### பொருத்தங்கள் - பொது

எட்டுடன் பன்னி ரண்டுமா தாயமாம்
ஏத்தி ஒன்பதோ டீரஞ் சழிவதாம்
முட்டி மூன்றுட னேயெட்டும் யோனியாம்
மூவெட் டிருபத் தேழ்நட் சத்திரமாம்
சட்ட ஒன்பதும் ஏழுடன் வாரமாம்
சாத்து நாலுடன் ஒன்பதும் அங்கிசம்
திட்ட ஒன்பது வேதமும் சாதியாம்
சிறந்த ஏழீ றாருடன் இராசியே. 611

***(742 : 107)***

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினால் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **ஆதாயம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கிப் பத்தில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **விரயம்** எனப்படும். குழித்தொகையை மூன்றில் பெருக்கி, எட்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **யோனி** எனப்படும். குழித்தொகையை எட்டில் பெருக்கி, இருபத்தேழில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **நட்சத்திரம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **வாரம்** எனப்படும். குழித்தொகையை நான்கில் பெருக்கி ஒன்பதில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **அம்சம்** எனப்படும். குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, நான்கில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **சாதி** எனப்படும். குழித்தொகையை ஏழில் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி, **இராசி** எனப்படும்.

### பொருத்தங்களும் ஆதாயமும்

நவமிரு மூவஞ்சும் திதியே யாகும்
நாடிஇரு பத்தேழும் சதமே தானும்
புவனிதனில் வயதெனவே புகலு மல்லால்
பொருந்தியதோர் இலாபமது ஈராறுக்கும்
கவனமுடன் பலனதுவே சொல்லக் கேளாய்!
கருதியதோர் ஒன்றுக்கே யோகம் என்பார்
தவமுயரும் இரண்டுக்கு போகம் மூன்று
சம்பிரதி நாலுக்கு வீரம் தானே. 612
*(1005 b)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, முப்பதில் வகுக்க வரும் மீதி **திதி** எனப்படும். குழித்தொகையை இருபத்தேழில் பெருக்கி, நூறில் வகுக்க வரும் மீதி, **வயது** எனப்படும். குழித்தொகையை எட்டில்

*பெருக்கி, பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதியான ஆதாயம் பன்னிரண்டாகும்; மீதியாக ஒன்று வந்தால், யோகம் கிட்டும்; மீதியாக இரண்டு வந்தால், போகம் உண்டாகும்; மீதியாக மூன்று வந்தால், சம்பிரிதி உண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், வீரம் உண்டாகும்.*

**ஆதாயம்**

ஐந்துக்குச் சத்துரு நாசம் ஆறு
அகமதனில் தனியமாம் ஏழதற்கு
சிந்திக்கும் எட்டதற்கே சுகம தாகும்
சிறந்ததொரு ஒன்பதற்கே சித்தம் என்பர்
முந்திய பத்துதனக் கேஅந்தம் ஓங்கும்
முயன்றுபதி னொன்றதற்கே புத்திர இலாபம்
விந்தையுறும் பன்னிரண்டு ஞானம் என்பார்
மேவியதோர் செலவுபத்தும் விபரம் சொல்லே.613

*(1005 a)*

*(இ. ள்) குழித்தொகையை எட்டால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதியான ஆதாயத்தில் மீதியாக ஐந்து வந்தால், பகைவர்கள் நாசம் அடைவர்; மீதியாக ஆறு வந்தால், வீட்டில் தானியம் நிறைந்திருக்கும்; மீதியாக ஏழு வந்தால், எடுத்த காரியம் வெற்றியாகும்; மீதியாக எட்டு வந்தால், வீட்டில் உள்ளவர்கள் சுகமடைவார்கள்; மீதியாக ஒன்பது வந்தால், நினைத்த காரியம் நிறைவேறும்; மீதியாகப் பத்து வந்தால், நீண்ட ஆயுள் கிட்டும். மீதியாக பதினொன்று வந்தால், புத்திர இலாபம் உண்டாகும் மீதியாகப் பன்னிரண்டு வந்தால், ஞானம் கிடைக்கும்.*

### இதுவுமது

மேவிய ஒன்றிரண்டு ஏக போகமாம்
மேவி திரிசதுர் கீர்த்தி சௌரியம்
தாவிய ஐந்தாறில் தானி யம்தனம்
மேவேழு எட்டினில் சுகமெய்ஞ் ஞானமே. 614

*(ம. நூ. பா. : 324)*

### இதுவு மது

எட்டுடன் ஒன்றிற்கு இயன்ற போகமாம்
வட்டருந் தசம்தனில் வசியம் மன்னுமே
எட்டுடன் மூன்றுமே இனிய தன்மமாம்
சட்டமாம் துவாதசம் சமஸ்த நன்மையே. 615

*(ம. நூ. பா. : 325)*

*(இ. ள்)* மீதியாக ஒன்று, இரண்டு வந்தால் முறையே, ஏகம், போகமாம்; மீதியாக மூன்று, நான்கு வந்தால் முறையே, புகழும், சௌரியமும் உண்டாகும்; மீதியாக ஐந்து, ஆறு வந்தால் முறையே, தானியம், தனம் கிட்டும்; மீதியாக ஏழு, எட்டு வந்தால் முறையே, சுகமும் மெய்ஞானமும் உண்டாகும்; மீதியாக ஒன்பது வந்தால், போகம் கிட்டும்; மீதியாகப் பத்து வந்தால் அனைத்தும் வசியமாகும்; மீதியாகப் பதினொன்று வந்தால், தர்மங்கள் கைகூடும்; மீதியாகப் பன்னிரண்டு வந்தால் நன்மைகள் கிட்டும்.

### பொருத்தங்கள்

இட்டஎட் டைபனிரெண் டாக்க ஆயம்
ஏற்கும் ஒன்பதோ டீரஞ் சழிவதாம்
மூட்டி மூன்றுடன் எட்டும் யோனியாம்
மூண்ட எட்டுடன் மூவொன்ப தாம்நாள்
வட்ட நான்குடன் முப்பதும் பக்கமாம்
வளரும் ஒன்பதோர் ஏழும் கிழமையாம்

மட்டில் எட்டுடன் ஈராறு ராசியாம்
　　மத்த ஒன்பது நாலு வங்கிசம்
ஒட்டு நான்குடன் ஒன்பது அங்கிசம்
　　ஓங்கு மூவொன்ப துக்குநூ றாயுளே. 616

*(1005 b)*

## இதுவுமது

எட்டினில் பன்னிரெண் டாயம்
　　இகழொன்ப பத்தும் தீதாம்
திட்டமூன் றெட்டில் யோனி
　　எட்டுமே இனிமூ ஒன்பான்
வட்டமொன் பதிலேழ் வாரம்
　　வளரொரு நான்கொன் பாங்கிசம்
சட்டம்ஒன் பதினால் சாதி
　　திதியொன்பான் முப்ப தாமே. 617

*(886 b : 48)*

## கற்பப் பொருத்தம்

அஞ்சுகோல் ஆதி யாக
　　அதுக்கது ரெண்டும் ஏத்தி
ஈஞ்சது அகலம் நீளம்
　　இதைக்குழி பெருக்கி எட்டில்
மிஞ்சிலோர் மூன்று ஐந்து
　　மிகுந்தஏழ் மிகவும் நன்றாம்
வஞ்சமாய் இரண்டும் நான்கும்
　　வறுமையா றெட்டும் தீதே. 618

*(886 a : 47)*

**(இ. ள்) ஐந்து கோல்கள் முதலாக இரண்டிரண்டு கோல்களை ஏற்ற அமையும் மனையின் அகல நீளங்களைப் பெருக்கி வரும் குழித்தொகையை எட்டில் வகுக்க வரும் மீதி கற்பமாகும். ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு ஆகிய எண்கள்**

மீதியாக வருமானால், மிகுந்த நன்மையாகும். இரண்டு, நான்கு, ஆறு, எட்டு ஆகிய எண்கள் மீதியாக வருமானால், மனைக்குரியவனுக்குத் தீங்கு நேரிடும்.

## பொருத்தங்கள்

மனையும் முழக்கோ லால ளந்து
வந்த குழியின் பேராயம்
அனைய தெட்டி லேபெருக்கிப் பன்னி
ரெண்டினில் கழித்த தாதாயம்
வினையஒன் பதுடன் பெருக்கியே பத்தில்
கழித்த சேடம் அழிவாகும்
இனைய மூன்றுக் கேற்றி எட்டுக்
கீய்ந்துணர் சேடம் நிலையோனி. 619

*(796 : 4)*

## வேறு

மனையைச் சிறுகோ லாலளந்து
வந்த குழியின் பேராயம்
தனையோ ரெட்டால் பெருக்கியீ
ராறதனில் கழிக்க ஆதாயம்
மனையை ஒன்ப தால்பெருக்கி
பத்தில் கழித்த தழிவாகும்
தனைமூன் றேத்தி எட்டீந்து
நின்ற சேடம் நிலையோனி. 620

*(886 a : 43)*

நிலைகொள் ஆயம் எட்டேத்திக் கொண்டு
மூஒன்பதில் கழித்தது நாளாம்
அலைவில் நான்கில் பெருக்கமூ வைந்தில்
கழித்தது பக்கம தென்பார்

இலகுஒன் பானுடன் பெருக்கி ஏழில்
கழித்தது கிழமை என்பார்
இலவில் நான்கில் பெருக்கி ஒன்பதில்
கழித்ததங் கிசம தாமே. 621

## வேறு

நிலைகொள் ஆயம் எட்டேத்தி
நெறிமூ வொன்பது கழித்துநாள்
அலகு நான்கில் பெருக்கியுடன்
மூவஞ்சில் கழித்தது பக்கமதாம்
இலகு ஒன்பா னுடன்பெ ருக்கி
ஏழில் கழித்தது தன்கிழமை
முலடு ஒருநான் கால்பெருக்கி
ஒன்பதால் கழித்த தங்கிசமே. 622

குறிப்பு: *மேற்கண்ட இரண்டு பாடல்களிலும் ஒரே செய்தி கூறப்பட்டுள்ளன என்றாலும் 613 ஆம் பாடல் எழுசீர் விருத்தமாகவும் 614 ஆம் பாடல் அறுசீர் விருத்தமாகவும் இருப்பது இங்குச் சுட்டத்தக்கது.*

## பொருத்தங்கள்

அஞ்சொல் இருபத் தேழினில் பெருக்கி
நூறினில் கழிக்க வாழ்நாள்
செஞ்சொல் லாதாயம் வரினும்சில வானும்
ஆக்கத் தோடு சிறிதழிவு
மிஞ்சு மேனினும் யோனியு நாளுடன்
பக்கம் கிழமைதீ தெனவும்
வஞ்ச மான வஞ்ச கங்கள்
வாழ்நாள் குறையும் மனைக்காகா. 623
*(796 : 6)*

*(இ. ள்)* மனையின் குழியை இருபத்து ஏழால் பெருக்கி, வந்தத் தொகையை நூறால் வகுக்கக் கிடைக்கும் மீதி, **வயது** அல்லது **வாழ்நாள்** எனப்படும். ஆதாயம் வந்தாலும் செலவு வந்தால், ஆக்கதோடு சிறிது அழிவும் உண்டாகும். யோனி, நாள், பக்கம், கிழமை முதலானவை தீயனவாக இருந்தால் தீமையாகும். மனைக்குரியவருக்கு வஞ்சகங்கள் உண்டாகும். வாழ்நாள் குறைவாக இருந்தாலும் மனைக்கு ஆகாது.

### வேறு

அஞ்ச மூவொன் பதிலேற்றி
அதையும் நூலிற் கழிவயது
கஞ்ச நவத்தி னாற்பெருக்கிக்
கழிக்க நாலிற் சாதியதாம்
மிஞ்சு நாலி னாற்பெருக்கி
வியத்தில் கழிக்க இராசியதாம்
மஞ்சு நிகர்த்த குழலாளே !
மயனா ருரைத்த மனைநூலே. 624

*(சி. நூ. பா. : 58)*

### *சாதி, யோனி, வயதுப் பொருத்தம் - பொது*

சாதியா தெனினும் நன்மை
தரும்யோனி ஒத்தை நன்றாம்
பேதியா திரட்டை தீது
பெற்றிடும் ஆயுள் சாத்து
கோதினாற்பா னைந்துக் குள்ளாய்க்
குறைந்திடில் மிகப்பொல் லாது
தாதுசேர் குழலாய் ! பத்துப்
பொருத்தமும் தானும் நன்மை. 625

*(886 a : 61)*

*(இ. ள்)* மனையின் குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, நான்கால் வகுக்க வரும் மீதி, ***சாதி*** எனப்படும்.

நான்கு சாதிகளில் எது வந்தாலும் நன்மையாகும். யோனிகளில் ஒற்றை யோனி நன்மை தரும். இரட்டை தீமையை விளைவிக்கும். மனையின் குழித்தொகையை இருபத்து ஏழால் பெருக்கி, நூறால் வகுக்கக் கிடைக்கும் மீதியான வயதில் நாற்பத்தைந்து வயதிற்குள் இருந்தால் மிகுந்த கெடுதியைத் தரும். இந்தப் பத்துப் பொருத்தங்களை முக்கியமாகப் பார்த்து மனைகோல நன்மை உண்டாகும்.

### சாதி, இராசி, கற்பம்

ஆயம் நவநான் கில்கழித்து
ஆன சாதி ஆயமதை
சேயே ழில்பெருக் கீராறில்
சேர கழிக்க தினம்ராசி
ஈயு மாமெட் டதனில்ஈய
கற்பம் மிகவே பொருத்தமதில்
தூய ரெண்டு நாலாறு
சொல்லாய் எட்டைத் துயரொழியே. 626
*(886 a : 46)*

### தேதி, வாரம், நட்சத்திரம், யோகம்

முந்திய முழந்தை ஒன்பதிற் பெருக்கி
முப்பதிற் கழித்ததின் றதுதான்
வந்திடும் தேதி திதியும்மற் றதுவே
வாரமாம் ஏழினிற் கழிக்க
தந்திடு ழத்த எட்டினிற் பெருக்கி
சார்ந்தமூ ஒன்பதிற் கழிக்க
சொந்தமாம் நட்சத் திரமொடு யோகம்
சொல்லும்அந் நாலுணர்ந் தோரே. 627
*(886 a : 47)*

## கரணம், இராசி, தெய்வம்

பரவிய முழத்தை ஏழினிற் பெருக்கி
பத்தினோ டொன்றினிற் கழித்து
கரணமென் றுரைப்பர் நான்கினிற் பெருக்கி
காட்டுமீ ராறினிற் கழிக்க
பெருகுமி ராசி மற்றும்ஒன் பதினிற்
பெருக்கிஐந் தினிற்கழித் திடவே
வருவது குறிஞ்சி யாதியைந் திணைக்கு
மன்னராம் தெய்வத வகையே. 628

*(886 b : 48)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களை சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கி, பதினொன்றில் வகுத்த மீதி **கரணமாகும்.** நான்கில் பெருக்கி, பன்னிரண்டில் வகுத்த மீதி **இராசியாகும்.** ஒன்பதில் பெருக்கி, ஐந்தில் வகுத்த மீதி **தெய்வமாகும்.** மீதியை குறிஞ்சியை முதலாகக் கொண்டு அந்தந்தத் திணைகளின் தெய்வங்களைக் கூற வேண்டும்.*

*குறிப்பு: குறிஞ்சித் திணைக்கு முருகன்; முல்லைத் திணைக்குத் திருமால்; மருதத் திணைக்கு இந்திரன்; நெய்தல் திணைக்கு வருணன்; பாலைத் திணைக்குக் கொற்றவை தெய்வங் களாகும்.*

## ஆயம்

திருவளர் மனையை அகமது செய்ய
சிற்பநூ லிதனையும் கேளீர் !
உரியவன் கைச்சாண் நாலதாய்க் கொண்டால்
ஓர்முழக் கோலென உரைப்பார்
மருவிய மனையை நாற்றிசை அளந்து
மகிழ்ச்சியாய்க் குழியினைப் பெருக்கி
அருமையாம் குழியை எட்டினுக் கீய
ஆயமாம் என்றிதை அறியே. 629

*(இ. ள்)* செல்வம் பெருக வேண்டிய மனையில் வீட்டினை அமைக்கச் சிற்பநூல் கூறும் செய்திகளைக் கேட்பீர்களாக ! மனைக்கு உரியவனின் கைச்சாணால் நான்கு சாண்கள் கொண்ட கோலை **முழக்கோல்** என்று கூறுவார்கள். அத்தகைய முழக்கோலைக் கொண்டு மனையின் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளின் நீளத்தை அளந்து, நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டில் வகுக்க, ஆயம் என்பதை அறிவாயாக. மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழியை எட்டால் வகுக்க, மீதி எண் ஆயம் ஆகும். மீதி இல்லையானால் மீதி எட்டு என்று கொண்டு, பலன் காண வேண்டும்.

ஒன்றுக்கு-துவசம்-கருடகற்பம்-இந்திரன் - புண்ணியவான்
இரண்டுக்கு-தூமம்-புறாகற்பம்-அக்கினி - மிருத்துப்பிரதம்
மூன்றுக்கு-சிம்மம்-சிங்க கற்பம்-இயமன் - விஷபிரதம்
நான்கிற்கு-சிவன்-சுவான கற்பம்-நிருதி - ரோகப்பிரதம்
ஐந்திற்கு-ரிஷபம்-பசு கற்பம்-வருணன் - இராட்சதபிரதம்
ஆறுக்கு-தானம்-காக்கை கற்பம்-வாயு - செல்வப்பிரதம்
ஏழுக்கு-கஜம்-யானை கற்பம்-குபேரன் - சுபப்பிரதம்
எட்டுக்கு-காகஆயம்-கழுதை கற்பம்-ஈசானியன்-நிஷ்பலம்

### கற்பம்

மன்னிய முழமாம் தொகையினை எட்டில்
வகுத்துறு சேடமே கருப்பம்
மின்னிய ஒன்று மூன்றுடன் ஏழும்
ஏழ்வியந் தரசுநன் றாகும்
துன்னிய இரண்டு நான்குமோ ரெட்டுந்
துணிமிகு வறுமையுண் டாகும்
பன்னிய இருமூன் றாகிட துயராம்
பகர்நறும் பனிமொழி அனமே. 630

*(886 b : 3)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டால் வகுக்க வரும் மீதி எண் கற்பம் ஆகும். ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் நன்மை உண்டாகும். இரண்டு நான்கு, எட்டு ஆகிய எண்கள் அமையுமானால் வறுமை உண்டாகும். ஆறு மீதியாக அமைந்தால் துன்பம் உண்டாகும் என்பதை மனம் பொருந்திய குளிர்ச்சியான மொழியினைப் பேசும் அன்னநடையினைப் பயிலும் பெண்ணே! அறிவாயாக.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி எட்டு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

### கற்பம்

சாணான்கு[1] கோலாகத் தப்பாமே நான்கெல்லை
கோணாம லேயளந்து குழிமாறி - நாணாமல்
இப்புவியில் மாதே! இருநான்கி லேகழிக்கக்
கற்பத்தின் பலனைக் கேள். 631

*(886 a : 41)*

*(இ. ள்)* மனைக்கோலும் நீள அகலங்களைச் சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை எட்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி **கற்பம்** எனப்படும்.

### கற்பத்தின் பலன்

அஞ்சில் அரசாள்வார் ஆறில் வருந்துன்பம்
மிஞ்சிய ஒன்றுமூன் றேழுபுகழாம்-மிஞ்ச
நாலெட்டு ரெண்டாகில் நன்மையொரு சத்துமில்லை
உகத்தார்க் கென்னூல் உரை. 632

*(886 a : 42)*

*(இ. ள்)* குழியின் தொகையை எட்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி எண் ஐந்தாக இருக்க, மனைக்குரியவர் அரசனைப் போன்ற சிறப்பினைப் பெறுவர்; மீதிவரும் எண் ஆறாக இருக்க மனைக்குரியவருக்குத் துன்பம் வந்து சேரும். மீதியாக ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் வருமானால்,

---

1. நாலோர்.

புகழ் வந்து சேரும். நான்கு, எட்டு, இரண்டு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், மனைக்குரியவனுக்கு எந்தவித நன்மையும் கிட்டாது என்பதை என்னுடைய நூலின் வழி கண்டு உரைப்பாயாக.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதியை, எட்டு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## ஆதாயப்பொருத்தம் - பலன்கள்

தாம யோகமும் போகசந் தானமும்
தர்மவீ ரியமும் தானிய மேதனம்
ஆமை நல்ல சுகர்தர்ம ஞானமும்
கீர்த்தியும் ஆழி போல்சம் பத்தாம்
வாமை என்றும் வழிந்திட்ட மேதனம்
வழுத்திட் டேன்நான் ஆதாய பலங்களும்
நாமை கன்றுதான் வீமைசேர் பாதத்தை
நாடியே பனிரெண்டும் பலன்சொன் னேனே.

*(886 c : 63)*

*(இ. ள்)* யோகம், போகம், சந்தானம், தர்மம், வீரியம், தானியம், தனம், நல்ல சுகம், தர்மஞானம், கீர்த்தி, சம்பத்து ஆகியவை ஆதாயம் பன்னிரண்டிற்கும் பலன்கள் என்பதை வீமேஸ்வரன் பாதத்தைப் பணிந்து எடுத்துரைத்தேன்.

## இதுவுமது

பகர்தரு முழத்தை எட்டில் பெருக்கிப்
பனிரண்டில் கழித்தது சேடம்
புகலுமா தாயம் ஒன்றுமூன் றிரண்டேழ்
பொருந்துமொன் பான்பதி னொன்றும்
திகழிரு நான்கு நான்குமுன் நான்கும்
செயமிகு செல்வமுண் டாகும்
திகழுமோர் ஐந்துடன் ஒருபதும் ஆறு
நெடுந்துய ராமெனு உரையே. 634

*(886 b : 4)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டில் பெருக்கி பன்னிரண்டால் வகுக்க வந்த குழித்தொகையை எட்டில் பெருக்கி பன்னிரண்டால் வகுக்க வந்த மீதி **ஆதாயம்** எனப்படும். ஒன்று, இரண்டு, ஏழு, ஒன்பது, எட்டு, நான்கு, பன்னிரண்டு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால், வெற்றியும் செல்வமும் கிடைக்கும். ஐந்து, பத்து, ஆறு ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் மிகுந்த துன்பம் உண்டாகும் என்று கூறுவாயாக !

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி, பன்னிரண்டு என்று கொண்டு பலன் காண வேண்டும்.

## இதுவுமது

பூமலி நான்குசாண் பொலிந்த கோலினைத்
தேமலி மனைதனைக் கெல்லை தேடிய
தாமரி பூருவம் தழைத்த உத்தமம்
காமலி யாயமாம் கணக்கின் சீரதே. 635

*(இ. ள்)* எசமான் சாணால் நான்கு சாண் கோல் கொண்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்நான்கு திக்கும் அளந்து இரு தொகையையும் குழிமாறித் தொகையை ஆயமாய் வைத்துக் கொண்டு திசைப் பொருத்தத்திற்கும் பார்க்க வேண்டியது. *(சி. நூ. பா. : 18)*

சீர்பெறும் ஆயத்தை சேர எட்டினிற்
கூர்தர வேற்றிநற் குலவு பன்னிரண்
டோதரக் கழித்திட வொன்றி லக்கமே
ஏருமா தாயமென் றிசைத்த தந்தையே. 636

*(இ. ள்)* ஆயத்தை எட்டிற் பெருக்கி வந்த தொகையைப் பன்னிரண்டிற் கழிக்க, பன்னிரண்டுக்குள்ளாக வந்தது ஆதாயம் என்றறியவும். *(சி. நூ. பா. : 19)*

## ஆதாயப் பொருத்தம்

ஓவிய மொன்றிரண் டேக போகமாம்
மேவிய திரிசதும் கீர்த்தி சௌரியம்
தாவுமைந் தாறினிற் றானி யம்தனம்
ஏஷம்ஏ ழெட்டினிற் சுகமாமெய்ஞ் ஞானமே. 637

*(இ. ள்)* ஆதாயம் ஒன்று, இரண்டு வந்தால், ஏக போகமாய் நடக்கும். மூன்று, நான்கு வந்தால் கீர்த்தியும் சௌரியமும் நடக்கும். ஐந்து, ஆறு வந்தால் தனதானியம் உண்டாகும். ஏழு, எட்டு வந்தால் சுகமும் மெய்ஞ்ஞானமும் நடக்கும். *(சி. நூ. பா. : 20)*

எட்டுடன் ஒன்றினிற் இயன்ற போகமாம்
மட்டருந்த சந்தனில் வசியம் மன்னுமே
இட்டவே காதசி இனிய தர்மமாம்
சட்டமாம் துவாதசி சமஸ்த நன்மையே. 638

*(இ. ள்)* ஒன்பது வந்தால் - மிகுந்த போக பாக்கியம். பத்து வந்தால் - சகல காரியங்களும் வசியமாகும். பதினொன்று வந்தால் - தரும சிந்தை உண்டாகும். பன்னிரண்டு வந்தால் சமஸ்தமும் உத்தம பலனாய் நடக்கும். *(சி. நூ. பா. : 21)*

## ஆதாயப் பொருத்தம் - பலன்கள்

வெல்லிடும் யோகம் போகம்
காத்தவீ ரியஞ்சு கந்தான்
புல்லிடும் தரும ஞானம்
சத்தியம் பொருளில் லாபம்
சொல்லிடும் இலாபம் நன்றாம்
தொகை ஐந்தோ டாரும் பத்தும்
இல்லமி இலாபம் வந்தால்
இடர்கள்சத் துருவி ரோதம். 639

*(886 a : 55)*

*(இ. ள்) குழியை எட்டால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்க வரும் மீதி எண்களாக ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஏழு, எட்டு, ஒன்பது, பதினொன்று, பன்னிரண்டு ஆகிய எண்கள் வருமானால், முறையே யோகம், போகம், வீரியம், சுகம், தர்ம ஞானம், சத்தியம், பொருளில் இலாபம் முதலான நன்மைகள் கிடைக்கும். மீதி எண்களாக ஐந்து, ஆறு, பத்து, பதினொன்று ஆகிய எண்கள் வருமானால், இலாபம் கிடைத்தாலும் துன்பங்கள், பகைவர் விரோதம் முதலான துன்பங்கள் நேரிடும்.*

## விரயப் பொருத்தம்

சொல்வதே ஒன்றதற்கே தீயாம் ரெண்டு
சுகந்தவிர்த்தி மூன்றுக்கே இலாபம் சொல்வாம்
புல்லியதோர் நாலதற்கே புத்திர விர்த்தி
புகழுயர்ந்த ஐந்ததற்கே ஸ்திரிகள் ஈனம்
சொல்லுயர்ந்த ஆறுக்கே விசயம் ஏழு
தீதெனவாம் எட்டுக்கு ஸ்ரீயும் விரோதி
வல்லமைசேர் ஒன்பதற்கே புத்திர நாசம்
வளர்பத்தும் ஞானமென மயன்சொன்னாரே.640
*(742 : 110)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை, ஒன்பதால் பெருக்கி, பத்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி விரயம் அல்லது அழிவு எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், தீயினால் பயம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், விருத்தி ஏற்படும்; மீதியாக மூன்று வந்தால், இலாபம் உண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், புத்திரர்கள் பிறப்பார்கள்; மீதியாக ஐந்து வந்தால், மனையிலுள்ள பெண்களுக்குத் துன்பம் உண்டாகும்; மீதியாக ஆறு வந்தால், வெற்றி கிடைக்கும்; மீதியாக ஏழு வந்தால், தீமைகள் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால்,*

மனைவியும் எதிரியாவாள்; மீதியாக ஒன்பது வந்தால், புத்திரர்களுக்கு அழிவுண்டாகும்; மீதியாக பத்து வந்தால், ஞானம் வரும்.

குறிப்பு: *மீதி வரவில்லையென்றால், பத்தை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும்.*

## விரயம்

நன்மையாம் ஆயத்தை நவத்தில் தாக்கியே
பொன்னிய பத்தினில் பொருந்த நீக்கினால்
அந்நிலை செலவதாம் அறியல் ஒன்றினில்
குன்னிய அல்இரண்டு ஏத்தங் குன்றுமே. 641

*(ம. நூ. பா. : 326)*

*(இ. ள்)* மொத்தக் குழியை ஒன்பதால் பெருக்கி, வந்த தொகையைப் பத்தால் வகுக்க மீதி வந்த எண் செலவாகும். மீதியாக ஒன்று வந்தால் உள்ள செல்வம் எல்லாம் குறைந்து போகும். மீதியாக இரண்டு வந்தால் ஏற்றம் குன்றும்.

## இதுவுமது

குன்றிட மூன்றினில் குலவும் நற்சுகம்
வென்றிசேர் நாலினில் விளங்கும் புத்திரர்
ஒன்றிவை ஐந்தினில் ஓங்கு நற்செயம்
என்றனர் தரித்திரம் ஏழுக் கென்னவே. 642

*(ம. நூ. பா. : 327)*

*(இ. ள்)* மீதியாக மூன்று வந்தால், நற்சுகம் கிட்டும். மீதியாக நான்கு வந்தால், புத்திரர்கள் சிறப்புடன் விளங்குவர். மீதியாக ஐந்து வந்தால், வெற்றிகள் கிட்டும். மீதியாக ஏழு வந்தால், தரித்திரமாகும்.

குறிப்பு: *மீதியாக ஆறு வந்தால் என்ன பலன் என்று கூறப் படவில்லை.*

என்னவே எட்டினில் இலக்குமி வாசமாம்
பன்னிய நவத்தினிற் பாலர் ஆவிபோம்
முன்னிய தசமதில் உத்த மம்தரும்
மின்னுமெங் கோனெனக் எடுத்து ரைத்ததே. 643

*(ம. நூ. பா. : 328)*

*(இ. ள்)* மீதியாக எட்டு வந்தால், இலட்சுமி வாசம் செய்வாள் மீதியாக ஒன்பது வந்தால், புத்திரருக்கு அழிவு நேரிடும். மீதியாகப் பத்து வந்தால், மிகுந்த சிறப்புண்டாகும்.

## விரயப் பொருத்தம் - பலன்

சொன்னேன் எங்கள் விரய பலன்களும்
சொல்லும் விருத்தியும் சம்பத்தும் ஆயுசும்
பொன்னினும் புத்திர சம்பத்து மேசெயம்
பொருளும் த்தானியம் தானே மிகுந்திடும்
என்னும் நல்லதோர் இல்லாச்சம் பத்து
எய்திடும் லட்சுமி கடாக்ஷம் தானதும்
வண்ணங்கள் வீமேசர் பாதத்தை வாழ்த்தி
இறைஞ்சியே யோனி பலனையும் பார்த்திடே. 644

*(886 C : 64)*

*(இ. ள்)* விருத்தி, சம்பத்து, ஆயுள், பொன், புத்திர சம்பத்து, வெற்றி, பொருள், தானியம், லட்சுமி கடாட்க்ஷம் ஆகியவை இல்லாமல் இருப்பதே விரய பலன்களாகும் என்பதை வீமேஸ்வரன் பாதத்தைப் பணிந்து எடுத்துரைப்பதைப் பார்ப்பாயாக.

## இதுவுமது

உரைதரு முழத்தை ஒன்பதிற் பெருக்கி
ஒருபதிற் கழித்துறு சேடம்
விரையம் தாகும் இரண்டுபத் தாறு
மேவிடின் மரணமுண் டாகும்

நிரையிரு நான்கு நான்குமே பிணியாம்
நிகழ்த்திய ஒன்றுத் தமமாம்
புரைதரும் ஒன்பான் ஐந்துமூன் றேழும்
புகழ்பல சுகமிருந் தானே. 645
*(886 c : 5)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, பத்தால் வகுத்துக் கிடைக்கும் மீதி **விரயம்** எனப்படும். இரண்டு, பத்து, ஆறு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், மரணம் உண்டாகும். எட்டு, நான்கு ஆகிய எண்கள் மீதியாக வந்தால், நோய் உண்டாகும். ஒன்று மீதியாக வந்தால், சிறந்த பலன்கள் கிட்டும். ஒன்பது ஐந்து, மூன்று, ஏழு ஆகிய எண்கள் மீதியாக வந்தால் மிகுதியான சுப விரயங்கள் உண்டாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால், மீதி பத்து என்று கொண்டு பலன் காண வேண்டும்.

## இதுவுமது

ஏழொன்பான் ஐந்து மூன்று
ஈந்தபூ ரணசெ யம்தான்
சூழும்புத் திரர்கள் லாபம்
வீர்யம் சொல்லிய நன்றாம்
பாழிலொன் றிரண்டு நான்கா
றெட்டுடன் பத்து கொண்டால்
வீழ்கனல் அசனம் சார்நோய்
விரோதம் களத்திர நாசம். 646
*(886 a : 56)*

*(இ. ள்)* குழித்தொகையை ஒன்பதால் பெருக்கிப் பத்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி எண்களாக ஏழு, ஒன்பது, ஐந்து, மூன்று ஆகிய எண்கள் அமையுமானால், முழுமையான வெற்றி, புத்திரர்களால் இலாபம்,

முதலானவை, விரயத்துடனிருப்பினும் நன்மையாக நடக்கும். ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து ஆகிய எண்கள் மீதியாக அமையுமானால் தீயினால் துயரம், மனவருத்தம், நோய், பகை, களத்திர அழிவு முதலியவற்றால் துன்பம் உண்டாகும்.

## திதிப்பொருத்தம்

திதிபல னதுகேள் பிரதமை அதுவே
தீதெனும் துவிதியைநன் மையுமாம்
விதிபெறு திருதியை உத்தமம் சதுர்த்தி
மேவிய தீதுபஞ் சமியும்
துதிபலன் சஷ்டி கலிசத் தமியும்
சுகமுமட் டமியுமே துக்கம்
சதிபெறு நவமி மத்திமம் தசமி
சாத்திய நலமென்று அறையே. 647

*(742 : 117)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, பதினைந்தில் வகுக்க வரும் மீதி திதி எனப்படும்; மீதியாக ஒன்று வந்தால், **பிரதமை**. இதன் பலன்- துன்பம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், **துவிதியை**. இதன் பலன் - நன்மை கிடைக்கும்; மீதியாக மூன்று வந்தால், **திருதியை**. இதன் பலன் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்; மீதியாக நான்கு வந்தால், **சதுர்த்தி**. இதன் பலன் - துனபத்தைத் தரும்; மீதியாக ஐந்து வந்தால், **பஞ்சமி**. இதன் பலன் -நன்மை கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், **சஷ்டி**. இதன் பலன் - நன்மை உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால், **சப்தமி**. இதன் பலன் - சுகம் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால், **அஷ்டமி**. இதன் பலன் - துக்கம் ஏற்படும்; மீதியாக ஒன்பது வந்தால், **நவமி**. இதன் பலன் - சுமாரான நன்மைகள் கிடைக்கும்; மீதியாகப் பத்து வந்தால், **தசமி**. இதன் பலன் நன்மைகள் கிடைக்கும்.

### இதுவுமது

சாத்திய ஏகா தசிமத் திமமாம்
தருதுவா தசியுமே நன்றாம்
போத்திய திரையோ தசியுத் தமுமாய்
புகலுவேன் இன்னமும் புதிதாய்
ஏத்திய சதுர்தசி யும்அது தீதாம்
இயல்அமா வாசையுத் தமுமாம்
கோத்ததோ பாடல் திதிபலன் இதுவாய்க்
கூறிய மயனுமங் குரையே. 648

*(742 : 42)*

*(இ. ள்) மீதியாகப் பதினொன்று வந்தால், **ஏகாதசி**. இதன் பலன் - சுமாரான நன்மைகள் உண்டாகும்; மீதியாகப் பன்னிரண்டு வந்தால், **துவாதசி**. இதன் பலன் - நன்மை உண்டாகும்; மீதியாகப் பதிமூன்று வந்தால் **திரயோதசி**. இதன் பலன் - தீமை உண்டாகும். மீதியாகப் பதிநான்கு வந்தால், **சதுர்தசி**. இதன் பலன் - தீமையாகும்; மீதியாகப் பதினைந்து வந்தால், **அமாவாசை**. இதன் பலன் - சண்டை விளையும்.*

குறிப்பு: *பதினைந்தால் வகுக்க, மீதி வரவில்லையானால், பதினைந்தை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும். இப்பாடல், தேய்பிறைத் திதிகளுக்கு மட்டுமே பலன் கூறுவதாக அமைந்துள்ளது. வளர்பிறைத் திதிகளைப் பற்றிய குறிப்புகள் இல்லை.*

### இதுவுமது

திருமலி முழத்தை நவமதிற் பெருக்கித்
திகழொரு முப்பதி ரித்து
மருவிய சேடம் பிரதமை முதலா
வருந்திதி இரண்டுமூன் றின்பம்
கருதிய பதிமூன் றொடுபனி ரண்டும்
கல்வியுண் டாம்பதி னைந்தும்
பெருகிய சுகமீ ரைந்துடன் ஐந்தும்
பெட்புறு நன்மையுண் டாமே. 649

*(886 b : 12)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைப பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, முப்பதால் வகுத்துக் கிடைக்கும் மீதி திதி எனப்படும். இரண்டு (துவிதியை), மூன்று (திருதியை), மீதியாக வந்தால் இன்பம் உண்டாகும். பன்னிரண்டு (துவாதசி), பதிமூன்று (திரையோதசி), மீதியாக வந்தால் கல்விநலம் பெருகும். பதினைந்து (பௌர்ணமி), பத்து (தசமி), ஐந்து (பஞ்சமி) மீதியாக வந்தால் நன்மைகள் விளையும்.*

குறிப்பு: ஒன்று முதல் பதினைந்து வரை உள்ளவற்றை வளர்பிறைத் திதிகளாகவும். பதினாறு முதல் முப்பது வரை மீதியாக வந்தவற்றைத் தேய்பிறைத் திதிகளாகவும் கணக்கில் கொண்டு பலன் கூற வேண்டும். பிரதமை முதலாக இத்திதிகளைக் கணக்கிடவேண்டும். மீதி வரவில்லையென்றால், முப்பதை மீதி எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## திதி

உற்றிடு திதியின் முப்பதும் ஆறும்
ஒன்பதும் மத்திம மாகும்
மற்றிரு நான்கு பதிநான் குடனே
வருபதி னொன்றுடன் ஒன்றும்
சுற்றிய பகையுண் டாகியே வினையும்
சூழ்ந்திடும் இத்தொகை தன்னில்
வெற்றிமூ வைந்தும் சுக்கில மாகும்
மேலுள தபரம மாமே. 650

*(886 b : 13)*

*(இ. ள்) முப்பது (அமாவாசை), ஆறு (சஷ்டி), ஒன்பது (நவமி) ஆகியவை மீதியாக வந்தால், சுமாரான பலன்கள் கிட்டும். எட்டு (அஷ்டமி), பதினான்கு (சதுர்தசி), பதினொன்று (பிரதமை) ஆகியவை மீதியாக வந்தால், பகையுண்டாவதுடன் தீவினையும் உண்டாகும். மீதியாக பதினைந்து மீதி வரும் வரை வளர்பிறைத் திதிகளையும் அதற்கு மேல் வரும் மீதி எண்கள் தேய்பிறைத் திதிகளையும் குறிக்கும்.*

## இதுவுமது

என்னுமுன் னாயத்தை ஏய்ந்த ஒன்பதிற்
கன்னிய முப்பதிற் கழிக்கச் சேடமே
நன்னிய முதற்றிதி நவமி ரண்டினில்
அன்னிய திரிதிகை யணுகும் நற்செயம். 651

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கிப் பூர்வ பக்ஷம் பதினைந்தும், அமரபக்ஷம் பதினைந்தும்ஒன்றாகச் சேர்த்து ஒன்பதிற் பெருக்கிய தொகையை முப்பதிற் கழிக்க, அதற்குள்ளாக முன் பதினைந்து வரைக்கும் பூர்வபக்ஷத்திதி, பதினைந்துக்கு மேல் முப்பதி வரையில் அமரபக்ஷத்திதி. அதன் பலன் ஒன்றுக்குப் பிரதமை திதி உத்தமம். இரண்டுக்குத் துதிகை நன்மையுண்டாம். மூன்றுக்குத் திரிதிகை ஜெயமுண்டாம். *(சி. நூ. பா. : 40)*

## இதுவுமது

சயமிலை சதுர்த்தியைச் சார்ந்த பஞ்சமி
நயமுள சிறுவராம் நந்தை யாயுளாம்
வயமுள சஷ்டியேல் வயங்கு முற்பலன்
வியம்பிணி நவந்தனில் நாசம் சாகுமே. 652

*(இ. ள்)* நாலுக்குச் - சதுர்த்தி அபஜெயமாம். ஐந்துக்குப் பஞ்சமி. புத்திர சம்பத்துண்டாம். ஆறுக்கு - சஷ்டி. புத்திர விருத்தியுண்டாம். ஏழுக்குச் சப்தமி, அதனால் நல்ல போக பாக்கியமுண்டாம். எட்டுக்கு - அஷ்டமி, அந்த மனையில் எந்நாளும் வியாதியே பெருகும். ஒன்பதுக்கு - நவமி, அந்த மனை தீபமில்லாமல் பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 41)*

## இதுவுமது

சார்தசம் பாக்கியம் தங்குமே காதசம்
சீரு மத்திமந் துவாதசஞ் செம்மலாம்
பார்திரை யோதசி பகரிற்சம் பத்ததாம்
ஓர்பதி னான்கதேல் நாசம் சாருமே. 653

*(இ. ள்)* பத்துக்குத் - தசமி. அதனால் பாக்கியம் உண்டாகும். பதினொன்றுக்கு - ஏகாதசி அதனாலந்த மனையில் கோபமும் சிறுமையும் உண்டாகும். பன்னிரண்டிற்குத் துவாதசி. அதனால் அன்ன வஸ்திரம் குறைவில்லாமல் நடக்கும். பதிமூன்றுக்குத் திரயோதசி, அதனால் நாளுக்கு நாள் சம்பத்துப் பெருகும். பதினான்குக்குச் சதுர்தசி. அதனால் அந்த மனை பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 42)*

## இதுவுமது

ஏறிய பூரணை யாகில் உத்தமம்
கூறிய குருவுமேற் கொள்கை யாமிதில்
ஏறிய விருகதிர் சேர வோர்திதி
வேறிய விலையென விளம்பி னாரரோ. 654

*(இ. ள்)* பதினைந்துக்குப் பௌர்ணமி. அதனால் எல்லாக் காரியமும் உத்தம பலனாய் நடக்கும். பதினைந்துக்கு மேல், பதினாறு முதல் முப்பது வரை அமரபக்ஷத் திதி. அதற்குப் பூர்வ பக்ஷப் பிரகாரம் நடக்கும். அதற்குமேல் இல்லை. *(சி. நூ. பா. : 43)*

## இதுவுமது

ஒன்றுநான் கிரண்டும் எட்டும்
ஒன்பது பதிநான் காக
நின்றிடில் பக்கம் தீதாம்
நிலைவலி கொண்ட பக்கம்
கண்டிடில் மிகவும் தீதாம்
கலைவளர் பக்கத் தேனும்
சென்றபிற் பக்கத் தேனும்
செப்பிய இரட்டை தீதே. 655

*(886 a : 58)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து, பெருக்கி வரும் குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, முப்பதால் வகுக்க வரும் மீதி **திதி** எனப்படும். மீதியாக ஒன்று, நான்கு, இரண்டு. எட்டு, ஒன்பது, பதினான்கு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே பிரதமை, சதுர்த்தி, துவிதியை, அஷ்டமி, நவமி, சதுர்தசி ஆகிய திதிகளாகும். இவை தீமையைத் தருவனவாகும். தேய்பிறையில் இத்திதிகள் மிகுந்த தீமையை விளைவிக்கும். வளர்பிறையாக இருப்பினும் தேய்பிறையாக இருப்பினும் இரட்டையாக வரும் திதிகள் பொதுவாகத் தீமையை விளைவிப்பனவாகும்.

## வாரப் பொருத்தம்

வாரமது ஏழுக்குப் பலனே சொல்வேன்
வருமிரவி மத்திமமாம் பயமுண் டென்பர்
சீருயர்ந்த சோமனுக்கே மனையாள் விர்த்தி
செவ்வாய்க்குத் தனநாசம் செப்பு மல்லால்
சேருபுதன் ஆரோக்கியம் குருவுக் கேதான்
பெருகியதோர் புத்திரரும் விருத்தி யாகும்
ஏர்சிறந்த வெள்ளிக்குச் சித்தி யுண்டு
இகழ்சனிக்கு மத்திமமாம் இயம்பி னேனே. 656

*(742 : 111)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழில் வகுக்கக் கிடைக்கும் மீதி வாரம் எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **ஞாயிற்றுக்கிழமை.** இதன் பலன் பயம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால், **திங்கட்கிழமை.** இதன் பலன் பல மனைவியர் கிடைப்பர்; மீதியாக மூன்று வந்தால், **செவ்வாய்க்கிழமை.** இதன் பலன் செல்வத்திற்கு அழிவுண்டாகும்; மீதியாக நான்கு வந்தால், **புதன்கிழமை.** இதன் பலன் உடல் ஆரோக்கியம் சிறப்புடன் விளங்கும்; மீதியாக ஐந்து வந்தால், **வியாழக்கிழமை.** இதன் பலன்

புத்திரர்கள் பிறப்பார்கள்; ஆறு மீதியாக வந்தால், **வெள்ளிக்கிழமை**. இதன் பலன் காரிய சித்தி உண்டாகும். மீதியாக ஏழு வந்தால், **சனிக்கிழமை**. இதற்கு மத்திமமான பலன் உண்டாகும்.

குறிப்பு: மீதி எதுவும் வரவில்லையென்றால், ஏழு எனக்கொண்டு கணக்கிடவேண்டும்.

## இதுவுமது

சாரமுன் னாயத்தைத் தனித்த ஒன்பதில்
ஏரவே பெருக்கி ஏழுக்கீ மீதியை
வாரமாம் தினகரன் வருங்கு ரோதமே
சேரவே சோமமனிற் செழிப்புண் டாகுமே. 657

*(சி. நூ. பா. : 34)*

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கி, ஏழிற்கு ஈய்ந்த மிகுதி வாரம். ஒன்றுக்கு - ஆதிவாரம், அதனால் அந்த மனையில் எந்நாளும் குரோதம் உண்டாகும். இரண்டிற்குச் சோமவாரம், அதனால் நாளுக்கு நாள் செழித்து அதிக சந்தோஷம் உண்டாகிவரும்.

ஆகுமங் காரகன் அர்த்த நாசமாம்
சேகரம் புந்தியிற் சேர்ச வுக்கியம்
வாகதாங் குருவினில் மன்னும் புத்திரர்
சோகந்தீர் சுங்கனிற் சொல்லும் நன்மையே. 658

*(இ. ள்)* மூன்றுக்கு - மங்கள வாரம், அதனால் பழம்பொருளும் புதுப்பொருளுமில்லாமல் அற்றுப் போகும். நாலிற்குப் புதவாரம், அதனால் இலட்சுமி வாசமாயிருப்பாள். ஐந்திற்குக் குருவாரம், அதனால் புத்திர சம்பத்துண்டாயிருக்கும். ஆறுக்குச் சுக்கிரவாரம், அதனால் சகல காரியமும் நன்மையாய் நடக்கும். *(சி. நூ. பா. : 35)*

## இதுவுமது

இலகிய முழத்தை நவமதிற் பெருக்கி
ஏழினிற் கழித்தது சேடம்
குலவிய அருக்கன் ஆதியாம் வாரம்
கொள்ளுக மதிபுதன் புகரோன்
நலமிக பெருகும் குருமக வுண்டாம்
நவின்றடு சேய்தன நாசம்
நிலவுறும் இரவி சனியுமத் திமமாம்
நெரிசுரிங் குங்குழற் திருவே ! 659

*(886 a : 8)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, ஏழால் வகுத்துக் கிடைக்கும் மீதி வாரம் எனப்படும். இதை ஞாயிற்றுக் கிழமையை முதலாகக் கொண்டு கணக்கிட வேண்டும். இரண்டு, நான்கு, ஆறு (திங்கள், புதன், வெள்ளி) நன்மைகள் மிகுதியாக உண்டாகும். ஐந்து மீதியாக வந்தால் (வியாழன்), புத்திரர் தோன்றுவர். மூன்று (செவ்வாய்) மீதியாக வந்தால், பொருள் அழிவு உண்டாகும். ஒன்று, ஏழு (ஞாயிறு, சனி) மீதியாக வந்தால், நன்மையும் தீமையுமான பலன்கள் கலந்து வரும்.*

*குறிப்பு: மீதி இல்லையானால், மீதி ஏழு என்று கொண்டு பலன் காண வேண்டும்.*

## இதுவுமது

வாரநாள் கொள்ளும் போது
மதிபுதன் வியாழம் வெள்ளி
சீரிதாய் சிறப்புண் டாகும்
சேய்சனி இரவி வந்தால்

பாரினில் அத்தம் நாசம்
பலபிணி கலகம் சாரும்
கூறிய சென்ம வார
மாகிடில் குணமுண் டாமே. 660

*(886 a : 57)*

*(இ. ள்)* மனையை அளந்து கண்ட குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி, ஏழால் வகுக்கக் கிடைக்கும் மீதி வாரமாகும். மீதியாக இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளைக் குறிக்கும். இவை நன்மையைத் தரும். மீதியாக ஒன்று, மூன்று, ஏழு ஆகிய எண்கள் வந்தால், அவை முறையே ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய வாரங்களைக் குறிக்கும். இவை செல்வத்திற்கு அழிவை உண்டாக்கும்; நோய்களைத் தரும்; கலகத்தை ஏற்படுத்தும். மனைக்குரியவர் பிறந்த கிழமையானால் நன்மையாகும்.

## நட்சத்திரப்பொருத்தம்

அசுபதி விசயம் பரணியாம் மரணம்
ஆனகார்த் திகையுமே அனலாம்
நிசமுரோ கணியே விசயமாம் மிருக
சீரிடமும் சத்துரு நாசம்
வசமுயர் திருவா திரையுமே விசயம்
வளர்புனர் பூசமும் விசயம்
அசவினர்ப் பூசம் புண்ணிய விருத்தி
ஆயிலியம் மரணமென் றரையே. 661

*(742 : 115)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டால் பெருக்கி, இருப்தேழில் வகுக்கக் கிடைக்கும் மீதி **நட்சத்திரம்** எனப்படும். ஒன்று மீதியாக

வந்தால், **அசுபதி**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; இரண்டு மீதியாக வந்தால், **பரணி**. இதன் பலன் மரணம் நேரிடும்; மூன்று மீதியாக வந்தால், **கார்த்திகை**. இதன் பலன் தீயினால் பயம் உண்டாகும்; நான்கு மீதியாக வந்தால், **உரோகணி**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; ஐந்து மீதியாக வந்தால், **மிருகசிரிடம்**. இதன் பலன் பகைவர் அழிவர்; ஆறு மீதியாக வந்தால், **திருவாதிரை**. இதன் பலன் வெற்றி கிடைக்கும். ஏழு மீதியாக வந்தால், **புனர்பூசம்**. இதன் பலன் வெற்றி உண்டாகும். எட்டு மீதியாக வந்தால், **பூசம்**. இதன் பலன் புண்ணியச் செலவுகள் அதிகரிக்கும். ஒன்பது மீதியாக வந்தால், **ஆயிலியம்**. இதன் பலன் மரண பயம் உண்டாகும்.

## இதுவுமது

மகமது விருத்தி பூரமும் விசயம்
மருவிய உத்திரம் பயமாம்
சிகமகிழ் அஸ்தம் பசுக்களும் உண்டு
சித்திரை ரோகமாம் சுவாதி
மிகவுமே பாக்கியம் விசாகமும் சிலுகு
மேவிய அனுஷம்வித் தையுமாம்
தகமை கேட்டை தனமுமாம் மூலம்
தக்கரோ கமுமதாய் சாற்றே. 662

*(742 : 115)*

*(இ. ள்)* பத்து மீதியாக வந்தால், **மகம்**. இதன் பலன் விருத்தி உண்டாகும். பதினொன்று மீதியாக வந்தால், **பூரம்**. இதன் பலன் வெற்றி கிடைக்கும்; பன்னிரண்டு மீதியாக வந்தால், **உத்திரம்**. இதன் பலன் பயம் ஏற்படும். பதிமூன்று மீதியாக வந்தால், **அஸ்தம்**. இதன் பலன் பசுக்கள் பெருகும்; பதினான்கு மீதியாக வந்தால், **சித்திரை**. இதன் பலன் நோய் உண்டாகும்; பதினைந்து மீதியாக வந்தால், **சுவாதி**. இதன் பலன் பாக்கியங்கள் பெருகும்; பதினாறு மீதியாக வந்தால், **விசாகம்**. இதன் பலன் துன்பம் உண்டாகும்; பதினேழு மீதியாக வந்தால், **அனுஷம்**. இதன் பலன் வித்தை பெருகும்;

பதினெட்டு மீதியாக வந்தால், **கேட்டை**. இதன் பலன் செல்வம் உண்டாகும்; பத்தொன்பது மீதியாக வந்தால், **மூலம்**. இதன் பலன் நோயுண்டாகும்.

## இதுவுமது

பூராடம் அதுவே மரணமுத் திராடம்
பொருந்திய நலம்திரு வோணம்
வாரொடு திருவும் சேரும் அவிட்டம்
மகிழ்வும் நன்மையாம் சதயம்
ஏரொடு நன்மை யதுபூரட் டாதி
எழில்மக வதுஉத்திரட் டாதி
நேரொடு வயது விருத்திரே வதியும்
நிகரில்லா ரோகமாய் நிகழ்த்தே. 663

*(742 : 115)*

*(இ. ள்)* இருபது மீதியாக வந்தால், **பூராடம்**. இதன் பலன் மரணபயம் உண்டாகும்; இருபத்தொன்று மீதியாக வந்தால், **உத்திராடம்**. இதன் பலன் நன்மைகள் கிடைக்கும்; இருபத்து இரண்டு மீதியாக வந்தால், **திருவோணம்**. இதன் பலன் செல்வம் பெருகும்; இருபத்து மூன்று மீதியாக வந்தால், **அவிட்டம்**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்துநான்கு மீதியாக வந்தால், **சதயம்**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்து ஐந்து மீதியாக வந்தால், **பூரட்டாதி**. இதன் பலன் புத்திரப் பேறு கிடைக்கும்; இருபத்து ஆறு மீதியாக வந்தால், **உத்திரட்டாதி**. இதன் பலன் நன்மைகள் உண்டாகும்; இருபத்து ஏழு மீதியாக வந்தால், **இரேவதி**. இதன் பலன் நோயுண்டாகும்.

குறிப்பு: மீதி வரவில்லைஎன்றால், அதை இருபத்தேழு என்று கணக்கிட வேண்டும்.

### இதுவுமது

அசுபதி விசயம் செய்யும்
அடுப்பனல் வியாதி ரோணி
திசைமுழு நாளும் வண்மின்
செயம்பெறும் செங்கை செல்வம்
வசையிடு சேபூசம் யோகம்
மரணமா யிலிய மாகும்
மசகெலி மக்கள் பேறு
பூரமும் சண்டை தானே. 664

*(886 a : 236)*

### இதுவுமது

உத்திரம் நிலைமை அத்தம்
யோகமாம் பயறு ரோகம்
புத்திரப் பேரு சோதி
புனிதரும் சுளகு புத்தேள்
வெத்தியாங் கேட்டை செல்வம்
வியாதியாம் மூலம் பொய்கை
சத்துரு மிகுமே ஆடி
தழைத்திடும் செல்வம் தானே. 665

*(886 a : 237)*

### இதுவுமது

திருநிறை யோணம் அவிட்டம்
சேர்தனம் செக்கு செல்வம்
தருவது நாழி சண்டை
தருவேந்தர் வெத்தி தோணி
பெருகிய வியாதி யென்று
பேசினார் மனைக்கு முன்னோர்
வரிவிழி யுடைய மாதே!
மயன்மதன் உரைத்த வாறே! 666

*(886 a : 238)*

### இதுவுமது

விசையம் தரும்பிணி விரணம் தரும்உருள்
விசேஷம் செயம்
இசையும் திருவருள் புத்திரன் இலாபம்
இடற சுதமாம்
பிசகும் எலிக்குப் புத்திரன் உத்திரம்
பெத்து அஸ்தம்
அசையும் பயறு வரும்போது அம்மனைக்
கழிவு என்பரே. 667

*(886 a : 269)*

### நட்சத்திரம்

பரிவுறு முழத்தை எட்டினிற் பெருக்கிப்
பகருமூ ஒன்பதில் வகுத்துத்
தெரிவரு சேடம் அசுபதி முதலாத்
திகழுநட் சத்திர மாகும்
விரிதரு சோதி உத்திரத் திரையம்
மிருகசீ ரிடமிகு சுகமாம்
துரிசறு சதையம் உரோகணி யுடன
சுவினியும் விஜேயம தாமே. 668

*(886 b : 14)*

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை எட்டால் பெருக்கி, இருபத்தேழில் வகுத்துக் கிடைக்கும் மீதி நட்சத்திரம் எனப்படும். பதினைந்து (சுவாதி), பன்னிரண்டு (உத்திரம்), இருபத்தொன்று (உத்திராடம்), இருபத்தாறு (உத்திரட்டாதி), ஐந்து (மிருகசீரிடம்) ஆகியவை மீதியாக வந்தால், மிகுந்த சுகம் உண்டாகும். இருபத்து நான்கு (சதயம்), நான்கு (உரோகணி) ஒன்று (அசுவதி) ஆகியவை மீதி எண்களாக வந்தால், வெற்றி கிடைக்கும்.*

குறிப்பு: ஒன்று முதல் இருபத்து ஏழு வரை மீதியாக வரும் எண்களை அசுவதி முதலாக இரேவதி முடிவாக கணக்கிட வேண்டும். மீதி வரவில்லையென்றால், இருபத்தேழை மீதிய எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

**இதுவுமது**

அதிபுக ழோணம் புனர்வசு பூசம்
அத்தமும் புத்திர விருத்தி
துதிபெறும் அனுடம் கல்வி யாம் அவிட்டம்
தூயநற் செல்வமுண் டாகும்
மதிபூரட் டாதி சித்திரை மூலம்
பகர்திரு வாதிரை பூரம்
திதிரே வதியும் உத்தமம் என்பர்
செககதிர்த் திரள்வெண் நகையே ! 669

*(886 b : 15)*

*(இ. ள்)* ஒளி பொருந்திய வெண்மையான பற்களைக் கொண்ட, புன்னகை புரியும் பெண்ணே! இருபத்து இரண்டு (திருவோணம்), ஏழு (புனர்பூசம்), எட்டு (பூசம்) பதிமூன்று (அஸ்தம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், புத்திரர்கள் தோன்றுவார்கள். பதினேழு (அனுடம்) மீதியாக வந்தால், கல்வியில் மேன்மை உண்டாகும். இருபத்து மூன்று (அவிட்டம்) மீதியாக வந்தால், செல்வம் பெருகும். இருபத்து ஐந்து (பூரட்டாதி), பதினான்கு (சித்திரை), பத்தொன்பது (மூலம்), ஆறு (பூரம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும்.

தரணியில் புகலும் கார்த்திகை யுறிற்செந்
தணலினால் மிகமெலிந் திடுவர்
பரணிஆ யிலியம் மரணமுண் டாகும்
பகர்ந்திடு கேட்டைஅ சுபமாம்
விரணம தாடும் சிலுகுவி சாகம்
மேவுபூ ராடம்நோ யாகும்
முரணுறு சிலையை மதகரி மருப்பை
முனிந்தோனிற் முகிழ்முலை அணங்கே. 670

*(886 b : 16)*

*(இ. ள்)* மாறுபட்ட வில்லான புருவங்களையும், மதம் பொருந்திய யானையின் தந்தங்களையும் கோபமுறச் செய்யும் முகிழ்ந்திருக்கக் கூடிய தனங்களை உடைய பெண்ணே ! மூன்று (கார்த்திகை) மீதியாக வந்தால், தீயினால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். இரண்டு (பரணி), ஒன்பது (ஆயிலியம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால், மரணம் நேரிடும். பதினெட்டு (கேட்டை) மீதியாக வந்தால், நன்மையாகும். பதினாறு (விசாகம்) மீதியாக வந்தால், காயம் உண்டாகும். இருபது (பூராடம்) மீதியாக வந்தால், நோயுண்டாகும்.

## இதுவுமது

பலமதாம் ஆயத்தைப் பாரில் எட்டினில்
நலமதாம் ஏத்திமூ வொன்ப தாகுநாள்
அலகிடக் கழிக்கவோ அசுவ னிற்பயன்
இலகிய வசியம்வந் தெய்தும் என்பரே. 670

*(இ. ள்)* முன் ஆயத்தை எட்டிற் பெருக்கி, இருபத்தேழிற் கொடுக்க, அதற்குள்ளாக நின்ற நட்சத்திரம் ஒன்று மிகுந்தால், அசுவனி. அதற்கு வசியம் பொருந்தி நடக்கும். *(சி. நூ. பா. : 28)*

என்பதி ரண்டுசொற் கினிய மரணம்
பின்பு கார்த்திகைப் புகைய தாமனல்
வன்புறு மிரோகணி வசியம் எய்துமே
அன்புறு மான்தலை அதிக நாசமே. 672

*(இ. ள்)* இரண்டிற்குப் பரணி. அதற்குப் பலன் வீடுகட்டி முடிவதற்குள்ளாக எஜமானன் மரணத்தை அடைவான். மூன்றிற்குக் கார்த்திகை, அதற்கு அந்த வீடு தீப்பட்டுப் போகும். நான்கிற்கு ரோகணி. அதன் பலன் ஜெயம் பொருந்தி நடக்கும். ஐந்துக்கு மிருகசீரிடம், அதன் பலன் அந்த மனை பாழடைந்து போகும். *(சி. நூ. பா. : 29)*

ஆதிரை செயம் புனர்பூசம் பாலராம்
ஓதிய பூசங்கா லொழியும் பாம்பிதே
ஏதமில் வேள்வியோ டிலங்கும் விளங்கெலி
பேதமில் உத்தமம் என்று பேசினார். 673

*(இ. ள்)* ஆறு வருமாகில்-திருவாதிரை. அதனால் குறைவில்லாத செல்வம் உண்டாகும்; ஏழு வருமாகில் புனர்பூசம். அதனால் புத்திர பாக்கியம். எட்டு வருமாகில் பூசம். அதனால் வங்கிஷம் அற்றுப் போகும். ஒன்பது வருமாகில் ஆயிலியம் அதனால் முன் சொல்லியபடி நடக்கும். பத்து வருமாகில் மகம். பதினொன்று வருமாகில் பூரம். இவ்விரண்டிற்கும் உத்தமத்தில் மத்திம பலன்நடக்கும். *(சி. நூ. பா. : 30)*

பேசிய வுத்தரம் பெருகுங் கையினில்
நாசந் தூசுநாள் நணுகு மென்பிணி
பாச மாஞ்சோதி பாரிற் சுகம்பெறும்
நேசமி லாமுறம் நேரும் துன்பமே. 674

*(இ. ள்)* பன்னிரண்டுக்கு உத்தரம். அதனால் நாளுக்கு நாள் குறைவில்லாச் செல்வம் பெருகிவரும். பதிமூன்றுக்கு அத்தம் அதனால் அந்த மனை நாளுக்கு நாள் பாழடைந்து போகும். பதினான்குக்குச் சித்திரை. அதனால் எந்நாளும் பிணியாய் இருக்கும். பதினைந்துக்குச் சுவாதி. அதனால் நாளுக்கு நாள் சுகம் பெருகி வரும். பதினாறுக்கு விசாகம். அதனால் எந்நாளும் துன்பத்தை விளைவிக்கும். *(சி. நூ. பா. : 31)*

ஏறும் போந்தைதா னுத்தமம் எனலாம்
கூறும் கேட்டை கொடுமையாம் மூலத்தில்
ஊறு மேபிணி உடைகுளம் ஆவிபோம்
தேறும் விஸ்வநாள் சேருமே நற்சுகம். 675

*(இ. ள்)* பதினேழுக்கு அனுடம். அதனால் சகலமும் உத்தம பலனாக நடக்கும். பதினெட்டு கேட்டை. அதனால் எந்நாளும் குடும்ப விரோதமும் பகையுமாய் இருக்கும். பத்தொன்பதிற்கு மூலம். அதனால் அந்த மனையின் எஜமானுக்கு நாடோறும் மாறாத பிணியாய் இருக்கும். இருபதுக்குப் பூராடம். அதனால் அந்த மனை நாளுக்கு நாள் விர்த்தியில்லாமல் குலநாசமற்றுப் போகும். இருபத்தொன்றுக்கு உத்திராடம். அதனால் நாள்தோறும் செல்வம் பெருகி வரும். *(சி. நூ. பா. : 32)*

சுகமி லாச்சோனை துன்பம் விட்டமே
அகம கற்றுஞ்ச தயஞ்சௌ பாக்கியம்
மகபூ ரட்டாதி வங்கிஷ மற்றுப்போம்
சகசம் ரேவதி சாருமி ரோகமே. 676

*(இ. ள்)* இருபத்திரண்டிற்குத் திருவோணம் நின்றால், அதனால் யாதொரு சுகமுமில்லாமல் இருக்கும். இருபத்து மூன்றுக்கு அவிட்டம் நிற்குமானால், அந்த மனை கட்டிவனுக்கில்லாமல் மற்றொருவன் பக்கம் சாரும். இருபத்து நான்குக்குச் சதயம் நிற்குமானால், அதனாலந்த மனையில் அஷ்ட இலட்சுமிவாசமாய் இருப்பாள். இருபத்தைந்துக்குப் பூரட்டாதி நின்றால், அந்த மனைக்காரன் தலையோடே வங்கிஷமற்றுப் போகும். இருபத்தாறுக்கு உத்திரட்டாதி நிற்குமானால், அதனால் எந்நாளும் போக பாக்கியமாக இருக்கும். இருபத்தேழுக்கு ரேவதி வந்து நிற்குமானால், அந்த மனையில் எந்நாளும் பிணியிருக்கும். *(சி. நூ. பா. : 33)*

### விரயம், யோனி

சுகவிர யங்கள் ஏனிரு மாதாய்
தொகையினுக் கூட்டிட நலமே
மிகவடை குவர்மேற் படிற்பிணி யடைந்து
மிடியினால் வருந்துவர் தாமே

இசலறு முழத்தை மூன்றினிற் பெருக்கி
எட்டினிற் கழித்துறு சேடம்
திகழ்திசை யோனி யாகுமென் றாகிற்
செழந்துஜம் தனம்பெரு கிடுமே. 677

*(886 b : 6)*

*(இ. ள்)* விரயங்களைத் தவிர்ப்பதற்கு மனையில், வீட்டின் சுற்று முழத்தைக் கூட்டிட நன்மை அடைவர். இல்லாவிடில் நோயினை அடைந்து வறுமையினால் வருந்துவார்கள். மனையின் நீள அகலங்களைப் பெருக்கி வந்த குழித்தொகையை மூன்றால் பெருக்கி, எட்டால் வகுத்துக்கிடைக்கும் மீதி **யோனி** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், பருந்துப் பிறப்பு. இதன் பலன் செல்வம்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி எட்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும். துவஜம்-பருந்து.

## யோனி

பெருமைஇல் இரண்டேற் புகைகொலை யாகும்
பெட்புறு மூன்றெனிற் சீயம்
தரும்பல போகம் நான்குநாய் ரோகம்
தழைத்திடும் ஐந்தினில் இடபம்
திருமலிந் திருமா றெனில்கரங் கலகம்
திகழுமேற் கெஜமிகு செயமாம்
மருவிரு நான்கு காகநோ யாகும்
வருபகை இலதெனில் நலமே. 678

*(886 b : 7)*

*(இ. ள்)* இரண்டு மீதியாக வந்தால், பூனைப்பிறப்பு. இதன் பலன் கொலை; மூன்று மீதியாக வந்தால், சிங்கப் பிறப்பு. இதன் பலன் சுகமடைதல்; நான்கு மீதியாக வந்தால், நாய்ப்பிறப்பு. இதன் பலன் நோய்; ஐந்து மீதியாக வந்தால், எருதுப் பிறப்பு. இதன் பலன் செல்வம் சேருதல்; ஆறு மீதியாக வந்தால், எலிப் பிறப்பு. இதன் பலன் கலகமாகும்; ஏழு மீதியாக வந்தால், யானைப்பிறப்பு. இதன் பலன் வெற்றியாகும்; எட்டு மீதியாக வந்தால், காகப் பிறப்பு. இதன் பலன் நோயாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி எட்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும்.

## யோனிப்பொருத்தம்

உரைத்த ஆயத்தை உன்னியே மூன்றினிற்
பொருத்த மேத்தியட் டமத்தினிற் போக்கிட
விருத்தி நின்றது விளங்கும் யோனியில்
இருத்தி இக்கர னிருநான்கிற் சேர்த்ததே. 679

*(இ. ள்) ஆயத்தை மூன்றிற் பெருக்கி எட்டுகுள்ளாக நின்றது அஷ்டயோனி என்றறியும். (சி. நூ. பா. : 25)*

சொற்றதி லேகமாம் சுபுத்ர மாக்கியம்
மற்றிரண் டதனில்மர கலகம் மன்னுமே
சுத்தமூன் றரிசெயம் துலங்கும் நாலினிற்
கத்துசு வானம்நோய் காட்டும் என்பரே. 680

*(இ. ள்) யோனி ஒன்று மிகுந்தால், கருடயோனி. எந்நாளும் குறைவில்லாப் பாக்கியம் உண்டாகும். இரண்டு மிகுந்தால், பூனை யோனி. அதற்குக் கலகம். மூன்று மிகுந்தால்-சிம்மயோனி. ஜெயம் பொருந்தும். நான்கு மிகுந்தால்-சுவானயோனி. எந்நாளும் பிணியாயிருக்கும். (சி. நூ. பா. : 26)*

காட்டிய ஐந்தினிற் சர்ப்பம் கனதனம்
பூட்டிய வாறெலி பொருளும் போக்குமே
கூட்டிய ஏழ்கசங் குலவும் நற்சுகம்
நீட்டிய முயலுமே எட்டில் நிஷ்ப்பலம். 681

*(இ. ள்) ஐந்துக்குச் சர்ப்பயோனி, கனம் பொருந்திய தனம் பெருகும். ஆறு வருமாகில்-எலி. எல்லாப் பொருளுமற்று நிர்ப்பாக்கியமாகும். ஏழு வருமாகில் - கெசயோனி. அந்தக் குடும்பம் சுபிட்சமாயிருக்கும். எட்டு வருமாகில்-முயல் யோனி. அதற்கு ஒன்றுமில்லாமல் நிர்ப்பாக்கியமாகிவிடும். (சி. நூ. பா. : 27)*

## யோனிப்பொருத்தம்
## (வேறு)

பார்க்கும் கிழக்கு கொடியாகும்
பகரும் தென்கீழ்ப் புகையதுவாம்
சேர்க்கும் தெற்குச் சிங்கமதாம்
தென்மேல் மூலை நாயாகும்
மேற்கு ரிஷபம் வடமேற்கு
மிக்க கழுதை வடக்கரணை
ஏற்கும் வடகீழ்க் காகமிதே
எட்டு யோனி வரும்வாறே. 682

*(886 a : 52)*

*(இ. ள்)* கிழக்கு-கருடன்; தென்கிழக்கு - பூனை
தெற்கு - சிங்கம்; தென்மேற்கு - நாய்
மேற்கு - எருது; வடமேற்கு - கழுதை
வடக்கு - அரணை; வடகிழக்கு - காகம்

என்று எட்டு யோனிகளைப் பற்றிக் கூறுவோரும் உண்டு.

## யோனிப்பொருத்தம்

கொடியே யாகில் திருவாகும்
கலையே காட்டும் புகையாகில்
நெடிய சிங்கம் வெற்றியதாம்
நிகழும் நாயே குற்றமதாம்
இடப மாகில் மிகநன்றாம்
எண்ணும் கழுதை நோயாகும்
கடகம் யானை நலமுண்டாம்
காகம் பொல்லா தெனவுரையே ! 683

*(886 a : 83)*

*(இ. ள்)* கருடப் பிறப்பாகில், அளவற்ற செல்வம் உண்டாகும்; பூனைப்பிறப்பாகில், கலகம் விளையும்; சிங்கப்

பிறப்பாகில், வெற்றி உண்டாகும்; நாய்ப் பிறப்பாகில், உறவினர் பகை உண்டாகும்; எருதுப் பிறப்பாகில், நன்மைகள் உண்டாகும்; கழுதைப் பிறப்பாகில் நோய் உண்டாகும். யனை பிறப்பாகில் நன்மைகள் பெருகும்; காகப் பிறப்பாகில் தீமை விளையும்.

## யோனிப்பொருத்தம்

யோனியது எட்டதற்கே பலனே சொல்வேன்
உகந்தஒன்றுக் கேகெருடன் உத்த மந்தான்
தான்ரெண்டுக் கேதூமம் கலகமூன் றதற்கு
சிங்கம்செ யம்நான்கு சுவாணம் ரோகம்
தேனுகந்த ஐந்திற்கே ரிஷபம் பொன்னும்
திகழாறு கழுதைதனம் நாசம் ஏழு
காணசெயம் எட்டுக்கே காக மாகும்
அதுவெனவும் நிஷ்பலனாய் அறைந்த வாறே.684

*(742 : 113)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்தகுழித்தொகையை மூன்றில் பெருக்கி, எட்டில் வகுக்க வரும் மீதியாகிய யோனியில், ஒன்று மீதியாக வந்தால், கருடப்பிறப்பு. இதன் பலன் மிகுந்த செல்வம் உண்டாகும்; மீதியாக இரண்டு வந்தால் பூனைப் பிறப்பு. இதன் பலன் கலகம் உண்டாகும்; மீதி மூன்று வந்தால், சிங்கப்பிறப்பு. இதன் பலன் வெற்றி கிட்டும்; நான்கு மீதியாக வந்தால் நாய்ப் பிறப்பு. இதன் பலன் நோய் உண்டாகும்; ஐந்து மீதியாக வந்தால், எருதுப் பிறப்பு. இதன் பலன் பொன் கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், கழுதைப் பிறப்பு; இதன் பலன் பொருளுக்கு அழிவு உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால் வெற்றி கிடைக்கும். மீதியாக எட்டு வந்தால் காகப் பிறப்பு. இதன் பலன் நோயும் வருத்தமும் உண்டாகும்.

குறிப்பு: மீதி வரவில்லையென்றால், எட்டு எனக் கணக்கில் கொண்டு கணக்கிட வேண்டும்.

## யோனிப்பொருத்தம்

ஆகக் கிழக்கு முதலெட்டும்
    பருந்து பூனை அரிசுணங்கன்
நாகம் கரிப்பை கரிமுயலாம்
    யோனி நால்வாய் எண்டிசைக்கும்
மேகம் தரக்கரம் ஊண் சத்தி
    விளைவோ டரசு மிகமகிழ்
சோகம் சுகத்தோ டொன்பதுவும்
    சொல்லா எட்டே ஆறென்றே. 685

*(886 a : 51)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை மூன்றால் பெருக்கி, எட்டால் வகுக்க, மீதி யோனியாகும். மீதி ஒன்றானால் கிழக்குத் திசை-பருந்துப் பிறப்பாகும்; இரண்டு மீதியாக வந்தால், தென்கிழக்குத் திசை பூனைப் பிறப்பாகும்; மூன்று மீதியாக வந்தால், தெற்குத் திசை-சிங்கப் பிறப்பாகும்; நான்கு மீதியாக வந்தால், தென்மேற்குத்திசை நாய்ப்பிறப்பாகும்; ஐந்து மீதியாக வந்தால், மேற்குத்திசை பாம்புப் பிறப்பாகும்; ஆறு மீதியாக வந்தால், வடமேற்குத்திசை- எலிப்பிறப்பாகும்; ஏழு மீதியாக வந்தால் வடக்குத்திசை-யானைப்பிறப்பாகும். எட்டு மீதியாக வந்தால் வடகிழக்குத் திசை முயல் பிறப்பாகும்.

குறிப்பு: மீதி இல்லையென்றால் எட்டு எனக்கொண்டு கணக்கிட வேண்டும்.

## யோனிப் பொருத்தம்-பருந்து

யோனி பருந்து உதிக்கவே நன்மை
    உள்ளதுக் குள்ளவே உறுதி
மானிடர் தனக்கு மாகு கள்ளரும்
    மைந்தர்கள் மூன்றுடன் இரண்டாம்

சோனிக மாக்கும் பூமிவெள் ளாமை
சிறப்புடன் விளைவுநன் றெனவே
பூதனில் புகழும் பொருளில்லை என்றே
உரைத்தனர் வாக்குச்செந் தமிழோர். 686

*(796 a : 8)*

*(இ. ள்)* பருந்து யோனி உதிக்க நன்மையாகும். உள்ளத்தில் உறுதி உண்டாகும்; கள்ளரால் துன்பம் உண்டாகும். ஐந்து புதல்வர் புதல்வியர் தோன்றுவர். பயிர்த்தொழில் சிறந்து விளைவு பெருகும். இல்லாத சிறந்த பொருள் உலகில் இல்லை என்று சொல்லும் வகையில் செல்வம் மிகும்.

### யோனிப்பொருத்தம்-பூனை

பூத லத்தில் பூனை யோனி
புனித மாக வருகினும்
வாது சூத வழக்குண் டாகி
வந்த பொருட்கள் நாசமாம்
சேதம் சேதம் மாடு கன்று
புத்தி ராளும் புத்திரி
நாதம் இல்லை இல்லை என்று
நாத னார்வு ரைத்தனர். 687

*(796 : 13)*

*(இ. ள்)* பூனை யோனி எனப்படும் பூனைப் பிறப்பு புனிதம் என்று சொல்லப்பட்டாலும், வீண் வாதங்கள், சூழ்ச்சிகள், வழக்குகள் உண்டாகி, மிகுந்த துன்பமுடன் பொருள் வீணாகும்; மாடு கன்றுகள் அழிந்து போகும். புத்திரர்களும் புத்திரிகளும் மரணமடைவார்கள்.

**யோனிப் பொருத்தம்-சிங்கம்**

சிங்கமே சிறப்பு தனக்கும் வலிக்கும்
செங்கதிர்க் குடையவன் அதிபன்
பொங்குமே செல்வம் பூமிதான் ஆளுவான்
புத்திரர் அஞ்சுடன் மூன்றும்
தங்கமா மயமாய் கேள்கலி ராசன்
தனமுடன் விளைவுமுள் ளவனாய்
லிங்கர அவதா ரெனஉயை அரியால்
உரைத்தனர் வாக்குச்செந் தமிழோர். 688

*(796 : 12)*

*(இ. ள்)* சிங்கப் பிறப்பு சிறப்பு மிக்கதாகும். உள்ளத்திலும் உடலிலும் வலிமையுண்டாகும். செங்கதிரவனைப் போன்று அதிகப் புகழுடன் விளங்குவான். புத்திரர் ஐவரும் புத்திரி மூவரும் இருப்பர். பொன் மிகுதியும் பெற்றவனாக அவதாரப் புருஷனாக விளங்குவான் என்று செந்தமிழ் வல்லோர் உரைத்துள்ளார்கள்.

**யோனிப் பொருத்தம் - நாய்**

சுணங்க னென்ற யோனி யாலே
சுத்தி அலைய வைக்குமே
இணக்க மில்லை வணக்க மில்லை
எல்லோர் சொல்லைக் கேட்பவன்
பிணக்கு மில்லை பூமி இல்லை
மாடு கன்றில் லாதவன்
தனக்குத் தானே தலைவ னாவான்
என்று ரைத்தார் வல்லவர். 689

*(796 : 14)*

*(இ. ள்)* நாய் யோனியாக இருந்தால் மிகுந்த அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு ஒத்துப் போகமாட்டான்; பிறரால் மதிக்கப்பட மாட்டான்; எல்லோருடைய சொல்லையும்

கேட்கும் சொந்த புத்தி இல்லாதவன்; சொந்தமாகப் பூமி இல்லாதவன்; பிறரோடு சண்டை யில்லாதவன்; மாடு, கன்று போன்ற எந்த செல்வமும் இல்லாதவன்; தனக்குத் தானே தலைவனாகக் கருதும் தன்மையுடையவனாக விளங்குவான் என்று வல்லோர் உரைத்துள்ளனர்.

### யோனிப் பொருத்தம் - நாகம்

நாகமே நன்று நற்குணம் உள்ளோன்
நல்லஊண் தாரமி ரண்டோன்
யோகத் துடையோன் வாணிபம் பூமி
உள்ளமட்டும் உள்ளத்தில் நன்று
தீரகநோய் இல்லான் பெருமைகள் படைப்பான்
சென்றிடம் செல்வனாய் இருப்பான்
ஊகத்தில் சுனங்கன் உள்ளவர்க் கறிய
உரைத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 690
*(796 : 10)*

*(இ. ள்)* நாக யோனி எனப்படும் பாம்பு யோனி இருப்பின் நன்மையாகும். நல்ல குணம் உடையவனாக இருப்பான்; நல்ல உணவை உண்ணுபவன்; இரண்டு மனைவியரைக் கொண்டவன்; யோகம் மிக்கவன்; நல்ல வாணிபம் உடையவன்; பூமிக்குச் சொந்தக்காரன்; உள்ளத்தில் உயர்ந்தவன்; நோய் இல்லாதவன்; பெருமைகள் உடையவனாக விளங்குபன்; எங்குச் சென்றாலும் செல்வத்துடன் விளங்குவான் என்று உலகத்தோர் அனைவரும் அறியும் பொருட்டு வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

### யோனிப்பொருத்தம் - எலி

வாலு யோனி வந்து திக்க
வந்து நின்றி டத்திலே
காலுங் கையும் கட்டுப் பட்டு
கால்வி விலங்கு வந்திடும்

நாலு மூலை திரிந்து கெட்டு
நலியும் பிள்ளை பெண்டுகள்
பாலு பாழு பரம னாணை
என்று ரைத்தார் வல்லவர். 691
*(796 : 15)*

*(இ. ள்)* எலி யோனியாக இருந்தால் தீமையாகும். விலங்கு பூண நேரிடும். எந்நாளும் அலைந்து திரிந்து வாழ்வான். இவனுடைய மனைவியும் பிள்ளைகளும் வாடுவார்கள். இது நிச்சயம் என்று வல்லர்கள் வகுத்துள்ளார்கள்.

### யோனிப் பொருத்தம் - யானை

கரிமுகன் உதிக்க திருமிகு உண்டு
கைலாசம் போலிருந்து வாழ்வான்
சரிவர சகலமும் படைத்திட அறிவார்
சஞ்சரிப் பார்தனக்கு இயமன்
பரவர வானோரின் பத்தமிழுக் கிசைந்தோன்
பராக்கிரம னாகவே இருப்பான்
அருணனைப் பணிந்தோன் என்றிட
அறைந்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 692
*(796 : 11)*

*(இ. ள்)* யானை யோனி உதிக்க, செல்வம் மிகவும் சேரும். சிறந்து வாழ்வான். எதையும் சாதிக்க வல்லவன்; தீயவர்களுக்கு எமனாக விளங்கக் கூடியவன்; தமிழில் விருப்பம் உடையவன்; தைரியமும் வீரமும் உடையவனாக இருப்பான். சூரியனை வழிபடுபவன் என்று செந்தமிழில் வல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

### யோனிப்பொருத்தம் - முயல்

அபய னென்ற முயலை யோனி
அம்பனை தன்னில்உ தித்திடுமே
தைய லென்ற பெண்களுக் காகத்
தரித்தி ரத்தைக் காட்டிடுமே

கைகள் மெய்கள் நோய்கள் என்றே
தளுக்கு மெக்கும் இசைதருமே
வைய கத்தில் உடலே வற்றும்
வகுத்து ரைத்தார் வல்லவரே. 693

*(8796 : 16)*

*(இ. ள்)* முயல் யோனி உதிக்க, பெண்களுக்கு மிகுந்த தீமையை விளைவிக்கும். அவர்களுக்கு வறுமையை உண்டாக்கும்; கைகளிலும் உடலிலும் நோய்கள் தோன்றி வருத்தும்; உடல் வற்றிப்போகும் என்று வல்லவர்கள் வகுத்துரைத்துள்ளார்கள்.

**யோனிப்பொருத்தம் - நற்பலன்**

பாரினில் பருந்து அரிகரி நாகம்
பாங்குடன் இவ்வகை யோனி
காரினில் மனைக்கு வந்திட வேணிட
கலியுக சனங்களுக் கெல்லாம்
மாரியும் மணங்கள் கல்வியும் பொருள்கள்
மாடுகள் கன்றுமே வளரும்
நாரிகள் புத்திரர் வாழ்குவர் என்றே
வகுத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 694

*(796 : 12)*

*(இ. ள்)* உலகத்தில் மனையில் பருந்து, சிங்கம், யானை, பாம்பு முதலான யோனிகள் வந்தால், கலியுக காலத்தில் வாழும் மக்களுக்கெல்லாம் நல்லமுறையில் திருமணங்கள் நடைபெறும்; நாட்டில் மழை பொழியும். கல்வி கற்றுத் தேர்வர்; பொருள்கள் சேரும். மாடுகள் கன்றுகள் பெருகும். பெண்கள், புதல்வர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வளமாக வாழ்வார்கள் என்று செந்தமிழ் நூல் கற்றுத் தேர்ந்த வல்லவர்கள் உரைத்துள்ளார்கள்.

### யோனிப்பொருத்தம் - தீயபலன்

குப்பை பூனை முயல்சு ணங்கன்
கூட்டி மனையில் வந்திடில்
சப்பைச் சன்னி நோய்கள் அறியும்
சகல பலங்கள் குறைந்திடும்
அப்பை புத்தி இல்லை இல்லை
அழகைப் போக்கி அழிக்குமே
உப்பை என்ற வைப்பும் இல்லை
என்று வகுத்தனர் தமிழோரே. 695

*(736 : 17)*

*(இ. ள்)* மனையில் பூனை, முயல், நாய் முதலான யோனிகள் அமையுமானால், சன்னி நோய்கள் தோன்றும்; பலம் குறைந்து போகும்; அறிவுத்திறன் குறைந்து போகும்; அழகு மாறும்; செல்வம் கையைவிட்டுப் போய்விடும் என்று தமிழோர் வகுத்துள்ளார்கள்.

### யோனிப் பொருத்தம் - பலன்கள்

மன்னே பருந்து அரிநாகம்
யானை நன்று மன்யோனி
என்னே பூனை சுணங்கனுடன்
இயலும் கரிப்பை முயலாகா
நன்னே ராசன் நச்சரவு
சாரு மாட்சி மிகநன்று
பொன்னே வாழ்நாள் அன்பதினுள்
வாழ்நாள் குறைதல் மனைக்காகா. 696

*(886 a : 354)*

*(இ. ள்)* பருந்து, சிங்கம், பாம்பு, யானை ஆகிய நான்கு யோனிகள் இருப்பின் நன்று. பூனை, நாய், எலி, முயல் ஆகியவை தீமையை விளைவிப்பன. நல்ல யோனிகள் நான்கினுள் சிங்க, பாம்பு யோனிகள் மிகவும் நன்மையைப்

*பயப்பன; மனைப் பொருத்தங்களில் வயதைக் கணக்கிடும் பொழுது, வயதானது ஐம்பதிற்கும் குறைவாக இருப்பின், மனைக்கு ஆகாது.*

## பொது
## பொருத்தம்-யோனி

தோன்றிய கெஜத்தா னத்தினிற் துஜமேற்
துலங்குநித் தியகல் யாணம்
ஆன்றவர் மகிழ்திகழ் கெஜத்தா னத்தவர்
அரியி டபம்நின் றிடிலோ
ஏன்றபுத் திரர்கள் மரணமாம் முன்னம்
இயம்பிய பூசையொடு சுணங்கன்
சான்றவர் இகழும் கர்த்தபம் காகம்
தான்வரிற் பற்பல துயரே. 697

*(886 b : 6)*

*(இ. ள்) யானை இடத்தினில் பருந்து இருப்பின், தினமும் சுகநிகழ்ச்சிகள் நடக்கும்; யானை, சிம்மம், இடபம் ஆகிய இடங்களில் நிற்க, புத்திரர்களுக்கு மரணம் நிகழும்; பூனை, நாய் இவைகள் இருக்க, இகழ்ச்சி உண்டாகும். கழுதை, காகம் இவைகள் இருக்க, பற்பல துயரங்கள் வந்து சேரும்.*

விருத்தியாம் சிம்மத் தலத்தினில் இடபம்
மிளிர்தரு மதகயம் நின்றால்
தரித்திர மோடு பல்லிபத்து முண்டாம்
சாற்றிய இடபதா னத்திற்
பெருத்திடு யானை துஜமுறிற் றனமும்
பெற்றகரு மகவுமுண் டாகும்
அருந்திகோ ளிடபத் தரியுடன் மகவோ
டரும்பொருள் நாசமாம் மாதோ ! 698

*(886 b : 10)*

*(இ. ள்) சிம்மத்தில் இடபம் இருப்பின், நன்மை மிகும். யானை நின்றால், வறுமை உண்டாகும். எருதுவிடத்தில் யானை நின்று அது பருந்திடமாகில் புத்திரபேறு உண்டாகும். எருதுவிடத்தில் சிங்கம் இருப்பின், சேர்த்து வைத்த பொருளுக்கு அழிவு உண்டாகும்.*

புகழ்கிழக் காதி யோனிகள் எட்டும்
பொருந்தியே பிர்மதா னத்தை
மகிழ்வுடன் நோக்கும் தத்தம திடத்தில்
வந்திடில் அழகுறு சுபமாம்
பகர்துஜத் தானத் தானத்தரி கெஜமி
பரிந்துரிற் சுபமரித் தானத்
தகமகிழ் துஜமேற் தானியம் தனமும்
ஆயுளும் விருத்திய தாமே. 699

*(886 b : 9)*

*(இ. ள்) கிழக்கு முதலாக யோனிகள் எட்டும் தங்களது இடங்களில் இருந்து பிரமதானத்தைப் பார்க்கினும் தத்தமது இடத்தில் வந்திருப்பினும் நன்மையாகும். பருந்திடத்தில் சிங்கம், யானை எருது இவை இருப்பினும், சிம்மத்திடத்தில் பருந்து இருப்பினும் தனமும் தானியமும் பெருகும். ஆயுள் விருத்தியாகும்.*

**இராசி**

ஆய்ந்ததோர் ஏழ்பனி ரெண்டில்
ஆகிய இராசி யாகும்
வாய்ந்தபின் பெருக்கிப் பின்னும்
வருவதுக் கீய்ந்த சேடம்
மீந்தது பலன தாகும்
விரும்புவ தறிந்தோர் மெய்யில்
தோய்ந்தவேல் விழியி னாளே !
வயதுதான் செல்ல லுற்றேன். 700

*(886 a : 49)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கிப் பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி **இராசியாகும்.** உண்மையான பலனை அறிய விரும்புவோர் இந்த மீதியைக் கொண்டு அறிவார்கள் என்பதை, வேல் போன்ற விழிகளை யுடைய பெண்ணே! கேட்பாயாக.

### இராசிப்பொருத்தம்

இராசியின் பலனை நவிலுவேன் மேடம்
நன்மைதான் இடமுடன் தன்மம்
தேசுயர் ரிஷபம் சம்பத்து மிதுனம்
தீதெனும் கடகமும் விருத்தி
மூசுசிங் கமுமே ஸ்ரீபலன் கன்னி
மூறிய தரித்திரம் துலாமும்
வாசமாம் பலனும் விருச்சிகம் பலனும்
மத்திமம் இதுவென வகுத்தே. 701

*(742 : 121)*

*(இ. ள்)* மனையின் நீல அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை ஏழில் பெருக்கிப் பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதிக்கு **இராசி** என்று பெயர். மீதியாக ஒன்று வந்தால், **மேட இராசி**. இதன் பலன் தர்மம் செய்தல் உண்டாம்; மீதியாக இரண்டு வந்தால், **இடப இராசி**. இதன் பலன் செல்வம் வந்து சேரும்; மீதியாக மூன்று வந்தால், **மிதுன இராசி**; இதன் பலன் துன்பத்தைக் கொடுக்கும்; மீதியாக நான்கு வந்தால், **கடக இராசி**. இதன் பலன் செல்வம் பெருகும்; மீதியாக ஐந்து வந்தால், **சிம்ம இராசி**. இதன் பலன் செல்வம் கிடைக்கும்; மீதியாக ஆறு வந்தால், **கன்னி இராசி.** இதன் பலன் வறுமை உண்டாகும்; மீதியாக ஏழு வந்தால், **துலாம் இராசி**. இதற்கு நன்மையான பலன்கள் கிடைக்கும்; மீதியாக எட்டு வந்தால், **விருச்சிக இராசி**; இதற்குச் சுமாரான பலன்கள் நடக்கும்.

## இதுவுமது

தனுசுமே செயமாம் மகரமும் பேறு
தக்கதோர் கூட்டமாய்ச் சாத்து
வினவிய கும்பம் உத்தம பலனும்
மீனமே புத்திரவி னாசம்
நினவுள இராசி பலனுள்ள படியே
நிகழ்த்தியே தமிழறிந் தோரும்
மனுவெனும் பின்னோன் மயனுரை இதுவாய்
வகுத்தது அறிவறி வாரே. 702
*(742 : 122)*

*(இ. ள்) மீதியாக ஒன்பது வந்தால்* **தனுசு இராசி.** *இதன் பலன் வெற்றியாகும்; மீதியாகப் பத்து வந்தால்,* **மகர இராசி.** *இதன் பலன் புத்திரபேறு கிடைக்கும்; மீதியாகப் பதினொன்று வந்தால்,* **கும்ப இராசி.** *இதன் பலன் மிகுந்த நன்மையாகும். மீதியாகப் பன்னிரண்டு வந்தால்,* **மீன இராசி.** *இதன் பலன் புத்திரர்களுக்கு அழிவு உண்டாகும்.*

குறிப்பு: *மீதி வரவில்லையென்றால், மீதி பன்னிரண்டு எனக் கொண்டு கணக்கிட வேண்டும்.*

## இதுவுமது

நாட்டிய ஆயத்தை நாலில் ஏற்றியே
ஈட்டிமுன் னான்கினுக் கீய நின்றது
கூட்டிய தொன்றதேல் குலவு மேஷமாம்
மீட்டிய இரண்டினில் ரிஷப மாகுமே. 703

*(இ. ள்) ஆயத்தை நாலிற் பெருக்கிப் பன்னிரண்டிற் கழிக்க, அதற்குள்ளாக வந்த சேடம் ஒன்றுக்கு-மேஷம். அதனால் குடும்ப விருத்தியாம். இரண்டிற்கு-ரிஷபம், அதனால் சகலரும் மதிக்கத்தக்க பெருமை யுண்டாகும். (சி. நூ. பா. : 44)*

### இதுவுமது

மதித்தமூன் றதில்நிதி மன்றும் நண்டெனிற்
கதித்தநற் செயமரி வசியம் காட்டுமே
துதித்தபெண் ஞானமாம் துலாமும் யோகமாம்
பதித்ததேள் நலம்தரும் பலவும் நன்மையே. 704

*(இ. ள்)* மூன்றுக்கு-மிதுனம். அதனால் தனமுண்டாம். நாலுக்குக் கடகம். அதனால் ஜெபமுண்டாம். ஐந்துக்குச் சிங்கம். அதனால் வசீகரமுண்டாம். ஆறுக்குக் கன்னி, அதனால் ஞானம் பொருத்தும். ஏழுக்குத் துலாம் அதனால் போக பாக்கியம் உண்டாம். எட்டுக்கு-விருச்சிகம் அதனால் சகலமும் நன்மையாய் நடக்கும். ஒன்பதுக்குத்-தனுசு. அதனால் சுபகரமுண்டாம். *(சி. நூ. பா. : 45)*

### இதுவுமது

நன்மையே மகரம்எந் நாளும் நல்குமே
துன்மையே கும்பமும் தினமும் கூட்டுமே
வன்மையி லாதமீன் வளமை யீயுமென்
தன்மைசேர் மயனிவை சாற்றி னானரோ. 705

*(இ. ள்)* பத்துக்கு-மகரம், அதனால் நாளுக்கு நாள் நன்மையான பயனுண்டாம். பதினொன்றுக்குக்-கும்பம். அதனால் எந்நாளும் துன்பமுண்டாம். பன்னிரண்டிற்கு மீனம், அதனால் சுகமுண்டாமென்று மயனானவர் சொன்னார். *(சி. நூ. பா. : 46)*

### இதுவுமது

அண்ணிய முழத்தை ஏழினிற் பெருக்கி
அதைப்பனி ரெண்டினிற் கழித்து
நண்ணிய சேடம் தன்னையா டாதி
ராசியாக் கொள்ளுக இடபம்

புண்ணிய விருத்தி கடகநற் கன்னி
பூரண ஆயுளுண் டாகும்
திண்ணிய சீயம் துலைகுடம் தனுசும்
செல்வமுண் டாகிடும் இனிதே. 706

*(886 b : 17)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஏழால் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி இராசி எனப்படும். மேடத்தை முதலாகக் கொண்டு இதனைக் கணக்கிட வேண்டும். இரண்டு (இடபம்) மீதியாக வந்தால், புண்ணியம் பெருகும்; நான்கு (கடகம்), ஆறு (கன்னி) ஆகியவை மீதி எண்களாக வந்தால், பூரண ஆயுள் உண்டாகும். ஐந்து (சிம்மம்), ஏழு (துலாம்), பதினொன்று (கும்பம்), ஒன்பது (தனுசு) ஆகியவை மீதி எண்களாக வந்தால், செல்வம் உண்டாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி பன்னிரண்டு என்றுகொண்டு, பலன் காண வேண்டும்.

## இதுவுமது

இனியவாம் கர்ம புத்திர விருத்தி
இயம்புமீன் மிதுனமத் திமமாம்
தனியுறு மேடம் பிணிபல உண்டாம்
சொல்லிய விருச்சிகம் சிலுகாம்
நனிவரு முழத்தை நான்கினிற் பெருக்கி
நவில்பனி ரெண்டினிற் கழித்தே
குனிதரு சேடம் தனையும்ரா சியெனக்
கொள்ளவும் சிலலரை குவரே. 707

*(886 b : 18)*

*(இ. ள்)* மேலும், இனிய கர்மங்களும் புத்திர விருத்தியும் உண்டாகும். பன்னிரண்டு (மீனம்), மூன்று

(மிதுனம்) ஆகியவை மீதி எண்களாக வந்தால் சுமாரான பலன்கள் கிடைக்கும். ஒன்று (மேடம்), மீதியாக வந்தால், நோய்கள் உண்டாகும். எட்டு (விருச்சிகம்) மீதியாக வந்தால், துன்பம் மிகும். மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை நான்கில் பெருக்கி, பன்னிரண்டில் வகுக்கக் கிடைக்கும் மீதி இராசி என்று சிலர் கூறுவார்கள்.

## இராசி பொருத்தம்-பொது

சாற்றிய உதய இராசி
தன்னைநீ பரிந்து காணில்
போற்றிய மகரம் தீதாம்
புகழ்தரு மத்த தெல்லாம்
மாற்றிடும் மகரம் தன்னில்
மனையினாள் உத்த தாகில்
மாற்றிடும் மனைதான் ஒன்றென்
டறிந்தனர் இராசி நூலே. 708

(886 a : 59)

*(இ. ள்) மனையின் நீள அகலங்களைச் சரியாக அளந்து, பெருக்கி வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்க, மீதி வரும் எண் இராசியாகும்.* இந்த மீதியாக வரும் ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான எண்கள் முறையே மேஷம் முதல் மீனம் வரை குறிப்பனவாகும். இவற்றுள், மீதியாகப் பத்து வந்தால் வரக்கூடிய மகர இராசி தீமையைச் செய்யக் கூடியது. மற்ற அனைத்து இராசிகளும் நன்மையைச் செய்யக் கூடியவை. மகர இராசியில் மனைகோல, மனைக்கு உரியவன் அவ்விடத்தை விட்டு நீங்குவான்.

## இராசிப்பொருத்தம் - பொது

அகசெனனம் மூன்றும் அஞ்சும்
அரசுறு ஏழும் இன்னும்
பகருமொன் பானும் பத்தும்
பதினொான்றும் நன்மை யாகும்

இகழ்தரும் இரண்டும் நான்கும்
எட்டுடன் ஈராறும் ஆறும்
புகழுறு இராசி தன்னிற்
பொருத்தங்கள் உரைத்த காலே. 709

(இ. ள்) மனையின் குழித்தொகையை நான்கால் பெருக்கி, பன்னிரண்டால் வகுக்க மீதியாக வருவது இராசி யாகும். இவற்றுள் உதயமாகிய ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய இராசிகள் நன்மையைத் தருவனவாகும். இரண்டு, நான்கு, எட்டு, பன்னிரண்டு, ஆறு ஆகிய இராசிகள் வந்தால் இகழ்ச்சியைத் தரும்.

குறிப்பு: மீதி இல்லையானால் மீதி பன்னிரண்டு எனக்கொண்டு, கணக்கிட வேண்டும்.

## அம்சப் பொருத்தம்

அங்கிசப் பலனை அறைகுவேன் ஒன்பது
காண்தஸ்கர அம்சமே நாசம்
தங்குரெண் டதற்கே புத்தியும் தனமாம்
சேர்த்தி மூன்றுயிச் சத்தி
பொங்கிய சுகமாம் நான்குக்குத் தன்னியன்
பொருந்திய தனமுமாம் சுகமாம்
ஆங்கமா கியதோர் நரபதி வயது
அதுவுமே விருத்தியென் றறையே. 710

*(742 : 119)*

(இ. ள்) மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கி ஒன்பதால் வகுக்க வரும் மீதி **அம்சம்** எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **தஸ்கர அம்சமாகும்**. இதன் பலன் அழிவு ஏற்படும்; மீதியாக இரண்டு வந்தால், **புத்தி அம்சமாகும்**. இதன் பலன் செல்வம் சேரும்; மீதியாக மூன்று வந்தால், **சத்தி அம்சமாகும்**; இதன் பலன் சுகமாகும்; மீதியாக நான்கு வந்தால், **தான்யாம்சமாகும்**. இதன் பலன் செல்வமும் சுகமும்

பெருகும்; மீதியாக ஐந்து வந்தால், **நரபதி அம்சமாகும்.** இதன் பலன் மனைக்கு உரியவனுக்குத் தீர்க்காயுள் உண்டாகும்.

### வேறு

அறைதரு முழத்தை நான்கினில் பெருக்கி
ஆவிரு ஒன்பதில் அறிந்தே
உறைதரு சேடம் அம்சம தாகும்
ஒன்றுதஸ்க ரம்சம் தீதாம்
முறைவரும் இரண்டு புத்திநல் லறிவர்
மூன்றெனில் சத்திநன் றாகும்
தரைபுகழ் நான்கு தானிய மாகும்
சாற்றரும் நன்மைய தாமே. 711

*(886 a : 19)*

### இதுவுமது

ஆறுக்குக் கிலீபன் கலகமாம் ஏழுக்
கருளிய நிர்ப்பீதி சுகமழிவு
மூறியஎட் டதற்கு நிதனனு மாகும்
திருவே திருமெனும் வாசி
ஏறிய ஒன்பது அதற்குபி ரோசிகன்
எனும்புத்ர விருத்தியு மாகும்
ஊறுமங் கிசத்தின் பலனிது வென்றே
உண்மையாம் மயனுரைத் தனவே. 712

*(742 : 120)*

*(இ. ள்)* ஆறு மீதியாக வந்தால், **கிலீபாம்சம்.** இதன் பலன் கலகமாகும்; மீதியாக ஏழு வந்தால் **நிர்ப்பீதி அம்சம்.** இதன் பலன் சுகம் உண்டாகும்; மீதியாக எட்டு வந்தால் **நிதனனாம்சம்.** இதன் பலன் செல்வம் அழியும்; மீதியாக ஒன்பது வந்தால், **பிரோசிகாம்சம்.** இதன் பலன் புத்திரர்கள் தோன்றுவர். இந்த ஒன்பது அம்சங்களுக்கும் மயன் உரைத்த பலன் இது உண்மையாகும்.

## வேறு

சாற்றுமோ ரைந்து நரபதி விஜயம்
தருமிகு மூன்றெனில் கிலீபம்
தூற்றுறு கலக மாகுமே ழென்னிற்
சொல்லுக நிற்சுக மாகும்
மாற்றிடும் இருநான் குற்றிடில் நிதனம்
வறுமையுண் டாக்கிடும் இதன்மேல்
போற்றிய ஒன்பான் பிரசைமற் றதற்கு
புத்தியுடன் நன்மையுண் டாமே. 713

*(886b : 20)*

## இதுவுமது

புத்தி யம்ச மாகி வந்திட
பொன்னும் பொருளும் சேருமே
வித்தை புத்தியும் நித்தம் தருமோர்
வேள்வி தவசுகள் முடியுமோ
சித்தி தந்திடும் தெய்வ காரியம்
சனங்கள் வணங்கவே இசைதரும்
எத்திசை வருதிசை அத்திசை யோகமும்
உண்மை யாக உரைத்தனரே. 714

*(796 : 17)*

*(இ. ள்)* புத்தியம்சம் வருமானால் பொன்னும் பொருளும் மிகுதியாகச் சேர்ந்திடும். அறிவு வளரும்; தினமும் வேள்வி, தவம் முதலானவற்றை மேற்கொள்வர். அனைத்திலும் வெற்றி கிட்டும்; தெய்வ காரியங்களைச் செய்வர். அனைவரும் வணங்கும் பேறு பெறுவர். புகழ் உண்டாகும். அனைத்து யோகங்களும் கிட்டும் என்று உரைத்துள்ளார்.

## இதுவுமது

தானிய சத்தி அம்சம் வந்திடில்
தரணிலோ கத்தை யாள்வான்
மானியம் பூமி உண்டாகி வாழ்வோன்
மைந்தரும் வாழ்க்கையும் உள்ளவன்
சானிய காலாளும் ஆடுகள் மாடுகள்
சகல சித்தியுண் டாவான்
ஞானிய தருமவான் உதவி உள்ளவன்
என்று உரைத்தனர் தமிழோர். 715

***(796 : 18)***

*(இ. ள்) தானிய சத்தி அம்சம் வருமானால், அம்மனைக்கு உரியவன் உலகை ஆளக்கூடியவனாக விளங்குவான். புதிதாக நாட்டை உருவாக்குவான்; நல்ல புத்திரர்களையும் நிறைந்த வாழ்க்கையையும் பெற்று விளங்குவான்; வேலையாட்களைக் கொண்டவன். ஆடு, மாடுகள் முதலான கால்நடைகளைக் கொண்டவன்; அனைத்திலும் வெற்றி பெறுபவன்; அறிவு மிக்கவன்; தருமம் செய்பவன்; கேட்டவர்க்கு உதவி செய்யும் நல்ல மனம் படைத்தவன் என்று தமிழ் கற்ற வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.*

## பொருத்தம் - அம்சம் - பலன்

சுகத்தில் ராச்சிய அங்கு சம்வரில்
சொற்கள் சொன்னதைத் தவறிடான்
யுகத்தில் நித்தமும் தானம் செய்குவான்
அன்னதா னமேயனு தினமும்
செகத்தில் உள்ள வர்தனை வணங்கிட
ஆட்சி அத்தத்தில் வாழுவான்
உலகத்தி லுள்ளவர் அறிய வேண்டிய
உண்மை யாகவே உரைத்தனர். 716

***(796 : 19)***

*(இ. ள்)* பிரோசிகாம்சம், நரபதி அம்சம் வருமானால், அம்மனையில் வாழ்பவன் சொன்ன சொற்களைத் தவறாதவனாக விளங்குவான். அன்னதானம் முதலாகிய பலதானங்களையும் தினமும் செய்வான். உலகோர் வணங்கிட ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, செல்வம் மிக்கவனாக விளங்குவான் என்று உலகோர் அறிவதற்காக உண்மையை உணர்ந்த பெரியோர் எடுத்துரைத்துள்ளனர்.

## இதுவுமது

கல்லா லசுரம் தானம்ச மாகில்
கல்லையா துயரத்தை அடைவான்
இல்லாள் மனையில் உள்ளவர்க் கெல்லாம்
ஈளைநோய் சுரம்வந்து தோனும்
மல்லால் மனையில் மனையிடி கருப்பு
மங்கைக்கு வாக்குப்பட் டிருப்பான்
வல்லால் பிளைப்புத் தனம்மட் டெனவே
வகுத்தனர் அவர்க்குச்செந் தமிழோர். 717
*(796 : 20)*

*(இ. ள்)* தஸ்கர அம்சம் வருமானால், அம்மனையில் வாழ்பவன் சொல்லமுடியாத துயரங்களை அடைவான். அம்மனையில் வாழ்வோருக்குச் சுரம், ஈளை நோய் போன்றவைகள் தோன்றும்; மனை இடியும்; தீமைகள் வந்து சேரும்; செல்வம் குறையும் என்று செந்தமிழில் வல்லவர்கள் எடுத்தோதியுள்ளார்கள்.

## இதுவுமது

இடித்து மனையம்ச மாகில் இடறு
தலையில் இடிவிழுந் தழுகல்
கடித்து விஷங்கள் இறந்தவும் தீரா
கஷ்டநோய் வினைகளால் இல்லை

மடிந்திட மாடு கன்றுகள் சனங்கள்
மக்களும் கூடியே மாயும்
வட்டிகடன் வாரா தென்றுமே அறிய
வகுத்தனர் செந்தமிழ் நூலோர். 718

***(796 : 21)***

*(இ. ள்) கிலீபாம்சம் வருமானால், மனைக்குரியவன் இடறி வீழ்வான்; தலையில் இடிவிழும், உஷ உயிரினம் கடித்து இறக்க நேரிடலாம்; தீராத கஷ்டங்கள் வந்து சேரும். மாடு, கன்றுகள், சுற்றத்தார், பிள்ளைகள் போன்றோருக்கு அழிவு நேரிடும்; வட்டிக்காகக் கொடுத்த பணமும், கடனாகக் கொடுத்த பணமும் திரும்ப கிடைக்காது என்று செந்தமிழ் வல்லவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.*

## இதுவுமது

தீதென அறியும் நோயங் கிசத்தை
தினம்தினம் மனையில்வந் துதிக்க
தாதுக ளுடைய தாய்தந்தை இறப்பு
தனக்கிடர் நோய்குறை வில்லை
காதுதான் செவிடு ஆக்கிடு மனையில்
கலகங்கள் கள்ளரால் பீடை
வாதுமே நடக்கும் என்றே அறிய
வகுத்தனர் செந்தமிழ் நூலோர். 719

***(796 : 22)***

*(இ. ள்) நிர்பீதியம்சம் வருமானால், மனைக்கு உரியவனின் தாய் தந்தையருக்கு மரணம் நேரிடும். மனைக்குரியவனுக்குத் துன்பம் மிகும்; நோய்கள் உண்டாகும்; காதுகள் செவிடாகும். கள்வரால் துன்பங்கள் ஏற்படும். வீட்டில் கலகங்கள் விளையும்; வீண்வாதங்கள் நடக்கும் என்று உலகத்தோர் அறிய செந்தமிழ் நூல் வல்லவர்கள் எடுத்துரைத்தார்கள்.*

## இதுவுமது

இடியும் நோய்கள் துக்கம் சுரமும்
இதுகள் மனைக்குத் தாக்கிடில்
அடிகள் தடிகள் வழக்கு நோய்கள்
அரண்ட சொப்பனம் காணும்
ஒடுங்கி நடுங்கி ஓடித் திரிவர்
உன்மத்தம் பிடித்த பேயனாம்
வடிவு குறையும் பூமியே போகும்
என்றே வகுத்து உரைத்தனர். 720

*(796 : 23)*

*(இ. ள்)* நிதனனாம்சம் வருமானால், துக்கம் உண்டாகும்; சுரம் முதலான நோய்கள் தோன்றும்; அடிதடிகள், வழக்குகள் உண்டாகும்; தீய கனவுகள் வந்து அலைக்கழிக்கும். மனைக்கு உரியவர் ஒடுங்கி, நடுங்கி, ஓடித் திரிவதோடு, உன்மத்தம் பிடித்தவர் போன்று இருப்பர்; அழகு குன்றும்; நிலம் கையைவிட்டுப் போகும் என்று வகுத்து உரைத்துள்ளார்கள்.

## இதுவுமது

திருட்டி யுள்ள புத்தி சத்தி
தானியம் ராச்சியம் சுகம்பதி
அஷ்ட லட்சுமி வந்து சேருவாள்
ஆயுசு வளர்ந்து வாழுமே
சிஷ்டருக் குதவி யாகு வானவன்
சேரும் பொருள்கள் மாடுகள்
இஷ்ட லட்சுமி குடியிருக் குமென்று
விரைந்து வகுத்தனர் தமிழோர். 721

*(796 : 24)*

*(இ. ள்)* புத்தியம்சம், சத்தியம்சம், தானியாம்சம், நரபதியம்சம், பிரஜாம்சம் என்று சொல்லப்படும் இந்த ஐந்து அம்சங்களும் வருமானால் நன்மைகள் பெருகும். அஷ்ட இலட்சிமிகளும் மனையில் விளங்குவர்; ஆயுள் வளரும்: பெரியோர்களுக்கு உதவுவான்; பொருள்கள் மேன்மேலும் வந்து சேரும்: செல்வங்கள் சேரும்; கால்நடைகள் பெருகும் என்று தமிழ் வல்ல பெரியோர்கள் வகுத்துரைத்துள்ளனர்.

**இதுவுமது**

தோகைசேர் குழலாய் ! அம்சம்
கூறிடில் ஒன்றும் ஆறும்
வாதைசேர் ஏழும் எட்டும்
வரும்பிணி மிகபொல் லாது
ஏதரு மத்த தெல்லாம்
இனியவை யாகும் என்க
போதுமே ஒத்தை யாகில்
புகழ்தரு மிகவும் நன்றே. 722

*(886 a : 60)*

*(இ. ள்)* மயில் தோகையைப் போன்று விரிந்து பரந்து கூந்தலை உடைய பெண்ணே! மனையின் நீள அகலங்களை அளந்து பெருக்கி வந்த குழித்தொகையை நான்கால் பெருக்கி, ஒன்பதால் வகுக்கக் கிடைக்கும் மீதி அம்சம் எனப்படும். மீதியாக ஒன்று, ஆறு, ஏழு, எட்டு முதலான எண்கள் வந்தால், அவை முறையே, தினகரனம்சம், சுக்கிரனாம்சம், சனியாம்சம், இராகு அம்சங்களாகும். இவை தீமையைத் தருவன. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஒன்பது முதலான எண்கள் மீதியாக வந்தால், அவை முறையே சோமனாம்சம், குஜனாம்சம், புதனாம்சம், குருவாம்சம், கேதுவாம்சம் ஆகும். இவை நன்மைகளைத் தருவன. அவற்றுள்ளும் ஒற்றைப்படை எண்கள் மீதியாக வந்தால், மிகுந்த நன்மைகள் உண்டாகும்.

### அம்சப்பொருத்தம் - வேறு

சொல்லிய மந்தனிற் சொரிகு ரோதமாம்
புல்லிய ஆயத்தைப் பொருந்தநா லிற்செய
துல்லிய நவத்தினிற் தொடர்ந்த காலரும்
நெல்லாங் கிஷமென நிகழ்த்து வார்களே. 723

*(இ. ள்)* ஏழுக்குச் சனிவாரம் நின்றால் அதனால் கலகமும் சோர பயமும் நடக்கும். ஆயத்தை நாலிற் பெருக்கி, ஒன்பதிற் கழிக்க, ஒன்பதுக்குள்ளாக வந்தது அம்சமாகும். *(சி. நூ. பா. : 36)*

நிகழ்த்திய தினகரன் நெற்பொ றாததாம்
புகழ்த்து சோமனும் போகம் குஜனுறில்
விகழ்த்துமா ரோக்கியம் வீசும் தானியம்
தொடுத்துலா பமெனச் சொல்லு வாரரோ. 724

*(இ. ள்)* ஒன்றுக்கு-தினகரனங்கிஷம். அதனால் எந்நாளும் நிலைபெறாது வாழ்வான்; இரண்டிற்கு-சோமனங்கிஷம். அதனால் போக பாக்கியத்தை அனுபவிப்பான்; மூன்றுக்கு- குஜனங்கிஷம். அதனால் ஆரோக்கிய வசியம். நான்குக்குப் புதனங்கிஷம். இலாபம் தொடர்ச்சியாய் இருக்கும். *(சி. நூ. பா. : 37)*

### அம்சப்பொருத்தம்

நல்லதே நரபதி நல்கும் நற்பயன்
சொல்லிய கலகமும் சோரமு மாகுமே
எல்லலா மிராதொ னடுத்த மத்திமம்
புல்லுமே சிகியெனிற் புகலும் உத்தமம். 725

*(இ. ள்)* ஐந்துக்கு-நல்ல பலன்கள் கிட்டும். கலகம் உண்டாகும். ஆறுக்கு-சுக்கிரனங்கிஷம். அதனால் பலன் நடக்கும். ஏழுக்கு-சனி அங்கிஷம். அதனால் அந்த மனையில் ஜன விரோதமும், களவும் நடக்கும். எட்டுக்கு-

இராகு அங்கிஷம். அதனால் சகலமும் மத்திம பலனாய் நடக்கும். ஒன்பதுக்கு கேது அங்கிஷம். அதற்குச் சகலமும் உத்தமம். *(சி. நூ. பா. : 38)*

## வம்சப் பொருத்தம்

புத்தியாம் முழத்தை ஒன்பதிற் பெருக்கிப்
புகன்றிடு நான்கினில் வகுத்துப்
பத்தியார் சேடம் வம்சம்ஒன் றாகிற்
பிராம ணர்மிகு சுகமாம்
சித்தியாம் இரண்டுக் குரியர்சத் திரியர்
சயமதாம் மூன்றுவை சியருக்
கொத்திடு தனமாம் நான்குசூத் திருக்
குற்றதா னியமென விளம்பே. 726
*(886 b : 21)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதால் பெருக்கி, நான்கினால் வகுக்க வரும் மீதி **வம்சம்** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், பிராமணர். இதன் பலன் மிகுந்த சுகமும் காரியசித்தியும். இரண்டு மீதியாக வந்தால், க்ஷத்திரியன். இதன் பலன் வெற்றியாகும். மூன்று மீதியாக வந்தால், வைசியர் இதன் பலன் செல்வமாகும். நான்கு மீதியாக வந்தால், சூத்திரர். இதன் பலன் தானியமாகும்.

குறிப்பு: மீதி இல்லையானால், நான்கை மீதியாகக் கொண்டு கணக்கிடவேண்டும்.

## சாதிப்பொருத்தம்

சாதியது நான்கினுக்கே பலனே சொல்வேன்
தக்கதொரு பிரமகுலம் சாற்றக் கேளீர் !
நீதிபெறு யோக்கியமா மன்னர்க் கேதான்
நெறிதவறா கீர்த்தியுண்டு நிலைய தாக

சூதுயர்ந்து வைசயர்க்கே தனமாம் இந்தச்
சூத்திரர்க்கே தானியமாம் சுருதி யென்னும்
ஓதியதோர் தமிழ்கடலை நீந்த வல்லான்
உண்மையெனும் இனியதுவே உரைசெய் தாரே. 727

*(742 : 112)*

*(இ. ள்)* மனையின் நீள அகலத்தை அளந்து பெருக்கி, வந்த குழித்தொகையை ஒன்பதில் பெருக்கி நான்கில் வகுக்கக் கிடைக்கும் மீதி **சாதி** எனப்படும். மீதியாக ஒன்று வந்தால், **அந்தணர் சாதி**. இதன் பலன் நல்ல நடத்தை; மீதியாக இரண்டு வந்தால், **அரச சாதி**. இதன் பலன் நீதிநெறி மாறாத புகழ் கிடைக்கும்; மீதியாக மூன்று வந்தால், **வைசிய சாதி**. இதன் பலன் செல்வம் வந்து சேரும்; மீதியாக நான்கு வந்தால், **சூத்திரசாதி**. இதன் பலன் தானியம் பெருகும்.

குறிப்பு: மீதி எதுவும் வரவில்லையென்றால், அதனை நான்கு எனக் கொண்டு கணக்கிடவேண்டும்.

## இதுவுமது

முன்னிற்கும் ஆயத்தை ஒன்பதின் மூட்டியே
நன்னிற்குங் குணிதத்தை நான்கினுக் கீயவே
பின்னிற்கும் ஒன்றெனிற் பிராமண சாதியாம்
மன்னர்க்கும் வைசியர் வாழ்சூத் திரர்களே. 728

*(இ. ள்)* ஆயத்தை ஒன்பதிற் பெருக்கி, நான்கில் வகுக்க, நாலுக்குள்ளாக வந்தது-சாதியாம். அதில் ஒன்றாகில்-பிராமண சாதி. இரண்டாகில்-க்ஷத்திரிய சாதி. மூன்றாகில் வைசிய சாதி. இந்த மூன்று சாதிக்கும் சகல காரியமும் வசியமாம். நான்காகில்-சூத்திர சாதியாம். அது எந்நாளும் சுகமில்லாமல் துயரத்தைக் கொடுக்கும். *(சி. நூ. பா. : 39)*

**கணப்பொருத்தம்**

கணபலன் புகல்வேன் அசுபதி அத்தம்
கருதிய இரேவதி பூசம்
இணையுறு சுவாதி புனர்வசு மிருக
சீரிட மும்திரு வோணம்
துணையுறும் அனுஷம் ஒன்பதும் தெய்வச்
சுருதிசேர் கனமெனச் சொல்வாம்
இணர்வுளோர் அறிய உத்தமப் பலனாய்
உரைசெய்த மயனமிவ் வுரையே. 729

***(742 : 123)***

*(இ. ள்) அசுவதி, அத்தம், இரேவதி, பூசம், சுவாதி, புனர்பூசம், மிருகசீரிடம், திருவோணம், அனுஷம் ஆகிய நட்சத்திரங்கள் ஒன்பதும்* ***தேவகணம்.*** *இதன் பலன் எல்லா நன்மைகளும் உண்டாகும்.*

**இதுவுமது**

ரோகணி பூரம் உத்தரம் பரணி
நண்ணுபூ ராடமும் உகந்த
ஏகிய பூரட் டாதிஉத் திராடம்
மிகைஉத்தி ரட்டாதி அறியலாம்
வாகுள திருவா திரையுடன் ஒன்பான்
மருவிய மனுஷ கணமாம்
பாகுயர் தமிழால் உத்தமம் என்று
பகர்ந்தனர் மயனுரை பாரே. 730

***(742 : 124)***

*(இ. ள்) பூரம், உத்திரம், பரணி, பூராடம், பூரட்டாதி, உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, திருவாதிரை ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும்* ***மனிதகணம்.*** *இவை நன்மையைத் தரக்கூடியவை.*

**இதுவுமது**

கேட்டை மூலம் சித்திரை அவிட்டம்
கிளர்ந்ததோர் மகம்வி சாகம்
நாட்டுகார்த் திகையும் சதயம்ஆ யிலியம்
நவின்றனர் சொல்ஒன் பதுபார்
சேட்டைசேர் நிருதர் கணமென வகுத்துச்
செப்பிய திதுவாம் கேளு !
பாட்டியல் சிறந்த மயனுமிவ் வாறு
பகர்ந்தனர் புவியுள்ளோர் பாரே. 731

*(742 : 125)*

*(இ. ள்)* கேட்டை, மூலம், சித்திரை, அவிட்டம், மகம், விசாகம், கார்த்திகை, சதயம், ஆயிலியம் ஆகிய இந்த ஒன்பது நட்சத்திரங்களும் **இராட்சத கணம்.**

**இதுவுமது**

அனுடமான் தலைவண் டுடன்பரி சோதி
அத்தமி ரேவதி யோணம்
புனர்தமும் தேவ கணமுரோ கணிமுப்
பூரமுத் திரத்திரை யங்கள்
கனிவுறு பரணி ஆதிரை மனுஷ
கணமகம் சித்திரை சதயம்
சினமுறம் அவிட்டம் கேட்டை பாம்பொடு
கார்த்திகை ராக்கத கணமே. 732

*(886 b : 32)*

*(இ. ள்)* அசுவதி, மிருசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், அனுஷம், திருவோணம், இரேவதி, சுவாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் தேவகணம். உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, திருவாதிரை, பரணி, பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் மனிதகணம். மூலம், அவிட்டம், சித்திரை, சதயம், கேட்டை, மகம், ஆயிலியம், விசாகம், கார்த்திகை ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் **இராட்சத கணம்.**

## இதுவுமது

கணங்களொன் றாக வரின்மிக நலமாம்
கருதிய தேவர்மா னிடரும்
இணங்கிய மத்திமம் இராக்கதவிண் ணவரும்
எய்திடில் பகையுள தாகும்
துணங்கற அனையவர்க் காமா னிடருந்
துன்னிடின் மரணம தாகும்
மணங்கமழ் தகரப் புரிகுழல் நெடுவொண்
மதரரி பரந்தவாள் விழியே ! 733

*(886 b : 33)*

*(இ. ள்)* மான் போன்ற ஒளிபொருந்திய பெரிய கண்களையும் சந்தன மணம் கமழும் சுருண்ட குழலையும் உடைய பெண்ணே ! தேவகணமும் தேவ கணமும் நல்ல பலனைத் தரும்; மனித கணமும் மனித கணமும் நல்லது; இராட்சத கணமும் இராட்சத கணமும் நன்மையானது. தேவ கணமும் மானிட கணமும் மத்திமமான பலனைக் கொடுக்கும். இராட்சத கணமும் தேவகணமும் பகையுள்ளதாகும். மனித கணமும் இராட்சத கணமும் மரணத்தைத் தரும் என்பதை அறிவாயாக.

## நேத்திரப்பொருத்தம்

விளங்குசெங் கதிரோன் கிழமையே முதலாம்
மேவிய கிழமைமட் டெண்ணி
அறந்ததை மூன்றிற் பெருக்கிய தொகையை
அசுபதி முதற்கழித் ததன்மேற்
து[illegible]ங்குமொன் பதுநா ளொருகண் மற்றதன்
மேற்சொலும் பனிரண்டு நாளிருகண்
வளம்படு தன்மேல் ஆறுநாள் குருடாம்
திக்கிவை குருடுதீ தாமே. 734

*(886 b : 22)*

(இ. ள்) ஞாயிற்றுக் கிழமை முதல் கணக்கிட வேண்டிய கிழமை வரை எண்ணி அந்த எண்ணை மூன்றால் பெருக்கிய தொகையை அசுபதியை முதலாகக்கொண்டு கழித்து எஞ்சியுள்ள முதல் ஒன்பது நட்சத்திரங்கள் ஒற்றைக் கண்ணைக் கொண்டவை. அடுத்து வரும் பன்னிரண்டு நட்சத்திரங்கள் இரட்டைக் கண்களைக் கொண்டவை; அதனை அடுத்துவரும் ஆறு நட்சத்திரங்கள் குருட்டுக் கண்களைக் கொண்டவை. இவை தீமையைச் செய்வன.

குறிப்பு: **ஞாயிற்றுக்கிழமைக்கு,**

உரோகணி முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக் கண் கொண்டவை. அஸ்தம் முதல் பன்னிரண்டுட்சத்திரங்களும் இரட்டைக் கண் கொண்டவை. பூரட்டாதி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**திங்கட்கிழமைக்கு,**

புனர்பூசம் முதல் ஒன்பது நட்சத்திரங்ளும் ஒற்றைக்கண் கொண்டவை. விசாகம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. அசுவதி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**செவ்வாய்க் கிழமைக்கு,**

மகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. மூலம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக் கண் கொண்டவை. ரோகிணி முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**புதன் கிழமைக்கு,**

அஸ்தம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. திருவோணம் முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. புனர்பூசம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக் கண் கொண்டவை.

**வியாழக் கிழமைக்கு,**

விசாகம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக் கண் கொண்டவை. பூரட்டாதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்ரளும் இரட்டைக் கண் கொண்டவை. மகம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக் கண் கொண்டவை.

**வெள்ளிக் கிழமைக்கு,**

மூலம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. அசுவதி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. அஸ்தம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

**சனிக் கிழமைக்கு,**

திருவோணம் முதல் ஒன்பது நட்சத்திரங்களும் ஒற்றைக்கண் கொண்டவை. உரோகணி முதல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இரட்டைக்கண் கொண்டவை. விசாகம் முதல் ஆறு நட்சத்திரங்களும் குருட்டுக்கண் கொண்டவை.

இவற்றுள் - ஒற்றைக்கண் சமபலனைத் தரும்; இரட்டைக்கண் எல்லாப்பலன்களையும் கொடுக்கும்; குருட்டுக்கண் தீமையை உண்டாக்கும்.

## இதுவுமது

ஆதி வாரம் உரோகணி இந்துவுக்
காம்புனற் வசுசேய்க்கு மகமதாம்
ஓதிடும் புதற்கத் தங்குரு வினுக்கோ
ளிற்விசாகம் வெள்ளிடுயர் மூலமாம்
கோதிலாச் சனிவோணம் மிவ்வாரத் திற்கூறு
நாள்முத லொன்பது ஒற்றைக்கண்
நீதிலால் தன்மேற் பனிரெண் டிருகண்
செப்பதற்கு மேலாறுங் குருடீரோ. 735

## இதுவுமது

முன்பதில் அருக்கன் வாரம்[1]
முதலாக மூன்றுக் கிட்டு
அன்புடன் முதல்நாள் கூட்டி
அடவிலே எண்ணி நீக்கி
ஒன்பதுக் கொருகண் ணாறு
உத்தபன் னிரண்டு கண்ணாம்
பின்புறு ஆறு நாளும்
கண்ணில்லை சந்தி ரர்க்கே.[2] 736

*(886 a : 67)*

---

1. ஆதி வாரம். 2. பிரித்துப்பாரே.

குறிப்பு: இரண்டு கண்ணுள்ள நாட்களே சிறப்புடையவை. எனவே, இவ்விதியை உணர்ந்து குருட்டு நாட்கள், ஒரு கண்ணுள்ள நாட்களை நீக்கி மற்ற நாட்களில் மனைக்கு முகூர்த்தம் வைக்க வேண்டும். சந்திரனுக்கு ஒரு கண் இருந்தாலும் சுபகாரியம் செய்யலாம் என்றும் கூறுவர்.

## வேறு

பரிதி முதற்கிழமை பாங்காக முற்றித்து
குதிரை முதலாக போக்கெண்ணி-நிரநிரென
ஒற்றைக்கண் ஒன்பதாம் ஈறா றிட்டைக்கண்
மற்றைக்கண் ணாறுங் குருடு. 737

*(சி. நூ. பா. : 262)*

## சூத்திரப் பொருத்தம்

ஆகிய முழத்தை எட்டினிற் பெருக்கி
ஐந்தினிற் கழித்தது சேடம்
பாகிடு முறையே சூத்திர மாகும்
பாலனே குமாரனி ராஜன்
வாகிடு நலமாம் விருத்தன் மத்திபம்
மரணமே மிக்ககொடி தாகும்
நாகிள முலையாய் ! மற்றொரு விதமும்
நவிலுவர் முன்னைநூல் வழியே. 738

*(886 b : 23)*

*(இ. ள்)* மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை எட்டினிற் பெருக்கி, ஐந்தால் வகுக்கக் கிடைக்கும் மீதி **சூத்திரம்** எனப்படும். ஒன்று மீதியாக வந்தால், **பாலசூத்திரம்.** இரண்டு மீதியாக வந்தால், **குமார சூத்திரம்.** மூன்று மீதியாக வந்தால், **அரச சூத்திரம்.** நான்கு மீதியாக வந்தால், **விருத்த சூத்திரம்.** ஐந்து மீதியாக வந்தால், **மரண சூத்திரம்.** இவற்றுள் பால சூத்திரம், குமாரசூத்திரம், அரச சூத்திரம் ஆகியவை நன்மை பயக்கும். விருத்த சூத்திரம் மத்திம பலனைக் கொடுக்கும். மரண சூத்திரம் மிகவும்

கொடியதாகும். முன்னைய நூலில் கூறியுள்ளபடி மற்றொரு விதமாகவும் இதனைக் கணக்கிடுவார்கள் என்பதை இளமைப் பொருந்திய பெண்ணே! அறிவாயாக.

### யோகம் - ஆதிவாரம்

இரவிவா ரத்தில் உத்திரத் திரையம்
இரேவதி மூலநல் லோணம்
பரவிய அத்தம் அமிர்தயோ கமெனப்
பகர்ந்திரு மகம விட்டம்
விரவிய அனுடம் கேட்டைவி சாகம்
மேவிடின் மரணமென் றுரைப்பர்
உரமிகு சித்த யோகமற் றையநாள்
ஒண்ணுதல் கருங்குழல் அணங்கே! 739

*(886 b : 25)*

*(இ. ள்)* ஒளி பொருந்திய நெற்றியையும் கரிய கூநதல் கற்றையையும் உடைய பெண்ணே! ஞாயிற்றுக் கிழமையில் உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, இரேவதி, மூலம், திருவோணம், அஸ்தம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்**. ஞாயிற்றுக்கிழமையில் அவிட்டம், அனுஷம், கேட்டை, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் வந்தால், **மரண யோகம்**. ஞாயிற்றுக்கிழமையில் மற்ற நட்சதிரங்கள் வந்தால் **சித்தயோகம்** என்று சொல்லுவார்கள்.

### யோகம் - சோமவாரம்

சோமவா ரத்தின் மிருகசீ ரிடநற்
சோதியோ ணம்புனர் பூசம்
சோமரோ கணியும் அமிர்தமாம் புரட்டை
திகழசு பதியுத்தி ராடம்
வாமவி சாகம் கார்த்திகை மகமும்
மரணமாம் மற்றைய நாட்கள்
காமரு சித்த யோகமென் றுரைப்பர்
கயல்புரை கருங்கணாய் இதையே! 740

*(886 b : 26)*

(இ. ள்) திங்கட்கிழமையில் மிருகசீரிடம், சுவாதி, திருவோணம், புனர்பூசம், உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்** . திங்கட்கிழமையில் பூசம், பூராடம், பூரட்டாதி, அசுபதி, உத்திராடம், விசாகம், மகம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வந்தால் **மரணயோகம்.** திங்கட் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வந்தால் **சித்தயோகம்** என்று கயல்மீனை ஒத்த கரிய கண்களை உடைய பெண்ணே ! கூறுவாயாக !

### யோகம் - மங்களவாரம்

மங்கள வாரத்து ரோகணி மூலம்
வயங்குமுத் திரத்திரை யங்கள்
தங்கிடில் அமிர்த யோகமென் றுரைப்பர்
சதயமா திரைபூரட் டாதி
துங்கவி சாகம் சேருமேல் மரணம்
சொற்றிடா நாட்சித்த யோகம்
கொங்கவிழ் நறுந்தேன் ஊற்றிருந் தொழுகும்
கோதையங் குழல்மட மயிலே ! 742

***(886 b : 27)***

(இ. ள்) கோங்கு மலர்களில் இருந்து இனிய தேனானது தோள்களில் சிந்த அவற்றைத் தொடுத்து அணிந்த குழலை உடைய மயில் போன்ற பெண்ணே ! செவ்வாய்க் கிழமையில் உரோகணி, மூலம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்**. சதயம், திருவாதிரை, பூரட்டாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்கள் செவ்வாய்க் கிழமையில் வந்தால் **மரணயோகம்**. செவ்வாய்க் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்**.

### யோகம் - புந்திவாரம்

புந்திவா ரத்தில் உத்திரத் தொடுமுப்
பூரமும் உத்திரா டமுஞ்சீர்
முந்துகார்த் திகையும் அமிர்தமாம் அத்தம்
மூலமி ரேவதி யவிட்டம்

உந்திய சீரசு வினியும் மரண
முறைதரா நாட்சித்த யோகம்
தெந்துவ ரனையரும் மல்லிதழு ரும்பும்
திதனையந் திரணமுலை யனமே. 743

*(886 b : 28)*

*(இ. ள்)* புதன் கிழமையில் வரும் உத்திரம், பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திராடம், கார்த்திகை ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** புதன் கிழமையில் அஸ்தம், மூலம், இரேவதி, அவிட்டம், அசுவதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **மரணயோகம்.** புதன்கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்.**

### யோகம் - குருவாரம்

பொன்னவன் வாரத் தொளிர்புனர் பூசம்
பூசமச் சுவனிசு வாதி
மின்னிய மகமும் அமிர்தமாம் சதயம்
மிருகசீ ரிடத்தோ டுத்திரமும்
மன்னுகார்த் திகையா திரையும் ரோகணி
மரணமாம் மற்றைய நாட்கள்
பன்னிய சித்த யோகமாம் கன்னற்
பாகினும் இனியதேன் மொழியே ! 744

*(886 b : 29)*

*(இ. ள்)* வியாழக்கிழமையில் புனர்பூசம், பூசம், அசுவதி, சுவாதி, மகம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** சதயம், மிருகசீரிடம், உத்திரம், கார்த்திகை, திருவாதிரை, உரோகணி ஆகிய நட்சத்திரங்கள் வியாழக் கிழமையில் வரில் **மரணயோகம்.** வியாழக்கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்** என்பதை சக்கரைப் பாகைக் காட்டிலும் இனிமையான மொழியையுடைய பெண்ணே! அறிவாயாக.

### யோகம் - சுக்கிரவாரம்

சுக்கிர வாரத்தில் இரேவதி மூலம்
சொல்லுமச் சுவனியோ டத்தம்
மிக்கசீ ரமிர்த யோகமாம் கேட்டை
விளங்குரோ கணிதிரு வோணம்
தக்கஆ யிலியம் மகமொடு பூசம்
சார்ந்திடின் மரணம்மற் றையநாள்
புக்கிடிற் சித்த யோகமாம் சிலம்பு
புலம்புறு பசியமென் கொடியே ! 745

*(886 b : 30)*

*(இ. ள்)* அழகான கால்களில் சிலம்புகள் இனிய ஓசையை எழுப்ப, நடைபயிலும் மெல்லிய கொடியைப் போன்ற இடையைக் கொண்ட பெண்ணே ! வெள்ளிக் கிழமையில் இரேவதி, மூலம், அசுவதி, அத்தம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்.** வெள்ளிக்கிழமையில், கேட்டை, உரோகணி, திருவோணம், மகம், ஆயிலியம், பூசம் ஆகிய நட்சத்திரங்கள் வரில் **மரணயோகம்.** வெள்ளிக் கிழமையில் மற்ற நட்சத்திரங்கள் வரில் **சித்தயோகம்.**

### யோகம் - சனிவாரம்

மந்தவா ரத்திற் கார்த்திகை சதயம்
மகமுரோ கணிசுவா தியுமே
அந்தமாம் அமிர்த யோகமா யிலியம்
அத்தமுத் திரப்பூரட் டாதி
சுந்தர மிகுசித் திரைரே வதியும்
சொல்லிய மரணமாம் இதனுள்
வந்திடா நாட்கள் சித்தயோ கமதாம்
பூணுவாய் மதர்வழி அனமே ! 746

*(886 b : 31)*

*(இ. ள்)* பெரிய கண்களையும் அன்னம் போன்ற நடையினையும் உடைய பெண்ணே ! சனிக்கிழமையில்

கார்த்திகை, சதயம், மகம், உரோகணி. சுவாதி ஆகிய நட்சத்திரங்கள் வரில் **அமிர்தயோகம்**. ஆயிலியம், அஸ்தம், உத்திரம், பூரட்டாதி, சித்திரை, இரேவதி ஆகிய நட்சத்திரங்கள் சனிக்கிழமையில் வரில் **மரணயோகம்**. மற்ற நட்சத்திரங்கள் சனிக்கிழமை வரில் **சித்தயோகம்**.

## வயதுப் பொருத்தம்

நவிலும் அசுவதி ஆதியாம் மனையின்
நாள்வரை எண்ணியத் தொகையைப்
புவிபுகழ் ஐந்தில் கழித்துறு சேடம்
பொற்புறு சூத்திர மாமே
அவிர்முழ மதனைமூ வென்பதிற் பெருக்கி
அதையொடு நூறினில் வகுத்துக்
குவிதரு சேடம் ஆயுளை ஐந்திற்
குறைந்திடில் நிஷ்பல மாதோ! 747

*(886 b : 24)*

*(இ. ள்)* அசுபதி முதலாக மனைக்குச் செல்லும் நாள் வரையிலான தொகையை ஐந்தில் வகுத்து மீதி வருவதைச் **சூத்திரம்** என்று கூறுவோரும் உண்டு. மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழித்தொகையை, இருபத்து ஏழால் பெருக்கி, அதனை நூறால் வகுக்க வரும் மீதி **வயது** எனப்படும். இருபத்து ஐந்து வயதைக் காட்டிலும் குறைவாக இருப்பின், நன்மையான பலன் குறைவாக இருக்கும். அறுபது வயதைக் காட்டிலும் அகிகமாக இருப்பின் நன்மையான பலன்கள் பெருகும்.

குறிப்பு: மீதி இல்லையானால் நூறு மீதி எனக்கொண்டு, பலன் கணக்கிட வேண்டும்.

## இதுவுமது

ஓதுமா யத்தைமு வொன்பதில் ஏற்றியே
நீதியாய்ச் சதந்தனிற் கழிக்க நின்றது
சோதிசேர் மனையினுக் காயுள் சேர்ந்ததே
வேதையாம் நாலுபத் தைந்துள் என்பரே. 748

*(சி. நூ. பா. : 47)*

*(இ. ள்)* ஆயத்தை இருபத்தேழிற் பெருக்கி, நூறிற் கழிக்க அதற்குள்ளாக நின்ற சேடம் மனைக்கு ஆயுள். ஒன்று முதல் நாற்பத்தைந்துக்குள்ளாக வந்த வயது எந்நாளும் வேதை யுண்டாம். நாற்பத்தைந்துக்கு மேல் நூறுக்குள் எவ்வளவு உயருகிறதோ அவ்வளவும் விசேஷம் என்பதாம்.

## தாரா பலன்

இறைநாள் ஆதி மனையின்நாள் அளவுள்
எண்ணிஒன் பான்தனில் வகுத்துத்
தறைசொலும் சேடம் ஒன்றுமுன் முறையே
தாரையாம் சென்மமே பத்தே
அறைதுயர் விபத்தே க்ஷேமமே பிரத்தி
ஆம்உடன் மருவுச தகமே
குறைசெறி வாதயே நிலவுவிர தியமே
சேரிய பரமதேர மாமே. 749

*(886 b : 36)*

*(இ. ள்)* மனைக்குரியவரின் நட்சத்திரத்திற்கும் மனை நட்சத்திரத்திற்கும் கண்ட தொகையை ஒன்பதில் வகுத்து, வரும் மீதி தாரை அல்லது தாரா எனப்படும். மீதி ஒன்று வந்தால், **சென்ம தாரை** எனப்படும். இதன் பலன் உடல் நலம் குறையும். மீதி இரண்டு வந்தால், **சம்பத்தாரை** எனப்படும். இதன் பலன் செல்வம் உண்டாகும். மீதி மூன்று வந்தால், **விபதாரை** எனப்படும். இதன் பலன் விபத்து உண்டாகும். மீதி நான்கு வந்தால், **சேமதாரை** எனப்படும். இதன் பலன்

செல்வம் பெருகும்; மீதி ஐந்து வந்தால், **பரதற் தாரை** எனப்படும்; இதன் பலன் காரியநாசம்; மீதி ஆறு வந்தால், **சாதக தாரை** எனப்படும். இதன் பலன் சர்வ சித்தியாகும்; மீதி ஏழு வந்தால், **வத தாரை** எனப்படும். இதன் பலன் தன நாசம்; எட்டு மீதியாக வந்தால், **விரதிய தாரை** எனப்படும். இதன் பலன் சர்வ சித்தியாகும். மீதி ஒன்பது வந்தால், **பரமதேர தாரை** எனப்படும்.

## இதுவுமது

கூறிய தாரை ஐந்துமூன் றேழும்
கொலைபிணி வறுமையுண் டாகும்
தேறிய ஒன்று இரண்டுநான் காறும்
திகழிரு நான்குமொன் பானும்
மாறிலாச் செல்வம் புத்திர விருத்தி
மகிழ்தரு வாழ்வுமுண் டாகும்
வீறில்மூ வொன்பான் தாரைவரில் பிணியால்
மெலிகுவர் எழில்பசுங் கிளியே ! 750

*(886 b : 37)*

(இ. ள்) மீதியாக ஐந்து, மூன்று, ஏழு ஆகியவை வந்தால், முறையே பரிதற் தாரை, விபதாரை, வத தாரை எனப்படும். இவற்றிற்குத் தீங்கும் நோயும் வறுமையும் உண்டாகும். மீதியாக ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது ஆகியவை வரின் முறையே சென்மதாரை, சம்பத்தாரை, சேமதாரை, சாதக தாரை, விரதிய தாரை, பரமதேர தாரை எனப்படும். இவற்றிற்குச் செல்வம், புத்திர விருத்தி, மகிழ்ச்சியான வாழ்வு முதலானவை உண்டாகும். இருபத்தேழாவது நட்சத்திரம் வரில் நோயால் மிகவும் வருந்துவார்கள்.

# பாடல் முதற்குறிப்பு அகராதி


பாடல் எண்

## அ

| | |
|---|---|
| அகசெனனம் மூன்றும் | 709 |
| அகத்தினுக் காகா | 102 |
| அகந்தனை எல்லை | 290 |
| அகம்புக உரைத்த | 498 |
| அகமுறும் சென்ம | 446 |
| அகலத்தை ஒன்ப | 524 |
| அகலத்தோர் பாதி | 145 |
| அக்கினி மீதில் | 34 |
| அங்காரகன் வாச | 199 |
| அங்கிசப் பலனை | 710 |
| அங்கிமே லாடு | 233 |
| அங்கியில் மனையை | 413 |
| அங்கி மிதுனம் | 460 |
| அச்சமான தரையும் | 450 |
| அசுபதி விசயம் | 661,664 |
| அஞ்சமூ வொன் | 624 |
| அஞ்சிலர சாள்வர் | 632 |
| அஞ்சினில் இரண்ட | 151 |
| அஞ்சிலே இரண்ட | 138 |
| அஞ்சுகோல் ஆதி | 618 |
| அஞ்சு மகமும் அனுட | 581 |
| அஞ்சொல் இருப | 623 |
| அடித்தலை இரண்டும் | 97 |
| அடித்ததோர் தேங்காய் | 527 |
| அடித்ததோர் முளையின் | 181 |
| அடியது கீழதாகும் | 131 |
| அடியும் தலையும் | 99 |
| அடுத்தமாம் கும்பம் | 216 |
| அடையும் பூத | 409 |
| அட்டமி உவா | 514 |
| அண்டத்துக் கொத்த | 295 |
| அண்ட முறவே | 152 |
| அண்ணிய முடித்தை | 706 |
| அதிபுக ழோனம் | 669 |
| அத்தியும் ஆலும் | 109 |
| அந்தகண் திக்கு | 35 |
| அந்தக் கிழமை | 425 |
| அந்தணர் தென்திசை | 289 |
| அபய னென்ற | 693 |
| அப்போ தலிந்த | 584 |
| அம்பலம் சிற்றூர் | 114 |
| அரியகுரு வாச | 202 |
| அருக்கன் நின்றது | 63 |
| அருக்கன் அலைகாட்டும் | 429 |
| அருமையாக அறைகின்றேன் | 368 |
| அலவனில் எழுந்த | 493 |
| அவனவன் காலினால் | 313 |
| அளந்ததோர் குழியில் | 26 |
| அழிந்திடுங் கோவில் | 547 |
| அறியதோர் சுவர்கன | 240 |
| அறியும் தெற்கு | 449 |
| அறுநான்காம் அடிய | 343 |
| அறைதரு முழத்தை | 711 |
| அறையும் சிங்கம் | 456 |
| அறையும் இந்திரன் | 46 |
| அனுடமான் தலைவன் | 732 |

## ஆ

| | |
|---|---|
| ஆகக் கிழக்கு | 685 |
| ஆகிய முழத்தை | 736 |
| ஆகுமங் காரகன் | 658 |
| ஆக்கிய குழியை | 27 |
| ஆசாரங் கட்டி | 186 |
| ஆடி ஆவணி | 217 |
| ஆடிகார்த் திகையாம் | 492 |
| ஆடித் திங்களில் | 287, 507 |

| | பாடல் எண் |
|---|---|
| ஆடிய கதவு | 227 |
| ஆடு தனக்கு | 257 |
| ஆடு துலை கன்னி | 459 |
| ஆட்சி யன்றி | 400 |
| ஆட்சி மீனம் | 501 |
| ஆண்டுதான் படியே | 22 |
| ஆதிரை செயம் | 673 |
| ஆதி வாரம் | 735 |
| ஆம்பொருள் கிழக்கு | 539 |
| ஆயுற்று அமையும் | 533 |
| ஆயம் நவ நான் | 626 |
| ஆய உத்திரம் | 401 |
| ஆய்ந்ததோர் ஏழ்பனி | 700 |
| ஆரிய மறைகள் | 312 |
| ஆருடந் தன்னில் | 595 |
| ஆலய முகப்பு | 546 |
| ஆலயம் நகரம் | 7 |
| ஆவணி ஆறு | 259 |
| ஆவணியும் ஐப்பசி | 485,486 |
| ஆறடி அகல நீளம் | 315 |
| ஆறுக்குக் கிலீபன் | 712 |
| ஆறெட்டுப் பன்னி | 588 |
| ஆனதா லரைமா | 467 |
| ஆனதோர் சுவர்வெ | 604 |
| ஆன மகரம் | 534 |
| ஆன அஞ்சில் | 148 |
| ஆன மரங்கள் | 137 |
| ஆன மேஷ | 531 |
| ஆனியுள் நாரி. | 286 |

## இ

| | |
|---|---|
| இசைமுது தலைகீ | 133 |
| இட்டவெட் டுடைபனி | 616 |
| இடித்து மனையம்ச | 718 |
| இடியும் நோய்கள் | 720 |

| | பாடல் எண் |
|---|---|
| இடுமனை ஒன்றில் | 293 |
| இணங்கிய சுணங்கன் | 94 |
| இந்த நட்சத்திர | 408 |
| இந்தநல் விதமாய் | 298 |
| இந்திரன் கிழக்கில் | 299 |
| இந்திரன் செல்வம் | 42 |
| இந்திரன் திக்கிற் | 412 |
| இந்திரன் மூலை | 33 |
| இயற்று வட திசை | 302 |
| இரண்டு புள்ளின் | 489 |
| இரவி வா ரத்தில் | 739 |
| இராகுதான் வாச | 209 |
| இராசியின் பலனை | 701 |
| இருக்கவே ஆகு | 223 |
| இருங்குரு வெள்ளி | 438 |
| இருந்தது இன்பம் | 462,463 |
| இருந்த மாளி | 469 |
| இருந்த முதுதலை | 134 |
| இருபது அடிய | 338 |
| இருபதும் இரண்டு | 340 |
| இருபதும் எட்டு | 347 |
| இருபதும் ஒன்ப | 348 |
| இருபதும் மூன்றே | 342 |
| இருப்ப தாம்பொருள் | 599 |
| இலகிய மரங்கள் | 101 |
| இலகிய முழத்தை | 659 |
| இலகு சத்துரு | 468 |
| இலங்கு மேவட | 44, 452 |
| இலிங்கதா பர | 430 |
| இல்லறமே செய்ய | 307 |
| இளந்தலை இரண்டும் | 135 |
| இளமணல் சூனி | 56 |
| இறைநாள் ஆதி | 749 |
| இன்சுவை மண் | 73 |
| இனியவாம் கர்ம | 707 |

| | பாடல் எண் |
|---|---|
| **ஈ** | |
| ஈசனார் திசையிற் | 43, 421 |
| ஈசன்மேல் மனையெ | 420 |
| ஈசானிய மூலை | 40 |
| ஈண்டிய தனத்தை | 60, 61 |
| ஈராரு அடியதாகில் | 325 |
| ஈரைந்தும் ஏழு | 334 |
| ஈரைந்தோ டேழு | 335 |
| ஈரொன்பதும் ஒன்று | 337 |
| **உ** | |
| உக்கிர முகமும் | 245 |
| உதயவா ரூடம் | 586 |
| உத்தம சங்கு | 478 |
| உத்திரம் இசைப்ப | 128 |
| உத்திரம் இசையில் | 129 |
| உத்திர திசையின் | 69 |
| உத்திரம் நிலமை | 665 |
| உத்தரா யணமும் | 487 |
| உயிருட னிரண்டு | 590 |
| உய்யு நாகவம் | 393 |
| உருநான்கு இருப | 344 |
| உரைத்த ஆயத்தை | 679 |
| உரைதரு முழத்தை | 645 |
| உரைத்திடும் ஆவணி | 362 |
| உரைத்தி டும்பதி | 399 |
| உரைபுகர் வியாழம் | 439 |
| உழக்கிய குண்டை | 214 |
| உள்ள ராசி | 360 |
| உள்ளும் முறைமை | 585 |
| உற்றிடு திதியின் | 650 |
| உற்றிடு முகூர்த்த | 529 |
| உன்னுமேஷம் | 451 |
| ஊண்டிய கணபதி | 474 |
| ஊர்க்கு அக்கினி | 572 |
| ஊனமில் மனையில் | 187 |

| | பாடல் எண் |
|---|---|
| **எ** | |
| எங்கே மாதம் | 248 |
| எட்டடி யகல | 318, 319 |
| எட்டி தேத்த | 105 |
| எட்டினில் பன்னி | 617 |
| எட்டுமே ஆறு | 328 |
| எட்டுடன் ஆறு | 329 |
| எட்டுடன் இருப | 346 |
| எட்டுடன் ஒன்றி | 615 |
| எட்டுடன் பத்து | 328 |
| எட்டுடன் பன்னி | 611 |
| எண்டிசையும் கிழக்குமுதல் | 41 |
| எண்ணைந்தும் ஒன்றே | 353 |
| எத்திசை எனிலும் | 249 |
| எமனுட திசையிற் | 414 |
| எருக்குடன் அகத்தி | 157 |
| எரும்புதான் ஒழுக்கம் | 95 |
| என்ப திரண்டு | 672 |
| என்னவே எட்டினில் | 643 |
| என்னு முன்னாய | 651 |
| **ஏ** | |
| ஏத்தும் சேடம் | 149 |
| ஏந்தும் இந்த | 673 |
| ஏய கன்னி | 466 |
| ஏழஞ்சும் | 352 |
| ஏழடி அகல | 317 |
| ஏழடி முழமும் | 316 |
| ஏழுடன் ஆற | 327 |
| ஏழுடன் இருப | 345 |
| ஏழுடன் உறும் | 326 |
| ஏழினில் மூன்றாம் | 139 |
| ஏழொன்பான் ஐந்து | 646 |
| ஏறிய பூரணை | 654 |
| ஏறுங் கன்னி | 461 |
| ஏறுடன் தண்டு | 212 |

| | பாடல் எண் |
|---|---|
| ஏறும் போந்தை | 675 |
| ஏறெனும் இடபம் | 377 |
| ஏற்றம் சித்திரை | 254 |
| ஏற்றிய இரண்டாம் | 263 |
| **ஐ** | |
| ஐந்துக்குச் சத்துரு | 613 |
| ஐயாறு மூன்று | 351 |
| ஐம்பதிற் குறை | 355 |
| ஐம்பத்து மூன்று | 356 |
| ஐம்பதும் ஏழு | 357 |
| **ஒ** | |
| ஒத்த நிலையகல | 237 |
| ஒரு தெண்டுக்கொரு | 484 |
| ஒன்பதாம் அகல | 321 |
| ஒன்பது அகல | 320 |
| ஒன்பது இருப | 349 |
| ஒன்பது நாலாம் | 141 |
| ஒன்பது நான்கு | 142 |
| ஒன்பதும் ஏழு | 495 |
| ஒன்றாகி நின்ற | 193 |
| ஒன்றான சந்து | 559 |
| ஒன்றிரண்டு தனக்கு | 526 |
| ஒன்றுடன் இரண்டு | 314 |
| ஒன்றுநான் இரண்டும் | 655 |
| **ஓ** | |
| ஓடி அடைக்குமே | 235 |
| ஓடியே அடைக்கில் | 234 |
| ஓதிய நிலைநீ | 241 |
| ஓதிய வீடறை | 191 |
| ஓசம் பூமி | 74 |
| ஓதுமா யத்தை | 748 |
| ஓவிய மொன்றி | 629 |
| **க** | |
| கடகமும் சிங்க | 511 |
| கட்டினால் மாட | 454 |

| | பாடல் எண் |
|---|---|
| கட்டினால் மாளி | 75 |
| கணங்க ளொன்றாக | 733 |
| கணபலன் | 729 |
| கண்ட வக்கினி | 538 |
| கண்டுமே இராசி | 458 |
| கண்ணுற்ற மரங்கள் | 100 |
| கதிருக்கு மகமாம் | 577 |
| கதிரெனும் வாரம் | 423 |
| கரி முகன் உதிக்க | 692 |
| கரியகுயில் செய்யமயில் | 92 |
| கரியது காணும் | 53 |
| கருங்கல்லோ டெலும்பு | 589 |
| கருடனே கிழக்காம் | 310 |
| கருதிய ஆண்மர | 104 |
| கருதிய முகூர்த்தம் | 120 |
| கரும்பாலை போலே | 230 |
| கல்நிலை தேவர் | 243 |
| கல்லா லசுரம் | 717 |
| கல்லொரு செங்கற் | 59 |
| களத்திரத் தானம் | 584 |
| கள்ளிவேல் விடத்தை | 112 |
| கற்பமா தாயமுடன் | 609 |
| கனத்த மாரி | 365 |
| கன்னமாங் கோடி | 556 |
| கன்னி மேல்மனை | 415 |
| கன்னிமூ லையிலே | 36 |
| கன்னியரே வாசல் | 231 |
| கன்னியில் வீடுமனை | 381 |
| கன்னியும் துலாமும் | 267 |
| **கா** | |
| காட்டிய ஐந்தினில் | 681 |
| காட்டிய தூப | 121 |
| காணவே மரங்கள் | 98 |
| காணாச் சனிவாசல் | 206 |
| காணுந் துருவம் | 389 |

பாடல் எண்

காணும் ஐப்பசி 364
காத்தே தும்பி 115
காரியும் வாச 207
கார்த்திகையும் உத்திரமும் 573
கார்த்திகை மாதம் 253
காலற்ற நாள் உடலற்ற 576
காலற்றன உடலற்றன 574
காலதே வாசல் 278
காலிடை முன்னம் 279
காலை கிழக்காகும் 275
காலை வடக்காகும் 273,274அ
கானகந் தன்னில் 118

### கி

கிடந்தான் மேடம் 256
கிடப்பதும் இடக்கை 276
கிரணம் வீசும் 367
கிளர்த்திய விடையாழ் 213

### கு

குடக்குத் தெற்கு 569
குடதிசை பிளக்க 603
குடதிசை வடக்கு 62
குண்டைமான் குடங்கள் 261
குப்பை பூனை 695
குபேரன் தன் திக்கு 39
குபேரன் வாழ்திசை 419
கும்பத்தில் வீடுமனை 386
குருவது வாசல் 203
குளமது இருந்தால் 541
குறுகும்செஞ் சேலயன் 606
குன்றிடா மூன்றினில் 642

### கூ

கூறிய தாரை 750
கூறிய வாசல் 551, 554
கூறும் பரணி 394

பாடல் எண்

கூறும் பூமி 76
கூறும்விர லால்முகடு 570
கூனி யானி 284,506

### கெ

கெற்பமா தாய 601

### கே

கேட்டை மூலம் 731

### கொ

கொடி நரி கிள்ளை 81
கொடியே யாகில் 683
கொட்டிய முளைபிடுங்கல் 567
கொட்டு மூலை 566
கொண்ட வருணன் 48

### கோ

கோடி கிழக்கு 147
கோடியொடு கோடி 557
கோல மறியல் 502

### ச

சங்கது போலே 226
சங்குவின் நீள 477
சங்குதிர ளும்பருமன் 479
சட்டமாம் கோவிற் 555
சந்தனம் தந்தி 482
சந்திரனின் வாசலிட 196
சந்திரன் வாசலாகில் 194
சந்துக்கள் முடுக்கு 550
சயமிலை சதுர்த்தி 652
சன்னதி விளக்கு 560

### சா

சாடியோ டெலும்பு 593
சாணான்கு கோல் 631
சாதியது நான்கினுக்கே 727
சாதியா தெனினும் 625

பாடல் எண்

சாதியும் ஒன்ற 162
சாத்திய ஏகா 648
சாமது நிட்சயம் 282
சாம்பலோ டெலும்பு 594
சாரமுன் னாயத்தை 657
சாருமே நண்டு 465
சாரதசம் பாக்கி 653
சாலையின் மையம் 499
சாற்றிய உதய 708
சாற்றுமோ ரைந்து 713

**சி**

சிகையுறு மஞ்ஞோ 4
சிங்கத்தில் வீடுமனை 380
சிங்கமும் பருந்து 540
சிங்கமே சிறப்பு 688
சிங்கம் சனிக்கில் 218
சித்திரை பத்தாம் 258
சித்திரை வைகாசி 251
சிறந்த சாதி 166
சிறப்புடைத் தேவர் 222
சிற்பனும் முழக்கோல் 11

**சீ**

சீதநீர்க் குலைக்காய் 153
சீரது பெருந் 374
சீர்பெறும் ஆயத்தை 636

**சு**

சுகத்தில் ராச்சிய 716
சுகமிலாச் சேனை 676
சுகவிரை யங்கள் 677
சுக்கிரவா ரத்தில் 745
சுக்கிரன் எதிரே 515,596
சுணங்க னென்றே 689
சுத்தமாய் நிறைய 6

பாடல் எண்

**செ**

செங்கதிரோன் பிறந்தநாள் 579
செஞ்சிதல் மனையில் 607
செப்பிடும் மதிசிறந்த 396
செப்பிடும் சித்திரை 358
செய்திடும் மனைக்கு 542
செய்யதோர் பூமி 600
செய்யபுன் செய்ய 86
செய்யவாஸ் துவின்தன் 212
செல்ல உத்தரம் 403

**சே**

சேதம் மேற்கு 18
சேரும் உப்பு 15

**சொ**

சொல்லிய கிணற்று 565
சொல்லிய மந்த 723
சொல்லும் கத்தரி 13
சொல்லும் ஆடி 361
சொல்லுமே திருவா 366
சொல்லு மேஷம் 410,455
சொல்லும் இந்த 453
சொல்லும் பஞ்சமி 375
சொல்லும் மேடம் 455
சொல்லுவேன் நீகுறித்த 602
சொல்வதே ஒன்றதற்கே 640
சொற்றதி லேகமா 680
சொன்னேன் எங்கள் 644

**சோ**

சோமவா ரத்தின் 740

**ஞோ**

ஞாயிறு அலைய 428

**த**

தக்கசனனம் நாலு 432

| | பாடல் எண் |
|---|---|
| தக்க அட்டமி | 373 |
| தங்குமே சுகந்தா | 388 |
| தண்டொடு கடகம் | 266 |
| தண்டொடு வரிலயன் | 85 |
| தண்ணீர்த் துறைமுன் | 543 |
| தத்தும் கதிர்சேய் | 513 |
| தத்தும்சித்திரை | 255 |
| தந்தியின் கொம்பு | 480 |
| தந்தியின் மருப்பு | 169 |
| தயிரொடு நெய் தேன் | 72 |
| தரணியில் புவியில் | 294 |
| தருமணி சிறந்த | 497 |
| தலையற்றன உடலற்றன | 575 |
| தலைவிரி மொட்டை | 86 |
| தள்ளிய பின்பு | 9 |
| தனதுநா ளும்பின் | 427 |
| தனுசுமே செயமாம் | 702 |
| தனுவொடு மகரம் | 269 |
| தன்குலத் தோர்கள் | 300 |
| தன்றினுத் துடனே | 2 |

**தா**

| | |
|---|---|
| தாக்குடை மூங்கி | 168 |
| தாண்டிய பசுவின் | 57 |
| தாண்டிய வருணன் | 44 |
| தாபரம் முதலா | 165 |
| தாம யோகமும் | 633 |
| தாலவுரி கேதகை | 173 |
| தாழ்விலா மனைநடு | 32 |
| தாளவை ஒன்று | 229 |
| தானிய சத்தி | 715 |
| திங்களில் இராசி | 250 |
| திங்களிற் சோதி | 524 |
| திங்களோர் இராசி | 247 |
| திடமாகிய தென்மனை | 220,221 |

| | பாடல் எண் |
|---|---|
| திண்டுமே எறும்பு | 55 |
| திதிபல னதுகேள் | 647 |
| திருட்டியுள்ள | 721 |
| திருநிறை யோணம் | 666 |
| திருந்துசல இராசி | 437 |
| திருமலி முழத்தை | 649 |
| திருவளர் மனையை | 629 |
| திறமை தெட்சண | 490 |

**தீ**

| | |
|---|---|
| தீதென அறியும் | 719 |

**து**

| | |
|---|---|
| துங்க பானு | 246 |
| துண்ணிய துவரை | 161 |
| துய்யதோர் வயிற்றில் | 277 |
| துலங்க வே எட்டு | 601 |
| துலங்குமா னான்கு | 164 |
| துலாத்தினில் வீடுமனை | 382 |
| துலாமொடு தேளும் | 509 |
| துளங்கு விரல் கிடகு | 163 |
| துன்னிய அணுவ | 158 |
| துன்னிய அணுஷம் | 160 |

**தூ**

| | |
|---|---|
| தூயவோ ரைம்பத் | 443 |

**தெ**

| | |
|---|---|
| தெற்கிலிரு குப்பை | 304 |
| தெற்கினிற் குப்பை | 303 |
| தெற்குடன் வடக்கு | 219 |
| தென்புறம் மேற்கு | 122 |
| தென்மேலை மூலை | 521 |
| தென்வடல் வாஸ்து | 272 |

**தே**

| | |
|---|---|
| தேக்கதில் சந்து | 103 |
| தேசுயர்ந்த சுக்கி | 435 |

பாடல் எண்

தேடுமவர் சிந்தை 535
தேயுமே புரட்டாசி 363
தேரொடு தெருவொழ 553
தேவதைத் தானத்தில் 296
தேவர்க்குப் பட்டு 175
தேவால யங்களும் 562
தேளினில் வீடுமனை 383

**தொ**

தொட்டலக் களத்தில் 587

**தோ**

தோகைசேர் குழலாய் 722
தோன்றிய கெஜத்தா 697

**ந**

நடுமனை கம்ப 552
நடுவுங் கிழக்கு 45
நட்டக்கால் பிடுங்கி 568
நடைதனில் முக்கால் 265
நண்டதில் வீடு 379
நண்ணுங் கேட்டை 404
நல்லதே நரபதி 725
நல்லதோர் சிற்பனு 10
நல்லதோர் முகூர்த்தம் 52
நவமிரு மூவஞ்சும் 612
நவிலும் அசுவதி 747
நவிலும் வில்லில் 457
நன்குலம் அவர்க்கும் 301
நன்மனை எடுப்போர் 210
நன்மையாம் பதிநாடி 406
நன்மையாம் ஆயத்தை 641
நன்மையே மகர 705
நன்றாம் ஆரியர் 77
நன்றாம் கிழக்கு 305
நன்றென விட்ட 67
நன்னாளி லும்மனை 422
நனிகதிர்சேய் ஆலைய 512

பாடல் எண்

**நா**

நாகமே நன்று 690
நாடித் தேதியின் 508
நாடிய பூமி 21
நாடிய வீதி 563
நாட்டிய ஆயத்தை 703
நாட்டும் புகழ்சேர் 292
நாயகன் இராசி 211
நாயகன் மனைக்கு 520
நாலுக்கும் மூன்றுக்கும் 225
நாலைந்து மொன்று 339
நாவலும் தேவர் 224
நாற்பதோ டைந்து 354
நாற்றிசை நடுவே 54

**நி**

நிகழ்த்திய தினகரன் 724
நிருதி மேல்மனை 416
நிலமது முழம 28
நிலமனை தனக்கு 188
நிலைகொண் ஆயம் 619,620
நிலையக லங்கள் 244
நிறைந்திரு குடமே 83
நிறையநீர் வார்த்த 30
நிறைநெய் இலாத 136

**நெ**

நெடுத்தகதி ரங்கி 536
நெய்யுடன் தயிரும் 19
நெறியும் சுக்கில 370

**ப**

பகர்தரு முழத்தை 634
பகர்ந்ததோர் முலைக்கு 178
பட்டுநூல் கர்ப்பை 174
பண்ணிய கருப்ப 494

| | பாடல் எண் |
|---|---|
| பண்ணிய சங்கு | 483 |
| பண்ணும் அஞ்சில் | 150 |
| பண்ணும் தலைவாசல் | 184 |
| பண்ணும் பாலவம் | 392 |
| பண்புடன் அகலம் | 144 |
| பத்திகள் பத்தி | 182 |
| பத்துடன் ஆற | 333 |
| பத்துடன் ஆறே | 332 |
| பத்துடன் ஒன்ற | 323 |
| பத்துமே அகல | 322 |
| பத்துமே இரண்டு | 324 |
| பரப்பினிற் பாதி | 143 |
| பரப்பினை ஒன்ப | 523 |
| பரவிய முழத்தை | 628 |
| பரவு திங்கள் பொன் | 441 |
| பரிதிநின்று பகர்மா | 395 |
| பரிதிமுதற் கிழமை | 737 |
| பரிவுடன் முன்னூல் | 1 |
| பரிவுறு முழத்தை | 668 |
| பருது புந்தி | 444 |
| பருதியில் வாசலாகில் | 195 |
| பருத்தி அகத்தி | 156 |
| பருத்தி இலுப்பை | 155 |
| பலபல வழியே | 70 |
| பலமதாம் ஆயத்தை | 670 |
| பலவு யர்ந்த | 146 |
| பல்லிகள் ஓந்தி | 25 |
| பழத்தொடு நெய்பால் | 3 |
| பாங்குடை பகண்டை | 90 |
| பாம்பிரண்டில் வாச | 208 |
| பாரில் அட்டமர் | 50 |
| பாரிற் கும்பம் | 472 |
| பாரினிற் பருந்து | 694 |
| பாருமே குபேரன் | 49 |

| | பாடல் எண் |
|---|---|
| பாரெலாங் கன்னி | 473 |
| பார்க்கும் கிழக்கு | 682 |
| பார்க்குங் கூரொன் | 238 |
| பார்மகன் புகர்பானு | 442 |
| பாலசிங்கம் பகரு | 464 |
| பானுவுறுங் கூறதனில் | 194 |
| **பி** | |
| பிரமனில் எழுந்த | 43 |
| பிறந்தநாள் இரண்டு | 426 |
| **பு** | |
| புகழ்கிழக் காதி | 699 |
| புதன்மதி வாசல் | 185 |
| புத்தி யம்ச | 714 |
| புத்தியாம் முழத்தை | 726 |
| புத்திரத் தான | 591 |
| புந்திவா ரத்தில் | 743 |
| புற்றும் பேரும் | 17 |
| புன்னையின் பூவை | 71 |
| **பூ** | |
| பூச மேவும் | 402 |
| பூதலத்திற் பூனை | 687 |
| பூமலி நான்குசாண் | 635 |
| பூராடம் அதுவே | 663 |
| **பெ** | |
| பெட்டியி லொன்ப | 496 |
| பெருகிய நாலாம் | 264 |
| பெருமையில் இரண்டேற் | 678 |
| பேசிய கதவு | 228 |
| பேசிய உத்தரம் | 674 |
| பேசும்வை காசி | 359 |
| பேந்திரம் கிழக்கு | 68 |
| பேய்துஷ் தானம்தனில் | 297 |
| **பொ** | |
| பொங்கிய புதனே | 504 |

| | பாடல் எண் |
|---|---|
| பொங்குகுரு க்ஷேத்தி | 434 |
| பொருத்தமனை இசையா | 561 |
| பொருந்திய மட்டக்கோல் | 170,171 |
| பொருந்து மந்தணன் | 440 |
| பொல்லா திந்த | 20 |
| பொல்லா தையா | 391,397,411 |
| பொன்னவன் வாரம் | 744 |
| பொன்னுடன் செம்பு | 58 |
| பொன்னும் அஸ்தம் | 398 |
| பொன்னொடு பூனை | 5 |
| **போ** | |
| போல மத்தளம் | 14 |
| போற்றும் ஏமன் | 47 |
| **ம** | |
| மகமது விருத்தி | 662 |
| மகரத்தில் வீடுமனை | 385 |
| மகரமாம் கும்பம் | 510 |
| மங்கள வாரத்து | 742 |
| மங்கை ஞாயிற்று | 503 |
| மட்டநீர் கொண்ட | 66 |
| மட்டமது கோலினை | 172 |
| மட்டுக் கொண்ட | 236 |
| மட்டுறை நிலைநீ | 242 |
| மண்டபம் திருக்ள | 564 |
| மதிக்கு நாலேழு | 597 |
| மதிதனில் காலை | 517 |
| மதித்த மூன்றதில் | 704 |
| மதிமகன் வாச | 201 |
| மதியுதிக்கக் கால்நாட்டி | 518,519 |
| மதுக்குடம் மாங்கி | 79 |
| மத்ததோர் திக்கு | 291 |
| மத்தியில் புத்து | 545 |
| மந்தமாம் வாத | 232 |
| மந்தவா ரத்தில் | 746 |
| மந்திரி ஏழில் | 445 |

| | பாடல் எண் |
|---|---|
| மயன்மரம் வெட்டும் | 119 |
| மரத்தினை முகூர்த்தம் | 127 |
| மருவியே மயனார் | 558 |
| மலர்தரு கற்பம் | 610 |
| மறையவன் தர்ப்பை | 177 |
| மறையும்நல் மறையோர் | 108 |
| மறையொலி ஓமம் | 516 |
| மற்றநாள் கிருஷ்ண | 371 |
| மனைதனில் வந்து | 288 |
| மனைதனை அளந்து | 311 |
| மனையது கோல | 78 |
| மனையது பெயர்த்து | 571 |
| மனையு முழக்கோ | 619 |
| மனையைச் சிறுகோ | 620 |
| மன்றலார் மனையின் | 189 |
| மன்னிய நிறைகுபட | 80 |
| மன்னிய முழமாம் | 630 |
| மன்று மேவும் | 448 |
| மன்னே பருந்து | 696 |
| **மா** | |
| மாடமா ளிகைகள் | 96 |
| மாதவி யாகாதம் | 390 |
| மாமரம் தேவர் | 106 |
| மார்கழி நாசம் | 260 |
| **மி** | |
| மிக்கதோர் ஆனி | 285 |
| மிட்டு மேஷ | 215 |
| மிதுனத்தில் வீடு | 378 |
| **மீ** | |
| மீனத்தில் வீடுமனை | 387 |
| மீனமும் ஆடும் | 270 |
| மீனொடு ஆடும் | 271 |
| **மு** | |
| முச்சதுரான பூமி | 23 |

| | பாடல் எண் |
|---|---|
| முடிபருத்து வட்டமிடில் | 525 |
| முடுக்கு வீதிகள் | 549 |
| முதுதலை இரண்டும் | 134 |
| முத்தத்து நீர்கள் | 306 |
| முந்திய முழத்தை | 627 |
| முப்பதும் ஒன்று | 350 |
| முப்புரிய தாயொடு | 176 |
| முளைதனை இடக்கை | 180 |
| முளையது சொல்லிற் | 179 |
| முன்பதில் அருக்கன் | 736 |
| முன்னிய முகூர்த்தம் | 522 |
| முன்னிற்கும் ஆயத்தை | 728 |

**மூ**

| | |
|---|---|
| மூங்கிலிற் செய்த | 167 |
| மூங்கிலுடன் ஆச்சா | 107 |
| மூடிரண் டாக | 530 |
| மூவேழும் ஒன்று | 341 |
| மூவைந்து அகல | 330,331 |

**மெ**

| | |
|---|---|
| மெள்ளவே பங்குனி | 369 |

**மே**

| | |
|---|---|
| மேசத்தில் வீடுமனை | 376 |
| மேட மிடபம் | 447 |
| மேய வாஸ்து | 281 |
| மேல்பால் மனையோ | 65, 309 |
| மேலும் புதன் வாசல் | 200 |
| மேவிடு மனுஷம் | 405 |
| மேவிய ஒன்றி | 614 |
| மேவியசீ ரிலக்கன | 433 |
| மேவும் உத்திர | 488 |
| மேஷவை காசி | 491 |

**மை**

| | |
|---|---|
| மையமே மனைகள் | 130 |

| | பாடல் எண் |
|---|---|

**யோ**

| | |
|---|---|
| யோனியது எட்டதற்கே | 684 |
| யோனி பருந்து | 686 |

**ரோ**

| | |
|---|---|
| ரோகனி பூரம் | 730 |

**வ**

| | |
|---|---|
| வக்கனா வாகை | 111 |
| வருத்திடும் துலாம் | 471 |
| வஞ்சி கேளும் | 51,470,608 |
| வடக்கொடு கிழக்கு | 126 |
| வடபா லீசன் | 537 |
| வடபால் மனை ஓங்கி | 64 |
| வட்டமாம் பரிவே | 583 |
| வட்டமுக் கோணம் | 24,548 |
| வட்டமுங் கொடிய | 582 |
| வண்டுடன் அரணை | 93 |
| வத்திப்போய் சிறுக்கில் | 31 |
| வந்ததோர் மனையின் | 192 |
| வந்திக்கும் கதிர்க்கும் | 580 |
| வரவு சொல்லும் | 16 |
| வருங்கடக மகர | 436 |
| வருணனாம் மேற்கு | 37 |
| வருணன்மேற் றிசையிற் | 417 |
| வருமே சதயம் | 407 |
| வருமே வகுக்க | 399 |
| வரும்பெரும் செல்வம் | 308 |
| வலமிகச் சொலினும் | 88 |
| வளவது வாசல் | 183 |
| வளையொடு விட்டம் | 12 |
| வன்னி கன்னி | 113 |

**வா**

| | |
|---|---|
| வாங்கிய நேங்காய் | 528 |
| வாணமாம் சுவரில் | 605 |
| வாத்துவின் கிடைய | 280 |

| | பாடல் எண் |
|---|---|
| வாத்து புருடன் | 283 |
| வாலு யோனி | 691 |
| வாயு மேல்மனை | 418 |
| வாயுமூலை தன்னி | 38 |
| வாரநற் திதிநாள் | 431 |
| வாரநாள் கொள்ளும் | 660 |
| வாரமது ஏழுக்கு | 656 |
| வாழ்வுறும் மனையில் | 544 |
| வாரது கேளாய் | 87 |
| வாறிட்டார் துவிதிகை | 372 |
| வானமாம் சுவரி | 605 |
| வானரம் சுனங்கன் | 82 |
| வானுடய தேவர் | 481 |

**வி**

| | |
|---|---|
| விசையம் தரும்பிணி | 667 |
| விண்ணோங்கும் இலவு | 154 |
| விருப்பதை ஒன்பதாய் | 190 |
| விரிகதிர் மாமகம் | 578 |
| விருத்தியாம் சிம்மம் | 698 |

| | பாடல் எண் |
|---|---|
| வில்லினில் வீடுமனை | 384 |
| வில்லொடு மகரம் | 268 |
| விழுந்திடும் மரத்தின் | 125 |
| விளங்குசெங் கதிரோன் | 734 |
| வெட்டிய மரத்தின் | 123 |
| வெட்டிய வாயில் | 124 |
| வெல்லிடும் யோகம் | 639 |
| வெள்ளிதனில் வாசல் | 204 |
| வெள்ளிய புறா | 89 |
| வெள்ளியும் வாச | 205 |
| வெள்ளிவி யாழன் | 500 |

**வே**

| | |
|---|---|
| வேதநான் மறைக | 2 |
| வேணுவோர் எட்டது | 159 |
| வேந்தன் சிங்கம் | 532 |

**வை**

| | |
|---|---|
| வைத்த சுவர்கன | 239 |
| வையதோர் வியாழம் | 505 |

## பின்னிணைப்பு -2

### உதிரிப் பாடல்கள்

அடுத்தமனை சுவரதுவும் வகையில் லாட்டால்
அறம்புறமும் கோபத்தில் சேத்துப் போடு
விருத்த இதற் கப்பாலே போனால் குற்றம்
வீறாகும் மனைபாழாம் விரும்பி செய்யே. 1

*(886 c : 31)*

ஒன்றிய தெருக்கள் இருவீதி நடுவெல்லை
கண்டிரு பத்தேழு பனிரெண்டு நவபாகம்
கொண்டு சரியான மனையுமங் குணமதாகும்
துண்டுகுறை சேருவது சூழம்மனை பாழே. 2

*(886 c : 33)*

நாற்றிசை தெருக்கள் சந்து
நடுபட்ட மனையொ ழுங்கை
பாத்து ஒன்பது குறக
பகர்ந்திரு மனைசே ராமல்
சாத்திய வரையிக் குள்ளே
சரிமனை மிகவும் நன்றாம்
சேர்த்திடு மனைகள் சேரில்
சிதைந்திடும் மனை பாழாமே. 3

*(886 c : 24)*

மேவுமா திரையே நண்டில்
இல்லற மனையில் சேயில்
ஏவிய கோண நான்கும்
எட்டியின் முனையை நாட்ட
தீமிரு கங்கள் வீட்டில்
எலிகளும் நாவாய் தானும்
தாவிடார் மனையில் சாரார்
சாருமே மரணம் தானே. 4

*(886 a : 165)*

நல்ல மனையில் சுவருக்கன
திசையில் பிள்க்கில் நாசம்சேர்
அல்லல் அறும்பொன் சாவுபுதன்
அழகாம் புகர்மேல் ஆக்கமதாம்
கொல்லுங் காரி மதிநேயம்
கூத்தன் பாம்பாம் எனக்கொள்க
வெள்ளை அருக்கன் சேய்குருமால்
புகர்சுன் பதிபாம் பெண்டிசைக்கும் 5

*(886 a : 181)*

அரியதோர் சுவர்க் கனத்தை
ஆறது கூறு செய்து
நிலைப்பாக நின்ற கூறில்
நிலையது மையம் தன்னில்
சரிவர இலக்க வேண்டாம்
சாஸ்திரப் படியே நீதான்
பரிவாக ஒன்று தள்ளி
பாங்குடன் வைக்க நன்றே. 6

*(886 c : 48)*

மூன்றுநிலை எதிராகி முன்கம்பம் பின்னழியும்
தூன்றுநிலை நாலாகில் சுகமுண்டாம்- வேண்டி
எதிராக நிலைவைத்தால் ஏணிப் படிபோல
முதிராமல் முன்னுயர வே. 7

*(886 c : 28)*

ஒத்தைதான் ஒத்தொகை ஒத்தேயோடேத்தவரி
ஒத்தே பிளாச்சு குடியெட்டும் - மெத்தநல்ல
ஒத்தேநிலை அனுகூலம் நேர்கம்பம் உத்திரமும்
நத்தைபட லாகாது காண். 8

*(886 c : 27)*

ஊர்தல் மரைகள் சாதி
உகந்த மன்நவர் திசைகள்
சார்பு பலகணி வாசல்
தக்கதோர குழியில் காணார்
நீர்விடல் மண்ணி வித்தம்
நீள்மனை பேத்துக் கட்டல்
வேர்தரு உழவு மிக்க
திருப்பிடம் அனைத்தும் சொல்வாம். 9

(886 a : )

ஓதுபொன் புகரொ துங்க
ஒண்டொடி கர்ப்ப மேய
மேதகு மனைகள் செய்ய
விளங்கிய கர்ப்பக் கேடாம்
சீதவெண் மதியம் போலும்
சிறப்புள்ள முகத்தி னாளே!
மாதவன் அறியச் சொன்னோம்
மனைவிக்கே மரணம் காணும் 10

(886 a : 189)

தெற்கொடு கைதெற் குணுப்பு
தேவா லயத்து மதிளுக்குமின்
ஊர்க்கும் அக்கினி எமன்நிருதியில்
ஊர்கு ளங்கள் உத்தித்திலிடில்
பார்க்கவே விவரப் புகுத்தல்
பார்வைநார் பதடி தீரும்
தாற்குள் வரவு செல்வமுடன்
சம்பத் துண்டாம் மனைசெய்யே. 11

(886 c : 46)

வாசமாம் பூமி தன்னில்
வகுத்துநாற் கூறு செய்து
பேசிமா நிதிபூ தங்கள்
பெரியதோர் வித்தை செல்வம்

ஈசனார் கண்டம் தன்னில்
இன்மனை எடுக்க வேண்டில்
ஓதினார் தமிழி னாலே
உத்தமம் இதுவே என்றார். 12

*(886 a : 133)*

நன்குலம் தானவர்க்கும் நாவிலயன் பூனவாகம்
தென்திசையும் மேல்திசையும் இருவர்வை சியருக்கும்
பொன்குலவு மேலவை பூதல மலர்க்கு
வன்குல வடதிசையும் கீழ்த்திசையு மாகும். 13

*(886 a : 173)*

### நடுமனை

### மனையின் அமைப்பு

பட்டமாங் குறுகி நீளம்
பார்வையாய் ஏத்தி மூன்றில்
முட்டவே தொகையைக் கட்டில்
மூன்றுக்கு ஈந்த சேஷம்
திட்டமாம் ஈசன் மூலை
சிறக்கமுன் வைத்தும் எண்ணி
நட்டமில் லாது வந்த
நடுமனை அதுவென் பாரே. 14

*(886 a : 134)*

### கதவு குணம்

உத்திரத்துப் பத்திதனை ஒன்பது கூறுசெய்து
பித்துவலம தாக்கிப் பிறப்பட்ட பத்திதனை
அத்துகை நடுவைத்து அகலத்தை துயர்நீக்கி
ஒத்துமத் துயரமில்லை ஒள்ளிய னுரைத்தநூலை. 15

*(886 a : 174)*

முனைக்கிந்திரன் சிலரீசான முதலாக வைத்து
தனச்செலவாம் துர்ப்பலம் தநலாபம் தருமுத்தமம்
நினைக்கும் தனமும் சவுரியம் குரோதம் நீடுபயம்
தனக்கும்ப மாமுலை மாதே ! தரவெட்டுஞ் சாத்துகவே.

*(886 a : 229)*

எண்ணும் வடக்குச்சுவர் வாய்வுமூலை இடமுதலாய்ப்
பண்ணிய பாரிக்கிச் சேதமும்துற் பலமானியுடன்
வெண்ணிருந் தானியம் பொருள்வரத் தாகுமிகு சம்பத்து
கன்னியே வீதிவுட னாற்பத்தெட்டும் கதவுக்கென்னே. 17

*(886 a : 228)*

சேயுதிக்க மண்பூசி தினகாணில பூசித்துத்
தாய்சனிக்குக் கதவு தாளிட்டு - ஆய்மனைக்குள்
வாசலுக்குள் மாதே மாளிகைக்குள் நாயகமே
பூசித்து நித்தம் புகழ். 18

*(886 a : 187)*

கடுகுடுங்கு கொத்து மருதம் வசம்பு
கனமொடு குக்கில் வகைதான்
சுடுசுக கெருக்குள பமிதுக் குத்து
கடீர்புடலோ மனையில் கடிமிக்க தூற
மிருதேள் முசுட்டைக் குமியசவ மகாவிடம்
முதற்பேய்கள் தனதானியங்கள்
மிகுமென்பார் மேன்மை யவரே. 19

*(886 a : 190)*

காலில் நீளமிரு நாலுசெய்து கதவின்
படிகநடு அறதை சேஷபாகம் நவபாகம்செய்து சீழும்
நாலுயன் மதன்மேல் அஞ்சதாம் ஆதி
அத்தமோ ரத்துசெய்து அதிலெட்டறைய கண்டதாம்
ஓதுமோதும் விரலொன்றும் மூன்றரையும்
உண்மையாறு விரலொக்குமே. 20

*(886 a : 176)*

அங்கார கன்மத் தானத்துக்
கதிபனை தாகுருவே
தன்காத லுடனோக்கு நீர்அவர்
தங்களைச் சாரில்

இங்காசை யினுதைய செயில்
வருவார்முன்ன மிறைசேர்
செங்கார் புரிசெண் டனதிகையுங்
குருத்தொய்தே. 21

(886 a : 203)

## யாத்திரை

இலகதிகள் சூலம்போல மூன்றுங் கீறி
இடமாக யாத்திரைநாள் நடுவே வைத்து
வலமாக இவைகளெல்லாம் தொட்டே எண்ண
வழிபோறவன் பிறந்தநாள் நடுவே யாகில்
பலமிகவே உம்டாகும் பயனங் கண்டீர்
பக்கத்தில் ஈராறும் பயமுண் டாகும்
தலையான கடைச்சூலச் தெதிரே யாகில்
தலையரிவன் உயிர்விடுவன் சாவாங் கண்டீர்
தப்பாது சிவனறியச் சாத்தி னோமே. 22

(886 a : 222)

காலின் நீளம் ஈரைந்து
கூறு செய்து கவின்படிக்கு நடு வாறரை
மூல சேட மோரேழு
செய்து மூன்று கூறாக்கு படிக்கனம்
நாலு கூறது மேல்தேகம்
நவின்று மூன்று மொடுகீழதே. 23

(1005 a)

## ஆயுள்

பொருத்ததில் வந்த ஆயுள்
பொருந்திய கு......காகும்
பொருத்தமச் சுக்கு மூன்றும்
பிறங்குமண் டபத்துக் கைந்தாம்
திருத்தமாங் கருக்க வலுக்கு
செப்புஈ ரைந்தாம் கல்லு
உரைத்திடும் உச்சி மூடில்
ஒருநூறு பங்க தாயே. 24

(886 c)

**சீவன் பார்க்க**

உத்ததோர் துரகம் பத்தும்
உதிரியாய் பூர்ம சீவன்
கத்தோர் ரேஷப ணும்
காட்சியாய் அர்த்த சீவன்
மெத்ததோர் வாழ்வுண் டாகும்
வினையொரு தீதும் இல்லை
அத்ததோர் புரட்டை மூன்றும்
அரிதியாய் உறைசெய் தாரே. 25

*(886 b : 44)*

**பஞ்சத் துருவம்**

மிருத்துவுக்கு நால தாமே
மிகுமக்கினிக்கு பனிரெண் டாகும்
நத்திய ராஜன் பத்து
நலமில்லாச் சோறாம் எட்டாம்
சித்தியில் லாத ரோகம்
தெசமிபஞ் சமியும் சேர்த்து
பத்தியாய் உலகில் யார்க்கும்
பஞ்சகத் திருவம் கூட்டே. 26

*(886 b : 43)*

**மனைக்கு வயது**

மனையில் வந்ததின் முதலாய்
மாமுதல் வறையில் எண்ணி
இனித்துடன் நாலிற் கீந்து
இருந்ததே நூறில் வெத்தி
பனிக்கடல் சூழும் இந்தப்
பாருள்ளோர் மனைத னக்குக்
கனிவுடன் வயதாம் என்று
கருதியே மயனார் சொன்னார். 27

### வாசல் வைக்க

தலக்கடை புறக்கடை தான்சம னாகிடில்
தான்பெறும் செல்வம் தாழ்வது மில்லையே
தலக்கடை உயர்ந்து புறக்கடை தாழ்ந்திடில்
தான்பெறும் செல்வம் தாழ்வதும் இல்லையே
தலக்கடை தாழ்ந்திடில் தாழ்வது வந்திடும்
புறக்கடை உயர்ந்திடில் புலப்படும் துன்பமே.28

*(886 b : 52)*

### கரணம்

சதிர மாந சமனெறுநீ ளத்தை
பதிர மாய்பணி ரெண்டாய்ப் பகர்ந்துபே
முதிர ஐந்துமுன் நீளத்தைக் கூட்டியே
மதிர மாயன் மதித்தார் கரணமே. 29

*(886 : 51)*

### வருஷம், மாதம்

ஏய்ந்திடு முழத்தை இணங்கியே இருபத்
தேழினில் பெருக்கிய தொகையை
வாய்ந்திடும் அறுபதி னிற்கழித் திடவே
வரும்பிரப வாதியாம் வருடம்
ஆய்ந்திடு மதலையாங் கினிற் பெருக்கி
ஆறிரண் டினிற்கழிப் பதுதான்
தோய்ந்திடு மாதம் சொல்லுவ ரன்னோர்
சுரிகுழற் பனைமுலை மாதே ! 30

*(886 c : 46)*

கருதிய பூமி தன்னில்
கனத்தநீர் கிழக்குத் தெற்கு
பெருகிய செல்வம் உண்டாம்
பிறம்பிக்கும் வடக்கு மேற்கும்

உருகிய உறைநீர் தாழ்தல்
உத்தமம் மேல்நீர் காண
மருமலர்க் குழலாய் கேளாய்
மனைவிதி இடந்த தென்றே. 31

*(886 a : 152)*

**பலகணி**

வடசார் தெஞ்சார் மருவும்
தென்சார் வடசார்
ஊவே கீழ்சார் மேல்சாரம்
உற்ற மேல்சார் கீழ்சாராம்
போதவே வலமரம் பெருக்கப்
பேணிப் பலகணி தாந் விட்டால்
தீதுவே நீங்கும் குற்றமில்லை
செய்து வார்கோளு மிக்கோரே. 32

*(886 a : 84)*

**பொது**

காசினியில் மூவோர்க்குக் கடுறுகத்தை
துளையாக்கிக் காலி மாய
தேசமுடன் அடுத்தறியன் நெல்லுத் தீயன்
திகழ்ச்சிஇலாக் கொழு முனையைக் கள்ளர் கொள்வார்
மொழிதன்னை மரண மாகும்
வசையுடனே இவையறிந்து விரும்பு வீரால்
ஈசனுடைய ஈராறும் உழவாம் என்று
இக்கரு மனல்புலவோர் இயம்பு வாரே. 33

*(886 a : 220)*

பருதிநின்ற நாள்தன்னை மைந்தின்
பகர்ந்திட்ட நாளுடனே ரெண்டும் சேர்த்து
விருதமுடன் நேர்கிழக்கு மூன்றும் வன்னி
வீட்டிலிரு மூன்றப்பால் ஐந்தே யாகும்

நிருதிதனி நேமூன்று மேற்கு ஐந்து
நிலைவாய்வு மூன்றுடனே வடக்கு ரெண்டாம்
அருதருந்து யோச்சூறல் மூன்று நான்கு
ஆகாது மத்தெல்லாம் ஆகும் தானே ! 34

*(886 a : 221)*

அண்டு கிழமை யதுதனக்கு
அஞ்சாங் கிழமை ஓரைந்தாம்
ஒண்டுக் கிரண்டரை நாழிகைதான்
உதிக்கு மதற்கா ளுங்கிழமை
மண்டில் அருக்கன் புகர்புந்தி
மதியும் சனியும் சேர்பலன்கள்
பொண்டு மனமும் எப்போதும்
புகழ்ச்சி மனையில் புகற்கலையே. 35

*(886 a : 76)*

ஆரணங்கே பூரம்வகை கேட்டை மூலம்
அரவம்வி சாகம்அனு சம்சா மென்றார்
இராசியுடன் மூவிருத்தை தசைசாலும் உறவு
அதுலேவரு கினண்ட செம்பொன்மதி மேதை
வெள்ளி வருகின்ற வாரமதிலே புரமுந்து கோயில்
நகரங்கள் வீடுபுக நன்றதாகும் இதுவே. 36

மங்கைமுதல் மூளனாவி யின்தலை கிழக்காம்
மன்னுசிலை ஆதிகரம் உண்டுதலை தெற்காம்
பொங்குதலை மேற்குமுதல் மீனமுதல் மூன்றில்
பொத்துமீது னத்தினொடு மீண்டது வடக்காம்
மங்கய்கு தெற்கோடு வடக்குமா கிரகச்
சொள்லுநிலை வீடுசெய் வதனையாகும்
செங்கிரண் வண்டிசை மேற்குமுக மாகில்
செய்யவினி தாய்மனைகள் தெற்கொடு வடக்கே. 37

*(886 a : 196)*

அடுப்புடன் ஐந்தும் அனுஷமுதல் நான்கு
முடிப்பிரிப்ப தாகில் இம்மூன்று-நடுகடலில்
கோல்போட்ட நாளும் கொடியபூ ரட்டாதி
நூல்கொண்டு போடாத நாள். 38

*(886 a : 70)*

மிஞ்சுநவம் கார்த்திகையும் மிக்கெட்டு ரோகணியும்
மிஞ்சுநான்கு உத்திரமும் மின்னாளதனில் நட்சத்திர
முந்தியும் பிரிபோட னாளதனில் மனைகோலில்
துஞ்சுவா னாண்டுரெண்டில் சொல். 39

*(886 a : 69)*

பாய்ந்து வாயு தெற்கு
பரிவுடன் ஈசன் மேற்கு
ஆய்ந்ததோர் வடக்கு அங்கி
அவன்தலை நிருதி ..... கால்
வாய்ந்தஇம் மூன்றே மூக்கால்
வாஸ்துவின் கிடக்கும் வாறே. 40

*(1005b)*

காலமே சிவந்த வர்ணம்
கனகமாம் உச்சி நேரம்
சோலையோர் அந்தி வர்ணம்
சுரிகையாம் சொக்க மாகும்
பாலனார் இருக்கும் வர்ணம்
பன்னிரண் டிருந்து பார்ப்பீர். 41

*(1005 b )*

ஏழடு பிடிதிருவு ஒன்பது என்னு பின்னமும்
பதிமூன்றடி பதினாலடி மனையளக்கக் கேடு
பாழதாம் பதினஞ்சடி பதினேழடியும் குலைத்திடும்
பதினெட்டுக்கும் குடியோட்டுமே இருபத்து மூன்று
விலங்கிடும்

சூழவே இருபத்து னாலடி ஆக்கமெய்து மிலலையே
தண்டயே இருபத்து அஞசடி தொல்லை
சூழவினை எய்திடும் மறமான இருபத்து ஆறடி
அத்தையென் மரணமென்றுமே மாகமா
இருபத்து எட்டடி ஆகாதென்று மொழிந்திட்டேனே. 42

*(886 a : 92)*

ஆறு நூறு பலன்கள் தன்னை
அறியச் செய்யும் அமிசம்
ஏறு மாறு நடத்தை கொடுக்கும்
யோக மாரந யோனியில்
பாறு பாறு யிதுப பலன்கள்
பார்பார் பதியின் அருளினால்
வாறு வாறு குறிப்புச் சொல்ல
விரைந்து வகுத்து உரைத்தனர். 43

*(796 : 26)*

எண்ணரவு முகத்தினால் மூன்றுந் தியன்
இதில் கழுத்துத் தான்மூன்றும் இகல்வெள்ளத் தழிவு
உண்ணுமுடல் ஈராறு வயர்மூ லங்கள்
ஓங்கியே நெல்விளையும் உத்ததுயர் தீரும்
கண்ணெணவே இடவெட்டு ஆறு நாளும்
கதிர்ச்சாவி போகுமெனக் காண லாகும்
தன்னளவே வால்தனிலே மூன்று நாளும்
தாள்சாவி யாய்போகும் தான்கண்டீரே. 44

*(886 a : 217)*

அணிமுடி ஏழு நாளும்
வாஸ்துவின் கிழக்கு நோக்கும்
இனிசதயம் ஏழு நாளும்
இயல்புடன் வடக்கு நோக்கும்
தனிப்புறு ஆவணி யாலும்
தனித்துடன் மேற்கு நோக்கும்
மணிமக மேழு நாளும்
வாஸ்துமன் தெற்கு நோக்கும். 45

*(886 a : 121)*

எட்டிவெகு ராச்சியம் இயல்பான பத்தடிதான் பாக்கியமாகும்
இன்பமிக எய்திடுமே பதினொன்றடி
திட்டமான பனிரெண் டடிதான் செல்வமுண்டு பிளவாயில்லையாம்
தீர்க்கமாக வெகுநன்மை யுண்டு வாச செப்பலாம் பதினாறடி
முட்டவே பதினொன்ப தாம்படி கிளைகூட்டு மென்று
மொழிந்திட முன்போ லிருந்து ஓரடிகிளை
கூட்டு மென்று மொழிந்திட்டேன் பட்டமாம் இருபதடியும்
ரெண்டு பலனுண்டு எதிரி யஞ்சுவாம் பார்க்கின்
மேலிருபத் தேழடியும் ரெண்டு பாக்கிய முப்பதடி பகருமே. 46

*(886 a : 91)*

வாஸ்துமன் தலையி லேரில்
வஞ்சமாய்ப் போரா மண்டோர்
பார்த்தவன் எதிரே காணில்
படபாடன நடுங்கி வீழ்வன்
பூத்தொழில் மாலை மார்பன்
புருஷனைக் கிடப்பா னாகில்
வேத்துடன் நடுங்கி வீழ்வான்
வேணுமே லோகத் தோரே. 47

*(886 a : 120)*

அடர்ந்ததாய் மனையி ருக்க
அதன்கிளை மனையே செய்தால்
தொடர்ந்துகீழ் பானுக் குமேல்
சுவர்கள் முதலாம் தச்சுப்
படர்ந்தகோ லால்அ ளந்து
பதினொரு முகூர்த்தம் பார்த்து
குடந்தையில் மாதம் தன்னில்
கோலவும் மயனும் சொன்னார். 48

*(886 a : 104)*

தென்வடல் கிழக்கு மேற்கு
திரும்பவும் மனையே செய்தால்
முன்னுள தாய்ம னைக்கு
முளைத்தனால் சுவர்க னத்தை

தொன்னகோல் கொண்ட ளந்து
துகைவகை நலம தாக
உன்னிய மனைகள் கோல
உத்தமம் மிகுதி என்றார் 49

(*886* a *: 105)*

ஆதிநாள் ஏழ தாகும்
அருஞ்செவ்வாய் ஆற தாகும்
வேதியர் அஞ்ச தாகும்
மிகுபுதன் நால தாகும்
சாதியாய் வெள்ளி மூன்றே
சனிமூன்று திங்கள் ஒன்று
நீதியாய் இராவு காலம்
நித்தமும் அறிந்து கொள்ளே. 50

(*886* a *: 214)*

வெய்யவன் ஒட்டி ரெட்டி
இதுவரை செவ்வாய் நாலு
பையவே சமனாம் புந்தி
பார்ப்பான்கால் பளிங்கு முக்கால்
ஐயமே சனியொன் றெட்டு
ஆநதோர் கிழமை தன்னில்
தையமா வாசை வந்தால்
சாத்தினோம் தரணி யோர்க்கே. 51

(*886* a *: 215)*

காரதொண் மனைக்கு ரெண்டு
கருதுவாய் உரைக்கில் பத்து
மால்கொண்ட மனைக்கி ரெண்டு
வழிப்போக்குக் கைந்து
சேல்கொண்ட பிரதிட்டைக் காறும்
மயிர்வினை முடிசீ மந்தம்
மேல்கொண்ட நாம்இன் னூல்
கேட்டிடம் அசுத்தம் என்னே. 52

கிடந்த பதியை நாலேழாய்க்
கீறி யதன்மேற் பரிவைத்து
இடங்கொள் அவனா ழின்டமட்டும்
இருக்கும் அக்கினி பந்தமதாம்
குடந்தை சலமும் சூரியனும்
சோம னுதிப்ப எனவுரையே
நடந்து சோமன் சலத்திலும்
நல்ல மனைகள் தனைக்கோலே. 53

(886 a : 128)

உரைசேர் அக்கினி பந்தமதில்
உஷ்ணம் வலுக்கும் உள்வினையாம்
வரையான் சலத்தில் வாழ்உண்டாம்
வறுமை காணும் சூரியனில்
விரைசேர் குழலாள் ! மதிவாழ்வு
விரித்த படியே மண்டலத்தில்
பரியா மனைக்கத் தொடுத்துவைத்த
பந்தம் ஏத்தம் பார்த்துரையே ! 54

(886 a : 129)

தேனாரும் இறையா றெட்டுத்
திருந்திய முழோ ரெண்டு
சாணாலு அடியேழ் பாதி
தனதுனா அளந்து மையக்
கோலினால் கொண்ட ளந்து
கண்டகுழி நாள்ராசி செய்வம்
வாழும்நாள் கருப்பம் அயவியம்
மகத்துவம் யோனி மாதே. 55

(886 a : 133)

தென்திக்கில் அக்கினி ஆதியாகச் சிவதாக்கு
மன்திஷ்டி வாசல்விட மத்திபமும் வருத்தமுடன்
தன்துற் பயமும்தன லாபதானிய லாபமுடன்
குன்தன் சுகமும்வியாதி யந்துர்ப்பலம் கூறுகவே. 56

(886 a : 230)

முழஞ்சான் பிடிகளிறு முழமிரண் டாழிவிரல்
வழஞ்சேர் மூவெட்டாங் குலமாம் - குழஞ்சேர்
பத்துவது பார்த்துப் பாசியுடன் சாணொடுநாள்
பத்தமே மத்திபத்தில் ஆழி முழவரை இரண்டே. 57

*(886* a *: 403)*

தலைநரி பதியுங் காரி
கலந்துடன் இருப்ப தென்றால்
சிலையது கருங்கல் காணும்
செங்கல்லும் கூடி நின்றால்
வலைசெறா வெங்கலம் பித்தளை
...... ...... யோ டெலும்பு
தலமதில் காணும் என்று
தாழ்சடை முனிவர் சொன்னார். 58

*(1005* b*)*

வந்துயர் கருப்ப முத்தால்
மயிர்தனை சவரம் செய்யில்
முந்துருக் கருப்பம் கேடாம்
முடிந்தபின் பிதாவுக் கெய்து
மந்தாய சென்ம நாலில்
இறக்கலாண் பெண்சே யானோர்
நந்துமக் கருமஞ் செய்யில்
நாசமும் பயமு மாமே. 59

*(886* a *: 201)*

## பொது

புதியஆடை அணியும் நாட்கள்

அத்தஞ்சே ரவிட்டமுடன் நலத்திருவை அடையும்
அசுபதிசேர் புனர்பூசம் அரசமலத்தம்
உத்திரங்கள் மூன்றினொடு ரோகணியும் நன்றாம்
உயர்பூசம் சுவாதிநன்றாய் புத்திரனுண் டாகும்
சித்தரைநாள் பலவிதமாய் கூறையுண் டாகும்
திருந்துசெய்யும் செய்யுமணி சாகமுமிப் படியே
எழிலாடை உடுப்பநாள் இயம்பினார்முன் னோரே.

*(886* a *: 227)*

மங்கைதன் செனை மரண
    மூன்றுபத் தாறு மன்னும்
திங்களைச் செல்லாய் வந்து
    சேர்ந்திடிற் கிரந்து நோக்கிற்
பொங்குசீர் மலம யன்றே
    புகழ்ந்தமூப் பிளமை யன்றே
தங்கிடுங் குப்பம் பூவா
    தக்கவர் ...............னாரே. 61

*(886 a : 200)*

வித்தவேணு மென்றால் வெள்ளிநின்ற நால்முதலாய்
அத்தமிரு மூன்றும் ஆகாது - மெத்த
வினையுளம் யீராறும் மேலாறும் நெல்சாலி
அழியுமே ஐம்மூன்றுந் தான். 62

*(886 a : 218)*

**நட்சத்திர பலன்**

ஓதும் அஸ்தம் உறையும்உ ரோகணி
நீதி யாமவிட் டஞ்சதை யங்களும்
கோதி லாமிருக சீரிடம் பூசமும்
தீதி லாத்திரு வோணமும் நன்மையே. 63

*(886 c : 42)*

நந்மை யாஞ்சோதி நாட்டும் அனுஷமும்
துன்மை இல்லாத் துடர்சித் திரையுடன்
வன்மை ரேவதி வளமுத்தி ரட்டாதி
பன்மை உத்திரை டம்பார்க்கச் சுபமிதே. 64

*(சி. நூ . பா. 537)*

பார்க்க உத்திரம் பகரும்நட் சத்திரம்
ஏர்க்க வேபதி னான்கும் சுபம்தரும்
தீர்க்க மாஞ்சிற்ப நூலாய்த் திரட்டியே
மார்க்க மாமயன் வகுத்துரை சொன்னதே. 65

*(சி. நூ. பா. 538)*

குறிப்பு: இந்தப் பதினான்கு நட்சத்திரங்களில் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகியவை உடலற்ற நாட்களாகும். உத்திரம், உத்திராடம் ஆகிய இரு நட்சத்திரங்களும் காலற்ற நாட்களாகும். இவை மங்கலமான காரியங்கள் செய்யும்பொழுது விலக்க வேண்டும் என்று இதே நூலில், கூறப்பட்டிருப்பது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

**வாசல் விடுகிற இராசிப்பொருத்தம்**

கயல்கனி பார்த்த வாசல்
கல்வியும் பொருளும் உண்டாம்
இயல்பென எமனை நோக்கில்
எண்ணொணாத் துயர மாகும்
வயல்வடக் கதிக புத்தி
வாயுவால் வழக்குச் சண்டை
புயல்பல மறியும் கும்பம்
புண்ணியம் புகழுண் டாமே. 66

*(சி. நூ. பா. 599)*

## 796 மனையலங்காரம்

### கடவுள் வாழ்த்து

சக்தியுடன் சிவன்கரந்தாள் சகலமனை யலங்காரம்
இத்தலத்தில் சண்முகனார் எனக்குரைத்தார் நித்தநித்தம்
பத்திபத்தி வித்தைதரு பாலமுர்தம் பசியாற
சித்திஒத்தைக் கொம்பன் சீர்பாதம் காப்பாமே. 67

### சிற்பநூல்

உத்ததோர் வள்ளி நாடன்
உயர்தரு மாந்தை வேந்தன்
கத்ததோர் சிற்ப நூலைக்
கலைகளும் பலவும் காணப்
பெத்ததோர் பெருமாள் மைந்தன்
பிச்சைசொற் தமிழைப் பேச
கத்ததோர் அறிவிப் பார்தன்
கழலிணை தலைமேற் கொள்வாம். 68

சராசரம் முதலாய் எங்கும்
தானவ னான ரூப
சிரமைந்து விழிமூ வைந்து
திகழ்கரம் இருப தாகி

பரநுதல் விழியிற் றென்றும்
பரப்பிரம விசுவன் என்ற
விரவுவன் ஐந்து பேத
விபரத்தை விளம்ப லுற்றேன். 69

*(இ. ள்) சரமாகிய அசைவும் அசரமாகிய நிலைய்யும் இருவகையிலும் கூடிய தொகை என்பது இலட்சம் சீவராசி. இதிலே எங்கும் தானவனாய் விளங்கிய வஸ்துவாகிய பராபரன் ரூபம் பஞ்சமுகமும் பதினைந்து கண்ணும் இறுபது புயத்தொடும் கூடி விளங்கிய ஆண்டவனுடைய அக்கினி கண்களிலே உற்பத்தியாகி பரப்பிரமவிசுவன் என்னும் பேராகியவர் மகவாகிய மனு, மயன், தொஷ்டன், சிற்பன், விசுவக்கியா என்னும் ஐந்து பேர்களுடைய இலட்சணங் களைச் சொல்வாம்.*

### மனுப்பிர்மா

மனுப்பிர்மா கற்கே பராசக்தி கிலியும்
வளர்திரு கோணகுண் டமுமாம்
கனமெனும் ருக்கு வேதமும் வானோர்
கருதிய வெக்கிய மதுவாம்
தினநலந் துய்ய வெள்ளிமுன் நூலும்
திருந்திய தெண்டுவெள் ளியுமாங்
கனமெனும் வேத மேகவா கனமும்
கருதுவன் மனுவது தனக்கே. 70

(742- 3)

*(இ. ள்) மனுப்பிர்மாவுக்கு பராசக்தியினுடைய உபாசனையும் திருவென்னும் மூன்று கோண ஓம குண்டமும் முதலாகிய இருக்கு வேதமும் தேவதை எக்கியமும் வெள்ளி எக்கிநோப விதமும் வெள்ளித்தெண்டும், வேத மேக வாகனத் தொடும் கூடி விளங்கிய மனுப்பிர்மா.*

### மயப்பிர்மா

மயப்பிரம மதற்கே ஆதி சத்தியின்
கைவரு திருசூ லமுஞ்சதிர்
நம்பெறு குண்டம் பேசுறு வேதமுமாம்
நவில்பிதுர் எக்கிய மதுவாம்

கயமுறை வனச முன்னூ லதுவாம்
கருதிய கழையெனும் தண்டாம்
செயமுறு துரோண மேகவா கனமும்
செப்புவன் மயனது தனக்கே. 71

*(742-4)*

*(இ. ள்)* **மயப்பிர்மா இலட்சணம்:** ஆதிசக்தி உபாசனையும் சதிரச ஓம குண்டமும் இரண்டாவதாகிய யசுர் வேதமும் பிதுர்களுடைய எக்கியமும் தாமரை நூலாகிய முன்னூலும் மரமூங்கில் தெண்டுமது பேரான மேக வாகனத்தோடும் கூடி விளங்கிய மயப்பிரம்மா.

## தொஷ்டப் பிர்மா

தொஷ்டப்பிர மனுக்கே ஞானசக் தியின்கை
தொடு திரு சூலமும் விருத்த
இஷ்டமாம் ஓம குண்டமும் சாம
வேதமும் மனுஷரெக் கியமும்
புஷ்டிதாம் புரமுன் நூலுடன் தண்டு
புகலது தாம்பிர மதனால்
லஷ்கா சமுமாஞ் சலனமேக வாகன
மதுதொஷ்ட பிர்மனுக் காமே. 72

*(742 -5)*

*(இ. ள்)* தொஷ்டப் பிர்மா இலட்சணம். ஞான சக்தி உபாசனையும் விமுதாசரமாகிய ஓம குண்டமும் மூன்றாவதாகிய சாமவேதமும் மனுவிர் எக்கியமும் தாம்பிர முன்னூலும் தாம்பிரதண்டும் சலன மேக வாகனத்தொடும் கூடி விளங்கிய தொஷ்டப் பிர்மா.

## சிற்ப பிர்மா

மேவிய சிற்ப பிர்மனுக் கிச்சாச
சக்தியின் சூலமும் விரும்பு
தூவிய உயர்ந்த சஷ்டிகோண குண்டலமுமாம்
உகந்ததோர் வேதசாத் திரங்கள்

தாவிய ரிஷி எக்கியமுடன் பருத்தி
தகமைமுன் னூலுமண் தண்டு
ஆவியாம் பிரம்பு தூமமே கமுமா
அறைவன வாகன பதுவே. 73

*(742-6)*

*(இ. ள்)* ***சிற்பப் பிர்மா இலட்சணம் :*** *இச்சா சக்சி உபாசனையும் அறு கோண ஓம குண்டமும் வேதம், ஆகமம், சாஸ்திரம், புராணம் ரிஷி எக்கியமும் பருத்தி முன்னூலும் பிரப்பந் தண்டும் தூமமேக வாகனத்தோடுங் கூடி விளங்கிய சிற்பப் பிர்மா.*

### விசுவப் பிரமா

விசுவப்பிர் மனுக்கே கிரியாசக்தி சூல
மேவிய அஷ்டகோ ணமுமா
இசைமிகு குண்டம் அதர்வண வேதமுமாம்
இயலதாம் பூதாக் கிரியமும்
நிசமுயர் பொன்னின் முன்னூலுடன் தண்டு
நேருயர் சொர்ணமு மதுவாம்
திசைதமோ மேக வாகன மதுவாய்ச்
செப்பினன் விசுவனுக் கிதுவே. 74

*(742 -5)*

*(இ. ள்)* ***விசுவப்பிர்மா இலட்சணம்:*** *கிரியா சக்தி உபாசனையும் எட்டுக் கோணமாகிய ஓம குண்டமும் நாலாவதாகிய அதர்வன வேதமும் பூத எக்கியமும் சொர்ண எக்கினோஞாப விதமும் சொர்ண தண்டு தமோமேக வாகனத்தோடும் கூடி விளங்கிய விசுவப்பிர்மா.*

### காலத்தை நிர்ணயித்தல்

நாழிகை குளிகன் ஓரை
நல்லதோர் அருக்கன் சூலம்
சூழிய திக்கு யோனி
சுக்கிரன் இராசி மாதம்

வீழிலா வாஸ்து வின்றன்
விடமுறும் பக்க நாட்கள்
ஏழியல் வார முகூர்த்தம்
தியல்டினன் நிமித்தம் சொல்வாம். 75

*(886 a : 74)*

*(இ. ள்) நாழிகை, குளிகன் உதயம், ஓரை உதயம், அருக்கன்றிலை, சூலநிலை, திக்கு நிலை, யோனிநிலை, சுக்கிரநிலை, இராசி நிலை, மாத நிலை, வாஸ்து புருஷன் நிலை, விஷகடிகை, பக்கம்,ாட்கள், வாரம் முகூர்த்தம் முதலானவைகளை இனிச் சொல்லத் தொடங்குவோம்.*

## நாழிகை கூறல்

சுட்டியை முட்டி நின்று
சூரியன் வலம தாக
ஒட்டியே விரலே ழக்கு
முரியதோர் நிழலைப் பார்த்து
மிட்டிய விரலொன் றிற்கு
மேவிய இரண்ட தாகக்
கட்டிய பெருமை கண்டு
கடிகையாய்ந் துரைசெய் வீரே. 76

*(சி. நூ. பா. 290)*

*(இ. ள்) சூரியனை வலமாக வைத்து வலது சுண்டுவிரலை நடுவாக வளைத்து இரண்டு பெருவிரலுந் தவிர மற்றுண்டான ஏழு விரல்களையும் நேரே ஒட்டிப் பார்க்கில், ஓடின நிழலை ஒருவிரல் விட்டு நின்றால், இரண்டு நாழிகை சென்றது. முழுவதுமிப்படியே பொழுது சொல்லத்தக்கது.*

## வேறு

சுட்டுவிரல் மடக்கிச் சூரியர்க்குப் பக்கமதாய்
நட்டுவிரற் கிரயண்டு நாழிகையாய் -பாட்டில்
அடியாளக்க வேண்டாம் அலகுவைக்க வேண்டாம்
நொடியளவில் நாழி நுவல்.

## இரவில் நாழிகை பார்க்கும் முறை

உச்சமா மீனைப் பாரத்து
  உறும்பூச முதலாய் எண்ணி
இச்சையாய் இரண்டே காலில்
  ஏற்றிய தொகையின் கூறை
முற்சொன்ன மாதத் தைந்து
  மொழியாறு தெய்தி கொண்டு
நிச்சய மதனைத் தள்ளி
  நின்றது கடிகை யாமே. 77

*(சி. நூ. பா. 291)*

*(இ. ள்)* உச்சத்தில் நின்ற நட்சத்திரத்தைப் பார்த்து, பூச நட்சத்திரம் முதலாக நின்ற நட்சத்திரமளவும் எண்ணிக் கொண்டு இரண்டேகாலில் பெருக்கி, நின்ற தொகையைச் சித்திர முதலாகச் சென்று போன மாதத்தைக் கணக்குப் பார்த்து மாதமொன்றுக்கு ஐந்துபோக ஆறுக்கொன்று தள்ளி நின்ற சேடம் நாழிகையாம்.

## குளிகன் அறிதல்

அந்தக் கிழமை தனைதொட்டு
  ஆடும் சனியன் மட்டெண்ணி
முந்தி மூன்றே முக்காலில்
  முறையே பெருக்க வருங்குளிகன்
இந்தவேளை மனையெடுக்க
  ஏர்க்கால் நாட்டல் ஊரேற்றல்
தந்தி நரவா கனமேற
  தானிய மெடுக்க மிகநன்றே. 78

*(886 a : 75)*

*(இ. ள்)* எந்தக் கிழமையில் குளிகைக் காலம் பார்க்க வேண்டுமோ அந்தக்கிழமை முதலாக சனிக்கிழமை வரையிலும் கணக்கிட்டு வந்தத் தொகையேயை மூன்றே முக்காலிற் பெருக்கிக் கண்ட நாழிகையைக் குளிகை காலமாக்கிக் கொண்டு, மனைகோல, ஏர்க்கால் நாட்ட, ஊரேற்ற, யானை, பல்லக்கில் ஏற, தானியங்களெடுக்க மிகவும் நன்றாகும்.

பகற் குளிகன்

ஞாயிறு முகூர்த்தம் ஏழாம்
நன்மதிக் காறாம் செவ்வாய்க்
கேயவைந் தாகும் புந்திக்
கீரிரண் டாம்பொன் மூன்றாம்
தூயநற் புகர்க்கி ரண்டாம்
சுன்னுனுக் கொன்ற தாகும்
ஆயயின் முகூர்த்தத் தோடே
அற்றிடும் குளிகன் எல்லில். 79

## இராக்குளிகன்

கதிரவன் தனக்கு மூன்றாம்
கவின்மதிக் கிரண்ட தாகும்
சதிர்பெறு செவ்வாய்க் கொன்றாம்
சாற்றியே புகர்க்கே ழாகும்
மதிவளர் பொன்னுக் காறாம்
மன்புகர்க் கைந்தாம் நான்கு
கதிர்மகற் கரமு கூர்த்தம்
காட்டிய பகற்போற் கொள்ளே. 80

## பொது
## கண்ணுள்ள கண்ணற்ற திதிகள்

சந்தித்த பிறபக் கத்தின்
தசமிவிட் டதன்பின் னைந்தும்
முந்துள்ள வாதி நான்கும்
குருடுபின் ஒருமூன் றோர்கண்
பிந்திய வாறுங் காணும்
பின்னின்மூன் றொருகண் தானும்
சிந்தித்த வாறுங் காணும்
செப்புமூன் றொருகண் காணே. 81

(சி. நா. பா. 151)

*(இ. ள்)* அமரபட்சத்து ஏகாதசி முதல் ஐந்து திதிகளும், பூர்வபட்சத்துப் பிரதமை முதல் நான்கு திதிகளும் **குருட்டுத் திதிகளாகும்.** பூர்வபட்சத்து பஞ்சமி முதல் மூன்று திதிகளும் சதுர்த்தசியும் பூரணையும் அமரபட்சத்துத் பிரதமையும் அஷ்டமி முதல் மூன்று திதிகளும் **ஒரு கண் உள்ள திதிகளாகும்.** பூர்வ பட்சத்து அஷ்டமி முதல் ஆறு திதிகளும், அமரபட்சத்துத் துதிகை முதல் ஆறு திதிகளும் **இருகண்கள் உள்ள திதிகளாகும்.**

குறிப்பு: பூர்வபட்சத்துப் பிரதமை, துதிகை, திருதிகை, சதுர்த்தி, அமரபட்சத்து ஏகாதசி துவாதசி திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய ஒன்பது நாட்களும் குருட்டுத் திதிகள். பூர்வபட்சத்துப் பஞ்சமி, சஷ்டி, சப்தமி, சதுர்த்தசி, பௌர்ணமி அமரபட்சத்துப் பிரதமை, அஷ்டமி, நவமி, தசமி இந்த ஒன்பது நாட்களும் ஒரு கண்ணுள்ள திதிகள். பூர்வபட்சத்து அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, அமர பட்சத்து துதிகை, திரிதிகை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, இந்த ஒன்பது நாட்களும் இரண்டு கண்ணுள்ள திதிகள்.

## நட்சத்திரங்களும் இராசிகளும்

அசுபதி பரணி கார்த்திகை பாதங்கால்
அங்கே கொண்டது ஆமது மேஷமாம்
முசியும் கார்த்திகை முக்காலும் ரோகணி
மிரு சீரிடத் தரையது காளையாம்
மிருக மாந்தலை பின்னரை ஆதிரை
மீண்ட புனர்பூசம் முக்கால் மிதுனமாம்
பொசியும் பிண்டகால் பூசமோ டாயிலியம்
போத கொண்டது வேகற கடகமே. 82

*(2027 b : 12)*

*(இ. ள்)* அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் கொண்டது **மேடஇராசி.** கார்த்திகை பின் முக்கால் ரோகணி, மிருகசீரிட முன்னரை கொண்டது **இடபஇராசி.** மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் கொண்டது **மிதுன இராசி.** புனர்பூசம் பின்கால், பூசம், ஆயிலியம் கொண்டது **கடகஇராசி.**

புகழ்மகம் பூரம் பங்குனி காலும்
போத கொண்டது வேயது சிம்மமாம்
சிகளுத் திரமுக் காலுடன் அஸ்தமும்
சேர சித்திரை முன்னரை கன்னியாம்
மகிளுரா சித்திரை பின்னரை சுவாதியும்
வண்மை விசாகத்து முக்கால் துலாமது
நிகழவே விசாகம் கால்அ னுஷமும்
நேரும் கேட்டையும் கொண்டது தேளதே. 83
*(2027 b : 13)*

*(இ. ள்) மகம், பூரம், உத்திரத்தின் முதற்கால் கொண்டது **சிம்மஇராசி**. உத்திரம் பின் முக்கால், அஸ்தம், சித்திரை முன்னரை கொண்டது **கன்னி இராசி**. சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முதல் முக்கால் கொண்டது **துலாம் இராசி**. விசாகம் கடைசி கால், அனுஷம், கேட்டை கொண்டது **விருச்சிக இராசி**.*

கொண்ட மூலம் பூராடம் உத்தி
ராடக்கால் கோன்குரு தனுசது வாநது
பின்றி லங்கு உத்திராடம் முக்காலும்
பழமைசோ னைப்அரை அவிட்டம் மகரமாம்
மண்ணுவிட் டத்தின் பின்னரை சதயம்
மருவு செக்கு முக்கால் கும்பமாம்
பின்புரட்டை கடைசி காலுடன் தானும்
முரசு ரேவதி கொண்டது மீனமே. 84
*(2027 b : 14)*

*(இ. ள்) மூலம், பூராடம், உத்திராடம் முதற்கால் கொண்டது **தனுசு இராசி**. உத்திராடம் பின்கால், திருவோனம், அவிட்டம் முன்னரை கொண்டது **மகர இராசி**. அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முதல் முக்கால் கொண்டது **கும்ப இராசி**. பூரட்டாதி கடைசி கால், உத்திரட்டாதி, இரேவதி கொண்டது **மீன இராசி**.*

**திசைகள்**

திகழும் அசுவனி மகமுடன் மூலம்
கேசேழு வருசம் தாகும்
புகழுறு பரணி பூரம்பூ ராடம்
புகரிருப தாண்டே யாகும்
சுகவெரி நாளுத் துரமுத் திராடம்
சுடர்திசை ஆறுவரு சமுமாம்
மகிழ்ரோகணியத் தம்திரு வோணம்
மதிதிசை பத்துவரு டமுமே. 85

*(886 b : 39)*

*(இ. ள்)* அசுவனி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல் திசை **கேதுதிசை**யாகும். இது ஏழு ஆண்டுகள் நடக்கும். பரணி, பூரம், பூராடம் ஆகிய நட்சத்திரங்கள்ளில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சுக்கிரதிசை**யாகும். இது இருபது ஆண்டுகள் நடக்கும். கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்தகளுக்கு முதல்திசை **சூரியதிசை**யாகும். இது ஆறு ஆண்டுகள் நடக்கும். உரோகணி, அஸ்தம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சந்திரதிசை**யாகும். இது பத்து ஆண்டுகள் நடக்கும்.

ஏசு மான்தலை சித்திரை அவிட்டமும்
சேய்பெறு திசைவருடம் ஏழாகும்
ஈசநாள் சோதி சதயமி ராகு
வின்திசை வருடம் ரோன்பான்
தேசுயர் புமர்த்தம் முறம்பு ரட்டையும்
பொன்திசை பதினாறு வருடமாம்
பூசம் அனுடம் மன்னன் சனிதிசை
பொருந்துபத் தொண்பதான் டாமே. 86

*(886 b : 40)*

*(இ. ள்)* மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **செவ்வாய்த் திசையாகும்.** இது ஏழு ஆண்டுகள் நடக்கும். திருவாதிரை,

சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **இராகுதிசையாகும்.** இது பதினெட்டு ஆண்டுகள் நடக்கும். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **குருதிசை** யாகும். இது பதினாறு ஆண்டுகள் நடக்கும். பூசம், அனுடம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **சனிதிசை**யாகும். இது பத்தொன்பது ஆண்டுகள் நடக்கும்.

ஆயில்யம் கேட்டை இரேவதி புதன்திசை
மற்றது பதினேழு வருஷமாம்
தூயகேந் திரத்தோ டுயர்திரி கோணம்
துகளறு தனமொடு இலாபம்
நேயவித் தானம் களினதி பதிகள்
நிறைதிசை உத்தம மாகும்
பாயநன் கிலதாய் வருந்துர்த்தா னாதி
பதிகளின் திசைகள்மத் திமமே. 87

*(886 b : 41)*

*(இ. ள்)* ஆயில்யம், கேட்டை, இரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு முதல்திசை **புதன்திசை** யாகும். இது பதினேழு ஆண்டுகளாகும். கேந்திரம், திரிகோணம், இரண்டாமிடம், பதினோராமிடம் ஆகியவற்றன் அதிபதிகள் இருந்து திசை நடத்த அந்தத் திசைகளில் நன்மைகள் மிகுதியாக உண்டாகும். மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகியவற்றின் அதிபதிகள் இருந்து திசை நடத்த அத்திசைகளில் மத்திமமான பலன்கள் கிடைக்கும்.

## பொருத்தம்

### செவி

முன்னுள முழத்தை ஆறினில் பெருக்கி
மூந்துமுன் நான்கினிற் கழிக்க
துன்னறு சேடம் இரட்டையே யாகில்
சொல்லுவர் செவியிரண் டெனவே

பின்னுமொன் றாகில் ஓர்செவி யாகப்
பேசுவர் சிற்பநூல் புலவர்
நண்ணுதல் கருங்கட் வள்வாய் செந்தேன்
நறுபூங் குழற்கனி மொழியே ! 88

*(886 a : 203)*

*(இ. ள்)* நல்ல நெற்றியையும் கரிய கண்களையும், ஒளி பொருந்திய பற்களைக் கொண்ட வாயினையும், செந்தேனைச் சொறியும் பூக்களைச் சூடிய கூந்தலையும் கொண்ட இனிய மொழியைப் பேசும் பெண்ணே ! மனையின் நீள அகலத்தைச் சரியாக அளந்து, பெருக்கி வந்த குழித் தொகையை ஆறால் பெருக்கிப் பன்னிரண்டால் வகுக்கக் கிடைக்கும் மீதி, செவியாகும். மீதி இரட்டைப் படை எண்களாக இருப்பின், **இரண்டு செவி** என்பர். மீதி ஒற்றைப்படை எண்களாக இருப்பின், **ஒரு செவி** என்பர். இதனை சிற்ப நூல் வல்லவர்கள் கூறியுள்ளார்கள்.

## திசைகள் விபரம்

கார்த்திகை உத்திரம் உத்திரா டமுமே
கருதிய பானுவின் திசையாம்
ஏத்திய அஸ்தம் ரோகணி வோணம்
இயல்தரு இந்துவின் திசையாம்
மாத்திய அவிட்டம் சித்திரை மிருக
சீரிடமும்வே வருகுசன் திசையாம்
போத்திய சதயம் சுவாதிதிரு வாதிரை
புகழுயர் ராகுவின் திசையே ! 89

*(742: 126)*

*(இ. ள்)* கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சூரியதிசை முதல்திசை. அஸ்தம், திருவோணம், உரோகணி ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சந்திரதிசை முதல்திசை. அவிட்டம், சித்திரை, மிருகசீரிடம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் செவ்வாய்திசை

முதல்திசை. சதயம், சுவாதி, திருவாதிரை ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இராகுவின் திசை முதல்திசையாகும்.

## திசைகள் விபரம்

புனர்வசு விசாகம் பூரட்டா தியுமே
பொருந்தி பிரகஸ்பதி திசையாம்
மௌஉத்தி ரட்டாதி பூசமும் அனுஷம்
மேவிய சனிதிசை யதுவாம்
தினவுயர் கேட்டை ஆயிலியம் ரேவதி
நிறைபுதன் திசையென நிகழ்த்தாய்
தனமுயர் மகமும் அசுபதி மூலம்
தருகேது திசையெனச் சாற்றே. 90

*(742: 127)*

*(இ. ள்) புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் குருதிசை முதல்திசை. உத்திரட்டாதி, பூசம், அனுஷம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குப் புதன்திசை முதல்திசை. மகம், அசுபதி, மூலமம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் கேதுதிசை முதல்திசை.*

## திசைகள் விவரம்

பூராடம் பரணி பூரமும் இயல்சேர்
பொருந்திய சுக்கிரன் திசையும்
நேராது திசையின் பலனது சொல்வேன்
நிறைசனி மத்திமம் இராகு
ஏறாத் தீது கேதுமத் திமமாம்
இயல்குசன் இரவியும் தீதாம்
போரான மற்ற நாலும்நன் மையுமாம்
பெருமய னுரைசெய்த பேச்சே. 91

*(742: 128)*

(இ. ள்) பூராடம், பரணி, பூரம் ஆகிய மூன்று நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் சுக்கிர திசை முதல்திசை. ஆக ஒன்பது கிரக திசைகள். இவற்றுள் சனிதிசை மத்திமம். இராகு திசை தீது; கேதுதிசை மத்திமம்; செவ்வாய், சூரியதிசை இரண்டும் தீயவை; சந்திரன் திசை, புதன்திசை, குருதிசை, சுக்கிரதிசை ஆகியவை நன்மையானவை.

## சந்திர பலன்

நன்றிகோ ளிறைவன் ராசிமுன் மனையில்
நன்மதி இராசிமட் டெண்ணி
ஒன்றுமூன் றாறோ டேழ்பத்து பதினொன்
றிற்சுகம் பூர்வம் தனக்கு
துன்றிரண் டைந்தொன் பான்சுபம் அமரம்
துன்னுபன் னிரண்டுநா லெட்டும்
வென்றிசேர் சுபமாம் மற்றவை தீதாம்
விளங்கிய சந்திர பலனே. 92

*(886 a : 33)*

(இ. ள்) ஜென்ம இராசி முதல் அன்றைய தினம் சந்திரன் இருக்கின்ற இராசி வரைக்கும் எண்ணிக்கொண்டு வந்த தொகையில் ஒன்று, மூன்று, ஆறு, ஏழு, பத்து, பதினொன்று ஆகிய இராசிகள் இருபட்சங்களிலும் சுபத்தைக் கொடுக்கும். பூர்வ பட்சத்தில் இரண்டு, ஐந்து, ஒன்பது சுபத்தைத் தரும். அமரபட்சத்தில் பன்னிரண்டு, நான்கு, எட்டு ஆகிய இராசிகள் நன்மையைத் தரும். மற்ற இராசிகள் தீமையைத் தருவன.

குறிப்பு: பூர்வபட்சத்தில் நான்கு, எட்டு, பன்னிரண்டு ஆகிய மூன்று இராசிகளும், அமர பட்சத்தில் இரண்டு ஐந்து, ஒன்பது ஆகிய இராசிகளும் தீமையைத் தருவனவாகும்.

## பொது

## கோள்களும் குணங்களும்

கடல்புடை யுடுத்த மாநில வரையிற்
கணவே ளைகளும் உரைப்பாம்
தொடர்மதி குருவும் சத்துவ மாகும்
சுக்கிரன் சேய்ரா ஜதமாம்
பசர்செழுங் கதிரோன் சனிபுதன் மூன்றும்
பகர்ந்திடும் தாமத குணமாம்
விடமெனக் கொடிய சுடரிலை வடிவேல்
விழிஅடி கியநடை மயிலே! 93

(886 a : 34)

(இ. ள்) நஞ்சினைப் போன்று கொடியதாகிய ஒளிபொருந்திய இலைபோன்று வடிவமைக்கப்பட்ட வேலை ஒத்த கூரிய விழிகளையும். அழகிய நடையையும் கொண்ட மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! சந்திரனும் குருவும் **சாத்வீகமான கோள்களாகும்**. சுக்கிரன், செவ்வாய் ஆகியவை **இராஜத குணம் உடைய கோள்கள்**. சூரியன், சனி, புதன் ஆகிய மூன்று கோள்களும் **தாமத குணமுடைய கோள்கள்.**

## பொது

## குருட்டு, செவிட்டு, முடவன் இராசிகள்

இனிய சிங்கம் எருதாடு
இரவி யுதிக்க குருடாகும்
கனியும் தண்டு நண்டுமுதல்
கங்குற் பொழுதில் குருடாகும்
தனுசு மகரம் இராச்செவிடு
தராசும் தேளும் பகல்செவிடு
மனிதன் கும்பம் பகல்முடவன்
மருவு மீனம் இராமுடவன் 94

(சி. நா. பா. 21

(இ. ள்) சிங்கம், எருது, ஆடு ஆகியவை சூரியன் வந்தால் குருடாகக் கூடிய **பகல் குருட்டு இராசிகளாகும்.** மிதுனம், கற்கடகம் ஆகியவை **இரவுக் குருட்டு இராசி களாகும்.** தனுசு, மகரம் ஆகியவை **இரவில் செவிடாக உள்ள இராசிகளாகும்.** துலாம், விருச்சிகம் ஆகியவை **பகலில் செவிடாக உள்ள இராசிகளாகும்.** கும்பம் **பகல் முடவன்** இராசி. மீனம் **இரவு முடவன் இராசி.**

குறிப்பு: இரவு விழிப்பு இராசிகள் மேடம், இடபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் என்னும் ஆறு இராசிகளாகும். பகல்விழிப்பு இராசிகள் சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் என்னும் ஆறு இராசிகளாகும். இப்பாடலில் இராசி விழிப்புகள் குறித்து மாறுபட்டக் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

## பொது
## கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்
## (சூரி, சந்திர திருஷ்டி)

ஒருகண்ணுண் டெனினும் திங்கட்
குத்தமம் கதிரோற் காகா
இருகண்ணுன் டானாற் பக்கம்
யாவர்க்கும் இன்பம் எய்தும்
இரு கண்ணும் இல்லா நாளில்
இயற்றிய கருமம் எல்லாம்
விரவிய சுற்றத் தோடும்
கெடுமென விளம்பி னாரே. 95

*(சி. நூ. பா. 152)*

*(இ. ள்)* சந்திரனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் உத்தமம். சூரியனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் ஆகாது. இரண்டு கண்ணுள்ள நாட்களில் சுப காரியம் செய்யலாம்.

## இரவு, பகல், கண்விழிப்பு

விளம்பிய மேடம் குண்டை
வீணைமக ரங்கடகம் வில்லும்
இளம்பிறை தனது மாறும்
இரவுகள் காணும் என்க

கொளுந்திரு மரிகோல் கன்னி
குடங்கயல் தேளும் மெல்ல
வளப்படும் அருக்கன் கூறாய்ப்
பகல்விழி உடைய மன்றோ! 96

*(சி. நா. பா. 153)*

*(இ. ள்)* மேடம், ரிஷபம், மிதுனம், மகரம், கடகம், தனுசு இவ்வாறும் சந்திரன் கூடும். இதுக்கு இரவு கண் விழிப்பு. துலாம் சிங்கம், கன்னி, கும்பம், மீனம், விருச்சிகம் இவ்வாறு சூரியன் கூடும். இதற்குப் பகல் கண் விழிப்பாம்.

## பொருத்தம்
### கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்
### (சந்திரன் திருஷ்டி)

இரவி வார முதல்வாஸ்து வாரமட்
டெண்ணி மூன்றில் பெருக்குதொகை தன்னை
பரவும் அசுவனி முதலாக வெண்ணி
பகரும் ஒன்பது ஓர்கண் ணதுக்குமேல்
விரவு நாள்பனி ரெண்டுமே இரட்டைகண்
மேலதற்கு மேலொறு நாளந் தகமாம்
துரிசிலா மனைஆ லயம்சத் திரம்சோ
தித்தர்க்கு இவையே சோம திருட்டி. 97

*(886 c : 52)*

*(இ. ள்)* ஞாயிற்றுக்கிழமை முதல் மனைகோலும் நாள் வரை சென்ற கிழமையை மூன்றில் பெருக்கி, வந்த தொகையை அசுவதி முதலாகக் கழித்து நின்ற நட்சத்திரத்தில் ஒன்பது நட்சத்திரங்கள், சந்திரனுக்கு **ஒரு கண் பார்வை யுடைய நாட்கள்** என்றும், அதற்கு மேல் பன்னிரண்டு நட்சத்திரங்கள் **இருகண் பார்வையுடைய நாட்கள்** என்றும் அதற்குமேல் ஆறு நட்சத்திரங்கள் **குருட்டு நாட்கள்** என்றும் அறிந்துகொள்க.

**வேறு**

அருக்கனார் கிழமை யாதி
　　சென்றவக் கிழமை ஆய்ந்து
பெருக்கிமூன் றதனின் பேற்றை
　　மாமுதற் கழித்துப் பின்னை
இருக்குநா ளொன்பா னோர்கண்
　　பன்னிரண் டிருகண் காணும்
தருக்கிலாப் பின்னாள் ஆறும்
　　குருட்டுநாட் சந்தி ரர்க்கே. 98

*(சி. நூ. பா. 150)*

**கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்**

**சூரிய திருஷ்டி**

வாஸ்து வாரம் ஆதியாய் பானுவின்
　　வாரமட் டெண்ணி மூன்றிறஅ பெருக்கியே
யாத்திடும் பரணிமுத லாகவே எண்ணி
　　பகரும் ஏழ்நாள் ஓர்விழி யாகுமால்
சேர்த்த ஒன்ப திருகண் அதன்மிசைச்
　　செப்பு மேலொடு கண்ணும் அதறஅகுமேல்
நீத்த நான்குநாள் அந்தகம் என்பார்கள்
　　நிலவுபே ரோணிச் சூரிய திருஷ்டியே. 99

*(886 C : 53)*

(இ. ள்) சூரியன் நின்ற நாளை, ஞாயிற்றுக் கிழமை முதல் சென்ற கிழமையை மூன்றில் பெருக்கி, வந்த தொகையை பரணி முதலாகக் கழித்து நின்ற நட்சத்திரத்தில் ஏழு நட்சத்திரங்கள் சூரியனுக்கு **ஒருகண் பார்வையுடைய நாட்களாகும்** என்றும், அதற்குமேல் ஒன்பது நட்சத்திரங்கள். **இருகண் பார்வையுடைய நாட்களாகும்** என்றும், அதற்குமேல் ஐந்து நட்சத்திரங்கள் **குருட்டு நாட்களென்றும்** அறிந்துகொள்க.

குறிப்பு: இப்பாடலில் கூறப்பட்டுள்ள கணக்கீட்டு முறையினும் முற்றிலும் மாறுபட்டதாக சூரிய திருஷ்டியைப் பற்றி சில நூல்களில் கூறப்பட்டுள்ளன.

## பொது

## கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்

## (சூரியதிருஷ்டி)

மேதகு கதிரோன் நின்ற
நாளுமற் றதன்மேல் மூன்றும்
கோதறு பின்னின் மூன்றும்
குருட்டுநாள் என்று கொள்க
ஓதிய அதற்குப் பின்முன்
நான்குநாள் ஒருகண் காணும்
ஏதமில் நின்ற நாட்கள்
இருகண்ணுண் டருக்கர்க் கென்றே. 100.

*(சி. நூ. பா. 149)*

*(இ. ள்)* சூரியன் நின்ற நாளுக்கு முன் மூன்று, பின் மூன்று நாட்களும் **குருட்டு நாட்களாகும்.** அதற்கு முன் நான்கு பின் நான்கு நாட்களும் ஒரு **கண் பார்வையுள்ள நாட்களாகும்.** மற்ற நாட்கள் **இரு கண் பார்வையுள்ள நாட்களாகும்.**

## பொது

## இராசிகள்

தனுவிடை ஆடு கன்னி
தலையிலே நாகம் உண்டு
மனுஅரி படியாள் கும்பம்
மத்தியில் விஷமே உண்டு
சினவிய மகரம் மீனம்
தேளாகும் நண்டு தானும்
கனவிய பண்டு நின்று
கடைதனில் துண்ணு மென்றே. 101

*(1005 a )*

*(இ. ள்)* தனுசு, ரிஷபம், மேடம், கன்னி இந்த நான்கு இராசிகளுக்கும் தலையிலே விஷம்; சிம்மம், துலாம், மிதுனம், கும்பம் இந்த நான்கு இராசிகளுக்கும் இடையிலே விஷம்; மகரம் மீனம், விருச்சிகம், கற்கடகம் இந்த நான்கு இராசிகளுக்கும் கடைசியிலே விஷம்.

## பொது

### கண்ணுள்ள, கண்ணற்ற நாட்கள்

நல்லதோர் வியாழம் வெள்ளி
நற்புதன் இருகண் ணாகும்
வல்லதோர் இரவி திங்கள்
வருமொரு கண்ண தாகும்
கல்லவே சுமமு கூர்த்தம்
கருணையாய்ச் செய்வா யென்று
சொல்லினார் உமைக்கு ஈசர்
சுகமுள நாளீ தென்றே. 102

*(சி. நூ. பா. 146)*

*(இ. ள்) குருவாரம், சுக்கிர வாரம், புதவாரம் இந்த மூன்று நாட்களும் இரண்டு கண்ணுள்ள நாட்கள். ஆதிவாரம், சோம வாரம் இந்த இரண்டு நாட்களும் ஒரு கண்ணுள்ள நாட்கள். இந்நாட்களில் இரு கண்ணுள்ள நாட்கள் விசேடம். அந்நாட்களில் சுப காரியங்கள் செய்யலாமென்று பரமசிவன் பார்வதிக்கு உபதேசித்தார். ஆகையால், நாளும் கோளும் நட்சத்திரமும் பார்த்து சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.*

### இதுவுமது

புந்தி வியாழன் புகர்ரான் இருகண்ணாம்
இந்து அருக்கன் இவர்ஒரு கண் - சந்ததமாம்
செந்தழல் மைந்தான் சேய்குரு டாகும்
சந்ததமும் என்றே அறி. *(886 c : 52)*

*(இ. ள்) புதன், வியாவன், வெள்ளிக்கிழமைகளுக்கு இரண்டு கண்கள்; ஞாயிறு, திங்கட்கிழமைகளுக்கு ஒரு கண்; சனி, செவ்வாய்க்கிழமைகளுக்குக் கண்ணில்லை.*

### குருட்டு வாரம்

மற்றதோர் சனிசெவ் வாய்கள்
வந்திடும் இரண்டு நாளும்
குற்றமே உள்ள தான
குருட்டுநாள் இதுவே யாகும்

நற்றமிழ் சனிசெவ் வாய்கள்
வந்திடும் இரண்டு நாளும்
குற்றமே உள்ள தான
குருட்டுநாள் இதுவே யாகும்
நற்றமிழ் தேர்ந்தோர் இன்னாள்
நல்லதோர் சுபமு கூர்த்தம்
உற்றபேர் செய்ய மாட்டார்
ஒருகண்ணும் இல்லா நாளே! 103

*(சி. நூ. பா. 148)*

***(இ. ள்)*** **சனிவாரம், மங்கள வாரம் ஆகிய இந்த இரண்டு நாட்களும் குருட்டு நாட்கள் என்பனவாகும். இந்நாட்களில் கணித முணர்ந்த மேலோர்கள் சுபமுகூர்த்தம் செய்ய மாட்டார்கள் என்பதாம்.**

### பொது
### மாதங்களும் விலங்களும்

சித்திரை மூன்று மாதம்
சித்தெலி பூனை யாகும்
மற்றொரு மூன்று மாதம்
வருமுயல் நாய தாகும்
அற்பசி மூன்று மாதம்
அத்தியும் ஆளி யாகும்
தையதே மூன்று மாதம்
சர்ப்பமும் கெருட னாமே. 104

*(1005b)*

***(இ. ள்)*** **சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்று மாதங்களுக்கும் எலி, பூனை ஆகியவையாகும்; ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கும் முயல், நாய் ஆகியவையாகும்; ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதங்களுக்கும் யானை, புலி ஆகியவையாகும்; தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களுக்கும் பாம்பு, கருடன் ஆகியவையாகும்.**

## பொது

## இராசி நாழிகை

அரிமிதுனம் தேள்மகரம் அஞ்சே காலாம்
வரியலவன் வில்லுடனே அஞ்சரையாம் பெரிய
எருதுகுடம் நாலேமுக்கால் எழிற்கன்னி கோலஞ்சு
பருமீனோ டாடுடனே பகர்கடிகை நாலேகால். 105

*(1005 b)*

*(இ. ள்)* மேஷம் $4\frac{1}{4}$, ரிஷபம் $4\frac{3}{4}$, மிதுனம் $5\frac{1}{4}$, கற்கடகம் $5\frac{1}{2}$, கன்னி 5, சிம்மம் $5\frac{1}{4}$, துலாம் 5, விருச்சிகம் $5\frac{1}{4}$, தனுசு $5\frac{1}{2}$, மகரம் $5\frac{1}{4}$, கும்பம் $4\frac{3}{4}$, மீனம் $4\frac{1}{4}$ ஆக இராசி பன்னிரண்டிற்கும் நாழிகை அறுபது.

## இராசி விழிப்பு

மேசமுடன் எருது மிதுனமுடன் கடகம்
தனுசுடன் மகரம் ராவிழிக்கு மென்பர்
சிங்கம் கன்னி கோல்தேள் குடமீனும்
மமாங்கு ளன்றாப் பகல்வி ழிக்குமதே. 106

*(1005 b)*

*(இ. ள்)* மேடம், ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் ஆகிய ஆறு இராசிகளும் **இரவு விழிக்கும் இராசிகள்.** சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் ஆகிய ஆறு இராசிகளும் **பகலில் விழிக்கும் இராசிகள்.**

## பொது

## ஆடு மாடு விலைக்கு வாங்குதல் விற்றல்

உத்திரம் மூன்றி னோடு
உரோகணி ஓணத் தோடு
சித்திரை மகத்தி னோடு
சிறந்தசீ ரவிட்டத் தோடு
கொத்துடன் ஆடு மாடு
கொள்ளுவீர் விற்பீ ராகில்
அத்திடும் காலி யெல்லாம்
ஆண்டொன்றில் மாண்டு போமே. 107

*(886 a : 219)*

(இ. ள்) உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, உரோகணி, சித்திரை, மகம், அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் ஆடு மாடுகளை வாங்கவோ விற்கவோ கூடாது. அவ்வாறின்றி வாங்கி விற்க, கன்றுகாலிகள் ஆண்டொன்றில் இறந்து ஒன்றுமில்லாமல் போய்விடும்.

## பயன்படுத்திய நூல்கள்


1. சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம், கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1960.

2. சிலப்பதிகாரம், உ. வே. சாமிநாதையர் (பதிப்.), கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு.

3. சில்ப ரத்தினம், க. கணபதி சாஸ்திரி, கே. சாம்பசிவ சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1960.

4. சிற்ப சாஸ்திரமென்னும் மனையடி சாஸ்திரம், அமரம்பேடு இராஜரத்தின முதலியார் (பதிப்.), மலர்மகள் விலாச அச்சுக்கூடம், சென்னை-1962.

5. சிற்ப நூலனெனும் மனையடி சாத்திரம்................. வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை 1932.

6. சிற்ப ரத்னாகரம், சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி, ப. வ. கிருஷ்ணசாமிப்பிள்ளை (பதிப்.) மனோரஞ்சனி அச்சுக்கூடம், சென்னை, 1927.

7. சீவகசிந்தாமணி, ஞா. மாணிக்கவாசகம் (உரை), அருணா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1965.

8. மயநூல் என்னும் மனையடி சாஸ்திரம், பூ. சுப்பிரமணியம் (பதிப்.) பாவை அச்சகம், சென்னை, முதற்பதிப்பு-1995.

9. மயமதம், பாகம்-I, கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.) தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1966.

10. மயமதம், பாகம்-II, கே. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.) தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1968.

11. மனைநூல், பூ. சுப்பிரமணிய சாஸ்திரி (பதிப்.), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, முதல் பதிப்பு, 1981.

12. மனையடி சாஸ்திரம், 4. முனுசாமி நாயுடு அச்சகம், சென்னை, 1917.

13. மனையடி சாஸ்திரமென்னும் பெரிய சிற்ப சாஸ்திரக் களஞ்சியம், B. இரத்தின நாயக்கர் ஸன்ஸ், சென்னை, ஆண்டு இல்லை.

14. வாஸ்து வித்யை, தேதியூர். எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி (பதிப்.), தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 2005.

15. வில்லி பாரதம், ஆறுமுகநாவலர் (பதிப்.) வித்யாநுபாலனயந்திரசாலை, சென்னை, பதினோராம் பதிப்பு, துந்துபி வருஷம்.

16. விஸ்வகர்ம வாஸ்து சாஸ்திரம், கே. வாசுதேவ சாஸ்திரி, எம். பி. தத்ரே, தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, முதல் பதிப்பு, 1958.

---- ❋ ----

## பயன்படுத்திய சுவடிகள்

| | | சுவடி எண். |
|---|---|---|
| 1. | சில்ப சாஸ்திரம் | 739 |
| 2. | ,, ,, | 742 |
| 3. | ,, ,, | 878 b |
| 4. | சில்ப சார சுருக்க சிந்தாமணி | 886 b |
| 5. | சிற்ப சாத்திரம் | 1005 a |
| 6. | ,, ,, | 1411 b |
| 7. | மயனூல் | 797 |
| 8. | மயனூல் | 886 a |
| 9. | ,, | 886 c |
| 10. | மயனூல் சாத்திரம் | 2027b |
| 11. | மனை சாத்திரம் | 1568 d |
| 12. | ,, ,, | 1569 |
| 13. | மனையடி சாத்திரம் | 1005 b |
| 14. | ,, ,, | 1411 b |
| 15. | ,, ,, | 2027 a |
| 16. | மனையலங்காரம் | 796 |